PERIA PURANAM

by
Sekkilar

3.3.1919.

॥ 3ి ॥

G. V. Srinivasa Rao.

Madras.

682

உ

சிவமயம்.

சேக்கிழார்சுவாமிகள் அருளிச்செய்த

பெரியபுராணம்

என்று வழங்கும்

திருத்தொண்டர்சரித்திரம்

இஃது பூவைசியர்களில்

தொண்டைமண்டலம் துளுவவேளாளர் திருமயிலை நாட்டாண்மை

முத்தியப்பமுதலியார் வம்சம்

சுப்பராயமுதலியார் புத்திரருமாகிய

அருணாசலமுதலியாரவர்களால்

பதிப்பித்து வழங்கிய பிரதியை

இதற்குமுன் சிலர் பதிப்பித்த பிரதிகள் பொருள்படாத பிழையுட னிருந்ததை இப்பொழுது சீர்திருத்தி

சென்னை - சூளை.

பிருங்கிமாநகரம்

வேம்புலிமுதலியாரவர்கள்-குமாரர்

நமசிவாயமுதலியாரது

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1914



உ

சிவமயம்.


விநாயகர் வணக்கம்.

ஒருகொம்பிரண்டுசெவிமூன்றுமதநால்வாய்
பொருசெங்கையைந்துடையபுத்தேள்-வருகங்கை
யாறுதரித்தோன்மைந்தனானைமுகத்தோனைநினைந்
தேழுபிறப்புந்தீரவெட்டு.

இஃது, புதுவை. க - சுப்பராயமுதலியாரியற்றிய சிறப்புப்பாயிரம்.

திருவினைப்பயந்து மருவுநல்லிசைபெறீஇப், பொங்குறுமமுதப் பைங்கடலாகுந், துசிடைக்கசைத்த காசினிமடந்தை, முகமெனச்சிறந்த தகைமிகுசோழ, நாட்டினம்முகத்திற் றீட்டுதிலதமெனு, முறையூரிருந்து மறையாவொருமுகி, மறக்கோலின்றி யறக்கோனடாத்துஞ், சோழனநபாயன் வாழுமந்நாளிற், சிவசமயமதனைவிட்டவசமயமாகு, மாருகசரிதைநேரியன்விழைந்து, பற்பலகவிஞர் சொற்பலவிரித்தாங், குரைத்திடநாளுந் திருத்தியதாகி, மகிழ்வுருநாளிற் புகழ்பெறுசைவ, சமயமே மெய்ம்மைச் சமயமென்றறியா, வரனலதுலகிற் பரமிலையென்றப், பரமனையுளத்திற் றிரமுரவிருத்தி, யோவிலாதருச்சனை யாவலிற்புரியுஞ், சேக்கிழாரெனும் பெயர்ப் போக்கறுமமைச்சர், மன்னனைநோக்கி மின்னுபாற்கடலுட், டோன்றுமீனந்தவான் றபாலுண்ணு, திருவுளபலபொரு டழிவியுண்டதுபோல், சத்தியமாஞ்சிவ பத்திநூலின்றிச், செய்தவமில்லாக் கைதவவமணர்தம், மிழுக்குறுநூலின் வழுக்களைக்கற் றீங்கிம்மை மறுமைப்பயன் றம்மையுமிழந்து, பிறப்பெனுங்கடலினும் வறப்பிலா தழுந்தி வருந்துறுதுன்பென விருந்திறற்சோழன் மிகமனம்வருந்தியித் தகைமையில் சரிதை, யிருமையின்பமுமொருமையினிழத்தற், கேதுவாமெனி லோது சிவநூலது சொன்னவர்யாரதில் மன்னியசரிதமென், னெங்குளத்தனையெற் கிங்கருள்கவென் றனன், மூவர்புகழருண்மொழித் தேவருண்மகிழ்ந்து, திருவாரூரின் மருவிய பரமன், அடியவர்திறத்தைப் படியவருய்யச், சூழ்வந்ததில்லை வாழந்தணர்தம், மடியார்க்குமடியேனெனவடியெடுத்துத், தந்திடவவர்தஞ் சுந்தரத்துதித்த தோமில்சுந்தர சுவாமிகள் வாக்கால், பதினொருசெய்யுளா லிதமுறவருந்தித், தொண்டத்தொகையென விண்டனர்பதிக, மப்பதிகக்காங் கொப்பில்வேதாகம, மாதியநூல்தமக் கோதியநாரையூர்ப், பொல்லாப்பிள்ளையார் சொல்லப்பொருடெரிந், தந்தாதியாகச் செந்தமிழினம்பி, யாண்டார்நம்பி யீண்டுவிரித்துரைத்தனர், திருமுறைகண்ட பெருமையனபய, குலசேகரனொடு நலசிவாலயமுனி யாதியமஹான்களோதியின்புற்றார், எனவிறைதேர்ந்து மநமிகமகிழ்ந்து, சொன்னவந்நூலின் மன்னுநற்பொருளை, யென்னுளந்தேறப்பன்னியுரையென்ன, வருண்மொழித்தேவர் மருண்மிகவகலக், கோதிலந்நூலை யோதியுரைசொல்லத், தெரிந்திறையின்பப் பெருந்திரைமூழ்கித், தொண்டர்தமன்புந் துண்டவெண்மதிசேர், வேணியனருளும் பேணிமனமுருகியிவ் வற்புதச்சரிதையைப் பொற்புறவெவர்க்கும், விளங்கிடவிலக்கணக் களங்கமிலாமற்பெருங்காப்பியமதாத் தருங்காருணிய, னீயேயாதலின் றூயோயதனை, விரைவினிற் றரவெனப் பரவிநின்றுரைக்க வருண்மொழித்தேவர்பொருண்மிகக்கொண்டு, பதம் பரமருளுஞ் சிதம்பரஞ்சென்று, பவமங்கொழிக்குஞ் சிவகங்கையினிற், படிந்துசிவா

ர்ச்சனை முடிந்தபின்னெழுந்து, சபாபதிமுன்னர்த் தபோமணிநின்றுங், கழலிடை
ப்பட்ட மெழுகெனவுருகி யிருகரங்கூப்பிப் பெருகுமானந்த, விழிநீர்பெருகமொழி
யதுகுழறச், செய்யமேனியவெம் மையநின்றொண்டர், அன்பின்றிறத்தை யின்
பொடியேன், பெருங்காப்பியமாத் தருங்கவித்திறமெந், கருளுவதன்றி மருளுறு
மெனக்கு வேதமாகிய வோதுநின்வாக்கால், முதலடியெடுத்திங் குதவுதல்வேண்டு,
மென்றடிவணங்கி நின்றனனுங்கள், ஐயனதருளாற் றுய்யவம்மன்றில், உலகெ
லாமுணர்ந் தோதற்கரியவன், என் றசரீரிவாக்கொன் றெழுந்ததுகேட், டின்புளம
பொங்கி யன்பொடுநடேசனைப், பரவியங்ககன் று திருவினிலுயர்ந்து, மீயுயர்ந்தோ
ங்கு மாயிரங்காலுள, மண்டபமிருந்து தொண்டரிலுயர்ந்த, மூவரைப்புகழ்ந்து தே
வருள்புரிந்த, வடிமுதலெடுத்து வடிதமிழ்க்காப்பியம், பெரிதாவியற்றின ரரிதாமந்
நூல், வண்டமிழ்தெரிந்த பண்டிதர்க்கன்றிப், பாமரர்தனைத் தேர்மரவறித, லரியதி
லரிதாம் பெரியவந் நூலை, வாசகநடையாத் தேசுறவியற்றி, யெழுதாவெழுத்தில்வழு
வாதிசைவித், தடியவர்வடிவினைப்படியவர்மயங்கச், சித்திரனைக்கொடு சித்திரித்தாங
காங், கொருபடமமைத்துத் தரவெனச்சென்னைப் பதியினில்வாழு மதியிலுயர்ந்த,
சங்கரனடியவர் பொங்குறுசெல்ல, ரியம்பினராக வயங்கெழின்மன்னூ, லாய்ந்த
ரும்புலமை வாய்ந்திடுமெறிஞரைக், கொண்டெவர்தமக்கும் விண்டிடவெளிதாச், சந்
திகள்கடிந்து சுந்தரமான சித்திரப்படமோ டுத்தமமான, வச்சினிலெவரு மெச்சிட
பதித்துத், தந்தனன்வயலினந்து சூலுளைந்தரங், கீன்றமணிநிலவு கான்றுற்பலமு
கைகண்மலர்ந்தொளிரத்தண்ணொளிவீசி, மன்னிருளகற்றுமின்னிவளர்தொண்டை
நாட்டினிலமர ரீட்டமதிறங்க, வைத்தபல்லேணியொத்துவளர்தாருத், தலைமிசைப்
பூத்தவலரினைவிரும்பிக், கொள்ளைவண்டினஞ்சென் றள்ளியுண்டலர்ந்தேன், காம
ரம்பாடித் தேமலர்குடைந்து, கொங்குதிர்க்காகாய கங்கையைத்தூர்க்குஞ், சோலை
யதுசூழ்ந்த வேலைநிகர்வாவி, வாளைகளெழுந்து பாளைவிரிதெங்கின், பழக்குலையுதி
ர்த்தாங்குழக்கலின்விழுந்த, தெங்கம்பழநீ ரெங்குஞ்சிதறி, மருகினிலெழுந்துநிறை
தருதுகளை, மேலெழாதடக்கி நாலுவீதியினும், நதியெனச்சென்று பதிகுளிர்விக்கு
ங்கரிருமருங்கு நிகராறுசுண்ணச், சாந்தெழினிலவின் காந்தியைவிரிக்கு, மாடமாளி
கைக ணீடுநானியமத் துள்ளெழில்குலவும் பள்ளியுளமர்ந்த, தாருகன்வனத்திற்
காரிகைதங்கள், கற்பினையழித்த பொற்பமர்கபாலி, கொச்சையும்பதியார் மெச்சவ
ளர்ஞான, சம்பந்தரந்தநம்பனிசைபாடித் தசையீலென்பதனைவசையில்பூம்பாவைப்
பெண்ணெனச்செய்தவெண்ணில் புகழ்பெற்று, மந்தரிமயிலா வந்தவதரித்துப், பர
மனைப்பூசித் தருவரம்பெற்ற, காரணமதனாற் சீரணிமயிலைப், பதியெனும்பெயரிய
துதிமிகுநகரனு: சுந்தரமமைந்த வந்திவண்ணன்சிரந், தங்கிநின்றொளிருங்கங்கைபெ
ற்றெடுத்த, புத்திரனாகிய யித்தலமதனில், கல்விகேள்வியினில் வல்லவனாகி, நீதி
நூன்முற்று மோதிநன்குணர்ந்து, மன்னர்க்கமைச்ச னென்னவிருந்து, செறிபுல
மன்னர்க் கறிவுகொளுத்தித், தனைப்புகழ்ப்புலவர் நினைப்பறக் கொடுத்தாங், கிலை
யெனவந்தோர்க் கிலையெனுதீர்ந்து, பவமகன்றிடநஞ் சிவனடியவரைக், காண்டோ
றுமெதிர்ந்து, வேண்டி வேண்டுவவெலலார், தந்துவேளாண்மைசெய் முந்துவேளா
ளர்தங், குடியிலவதரித்துப் படியினர்புகழக் கேண்மையினவர்க்குநாட் டாண்மை
யாயிருந்து, வருமுத்தையவேள் மரபினில்வந்த, வயித்தியநாதன் வியப்புறுபௌத்
திர, னம்மரபினர்தந் தம்முறைவழாம,லில்லறவாழ்க்கையைச் சொல்லுறநடாத்தி
யறம்பொருளின்பந்திறமுறப்பெற்றே, யொப்புரவமைந்தசுப்பராயப்பெருந், தகை
செயுந்தவத்தின் றகைமிகுபயனென, வந்தவதரித்துச் செந்தமிழாதி, கல்விபலதேர்
ந்து செல்விமனைமேவக், கற்றமர்புகழ்பாப் பெற்றவர்மகிழக் கநகமதளிக்கு மாக
னென்றிசைக்கும் அருணாசலமெனுங்கருணை மலையெனவுரைக்குந் தலைமையிக்
கோளே.



உ

சிவமயம்.

திருத்தொண்டர்புராண அட்டவணை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சேக்கிழார்சுவாமிகள் சரிதம்.

ஆதிகாலத்திலே நந்திமலையில் வசிஷ்டர் ஆசிரமத்திலுள்ள காமதேனு பொழிந்த பால்பெருகிய காரணத்தால் பாலாறென்றுபெயர்பெற்ற புண்ணியநதியானது இடைவிடாது ஒழுகுதலால் மிக்கவளஞ் சுரந்தளிக்க செழுமையுள்ளதாகிய நீர்வளமும் நிலவளமும் பயிர்வளமு முள்ளதாய் காஞ்சீபுரமுதலான பாடல்பெற்ற சிவஸ்தலங்களும் விஷ்ணுஸ்தலங்களும் உள்ளதான தொண்டைநாட்டுக்கு உட்பிரிவாகிய இருபத்துநான்குகோட்டத்துள் ஒன்றாகிய புலியூர்க்கோட்டத்தைச் சேர்ந்த குன்றைவளநாட்டில் குன்றத்தூரில்வாழும் வேளாளர்குலஞ்செய்த தவப்பயனால் சேக்கிழார் மரபில் சைவசமயம் விளங்கும்படி சிவபுண்ணியந் திருவுருக்கொண்டது போல பாலறாவாயரென்னும் தம்பியாருடன் திருவவதாரஞ்செய்து அருண்மொழித் தேவரென்னும் பிள்ளைத்திருநாமம் புனைந்து கல்வியறிவு முதிர்ந்து சைவசமயத்திற்குரிய தீக்ஷைகளும் சிவபத்தியிலதிகரித்துச் சத்காலக்ஷேபஞ்செய்துகொண்டிருக்கையில் அன்பாய சோழமஹாராசன் அறிந்து வரவழைத்து மந்திரித்தலைமையும் உத்தமச்சோழப் பல்லவராயனென்னும் பட்டப்பெயருங் கொடுக்கக்கொண்டு இமசேதுபரியந்தம் நீதிதவறாமல் செங்கோல்செலுத்துகையில் அந்தச் சோழதேசத்திலிருக்கும் திருநாகேச்சுரமென்னும் பாடல்பெற்ற சிவஸ்தலத்தில் தாம் வைத்திருக்கும் அன்பின் மிகுதியால் தமது பதியாகிய குன்றத்தூரில் மடவளாகமொன் றேற்படுத்தி ஆலய பிரதிஷ்டையுஞ்செய்து சோழநாட்டிலிருக்கும் திருநாகேச்சுரம்போல திருப்பேர்சாற்றித்துக் கும்பாபிஷேகமுஞ்செய்வித்து நித்திய நைமித்திய காமியமென மூன்றுவகையாகிய பூசைகளுஞ் சிறப்பாக நடத்திவருநாளில்.

அன்பாய சோழமகாராஜன் சைவசமயப் பற்றுள்ளவனாயிருந்தும் சைவசமயராஜனாகிய சீவகராஜனுடைய சரிதமென்றேற்பட்டிருக்கிற சிந்தாமணியென்னும் இலக்கியத்தை நாள்தோறும் பாராட்டிக்கொண்டிருக்கின்றமையால் சிவசிவா இவர்கள் யாதொருபயனும் அடையாமல் வீணாள் கழிக்கின்றார்களேயென்று மனவிரக்கமுற்று அரசனைநோக்கி இம்மைமறுமைப்பயனைத் தரத்தக்கதாகிய நம்முடைய சைவசமயகதையிருக்கக் கரும்பிருக்க வேம்புதின்பதுபோல பயனற்ற அரசன்கதையைக் கேட்பதென்னவென அரசன் அவமானபயனற்றகதையீதாகில் இம்மைமறுமைக்குறுதிபயக்கத்தக்க சிவகதையேது அது கற்றவல்லவர்யார் சிந்தாமணிபோலிலக்கியச்சுவைக்கதையோ அன்றி புராதனமோ முன்னுளதன்றோ அதுசொல்லவல்லவர்யார், கேட்டவர்யார், தலைக்கதையோ தவம்பண்ணிப் பெறுபெற்ற ஒப்பற்றகதையோ விளங்கச் சொல்லவேண்டுமென்றான். சேக்கிழார் அது பரமசிவத்தின் அருளாலாகிய திருத்தொண்டர்களுடைய சரித்திரம் சாமானியர்களான மற்றொருவரால் சொல்லப்பட்டதன்று பரமசிவம் தடுத்தாட்கொண்ட வன்றொண்டனென்னும் சுந்தரமூர்த்திசுவாமிகளுக்குத் திருவாரூரில் பரமசிவம் திருவுளங்கூர்ந்து "தில்லைவாழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்" நம்முடைய தொண்டர்களைப் பாடித் துதிசெய்யென்று முதலெடுத்துக்கொடுத்து அவர்களுடைய பெருமைப் பாட்டினையுஞ் சரிதங்களையுந் தெரிந்து அதுவே முதலடியாக அமைத்து பதினொரு திருப்பாடலாகச்செய்த திருத்தொண்டத் தொகையைத் திருநாரையூர் நம்பியாண்டார்நம்பி பொல்லாப்பிள்ளையார் அருளாற் பெருகத் திருத்தொண்டர்களுடைய பெருமையைத் தோன்றக் கலித்துறையந்தாதியாகச் செய்தனர்.

அதைத் திருமுறைகண்ட ராஜராஜதேவர் [illegible]முதலான பெரியோர்களும் மற்றுமுள்ளவரும் பாராட்டிக்கொண்டிருந்தார்களென்று திருத்தொண்டர் ஊர் பேர் மரபு தொண்டு யாவும் விவரமாகச்சொல்ல அரசன்கேட்டு ஆனந்த



மடைந்து சேக்கிழார் சுவாமிகளைநோக்கி இவ்வாறே திருத்தொண்டர் பெருமைகள்விளங்கும்படி பெருங்காப்பியமாகவிரவிற்செய்து தந்தருளவேண்டுமென்று மிகுந்த பொருளுங்கொடுத்தனுப்பிவிக்க அருண்மொழித்தேவர் சிதம்பரத்தை யடைந்து சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து திருநீறு தரித்துக்கொண்டு பரிசுத்தத்தோடு சிற்சபைக்கெதிரில் சாஷ்டாங்கமாகப்பணிந்து ஐயனே தேவரீருடைய திருத்தொண்டர் பெருமையைப் பெருங்காப்பியமாகப் பாடும்படி அடியெடுத்துத் தந்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய நடேசமூர்த்திஅருண்மிகுந்து "உலகெலாமுணர்ந் தோதற்கரியவ,, னென்று முதலடியெடுத்துக்கொடுத்த அசரீரிவாக்கு அடியார்களுக்குந் தில்லைவாழந்தணர் முதலானவர்களுக்குங் கேட்டபோது யாவரும் ஆனந்த பரவசமடைந்தார்கள். சேக்கிழாருங் கேட்டுக் களிகூர்ந்து வணங்கி திருநெறித்தலைவரையுந் தோத்திரஞ்செய்து விபூதி ருத்திராட்சமுதலான சிவசாதனந் தரித்துக்கொண்டு ஆயிரக்கால் மண்டபத்தில் வீற்றிருந்து "உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்,, என்னுந் திருப்பாட்டுமுதல் வெள்ளையானைச்சருக்கமீறாகப் புராணஞ்செய்து நிறைவேற்றினர். இவ்வாறு புராணம் நிறைவேறியசெய்தியை அன்பாய்ச் சோழமஹாராஜன் ஏவலாளிகளா லுணர்ந்து மிகமகிழ்ந்து நடேசமூர்த்தி யானவர் உலகெலாமென்று முதலடி யெடுத்துக்கொடுக்கச் சேக்கிழார் சுவாமிகள் நிறைவேற்றிய புராணத்தை தில்லையிற்சென்று வணங்க வேண்டுமென்று விருப்பங்கொண்டு சதுரங்க சேனைகளுந் தன்னைச் சூழ்ந்துவர யானையின்மீது ஏறிச்செல்ல அதையறிந்து தில்லைவாழந்தணர்களும் மடாதிபதிகளும் மற்றுமுள்ள பெரியோர்களும் சேக்கிழார் சுவாமிகளும் மகாராஜாவை யெதிர்கொண்டு கண்டு ஆசீர்வாதஞ் செய்தார்கள் அப்போது முண்டிதமான திருமுடியும் குண்டலமசையுந்திருச்செவிகளும் ருத்திராக்ஷகெவுடும் கரமாலையும் சிரமாலையும் விளங்கும்படி சேக்கிழார் சுவாமிகள் கொண்டிருக்கிற சிவவேடத்தைச் சோழராஜன்கண் டுமகிழ்ந்து தன்னையுமறியாமல் இரண்டு கரங்களையும் அஞ்சலியாகச் சிரசின்மீது வைத்துக்கொண்டு சேக்கிழார் சுவாமிகள் திருவடியைவணங்கி நடேசமூர்த்தியினுடைய திருவடியையும் வணங்க வேண்டுமென்கிற அன்புகொண்டு சேக்கிழார்சுவாமிகளும் தில்லைவாழந்தணரும் கூடவரச்சென்று நடேசமூர்த்தியைத் தரிசித்து அன்பினுலாநந்தப் பரவசங்கொண்டு சாஷ்டாங்கமாகப்பணிந்து துதிசெய்ய நடேசமூர்த்தியானவர் அரசனே நம்முடைய அன்பனுகியசேக்கிழான் அடியார்களுடைய பெருமையைப் புராணமாகச் செய்யும்பொருட்டு நம்முடையவாக்கினல் "உலகெலாமென" அடியெடுத்துக்கொடுத்து அவர்களுடைய தொண்டு முதலானவையும் தெரித்தருளக்கொண்டு புராணஞ்செய்து நிறைவேற்றினன்.

அதனை நீ விரைவில் கேட்கக் கடவையென்று அந்தச் சிதாகாசமாகிய ஞானவெளியில் அசரீரிவாக்கு திருச்சிலம்பொலியுடன் உண்டாக அவ்வொலி ஆங்கு நின்ற அடியார்களுடைய செவிகளிலும்புகுந்தன அதைக்கேட்ட சோழராஜன்மன மகிழ்ந்து தேசங்களிலுள்ள அரசர்களும், மடாதிபதிகளும், சிவனடியார்களும்மற்றுமுள்ளவர்களும் வரும்படி ஓலையெழுதியனுப்பி அவர்களெல்லாம் வரக்கண்டு சந்தோஷித்து சேக்கிழார்சுவாமிகளைநோக்கி நடேசமூர்த்தியின் கிருபையால் தேவரருளிச்செய்த திருத்தொண்டர் புராணத்தை தேவரீரேவாசித்து அதனது பொருளை விளங்க அருளிச்செய்ய வேண்டுமென்று அரசர்முதலிய அடியவர்களெல்லாங் கேட்டுக்கொள்ள சம்மதித்தனர். அதற்குமேல் கனகசபையினிடத்தில் மெழுகிக் கோலமிட்டு அறுகாற்பீடம்வைத்து அதன்மேல் பட்டுவஸ்திரமும் அதன்மேல் வெள்ளை வஸ்திரமும்மடித்திட்டு மலர்களுந்தூவித் தூபதீபங்களுங்கொடுத்து பிராமணர்கள்

ஆதனங்கற்பித்து அதன்மேற்றிருத்தொண்டர் புராணத்தைவைக்கச் சேக்கிழார் சுவாமிகள் அரசர் முதலானவர்களை நோக்கிச் சிற்சபையில் நடனஞ்செய்யும் நடேசமூர்த்திக்குப் பொதுவாக அமைந்திருக்கும் ஹரனென்னுந் திருநாமத்துக்கு இசைந்த நட்சத்திரமும் திருஞானசம்பந்தசுவாமிகள் திருவவதாரஞ்செய்த நட்சத்திரமும் மேற்படி சுவாமிகள் திருமுலைப்பாலுண்ட நட்சத்திரமும் திருவாதிரைநட்சத்திரமாதலால் சித்திரைமாதம் திருவாதிரைநட்சத்திரமாகிய இன்றுமுதல் திருத்தொண்டர் சரித்திரத்தைப் பிரசங்கஞ்செய்து கொண்டுவந்து மேல்வருஷம் சித்திரைமாதம் திருவாதிரை நட்சத்திரநாளில் பூர்த்திசெய்கிறேமென்று சொல்லி உத்தேசித்து நாள்தோறும் பிரசங்கநடத்திவர அரசர்முதலான யாவரும் அன்புடனிருந்து கேட்டு ஆநந்த பரவசத்தை யடைந்தார்கள். அதன்பின்பு திருமுறையைப்பசும்பட்டுச் சவளிகைசாத்தி பொன்தட்டில்வைத்து அந்தத்தட்டுடன் திருமுறையை யெடுத்துக்கொண்டு போய்ப்பட்டத்து யானையின்மேற்கட்டியிருக்கும் அம்பாரியில் வைத்துச் சேக்கிழார் சுவாமிகளுக்குப் பின்புறமிருந்து தனதிரண்டு கரங்களாலும் சாமரைவீசிக்கொண்டு கிராமப்பிரதக்ஷிணஞ்செய்வித்துச் சிற்சபைக்கு முன்வந்தபோது அரசர்களும் மற்றுமுள்ளவர்களும் திருமுறையை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டு போய் சந்நிதியில்வைத்து அரசர்முதலாகிய அடியார்கள் யாவரும் நடேசமூர்த்தியைச் சேவித்துச் சேக்கிழார் சுவாமிகளையும் சேவித்துக் கொண்டார்கள் அதன் பின் அரசன் தனக்கு மந்திரி வேண்டுமே யென்று கருதிப் பாலறுவாயரெங்கிருக்கின்றனரென்று வினவ அவர்குன்றத்தூரில் தன்பேரால் பாலறுவாயன் கேணியென்று ஒரு தடாகப் பிரதிஷ்டைசெய்து திருநாகேச்சுர மென்னுஞ் சிவாலயத் திருப்பணி செய்து கொண்டு இருக்கிறார். என்றுசொல்ல அதைக்கேட்டு அவரை யழைப்பித்து மந்திரிப்பட்டமும் தொண்டைமானென்னும் பட்டப்பேருங்கொடுத்துத் தம்மிடத்திலே வைத்துக்கொள்ள அங்கு நீதிசெலுத்துக் கொண்டிருக்கும் நாளில் தொண்டை மண்டலத்தில் கருப்புக்காலஞ் சம்பவித்தமையால் அந்த நாட்டிலிருப்பவர்களெல்லாரும் தம்மைவந்து அடைய அவர்களுக்கு யாதொரு குறையுமில்லாமல் ஆதரித்தமையால் தொண்டை மண்டலங்காத்த பெருமானென்று புகழ்பெற்று விளங்கினர் சேக்கிழார்சுவாமிகள துறவாச்சிரமத்திலிருந்து நடேசமூர்த்தியினுடைய திருவடிநீழலி லடைந்தனர்

முற்றுப்பெற்றது

சேக்கிழார்சுவாமிகள் மரபுமுறைவிளக்கம்

சேக்கிழார்வம்சத்தில்வதரித்த.

அருண்மொழித்தேவர்.
அவர்புத்திரர்-பொன்மலைத்தேவர்
அவர்புத்திரர்-மின்னதேவர்
அவர்புத்திரர்-காத்தாம்பலதேவர்
அவர்புத்திரர்-கைலைத்தேவர்
அவர்புத்திரர் கடவுட்டேவர்
அவர்புத்திரர்-முக்கணதேவர்
அவர்புத்திரர்-தில்லையம்பலதேவநாயனார்
அவர்புத்திரர்-திருவம்பலதேவநாயனார்
அவர்புத்திரர்-அருண்மொழியுடையார்
அவர்புத்திரர்-திருவாலியையருடையார்.
அவர்புத்திரர்-மலையப்பமுதலியார்
அவர்புத்திரர்-சடையப்பமுதலியார்
அவர்புத்திரர்-வெள்ளியப்பமுதலியார்
அவர்புத்திரர்-செல்லப்பமுதலியார்
அவர்புத்திரர்-நயனப்பமுதலியார்
அவர்புத்திரர்-செல்லப்பமுதலியார் (யார்
அவர்புத்-செல்லப்ப வெங்கடாசலமுதலி
அவர்புத்திரர்-பொன்னையாமுதலியார்
அவர்புத்-செல்லப்ப அப்பாவுமுதலியார்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவசித்தாந்தாசாரியபரமபரைவிளக்கம்.

சைவசித்தாந்தோபதேச சந்தானாசாரியர்களுள் தலைவராவார் பரமசிவனது அருள்பெற்ற திருநந்திதேவர், அவர்மாணாக்கர் சனற்குமார மகாமுனிவர், அவர்மாணாக்கர் சத்தியஞானதரிசனிகள், அவர்மாணாக்கர் பரஞ்சோதிமகாமுனிவர், அவர்கிருபாவசத்தினாலே கைலாசகிரியினின்றும் நீங்கித் தமிழ் நாட்டிற்கு எழுந்தருளிய போது அவரிடத்திலே ஞானோபதேசம்பெற்ற மாணாக்கர் திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியிருந்த வேளாளராகிய மெய்கண்டசிவாசாரியர் என்னும் காரணப் பெயரை உடைய சுவேதவனப்பெருமாள், அவர்மாணாக்கர் நாற்பத்தொன்பதின்மருள் சிரேஷ்டர், திருத்துறையூரில் எழுந்தருளியிருந்த ஆதிசைவராகிய சகலாகமபண்டிதர் என்னும் காரணப்பெயரை உடைய அருணந்திசிவாசாரியர், அவர்மாணாக்கர் சிதம்பரத்தில் எழுந்தருளியிருந்த ஆதிசைவராகிய மறைஞானசம்பந்த சிவாசாரியர். அவர்மாணாக்கர் தில்லைவாழந்தணரில் ஒருவராய் அந்தத் திருப்பதியைச்சார்ந்த கொற்றவன்குடியில் எழுந்தருளியிருந்த உமாபதி சிவாசாரியர், அவர் அத்திருத்தொண்டர் புராணத்தைச் சுருக்கித் திருத்தொண்டர் புராணசாரம் எனப்பெயர் தந்து எழுபத்தைந்து விருத்தத்தால் அருளிச்செய்து சேக்கிழார்புராணமும் பாடியருளினர்.

திருப்பதிக்கோவை.

இப்போது உள்ள தேவாரத்திருப்பதிகங்களை உடையளவாய்இருக்கின்ற சிவஸ்தலங்கள் இருநூற்றெழுபத்தினான்கு அவை வறுமாறு,

சோழநாட்டிலே காவேரிக்குவடகரையில் உள்ள ஸ்தலங்கள்.—சிதம்பரம் திருவேட்களம், நெல்வாயில், கழிப்பாலை, பெருமணம், மயேந்திரப்பள்ளி, திருமுல்லைவாயில், கலிக்காமூர், சாய்க்காடு, பல்லவனீச்சுரம், திருவெண்காடு, திருக்காட்டுப்பள்ளி, குருகாவூர், சீர்காழி, கோலக்கா, புள்ளிருக்குவேளூர் கண்ணார்கோயில் கடைமுடி, நின்றியூர், திருப்புன்கூர், நீடூர், அன்னியூர், வேள்விக்குடி, எதிர்கொள்பாடி, மணஞ்சேரி. திருக்கொறுக்கை, கருப்பரியலூர், குரக்குக்கா, வாளொளிபுற்றூர், மண்ணிபடிக்கரை, ஓமாம்புளியூர், கானாட்டுமுள்ளூர், திருநாரையூர், கடம்பூர் பந்தணநல்லூர், கஞ்சனூர், கோடிகா, மங்கலக்குடி, திருப்பனந்தாள், ஆப்பாடி, திருச்சேய்ஞலூர், தேவன்குடி, வியலூர், கொட்டையூர், இன்னம்பர், புறம்பயம், விசயமங்கை, வைகாவூர், வடகுரங்காடுதுறை, திருப்பழனம், திருவையாறு, நெய்த்தானம், பெரும்புலியூர், திருமழபாடி, திருப்பழுவூர், திருக்கானூர், அன்பிலாலந்துறை மாந்துறை, பாற்றுறை, திருவானைக்கா, திருப்பைஞ்ஞீலி பாச்சிலாச்சிராமம், ஈங்கோய்மலை. ஆக ௬௩.

சோழநாட்டிலே காவேரிக்குத் தென்கரையில் உள்ளஸ்தலங்கள்,—வாட்போக்கி, கடம்பந்துறை, பராய்த்துறை, கற்குடி, முக்கீச்சரம், திருச்சிராப்பள்ளி, எறும்பியூர், நெடுங்களம், மேலைக்காட்டுப்பள்ளி, ஆலம்பொழில், பூந்துருத்தி, கண்டியூர், சோற்றுத்துறை, வேதிகுடி, தென்குடித்திட்டை, புள்ளமங்கை, சக்கரப்பள்ளி, கருகாவூர், பாலைத்துறை, நல்லூர் ஆவூர்ப்பசுபதீச்சரம், சத்திமுற்றம், பட்டீச்சரம், பழையாறை, வடதளி, வலஞ்சுழி, கும்பகோணம், குடந்தைக்கீழ்க்கோட்டம், குடந்தைக்காரோணம், திருநாகீச்சரம். திருவிடைமருதூர், தென்குரங்காடுதுறை, நீலக்குடி, வைகன்மாடக்கோயில். நல்லம், கோழம்பம், திருவாவடுதுறை, துருத்தி, திருவழுந்தூர், மாயூரம். விளநகர், பறியலூர், செம்பொன்பள்ளி, நனி

பள்ளி, வலம்புறம், தலைச்செங்காடு. ஆக்கூர்த்தான்தோன்றிமடம், திருக்கடவூர், திருக்கடவூர்மயானம், வேட்டக்குடி தெளிச்சேரி தருமபுறம் திருநள்ளாறு கோட்டாறு அம்பர்ப்பெருந் திருக்கோயில் அம்பர்மாகாளம் மீயச்சூரிளங்கோயில் திலதைப்பதி பாம்புறம் சிறுகுடி திருவீழிமிழலை வன்னியீர் கருவிலி பேணுபெருந்துறை நறையீர்ச்சித்தீச்சரம் அரிசிற்கரைப்புத்தூர் சிவபுரம் கலியநல்லூர் கருக்குடி வாஞ்சியம் நன்னிலத்துப்பெருங்கோயில் கொண்டீச்சரம் பனையீர் விற்குடி திரும்புகலூர் வர்த்தமானீச்சரம் இராமனதீச்சரம் பயற்றூர்செங்காட்டங்குடி மருகல் சாத்தமங்கை நாகைக்காரோணம் சிக்கல் கீழ்வேளூர் தேவூர் பள்ளியின்முக்கூடல் திருவாரூர் மூலட்டானம் திருவாரூராநெறி திருவாரூர்ப்பறவையுண்மண்டளி விளமர் கரவீரம் பெருவேளூர் தலையாலங்காடு குடவாயில் சேறை நாலூர்மயானம் கடுவாய்க்கரைபுத்தூர் இரும்பூளை அரதைப்பெரும்பாழி அவளிவநல்லூர் மருதிடியமம், வெண்ணி, பூவனூர், பாதாளீச்சரம், திருக்களர், சிற்றேமம், உசாத்தானம், இடும்பாவனம், கடிக்குளம், தண்டலைநீணெறி, கோட்டூர் வெண்டுறை, கொள்ளம், பூதூர் பேரெயில் கொள்ளிக்காடு தெங்கூர் நெல்லிக்கா நாட்டியத்தான்குடி, காருயல் கன்றாப்பூர் வலிவலம், கச்சினம், கோளிலி, வாய்மூர், வேதாரணியம் அகத்தியான்பள்ளி, கோடிக்குழகர். ஆக கஉஎ

ஈழநாட்டில் உள்ள ஸ்தலங்கள்.—திருக்கோணமலை, திருக்கேதீச்சரம் ஆ உ.

பாணடிநாட்டில் உள்ள ஸ்தலங்கள்—மதுரை ஆப்பனூர் திருப்பரங்குன்று திருவேடகம் கொடுங்குன்றம் புத்தூர் புனவாயில் இராமேச்சரம் ஆடானை கானப்பேர் பூவணம் திருச்சுழியல் திருக்குற்றாலம் திருநெல்வேலி ஆ கச

மலைநாட்டில் உள்ள ஸ்தலம்.—திருவஞ்சைக்களம்

கொங்கநாட்டில உள்ள ஸ்தலங்கள்—அவிநாசி. முருகன்பூண்டி, திருநணு கொடிமாடச்செங்குன்றூர் வெஞ்சமாக்கூடல் பாண்டிக்கொடுமுடி கருவூர். ஆ எ

நடுநாட்டில் உள்ள ஸ்தலங்கள்.—அரத்துறை தூங்கானைமாடம் கூடலையாற்றூர் எருக்கத்தம்புலியூர் திணைநகர் சோபுரம் திருவதிகை திருநாவலூர் முதுகுன்றம் நெலவெண்ணை கோவளூர் அறையணிநல்லூர் இடையாறு திருவெண்ணை நல்லூர் துறையூர் வடுகூர் திருமாணிகுழி பாதிரிப்புலியூர்முண்டீச்சரம் புறவார் பனங்காட்டூர் ஆமாத்தூர் திருவண்ணாமலை ஆ உஉ,

தொண்டைநாட்டில் உள்ள ஸ்தலங்கள்.—கச்சியேகம்பம் கச்சிமேற்றளி கச்சியோணகாந்தன்றளி கச்சியனேகதங்காவதம் கச்சிநெறிக்காரைக்காடு குரங்கணில்முட்டம் மாகறல் ஒத்தூர் வன்பார்த்தான் பனங்காட்டூர்வல்லம் மாற்பேறு ஊறல் இலம்பையங்கோட்டூர் விற்கோலம் திருவாலங்காடு பாசூர் வெண்பாக்கம்கள்ளில் திருக்காளத்தி திருவொற்றியூர் வலிதாயம் வடமுல்லைவாயில் வேற்காடு மயிலாப்பூர் வான்மியூர் கச்சூராலக்கோயில் இடைச்சுரம் திருக்கழுக்குன்றம் அச்சிறுபாக்கம் திருவக்கரை அரசிலி இரும்பைமாகாளம். ஆ ௩உ


துளுவநாட்டில் உள்ள ஸ்தலம்.—கோகரணம். க

வடநாட்டில் உள்ள ஸ்தலங்கள்.—திருப்பருப்பதம் இந்திரநீலப் பருப்பதம் அனேகதங்காவதம்திருக்கேதாரம் நொடித்தான்மலை என்பது கைலாசமலை.) ஆக. ரு

சமயகுரவர் நால்வர் வயசு.

அப்பருக்கெண்பத்தொன்றருள்வாதவூரருக்குச்
செப்பியநாலெட்டினிற்றெய்வீக-மிப்புவியிற்
சுந்தரர்க்குமூவாறுதொன்ஞானசம்பந்தர்க்
கந்தம்பதினாற்றி.

திருச்சிற்றம்பலம்.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்கைலாயச்சிறப்பு.

கடவுள்வணக்கம்.

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாகிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

பொன்போன்ற வெள்ளிய திருநீறுதரித்தபரமசிவன் திருவோலக்கமாக எழுந்தருளியிருக்கும் வெள்ளிமலையானது இமயமலையின் பக்கத்திலிருக்கின்றது. அது பெரியோர்கள் களங்கரகிதமான மனம்போலும், படிகம்போலும், திரிலோகங்களுஞ்செய்த புண்ணியங்களே திரண்டு ஒருருவாகப் பிரகாசிப்பதுபோலு மிருக்கின்றது. அதில் இருக்கு, யசசு, சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களும் துதிக்கின்றவோசையும், வித்தியாதரர்கள் வீணையோசையும், யானைகளுடையமுழக்கமும், தேவதுந்துபி முழக்கமும், இடைவிடாதொலிக்கின்றன. அன்றியும், தேவர்கள் சிரமாலைகளும் பற்பலமுனிவர்க ளஞ்சலிசெய்து அர்ச்சித்த மலர்மாலைகளும், அம்மலைப்பக்கங்களெங்கு நெருங்கி மயங்குகின்றன. அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர்; காந்தருவர், கிந்நரர், நிருதர், கிம்புருடர், இயக்கர், விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசிகள், போக பூமியர் என்னும் பதினெண்கணங்களும் துதிக்கின்ற பேரொலி முழங்க நிறைந்துள்ளாகிய அக்

கைலாயமலையி னுச்சியில் கோடாகோடி சூரியப் பிரகாசம்போலும் விளங்குகின்ற நவமணிகள் பதிக்கப்பட்ட திருக்கோயிலுக்குமுதற் கோபுரவாயிற் காவற்றலைவர் அதிகாரநந்திதேவர், அவர் உலகாத்தாவாகிய பரமசிவனது திருப்பணிக்கு அதிகாரத்தலைவர், அவர் உடைவாளும் திருப்பிரம்பும் பெற்று கைலையைக் காக்கின்றவர், தேவர்முதலிய யாவருக்கும் மேலானவர், பரமசிவனிடத்து அதிகபக்தியும் அன்பு முள்ளவர் இவராலிரவும்பகலும் இடைவிடாமற் காக்கப்பட்ட வெள்ளிமலையென்னுங் கைலாயத்தின் அடிவாரத்தில் எச்சமயங்களினும் சைவசமயமே மெய்ச்சமயமென்றும், எக்கடவுளினும் பரமசிவமே மெய்க்கடவுளென்றும் நிச்சயித் தறிந்தவராகிய உபமன்னியமஹாமுநிவர், இவர் கிருஷ்ணனுடைய தலையில் தன்றிருவடியைச் சூட்டினவர், பிறப்பில்லாதவர், பரமசிவன் அருளால் திருப்பாற்கடலை யுண்டவர், கடவுளினிடத்து இடைவிடாத மிகுந்த அன்புள்ளவர்.

இந்த உபமன்னிய மஹாமுநிவர் ஒருநாள் அடியார்களும் முநிவர்களும் பெரியோர்களும் தன்னைச் சூழ்ந்திருக்குஞ்சமயத்தில் தமக்கெதிராக ஆயிரம் ஆதித்தகிரகணங்கள் ஏககாலத்தில் ஒன்றாகத்திரண்டு பிரகாசிப்பதுபோல ஒரொளிதோன்ற அதைக்கண்டு தன்னைச் சூழ்ந்திருந்த எல்லோரும் உபமன்னிய மஹாமுநிவரை நோக்கி இதுவென்னவாச்சரியம், இப்படிப்பட்ட வொளி தோன்றுவதற்குக் காரணமென்னென உபமன்னியர் சிவனைத் தியானித்துத் தெரிந்து தென்றிசையில் திருநாவலூரி லவதரித்த சுந்தரமூர்த்தியென்றும், வன்றொண்டரென்றுந் திருநாமம் பெற்றவர் சிவனது ஆஞ்ஞையால் வருகிறாரென்று தனதிரு கரமுஞ் சிரமேற்குவித்து அத்திசையை நோக்கி வணங்கி ஆநந்தக் கண்ணீருடன் முழுது நனைப்பச்செல்லும்போது மற்றவர்கள் தங்களுக்குண்டாகிய சந்தேக நிவர்த்தியாகும்பொருட்டு எங்களாண்டவராகிய முநிவரே சிவனது திருவடிகளை யல்லாமல் வேறொரு தெய்வத்தினடிகளையும் மனதினாலுஞ் சிந்தியாத தேவரீர் இன்று வணங்குதற்குக் காரணமென்னென உபமன்னியர் கேளுங்கள் பெரியோர்களே பரமசிவன் றரிக்கப்பட்ட திருமாலையையும் திருவெண்ணீற்றினையும் எடுத்து வருகின்றவர் அவருடைய பெயர் ஆலால சுந்தரர் முற்காலத்தி லொருநாள் பரமசிவனுக்குத் தக்க மலர்களெடுக்க நந்தவனத்திற்குச் சென்றார். அவர்சொல்லுமுன்னமே பார்வதி தேவியாருக்கு மலர்கள் பறித்துவர தோழிமார்களாகிய அநிந்திதையென்றும் கமலினியென்றும் இருபெண்கள் வந்து மலர்கள் கொய்துகொண் டிருக்கும்போது தான் வந்துற்பவிக்க மிகுந்த தவஞ்செய்த தென்றிசையானது வாழவும் குற்றமற்ற திருத்தொண்டத் தொகைசொல்லவும் வருகின்றவராகிய ஆலாலசுந்தரர் இது கடவுளின தருளென்றுகருதி அவ்விருவரையுங்கண் டிச்சைகொண்டார். அப்பெண்க ளிருவரும் அவ்வாலால சுந்தரரைக்கண் டிச்சித்தார்கள். பின்பு ஆலாலசுந்தரரும் பரமசிவனுக்குத்தக்க மலர்களை யெ

டுத்துக்கொண்டுபோனார் அப்பெண்களும் பார்வதியாருக்குத் தக்கமலர்களை யெடுத்துக்கொண்டுபோனார்கள். இவையெல்லாமறிந்த பரமசிவனார் ஆலாலசுந்தரரைப்பார்த்து நீ பெண்களிடத் திச்சைவைத்தபடியால் தென்தேயத்திற்போய்ச் சநநமெடுத்து அந்தப் பெண்களோடும் ஆசை தீரும்படி கலந்தனுபவிக்கக் கடவாயென்று கட்டளையிட, ஆலாலசுந்தரர் இருகரங்களுங்குவித்து மநங்கலங்கி என்னுடைய வபாக்கியத்தால் தேவர் திருவடிகளை விட்டு நீங்கும் அடியேன் விதிவிலக்குகளையறியாதவன் ஆகையால் எளியேனைத் தடுத்தாட்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, சுவாமி அப்படியே தடுத்தாட்கொள்வோமென்று கட்டளையிட்டருளிய பின்பு ஆலாலசுந்தரரும் அநிந்திதையும் கமலினியும் தென்றிசையி லவதாரஞ்செய்து இன்பத்தை யநுபவித்தார்கள். அவர்களில் ஆலாலசுந்தரர் வருகிறாரென்று அவருடைய செய்திகளையெல்லாம் வரன்முறையாக உபமன்னிய மஹாமுனிவர் மற்ற முனிவர்களுக்குச் சொல்ல அதைக்கேட்ட அம்முனிவர்கள் பாசபந்தங்களில் அகப்பட்டுத் தடுமாறுகின்ற மானுடர் பிறப்பதற் கிடமான தென்றிசையானது மற்றத் திசைகளைப்பார்க்கிலுஞ் சிறந்ததற்கு அதுசெய்தபுண்ணியம் யாதென உபமன்னியமஹாமுனிவர் என் பிதாவாகிய வியாக்கிரமபாதரால் பூசித்தசிதம்பரமும், பூமிதேவிக்கிருதயமாகிய திருவாரூரும், கம்பாநதிசூழ்ந்த காஞ்சீபுரமும், சிவனெழுந்தருளிய திருவையாறும், பிரளயகாலத்து மூழ்காத தோணிபுரமும் மற்றும் பல திவ்விய ஸ்தலங்களும் தென்றிசையினிடத்திருக்கின்றன. இவ்விதமான தலங்களின் பெருமையும் இத்தலங்களிலே சிவபணிவிடைகள்செய்து பேறுபெற்ற சிவனடியார்கள் பெருமையும் திருவாய்மலர்ந்தருளினார். இந்தப்பிரகாரம் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் திருவுளமகிழ்ந்தருளிய திருத்தொண்டத் தொகைப்படி சேக்கிழாரருளிச்செய்த புராணத்தை வாக்கியமாகச் சொல்லுகிறோம்.

மநுச்சக்கிரவர்த்தி சரித்திரம்.

எவற்றிற்கு முதல்வனாகிய பெரியதவத்தையுடைய அகத்திய முனிவனது கமண்டலத்தினின்றும் வெளிப்பட்ட பூமிதேவியின் மார்பிற்றங்கிய நித்திலமாலையையொத்த காவிரியாற்றாற் சூழப்பெற்ற பலவளங்களும் நிறைந்துள்ள சோழநாட்டின்மத்தியில் மிகுந்த பழமையானதும் இலக்குமியாற் பூசிக்கப்பெற்ற வன்னியும், கங்கையும், மதியுந்தங்கிய சிவந்த சடையினையுடைய பரமசிவன் வசிக்கின்ற திருவாரூரென்னு நகரமொன்றுண்டு, அந்நகரத்தில் அநபாயச்சோழவம்சத்திற்பிறந்த மநுச்சக்கிரவர்த்தி மநுமுறை வழாது செங்கோல்செலுத்தி ஆராய்ச்சியாமணிகட்டி ஆறிலொரு கடமைவாங்கி அரசாளுங்காலத்தில் பரமசிவனது திருவருளால்

தம்முடைய மனைவியார் திருவயிற்றில் சிங்கக்குட்டிக்கொப்பாகிய வீதி விடங்கனென்னும் ஒரு பிள்ளைபிறந்தது. அநேகதவங்களைச்செய்து அருமையாகப்பெற்ற ஒப்பற்ற அப்பிள்ளையானது நாள்தோறும் பரமசிவத்தைப் பூசைசெய்ய முயற்சியிலிருந்து அவரருளினால் வடமொழி முதலிய பாஷைகளுந் திருத்தமாகவோதி யானையேற்றங் குதிரையேற்றந் தநுர்வேதமுதலிய எல்லாவற்றையுங்கற்று வல்லவனாகி தன்னை யருமையாகப்பெற்ற தந்தை மனமகிழ்ந்து அன்புகூரும்படி மேலான நற்குணங்களா னிறையப்பெற்று இளவரசாகி வாழுகின்றநாளில் ஒருநாள் வெண்கொற்றக் கொடையினையுடைய அரசனது அழகுமிகுந்த அரண்மனையின்றும் ஆகாயத்தையளாவிய மாடமாளிகைகள் நெருங்கிய வீதியில் அநேக அரசர்குமாரர்கள் தன்னைச்சூழ வாசனைதங்கிய மலர்மாலைகள் தொங்காநின்று குங்குமமணிந்த தோள்களையுடைய இராஜபுத்திரன் மிகுந்த சேனைகள் தன்னைச்சூழ இரதத்தின்மீதேறி முன்னர் வந்தியரும் சூதரும் மாகதரும் தன்வீர முதலியவற்றைப் புகழ்ந்து செல்ல ஒருபக்கத்தில் முரசுவாத்தியங்களும், ஒருபக்கத்தில் சங்கவாத்தியங்களுமுழங்கச் செல்லும்போது ஒப்பற்ற பெரிய தரும தேவதையானது தயையில்லாமல் நாலுவகைச் சேனைகளையுடைய சோழமகாராஜனது அச்சமற்ற மநுநீதியுண்மையைச் சோதிக்கவந்ததுபோல அங்குசெல்லு மனிதர்கள் தனது வரவைக்காணாதவண்ணம் ஓரழகிய பசுவின் புதிய இளங்கன்றானது துள்ளிக்கொண்டு அவ்வீதியின் வந்து அரசகுமாரன் தேர்க்காலிலகப்பட்டு இறந்தது.

அதைக்கண்ட தாயாகிய பசுவானது மனவருத்தமடைந்து துள்ளித்துடித்துக் கதறிக் கீழே விழுந்தது, அதைக்கண்ட இராஜகுமாரன் ஐயோ அபாயம் வந்ததேயென்று சொல்தடுமாறி அத்துயரினால் வருந்தியறிவழிந்து இந்தப்பசுவுங் கன்றும் என்னறிவின் பெருமைகெடஅழித்துவிட்டதே இதற்கென்ன செய்வேன் என்று தேரினின்று மிழிந்து கீழேவிழுந்து அலறுகின்ற பசுவைப் பார்த்து உயிர் பதைத்துச் சோர்ந்து பூமியிலிறந்த கன்றை நோக்கிப் பெருமூச்சுவிட்டு அழுது நிலைபெற்ற அவ்வுலகத்தைக் காக்கும் மநுவென்கிற என்கோமானுக்கு உலகத்தில் இந்தப் பழி வந்து சம்பவிக்க நான் பிறந்தேனன்றோ வென்று சொல்லி இதனால் வந்த பாவத்தை பிராமணர்க ளிடத்திற் சென்று அவர்களால் செய்யத்தக்க யாகாதிகளால் நீக்கிக் கொள்வது அறமேயானால் எந்தை யறிதற்கு முன்னர் செய்வே னென்று அந்தணர் முன்பாகச் சென்றான். அப்பொழுது பசுவானது, மிகவுந் தளர்ந்து பெருமூச்சு விட்டு மநுச் சக்கிரவர்த்தி அரண்மனை வாயிலிற் கட்டிய ஆராய்ச்சி மணியினிடத்திற் போய் அதைக் கொம்பினா லடித்தது. அவ்வோசையானது மநுச்சோழரது செவியிற் கேட்டவளவில் அவர் தம் பிள்ளைப் பிராணனைக் கொண்டு போக வரும் இயமன் வாகனத்திற் கட்டிய மணியோ

சையோவென்றுசொல்லி என்றுங்கேளாத மணியோசை செவியிற்புகுந்த தென்னவென்று சிங்காதனம்விட்டிறங்கி ஆராய்ச்சிமணி கட்டியிருக்கிற வாயிலில்வந்தார் காவலாளர் எதிராகவந்து ஆண்டவரே ஒருபசுவந்துமணியைக் கொம்பினாலாட்டியதென்றார்கள் மநுச்சோழரானவர் அவர்கள்சொல்லைக்கேட்டு வருத்தமடைந்து பசுவைப்பார்த்து உங்கள் அசாக்கிரதையினாலே இதற்குத் துன்பமுண்டாயிற்றென்று கோபிக்க ஒரு பழமையான மந்திரி எதிராகவந்து சுவாமீ வீதிவிடங்கன் தேரிலேறிப் போகும்போது இப்பசுவின்கன்று தேர்ச்சக்கரத்தி லகப்பட்டிறந்ததென அம்மந்திரிசொன்ன வார்த்தையைக்கேட்ட இராஜாவானவர் மிகவு மனங்கலங்கி வியசனமடைந்தார் அவ்வாறு வியசனப்படு மநுச்சோழரது துக்கத்தைக்கண்டு மந்திரிகள் வணங்கி ஆண்டவரேவியசனப்படாதீர் அந்தப்பாவந்தீரும்படிக்கு பிராயச்சித்தமுண்டு அதுசெய்யுமென்றார்கள். அப்பொழுதுசோழராஜன் மந்திரிகளே நீங்கள் சொல்லுவது நியாயமல்ல பிராயச்சித்தம் பசுவடைந்த துன்பத்திற்கு மருந்தாகுமா பழிக்குப்பழி யென்பிள்ளையைக் கொடுப்பதேநியாயமென்று மநுச்சோழர் குமாரனைத்தம்மிடத்து வரவழைத்து ஒரு மந்திரியைப்பார்த்து இந்தப்பிள்ளையைப் பசுவின்கன்று இறந்த வீதியிலேகிடத்தித் தேரையவன் மார்பின்மேலே நடத்தென்று கட்டளைகொடுக்க மந்திரியும் விடைபெற்றுச்சென்று தானவ்வாறுசெய்ய மனமில்லாமல் தன்பிராணனைவிட்டுவிட்டான்.

மந்திரியிறந்தசெய்தியைக்கேட்ட மநுச்சோழர் பிள்ளையைத்தாமேயழைத்துக்கொண்டு பசுவின்கன்றிறந்த வீதியிற்சென்று தமது குலத்திற்கு ஓர் பிள்ளைதானிருக்கிறதென்பதை நினையாமற் றருமவழியிலே நடப்பது தகுதியென்று தன்குமாரனை கீழேகிடத்தித் தேருருளையானது பிள்ளைமார்பி லழுந்தும்படி தன்றேரை நடத்தினார், அச்செய்கையைக்கண்டு, உலகிலுள்ளோர் கண்ணீர்விட்டார்கள். தேவர்கள் மலர்மாரி பொழிந்தார்கள். அப்பொழுது பார்வதியும், பரமசிவனும், இடபாரூடராய்வந்தெதிர்நின்று காக்ஷிகொடுத்து அநுக்கிரகஞ்செய்தார்கள். இறந்த பசுவின்கன்றுடனே வீதிவிடங்கனாகிய விராஜகுமாரனும் மந்திரியும் சிவனுடைய திருவருளினாலே உயிர்த்தெழுந்தார்கள். மநுச்சோழரானவர் மகனையெடுத்து மார்போடணைத்து மனமகிழ்ச்சியடைந்தார். பார்வதியும் பரமசிவனும் அந்தரமாக மறைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

தேவாசிரிய மண்டபச் சிறப்பு.

பூதகணங்களுக்குத் தலைவராயும், புற்றைத் தமக்கிடமாகக்கொண்டவருமாகிய எவற்றிற்கு முதலாயுள்ள கடவுள்வாழாநின்ற அழகிய ஆலயத்துள் பிரகாசம்பொருந்திய மதிலையுடைய திருவாயிலின் முன்னா் பிரமன், இந்திரன், திருமால்முதலிய தேவர்கள் இடைவிடாது நிறைந்திருக்கின்ற தேவாசிரியமண்டபமானது, அடைந்தவரது துன்பத்தை நீக்காநின்ற அடியவர்களது திருமேனியிற்பூசிய திருநீற்றினாலும், அவரது நிறைந்த பரிசுத்தத்தினாலும் பஞ்சாக்ஷரவோசை பொலிதலினாலும், பரவிய திருப்பாற்கடலுக்கொப்பாயிருக்கின்றது, அதனிடத்து பரமசிவன் முன்னர்தானேவிரும்பி அடிமைகொண்ட அடியார்களும், தங்கள் கரங்களினாலே திருத்தொண்டுசெய்யு முறைமையையுடையவர்களும், குற்றமற்றதிருமேனியில் பூசியதிருநீறுபோல்உள்ளம் பரிசுத்தமானவர்களும் பஞ்சபூதங்களுநிலைகெட்டுக் கலங்கினாலும் உமையை யொருகூறு கவுடைய பரமசிவனதுதிருவடியை மறவாதவர்களும் செல்வமும் வறுமையுமில்லாத செல்வத்தையுடையவாகளும் ஓடும்பொன்னுமொன்றாக நினைப்பவர்களும், அன்போடு பரமசிவனை வணங்குதலேயன்றி வீட்டினையும் விரும்பாத மனவலியால் விளங்குகின்றவர்களும் முத்தாரமுதலிய ஆரங்களும்; கண்டிகைகளும், வஸ்திரங்களும், பாரமென்றறிந்து பரமசிவனது பணிவிடையல்லது வேறொன்றினும் இச்சை வையாதவர்களும் ஆகிய இவ்வடியார்கள் நெருங்கியிருக்கின்ற இம்மண்டபத்திலுள்ள அடியவர்களது பெருமையை யென்னாற்சொல்லுந் தகைமையையுடையன் றாயினும்; ஆலாலசுந்தரர்சொல்லிய திருத்தொண்டத்தொகையிலுள்ளபடி சொல்லுகின்றேன்

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டர் குருபூசை.

அறுபத்துமூன்று நாயன்மார்களும் திருவாதவூரடிகளாகிய மாணிக்கவாசக சுவாமிகளும் சிவபதம் அடைந்தமாதமும் நக்ஷத்திரம் மேலே உணர்த்தப்படும் சைவசமயிகள் யாவரும் அவர்களுக்கு வருடந்தோறும் அவரவர் அடைந்த மாதநக்ஷத்திரத்திலே சிவாகமவிதிப்படி அன்போடு குருபூசைசெய்தல்வேண்டும், அவர்கள் அனைவருக்கும் செய்தற்குச் சக்தியில்லாதவர்கள் அவர்களுள் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள், திருநாவுக்கரசுசுவாமிகள், சுந்தரமூர்த்திசுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் நால்வருக்குமாத்திரம் ஆயினும் செய்தல்வேண்டும் அவர்கள் நால்வரும் பல அற்புதங்களைச்செய்து பாசமயங்களை வென்று சற்சமயமாகிய சைவசமயத்தை ஸ்தாபனம்பண்ணி, ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுத் தமிழ்வேதம் செய்தருளிய சமயகுரவர்கள் என நிற்றலால் அவர்களுக்குக் குருபூசைசெய்வது மிக அவசியமாம்.

சிவானந்தமாலை ௫-ம் திருவெண்பா

சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமென் சுந்தரனுஞ்
சிற்கோலவாதவூர்த் தேசிகனு-முற்கோலி
வந்திலரே னீறெங்கே மாமறைநூலெங்கே
யெந்தைபிரா னஞ்செழுத் தெங்கே.

நெம்.	அடியார்கள் பெயர்.	மாதம்.	நட்சத்திரம்.
1	சிறுத்தொண்டநாயனார்	சித்திரை	பரணி
2	மங்கையர்க்கரசியார்	,,	உரோகிணி
3	விறன்மீண்டநாயனார்	,,	திருவாதிரை
4	இசைஞானியார்	,,	சித்திரை
5	திருக்குறிப்புத்தொண்டநாயனார்	,,	ஸ்வாதி
6	திருநாவுக்கரசுசுவாமிகள்	,,	சதயம்
7	கழற்சிங்கநாயனார்	வைகாசி	பரணி
8	நமிநந்தியடிகணாயனார்	,,	பூசம்
9	சோமாசிமாறநாயனார்	,,	ஆயிலியம்
10	முருகநாயனார்	,,	மூலம்
11	திருநீலநக்கநாயனார்	,,	மேற்படி
12	திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார்	,,	ஷை
13	திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்	,,	ஷை
14	மாணிக்கவாசகசுவாமிகள்	ஆனி	மகம்
15	அமர்நீதிநாயனார்	,,	பூரம்
16	ஏயர்கோன்கலிக்காமநாயனார்	,,	இரேவதி
17	மூர்த்திநாயனார்	ஆடி	கார்த்திகை
18	புகழ்ச்சோழநாயனார்	,,	மேற்படி
19	கூற்றுவநாயனார்	,,	திருவாதிரை
20	பெருமிழலைக்குறும்பநாயனார்	,,	சித்திரை
21	சேரமான்பெருமாணாயனார்	,,	ஸ்வாதி
22	சுந்தரமூர்த்திசுவாமிகள்	,,	மேற்படி
23	கலியநாயனார்	,,	கேட்டை
24	கோட்புலிநாயனார்	,,	மேற்படி
25	செருத்துணைநாயனார்	ஆவணி	பூசம்
26	அதிபத்தநாயனார்	,,	ஆயிலியம
27	புகழ்த்துணைநாயனார்	,,	மேற்படி
28	இளையான்குடிமாறநாயனார்	,,	மகம்
29	குலச்சிறைநாயனார்	,,	அனுஷம்
30	குங்கிலியக்கலயநாயனார்	,,	மூலம்
31	உருத்திரபசுபதிநாயனார்	புரட்டாசி	அஸ்வனி
32	திருநாளைப்போவார்நாயனார்	,,	உரோகிணி
33	ஏனாதிநாயனார்	,,	உத்திராடம்
34	நரசிங்கமுனையரையநாயனார்	,,	சதயம்
35	திருமூலநாயனார்	ஐப்பசி	அஸ்வனி
36	நெடுமாறநாயனார்	,,	பரணி
37	இடங்கழிநாயனார்	,,	கார்த்திகை
38	சத்திநாயனார்	,,	பூசம்
39	பூசலார்நாயனார்	,,	அனுஷம்
40	ஐயடிகள்காடவர்கோனாயனார்	,,	மூலம்

நெம்	அடியார்கள் பெயர்	மாதம்.	நட்சத்திரம்.
41	கணம்புல்லநாயனர்	கார்த்திகை	கார்த்திகை
42	மெய்ப்பொருணயனர்	,,	உத்திரம்
43	ஆனயநாயனர்	,,	அஸ்தம்
44	மூர்க்கநாயனர்	,,	மூலம்
45	சிறப்புலிநாயனர்	,,	பூராடம்
46	சடையநாயனர்	மார்கழி	திருவாதிரை
47	இயற்பகைநாயனர்	,,	உத்திரம்
48	மானக்கஞ்சாறநாயனர்	,,	ஸ்வாதி
49	சாக்கியநாயனர்	,,	பூராடம்
50	வாயிலார்நாயனர்	,,	இரேவதி
51	கண்ணப்பநாயனர்	தை	மிருகசீரிடம்
52	அரிவாட்டநாயனர்	,,	திருவாதிரை
53	சண்டேசுரநாயனர்	,,	உத்திரம்
54	திருநீலகண்டநாயனர்	,,	விசாகம்
55	அப்பூதிநாயனர்	,,	சதயம்
56	கலிக்கம்பநாயனர்	,,	இரேவதி
57	எறிபத்தநாயனர்	மாசி	அஸ்தம்
58	காரிநாயனர்	,,	பூராடம்
59	கோச்செங்கட்சோழநாயனர்	,,	சதையம்
60	நேசநாயனர்	பங்குனி	உரோகிணி
61	கணநாதநாயனர்	,,	திருவாதிரை
62	முனையடுவார்நாயனர்	,,	பூசம்
63	காரைக்காலம்மையார்	,,	ஸ்வாதி
64	தண்டியடிகணயனர்	,,	சதயம்

சித்திரை சதயத்தப்பர் சிறந்தவை காசிமூலத்
தத்தரைப் பணிசம்பந்த ரானிமா மகத்திலந்த
முத்தமிழ் வாதவூரர் முதியநல்லாடி தன்னிற்
சுத்தமாஞ் சுவாதிநாளிற் சுந்தரர் கைலைசேர்ந்தார்.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார் புராணம்.

தண்கயிலைய் துறந்கி நாவலூர்வாழ்
 சைவனார்சடையனார் தநயனாராய்
மண்புகழ வருட்டுறையா னோலைகாட்டி
 மணம்விலக்க வண்றொண்டாயதிகைசேர்ந்து
நண்பினுடனருள்புரிய வாரூர்மேவி
 நலங்கிளரும்பரவைதோ ணயந்துவைகித்
திண்குலவும்விறன்மிண்டர் திறல்கண்டேத்துந்
 திருத்தொண்டத் தொகையருளாற்செப்பினாரே.

செப்பலருங்குண்டையூர் நெல்லழைத்துத்திருப்புகலூர்ச்
 செங்கல்செழும் பொன்னாய்ச்செய்து
தப்பின்முதுகுன்றர்தரும் பொருளாற்றிட்டுத்
 தடத்தெடுத்துச் சங்கிலிதோள்சார்ந்துநாத
னைப்பிறனித்தூதுவந்தா றாடுகீறி
 யுறுமுதலைசிறுமதலை யுமிழநல்கி
மெய்ப்பெரியகளிறேறி யருளாற்சேர
 வேந்தருடன் வடகயிலைமேவினாரே.

ஸ்ரீகைலாசகிரியிலே, அகண்டபரிபூரண சச்சிதானந்தஸ்வரூபியாகிய பரமசிவனானவர், ஆன்மாக்களுக்கு அருள்செய்யும்பொருட்டு, மாயாகாரியமாகிய எங்கள்சரீரம்போலாகாது சத்தியகாரியமாயுள்ள சரீரத்தை எடுத்து, தமது அருட்சத்தியாகிய பார்வதிதேவியோடு வீற்றிருப்பார். அக்கடவுளுக்குத்திருத்தொண்டுசெய்யும் அடியார்கூட்டத்திலே ஆலாலசுந்தரர்என ஒருவர் உளர் அவர் ஆதிகாலத்திலே ஒருநாள், பத்தர்கள்செய்யும் அருச்சனையை அவர்கள் முத்திபெற்று உய்யும்பொருட்டு அங்கீகாரஞ்செய்தருளுகின்ற அக்கடவுளுக்குத் தரிக்கும்பொருட்டு, புஷபங்களைக்கொய்வதற்குநந்தவனத்துக்குப்போனார். போனபோது பார்வதிதேவியாருக்குத் தரிக்கும்பொருட்டு அந்தநந்தவனத்திலே புஷ்பங்கொய்துகொண்டுநின்ற அவருடைய சேடியர்களாகிய அனிந்திதை கமலினிஎன்னும் பெயர்களை உடைய பெண்களிருவரையுங்கண்டு, அவ

ர்கள்மேல் ஆசைவைத்தார் அவர்களும் ஆலாலசுந்தரரைக்கண்டு அவர்மேல் ஆசைகொண்டார்கள் பின்பு ஒருபிரகாரம்மனதைத்திருப்பி, புஷ்பங்களைக்கொய்துகொண்டு, ஆலாலசுந்தரர் சுவாமி சந்நிதானத்துக்கும் சேடியர்கள் தேவிசந்நிதானத்துக்கும் திரும்பிவிட்டார்கள். அப்பொழுது சமஸ்தஆன்மாக்களிடத்திலும் வியாபித்திருந்து அந்த அந்த ஆன்மாக்கள் மனம்வாக்குக்காயங்களினாலே செய்கின்ற கர்மங்களையறிந்து அந்த அந்தக்கர்மங்களுக்கு ஏற்றபலன்களை ஊட்டி அக்கர்மங்களைத் தொலைப்பிக்கின்ற காருண்ணிய ஸ்வரூபியாகிய கடவுளானவர் ஆலாலசுந்தரரைநோக்கி நீபெண்கள்மேல் இச்சைகொண்டபடியால் தக்ஷிணபூமியிலே மானுடதேகம் எடுத்துப்பிறந்து அந்தப்பெண்களோடுபுணர்ந்து இன்பம் அனுபவிப்பாய்என்று திருவாய்மலர்ந்தருளினார். அதைக்கேட்டு ஆலாலசுந்தரர்மனங்கலங்கி சந்நிதானத்திலே சாஷ்டாங்கமாக நமஸ்காரம்பண்ணி எழுந்துநின்று அஞ்சலியஸ்தராகி, சுவாமீ தேவரீருடைய அருமைத்திருவடிகளைப் பிரிதற்கு ஏதுவாகிய கொடும்பாவத்தைச்செய்தவனாகிய சிறியேன் மயக்கம்பொருந்தியமனிதப்பிறப்பையெடுத்து, செய்யவேண்டியது இன்னது என்றும் நீக்கவேண்டியது இன்னதுஎன்றும் அறியாமல் பிரபஞ்சவாழ்க்கையிலே மயங்கும்போது, தேவரீர்வெளிப்பட்டுவந்து அடியேனைத்தடுத்து ஆட்கொண்டருளவேண்டும் என்று பிரார்த்திக்கவேண்டுவார் வேண்டியவைகளை ஈந்தருளும் கடவுளும் அவ்வேண்டுகோளுக்கு இசைந்தருளினார்.

பின்பு ஆலாலசுந்தரர், பூமியிலே புண்ணியபூமியாகிய பரதகண்டத்திலே தமிழ்வழங்கும் நிலமாகிய தென்னாட்டைச்சேர்ந்த திருமுனைப்பாடிநாட்டிலே திருநாவலூரென்னுந் திருப்பதியிலே ஆதிசைவரென்னும் பிராமணகுலத்திலே சடையனாரென்னும் சிவாசாரியாருக்கு அவருடைய மனைவியாராகிய கற்பிலேசிறந்த இசைஞானியார் என்பவரிடத்திலே, ஆன்மாக்கள் சைவசமயமே மெய்ச்சமயமென்று உணர்ந்து அதனை அனுசரித்து உய்யும்பொருட்டு பிறந்தருளினார். பிறந்த அப்பிள்ளைக்கு நம்பியாரூரர் என்று நாமகரணஞ்செய்தார்கள். அந்தபிள்ளை ஒருநாள்வீதியிலே சிறுதேர்உருட்டி விளையாடும்போது அந்தத் திருமுனைப்பாடிநாட்டுக்கு அரசராகிய நரசிங்கமுனையரென்பவர் அந்தப்பிள்ளையைக்கண்டு, அவர்மேல் ஆசைமிகுந்து அவருடைய தந்தையராகிய சடையனாரிடத்துக்குப்போய் இந்தப்பிள்ளையை எனக்குத்தாருமென்று கேட்டுப் பெற்றுக்கொண்டுபோய் அவரை அபிமானபுத்திரராகப் பாவித்துவளர்த்தார். அந்தப்பிள்ளை அரசரால்வளர்க்கப்படினும் தமதுபிராமணவருணத்திற்கு உரிய ஒழுக்கத்தையே உடையவராகி வளர்ந்து உரியகாலத்திலே உபநயனஞ்செய்யப்பெற்று வேதங்களை அத்தியயனஞ்செய்து சகலகலைகளிலும் மகாபாண்டித்தியமுடையவராய் விவாகஞ்செய்தற்கு உரியபருவத்தை அடைந்தார்.

அதுகண்டு தந்தையாராகிய சடையனார் ஆதிசைவர்குலத்திலேதம்முடைய கொள்வகைக்கு ஏற்பப்பந்துவாய்ப் புத்தூரில்இருக்கின்ற சடங்கவி சிவாசாரியரிடத்திலே, அவருடையபுத்திரிக்கும் தம்முடைய புத்திரருக்கும் விவாகம்பேசிவரும்பொருட்டு சிலமுதியோர்களை அனுப்பினார் அவர்கள் சடங்கவி சிவாசாரியிடத்திற்போய்ப்பேசி அவர் உடன்பட்டதுகண்டு சடையினாரிடத்துக்குத் திரும்பிப்போய்த் தெரிவித்தார்கள். அப்பொழுது சடையனார் மகிழ்ச்சிகொண்டு விவாகத்துக்கு முகூர்த்தம் நியமித்து தம்முடைய ஞாதிகள் சிநேகிதர்கள் யாவரையும் விவாகபத்திரம் அனுப்பி அழைப்பித்தார். பின்பு நம்பியாரூரராகிய சுந்தரமூர்த்திநாயனார் விவாகதினதத்துக்கு முதற்றினத்திலே சமாவர்த்தனம் பண்ணி, ரக்ஷாபந்தனஞ்செய்து மற்றுநாள் நித்தியகர்மங்களைமுடித்துக் கொண்டு, மணக்கோலங்கொண்டு, குதிரைமேல்ஏறி மகா அலங்காரத்தோடு புத்தூரிலே சடங்கவி சிவாசாரியர் வீட்டிலே திருக்கல்யாணப்பந்தருக்கு முன்சென்று குதிரையினின்றும் இறங்கி உள்ளேபோய் ஆசனத்தில் இருந்தார்.

அப்பொழுது, ஊரும் பேரும் உருவும் இல்லாதவர் ஆயினும் ஆன்மாக்களுக்கு வினையினால்வந்த வாஸ்தவமாகிய ஊரையும்பேரையும உருவையும் இருவினையொப்பாகிய பக்குவகாலத்திலே ஒழிக்கும்பொருட்டுக் கற்பிதமாகிய ஊரும்பேரும் உருவுங்கொண்டருளுகின்ற பரமசிவனவர் தாம்கைலாசத்திலே சுந்தரமூர்த்திக்கு வாக்குதத்தம்பண்ணிய பிரகாரம் அவரைப்பிரபஞ்சவாழ்க்கையிலே மயங்கவிடாமல்தடுத்துஆட்கொண்டருளும்பொருட்டு, ஒருவயோதிகப்பிராமண வடிவங்கொண்டு, அவ்விடத்திலே எழுந்தருளிவந்துநின்று இவ்விடத்தில் இருக்கின்ற யாவர்களும் நான்சொல்லும் இவ்வார்த்தையைக்கேளுங்கள் என்றுசொன்னார். அப்படிச்சொல்லிய அந்த ஐயரை விவாகஞ்செய்யத்தொடங்கும் நம்பியாரூரரும் அங்கிருக்கின்ற மற்றப்பிராமணர்களும பார்த்து இவ்விடத்திலே நீர்சொலல விரும்பியதைச்சொல்லும் என்றார்கள். அதைக்கேட்ட ஐயர் நம்பியாரூரரைநோக்கி, எனக்கும் உனக்கும் ஒருவழக்கு இருக்கின்றது. அதைமுடித்துக்கொண்டு உன்னுடையவிவாகத்தைநடத்துஎன்று அருளிச்செய்தார். நம்பியாரூரர் உமக்கும் எனக்கும ஒரு வழக்கு உளதாயின், அதைமுடித்தன்றி நான்விவாகஞ் செய்யேன். நீர் அவ்வழக்கு இன்னதெனத்தெரியும்படிசொல்லும் என்றுகேட்க, அந்த ஐயர் பிராமணர்களைப்பார்த்து, இந்தத்திருநாவலூரானாகிய நம்பியாரூரன் எனக்கு அடியவன் என்றுசொல்லியருளினார். அதைக்கேட்ட நம்பியாரூரர் இந்த ஐயர்சொன்னவார்த்தை நன்றாயிருக்கின்றது என்றுஇகழ்ச்சியாகச் சொல்லிச்சிரிக்க, பிராமணவேடங்கொண்டு கடவுள் அவருக்குச் சமீபத்திலேபோய், அக்காலத்திலே உன்னுடையபாட்டன் எனக்

குளழுதித்தந்த அடிமையோலை இதுவே அப்படியிருக்க, இந்தக்காரியத்தைக்குறித்து நீபரிகாசம்பண்ணியது என்னஎன்றார், உடனே நம்பியாரூரர் ஐயரைப்பார்த்து பிராமணருக்குப் பிராமணர் அடிமையாதல்இன்றைக்கு நீயேசொல்லக்கேட்டோம். நீபித்தனோ என்றுசொல்ல, ஐயர் நான்பித்தனானாலும் ஆகுக. பேயனானாலும் ஆகுக நீ இப்போது எத்தனைவசைமொழிகளைச்சொன்னாய்! அவைகளினால் நான்சிறிதாயினும் வெட்கம் அடையேன். நீ என்னைசிறிதும் அறிந்திலை இப்படிநின்றுவிளையாட்டுமொழிகள்பேசவேண்டாம். அடிமைத்தொழில் செய்வாயென்றார். அப்பொழுது நம்பியாரூரர், இவர் அடிமையோலை ஒன்று உண்டென்றுரே அதின் உண்மையை அறியவேண்டும் என்றுநினைத்து, ஐயரே! உமமுடைய ஓலையைக்காட்டும் என்றுசொல்ல, ஐயர் நீ இந்தவோலையைப்பார்த்து நிச்சயிக்கத்தக்கவனோ, நான் இந்தசபையாருக்கு ஓலையைக்காட்டிமெய்யென்று அங்கீகாரஞ்செய்வித்தபின், எனக்கு ஊழியஞ் செய்வதற்குமாத்திரம் தக்கவன் என்றார். அதுகேட்ட நம்பியாரூரர் கோபங்கொண்டு அவர்கையில் இருக்கும் ஓலையைப்பறிக்கும்படி அவருக்கு எதிரேவிரைந்துசென்றபோது, அவர் ஓடத் தாமும் ஓடி, அவரைப்பின்றொடர்ந்துபிடித்து ஓலையைப்பறித்து, பிராமணர்கள் அடிமையாய் ஊழியஞ்செய்தல் என்னமுறையென்று சொல்லிக்கிழிக்க, ஐயர் சுந்தரமூர்த்தியைப் பிடித்துக்கொண்டு, ஒருதரம் இதுமுறையோ என்றுசத்தமிட, சமீபத்தில் நின்றவர்கள் அவ்விருவரையும் விலக்கி உலகத்திலே ஒருகாலமும் நடந்திராத ஏற்பாட்டைக்கொண்டு வழக்காடுகின்ற பிராமணரே! நீர் எங்கே இருக்கிறவர்சொல்லும் என்றார்கள் அதற்கு ஐயர் நான் இந்தத்திருவெண்ணெய் நல்லூரில் இருக்கின்றவன் அதுநிற்க, இந்தநம்பியாரூரன் தருமவழிக்கு விரோதமாக வலாத்காரம்பண்ணி என்கையில் ஓலையைப்பறித்துக் கிழித்ததினாலேதான் எனக்கு அடியவன் என்றதைஸ்திரப்படுத்தினான் என்றார். அப்பொழுது சுந்தரமூர்த்திநாயனார், நீர்திருவெண்ணெய்நல்லூரில் இருக்கிறவராகில் இந்தவழக்கை அங்கேதானேபேசித் தீர்ப்புச்செய்யவாரும் என்றுசொல்ல, ஐயர் அதைக்கேட்டு, திருவெண்ணெய்நல்லூரில் இருக்கின்ற பிராமணர்களுக்கு முன்னே ஆதியில் எழுதப்பட்ட மூலவோலையைக்காட்டி நீ எனக்கு அடிமை என்பதைச்சாதிப்பேன் என்றுசொல்லி தண்டையூன்றிக்கொண்டு முன்னே நடந்தார். சுந்தரமூர்த்தியும் மற்றப்பிராமணர்களும் பின்னாகப்போனார்கள்.

ஐயர் தனக்குப் பின்வந்த சுந்தரமூர்த்தியோடும் மற்றப்பிராமணர்களோடும் திருவெண்ணெய் நல்லூரை அடைந்து அங்கு இருக்கின்ற பிராமணர்களுடைய சபையிலேபோய் அவர்களைநோக்கி, அறிவால் அமைந்த பெரியோர்களே, திருநாவலூரில் இருக்கின்ற ஆரூரனானவன் நான் எனக்கு அடிமையென்றுகாண்பித்த ஓலையைக்கிழித்துவிட்டு உங்களிட

த்துக்குவந்திருக்கிறான் என்றுசொல்லி முறைப்பாடுசெய்தார். அந்த அபியோகத்தைக்கேட்ட பிராமணர்கள் அவரைப்பார்த்து, பிராமணர்கள் அடிமையாதல் இவ்வுலகத்திலே இதுவரையிலும் இல்லை ஐயரே! நீரென்ன தப்புவார்த்தைசொன்னீர், என்றுசொல்ல ஐயர் நான்பொய்வழக்குக் கொண்டுவரவில்லை மெய்வழக்கே கொண்டுவந்தேன்.

இவன்பறித்துக்கிழித்த ஓலை இவன்பாட்டன்தானும் 'தன்மரபினரும் எனக்கு அடிமையென்று எழுதிதந்த அடிமையோலை என்றார். உடனேபிராமணர்கள் சுந்தரமூர்த்தியைநோக்கி இவர் உம்முடைய பாட்டன் அடிமை செய்தற்கு இசைந்து எழுதிக்கொடுத்த ஓலையைக்காட்டினாராகில், நீர் அதைப்பறித்துக் கிழித்ததனால் உம்முடைய பட்சம் சயம் பெறுமோ இவர் தம்முடைய வழக்கையாவரும் அங்கீகரிக்கும்படிசொன்னார் இனி உம்முடைய எண்ணம் யாது என்றார்கள், அதற்குச் சுந்தரமூர்த்தி வேதாகமம் முதலாகிய சமஸ்த சாஸ்திரங்களையும் உணர்ந்த மகான்களே! நான் ஆதிசைவன் என்பது உங்கள் எல்லாருக்குந்தெரியும் அப்படியிருக்க இந்தப்பிராமணர் தமக்கு அன்னை அடிமையென்று சாதித்தாராகில் இதுமனசினால் அறிதல்கூடாத ஒருமையாயென்று நினைக்கவேண்டும், இதைக்குறித்து நான்யாதுசொல்வேன் இது என்னால் அறியப்படுதல்கூடாது என்றுசொல்ல, பிராமணர்கள்கேட்டு அந்தஐயரைப் பார்த்து நீர்இவரை உம்முடைய அடிமை என்று சொல்லுகின்ற விவகாரத்தை எங்களுக்குமுன் உறுதிப்படுத்தவேண்டும், ஒருவிவகாரத்தை உண்மையென்று நிச்சயிப்பதற்கு அனுபவம் லிகிதம்-சாட்சி என்கிறமூன்றும்வேண்டும். ஆயினும், இந்த ஆரூரர் உமக்கு அடிமை யென்பதற்கு அம்மூன்றில் ஒன்றாயினும் காட்டும் என்றார்கள். அப்பொழுது ஐயர் இவன்கிழித்தஓலை மூலவோலையைப் பார்த்து எழுதியபடியோலை மூலவோலையோ என்னிடத்தில் இருக்கின்றது என்று சொன்னார் உடனே பிராமணர்கள் அதை எங்களுக்குக்காட்டும் என்றுசொல்ல, ஐயர் ஆரூரன் அதையும்பறித்துக் கிழியாதபடி செய்வீர்களாயின் அதைக்காட்டுவேன் என்றார். அதற்கு பிராமணர்கள் நாங்கள் கிழிக்கவிடோம் என்று சொல்ல, ஐயர் மூலவோலையைக் கையில் எடுத்தார். அப்பொழுதுசபையாருடைய கட்டளையினால் ஒருகரணன் அவரைக்கும்பிட்டு அந்த ஓலையைவாங்கி சுருளாயிருக்கின்றமடிப்பை நீக்கிவிரித்து, சபையார்கேட்கும்படி திருநாவலூரில் இருக்கின்ற ஆதிசைவனாகிய ஆரூரன் என்கின்ற நான் திருவெண்ணெய்நல்லூரில் இருக்கின்ற பித்தனுக்கு நானும் என்சந்ததியாரும் வழித்தொண்டுசெய்வதற்கு உள்ளும்புறமும் ஒப்ப உடன்பட்டு எழுதிக்கொடுத்தேன். இப்படிக்கு ஆரூரன் என்று வாசித்தான். பின்பு அந்தஓலையிலே சாட்சிகளாகக் கையெழுத்து இட்டவர்கள் தங்கள் கையெழுத்தென்றே ஒத்துக்கொண்டார்கள். அதைக்கண்ட பிராமணர்கள் சுந்தரமூர்த்தியைநோக்கி இது உம்முடைய பாட்டனுடைய

எழுத்தோபாரும்என்றுசொல்ல, ஐயர் அவர்களைப்பார்த்து இந்தச்சிறுவன் அடிமையோலையில் எழுதப்பட்டிருக்கின்ற தன்பாட்டன் கையெழுத்தைக்கண்டறியச் சக்தியுள்ளவனோ இவன்பாட்டன் எழுதிய வேறுகைச்சாத்து உண்டாகில், வருவித்து இதனுடன் ஒத்துப்பார்த்து உங்கள் மனசிலேதோன்றிய தீர்ப்பைச்சொல்லுங்கள் என்றார். அதைக்கேட்ட பிராமணர்கள் சந்தேகந்தெளியும்படி சுந்தரமூர்த்தி சமுகத்திலே அவர் பாட்டனார் எழுதிய கைச்சாத்து ஒன்று அழைப்பித்து, அதின் எழுத்தையும் அடிமையோலையின் எழுத்தையும் ஒத்துப்பார்த்து, இவ்விரண்டும் ஒத்திருக்கின்றன இனி நீர் தப்பவழியில்லை நீர் இந்த பிராமணருக்குத் தோற்றுப்போனீர் ஆதலால் அவர் இஷ்டப்படி அவருக்கு ஏவல் செய்வதேகடன் என்றுசொல்ல சுந்தரமூர்த்தி விதிமுறை இதுவேயானால், நான் இதற்கு உடன்படாதிருத்தல் கூடுமோ என்றுசொல்லி நின்றார். அப்பொழுது பிராமணர்கள் அந்த ஐயரைப்பார்த்து நீர் காட்டிய அடிமையோலையிலே எங்கள் ஊரே உம்முடையவூராக எழுதப்பட்டிருக்கின்றது. ஆதலால் உமக்கு இவ்வூரிலே தலைமுறையாக இருக்கின்றவீடும்நிலையுள்ள ஆஸ்தியுங்காட்டும் என்றுசொல்ல, பிராமணவடிவங்கொண்ட கடவுள், இத்தனைவிருத்தர்களில் ஒருவரும் என்னுடையவீடு முதலியவற்றை அறியாமல் இருப்பீரானால், காட்டுகிறேன் வாருங்கள் என்று சொல்லி, சுந்தரமூர்த்தியும் பிராமணர்களும் பின்னேவர, தாம் அவ்வூரிலிருக்கின்ற திருவருட்டுறை என்னும் சிவாலயத்தினுள்ளேபோனார். பின்புசபையார் அவரைக்காணமல் திகைத்து நின்றார்கள்.

அப்பொழுது சுந்தரமூர்த்தியானவர், என்னை அடிமைகொண்ட பிராமணர் எங்கள்கடவுளாகிய பரமசிவன் வீற்றிருக்கும் கோயிலினுள்ளே புகுந்ததுஎன்ன ஆச்சரியம், என்றுநினைத்து, அத்தியந்த ஆசையோடும் தனியே அவரைத் தொடர்ந்துபோய்க் கூப்பிட, பரமசிவனானவர் தருமவடிவாகிய இடபவாகனத்தின்மேலே பார்வதிசமேதராய் வெளிப்பட்டு, சுந்தரமூர்த்திக்கு நீமுன்னே நமக்குதொண்டனாய் இருந்தாய். நீபெண்கள்மேல் இச்சைவைத்ததினால் நம்முடைய ஆஞ்ஞையினாலே பூமியிலேபிறந்தாய் இப்பொழுது துன்பத்தைத்தருகின்ற சமுசாரபந்தமானது உன்னைத்தொடராதபடி, நாமேவலியவந்து உன்னைத்தடுத்து ஆட்கொண்டோம் என்று திருவாய்மலர்ந்தருளினார். இந்தப்பிரகாரமாக எழுந்தசத்தத்தைக்கேட்டு சுந்தரமூர்த்தியானவர் தன்னை ஈன்ற பசுவினது குரலைக்கேட்ட கன்றுபோல அலறி, சரீரமுழுதும் உரோமப்புளகங்கொள்ள, இரண்டுகண்ணில் நின்றும் ஆனந்தபாஷ்பம்பொழிய, அடியற்றமரம்போல நிலத்திலேவிழுந்து நமஸ்கரித்து, எழுந்துநின்று இரண்டுகைகளையும் சிரசின்மேலேஏறக்குவித்து கனகசபையிலேபடைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்கிற ஐந்தொழில் ஆகிய திருநடனத்தைச் செய்தருளுகின்ற சுவாமீ தேவரீர் ஒன்றுக்கும் பற்றாத சிறி

யேனை மார்ச்சார சப்பந்தம்போல வலியவந்து தடுத்தாட்கொண்ட காருண்ணியமகிமை இருந்தபடி என்னென்று சொல்லுவேன் என்றார். அப்பொழுது தம்மால் செய்யப்படும் கிர்த்தியங்கள் ஒவ்வொன்றையும் தம் பயன் கருதாது பிறர் பயன்கருதியே செய்கின்ற பரமசிவனானவர் தமிழ் நாட்டில் உள்ளவர்கள் தாமே மெய்ப்பொருளென்று உணர்ந்து தம்மை வழிபட்டு மும்மலத்தடைகளையும் நீங்கிப் பேரின்பம்பெற்று அநுபவிக்க வேண்டும் என்று தமது திருவுளத்திலேமுகிழ்த்தபெருங் கருணையினாலே சுந்தரமூர்த்தியைநோக்கி நீஎன்னோடு வன்சொற்களைச்சொல்லி வன்றொண்டன் என்கிறபெயரைப் பெற்றாய் நமக்கு அன்பினோடு செய்யத்தக்க அருச்சனையாவது பாடலேயாம் ஆதலால் நம்மேலே தமிழ்ப்பாட்டுகளைப்பாடு என்று அருளிச்செய்த சுந்தரமூர்த்தி அஞ்சலியஸ்தராகி தேவரீர் பிராமணவடிவங்கொண்டு என்னை வழக்கினால் வெல்லுதற்கு எழுந்தருளி வந்தமையை அறியாத சிறியேனுக்குப்பழைய அறிவைத்தந்து உலகவாழ்க்கையிலே மயங்காமல் உய்யும்படி செய்தருளிய கடவுளே அடியேன் தேவரீருடைய அநந்தகுணங்களில் எதையறிவேன் என்னசொல்லிப்பாடுவேன் என்றார். அதற்குக்கடவுள் நீமுன்னே யென்னைப் பித்தனென்று சொன்னாய் ஆகையால் என்பெயர் பித்தனென்றேபாடு என்று சொல்லியருள சுந்தரமூர்த்தியானவர் தம்மை ஆண்டருளிய பரமசிவன்மேல் "பித்தாபிறைசூடி" என்னும் சொற்றொடரை முதலாகக்கொண்ட திருப்பதிகத்தைப் பாடியருளினர்.

திருச்சிற்றம்பலம்.

திருவெண்ணெய்நல்லூர்த் தேவாரம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பித்தாபிறைசூடி பெருமானேயருளாளா
வெத்தான்மறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னை [ய
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறை
ளத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே.

காரூர்புனலெய்திக்கரைகல்லித்திரக்கையாற்
பாரூர்புகழெய்தித்திகழ்பன்மாமணியுந்திச்
சீரூர்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாரூரனெம்பெருமாற்காளல்லேனெனலாமே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின் கடவுளானவர் சுந்தரமூர்த்தியை நோக்கி தொண்டனே நீஇன்னும் நம்முடைய புகழைக்குறித்துப் பலவகையாகப்பாடுஎன்று அருளிச்செய்து அந்தரத்தானமானார். அதுநிற்க, புத்தூரிலிருக்கின்ற சடங்கவிசிவாசாரியருடைய புத்திரி யாரோவெனில், கலியாணந் தவிர்ந்ததினாலே சுந்தரமூர்த்தி நாயனாரையே தியானஞ் செய்துக்கொண்டிருந்து சிலகாலத்தின்பின் சிவலோகப் பிராப்தியானார்.

சுந்தரமூர்த்திநாயனார், திருவெண்ணெய் நல்லூரில் உள்ள திருவருட்டுறையென்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற கடவுளானவர்தமமை ஆட்கொண்டபின்பு, திருநாவலூருக்குப்போய்ப் பதிகம்பாடியருளினார்.

திருவெண்ணெய்நல்லூரும்-திருநாவலூரும்-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

கோவலனான்முகன்வானவர்கோனுங்குற்றேவல்செய்ய
மேவலர்முப்புரந்தீயெழுவித்தவனோரன்பினு
லேவலனார்வெண்ணெய்நல்லூரில்வைத்தென்னையாளுங்கொண்ட
நாவலனார்க்கிடமாவதுநந்திருநாவலூரே.

நாதனுக்கூர்நமக்கூர்நரசிங்கமுனையரைய
னாதரித்தீசனுக்காட்செயுமூரணிநாவலூரேன்
றோதநற்றக்கவன்றொண்டனாரூரனுரைத்ததமிழ்
காதலித்துங்கற்றுங்கேட்பவர்தம்வினைகட்டறுமே.

திருச்சிற்றம்பலம்.

பின்புபரமசிவன் வாசம்பண்ணுகின்ற திருத்துறையூருக்குச் சென்று அக்கடவுளைநோக்கி அடியேன் தீவினையினாலே அவமானநெறியிற்செல்லாமல் தடுத்தாட்கொண்டால் அடியேனுக்குத்தவநெறிதந் தருளென்றுதவநெறிக்கு விலக்காகும் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

திருத்துறையூர்த்தேவாரம்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மலையாரருவித்திரண்மாமணியுந்திக்
குலையாரக்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபாற்
கலையாரல்குற்கன்னியராடுந்துறையூர்த்
தலைவாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே.

செய்யார்கமலம்மலர்நாவலர்மன்னன்
கையாற்றொழுதேத்தப்படுந்துறையூர்மேற்
பொய்யாத்தமிழூரனுரைத்தனவல்லார்
மெய்யேபெறுவார்கள்தவநெறிதானே.

திருச்சிற்றம்பலம்.

திருத்துறையூரை வணங்கி சிவபெருமான் எழுந்தருளியபலதலங்களினுஞ்சென்றுவணங்கி சிதம்பரத்தில்வீற்றிருக்கின்ற சபாநாயகரைத் தரிசிக்கவிரும்பி, பெண்ணை நதியைக்கடந்து அஸ்தமயன காலத்திலே திருவதிகை யென்னுந்தலத்தி னெல்லையிலேபோய், திருநாவுக்கரசுநாயனார் உழவாரத்தினாலே பரமசிவனுக்குக் கைத்தொண்டுசெய்த இந்த ஸ்தலத்திலே கால்மிதிக்க அஞ்சுகிறேன் என்றுசொல்லி, அதற்கு உள்ளேபோகாமல் சமீபத்திலிருந்த சித்தவடமடத்திற்குப்போய், திருவதிகை வீரட்டானத்தில் வீற்றிருக்கும் கடவுளுடைய திருவடிகளைத்தியானித்துக்கொண்டு நித்திரைசெய்தார். நித்திரைசெய்யும்பொழுது வீரட்டானேசுரர் ஒரு விருத்தப்பிராமணராகி அம்மடத்தினுள்ளே புகுந்து சுந்தரமூர்த்தி நாயனாருடைய சிரசின்மேலே பாதங்களை வைத்து நித்திரைசெய்பவர்போலக் காட்டியருளினார்.

அப்பொழுது சுந்தரமூர்த்தி விழித்து, ஐயரே! ஏன் உம்முடைய பாதத்தை என்சிரசின்மேல்வைத்தீர் என்றுசொல்ல, ஐயர் என்னுடைய மூப்பினாலே நீர் தலைவைத்திருக்கும் திசையை அறியாமல் அப்படிச்செய்துபோட்டேன் என்றார். சுந்தரமூர்த்திநாயனார் அதற்கு ஒத்துக்கொண்டு தம்முடைய சிரசை வேறொருதிக்கில் வைத்துக்கொண்டு நித்திரைசெய்தார் சுவாமி அவ்விடத்திலும் சென்று சுந்திர மூர்த்தியுடைய சிரசின்மேலே பின்னும் தம்முடையபாதத்தை நீட்ட சுந்தரமூர்த்திஇங்கேயென்னைப் பலமுறை மிதித்த நீர் யாவர்? என்று கேட்டார். உடனே சுவாமி என்னை நீயறியாயா என்றுசொல்லி மறைந்தருளினார். அதுகண்டு சுந்தரமூர்த்தி தம்மை மிதித்தவர் கடவுளென்று அறிந்து நான் இறுமாப்படைந்து ஆண்டவரை அறியாமல் என்ன செய்தேன் என்று சொல்லி வீரட்டானேசுரர்மேல் திருப்பதிகம் பாடினார்.

திருவதிகை வீரட்டானம்,

தேவாரம்-பண்-கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

தம்மானையறியாதசாதியாருளரேசடைமேற்கொள்
 பிறையானைவிடைமேற்கொள்விகிர்தன்
கைம்மாவினுரியானைக்கரிகாட்டிலாட
 னுடையானைவிடையானைக்கறைகொண்டகண்டத்
தெம்மான்றனடிக்கொண்டென்முடிமேல்வைத்திடுமென்னு
 மாசையால்வாழ்கின்றவறிவிலாநாயே
னெம்மானையெறிகெடிலவடவீரட்டானத்
 துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே.

என்பினையேகலனாகவணிந்தானையெங்க
 ளெருதேறும்பெருமானையிசைஞானிசிறுவன்
வன்பனையவளர்பொழில்சூழ்வயனாவலூர்க்கோன்
 வன்றொண்டனாரூரன்மதியாதுசொன்ன
வன்பனையாவர்க்குமறிவரியவத்தப்
 பெருமானையதிகைமாநகருள்வாழ்பவனை
யென்பொன்னையெறிகெடிலவடவீரட்டானத்
 துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு அத்திருவதிகைக்குத் தென்புறத்தில் இருக்கும் திருக்கெடி நதியிலே ஸ்நானம்செய்து அந்த நதியின் தென்கரையில் திருமாணிக்குழியைச் சென்று வணங்கி திருத்தினை நகரத்திற்குப்போய்த் திருப்பதிகம் பாடியருளினர்.

திருத்தினைநகர்த் தேவாரம்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

நீறுதாங்கியதிருநுதலானை நெற்றிக்கண்ணனைநிறைவளைமடந்தை
கூறுதாங்கியகொள்கையினானைக் குற்றமில்லியைக்கற்றையஞ்சடைமே
லாறுதாங்கியவழகனையமரர்க் கரியசோதியைவரியராவுகளுஞ்
சேறுதாங்கியதிருத்தினைநகருட் சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே

நீடுபோக்கையுற்பிறவியைப்பழித்துநீங்கலாமென்றுமனத்தினைத்தெருட்டிச்
சேடுலாம்பொழிற்றிருத்தினைநகருட்சிவக்கொழுந்தினைத்திருவடியிணைத்தா
ளூடெலாம்புகழ்நாவலூராளி நம்பிவன்றொண்டனூரனுரைத்த
பாடலாந்தமிழ்ப்பத்திவைவல்லார்முத்தியாவதுபரகதிப்பயனே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின்னர், சிதம்பரத்தின் எல்லையை அடைந்து அவ்வெல்லையைவணங்கி, ஊரினுள்ளேபோய் ஸ்தூலலிங்கமாகிய கோபுரத்தைக்கண்டு நிலத்திலேவிழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து கோயிலினுள்ளேபோய்கனகசபையிலே ஆனந்தத்தாண்டவஞ் செய்கின்ற சபாநாயகரைத் தரிசித்து அக்கினியிற்பட்ட மெழுகதுபோலக் கசிந்து உருகி, ஆனந்தபாஷ்பஞ்சொரிய விழுந்து நமஸ்காரஞ்செய்து எழுந்து நின்று எல்லையில்லாத பேரின்பசாகரத்திலே அமிழ்ந்தி இரண்டு கைகளையும் சிரசின்மேலே குவித்து திருப்பதிகம்பாடித்துதித்தார்.

கோயிற்றேவாரம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மடித்தாடுமடிமைக்களன்றியேமனனேநீவாழுநாளுந்
தடுத்தாட்டித்தருமனார்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வான்
கடுத்தாடுங்கரதலத்திற்றமருகமுமெரியகலுங்கரியபாம்பும்
பிடித்தாடிபுலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே

பாரூருமரவல்குலுமைநங்கையவள்பங்கன்பைங்கணேற்ற
னூரூரன்றருமனார்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வா
னாரூரன்றம்பிரானாரூரன்மீகொங்கிலணிகாஞ்சிவாய்ப்
பேரூரபெருமானைப்புலியூர்ச்சிற்றம்பலத்தேபெற்றாமன்றே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின் சபாநாயகருடைய திருவருளினால் நீதிருவாரூரிலேநம்மிடத்துக்கு வாவென்று ஆகாயத்தில் எழுந்த அசரீரி வாக்கைக் கேட்டு அந்தக் கட்டளையைச் சிரசின்மேல் வகித்து கநகசபையைப் பிரதக்ஷிணஞ்செய்து வணங்கிச்சென்று கோபுரத்தைக் கடந்து புறத்திலே நின்று அக்கோபுரத்தை நமஸ்கரித்து திருவீதியைத் தொழுது தெற்கு வாயிலைக்கடந்து அப்புறஞ்சென்று அந்த ஸ்தலத்தின் எல்லையை வணங்கி கொள்ளிடம் என்கிற திருநதியைத்தாண்டி சீர்காழிக்குச் சமீபித்தார். அந்தச்சீர்காழி திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் திருவவதாரஞ்செய்தருளிய ஸ்தலமாதலால் அதனுள்ளே மிதிக்கலாகாதென்று நினைந்து அதின் புறவெல்லையைவணங்கிப் பிரதட்சணஞ் செய்யும்பொழுது பரமசிவன் காட்சிகொடுத்தருள அதுகண்டுதிருப்பதிகம்பாடினார்.

திருக்கழுமலத்தேவாரம்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

சாதலும்பிறத்தலுந்தவிர்த்தெனைவகுத்துத்
தன்னருள்தந்தவெந்தலைவனைமலையின்
மாதினைமதித்தங்கோர்பால்கொண்டமணியை
வருபுனல்சடையிடைவைத்தவெம்மானை
யேதிலென்மனத்துக்கோரிரும்புண்டநீரை
யெண்வகையொருவனையெங்கள்பிரானைக்
காதில்வெண்குழையனைக்கடல்கொளமிதந்த
கழுமலவளநகர்கண்டுகொண்டேனே.

செழுமலர்க்கொன்றையுங்கூவிளமலரும்
விரவியசடைமுடியடிகளைநினைந்திட்
டழுமலர்க்கண்ணிணையடியவர்க்கல்லா
லறிவரிதவன்றிருவடியிணையிரண்டுங்
கழுமலவளநகர்க்கண்டுகொண்டூரன்
சடையன்றன்காதலன்பாடியபத்துந்
தொழுமலரெடுத்தகையடியவர்தம்மைத்
துன்பமுமிடும்பையுஞ்சூழகிலாவே.

திருச்சிற்றம்பலம்.

அப்பால் திருக்கோலக் காவுக்கும், திருப்புன் கூருக்கும்போய்ப் பதிகம்பாடி காவேரிநதியின் கரையையடைந்து அதில் ஸ்நானம்பண்ணி மாயூரத்துக்கும், அம்பர்மா காலத்துக்கும், திருப்புகலூருக்கும் போய் திருவாரூரைச் சமீபித்து வன்மீகநாதருடைய ஆஞ்ஞையினாலே அங்கிருந்து மகா அலங்காரத்தோடுவந்து தம்மை யெதிர்கொண்ட பத்தர்களுடன் ஊரினுள்ளேபோய் கோயிலிற்பிரவேசித்து திருமாளிகை வாயிலையடைந்து வன்மீகநாதரைவணங்கிப் பதிகம்பாடினார்.

திருவாரூர்த்தேவாரம்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கரையுங்கடலு மலையுங்காலையுமாலையுமெல்லா
முரையில்விரவிவருவானொருவனுருத்திரலோகன்
வரையின்மடமகள்கேள்வன்வானவர்தானவர்க்கெல்லா
மரையனிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர்.

எந்தையிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோவென்று
சிந்தைசெயுந்திறம்வல்லான்றிருமருவுந்திரடோளன்

மந்தம்முழவம்மியம்பும்வளவயனுவலாரூரன்
சந்தமிசையொடும்வல்லார்தாம்புகழெய்துவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

அப்பொழுது சுந்தரமூர்த்திகேட்கும்படி வன்மீகநாதருடையதிருவருளினாலே நாம் உனக்குத் தோழனானோம் முன்னே நாம் உன்னை ஆட்கொண்ட விவாககாலத்திலே நீகொண்ட மணக்கோலத்தை எப்பொழுதும்கொண்டு பூமியின்மேல் விளையாடுவாயென்று ஒரு அசரீரிவாக்கு எழுந்தது அதைக்கேட்ட சுந்தரமூர்த்திநாயனார் சுவாமி சந்நிதானத்திற்சென்று வணங்கித்துதித்து வெளியேபோனார், அன்றுமுதற்கொண்டு அடியார்களெல்லாருஞ் சுந்தரமூர்த்தியைத் தம்பிரான்றோழர்என்றுசொல்லிக்கொண்டார்கள். சுந்தரமூர்த்தி மஹா அலங்காரம்பொருந்திய கோலத்தையுடையவராய் வன்மீகநாதரைத் தினந்தோறும்போய்த்தரிசித்து வந்தார்.

இதற்குமுன்னே கைலாசகிரியிலிருந்த பார்வதிதேவியாருடைய சேடியர்களிருவரில் ஒருவராகிய கமலினியென்பவர் அந்தத் திருவாரூரிலே உருத்திர கணிகையர்குலத்திலே பிறந்து பரவையாரென்னும் பெயரைப்பெற்றுப் பெதும்பைப்பருவம் அடைந்திருந்தார். அவருந் தினந்தோறும் பாங்கிமாரோடு கோயிலுக்குப்போய் சுவாமிதரிசனம் பண்ணி வருவார்.

அந்தப்பரவையார் ஒருநாள் சுவாமிதரிசனம் பண்ணப்போம்போது அப்படியே சுவாமிதரிசனம் பண்ணும்பொருட்டுப் பரிசனங்களோடு சென்ற சுந்தரமூர்த்திநாயனார் திருவருள்கூட்ட அந்தப்பரவையாரைக் கண்டு ஆசைகொண்டுநின்றார். பரவையாரும் சுந்தரமூர்த்தியைக்கண்டு ஆசைகொண்டு பின் சுவாமிதரிசனம் பண்ணவேண்டும் என்னும்விருப்பமானது தம்மை அவ்வாசையினின்றும்நீக்கித் தன் வசமாக்கிக்கொண்டு கோயிலின்உள்ளே செலுத்தசென்றார், சுந்தரமூர்த்திநாயனார் அதுகண்டு, என்மனதைக்கவர்ந்துசென்ற அதிக சௌந்தரியமுள்ள இந்தப்பெண்யார்! என்றுவினவ, அங்குநின்றவர்கள் இவர் உருத்திரகணிகையரில் ஒருவர், இவர்பெயர் பரவையார் என்றார்கள். அதைக்கேட்ட சுந்தரமூர்த்திநாயனாரோ கோயிலினுள்ளேபோனார். அதற்குமுன் பரவையார் பிரதக்ஷிணஞ்செய்து சுவாமியை நமஸ்காரம்பண்ணித் துதித்துக்கொண்டு சந்நிதியில்நின்றும் புரப்பட்டார். சுந்தரமூர்த்திநாயனார் சுவாமி சந்நிதானத்திற்சென்று பரவையார்மேல்வைத்த பேராசையால் அவரைச்சேரவேண்டிச் சுவாமியினது திருவடிகளை வணங்கிக்கொண்டு புறப்பட்டு பரவையாரைத்தேடி தேவாசிரியன் என்னும் பெயரையுடைய ஆயிரக்கால்மண்டபத்தை அடைந்து வன்மீகநாதர் பரவையாரை எனக்குத்தந் தருளுவார் என்று நினைத்துக்கொண்டு அங்கிருக்க சூரியன்அஸ்தமயனமாயிற்று. அதுநிற்க,

முன்னே சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு புறப்பட்ட பரவையார் சுந்தரமூர்த்தியிடத்தில் தனியேசென்ற தமது மனசை ஒருவகையாக வலிந்து தன்வசப்படுத்தி அதிக மயக்கத்தோடு தமது மாளிகையை அடைந்து பூவணையில் இருந்து தம்மருகிருந்த பாங்கியைநோக்கி, நாம் சுவாமிதரிசனம் செய்யப்போனபோது வழியில் எதிராகவந்தவர் யார்? என்றுகேட்க அவள் அவர் பிரமவிஷ்ணுக்களும் தேடியறியாத சமானாதீதராகிய கடவுளே வலியவந்து ஆட்கொள்ளப்பெற்ற ஆதிசைவராகிய சுந்தரமூர்த்தி என்றாள். அதுகேட்ட பரவையார் நமது ஆண்டவருக்கு உரிய அடியவரோ என்றுசொல்லி சுந்தரமூர்த்திமேல்முன்வைத்தஆசை மேன்மேலும் அதிகரிக்க சயனத்தின்மேல் விழுந்து புலம்பினார். அப்பொழுது கடவுளானவர் பரவையாரைச் சுந்தரமூர்த்திக்குவிவாகஞ்செய்து கொடுக்கும்படி அடியார்களுக்குக் கட்டளையிட்டு சுந்தரமூர்த்தியிடத்திற்சென்று உனக்குப்பரவையை விவாகம்செய்துதரும்படி நம்முடைய அடியார்களுக்கு ஆஞ்ஞாபித்தோம் என்று அருளிச்செய்து பரவையாரிடத்திலும்போய் உனக்கும் சுந்தரமூர்த்திக்கும் விவாகம் நடக்கும் என்று சொல்லியருளினார். மற்றநாள் உதயகாலத்திலே சிவபத்தர்கள் எல்லாரும் கூடிவந்து சுந்தரமூர்த்திநாயனாருக்குப் பரவையாரை விதிப்படி விவாகஞ்செய்து கொடுத்தார்கள்.

சுந்தரமூர்த்திநாயனார் பரவையாரோடுகூடி வாழ்ந்திருக்குங்காலத்தில் ஒருநாள் கோயிலை அடைந்தபோது தேவாசிரியமண்டபத்திலேசிவனடியார்கள் கூடியிருந்ததைக்கண்டு அவர்கள்மேலே பத்திமிகுந்து இவர்களுக்கு நான் அடியனாகும் நாள் எந்நாள் என்று நினைத்துக்கொண்டு சுவாமிதரிசனம் செய்வதற்குக் கோயிலின்உள்ளேபோனார். அப்பொழுது அடியார்க்கு அடியனாகவேண்டுமென்று அவர்விரும்பிய வரத்தைக் கொடுக்கும்பொருட்டு சுவாமி அவருக்குக் காட்சிகொடுத்தருளி நீநம்முடைய அடியார்களை வணங்கி அவர்கள்மேலே பதிகம்பாடு என்றருளிச்செய்ய சுந்தரமூர்த்திநாயனார் வணங்கிநின்று சுவாமீ, அடியார்களுடையவரலாறு இன்னது என்றும் அவர்கள் தன்மை இப்படிப்பட்டதென்றும் அறியாத நான் எப்படிப்பாடுவேன், அவர்களைக்குறித்துப்பாடும் சத்தியைச் சர்வஞ்ஞத்துவம் உடைய தேவரீரே அடியேனுக்கு அருளிச்செய்யவேண்டும் என்று பிரார்த்தித்தார். சுவாமி அதற்கு இசைந்து அடியார்களுடைய வழித்தொண்டு அவருக்குத்தெரியும்படிசெய்து "தில்லைவாழந்தணர்த மடியார்க்குமடியேன்" என்று அடியெடுத்துக் கொடுத்து மறைந்தருளினார். அதுகண்டு சுந்தரமூர்த்திநாயனார் புறப்பட்டுத்தேவாசிரியமண்டபத்தை அடைந்து அடியார் திருக்கூட்டத்தைப் பலமுறைவணங்கி அந்த அடியார்கள் யாவர்க்கும் வெவ்வேறாக அடியேன் அடியேன் என்று திருத்தொண்டத்தொகை என்னும் திருப்பதிகம்பாடி அவர்களை வணங்கினார்.

திருத்தொண்டத்தொகைத்,

தேவாரம்-பண்-கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன்
திருநீலகண்டத்துக்குயவனார்க்கடியேன்
இல்லையேயென்னாதவியற்பகைக்குமடியேன்
இளையான்றன்குடிமாறனடியார்க்குமடியேன்
வெல்லுமாமிகவல்லமெய்ப்பொருளுக்கடியேன்
விரிபொழில்சூழ்குன்றையார்விறன்மிண்டர்க்கடியே
னல்லியென்முல்லையந்தார் அமர்நீதிக்கடியேன்
ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே. (௧)

இலைமலிந்தவேல்நம்பியெறிபத்தர்க்கடியேன்
ஏனாதிநாதன்றனடியார்க்குமடியேன்
கலைமலிந்தசீர்நம்பிக்கண்ணப்பர்க்கடியேன்
கடவூரிற்கலயன்றனடியார்க்குமடியேன்
மலைமலிந்ததோள்வள்ளல்மானக்கஞ்சாற
னெஞ்சாதவாயிலாயனடியார்க்குமடியேன்
அலைமலிந்தபுனல்மங்கையானாயர்க்கடியேன்
ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே. (௨)

மும்மையாலுலகாண்டமூர்த்திக்குமடியேன்
முருகனுக்கும்உருத்திரபசுபதிக்குமடியேன்
செம்மையேதிருநாளைப்போவார்க்குமடியேன்
திருக்குறிப்புத்தொண்டர்தமடியார்க்குமடியேன்
மெய்ம்மையேதிருமேனிவழிபடாநிற்க
வெகுண்டெழுந்ததாதைதாள்மழுவினாலெறிந்த
அம்மையானடித்தண்டிப்பெருமானுக்கடியேன்
ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே. (௩)

திருநின்றசெம்மையேசெம்மையாக்கொண்ட
திருநாவுக்கரையன்றனடியார்க்குமடியேன்
பெருநம்பிகுலச்சிறைதன்னடியார்க்குமடியேன்
பெருமிழலைக்குறும்பார்க்கும் பேயார்க்குமடியே
னொருநம்பியப்பூதியடியார்க்குமடியே
னொலிபுனல்சூழ்சாத்தமங்கைநீலநக்கர்க்கடியே
னருநம்பிநமிநந்தியடியார்க்குமடியேன்
ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே, (௪)

வம்பறுவரிவண்டுமணநாறமலரு
  மதுமலர்நற்கொன்றையானடியலாற்பேணு
எம்பிரான்சம்பந்தனடியார்க்குமடியேன்
  ஏயர்கோன்கலிக்காமனடியார்க்குமடியே
னம்பிரான் திருமூலனடியார்க்குமடியே
  னாட்டமிகுதண்டிக்குமூர்க்கர்க்குமடியேன்
* அம்பரான்சோமாசிமாறனுக்குமடியேன்
  ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே. (௫)

வார்கொண்டவனமுலையாளுமைபங்கன்கழலே
  மறவாதுகல்லெறிந்தசாக்கியர்க்குமடியேன்
சீர்கொண்டபுகழ்வள்ளல்சிறப்புலிக்குமடியேன்
  செங்காட்டங்குடிமேயசிறுத்தொண்டர்க்கடியேன்
கார்கொண்டகொடைக்கழறிற்றறிவார்க்குமடியேன்
  கடற்காழிக்கணநாதனடியார்க்குமடியே
னார்கொண்டவேற்கூற்றன்களந்தைக்கோனடியேன்
  ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே. (௬)

பொய்யடிமையில்லாதபுலவர்க்குமடியேன்
  பொழிற்கருவூர்த்துஞ்சியபுகழ்ச்சோழர்க்கடியேன்
மெய்யடியனரசிங்கமுனையரையர்க்கடியேன்
  விரிதிரைசூழ்கடனாகையதிபத்தர்க்கடியேன்
கைதடிந்தவரிசிலையான்கலிக்கம்பன்கலியன்
  கழற்சத்திவரிஞ்சையர்கோனடியார்க்குமடியேன்
ஐயடிகள்காடவர்கோனடியார்க்குமடியேன்
  ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே. (௭)

கறைக்கண்டன்கழலடியேகாப்புக்கொண்டிருந்த
  கணம்புல்லநம்பிக்குங்காரிக்குமடியே
னிறைக்கொண்டசிந்தையானெல்வேலிவென்ற
  நின்றசீர்நெடுமாறனடியார்க்குமடியேன்
றுறைக்கொண்டசெம்பவளமிருளகற்றுஞ்சோதித்
  தொன்மயிலைவாயிலானடியார்க்குமடியே
னறைக்கொண்டவேல்நம்பிமுனையடுவார்க்கடியேன்
  ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே. (௮)

கடல்சூழ்ந்தவுலகெலாங்காக்கின்றபெருமான்
  காடவர்கோன்கழற்சிங்கனடியார்க்குமடியேன்
மடல்சூழ்ந்ததார்நம்பியிடங்கழிக்குந்தஞ்சை
  மன்னவனாஞ்செருத்துணைதனடியார்க்குமடியேன்

* அம்பர் - ஒரு சிவஸ்தலம்.

புடைசூழ்ந்தபுலியதண்மேலரவாடவாடி
பொன்னடிக்கேமனம்வைத்தபுகழ்த்துணைக்குமடியேன்
அடல்சூழ்ந்தவேல்நம்பிகோட்புலிக்குமடியேன்
ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே. (கூ)

பத்தராய்ப்பணிவார்களெல்லார்க்குமடியேன்
பரமனையேபாடுவாரடியார்க்குமடியேன்
சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்க்குமடியேன்
திருவாரூர்ப்பிறந்தார்களெல்லார்க்குமடியேன்
முப்போதுந்திருமேனிதீண்டுவார்க்கடியேன்
முழுநீறுபூசியமுனிவர்க்குமடியேன்
அப்பாலுமடிச்சார்ந்தாரடியார்க்குமடியேன்
ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே. (க0)

மன்னியசீர்மறைநாவனின்றவூர்ப்பூசல்
வரிவளையாண்மானிக்கும்நேசனுக்குமடியேன்
தென்னவனாயுலகாண்டசெங்கணார்க்கடியேன்
திருநீலகண்டத்துப்பாணனார்க்கடியே
னென்னவனாமரனடியேயடைந்திட்டசடைய
னிசைஞானிகாதலன்திருநாவலூர்க்கோ
னன்னவனாமாரூரனடிமைகேட்டுவப்பா
ராரூரிலம்மானுக்கன்பராவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார் திருவாரூரிலே தினந்தோறும் திரிகாலத்திலும் அன்பினோடு சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு பரவையாரோடுவாழ்ந்திருக்குங்காலத்திலே, வேளாளராகிய குண்டையூர்க்கிழவர் என்பவர் அவருடைய மகிமையைக் கேள்வியுற்று அவருடைய திருவடிகளை அடைந்து அன்பினோடு வளிபடுவராயினர். அவர் சுந்தரமூர்த்திநாயனார் பொருட்டுப் பரவையாருடைய வீட்டுக்கு நெல்லும் பருப்பும் பிறபதார்த்தங்களும் நெடுங்காலந் தவறாமல் அனுப்பிவந்தார். அப்படி அனுப்பி வருங்காலத்திலே மழையில்லாமையால் வளம் சுருங்க, ஒருநாள் குண்டையூர்க்கிழவர் நெல்லுப்போதாமைகண்டு வருத்தமுற்று சுந்தரமூர்த்தி வீட்டுக்கு அனுப்புவதற்கு இன்றைக்குநெல்லும் போதாதே ஐயோ! என்னசெய்வேன் என்று நினைந்து பெருங்கவலைகொண்டு போசனம்பண்ணாமல் அன்றிரவு நித்திரைகொண்டார். அப்பொழுது பரமசிவனானவர் அவருக்குச் சொற்பனவத்தையிலே தோன்றி சுந்தரனுக்கு அனுப்பும்படி உனக்குநெல்லுத்தந்தோம் என்றுசொல்லியருளி, பின் குபேரனுக்கு ஆஞ்ஞாபிக்க, அந்தக்குண்டையூர் முழுதிலும் நென்மலையானது ஆகாய

6

மும் மறைபத்தக்கதாக நிறைந்து ஓங்கியது. அன்றிரவு விடியும்போது குண்டையூர்க்கிழவர் விழித்தெழுந்து அந்த நென்மலையைக்கண்டு அதிசயித்து பரமசிவனுடைய திருவருளைத்துதித்து சுந்தரமூர்த்திநாயனருக்கு அனுப்பும்படி பரமசிவன் தந்தருளிய இந்தநெல்லை யாவரெடுக்க வல்லவர்கள் இந்தச்சமாசாரத்தை அவருக்குச்சொல்லும்படிபோவேன் என்று திருவாரூருக்குப்போக நிகழ்ந்த சமாசாரத்தைப் பரமசிவனால் அறிந்து சுந்தரமூர்த்திநாயனாரும் எதிரேவந்தார். அதுகண்ட குண்டையூர்க்கிழவர் அந்நாயனாரை விழுந்து நமஸ்கரித்து எழுந்துநின்று, சுவாமி நெடுங்காலமாக அடியேன் தேவரீருக்குச் செய்துவந்த திருத்தொண்டுக்கு இந்நாளிலே முட்டுவந்தது. அதுகண்டு கடவுளே நென்மலையைத் தந்தருளினார். அந்த நென்மலை மனிதரால் எடுக்கப்படும் அளவினையுடையதன்று. இனி இது என்னாற் செய்யப்படக்கூடியதொண்டன்று என்று சொல்ல, சுந்தரமூர்த்திநாயனார் அதைக்கேட்டு அவரோடுகூடிக்கொண்டு குண்டையூர்க்குப்போய் ஆகாயத்தை அளாவிய நென்மலையைக்கண்டு அதிசயித்து திருவருளை வியந்து சமீபத்திலுள்ள திருக்கோளிலி என்னும் ஸ்தலத்திலிருக்கின்ற சிவாலயத்தையடைந்து அந்தநென்மலையைப் பரவையார் வீட்டுக்குக் கொண்டுபோவதற்கு ஆள்விடும் பொருட்டுதிருப்பதிகம்பாடினார்.

திருக்கோளிலி - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நீளநினைந்தடியேனுமைநித்தலுங்கைதொழுவேன்
வாளனகண்மடவாளவள்வாடிவருந்தாமே
கோளிலியெம்பெருமான்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றே
னாளிலையெம்பெருமானவையட்டித்தரப்பணியே.

கொல்லைவளம்புறவிற்றிருக்கோளிலிமேயவனை
நல்லவர்தாம்பரவுந்திருநாவலவூரனவ
னெல்லிடவாட்கள்வேண்டிநினைந்தேத்திப்பத்தும்வல்லார்
அல்லல்களைந்துலகினண்டர்வானுலகாள்பவரே.

திருச்சிற்றம்பலம்.

அப்பொழுது பரமசிவனுடைய திருவருளினாலே இன்று பகற்காலம் நீங்கியபின் நம்முடைய பூதங்கள் பரவைவீடு மாத்திரமன்றித் திருவாரூர்முழுதும் நிறையும்படி நென்மலையைக் கொண்டுவந்துதரும்என்று ஆகாயத்தினின்றும் ஓர் அசரீரிவாக்குத்தோன்றியது. சுந்தரமூர்த்திநாயனார் அதைக்கேட்டு திருவாரூருக்குத் திரும்பிப்போய் கோயிலை அடைந்து வன்மீகநாதரைத் தரிசனஞ்செய்துகொண்டு பரவையார் வீட்டிலே

சேர்ந்து அவர் மகிழும்படி நிகழ்ந்த சமாசாரத்தைச்சொல்லி அங்கிருந்தார். அதன்பின் சிவாஞ்ஞையினாலே பூதங்கள் குண்டையூரிலேயிருந்த நென்மலையை எடுத்துக்கொண்டுபோய்ப்பரவையார்வீட்டை நிறைவித்து திருவாரூர் முழுதிலும் நென்மலையாக்கின. அன்றிரவுகழிந்தபின்பரவையார் அவ்வூர்ச்சனங்களெல்லாரும் தங்கள் தங்கள் வீட்டின் எல்லையைச் சேர்ந்த நென்மலையை யெடுத்துக்கொள்ளலாம் என்றுசொல்லிப் பறையறைவித்தார்.

சிலநாட்சென்றபின்பு நாட்டியத்தான் குடியில்வசிக்கின்ற கோட்புலிநாயனார் சுந்தரமூர்த்தியிடத்திலே சென்று, அவரை வணங்கி தம்முடைய ஊருக்கு எழுந்தருளிவரும்படி அவரைபிரார்த்தித்து அவர் அதற்கு இசைந்ததுகண்டு தமது ஊருக்குத திரும்பிவிட்டார். அதன் பின், சுந்தரமூர்த்திநாயனார் வன்மீகநாதரை வணங்கி அநுமதி பெற்றுக்கொண்டு நாட்டியத்தான்குடியை அடைந்தபோது அங்கிருந்த கோட்புலிநாயனார் எதிர்கொண்டுவணங்கி தம்முடைய வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் ஆசனத்தில் இருத்தி விதிப்படி அருச்சனைசெய்து திருவமுது செய்வித்து அவரைவணங்கி ஸ்தோத்திரம்பண்ணி சிங்கடியார் வனப்பகையார் என்கின்ற தமது புத்திரிகள் இருவரையும் கொண்டுவந்து அவரை நமஸ்கரிப்பித்து தாமும் வணங்கி சுவாமீ அடியேன்பெற்ற இந்தப்பெண்கள் இருவரையும் அடிமையாகக் கொண்டருளவேண்டும் என்று பிரார்த்திக்க, சுந்தரமூர்த்திநாயனார் இப்பெண்கள் இருவரும் எனக்குப்புத்திரிகள் என்றுசொல்லி, அவர்களைத் தம்முடையதொடையின்மேலிருத்தி மனக்கசிவுடனே அணைத்து உச்சிமோந்து அவர்கள் விரும்பியவைகளைக் கொடுத்தருளி பரமசிவன் வீற்றிருக்கும் ஆலயத்தை அடைந்து அவரைவணங்கித் திருப்பதிகம்பாடினார். அந்தப்பதிகத்தின் திருக்கடைக்காப்பிலே கோட்புலிநாயனாரைச் சிறப்பித்து சிங்கடியாருக்குப் பிதாவாகத் தம்மை நினைத்தபடியினால் தம்மைச் சிங்கடியப்பரென்று வைத்தருளினார்.

திருநாட்டியத்தான்குடி - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பூணாணவதோரரவங்கண்டஞ்சேன்புறங்காட்டாடல்கண்டிகழேன்
பேணீராகிலும்பெருமையையுணர்வேன்பிறவேனாகிலுமறவேன்
காணீராகிலுங்காண்பனென்மனத்தாற்கருதீராகிலுங்கருதிடிலிகழே
னானேனும்மடிபாடுதலொழியேனாட்டியத்தான்குடிநம்பி.

கூடாமன்னரைக்கூட்டத்துவென்றகொடிறன்கோட்புலிசென்னி
நாடார்தொல்புகழ்நாட்டியத்தான்குடிநம்பியைநாளுமறவாச்

சேடார்பூங்குழற்சிங்கடியப்பன்றிருவாரூரனுரைத்த
பாடீராகிலும்பாடுமின்றொண்டீர்பாடநும்பாவம்பற்றறுமே.

திருச்சிற்றம்பலம்.

பின், அவ்விடத்தினின்றும் எழுந்தருளி திருவலிவலத்துக்குப்போய்ப் பதிகம்பாடினர்.

திருவலிவலம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

ஊனங்கைத்துயிர்ப்பாயுலகெலாமோங்காரத்துருவாகிநின்றானை
வானங்கைத்தவர்க்குமதிப்பரியவள்ளலையடியார்கடம்முள்ளத்
தேனங்கைத்தமுதாகியுள்ளூறுந்தேனினைத்தினைத்தற்கினியானை
மானங்கைத்தலத்தேந்தவல்லானைவலிவலந்தனில்வந்துகண்டேனே.

நல்லிசைஞானசம்பந்தனுநாவினுக்கரசரும்பாடியநற்றமிழ்மாலை [து
சொல்லியவேசொல்லியேத்துகப்பானைத் தொண்டனேனறியாமையறிந்
கல்லியென்மனதைக்கசிவித்துக்கழலடிகாட்டியென்களைகளையறுக்கும்
வல்லியல்வானவர்வணங்கநின்றானைவலிவலந்தனில்வந்துகண்டேனே.

கலிவலங்கெடவாரழலோம்புங்கற்றநான்மறைமுற்றனலோம்பும்
வலிவலந்தனில்வந்துகண்டடியேன்மன்னுநாவலாரூரன்வன்றொண்ட
னொலிகொளின்னிசைசெந்தமிழ்பத்துமுள்ளத்தாலுகந்தேத்தவல்வார்போய்
மெலிவில்வானுலகத்தவரேத்தவிரும்பிவிண்ணுலகெய்துவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

மீண்டும் திருவாரூரை அடைந்து பரவையார் வீட்டிலிருந்தார். இருக்கும்பொழுது பங்குனி உத்திரத்திருநாள் சமீபிக்கவும், பரவையார் திருவிழாச்செலவிற்குக் கொடுப்பதற்குப் பொன்கொண்டு வரும்பொருட்டு திருப்புகலூரை அடைந்து கோயிலிற்சென்று சுவாமியை வணங்கித் திருப்பதிகம்பாடி சமீபத்தில் இருக்கின்ற ஓர் மடத்திலே போய் திருப்பணிக்காகச் சுடப்பட்ட செங்கற்கள் பலவற்றை வருவித்து உயரம்பண்ணி அதனையே தலையணையாகக்கொண்டு உத்தரீயத்தை விரித்து நித்திரைசெய்தார். பின் விழித்தெழுந்தபோது அந்தச் செங்கற்கள் எல்லாம் பொற்கல்லாய் இருக்கக்கண்டு திருவருளைத் துதித்து கோயிலினுள்ளேபோய்த் திருப்பதிகம்பாடியருளினர்.

திருப்புகலூர்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

தம்மையேபுகழ்ந்திச்சைபேசினுஞ்சார்வினுந்தொண்டர்தருகிலாப்
பொய்ம்மையாளரைப்பாடாதேயெந்தைபுகலூர்பாடுமின்புலவீர்காள்
இம்மையேதருஞ்சோறுங்கூறையுமேத்தலாமிடர்கெடலுமாம்
அம்மையேசிவலோகமாள்வதற்கியாதுமையுறவில்லையே.

செறுவினிற்செழுங்கமலமோங்குதென்புகலூர்மேவியசெல்வனை
நறவம்பூம்பொழில்நாவலூரன்வனப்பகையப்பன்சடையன்றன்
சிறுவன்வன்றொண்டனூரன்பாடியபாடல்பத்திவைவல்லவர்
அறவனாரடிச்சென்றுசேர்வதற்கியாதுமையுறவில்லையே.

திருச்சிற்றம்பலம்.

அப்பொற்குவையையுங்கொண்டு அவ்விடத்தினின்றும் புறப்பட்டு திருப்பனையூருக்குப்போய் அங்கும் பதிகம்பாடினார்,

---

திருப்பனையூர்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மாடமாளிகைகோபுரத்தொடுமண்டபம்வளரும்வளர்பொழிற்
பாடல்வண்டறையும்பழனத்திருப்பனையூர்
தோடுபெய்தொருகாதினிற்குழைதூங்கத்தொண்டர்களுள்ளிப்
பாடநின்றுடுமாறுவல்லாரவரேயழகியரே.

வஞ்சிநுண்ணிடைமங்கைபங்கினர்மாதவர்வளரும்வளர்பொழிற்
பஞ்சின்மெல்லடியார்பயினுந்திருப்பனையூர்
வஞ்சியும்வளர்நாவலூரன்வனப்பகையவளப்பன்வன்றொண்டன்
செஞ்சொற்கேட்டுகப்பாரவரேயழகியரே.

திருச்சிற்றம்பலம்.

திருவாரூரரை அடைந்து பரவையார் வீட்டில் இருந்தார். பின்பரமசிவனருளால் அங்குநின்றும் பெயர்ந்து சிவனெழுந்தருளியதிருநன்னிலமென்னுந் திருப்பதியிற்சென்று அவ்வாலயத்தை வலம்வந்து உள்ளே சென்று வணங்கி தண்ணியல் வெம்மையினனென்னுமுதலையுடையதிருப்பதிகம்பாடினார்.

திருநன்னிலத்துப்பெருங்கோயில்-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தண்ணியல்வெம்மையினுன் றலேபிற்கடைதோறும்பலி
புண்ணியன்மென்மொழியாரிடங்கொண்டுழல்பண்டரங்கன்
பண்ணியநான்மறையோர்முறையாலடிபோற்றிசைப்ப
நண்ணியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே.

கோடயர்வெங்களிற்றுத்திகழ்கோச்செங்கணுன்செய்கோவி
ஞடியநன்னிலத்துப்பெருங்கோவினயந்தவனேச்
சேடியல்சிங்கிதந்தைசடையன்றிருவாரூரன்
பாடியபத்தும்வல்லார்புகுவார்பரலோகத்துள்ளே.

திருச்சிற்றம்பலம்.

இத்திருப்பதிகம்பாடி அங்கிருந்த பின்னர் திருவீழிமிழலேயினில் இருக்கும் அந்தணர் கூடிவந்து சகல சிறப்போடும் சுந்தரமூர்த்திசுவாமிகளே இட்டுக்கொண்டுபோக அவரும் அத்திருப்பதியைவணங்கி கோயிலினுட்சென்று கடவுளேவணங்கித் திருப்பதிகம் பாடினுர்.

திருவீழிமிழலே-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

விடங்கொண்டமாமிடற்றீர்வெள்ளேச்சுருளொன்றிட்டுவிட்டகாதினீரெ
திடங்கொள்சிந்தையினுர்கலிகாக்குந்திருமிழலே [ன்று
மடங்கல்பூண்டவிமானமுமண்மிசைவந்திழிச்சியவானநாட்டையு
மடங்கல்வீழிகொண்டீரடியேற்குமருளுதிரே.

வேதவேதியர்வேதநீதியரோதுவார்விரிநீர்மிழலேயு
ளாதிவீழிகொண்டீரடியேற்குமருளுகென்று
நாதகீதம்வண்டோதுவார்பொழிஞவலூரன்வன்றெண்டனற்றமிழ்
பாதமோதவல்லார்பரனேடுங்கூடுவரே.

திருச்சிற்றம்பலம்.

அத்திருவீழிமிழலேயின்கண் வாழுங்கடவுளினருளேப்பெற்றுத்திருவாஞ்சியத்திலெழுந்தருளிய பரமசிவனது திருவடியைவணங்கிபொருவனுரென்னு முதலேயுடைய திருப்பதிகம் பாடியருளினுர்.

திருவாஞ்சியம்-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பொருவனார்புரிநூலர்புணர்முலையுமையவளோடு
மருவனார்மருவார்பால்வருவதுவுமில்லைநம்மடிக
டிருவனார்பணிந்தேத்துந்திகழ்திருவாஞ்சியத்துறையு
மொருவனாரடியாரையூழ்வினைநலியவொட்டாரே.

செந்நெலங்கலங்கழனித்திகழ்திருவாஞ்சியத்துறையு
மின்னலங்கலஞ்சடையெம்மிறைவனதறைகழல்பரவும்
பொன்னலங்கலநன்மாடப்பொழிலணிநாவலாரூரன்
பன்னலங்கனன்மாலைபாடுமின்பத்தருளீரே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின்னர் நீர்வளம்பொருந்திய திருநறையூரின்கண் விளங்கா நின்ற திருச்சித்தீச்சரத்தை வணங்கித் திருப்பதிகம் பாடியருளினார்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீரும்மலருந்நிலவுஞ்சடைமேலூரும்
மரவம்முடையானிடமாம்
வாரும்மருவிமணிபொன்கொழித்துச்
சேரும்நறையூர்ச்சித்தீச்சரமே.

போரார்புரமெய்புனிதன்னமருஞ்
சீரார்நறையூர்ச்சித்திச்சரத்தை
யாரூரன்சொல்லிவைவல்லவர்க
ளேராரிமையோருலகெய்துவரே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின்னர் சிறந்த பெருந்தன்மையினையுடைய திருத்தொண்டர்கள் அன்பினோடு மெதிர்கொண்டுவணங்க மழுவுமானுங்கையிற்பெற்றவராகிய கடவுள்வாழும் திருப்புத்தூரைவணங்கி சிவனைத்துதித்து திருப்பதிகம்பாடியருளினார்.

அரசிற்கரைப்புத்தூர்-பண்-இந்தளம்,

திருச்சிற்றம்பலம்.

அகத்தடிமைசெய்யுமந்தணன்றானரிசிற்புனல்கொண்டுவந்தாட்டுகின்றான்
மிகத்தளர்வெய்திக்குடத்தை நும்முடிமேல்விழுந்திட்டுநடுங்குதலும்
வகுத்தவனுக்குநித்தற்படியும்வருமென்றொருகாசினைநின்றநன்றிப்
புகழ்த்துணைகைபுகச்செய்துகந்தீர்பொழிலார்திருப்புத்தூர்ப் புனிதநீரே.

காரூர்மழைபெய்துபொழியருவிக்கழையோடகிலுந்திட்டிருகரையும்
போரூர்புனல்சேரரிசிற்றென்கரைப்பொழிலார்திருப்புத்தூர்ப்புனிதர்தம்மை
யாரூரனருந்தமிழைந்திறைடைந்தழகாலுரைப்பார்களுங்கேட்பவருஞ்
சீரூர்தருதேவர்கணங்களொடுமிணங்கிச்சிவலோகமதெய்துவரே.

திருச்சிற்றம்பலம்.

எனத் திருப்பதிகம்பாடி அக்கடவுளின்முன்புகழ்த்துணையார்க்கரு ளிய திறத்தையும் துதித்து முனிவர்கள்புகழ அவ்விடத்தினின்றெழுந்த ருளி பரமசிவன்வாழுகின்ற பலதிருப்பதிகளையும் வணங்கித் திருவாவடு துறைக்கெழுந்தருளி பரமசிவன் வீற்றிருக்கின்ற கோயிலை வலம்வந்து அன்போடு ஆலயத்துட்புகுந்துவணங்கி மறையவனென்றெடுத்து சோ ழன்செய்த திருப்பணியையும்சிறப்பித்துத் திருப்பதிகம்பாடியருளினர்

திருவாவடுதுறை-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

மறையவனொருமாணிவந்தடையவாரமாயவனருயிர்நிறுத்தக்
கறைகொள்வேலுடைக்காலனைக்காலாற்கடந்தகாரணங்கண்டுகண்டடியே
னிறைவனெம்பெருமானென்றெப்போதுமேத்திஏத்திநின்றஞ்சலிசெய்து
னறைகொள்சேவடிக்கன்பொருமடைந்தேனாவடுதுறையாதியெம்மானே.

தெருண்டவாயிடைநூல்கொண்டுசிலந்திசித்திரப்பந்தர்சிக்கனவியற்றச்
சுருண்டசெஞ்சடையாயதுதன்னைச்சோழனாக்கியதுடர்ச்சிகண்டடியேன்
புரண்டுவீழ்ந்துநின்பொன்மலர்ப்பாதம்போற்றிபோற்றியென்றன்பொடுபுலம்பி
யருண்டென்மேல்வினைக்கஞ்சிவந்தடைந்தேனாவடுதுறையாதிஎம்மானே.

திருச்சிற்றம்பலம்.

இத்திருப்பதிகம்பாடி யங்கிருக்குநாளில் அடியார்களோடு மீண்டும் அக்கடவுளை வணங்கி யவரருள்பெற்று அக்குநின்றும்புறம்போந்து கா வேரியின் தென்கரையில் விளங்காநின்ற பலதிருப்பதிகளையும் வணங்கி திருவிடைமருதூரையடைந்து மருதமரத்தினீழலிலமர்ந்த மருதப்பரை வணங்கித் திருப்பதிகம் பாடியருளினர்

திருவிடைமருதூர்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

கழுதைகுங்குமந்தான்சுமந்தெய்த்தாற்கைப்பர்பாழ் புகழற்றதுபோலப
பழுதில்நாலுழன்றுள் தடுமாறிப்படுசுழித்தலைப்பட்டனனெந்தா
யழுதுநீயிருந்தென்செய்திமனனேயங்கணுவரனேயெனமாட்டா
இழுதையேனுக்கோருய்வகையருளாயிடைமருதுறை யெந்தபிரானே.

அறைக்குஞ்சந்தனத்தோடகிலுந்தியைவனஞ்சுமந்தார்த்திருபாலு
மிரைக்குங்காவிரித்தென்கரைதன்மேலிடைமருதுறையெந்தைபிரானை
யுரைக்குமூரனுளிதிகழ்மாலையுள்ளத்தாலுகந்தேத்தவல்லார்கள்
நரைப்புமூப்பொடுநடலையின்றிநாதன்சேவடிநண்ணுவர்தாமே.

திருச்சிற்றம்பலம்

மருதப்பரைத் துதித்து அவரருள்பெற்று அடியார்களோடு அந்த நகரைவிட்டுப் புறம்போந்து திருநாகேச்சரத்தை யடைந்து கோயிலை வலம்வந்து பரமசிவனைவணங்கித் திருப்பதிகம் பாடியருளினர்.

திருநாகேச்சரம்-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பிறையணிவாணுதலாளுமையாளவள்பேழ்கணிக்க
நிறையணிநெஞ்சனுங்கநீலமால்விடமுண்டதென்னே
குறையணிகுல்லைமுல்லையளைந்துகுளிர்மாதவிமேற்
சிறையணிவண்டுகள்சேர்திருநாகேச்சரத்தானே.

கொங்கணைவண்டலர்த்தக்குயிலும்மயிலும்பயிலுந்
தெங்கணைபூம்பொழில்சூழ்திருநாகேச்சுரத்தானை
வங்கமலிகடல்சூழ்வயனுவலவூரன்சொன்ன
பங்கமில்பாடல்வல்லாரவர்தம்வினைபற்றறுமே.

திருச்சிற்றம்பலம்.

அங்குநின்றும்போந்து சிவபுரத்துத் தேவர்பிரான் கழலைவணங்கி யன்புடன் புறம்போந்து பார்வதிசமேதராகிய கடவுளெழுந்தருளியபல பதிகளையும்வணங்கி, திருக்கலைய நல்லூரையடைந்து இறைவரது திருவடியை அன்போடு பரவி குரும்பை முலையுமையாளென்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினர்.

திருக்கலயநல்லூர்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

குரும்பைமுலைமலர்க்குழலிகொண்டதவங்கண்டு
குறிப்பினொடுஞ்சென்றவடன்குணத்தினைநன்கறிந்து
விருப்பும்வரங்கொடுத்தவளைவேட்டருளிச்செய்த
விண்ணவர்கோன்கண்ணுதலோன்மேவியவூர்வினவில்
அரும்பருகேசுரும்பருவவறுபதம்பண்பாட
வணிமயில்கண்டமாடுமணிபொழில்சூழயலின்
கரும்பருகேகருங்குவளைகண்வளருங்கழனிக்கமலங்
கண்முகமலருங்கலயநல்லூர்காணே.

தண்புனலும்வெண்மதியுந்தாங்கியசெஞ்சடையான்
றாமரையோன்றலைகலனுக்காமரமுன்பாடி
உண்பலிகொண்டுழல்பரமனுறையுமூர்நிறை
நீரொழுகுபுனலரிசிலின்றென்கலயநல்லூரதனை
நண்புடையநன்சடையனிசைஞானிசிறுவ
னாவலர்கோனாரூரனுவினயந்துரைசெய்
பண்பயிலும்பத்துமிவைபத்திசெய்துநித்தம்
பாடவல்லாரல்லலொடுபாவமிலர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

அங்குநின்று திருக்குடமூக்கையணைந்து கடவுளைவணங்கித் திருப்பதிகம்பாடிப் புறம்போந்து திருவலஞ்சுழியையடைந்து பரமசிவத்தையன்போடு வணங்கித் தமிழாற்புகழ்ந்து திருநாவுக்கரைய நாயனாருக்குத் திருவடிதரிசனமளித்த திருநல்லூரைச் சென்றணைந்து சிவனைப்புகழ்ந்து அதன் சமீபத்திலுள்ள தலங்களையெல்லாம் வணங்கிப்புகழ்ந்து பின்னர் சோற்றுத்துறையிற்சென்று கோயிலைவணங்கி யுள்ளேசென்று வலம்வந்து அழனீரொழுகி யணையவெனு முதலையுடைய திருப்பதிகம் பாடியருளினார்.

திருச்சோற்றுத்துறை-பண்-கவுசிகம்.

திருச்சிற்றம்பலம்.

அழனீரொழுகியசடையு, முழையீருரிபுடையானிடமாங்
கழைநீர்முத்துங்கனகக்குவையுஞ்,சுழனீர்ப்பொன்னிச்சோற்றுத்துறையே
சுற்றார்தருநீர்ச்சோற்றுத்துறைபுண், முற்றார்மதிசேர்முதல்வன்பாதத்
தற்றாரடியாரடிநாயூரன், சொற்றானிவைகற்றார்துன்பிலரே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின் தேவர்பெருமானாகிய பரமசிவன் எழுந்தருளியகண்டியூரை வணங்கித்திருவையாறெனுந் திருப்பதியையணைந்து வணங்கிதிருப்பூந்துருத்தியமர்ந்தருளிய கடவுளை வணங்கித் திருவாலம் பொழிலிற் சேர்ந்து பரமசிவத்தைத் தரிசித்து அன்றிரவில் நித்திரை செய்தார். சுவாமி அவருக்குச் சொப்பனத்திலேதோன்றி மழபாடிக்கு வருவதற்கு மறந்தாயோ என்று சொல்லியருளினார். சுந்தரமூர்த்தி விழித்தெழுந்து காவேரிநதியைக்கடந்து அதன் வடபக்கத்திற்சேர்ந்து திருமழபாடிக்குப்போய் சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடியருளினார்.

திருமழபாடி-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னார்மேனியனே புலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேல்மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியேமழைபாடியுண்மாணிக்கமே
யன்னேயுன்னையல்லாலினியாரைநினைக்கேனே.

ஏரார்முப்புரமுமெரியச்சிலைதொட்டவனை
வாரார்கொங்கையுடன்மழபாடியுண்மேயவனைச்
சீரார்நாவலர்கோனாரூரனுரைத்ததமிழ்
பாரோரேத்தவல்லார்பரலோகத்திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின் சிலநாளங்கிருந்து காவேரிநதியின் இருபக்கத்திலுமுள்ள ஸ்தலங்களைவணங்கி மேற்குத்திக்குக்கு யாத்திரைசெய்ய நினைந்துதிருவானைக் காவுக்குப்போய்ப் பதிகம்பாடியருளினார்.

திருவானைக்கா-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மறைகளாயினநான்குமற்றுளபொருள்களுமெல்லாந்
துறையுந்தோத்திரையுந்தொன்மையுநன்மையுமாய
வறையும்பூம்புனலானைக்காவுடையாதியைநாளு
மிறைவனென்றடிசேர்வா ரெம்மையுமாளுடையாரே.

தாரமாகியபொன்னித்தண்டுறையாடிவிழுத்து
நீரினின்றடிபோற்றிநின்மலகொள்ளெனவாங்கே
யாரங்கொண்டவெம்மானைக்காவுடையாதியைநாளு
மீரமுள்ளவர்நாளுமெம்மையுமாளுடையாரே.

ஆழியார்க்கருளானைக்காவுடையாதிபொன்னடியி
னீழலேசரணாகநின்றருள்கூரநினைந்து
வாழவல்வனறொண்டன்வண்டமிழ்மாலைவல்லார்போ
யேழுமாபிறப்பற்றுவெம்மையுமாளுடையாரே.

திருச்சிற்றம்பலம்.

அங்குநின்று திருப்பாச்சிலாச் சிரமத்தையடைந்து கோபுரத்தைக் கண்டுவணங்கி ஆலயத்தைவலம்வந்து சந்நிதானத்துட்சென்றுதிருமுன் வீழ்ந்துவணங்கி பொன்னைக்குறித்துத்துதிக்க, அவர்தராமையால்மனம் புழுங்கி பிரானார் இல்லையென்று திருப்பதிகம் பாடியருளினார்.

திருப்பாச்சிலாச்சிராமம் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வைத்தனன்றனக்கேதலையுமென்னாவும்நெஞ்சமும்வஞ்சமொன்றின்றி
யுய்த்தனன்றனக்கேதிருவடிக்கடிமையுரைத்தக்காலுபமனேயொக்கும்
பைத்தபாம்பார்த்தோர்கோவணத்தோடுபாச்சிலாச்சிராமத்தெம்பரர்ம
பித்தரேயொத்தோர்நச்சிலராகிலிவரலாதில்லையோபிரானார்.

ஏசினவல்லவிகழ்ந்தனவல்லவெம்பெருமானென்றெப்போதும்
பாயின்புகழாபாச்சிலாச்சிராமத்தடிகளையடிதொழப்பன்னாள்
வாயினாற்கூறிமனத்தினானினைவான்வளவயனாவலாரூரன்
பேசினபேச்சைப்பொருத்திலராகிலிவரலாதில்லையோபிரானார்.

திருச்சிற்றம்பலம்.

பின்பு அங்கு பொற்குவைபெற்று சிலநாளங்கிருந்து பின்புறப்பட்டு மார்க்கத்தில் இருபக்கங்களினுமுள்ள தலங்களை வணங்கிசிவபெருமான் வீற்றிருந்தருளிய திருப்பஞ்ஞீலியையடைந்து அரவாபரணத்தையுடையாரது கோபுரத்தை வணங்கிக் கோயிலை வலம்வந்து சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடியருளினார்.

திருப்பைஞ்ஞீலி-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

காருலாவியநஞ்சையுண்டிருள்கண்டர்வெண்டலையோடுகொண்
டூரெலாந்திரிந்தென்செய்வீர்பலியோரிடத்திலேகொள்ளுநீர்
பாரெலாம்பணிந்தும்மையேபரவிப்பணியும்பைஞ்ஞீலியீர்
ஆரமாவதுநாகமோசொலுமாரணீயவிடங்கரே.

அன்னஞ்சேர்வயல்சூழ்பைஞ்ஞீலியிலாரணீயவிடங்கரை
மின்னும்நுண்ணிடைமங்கைமார்பலர்வேண்டிக்காதல்மொழிந்தசொல்
மன்னுதொல்புகழ்நாவலூரன்வன்றொண்டன்வாய்மொழிபாடல்பத்
துன்னியின்னிசைபாடுவாருமைகேள்வன்சேவடிசேர்வரே.

திருச்சிற்றம்பலம்.

அதன் பின்பு திருவிங்கோய்மலைமுதலிய ஸ்தலங்களுக்குப் போய் வணங்கி கொங்கதேசத்தை அடைந்து அவ்விடத்திலே காவேரிக்குத் தென்கரையிலிருக்கும் திருப்பாண்டிக்கொடுமுடிக்குப்போய் நமச்சிவாயப்பதிகம் பாடியருளினர்.

திருப்பாண்டிக்கொடுமுடி-பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

மற்றுப்பற்றெனக்கின்றிநின்றிருப்பாதமேமனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந்தேனினிப்பிறவாததன்மைவந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ்சீர்க்கரையூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே.

கோணியபிறைசூடியைக்கரையூரிற்பாண்டிக்கொடுமுடி
பேணியபெருமானைப்பிஞ்ஞகப்பித்தனைப்பிறப்பில்லியைப்
பாணுலாவரிவண்டறைகொன்றைத்தாரனைப்படம்பாம்பரை
நாணனைத்தொண்டனூரன்சொல்லிவைசொல்லுவார்க்கில்லைதுன்பமே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின் அவிநாசியை அடைந்து அங்கே பரமசிவன் கனகசபையிலே நடனஞ்செய்யும் திருக்கோலத்தைத் தமக்குக் காட்டக்கண்டுதிருவெஞ்சாமக்கூடலையும் வணங்கித் திருப்பதிகம் பாடியருளினர்.

திருவெஞ்சாமக்கூடல்-பண்-கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

எறிக்குங்கதிர்வேயுதிர்முத்தமொடுமிலவங்கந்தக்கோலமிஞ்சி
செறிக்கும்புனலுட்பெய்துகொண்டுமண்டித்திளைத்தெற்றுசிற்றாதன்கீழ்மேல்
முறிக்குந்தடமாமுடப்புன்னைஞாழல்குருக்கத்திகள்மேற்குயில்கூவலறு
வெறிக்குக்கலைமாவெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே.

வஞ்சிநுண்ணிடையார்மயிற்சாயல்நல்லார்வடிவேற்கணல்லார்பலர்வந்திறைஞ்சும்
வெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியேயென்றுதான்விரும்பி

வஞ்சியதளிக்கும்வயல்நாவலர்கோன்வனப்பகையப்பன்வன்றொண்டன்சொன்ன
செஞ்சொற்றமிழ்மாலைகள்பத்தும்வல்லார்சிவலோகத்திருப்பது திண்ணமன்றே.

திருச்சிற்றம்பலம்

அங்கு நின்று அனேக காவதநடந்து, திருக்கற்குடியென்னும் ஸ்தலத்திற்சென்று சுவாமியை வணங்கித் திருப்பதிகம் பாடியருளினர்.

திருக்கற்குடி - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

விடையாருங்கொடியாய்வெறியார்மலர்க்கொன்றையினய்
படையார்வெண்மழுவாய்பரமாயபரம்பரனே
கடியார்பூம்பொழில்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
அடிகேளெம்பெருமானடியேனையுமஞ்சலென்னே.

அலையார்தண்புனல்சூழ்ந்தழகாகிவிழவமருங்
கலையார்மாதவர்சேர்திருக்கற்குடிக்கற்பகத்தைச்
சிலையார்வாணுதலாள்நல்லசிங்கடியப்பனுரை
விலையார்மாலைவல்லார்வியன்மூவுலகாள்பவரே.

திருச்சிற்றம்பலம்.

அதன் பின்னர் திருவாறைமேற்றளியில் வீற்றிருக்கும் பெருமானை வணங்கி யவரருள்பெற்று தேவர்கள் துதிக்கும் பல ஸ்தலங்களையுந் தரிசித்து திருவின்னம்பர் என்னுந் திருப்பதியை வணங்கித் திருப்புறம்பியத்தில் வந்து மிகுந்த வன்போடு திருப்பதிகம் பாடியருளினர்.

திருப்புறம்பியம் - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

அங்கமோதியோராறைமேற்றளிநின்றும்போந்துவந்தின்னம்பர்த்
தங்கினேமையுமின்னதென்றிலரீசனாரெழுநெஞ்சமே
கங்குலேமங்கள்கொண்டுதேவர்களோதிவானவர்தாந்தொழும்
பொங்குமால்விடையேறிசெல்வப்புறம்பியந்தொழப்போதுமே.

துஞ்சியும்பிறந்துஞ்சிறந்துந்துயக்கறாதமயக்கிவை
வஞ்சியூரன்திருப்புறம்பியத்தப்பனைத்தமிழ்ச்சீரினல்
நெஞ்சினாலேபுறம்பியந்தொழுதுய்துமென்றுநினைத்தன
வஞ்சியாதுரைசெய்யவல்லவர்வல்லவானுலகாள்வரே.

திருச்சிற்றம்பலம்.

அங்கு சுவாமி தரிசனஞ் செய்துக்கொண்டு அப்பாற்செல்லும்போது திருக்கூடலையாற்றூருக்குச் சமீபித்தும், அதற்குப்போகாமல் திருமுதுகுன்றைநோக்கிச் சென்றார். செல்லும்வழியிலே பரமசிவன் ஒருபிராமணராகி, சுந்தரமூர்த்திக்கு முன்னின்றார். நின்ற அந்தப் பிராமணரைச் சுந்தரமூர்த்திநாயனார் பார்த்து, ஐயரே ! திருமுதுகுன்றுக்குப் போம் வழிஎது சொல்லும் என்றுகேட்க, ஐயர் இது கூடலையாற்லூருக்குப் போம்வழி என்றுசொல்லி, வழிகாட்டிக்கொண்டு முன்னே சென்றார். சுந்தரமூர்த்திநாயனார் அவரைத்தொடர்ந்து சென்று, பின் அவரைக் காணாதவராய் "அடிகளிவ்வழிபோந்த வதிசயமறியேனே" என்னுந்திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

திருக்கூடலையாற்றூர்-பண்-புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

வடிவுடைமழுவேந்திமதகரியுரிபோர்த்துப்
பொடியணிதிருமேனிப்புரிகுழலுமையோடும்
கொடிஅணிநெடுமாடக்கூடலையாற்றூரி
லடிகளிவ்வழிபோந்தவதிசயமறியேனே.

கூடலையாற்றூரிற்கொடியிடையவளோடும்
ஆடலுகந்தானையதிசயமிதுவென்று
நாடியவின்றமிழால்நாவலலூரன்சொற்
பாடல்கள்பத்தும்வல்லார்தம்வினைபற்றறுமே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின் கூடலையாற்றூரை அடைந்து, சுவாமி தரிசனஞ்செய்து கொண்டு திருமுது குன்றுக்குப்போனார். அந்த ஸ்தலத்திலே சுவாமி தரிசனஞ் செய்து திருப்பதிகம் பாடியருளினார்.

திருமுதுகுன்றம் - பண் - கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

நஞ்சிடையொன்றுநாளேயென்றும்மைநச்சுவார்
துஞ்சியிட்டாற்பின்னைச்செய்வதென்னடிகேள்சொலீர்
பஞ்சியிடப்புட்டில்சீறுமோமணிநீரருள்
முஞ்சியிடைச்சங்கமார்க்குஞ்சீர்முதுகுன்றரே.

முத்திமுத்தாறுவலஞ்செயும்முதுகுன்றரைப்
பித்தனைப்பானடித்தொண்டனூரன்பிதற்றிவை

தத்துவஞானிகளானூர்தமொற்றிலார்
எத்தவத்தோர்களுமேத்துவர்க்கிடரில்லையே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிகம்பாடி பின்னும் பழமலைநாதரை தமக்குப் பொருள்வேண்டிவந்த கருத்தை மனத்துட்கொண்ட குறிப்போடு வணங்கித்தொழுதுபாடியருளினூர்.

நம்பியென்றதிருப்பதிகம்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

மெய்யைமுற்றப்பொடிம்பூசியோர்நம்பிவேதநான்குவிரித்தோதியோர்நம்பி
கையிலோர்வெண்மழுவேந்தியோர்நம்பிகண்ணுமூன்றுமுடையாயொருநம்பி
செய்யநம்பிசிறுசெஞ்சடைநம்பிதிரிபுரந்தீயெழச்செற்றதோர்வில்லா
லெய்தநம்பியென்னையாளுடைநம்பியெ பிறப்புமெங்க ம்பிகண்டாயே
கரத்தினம்பிகசியாதவர்தம்மைக்கசிந்தவர்க் கிம்மையோகடம்மையிலின்
பம் பெருக்குநம்பிபெருகக்கருத்தா.

திருச்சிற்றம்பலம்.

அதன் பின் சுவாமி பன்னீராயிரம் பொன்கொடுத்தருள, சுந்தரமூர்த்திநாயனூர் வணங்கி நின்று சுவாமி தேவரீர் தந்தருளிய இந்தப் பொன்னெல்லாம் திருவாரூரிலே உள்ளவர்கள் அதிசயிக்கும்படி அங்கே வரச்செய்யவேண்டும் என்று பிரார்த்தித்தார். அப்பொழுது சுவாமியுடைய திருவருளினூலே சுந்தரனே நீ இந்தப் பொன்னெல்லாவற்றையும் மணிமுத்தநதியிலே இட்டுத் திருவாரூர்க் குளத்திலேபோய் எடுத்துக்கொள்ளென்று ஓர் அசரீரிவாக்கு எழுந்தது அதைக்கேட்ட சுந்தரமூர்த்திநாயனூர் மச்சம்வெட்டி வைத்துக்கொண்டு பொன் முழுதையும் மணிமுத்தநதியிலே புகவிட்டு அன்று என்னை வலிந்தாட்கொண்ட திருவருளை அறிவேன் என்று சொல்லி சிதம்பரத்துக்குப் போக நினைந்து வழிக்கொண்டு இடையிலே திருக்கடம்பூரை வணங்கி சிதம்பரத்தை அடைந்து சபாநாயகரை நமஸ்கரித்துத் திருப்பதிகம் பாடியருளினூர்.

கோயில்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மடித்தாடும்மடிமைக்கணன்றியேமனனேநீவாழுநாளுக்
தடுத்தாட்டித்தருமனூர்தமர்செக்கிலிடும்போது தடுத்தாட்கொள்வான்
கடுத்தாடுங்கரதலத்திற்றமருகமுமெரியகலுங்கரியபாம்பும்
பிடித்தாடிபுலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றுமன்றே.

பாரூருமரவல்குலுமைநங்கையவள்பங்கன்பைங்கணேற்ற
னாரூரன்றருமனார்தமர்செக்கிலிடும்போது தடுத்தாட்கொள்வா
னாரூரன்றம்பிரானாரூரன்மீகோங்கிலணிகாஞ்சிவாய்ப்
பேரூரர்பெருமானைப்புலியூர்ச்சிற்றம்பலத்தேபெற்றாமன்றே.

திருச்சிற்றம்பலம்.

அங்கு நின்று புறம்பட்டு கருப்பறியலூரைக்கண்டு வணங்கி கோபுரத்துள் அடியார்கள்சூழப்போய் சுவாமிதரிசனஞ்செய்து சிம்மாந்தென்னு முதலையுடைய திருப்பதிகம்பாடியருளினார்.

திருக்கருப்பறியலூர்-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

சிம்மாந்துசிம்புளித்துச்சிந்தையினில்வைத்துகந்துதிறம்பாவண்ணங்
கைம்மாவினுரிவைபோர்த்துமைவெருவக்கண்டானைக்கருப்பறியலூர்க்
கொய்ம்மாவின்மலர்ச்சோலைக்குயில்பாடமயிலாடுங்கொகுடிக்கோயி
லெம்மானைமனத்தினால்நினைந்தபோதவர்நமக்கினியவாரே.

கலைமலிந்ததென்புலவர்கற்றோர்தம்மிடர்தீர்க்குங்கருப்பறியலூர்க்
குலைமலிந்தகோட்டெங்குமட்டொழுகும்பூஞ்சோலைக்கொகுடிக்கோயி
லிலைமலிந்தமழுவாளைமனத்தினாலன்புசெய்தின்பமெய்தி
மலைமலிந்தோளாரூரன்வனப்பகையப்பனுரைத்தவண்டமிழ்களே.

திருச்சிற்றம்பலம்.

கருப்பறியலூரினின்றும் புறப்பட்டு மண்ணிவளம்படிக்கரையிற்சென்று அங்கு உமையையொருபாகத்திலுடையகடவுளை வணங்கி ஒப்பற்ற புகழினையுடையதிருப்பதிகம் முன்னவனென்றெடுத்துப் பாடியருளினார்.

திருப்பழமண்ணிப்படிக்கரை-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

முன்னவனெங்கள்பிரான்முதல்காண்பரிதாயபிரான்
சென்னியிலெங்கள்பிரான்திருநீலமிடற்றெம்பிரான்
மன்னியவெங்கள்பிரான்மறைநான்குங்கல்லாலநிழற்கீழ்ப்
பன்னியவெங்கள்பிரான்பழமண்ணிப்படிக்கரையே.

பல்லுயர்வாழுந்தெண்ணீர்ப்பழமண்ணிப்படிக்கரைய
யல்லியந்தாமரைத்தாராரூரனுரைத்ததமிழ்
சொல்லுதல்கேட்டல்வல்லாரவர்க்குந்தமர்க்குங்கிளைக்கும்
எல்லியுநண்பகலுமிடர்கூறுதலில்லையன்றே.

திருச்சிற்றம்பலம்.

அங்குநின்றுஞ் சென்று வாழ்கொளிபுத்தூருக்குப் போகாது மறந்து சுந்தரமூர்த்திநாயனுர் செல்லும்போது மார்க்கத்தில் நினைந்துதிரும்பி அத்தலத்தையடைந்து தலைக்கலனென்றெடுத்துத் திருப்பதிகம்பாடியருளினுர்.

திருவாழ்கொளிபுத்தூர்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

தலைக்கலன் றலைமேற்றரித்தானைத் தன்னையென்னைநினைக்கத்தருவானைக்
கொலைக்கையானைபுரிபோர்த்துகந்தானைக்கூற்றுதைத்தகுரைசேர்கழலானை
யலைத்தசெங்கண்விடையேறவல்லானையாணையாலடியேனடிநாயேன்
மலைத்தசெந்நெல்வயல்சூழ்கொளிபுத்தூர்மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே.

வளங்கிளர்பொழில்வாழ்கொளிபுத்தூர்மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனென்
றுளங்குளிர்தமிழூரன்வன்றெண்டன்சடையன்காதலன்வனப்பகையப்பன்
நலங்கிளர்வயல்நாவலர்வேந்தனங்கைசிங்கடிதந்தைபயந்த
பலங்கிளர்தமிழ்பாடவல்லார்மேற்பறையுமாஞ்செய்தபாவங்கள்தானே.

திருச்சிற்றம்பலம்.

பதிகம்பாடிச்சென்று ஆலயத்துள் ளடைந்து மயிர்ப்புளகமெழத் தொழுது உள்ளணைந்து வணங்கி யுமாமகேசுவரனைத்துதித்து, வெளியேவந்து தங்கியிருந்து அங்குநின்றும் புறப்பட்டு கானட்டுமுள்ளூரைச் சாரும்போது ஆண்டவன் எதிராகக் காட்சிகொடுக்கக்கண்டு வள்யாயென்னவெடுத்து திருப்பதிகம்பாடியருளினுர்.

திருக்கானட்டுமுள்ளூர்-பண்-கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

வள்வாயமதிமிளிருஞ்வளர்சடையினனைமறையவனை
வாய்மொழியைவானவர்தங்கோனைப்
புள்வாயைக்கீண்டுலகம்விழுங்கியுமிழ்ந்தானைப்
பொன்னிறத்தின்முப்புரிநூனன்முகத்தினனை
முள்வாயமடல்தழுவிமுடத்தாழையீன்று
மொட்டலர்ந்துவிரைநாறுமுருகுவிரிபொழில்சூழ்
கள்வாயகருங்குவளைகண்வளருங்கழனிக்
கானட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே.

திரையினார்கடல்சூழ்ந்ததென்னிலங்கைக்கோனைச்
செற்றவனைச்செஞ்சடைமேல்வெண்மதியினானை
நுரையினார்கரைதழுவுகொள்ளிடத்தின்கரைமேற்
கானாட்டுமுள்ளூரிற்கண்டுகழல்தொழுது
உரையினார்மதயானைநாவலாரூரனுரிமையா
லுரைசெய்தவொண்டமிழ்கள்வல்லார்
வரையினார்வகைஞாலமாண்டவர்க்குந்தாம்போய்
வானவர்க்குந்தலைவராய்நிற்பரவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

அங்குநின்றும் புறப்பட்டு திருவெதிர்கொள்பாடியினையணைந்துமத்தயானையென் றெடுத்துத் திருப்பதிகம்பாடியருளினார்.

திருஎதிர்கொள்பாடி-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மத்தயானையெறிமன்னர்சூழவருவீர்காள்
செத்தபோதிலாருமில்லைச்சிந்தையுள்வம்மின்கள்
வைத்தவுள்ளமாற்றவேண்டாவம்மின்மனத்தீரே
அத்தர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே.

முத்துநீற்றுப்பவளமேனிச்செஞ்சடையானுறையும்
பத்தர்பந்தத்தெதிர்கொள்பாடிப்பரமனையேபணியச்
சித்தம்வைத்ததொண்டர்தொண்டன்சடையனவன்சிறுவன்
பத்தனூரன்பாடல்வல்லார்பாதம்பணிவாரே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு அக்கடவுளைவணங்கி யவரருள்பெற்று திருவேள்விக்குடியில் வந்து சுவாமியைவணங்கி மூப்பதுமில்லையென எடுத்துத் திருப்பதிகம் பாடியருளினார்.

மூப்பதுமில்லை-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

மூப்பதுமில்லைபிறப்பதுமில்லையிறப்பதில்லைச்
சேர்ப்பதுகாட்டகத்தூரினுமாகச்சிந்திக்கவல்லார்
காப்பதுவேள்விக்குடிதண்டுருத்தியெங்கோன்றலைமேல்
ஆர்ப்பதுநாகமறிந்தோமேல்நாமிவர்க்காட்படோமே.

கூடலர்மன்னன்குலநாவலூர்க்கோனலத்தமிழைப்
பாடவல்லபரமன்னடியார்கடிமைவழுவார்
நாடவல்லதொண்டனாரூரனாட்படுமாறுசொல்லிப்
பாடவல்லார்பரலோகத்திருப்பதுபண்டமன்றே.

திருச்சிற்றம்பலம்.

பின்னும் மார்க்கங்களில் பல ஸ்தலங்களை வணங்கி, திருவாரூரை அடைந்தார் அங்கே சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு பரவையாரோடு கூடியிருக்கும்நாளில் ஒருநாள் பரவையாரைநோக்கி எனக்குத்திருமுதுகுன்றர்தந்தருளிய பொன்னை மணிமுத்தாநதியிலே புகவிட்டுவந்தேன் இப்போது இந்தஸ்தலத்திலே இருக்கின்றகோயிலுக்கு மேற்றிசையிலுள்ள குளத்திலேபோய் அவருடையஅருளினாலே எடுத்துக்கொண்டுவருவோம் வாஎன்றார் பரவையார் அதைக்கேட்டு இது என்ன அதிசயம் என்றுசொல்லி, புன்னகைசெய்ய சுந்தரமூர்த்திநாயனார், பெண்ணேநமது கடவுளுடைய திருவருளினாலே பொன்முழுதும் குளத்திலே எடுத்து உனக்குத்தருவேன் இதுசத்தியம் என்றுசொல்லி பரவையாரும் கூட வர கோயிலிலே பிரவேசித்து வன்மீகநாதரை வணங்கிக்கொண்டு கோயிலை வலம்வந்து மேற்றிசையிலிருக்கின்ற திருக்குளத்தையடைந்து அதன் வடகீழ்க்கரையிலேபோய் பரவையாரைநிறுத்தி சுவாமியைவணங்கி குளத்திலே இறங்கி, அங்கேதடவினர் அப்பொழுது பரமசிவன் சுந்தரமூர்த்தியைக்கொண்டு திருப்பதிகம்பாடுவிக்க வேண்டுமென்னுந் திருவிளையாட்டினாலே பொன்னை அக்குளத்திலே வருவியாதொழிந்தருள, பரவையார் ஆற்றிலேஇட்டுக் குளத்திலேதேடுகிறீரா என்றார் அதுகேட்ட சுந்தரமூர்த்திநாயனார் சுவாமீ தேவரீர்முன் அருளிச்செய்தபடியே பரவையார் நகையாதபடி பொன்னைத்தாரும் என்று திருமுதுகுன்றர்மேல் திருப்பதிகம்பாடியருளினார்.

திருமுதுகுன்றம்-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்செய்தமேனியினீர்புலித்தோலையரைக்கசைத்தீர்
முன்செய்தமூவெயிலுமெரித்தீர்முதுகுன்றமர்ந்தீர்
மின்செய்தநுண்ணிடையாள்பரவையிவள்தன்முகப்பே
யென்செய்தவாறடிகேளடியேனிட்டளங்கெடவே.

பிறையாருஞ்சடையெம்பெருமானருளாயென்று
முறையால்வந்தமரர்வணங்கும்முதுகுன்றர்தம்மை
மறையார்தங்குரிசில்வயல்நாவலாரூரன்சொன்ன
இறையார்பாடல்வல்லார்க்கெளிதாஞ்சிவலோகமுதே.

ஏத்தாதிருந்தறியேனிமையோர்தனிநாயகனே
மூத்தாயுலகுக்கெல்லாமுதுகுன்றமர்ந்தவனே
பூத்தாருங்குழலாள்பரவையிவள்தன்முகப்பே
கூத்தாதந்தருளாய்கொடியேனிட்டளங்கெடவே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு பரமசிவனுடைய திருவருளினால் வந்தெழுந்த பொற்றிரளை யெடுத்து, கரையிலேற்றி அந்தப்பொன்னையும் முன்கொண்டுவந்தமச்சத்தையும் உரைப்பித்து, மச்சத்திலுமபார்க்க இது உரைதாழ்ந்ததுகண்டு பின்னுங்கடவுளைப்பாடினர். பாடியபோது கடவுளானவர் உரைதாழாது அருள்செய்ய, சுந்தரமூர்த்திநாயனர்மனமகிழ்ந்து, பொற்குவைகளைமாட்டிற்சுமத்தி, பரவையாரோடு வீட்டுக்கு அனுப்பி, கோயிலிலேபோய்ச் சுவாமியைவணங்கி வீட்டுக்குப்போய்பரவையாருடன் இன்புற்று வாழ்ந்திருந்தார் அப்படி வாழ்ந்திருக்குங்காலத்தில் நாடோறும்திருவாரூரில் சுவாமிதெரிசனஞ்செய்து வருநாளில் புற்றிடமாகவீற்றிருந்தருளிய பரம்பொருளை பாறுதாங்கியெனவெடுத்துத் திருப்பதிகம்பாடியருளினர்.

திருவாரூர்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பாறுதாங்கியகாடரோபடுதலையரோமலைப்பாவையோர்
கூறுதாங்கியகுழகரோகுழைக்காதரோகுறுங்கோட்டிள
ஏறுதாங்கியகொடியரோசுடுபொடியரோவிளங்கும்பிறை
யாறுதாங்கியசடையரோநமக்கடிகளாகியவடிகளே.

படிசெய்நீர்மையிற்பத்தர்காள்பணிந்தேத்தினேன்பணியீரருள்
வடிவிலான்றிருநாவலூரன்வனப்பகையப்பன்வன்றொண்டன்
செடியனாகிலுந்தீயனாகிலுந்தம்மையேகனஞ்சிந்திக்கும்
அடியனூரனையாள்வரோநமக்கடிகளாகியவடிகளே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிகம்பாடி பரவையாருடன் வாழ்ந்திருக்குங்காலத்தில் சிவஸ்தலயாத்திரைசெய்யவிரும்பி திருவாரூரினின்றும் புறப்பட்டுதிருநள்ளாறுஎன்னுந் தலத்திற்சென்று திருப்பதிகம் பாடியருளினர்.

திருநள்ளாறு-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பூவில்வாசத்தைப்பொன்னினைமணியைப்புவியைக்காற்றினைப்புனலனல்வெளியை
சேவின்மேல்வருஞ்செல்வனைச்சிவனைத்தேவதேவனைத்தித்திக்குந்தேனைக்
காவியங்கண்ணிபங்கனைக்கங்கைச்சடையனைக்காமரத்திசைபாட
நாவிலூறுநள்ளாறனையமுதைநாயினேன்மறந்தென்னினைக்கேனே.

செறிந்தசோலைகள்சூழ்ந்தநள்ளாற்றெஞ்சிவனைநாவலூர்சிங்கடிதந்தை
மறந்துநான்மற்றுநினைப்பதென்னென்றுவனப்பகையப்பனூரன்வன்றொண்டன்
சிறந்தமாலைகொடைஞ்சினொடைஞ்சுஞ்சிந்தையுள்ளுருகிச்செப்புவல்லார்
இறந்துபோக்கில்லைவரவில்லையாகியின்பவெள்ளத்துளிருப்பர்களினிதே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிகம்பாடிச் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு ஆகாயத்தை யளாவிய மணிமாடங்கணிறைந்த திருக்கடவூர்வந்து திருமயானத்தையும் வணங்கித் திருப்பதிகம் பாடியருளினர்.

திருக்கடவூர்மயானம்-பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

மருவார்கொன்றைமதிசூடிமாணிக்கத்தின்மலைபோல
வருவார்விடைமேல்மாதோடுமகிழ்ந்துபூதப்படைசூழ்த்
திருமால்பிரமனிந்திரற்குந்தேவர்நாகர்தானவர்க்கும்
பெருமான்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே.

மாடமல்குகடவூரில்மறையோரேத்துமயானத்துப்
பிடைதீரவடியார்க்கருளும்பெருமானடிகள்சீர்
நாடிநாவலாரூரனம்பிசொன்னநற்றமிழ்கள்
பாடுமடியார்கேட்பார்மேற்பாவமானபறையுமே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின்பு திருக்கடவூரினின்றும் திருவீரட்டானத்தில் நமனது வீரத்தைத்தொலைத்ததிருவடியைவணங்கித்திருப்பதிகம்பாடியருளினர்.

திருக்கடவூர்-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொடியார்மேனியனேபுரிநூலொருபாற்பொருந்த
வடியார்மூவிலைவேல்வளர்கங்கையின்மங்கையொடுங்
கடியார்கொன்றையனேகடவூர்தனுள்வீரட்டத்தெம்
மடிகேளென்னமுதேயெனக்கார்துணைநீயலதே.

காராரும்பொழில்சூழ்கடவூர்த்திருவீரட்டத்துள்
ஏராரும்மிறையைத்துணையாவெழில்நாவலர்கோன்
ஆரூரனன்னடியானடித்தொண்டனுரைத்தமிழ்
பாரோரேத்தவல்லார்பரலோகத்திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

அங்குநின்று புறப்பட்டுபொன்மலையை வில்லாகவளைத்தமிகுந்தவீ ரத்தையுடைய பரமசிவன் வாழாநின்ற திருவலம்புரத்திற்சென்று சுவாமியைவணங்கி எனக்கினியெனவெடுத்துத் திருப்பதிகம் பாடியருளினர்.

திருவலம்புரம்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

எனக்கினித்தினைத்தனைப்புகலிடமறிந்தேன்
பனைக்கனிப்பழம்படும்பரவையின்கரைமே
லெனக்கினியவன்றமர்க்கினியவனெழுமையு
மனக்கினியவன்றனதிடம்வலம்புரமே.

வருங்கலமும்பலபேணுதல்கருங்கட
லிருங்குலப்பிறப்பர்தமிடம்வலம்புரத்தினை
யருங்குலத்தருந்தமிழூரன்வன்றொண்டன்சொற்
பெருங்குலத்தவரொடுபிதற்றுதல்பெருமையே.

திருச்சிற்றம்பலம்.

திருவலம்புரியைப்பணிந்து பின்திருச்சாய்க்காடுசென்று தேவர்பிரானைப்பணிந்து திருப்பதிகம்பாடிப் புறம்போந்து, திருவெண்காட்டையடைந்து அக்கடவுளைப்பணிந்து புகழ்ந்து சுந்தரமூர்த்தி நாயனர்திருநனிபள்ளிக்குச்சென்று திருப்பதிகம்பாடியருளினர்.

திருநனிபள்ளி - பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆதியனுதிரையன்னயன்மாலறிதற்கரிய
சோதியன்சொற்பொருளாய்ச்சுருங்காமறை நான்கினையு
மோதியனும்பர்தங்கோனுலகத்தினுளெவ்வுயிர்க்கு
நாதியல்நம்பெருமானண்ணுமூர்நனிபள்ளியதே.

காலமுநாள்கழியுநனிபள்ளிமனத்தினுள்கிக்
கோலமதாயவனைக்குளிர்நாவலவூரன்சொன்ன
மாலைமதித்துரைப்பார்மண்மறந்துவானேருலகிற்
சாலநலின்பமெய்தித்தவலோகத்திருப்பவரே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின்பு திருச்செம்பொன்பள்ளிமுதலிய அநேகதிருப்பதிகளை வணங்கி எம்பிரானெழுந்தருளிய திருநின்றியூரைச்சார்ந்து ஆலயத்துட் புகுந்து வணங்கித் திருப்பதிகம்பாடியருளினர்.

திருநின்றியூர் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அணிகொளாடையம்பூணணிமாலையமுதுசெய்தமுதம்பெறுதண்டி
யிணைகொளேழெழுநூறிரும்பனுவலீன்றவன்றிருநாவினுக்கரையன்
கணைகொள்கண்ணப்பனென்றிவர்பெற்றகாதலின்னருளாதரித்தடைந்தே
றிணைகொள்செந்தமிழ்பைங்கிளிதெரியுஞ்செல்வத்தென்றிருநின்றியூரானே.

இரவிநீள்சுடரெழுவதன்முன்னமெழுந்துதன்முலைக்கலசங்களேந்திச்
சுரபியால்சொரிந்தாட்டிநின்பாதந்துடர்ந்தவார்த்தைதிடம்படக்கேட்டு
பரவியுள்கிவன்பாசத்தையறுத்துப்பரமவந்துநின்பாதத்தையடைந்தே
னிரவிநித்திலமத்தகுசெம்பொனளிக்குந்தென்றிருநின்றியூரானே.

திருச்சிற்றம்பலம்

திருப்பதிகம்பாடி யந்தத்திருப்பதியி லன்பர்களோடமர்ந்தருள்வாராகிய சுந்தரமூர்த்திநாயனர் அதைவிட்டுப் புறப்பட்டுத்திருநீடூரைவணங்காது மறந்துபோகும்போதுநினைந்து அதனைவணங்கித் திருப்பதிகம் பாடியருளினர்.

திருநீடூர்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

ஊர்வதோர்விடையொன்றுடையானையொண்ணுதற்றனிக்கண்ணுதலானைக்
காரதார்கறைமாமிடற்றானைக்கருதலாற்புரமூன்றெரித்தானை
நீரில்வாளைவராம்குதிகொள்ளுநிறைபுனற்கழனிச்செல்வநீடூர்
பாருளார்பரவித்தொழநின்றபரமனைப்பணியாவிடலாமே.

பேரோராயிரமும்முடையானைப்பேரினாற்பெரிதும்மினியானை
நீரூர்வார்சடைநின்மலன்றன்னைநீடூர்நின்றுகந்திட்டபிரானை
யாரூரன்னடிகாண்பதற்கன்பாயாதரித்தழைத்திட்டவிம்மாலை
பாரூரும்பரவித்தொழவல்லார்பத்தராய்முத்திதாம்பெறுவாரே.

திருச்சிற்றம்பலம்.

பதிகம்பாடி அவ்விடத்துநின்றுதிருப்புன்கூரணைந்து வணங்கிப்புறப்பட்டுவாசனைவிரிந்த மலர்ச்சோலைகள்சூழ்ந்த திருக்கோலக்காவில்வந்தபோது பரமசிவன் எதிராகக்காட்சிகொடுத்தருள மிகுந்தவிருப்பத்தோடுதொழுது திருஞானசம்பந்தசுவாமிகளுக்குத் திருக்கைகளாலொத்திப் பாடப் பொற்றாளங்கொடுத்தருளியதைச் சிறப்பித்து திருப்பதிகம்பாடியருளினர்.

திருக்கோலக்கா-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

நாளுமின்னிசையாற்றமிழ்பரப்புஞானசம்பந்தனுக்குலகவர்முன்
றாளமீய்ந்தவன்பாடலுக்கிரங்குந்தன்மையாளனையென்மனக்கருத்தை
யாளும்பூதங்கள்பாடநின்றாடுமங்கணன்றனையெண்கணமிறைஞ்சுங்
கோழிலிப்பெருங்கோயிலுளானைக்கோலக்காவினிற்கண்டுகொண்டேனே

கோடரம்பயில்சடையுடைக்கரும்பைக்கோலக்காவுளெம்மானைமெய்ம்
பாடரங்குடியடியவர்விரும்பப்பயிலுநாவலாலூரன்வன்றொண்ட[மானப்
ஞடிரங்கிமுன்னறியுமன்னெறியானவின்றபத்திவைவிளம்பியமாந்தர்
காடரங்கெனநடனவின்றான்பாற்கதிவுமெய்துவர்பதியவர்க்கதுவே.

திருச்சிற்றம்பலம்.

பின் சீர்காழியினெல்லையை வலங்கொண்டு வணங்கி. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுருடைய திருவடிகளைத்துதித்து, குருகாவூருக்குப் போம்படி. வழிக்கொண்டார். வழியிலே சுவாமி அவர்பசியினாலும்தாகத்தினாலும் வருந்துதலை அறிந்து, தண்ணீரும் பொதிசோறும் கொண்டுவந்து வெய்யில்வெப்பத்தைத்தணிக்கும்பொருட்டு ஒருபக்கத்திலேஒரு பந்தலையுண்டாக்கி, அங்கேபிராமணவேடங்கொண்டு, சுந்தரமூர்த்தியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அப்பொழுது சுந்தரமூர்த்தி நாயனர் திருத்தொண்டர்களுடனே அவ்விடத்திலேவந்து, பந்தரின் கீழேபோய் அந்தப்பிராமணர் சமீபத்திலே பஞ்சாட்சரத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார், பிராமணர் அவரைப்பார்த்து, நீர் மிகப்பசிகொண்டிருக்கின்றீர் இந்தப்பொதிசோற்றைஉண்டு இந்தத்தண்ணீரைக்குடித்து இளைப்பாறும் என்றுசொல்லியருள சுந்தரமூர்த்திநாயனர் அதற்கு இசைந்துஅந்தப்பொதிசோற்றைவாங்கி, திருத்தொண்டருடன் அமுதுசெய்து,அளவில்லாதபரிசனங்களெல்லாரும் அமுதுசெய்யப் பண்ணினர். பண்ணிய பின்னும் அந்தப்பொதிசோறு அவ்விடத்திலே பசித்துவந்த பிறரும் உண்ணும்படி குறையாது பொலிந்தது. சுந்தரமூர்த்திநாயனர் போசனம்பண்ணியபின் சலபானம்பண்ணி, அந்தஐயரைப்புகழ்ந்து, அவர் சமீ

பத்திலே பரிசனங்களோடு நித்திரைசெய்ய, ஐயர் பந்தருடனே மறைந்தருளினர், சுந்தரமூர்த்திவிழித்து எழுந்து ஐயரைக்காணமையால்அதிசயங்கொண்டு திருப்பதிகம் பாடி குருகாவூரை அடைந்து சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு அங்கேயிருந்தார்.

திருக்குருகாவூர்-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

இத்தனையாமாற்றையறிந்திலேனெம்பெருமான்
பித்தரேயென்றும்மைப்பேசுவார்பிறரெல்லா
முத்தினைமணிதன்னைமாணிக்கமுளைத்தெழுந்த
வித்தனேகுருகாவூர்வெள்ளடைநீயன்றே.

வளங்கனிபொழின்மல்குவயலணிந்தழகாய
விளங்கொழிகுருகாவூர்வெள்ளடையுறைவானை
யிளங்கிளையாரூரன்வனப்பகையவளப்பன்
உளங்குளிர்தமிழ்மாலைபத்தர்கட்குரையாமே.

திருச்சிற்றம்பலம்.

பின் அவ்விடத்தைவிட்டுப்போய், திருக்கழிப்பாலையைவணங்கிசிதம்பரத்தை அடைந்து, சபாநாயகரைத் தரிசனஞ்செய்துகொண்டு, திருத்தினைநகரைவணங்கி, திருநாவலூரை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, சிலநாள் அங்கிருந்து அடியார்கள்சூழ திருமுன்பெய்தி உயிரினுஞ்சிறந்த பரமசிவனது அருளைத்துதித்து கோவலனான்முகனென்றெடுத்துத் திருப்பதிகம்பாடியருளினர்.

திருவெண்ணெய்நல்லூருந்திருநாவலூரும்-ப -நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

கோவலனான்முகன்வானவர்கோனுங்குற்றேவல்செய்ய
மேவலர்முப்புரந்தீயெழுவித்தவனோரம்பினு
லேவலனார்வெண்ணெய்நல்லூரில்வைத்தென்னையாளுங்கொண்ட
நாவலனார்க்கிடமாவதுநந்திருநாவலூரே.

நாதனுக்கூர்நமனுக்கூர்நரசிங்கமுனையரையன்
ஆதரித்தீசனுக்காட்செயுமூரணிநாவலூரென்
றோதநற்றக்கவனன்றொண்டனாரூரனுரைததமிழ்
காதலித்துங்கற்றுங்கேட்பவர்தம்வினைகட்டறுமே.

திருச்சிற்றம்பலம்.

பின் தொண்டைமண்டலத்திலே இருக்கின்ற ஸ்தலங்களுக்குயாத்திரைசெய்யவிரும்பி, அவ்விடத்தினின்றும் புறப்பட்டு திருக்கழுக்குன்றிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம்பாடியருளினர்.

திருக்கழுக்குன்றம்-பண்-நட்டபாஷை.

திருச்சிற்றம்பலம்.

கொன்றுசெய்தகொடுமையாற்பலசொல்லவே
நின்றபாவம்வினைகடாம்பலநீங்கவே
சென்றுசென்றுதொழுமின்றேவர்பிரானிடங்
கன்றினோடுபிடிசூழ்தண்கழுக்குன்றமே.

பல்லில்வெள்ளைத்தலையன்றான்பயிலும்மிடங்
கல்லில்வெள்ளையருவித்தண்கழுக்குன்றினை
மல்லின்மல்குதிரடோளூரன்வன்வனப்பினாற்
சொல்லல்சொல்லித்தொழுவாரைத்தொழுமின்களே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின் திருக்கச்சூரிலேபோய்க் கோயிலுள்ளே பிரவேசித்துச் சுவாமியைவணங்கிக்கொண்டு, புறத்திலேவந்து, அமுது செய்யும்பொழுதாகியும், பாகம்பண்ணிக்கொடுக்கும் பரிசனங்கள் வாராமையால் மிகுந்தபசிவருத்தத்தினாலே பதிற்புறத்தில் இருந்தார் அப்பொழுது பரமசிவனவர் ஒருபிராமணராகி ஒருவெற்றோட்டை ஏந்திக்கொண்டு அங்கே சென்று, அவருடைய முகத்தைப்பார்த்து, நீர்பசியினால் மிகவருந்தி இளைப்புற்றிருக்கின்றீர் நான் இப்பொழுது உமக்கு அன்னம்யாசகம்பண்ணிக்கொண்டுவருவேன் நீர் அப்புறம்போகாமல் சிறிதுபொழுது இங்கே இரும்என்று சொல்லி அந்தத்திருக்கச்சூரிலே இருக்கின்ற அக்கிராரங்களிலேபோய் அன்னமுங்கறியும் யாசகம்பண்ணிக்கொண்டு சுந்தரமூர்த்திசுவாமிகளிடத்திற்சென்று, பசிதீர இதை உண்ணும்என்று சொல்லிக்கொடுக்க நாயனர் அவ்வையருடைய அன்பைப்புகழ்ந்து மிகுந்தமகிழ்ச்சியோடு அஞ்சலிசெய்துவாங்கி தம்மோடுவந்த தொண்டர்களுடனே அமுதுசெய்தார் உடனே அவ்வையர் மறைந்தருளினர் அதுகண்டு சுந்தரமூர்த்திசுவாமிகள் அவர் பரமசிவனென்று உணர்ந்து இந்தப்பெரும்பகலிலே திருவடிவருந்தத் திருமேனிகொண்டு அடியேன்பொருட்டெழுந்தருளிவந்த பெருங்கருணை இருந்தபடி என்னஎன்று மனங்கசிந்துருகி உரோமாஞ்சிதங்கொள்ள கண்ணில்நின்று ஆனந்த அருவிசொரிய திருப்பதிகம் பாடியருளினர்.

திருக்கச்சூர் ஆலக்கோவில்-பண்-கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

முதுவாயோரிகதறமுதுகாட்டெரிகொண்டாடல்முயல்வானே
மதுவார்கொன்றைப்புதுவீசூடுமலையான்மகடன்மணவாளா
கதுவாய்த்தலையிற்பலிநீகொள்ளக்கண்டாலடியார்காவலரே
யதுவேயாமறிதுவோகச்சூராலக்கோயிலம்மானே.

அன்னமன்னும்வயல்சூழ்கச்சூராலக்கோயிலம்மானை
யுன்னமுன்னுமனத்தாரூரனாரூரன்பேர்முடிவைத்த
மன்னுபுலவன்வயல்நாவலர்கோன்செஞ்சொல்நாவன்வன்றொண்டன்
பன்னுதமிழ்நூல்மாலைவல்லாரவரெந்தலைமேற்பயில்வாரே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின்பு சுவாமியை வணங்கிக்கொண்டு அவ்விடத்தை விட்டு நீங்கி காஞ்சீபுரத்தைச் சமீபித்து அவ்விடத்தில்நின்று தமதுமகிமையையும் வரவையுங் கேள்வியுற்று வந்து எதிர்கொண்டு வணங்கிய பத்தர்களைத் தாமும் வணங்கி அவர்களோடு நகரத்தினுள்ளே சென்று திருவேகாம்பரத்தை அடைந்து உலகமாதாவாகிய காமாட்சியம்மையால் அருச்சிக்கப்பட்ட ஏகாம்பரநாதசுவாமியைத் தரிசித்து பரவசமாய் அடியற்றமரம்போல விழுந்து எழுந்துவிம்மி ஆனந்தபாஷ்பஞ்சொரிய அஞ்சலியஸ்தராகிமெய்யன்பினோடு திருப்பதிகம்பாடி புறத்தேபோந்து திருத்தொண்டர்களோடு அக்காஞ்சீபுரத்திலே சிலநாள்வசித்தார். வசிக்குநாட்களிலே அந்நகரத்தில் இருக்கின்ற காமக்கோட்டத்திற் சென்று அங்கிருக்கும் காமாட்சியம்மையைவணங்கி திருமேற்றளியை அடைந்து சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம்பாடியருளினர்.

திருவேகம்பந் திருமேற்றளி-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நொந்தாவொண்சுடரே நுனையேநினைந்திருந்தேன்
வந்தாய்போயறியாய்மனமேபுகுந்துநின்ற
சித்தாயெந்தைபிரான்றிருமேற்றளியுறையு
மெந்தாயுன்னையல்லாலினியேத்தமாட்டேனே.

பாரூர்பல்லவனூர்மதிற்காஞ்சிமாநகர்வாய்ச்
சீரூரும்புறவிற்றிருமேற்றளிச்சிவனை
யாரூரனடியானடித்தொண்டனாரூரன்சொன்ன
சீரூர்பாடவல்லார்சிவலோகஞ்சேர்வாரே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின்பு ஓணகாந்தன்றளியையடைந்து ஒப்பற்றபரமசிவத்தை வணங்கித் தன்னைத் தோழமைகொண்ட அடிமைத்திறத்தைப் பேசிப் பொன்வேண்டி நெய்யும்பாலுமெனவெடுத்து அழகிய திருப்பதிகம்பாடியருளினர்.

திருஓணகாந்தன்றளி-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நெய்யும்பாலுந்தயிருங்கொண்டுநித்தம்பூசனைசெய்யலுற்றார்
கையிலொன்றுங்காணமில்லைக்கழலடிதொழுதுய்யினல்லா
லைவர்கொண்டிங்காட்டவாடியாழ்குழிப்பட்டழுந்துவேனுக்
குய்யுமாறென்றருளிச்செய்யீரோணகாந்தன்றளியுளீரே.

ஓவணமேலெருதொன்றேறுமோணகாந்தன்றளியுளார்தா
மாவணஞ்செய்தாளுங்கொண்டவரைதுகிலொடுபட்டுவீக்கி
கோவணமேற்கொண்டவேடங்கோவையாகவாரூரன்சொன்ன
பாவணத்தமிழ்பத்தும்வல்லார்க்குப்பறையுந்தாஞ்செய்தபாவநானே.

திருச்சிற்றம்பலம்.

ஓணகாந்தேசுரற்மேற் பதிகம்பாடிப் பொன்பெற்று அனேகதங்காபதத்தையடைந்து ஆலயத்துட்சென்று சுவாமியைவணங்கி தேனெய்புரிந்தென்றெடுத்துத் திருப்பதிகம்பாடியருளினர்.

திருக்கச்சியனேகதங்காபதம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தேனெய்புரிந்துழல்செஞ்சடையெம்பெருமானதிடந்திகழைங்கணையக்
கோனையெரித்தெரியாடியிடங்குலவானதிடங்குறையாமறையா
மானையிடத்ததோர்கையனிடம்மதமாறுபடப்பொழியும்மலைபோல்
யானையுரித்தபிரானதிடங்கலிக்கச்சியனேகதங்காபதமே.

வீடுபெறப்பலவூழிகணின்றுநினைக்குமிடம்வினைதீருமிடம்
பீடுபெறப்பெரியோர்திடங்கொண்டுமேவினர்தங்களைக்காக்குமிடம்
பாடுமிடத்தடியான்புகழூரனுரைத்தவிம்மாலைகள்பத்தும்வல்லார்
கூடுமிடஞ்சிவலோகனிடங்கலிக்கச்சியனேகதங்காபதமே.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திசுவாமிகள் காபதேசுரரைப்பாடி யங்கிருந்து பலதிருப்பதிகளையும் தரிசிக்கும்விருப்பால் சென்று திருப்பனங்காட்டூர்வந்து துன்பத்தையறுக்கும் அருமருந்தைவணங்கி, விடையின்மேல்வருவாரெனவெடுத்துத் திருப்பதிகம்பாடியருளினர்.

திருவன்பார்த்தான் பனங்காட்டூர்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

விடையின்மேல்வருவானைவேதத்தின்பொருளானை
யடையிலன்புடையானையாவர்க்குமறியொண்ணு
மடையில்வாளைகள்பாயும்வன்பார்த்தான்பனங்காட்டூர்ச்
சடையிற்கங்கைதரித்தானைச்சாராதார்சார்வென்னே.

பாரூரும்பனங்காட்டூர்ப்பவளத்தின்படியானைச்
சீரூருந்திருவாரூர்ச்சிவன்பேர்சென்னியில்வைத்த
வாரூரனடித்தொண்டன்னடியன்சொல்லடிநாய்சொல்
லூரூரனுரைசெய்வாருயர்வானத்துயர்வாரே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின் திருமாற்பேறு திருவல்லம் முதலிய ஸ்தலங்களுக்குப் போய் வணங்கிக்கொண்டு திருக்காளத்திமலையை அடைந்து, அதனைப் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்து மேலே ஏறி, காளத்தியப்பர் சந்நிதானத்திற்சென்று, அவரைவணங்கி மனமகிழ்ந்து துதித்து, செண்டாடும் விடையாய் என்றெடுத்துத் திருப்பதிகம்பாடியருளினர்.

திருக்காளத்தி - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

செண்டாடும்விடையாய்சிவனேயென்செழுஞ்சுடரே
வண்டாடுங்குழலாளுமைபாகமகிழ்ந்தவனே
கண்டார்காதலிக்குங்கணநாதனெங்காளத்தியா
யண்டாவுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே.

காராரும்பொழில்சூழ்கணநாதனெங்காளத்தியுள்
ஆராவின்னமுதையணிநாவலாரூரன்சொன்ன
சீரூர்செந்தமிழ்கள்செப்புவார்வினையாயினபோய்ப்
பேராவிண்ணுலகம்பெறுவார்பிழைப்பொன்றிலரே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு அவருக்கு வலப்பக்கத்தில்நிற்கின்ற அன்பிலே தமக்கு வேறொப்பிலாத கண்ணப்ப நாயனாருடைய திருவடித்தாமரைகளை வணங்கி, கீழே இறங்கி, திருத்தொண்டர்களுடனே சிலநாள் அந்தஸ்தலத்தில்இருந்தார் இருக்கும்நாட்களிலே உத்தரபூமியில் இருக்கின்ற ஸ்ரீசைலம் திருக்கேதாரமலை முதலாகிய சிவஸ்தலங்களை அங்கிருந்தேவணங்கி அவைகளின்மேல் திருப்பதிகம்பாடியருளினார்.

ஸ்ரீபர்ப்பதம்.பண்-நட்டபாஷை,

திருச்சிற்றம்பலம்.

மானுமரையினமுமயிலினமுங்கலந்தெங்குந்
தாமேமிகமேய்ந்து தடஞ்சுனைநீர்களைப்பருகிப்
பூமாமரமுரிஞ்சிப்பொழிலூடேசென்றுபுக்குத்
தேமாம்பொழினீழற்றுயில்சீபர்ப்பதமலையே.

நல்லாரவர்பலர்வாழ்திருவயனூவலவூரன்
செல்லனுறவரியசிவன்சீர்ப்பதமலையை
யல்லலவைதீரச்சொன்னதமிழமாலைகள்வல்லா
ரொல்லைச்செலவுயர்வானகமாண்டங்கிருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கேதாரம்-பண்-நட்டபாஷை.

திருச்சிற்றம்பலம்.

வாழ்வாவதுமாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவதுபிறவிக்கடல்பசிநோய்செய்தபறிதான்
றாழாதறஞ்செய்ம்மின்றடங்கண்ணான்மலரோனுங்
கீழ்மேலுதநின்றான்றிருக்கேதாரமெனீரே.

நாவின்மிசையரையன்னொடுதமிழ்ஞானசம்பந்தன்
யாவர்சிவனடியார்களுக்கடியானடித்தொண்டன்
தேவன்றிருக்கேதாரத்தையூரன்னுரைசெய்த
பாவின்றமிழ்வல்லார்பரலோகத்திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின் அவ்விடத்தைவிட்டுநீங்கி சமுத்திரதீரத்தில் இருக்கின்ற திருவொற்றியூரிற் சென்று திருப்பதிகம்பாடி, திரிகாலங்களிலும் சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு அங்கேயிருந்தார்.

திருஒற்றியூர் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பாட்டும்பாடிப்பரவித்திரிவா,, ரீட்டும்வினைகடீர்ப்பார்கோயில்
காட்டுங்கலமுந்திமிலுங்கரைக்கே,,யோட்டுந்திரைவாயொற்றியூரே

ஒற்றியூருமரவும்பிறையும்,, பற்றியூரும்பவளச்சடையா
னொற்றியூர்மேலூரனுரைத்த,, கற்றுப்பாடக்கழியும்வினையே.

திருச்சிற்றம்பலம்.

இதற்குமுன் கைலாசகிரியிலே சுந்தரமூர்த்திசுவாமிகள்மேற்ஆசை வைத்த சேடியர்கள் இருவரில் அனிந்திதையார் என்பவர் நாயிறு என்னும்ஊரிலே இருக்கும் வேளாளரிற் சிறந்தோங்கிய நாயிறுகிழவர் என்பவருக்குப் புத்திரியாராய்த் திருவவதாரஞ்செய்து சங்கிலியார்என்னும் பெயரைப்பெற்று உமாதேவியாருடைய திருவடிகளிலேமிகுந்த பத்தியுடையவராய் இருந்தார் அவர் பெதும்பைப்பருவ மடைந்ததுகண்டு, தந்தையாராகிய நாயிறுகிழவர் தம்முடைய மனைவியாரைநோக்கி நம்முடையபுத்திரி நம்முடையவம்சத்தில் ஸ்திரீகளெல்லாரிலும்பார்க்கஅதிகசௌந்தரியமும் நற்குணமும் உடையவளாய் இருக்கின்றாள் அவளுக்குவிவாகஞ்செய்துகொடுக்குங் காலமாயிற்று, இதற்கு என்னசெய்வோம் என்றுசொல்ல மனைவியார் அவளுடைய சௌந்தரியத்துக்கும் குணத்துக்கும் இசைய ஒருபுருஷனைத்தெரிந்து விவாகஞ்செய்துகொடும் என்றார். அதைக் கேட்டுக்கொண்டிருந்த சங்கிலியார், இவர்கள் பேசும்வார்த்தை எனக்குப் பொருந்தும் வார்த்தையன்று. நானோ நமதுகடவுளாகிய பரமசிவனுடைய திருவருளைப்பெற்ற ஒருவருக்குமனைவியாதற்கு உரியேன் இப்படியன்றி மற்றெப்படிவிளையுமோ தெரியேன் என்று நினைந்து அச்சங்கொண்டு அறிவுமயங்கி மிகச்சோகித்து நிலத்திலேவிழுந்தார் சமீபத்தில்நின்ற தந்தையாரும் தாயாரும் அதைக்கண்டு பதை பதைத்து அவரைஎடுத்து ஏங்கியமனத்தையுடையவர்களாகி, இவளுக்கு நிகழ்ந்தது யாதோ என்றுபயந்து, தாங்கிப் பனிநீர்தெளித்துத் தடவி அவருக்குச் சோகம் நீங்கியபின், அவரைப்பார்த்து மகளே உனக்குநிகழ்ந்ததுயாது சொல் என்றுகேட்க, சங்கிலியார், இப்பொழுது என்னைக்குறித்து நீங்கள்பேசியது எனக்கு இசையாது நானோபரமசிவனது திருவருளைப்பெற்ற ஒருவருக்கு மனைவியாதற்கு உரியேன் நான் இனிமேல் திருவொற்றியூரை அடைந்து சிவனது திருவருளிற்செல்லுவேன் என்றார் அதைக் கேட்ட தந்தைதாயாரிருவரும் சோகமும் அச்சமும் அதிசயமும் உடையவர்களாகி அந்தச்சங்கிலியார் சொல்லியவார்த்தையை மறைத்து ஒழுகினார்கள். ஒழுகும்நாட்களில், அவர்களுடைய குலத்துக்கு ஒப்பாகிய

குலத்தில் உள்ள ஒருவன், நிகழ்ந்த அந்தச்சங்கதியை அறியாதவனாகி, சங்கிலியார்மேல் விருப்பங்கொண்டு அவருடைய தந்தையாரிடத்திலே கலியாணம் பேசும்பொருட்டுச் சிலரை அனுப்பினான். அனுப்பப்பட்ட அவர்கள் அத்தந்தையாரிடத்திற் சென்றுபேச, அதுகேட்டுத் தந்தையார் நிகழ்ந்த சங்கதியைச் சொல்லுதல் தகுதியன்று என்று நினைந்து, வேறோர் உபாயத்தினால் அனுப்பிவிட்டார் அவர்கள் திரும்பிப்போய்ச் சேர்ந்தவுடனே, அவர்களை அனுப்பினவன் அவர்களோடு இறந்துபோயினான். அதைச் சங்கிலியாருடைய தந்தைதாயார் கேள்வியுற்று மனமயங்கி, உய்யவேண்டும் என்கின்ற நினைவுடையவர்கள் சங்கிலியார் பட்சத்திலே பேசத்தகாத வார்த்தையைப்பேசார்கள் என்பதை உலகம் அறியும்படிசெய்த திருவருளைக்கண்டு, அதனை யாவர்க்கும் உள்ளபடிசொல்லிமிகப்பயந்து, இனிநாங்கள் இவரெண்ணத்தின்படியே இவரைச்சிவபுண்ணியஞ்செய்துகொண்டு இருக்கும்பொருட்டுத் திருவொற்றியூரிலே கொண்டுபோய் விடவேண்டுமென்று துணிந்து, தங்கள் ஞாதிகளோடும் சங்கிலியாரைப்பார்த்து, நீர்திருவொற்றியூரை அடைந்து கன்னிமாடத்தில் இருந்து பரமசிவனுடைய திருவருளை முன்னிட்டுத் தவஞ்செய்யும் என்றுசொல்லி, மிகுந்த செல்வத்தோடும் அவரைத் திருவொற்றியூருக்குக் கொண்டுபோய், கோயிலிலே பிரவேசித்து, சுவாமியை வணங்கிக் கொண்டு சமீபத்திலே ஒரு கன்னிமாடஞ்செய்வித்து அதிலே அவரை இருத்தி, அவருக்குவேண்டும்திரவியங்களையும் அமைத்து, அவரைவணங்கிநின்று நீர் இந்தக்கன்னிமாடத்திலே பரமசிவனுக்குத்திருத்தொண்டு செய்துகொண்டு இரும் என்றுசொல்லி, அவரைப்பிரிதலினாலே இரண்டு கண்ணில் நின்றும் சோகபாஷ்பஞ்சொரிய, அனுமதி பெற்றுக்கொண்டு தங்கள் ஊருக்குத்திரும்பிவிட்டார்கள் சங்கிலியார் அந்தக்கன்னிமாடத்தில் இருந்து, தினந்தோறும் திரிகாலங்களினும் கோயிலிலேபோய், சுவாமிதரிசனஞ்செய்து பூக்கட்டு மண்டபத்திலே திரை இட்டிருக்கின்ற ஓரிடத்திற்போயிருந்து, புஷ்பமாலைகட்டி சுவாமிக்குச் சாத்தும்படிகொடுத்துக்கொண்டு வருவார்.

இப்படி நிகழுங்காலத்திலே, ஒருநாள் சுந்தரமூர்த்திசுவாமிகள்கோயிலிலேபோய்ச் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு புறப்பட்டு, அடியார்கள்செய்கின்ற பலவகைத்திருத்தொண்டைப் பார்ப்பவராகி, புஷ்பமண்டபத்தினுள்ளே போனார் போனபொழுது முன்போலத் திரையைநீக்கிப் பரமசிவனுக்குச்சாத்தும்படி தாம்கட்டிய பூமாலைகளைக் கொடுத்துவிட்டு மின்போல மறைந்த சங்கிலியாரை விதிகூட்டக்கண்டு அவர்மேல்ஆசைகொண்டு புறத்திலேபோய் புஷ்பமண்டபத்தினுள்ளே ஒருபக்கத்திலே திரைக்குள்ளேநின்று ஒருபெண் என்னுடைய மனசைக்கவர்ந்துகொண்டாள் அவள்யார் என்றார் சமீபத்திலேநின்றவர்கள் அவர்பரமசிவனுக்கு மிகுந்தபத்தியோடு திருத்தொண்டு செய்கின்ற கன்னிகையாகிய சங்கிலி

யார் என்றார்கள். அதைக்கேட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் கோயிலினு ள்ளேபோய் சுவாமியை வணங்கிநின்று, சங்கிலியாரைத் தமக்குத் தந்த ருளும்படி பிரார்த்தித்துக்கொண்டு கோயிலின் புறத்திலேபோய் ஓரிட த்திலேயிருக்க சூரியன் அஸ்தமயனமாயிற்று, அப்பொழுது பரமசிவன் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்திலேபோய், இவ்வுலகத்தில் உள்ளவர்கள் யாவராலுஞ் செய்யப்படுதல் கூடாதபெருந்தவத்தைச்செய்கின்ற உத்த மியாகிய சங்கிலியை உனக்குத்தருவோம். நீகொண்ட கவலையை ஒழி யென்று திருவாய்மலர்ந்தருளி, அத்தயாமத்திலே கன்னிமாடத்திலே நித்திரைசெய்கின்ற சங்கிலியாருக்குச் சொர்ப்பனத்திலே தோன்றினார் தோன்றியபொழுது சங்கிலியார் பரவசமாய் விழுந்து நமஸ்கரித்து எழுந்துநின்று சுவாமி! அடியேன் உய்யும்படி தேவரீர் அடியேனிடத்தி லே எழுந்தருளி வரும்பொருட்டுப் பூர்வசன்மத்திலே என்னதவஞ் செ ய்தேன், என்றுசொல்ல, பரமசிவன் சங்கிலியே! நமமேலேமிகுந்த பத்தி யுடையவனும், திருவெண்ணெய் நல்லூரிலே சமஸ்தரும் அறியும்படி நம்மாலே தடுத்தாட் கொள்ளப்பட்டவனும், நமக்குத்தோழனும் ஆகிய சுந்தரன் தனக்கு மனைவியாக உன்னைத் தரும்பொருட்டு என்னைப்பிரார் த்தித்தான் நீமகிழ்ச்சியோடும் அதற்கு உடன்படு என்று சொல்லியருளி னார். அதற்குச்சங்கிலியார் சுவாமீ! அடியேன் தேவரீருடைய ஆஞ்ஞை யைத் தலைமேற்கொண்டேன். தேவரீர் சொல்லியருளிய நாயனாருக்கே மனைவியாதற்கு உரியேன். ஆயின், அவர் திருவாரூரினிடத்தே மிகுந்த சந்தோஷத்தோடு வசிக்கின்றவர் என்பதை தேவரீர் திருவுளம்கொண் டருளும் என்றார். அதுகேட்ட கடவுள், பெண்ணே அந்தச்சுந்தரன் உன்னைப்பிரிந்துபோகேன் என்று ஒருசபதம்செய்து தருவான் என்று சொல்லியருளி, சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்திற்சென்று, நாம் சங்கிலி யிடத்திலேபோய் உன்னெண்ணத்தைத் தெரிவித்தோம். நான் உன்னை ப்பிரிந்து செல்லேன் என்று நீஅவளுக்குச் சபதஞ்செய்து கொடுத்தால் அவள் உடன்படுவாள். இனிஉனக்கு நாம் என்னசெய்யவேண்டும்என்று அருளிச்செய்ய, சுந்தரமூர்த்திசுவாமிகள் இக்கடவுளுடைய பிறதலங் களையும்சென்று வணங்கவிரும்புகின்ற அடியேனுக்கு இதுவிலக்காகும் என்றுநினைந்து, அவரை வணங்கி சுவாமீ சங்கிலிக்கு நான் உன்னைப்பிரி யேன்என்று சபதஞ்செய்து கொடுக்கும்பொருட்டுஅடியேன் அவளோடு தேவரீருடைய ஆலயத்துக்குவந்தால், அப்பொழுது தேவரீர் அவ்வால யத்தை விட்டுத் திருமகிழின்கீழ் இருந்தருளவேண்டும் என்று பிரார்த் தித்தார். அதற்குக்கடவுள் இசைந்தருளி, சங்கிலியாரிடத்திலே முன் போலப்போய் பெண்ணே! சுந்தரன் உனக்குச்சபதஞ்செய்து தருதற்கு உடன்பட்டிருக்கிறான். அவன் நம்முடைய ஆலயத்திலே சபதஞ்செய்து தருதற்குவந்தால், நீ அதற்கு உடன்படாமல் மகிழின்கீழே சபதஞ்செ ய்து தரும்படிகேள் என்றுசொல்லி மறைந்தருளினார். சங்கிலியார் விழி

த்தெழுந்து அதிசயித்து, அவ்விரவிலே பரமசிவனுடைய திருவருளை நினைந்துநினைந்து நித்திரை செய்யாதவராகி, சமீபத்திலே நித்திரைசெய்கின்ற தம்முடைய சேடியர்களை எழுப்பி, தமக்குக் கனவிலே பரமசிவன் அருளிச்செய்த எல்லாவற்றையும் அவர்களுக்குத்தெரிவிக்க, அவர்கள் அச்சம் அதிசயம் ஆனந்தம் மூன்றும் அடைந்து சங்கிலியாரை வணங்கினார்கள். திருப்பள்ளி எழுச்சிக்குப் புஷ்பந்தொடுக்கும்பொழுது ஆன்மைகண்டு, சங்கிலியார் சேடியர்களோடு கோயிலுக்குச்செல்ல, அவருக்குச் சபதஞ்செய்து கொடுக்கும்பொருட்டு, அதற்குமுன் அவ்விடத்தில் வந்து அவருடையவரவை எதிர்பார்த்துக்கொண்டுநின்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமக்கு எதிரேவந்த அவர்சமீபத்திற்சென்று, தமக்குப்பரமசிவன் அருளிச்செய்ததைச் சொன்னார். அதற்குச் சங்கிலியார் எதிர்வார்த்தை ஒன்றும் சொல்லாமல் நாணங்கொண்டு சேடியர்களோடுங்கோயிலினுள்ளேபுகுந்தார். சுந்தரமூர்த்திசுவாமிகள் அவர் பின்னேபோய் பெண்ணே! நான் உம்மைப்பிரியேன் என்று சபதஞ் செய்யும்பொருட்டுச் சுவாமி சந்நிதானத்துக்குவாரும் என்றுசொல்ல, சங்கிலியார்கண்ட கனவைக் கேட்டறிந்த சேடியர்கள் சுவாமீ இதன்பொருட்டுத் தேவரீர் சிவசந்நிதானத்திலே சபதஞ்செய்வது தகாது என்றார்கள். அப்பொழுதுசுந்தரமூர்த்தி சுவாமிகள் பரமசிவனுடை செய்கையை அறியாமல், பெண்களே நான் வேறெங்கே சபதஞ்செய்துதரவேண்டும் என்றுகேட்க, சேடியர்கள் மகிழின்கீழே சபதஞ்செய்துகொடும் என்றார்கள் அதைக்கேட்டநாயனார் மனம்மருண்டு, இவர்கள் சொல்லியதை மறுக்கில், விவாகந் தவறினுந் தவறும் ஆதலால் இதற்கு உடன்படவேண்டும் என்றுதுணிந்து அப்படியேசெய்யலாம், வாருங்கள் என்றுசொல்லி, அவர்களோடு மகிழின் கீழேபோய்ச்சேர்ந்து சங்கிலியார் காணும்படி அந்த மகிழை மூன்றுதரம் வலஞ்செய்து, உன்னைநான்பிரியேன் என்று சபதஞ்செய்து கொடுத்தார் அதுகண்டு சங்கிலியார் மனங்கலங்கி கடவுளுடைய ஆஞ்ஞையினாலே பாவியேன் இதைக்கண்டேனேஎன்று துக்கித்துக்கொண்டு ஒருபக்கத்திலே மறைந்துநின்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சபத முடித்தபின், ஆலயத்தினுள்ளேபோய்க் கடவுளை வணங்கி ஸ்தோத்திரம் செய்துகொண்டு திரும்பிவிட்டார். அதற்குப்பின், சங்கிலியார் புஷ்ப மண்டபத்திலேபோய்த் தம்முடைய பணியைமுடித்து, பரமசிவன் தமக்கு அருள்செய்ததை நினைந்து, அவரை வணங்கிக்கொண்டு விடியும்பொழுது கன்னிமாடத்துக்குத் திரும்பிவிட்டார் அவ்விரவிற்றானே பரமசிவன திருவொற்றியூரில் இருக்கின்றதம்முடைய தொண்டர்களுக்குச் சொர்ப்பனத்திலேதோன்றி, நம்முடைய அடியானாகிய சுந்தரனுக்குச் சங்கிலியென்னும் கன்னிகையைவிவாகஞ்செய்து கொடுங்கள் என்று ஆஞ்ஞாபித்துமறைந்தருளினார் அவர்கள் அவ்வாஞ்ஞையைத் தலைமேற்கொண்டு, மற்றநாளில் அவ்வூரில் இருக்கின்ற சமஸ்த சனங்களோடுங் கூடி மிகுந்த மகிழ்ச்சியோடும் மகா அலங்காரத்தோடும் சங்கிலியாரைச் சுந்

தரமூர்த்திக்கு விவாகஞ்செய்துகொடுத்தார்கள். விவாகஞ்செய்த சுந்தரமூர்த்திசுவாமிகள் சங்கிலியாரோடுகூடி அவ்வூரிலே வாழ்ந்திருந்தார். இருக்கும் நாளிலே ஒருநாள் திருவாரூரிலிருக்கின்ற வீதிவிடங்கப்பெருமாளுடைய வசந்தோற்சவகாலம் சமீபித்ததை அறிந்து, வன்மீகநாதரை இவ்வளவுகாலமும் மறைந்திருந்தேனே என்று துக்கித்து, அவர்மேலே திருப்பதிகம்பாடியருளினார்.

திருவாரூர்-பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

பத்திமையுமடிமையையுங்கைவிடுவான்பாவியேன்
பொத்தினநோயதுவிதனைப்பொருளறிந்தேன்போய்த்தொழுவேன்
முத்தினைமாமணிதன்னைவயிரத்தைமூர்க்கனேன்
எத்தனைநாள்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே.

பேரூருமதகரியினுரியானைப்பெரியவர்தஞ்
சீரூருந்திருவாரூர்ச்சிவனடியேதிறம்விரும்பி
யாரூரனடித்தொண்டனடியன்சொலகலிடத்தில்
ஆரூரனிவைவல்லாருலகவர்க்குமேலாரே.

திருச்சிற்றம்பலம்.

பின்னொருநாளிலே அவரைமிகநினைந்து, திருவாரூருக்குப் போகக் கருதி, ஆலயத்திலேபுகுந்து, சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு, திருவொற்றியூரை நீங்கினார். நீங்கியபொழுது சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு அவர்சபதந் தவறினமையால் இரண்டு கண்களும் மறைந்தன. அப்பொழுதுநாயனார் திகைத்துநெடிதுயிர்த்து, சபதந்தவறினமையால் எனக்கு இது நிகழ்ந்தது என்று நினைந்து, இந்தக் கொடுந்துயரத்தை நீக்கும்பொருட்டு நமது கடவுளைப்பாடுவேன், என்று துணிந்து அழுக்கு மெய்கொடெடென்றெடுத்துத் திருப்பதிகம் பாடியருளினார்.

திருவொற்றியூர்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அழுக்குமெய்கொடுன்றிருவடியடைந்தேனதுவுநானபடப்பாலதொன்றுனற்
பிழுக்கைவாரியும்பால்கொள்வரடிகேள்பிழைப்பனுகிலுந்திருவடிபிழையேன்
வழுக்கிவீழினுந்திருப்பெயரல்லால்மற்றுநானறியேன்மறுமாற்றம்
ஒழுக்கவென்கணுக்கொருமருந்துரையாயொற்றியூரெனுமூருறைவானே.

ஓதம்வந்துலவுங்கரைதன்மேலொற்றியூருறைசெல்வனைநாளு
ஞாலந்தான்பரவப்படுகின்றநான்மறையங்கமோதியநாவன்
சீலந்தான்பெரிதும்மிகவல்லசிறுவன்வன்றொண்டனூரனுரைத்த
பாடல்பத்திவைவல்லவர்தாம்போய்ப்பரகதிதிண்ணநண்ணுவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிகம்பாடியும், கடவுள் அத்துயரத்தை நீக்கினரில்லை. ஆயினும் திருவாரூருக்குச் செல்லவேண்டுமென்கிற பேரவாவினால் சிலர்முன்னே வழிகாட்டிக்கொண்டுசெல்ல, திருமுல்லைவாயிலுக்குப்போய்,சுவாமியைவணங்கித் திருப்பதிகம் பாடியருளினர்.

திருவடமுல்லைவாயில்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

விண்பணிந்தேத்தும்வேதியர்மாதர்வெருவிடவேழமொன்றுரித்தாய்
செண்பகச்சோலைசூழ்திருமுல்லைவாயிலாய்தேவர்தம்மரசே
தண்பொழிலொற்றிமாநகருடையாய்சங்கிலிக்காகவென்கண்கொண்ட
பண்பநின்னடியேன் படுந்துயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே.

விரைதருமலர்மேலயனெடுமாலும்வெருவிடநீண்டவெம்மானைத்
திரைதருபுனல்சூழ்திருமுல்லைவாயிற்செல்வனைநாவலாரூர
னுரைதருமாலையோரைஞ்சினோடைஞ்சுமுள்குளிர்ந்தேத்தவல்லார்க
ணரைதிரைமூப்புமடலையுமின்றிநண்ணுவர்விண்ணவர்க்கரைசே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின்பு தொண்டமானுக்குகிருபைசெய்தருளும் பழமையான புகழையுடைய திருமுல்லைவாயிலின் கண் வாழாநின்ற பரமசிவத்தை யான்கொண்ட கொடிய துயரத்தை நீக்குவாயெனத் துதித்து சூட்டிய காதலின்படி வழிகொண்டு வருபவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள்சோலைகள் சூழ்ந்து மாடமாளிகைகள்நிறைந்த வெண்பாக்கத்தை யடைந்து திருப்பதிகம் பாடியருளினர்.

திருவெண்பாக்கம்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மான்றிகழுஞ்சங்கிலியைத்தந்துவருபயன்களெல்லாந்
தோன்றவருள்செய்தளித்தாயென்றுரைக்கவுலகமெல்லா
மீன்றவனேவெண்கோயிலிங்கிருந்தாயோவென்ன
வூன்றுவதோர்கோலருளியுளோம்போகீரென்றானே.

பிழையுளனபொறுத்திடுவரென்றடியேன்பிழைத்தக்காற்
பழியதனைப்பாராதேபடலமென்கண்மறைப்பித்தாய்
குழைவிரவுவடிகாதாகோயிலுளாயேயென்ன
வுழையுடையானுள்ளிருந்துளோம்போகீரென்றானே.

ஏராரும்பொழினிலவுவெண்பாக்கமிடங்கொண்ட
காராருமிடற்றானைக்காதலித்திட்டன்பினொடுஞ்
சீராருந்திருவாரூர்ச்சிவன்பேர்சென்னியில்வைத்த
வாரூரன்றமிழ்வல்லார்க்கடையாவல்வினைதானே.

திருச்சிற்றம்பலம்.

அங்ஙனம் ஊன்றுகோல்பெற்று, பழையனூரிலேபோய், காரைக்காலம்மையார் தலையாலே பிரதக்ஷிணஞ்செய்த திருவாலங்காட்டுக்குச் சமீபத்திலே நின்று அதனைவணங்கித் திருப்பதிகம் பாடியருளினார்,

திருவாலங்காடு - பண் - பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

முத்தாமுத்திதரவல்லமுகிழ்மென்முலையாளுமைபங்கா
சித்தாசித்தித்திறங்காட்டுஞ்சிவனேதேவர்சிங்கமே
பத்தாபத்தர்பலர்போற்றும்பரமாபழையனூர்மேய
அத்தாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே.

பத்தர்சித்தர்பலரேத்தும்பரமன்பழையனூர்மேய
அத்தனாலங்காடன்றனடிமைத்திறமேயன்பாகி
சித்தர்சித்தம்வைத்தபுகழ்ச்சிறுவனூரனொண்டமிழ்கள்
பத்தும்பாடியாடுவார்பரமனடியேபணிவாரே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின்பு திருவூறலிற்சென்று வணங்கி காஞ்சிபுரத்தை அடைந்தார் அங்கேமுன் காமக்கோட்டத்திற் சென்று தருமத்தைவளர்க்கின்ற பெருங்கருணையையுடைய உலகமாதாவாகிய காமாட்சியம்மையை வணங்கித் துதித்துக்கொண்டு திருவேகம்பத்தை அடைந்து ஏகாம்பரநாதசுவாமியை வணங்கி ஆதிகாலத்திலே திருப்பாற் கடலினின்று எழுந்து தேவர்களை வருத்தத்தொடங்கிய ஆலகாலவிஷத்தைத் திருமிடற்றிலடைத்து அவர்கள் அமுதுண்ண அருள்செய்த கருணாநிதியே சிறியேன்செய்த பிழையைப்பொறுத்துச் சிறியேனுக்குத் தேவரீரைத் தரிசிக்கும்பொருட்டுக் கண்ணைத் தந்தருளுமென்றுபிரார்த்தித்தார். அப்பொழுதுகடவுள் இடக்கண்ணை மாத்திரம் கொடுத்து தமதுதிருக்கோலத்தைக்காட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் கண்டுபரவசமாகி அடியற்றமரம் போலவீழ்ந்து எழுந்து திருப்பதிகம் பாடியருளினர்.

திருவேகம்பம்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

ஆலந்தானுகந்தமுதுசெய்தானையாதியையமரர்தொழுதேத்துஞ்
சீலந்தான்பெரிதும்முடையானைச்சிந்திப்பாரவர்சிந்தையுளானை
யேலவார்குழலாளுமைநங்கையென்றுமேத்திவழிபடப்பெற்ற
காலகாலனைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே.

பெற்றமேறுகந்தேறவல்லானைப்பெரியவெம்பெருமானென்றெப்போதுங்
கற்றவர்பரவப்படுவானைக்காணக்கண்ணடியேன்பெற்றதென்று
கொற்றவன்கம்பன்கூத்தனெம்மானைக்குளிர்பொழிற்றிருநாவலாரூர
னற்றமிழிவையீரைந்தும்வல்லார்நன்னெறியுலகெய்துவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின்பு அந்த ஸ்தலத்திலே சிலநாளிருந்து பின் அந்தஸ்தலத்தை நீங்கி வழியிலே தென்றிருவாரூர்புக்கெந்தைபிரானாரையென்றுகொலெய்துவதே என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினர்.

திருவாரூர்-பண்-புரநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

அந்தியுநண்பகலுமஞ்சுபதஞ்சொல்லி
முந்தியெழும்பழையவல்வினைமூடாமுன்
சிந்தைபராமரியாத்தென்றிருவாரூர்புக்
கெந்தைபிரானாரையென்றுகொலெய்துவதே.

மின்னெடுஞ்செஞ்சடையான்மேவியவாரூரை
நன்னெடுங்காதன்மையானுவலர்கோனூரன்
பன்னெடுஞ்சொன்மலர்கொண்டிட்டனபத்தும்வல்லார்
பொன்னுடைவிண்ணுலகநண்ணுவார்புண்ணியரே.

திருச்சிற்றம்பலம்.

அங்கிருந்து தொண்டமண்டலத்தைக்கடந்து திருவரமாத்தூரிற் சென்று பதிகம்பாடி திருவரத்துறையைவணங்கி கல்வாயகீ லென்னவெடுத்துத் திருப்பதிகம் பாடியருளினார்.

திருநெல்வாயில்திருஅரத்துறை-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கல்வாயகிலுங்கதிர்மாமணியுங்கலந்துந்திவருந்நிவவின்கரைமே
னெல்வாயிலரத்துறைநீடுறையுந்நிலவெண்மதிசூடியநின்மலனே
நல்வாயில்செய்தார்நடந்தாருடுத்தார்நரைத்தாரிறந்தாரென்றுநானிலத்திற் [லே
சொல்வாய்கழிக்கின்றதறிந்தடியேன்றொடர்ந்தேனுய்யப்போவதோர்சூழல்சொல்

நீரூருநெடுவயல்சூழ்புறவினெல்வாயிலரத்துறைநின்மலனைத்
தேரூர்நெடுவீதிநன்மாடமலிதென்னாவலர்கோனடித்தொண்டுபண்ணி
யாரூரனுரைத்தனநற்றமிழின்மிகுமாலையோர்பத்திவைகற்றுவல்லார்
காரூர்களிவண்டறையானைமன்னரவராகியோர்விண்முழுதாள்பவரே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின்பு அங்கிருந்து புறப்பட்டு, பலதிருப்பதிகளையும் அடைந்து கடவுளுடையதிருவடிகளை வணங்கித்துதித்துச் சோழமண்டலத்தையடைந்து, சர்ப்பாபரணராகிய கடவுள் வசிக்கும் திருவாவடுதுறையிற்சேர்ந்து அப்பதியிலுள்ளார் எதிர்கொள்ள ஆலயத்தை வலம்வந்து உள்ளேபுகுந்து ஒரு கண்ணில்லாமையைக்குறித்து மநங்கவன்றுஇங்கெனக்காருறவென்னத் திருப்பதிகம் பாடியருளினார்.

திருவாவடுதுறை-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

கங்கைவாழ்சடையாய்கணநாதகாலகாலனேகாமனுக்கனலே
பொங்குமாகடல்விடமிடற்றனேபூதநாதனேபுண்ணியாபுனிதா
செங்கண்மால்விடையாய்தெளிதேனேதீர்த்தனேதிருவாவடுதுறையு
ளங்கணாவெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே.

வெண்டலைப்பிறைகொன்றையுமரவும்வேரிமத்தமும்விரவிமுன்முடித்த
விண்டைமாமலர்ச்செஞ்சடையானையீசனைத்திருவாவடுதுறையு
ளண்டவாணனைச்சிங்கடியப்பனணுக்கவன்றொண்டனார்வத்தாலுரைத்த
தண்டமிழ்மலர்பத்தும்வல்லார்கள்சாதலும்பிறப்புமறுப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

அஞ்கிருந்து திருத்துருத்திக்குப் போய்ச்சுவாமியையவணங்கி அடியேன்மேலேபொருந்தியநோய்நீங்க,அருள்செய்யவேண்டும் என்று பிரார்த்தித்தார்அதற்குக்கடவுள்நீ இக்கோயிலுக்குவடபுறத்தில் இருக்கின்ற குளத்திலே ஸ்நானம்பண்ணுவாயாகில்இந்தநோய் நீங்கிவிடும்என்று திருவாய்மலர்ந்தருளினார் அதுகேட்டுச்சுந்தர மூர்த்திசுவாமிகள்கைதொழுது புறப்பட்டு அந்தத்தீர்த்தத்தை அடைந்து சுவாமியைவணங்கிக்கொண்டு,அவருடைய திருவடிகளிலே அன்போடுபதிந்த இருதயத்துடனே அத்தீர்த்தத்திலே ஸ்நானம்பண்ணினார்,உடனே அவருடைய திருமேனி நோய்நீங்கிப் பிரகாசம் அடைந்தது,அவரைக்கண்டவர்கள் அதிசயிக்கும்படிகரையேறி வஸ்திரந்தரித்துக்கொண்டு கோயிலிலே போய்,சுவாமியைவணங்கித் திருப்பதிகம்பாடியருளினார்,

---

திருத்துருத்தியுந் திருவேள்விக்குடியும்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னுமாமேகங்கள்பொழிந்திழிந்தருவிவெடில்படக்கரையொடுந்திரைகொணர்ந்
மன்னமாங்காவிரியகன்கரையுறைவாடியிணைதொழுதெழுமன்பராமடியார் [தெற்று
சொன்னவாறறிவார்துருத்தியார்வேள்விக்குடியுளாரடிகளைச்செடியனேனாயே
னென்னைநான்மறக்குமாறெம்பெருமானையென்னுடம்படும்பிணியிடர்கெடுத்தானே

மங்கையோர்கூறுகந்தேறுகந்தேறிமாற்றலார்திரிபுரம்நீறெழச்செற்ற
வங்கையான்கழலடியன்றிமற்றறியானடியவர்க்கடியவன்றொழுனூரன்
கங்கையார்காவிருத்துருத்தியார்வேள்விக்குடியுளாரடிகளைச்சேர்த்தியப்பாட
ரங்கையார்றொழுதுதங்காவின்மேற்கொள்வார்தவநெறிச்சென்றமருலகமாள்பவரே

திருச்சிற்றம்பலம்.

அத்திருப்பதியை நீங்கி திருவாரூரிற் சென்று மாலைக் காலத்திலே தூவாயரைவணங்கும்படி அடியார்களோடு கோயிலிலே பிரவேசித்து ணங்கிக் கண்தந்தருளும்படி திருப்பதிகம்பாடியருளினர்,

திருவாரூர்ப்பரவையுண்மண்டளி-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்

தூவாயாதொண்டுசெய்வார்படுதுக்கங்கள்
காவாயேபண்டுகொண்டாரைவர்க்காகிலு
நாவாயாலுன்னையேநல்லனசொல்லுவேற்
காவாவென்பரவையுண்மண்டளியம்மானே.

கரந்தையும்வன்னியுமத்தமுங்கூவிளமும்
பரந்தசீர்ப்பரவையுண்மண்டளியம்மானை
நிரம்பியவூரனுரைத்தனபத்திவை
விரும்புவார்மேலையார்மேலையார்மேலாரே

திருச்சிற்றம்பலம்.

வெளியேபோய் ஒருடத்தில்இருந்து,பின் அடியார்களோடு திருமூலத்தானத்திலே துருவொத்தாயாமத்திலே சுவாமிதரிசனஞ் செய்வதற்குளமுந்து வழிக்கொண்டுவழியிலே அடியார்கள்தமக்கெதிரேவா அவர்கள்முகத்தைப்பார்த்து, கைக்கிளையினலே ஒரு திருப்பதிகம் பாடியருளினர்.

திருவாரூர் - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

குருகுபாயக்கொழுங்கரும்புகணெரிந்தசா
றருகுபாயம்வயலந்தணாரூரரைப்
பருகுமாறும்பணிந்தேத்துமாறுந்நினைந்
துருகுமாறும்மிவையுணர்த்தவல்லீர்களே.

நித்தமாகநினைந்துள்ளமேத்தித்தொழும்
அத்தனம்பொற்கழலடிஆளாரூரரைச்
சித்தம்வைத்தபுகழ்ச்சிங்கடியப்பன்மெய்ப்
பத்தனூரன்சொன்னபாடுமின்பத்தரே

திருச்சிற்றம்பலம்.

அதன்பின்பு தேவாசியமண்டபத்தின்முன் நமஸ்கரித்து கோபுரத்தையும் வணங்கி உள்ளே புகுந்து சுவாமிசந்நிதானத்திலேபோய்விழு

ந்து நமஸ்கரித்து எழுந்து நின்று சுவாமியைத் தரிசனஞ்செய்தற்கு ஒருகண் போதாமையால் அதிக துக்கங்கொண்டு, சுவாமீ அடியேனுக்கு வலக்கண்ணையுந்தந்து அடியேனை இத் துக்கசாகரத்தி னின்றும் கரையேற்றி அருளவேண்டும் என்று பிரார்த்தித்து. "மீளாவடிமை யுமக்கேயாளாய்" என்னுந் திருப்பதிகம் பாடியருளினர்.

திருவாரூர்-பண்-செந்துருத்தி.

திருச்சிற்றம்பலம்.

மீளாவடிமையுமக்கேயாளாய்ப்பிறரைவேண்டாதே
மூளாத்தீப்போலுள்ளேகனன்றுமுகத்தான்மிகவாடி
யாளாயிருக்குமடியார்தங்களல்லல்சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர்திருவாரூரீர்வாழ்ந்துபோதீரே.

காரூர்கண்டத்தெண்டோண்முக்கண்கலைகள்பலவாகி
யாரூர்த்திருமூலத்தானத்தேயடிப்பேராரூரன்
பாரூரறியவென்கண்கொண்டீர்நீரேபழிப்பட்டீர்
வாரூர்முலையாள்பாகங்கொண்டீர்வாழ்ந்துபோதீரே.

திருச்சிற்றம்பலம்.

அப்பொழுது வான்மீகநாதர் திருவுளமிரங்கி, அவருக்கு வலக்கண்ணையுங் கொடுத்தருளினர். உடனே சுந்தரமூர்த்திசுவாமிகள் பரவசமாய்ப் பலமுறைவிழுந்தும் எழுந்தும் மிகுந்த களிப்பினால் ஆடியும் பாடியும் இன்பசாகரத்தில் அமிழ்ந்தி, வன்மீக நாதருடைய திருக்கோலத்தை இரண்டு கண்களினாலுந் தரிசனஞ்செய்து வணங்கித் துதித்துக் கொண்டு புறப்பட்டு தேவாசிரிய மண்டபத்திலே போய் அங்கிருந்தார்.

முன் சுந்தரமூர்த்திசுவாமிகள், கோயிலுக்குப் போம்போது, அவருடைய பரிசனங்களிற் சிலர் பரவையார் வீட்டுக்குப்போக நினைந்து, அவர்வாயிலிலேபோய், அப்பரவையார் தம்மைப்பிரிந்து சென்ற சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவொற்றியூரிலே சங்கிலியாரை விவாகஞ் செய்து கொண்டிருந்த சங்கதியைக் கேள்வியுற்று அதிகதுக்கமுங் கோபமுங் கொண்டிருந்தமையால், உள்ளேபோகப் பெறுமல், திருமபி தேவாசிரிய மண்டபத்திலிருந்த சுந்தரமூர்த்தி சுவாமியை அடைந்து, சுவாமீ பரவையார் தேவரீர் திருவொற்றியூரிலே சங்கிலியாரை விவாகஞ்செய்த சமாசாரம் முற்றும் கேள்வியுற்றமையால், இப்பொழுது அவர் வீட்டுப்புறத்தும் செல்லப்பெறுமல் திரும்பிவிட்டோம் என்றார்கள். அதைக் கேட்ட நாயனர் மனங்கலங்கி, இனி இதற்கு என்னசெய்வோம் என்று

ஆலோசித்து, லௌகீகவிஷயத்திலே வல்ல சில மனிதர்களை, பரவையார் கொண்டகோபத்தை நீக்கிக் கொண்டு வரும்பொருட்டு, அவரிடத்திற்கு அனுப்பினார். அனுப்பப்பட்ட அவர்கள் பரவையார் முன்சென்று, அவருக்குப் பல நியாயங்களையும் எடுத்துச் சொல்லி சுந்தரமூர்த்தி சுவாமிகளோடு முன்போலக் கூடியிருக்கவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள், அதற்குப் பரவையார் இசையாதவராகி கோபம் அதிகரித்து எனக்குக் குற்றஞ்செய்த அவர்பக்கத்தில் இன்னும் இப்படிப்பேசுவீர்களாகில், நான் பிராணத்தியாகம் பண்ணிப்போடுவேன் என்றார் அவர்கள் அதைக்கேட்டு மிகப்பயந்து, சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்திற் சென்று நிகழ்ந்த சங்கதியைத் தெரிவித்தார்கள் அதைக்கேட்ட நாயனார் மிகுந்த துக்கசாகரத்தில் அமிழ்ந்தி சமீபத்தில் இருந்தவர்கள் எல்லாரும் நித்திரை செய்யும்பொழுது, அத்தயாமத்திலே தனியேவருந்தி பரமசிவனுடைய திருவடிகளைத் தியானித்து ஆன்மாக்கள்செய்த கன்மங்களைத் தொலைக்கும்பொருட்டு அவைகளின் பலங்களைப் புசிப்பித்தருளுகின்ற கடவுளே, அடியேன் பூர்வத்திலேசெய்த கர்மத்தினாலே அடியேனுக்குத் தேவரீராலே கூட்டப்பட்ட பரவையினுடைய புலவியைத் தேவரீரே இந்த அத்தயாமத்தில் எழுந்தருளிவந்து தீர்த்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தார் அப்பொழுது தனுகரணங்களை யானென்றும் புவன போகங்களை எனதென்றும் அபிமானிக்கின்ற அகங்காரம் மமகாரங்களை ஒழிந்து தம்மை உணர்ந்து தமது திருவருள்வழிநிற்கும் மெய்ஞ்ஞானிகளுக்குப் பிராரத்துவமாத்திரம் புசிப்பித்து அவர்கள் அது புசிக்கும்போது மனம் வாக்கு காயம் என்னும் திரிகரணங்களாற் செய்யும் செயல்கள் அவர்களுக்கு ஆகாமியமாய் ஏறாது அவைகளைத் தஞ்செயலாகக்கொண்டருளும் பரமசிவனானவர், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப்பிராரத்துவமுற்றும் புசிப்பித்துத் தொலைப்பிக்கும்பொருட்டும் தாம் அப்படிச்செய்தல் அவன் அவள் அது முன்னிலையாயாம் ஆயினும் அம்முன்னிலையாய் அதுசெய்பவர்தாமே என்பது நம்மனோர்க்கும் தெளிவுறப் புலப்படும்பொருட்டும் விஷ்ணுமூர்த்தியாலும் தேடிக்காணப்படாத அருமைத் திருவடிகள் பூமியிலே தீண்டும்படி அந்நாயனாருக்கு வெளிப்பட எழுந்தருளிவந்தார். அதுகண்டநாயனார் எழுந்து தாங்கற்கரியஆனந்தமேலீட்டினாலே சரீரம் நடுங்க உரோமஞ் சிலிர்க்க இரண்டுகைகளும் சிரசின்மேல் ஏறிக்குவிய, கடவுளுடைய திருவடியின் கீழ்விழுந்து எழுந்து ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு நின்றார். கடவுள் அவரை நோக்கி, உனக்கு நிகழ்ந்தது யாது என்று கேட்டருள, அவர் தேவரீருடைய திருவருள்கூட்ட அடியேன் திருவொற்றி யூரிலே சங்கிலியை விவாகஞ்செய்த சமாசாரமுழுதும் பரவையானவள் கேள்வியுற்று அறிந்து தன்னிடத்திலே நான்வரில் தான் பிராணத்தியாகம் பண்ணுதல் தவறாதென்று சொல்லிக்கொண் டிருக்கிறாள். சிறியேன் தேவரீருக்கு

அடியானும் தேவரீர்சிறியேனுக்குத் தோழரும் ஆண்டவருமாயிருத்தல் மெய்யானால் சிறியேன் படுந்துன்பத்தைப் பார்த்துத் தேவரீரே இவ்விரவில்பரவை வீட்டுக்குச்சென்று அவளுடையபுலவியைத் தீர்த்தருளல் வேண்டும் என்று விண்ணப்பஞ்செய்தார். அதைக்கேட்ட கடவுள் தோழனே! நான் இப்பொழுது உனக்கு ஒருதூதனாகிப் பரவைவீட்டுக்குப் போகின்றேன். நீ உன் துன்பத்தை ஒழியென்று திருவாய்மலர்ந்தருளி, தேவர்முனிவர்கள் பூதங்கள் முதலாகிய சமஸ்தரும் ஸ்தோத்திரஞ்செய்துகொண்டு புறத்திலே சூழும்படி, பரவையார் வீட்டைநோக்கி நடந்து, அவ்வீட்டுவாயிலை அடைந்து, தம்மோடு வந்தகணங்கள் புறத்திலேநிற்க, தாம்தமக்கு அருச்சனைசெய்கின்ற ஒரு ஆதிசைவர் வடிவங்கொண்டு உள்ளே தனியேசென்று கதவு பூட்டியிருத்தலால் அதற்கு முன்னின்று பரவையே! கதவைத்திறஎன்று அழைத்தார் நித்திரையின்றி துக்கத்தோடிருந்த பரவையார் அதைக்கேட்டு, தம்மைஅழைத்தவர் சுவாமிக்கு அருச்சனைசெய்கின்ற ஆதிசைவரெனத்துணிந்து சுவாமிக்கு அருச்சனைசெய்யும் பெரியவர் அத்தயாமத்திலே இங்கேவந்தது யாது காரணம் பற்றியோ, என்றுபயந்து, பதைபதைத்துப்போய் கதவைத் திறந்து, அவரைக்கண்டு, சுவாமீதேவரீர் இப்பொழுது இங்கே எழுந்தருளிவந்த காரணம்யாது, என்றுகேட்டார். அதற்குக்கடவுள் நான் சொல்வதை நீமராது செய்வாயாகில், சொல்லுவேன் என்றுசொல்ல பரவையார், நீர் அதைச்சொல்லும் அது என்னால் இயலுமாகில், செய்வேன் என்றார் கடவுள் சுந்தரமூர்த்தி இங்கேவருவதற்கு நீ உடன்படல் வேண்டும் என்றுசொல்ல, பரவையார், உம்முடைய பெருமை நன்றாய் இருக்கின்றது என்னைப் பிரிந்துசென்று திருவொற்றியூரிலே சேர்ந்து, அங்கே சங்கிலியினாலே பிணிப்புண்டவருக்கு இங்கே ஒருசார்பு உண்டாகுமோ என்றார் சுவாமி அதைக்கேட்டு, நீ உனக்குச் சுந்தரமூர்த்தி செய்த குற்றங்களை மனதிலே கொள்ளாமல் கோபம் நீங்கி அவரைஇங்கே வருவிக்கும்பொருட்டு உன்னைநான் வேண்டிக்கொண்டேன். நீ மறுப்பது தகுதியல்ல, என்று அருளிச்செய்ய, பரவையார். நீர் இந்த காரியத்தின்பொருட்டு இந்தவீட்டுக்கு வருதல் உம்முடையபெருமைக்குத் தகுதியல்ல, அவர் இங்கேவருவதற்கு நான் இசையமாட்டேன், நீர் போய்விடும் என்றார். அதைக்கேட்டகடவுள் உள்ளே நகைத்துக் கொண்டு தம்முடைய திருவுருவத்தைப் பரவையாருக்குக் காட்டாமல் சுந்தரமூர்த்தியிடத்திற்குத் திரும்பிச்சென்றார். சென்ற கடவுளைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மகிழ்ச்சியோடு எதிர்கொண்டு நமஸ்கரித்து, அவருடைய திருமுகத்திலே தோன்றிய சிரிப்பைக்கண்டு, அவருடைய திருவுள்ளக் கருத்தைஅறியாமல், தாம்நினைத்தகருத்தை முடித்துவந்தனர் என்றுதுணிந்து, தேவரீர் அன்றைக்குச்சிறியேனை ஆட்கொண்டதற்கு இசைய இன்றைக்குப் பரவையுடையகோபம் முழுதையும் தீர்த்து வந்

தருளினீர் என்றார். கடவுள் அதைக்கேட்டு உன் வேண்டுகோளின்படி நாம்பரவைவீட்டுக்குப்போ ய்அவளிடத்திலே பேசினோம். அவள் இசையவில்லை என்றார் உடனே நாயனார் நடுக்கங்கொண்டு வணங்கி தேவரீர் அருளிச்செய்ததை அடியாளாகிய பரவையாமறுப்பாள் தேவரீர் என்னுடைய அடிமைத் தன்மையை வேண்டுவதில்லையாகில், அன்றைக்கு என்னைவலிய ஆட்கொண்டதேது நான்படுந்துக்கத்தைக் கண்டீர். இன்றைக்கு நான் அவளிடத்திலே போவதற்கு அருள்செய்யீராகில் என்னுயிர்நீங்கிவிடும்என்றுசொல்லிவிழுந்தார். அதுகண்டுகடவுள்நாம்இன்னும் பரவையிடத்திலேபோய் இப்போதே நீ அவளிடத்திற் செல்லும்படி சொல்லுவோம் நீ துக்கிக்கவேண்டாம் என்று அருளிச்செய்துகணங்களோடு பரவையார் வீட்டை அடைந்தார். அதற்குமுன் பரவையார் தம்மிடத்தில்வந்த ஆதிசைவர் போனபின்பு அவ்வாதிசைவராய் வந்தவர் பரமசிவன்என்றே பல அதிசயத்தோற்றத்தால் அறிந்து பயங்கொண்டு ஐயோ கெட்டேன் எங்கள்சுவாமிவாக்குக்கு எதிர்வாக்குசொல்லி மறுத்தேனே என்றுபுலம்பி நித்திரைசெய்யாதவராகி தம்முடையதோழருக்காக அருச்சகர் வடிவங்கொண்டுவந்த கடவுளைப்பாவியேன் மதித்தேனில்லை என்று வாயிலையே பார்த்துகொண்டிருந்தார், பரமசிவனுனைவர் தாமாந்தன்மையை அறிதற்கு ஏற்றகோலத்தோடும் தேவர் முனிவரர்முதலாகிய சமஸ்தகணங்களும் சூழும்படி பரவையார் வீட்டினுள்ளே பிரவேசித்தார் அதுகண்ட பரவையார் அதிசீக்சிரமாக எழுந்துபோய்க் கடவுளுடைய திருவடியிலே வி ந்து நமஸ்கரிக்க கடவுள் அவரைநோக்கி, பரவை ய நாம் சுந்தரன் அனுப்பத் திரும்பவும் உன்னிடத்திலே வந்தோம் நீ இன்னும் முன்போலமறாமல் புலவியினால் வருந்துகின்ற அவன் உன்னிடத்திலே வருவதற்கு உடன்படல் வேண்டும் என்றார்.

அதற்குப் பாவையார் தேவரீர் பிராமண வடிவங்கொண்டு முன் இங்கே எழுந்தருளிவந்தீர். பின் உண்மையாகிய இந்தத் திருக்கோலலத்தோடு இப்பொழுது எழுந்தருளி வந்தீர் நான் பூர்வ சன்மத்திலே செய்த தவப்பயன் இதுவோ என்றுசொல்லி வியந்து, பின்புபிரமவிஷ்ணுக்களாலும் அறியப்படாததேவரீர் அன்பர்பொருட்டு இரவிலே மாறாமல் அங்கும் இங்கும் திரிந்து எளியவராவீராகில், சிறியேன் இதற்கு உடன்படாமல் யாதுசெய்வேன் என்றார் கடவுள் அதைக்கேட்டு நன்று சொன்னாய் என்று திருவாய் மலர்ந்தருளி புறப்பட்டு சுந்தரமூர்த்தி யிடத்திற் போனார், சுந்தரமூர்த்தி அவரைக்கண்டு எதிர் கொண்டு, நமஸ்கரித்து சுவாமி யாது சொல்வாரோ என்று அறியாதவராகி சுவாமி என்னுடைய உயிரைக்காவாமல் இடர்செய்கின்ற பரவையிடத்தில் நின்றும் என்ன உத்தாம் கொண்டு வந்தீர் என்றுகேட்க கடவுள் உன்மேலே பரவை கொண்ட கோபத்தைத் தணிவித்தோம் நீ இனி அவளிடத்திற் போகலாம் என்றார். அதுகேட்ட நாயனார் மனசி

லே களிப்படைந்து சுவாமீ போகமோக்ஷம் இரண்டையும் கொடுத்தருளுகின்றவர் தேவரீரேஎன்பதை யாவர்க்கும்புலப்படுத்தினீர் இனிஎனக்கு இடர் ஏது என்றுசொல்லித் திருவடிகளிலேவிழுந்தார். உடனே பரமசிவனனவர் மறைந்தருளினுர் விழுந்தநாயனுர் எழுந்து பரவையார் வீட்டுக்குப்போகத்தொடங்கினுர். அப்பொழுது அவருடைய பரிசனங்களெல்லாம் விழித்து எழுந்தன நாயனுர் அப்பரிசனங்கள் பக்கத்திலேசூழ தேவர்கள் புஷ்பமாரிபொழிந்து துதிக்க சென்றுபரவையார்வீட்டைஅடைந்தார் அதற்குமுன்மிகுந்த விருப்பத்தோடும் தம்முடைய வீடு முழுதையும் அலங்கரிப்பித்துத் தீபதூபங்களும் நிறைகுடமும் நிறைத்துத்தோழியர்களோடு வாயிலிலே வரவுபார்த்து நின்ற பரவையார் அங்கேஎழுந்தருளிவந்த நாயனுரைக்கண்டு மகாசந்தோஷங்கொண்டு அவரை நமஸ்கரிக்க அவர் கையினுலே பரவையாரைப் பிடித்துக்கொண்டு உள்ளேபோய்ச்சேர்ந்தார். அவ்விருவரும் பரமசிவனுடைய திருவருளின்மகிமையைப் புகழ்ந்துகொண்டு முன்போல ஐக்கியமாய்க்கூடியிருந்தார்கள்.

சுந்தரமூர்த்திசுவாமிகள் தாம் தினந்தோறும் சுவாமி தரிசனஞ்செய்து திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு திருவாரூரில் வசிக்குங்காலத்திலே தாம் பரமசிவனைத் தூதனுப்பிய சமாசாரத்தைத் திருப்பெருமங்கலத்திலிருந்த ஏயர்கோன்கலிக்காமநாயனுர் கேள்வியுற்று அது தகுதி அன்று என்று தம்மேலே கோபங்கொண்டிருந்ததை அறிந்து அதைக்குறித்துப்பரமசிவனுக்கு விண்ணப்பஞ்செய்தார் பரமசிவன் அக்கலிக்காமநாயனுரைச் சூலைநோயினுல் வருத்தி அவரிடத்தில் எழுந்தருளி சுந்தரனலன்றி இந்நோய்தீராது என்று அருளிச்செய்து அவர் சுந்தரமூர்த்தியைக்கொண்டு அந்நோயைத் தீர்ப்பித்தற்கு உடன்படாமையைக்கண்டு சுந்தரமூர்த்தியிடத்திற்சென்று நம்முடைய ஏவலாலே கலிக்காமனை வருத்துகின்ற சூலையை நீபோய்த்தீர்ப்பாய்என்றுர். சுந்தரமூர்த்திசுவாமிகள் அதைக்கேட்டு மனமகிழ்ந்து, அவரிடத்திற்குப்போம்படி புறப்பட்டு சூலைதீர்க்கும்படி தாம்வருஞ் சமாசாரத்தை அவருக்குத் தெரிவித்ததற்கு ஆளனுப்பினுர் அவ்வாளினுலே அவர்வரவை அறிந்த கலிக்காமநாயனுர் உடைவாளினுலே தன்வயிற்றை கிழித்துக்கொண்டு இறந்துபோனுர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அங்கே சென்றபோதுகலிக்காமநாயனுர் இறந்து கிடத்தலைக்கண்டு, நானும் இவர்போல இறந்து போவேனென்று சொல்லி உடைவாளை யெடுத்தார் உடனே பரமசிவனுடைய திருவருளினுல் கலிக்காமநாயனுர் உயிர்த்துஎழுந்து அவர்கையில் வாளைப்பிடித்துக்கொள்ள அவர்விழுந்துநமஸ்கரித்தார் கலிக்காம நாயனுரும் சுந்தரமூர்த்தி சுவாமியை நமஸ் கரித்தார் அப்பால் இருவரும் எழுந்து ஒருவரையொருவர் தழுவி அதிக நண்புள்ளவரானுர்கள். பின் சுந்தரமூர்த்திசுவாமிகள் கலிக்காம நாயனு

ரோடுதிருப்புன் கூருக்குப்போய் சுவாமிதரிசனஞ்செய்து பதிகம்பாடியருளினர்.

திருப்புன்கூர்-பண்-தக்கேசி

திருச்சிற்றம்பலம்.

அந்தணாளனுன்னடைக்கலம்புகுதவவனைக்காப்பதுகாரணமாக
வந்தகாலன்றனுருயிரதனைவவ்வினைக்குன்றன்வன்மைகண்டடியேன்
எந்தைநீயெனைநமன்றமர்நலியிலிவன்மற்றென்னடியானெனவிலக்குஞ்
சிந்தையால்வந்துன்திருவடியடைந்தேன்செழும்பொழிற்றிரும்புன்கூருளானே

கம்பமால்களிற்றின்னுரியானைக்காமற்காய்ந்ததோர்கண்ணுடையானைச்
செம்பொனேயொக்குந்திருவுருவானைச்செழும்பொழிற் றிருப்புன்கூருளானை
யும்பராளியையுமையவள்கோனையூரன்வன்றொண்டனுள்ளத்தாலுகந்
தன்பினாற்சொன்னவருந்தமிழைந்தோடைந்தும்வல்லவரருவினையிலரே.

திருச்சிற்றம்பலம்.

சிலநாட்சென்றபின்பு திருவாரூரை அடைந்தார் அவ்விடத்திலே சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு கலிக்காமநாயனர் தம்முடைய ஊருக்குத்திரும்பிவிட சுந்தரமூர்த்திசுவாமிகள் சிலநாள் அங்கிருந்து பின் திருநாகைக்காரோணத்துக்குப்போய் சுவாமிதரிசனஞ் செய்து பதிகம் பாடி பொன்னும் நவரத்தினங்களும் ஆபரணங்களும் வஸ்திரங்களும் குதிரைகளும் உடைவாளும் பிறவும்பெற்று பிறஸ்தலங்களையும் வணங்கிக்கொண்டுமீண்டு அத்திருவாரூரிற்சேர்ந்து இருந்தார்.

அப்பொழுது சேரமண்டலத்திலுள்ள கொடுங்கோளூரிலிருந்த சேரமான் பெருமாணயனர் சுந்தரமூர்த்திசுவாமிகளுடைய பத்தி மகிமையைப் பரமசிவனல் அறிந்து அவரை தரிசிக்கவிரும்பி திருவாரூரை அடைந்தார் சுந்தரமூர்த்திசுவாமி மகிழ்ச்சியோடும் அவரை எதிர்கொள்ள அவர் சுந்தரமூர்த்தியை நமஸ்கரித்தார் உடனே சுந்தரமூர்த்தியும் அவரை நமஸ்கரித்து அவரை எடுத்துத்தழுவ அவரும் தழுவினர் இப்படி இவர்கள் நண்பு கலந்தமையால் சுந்தரமூர்த்திசுவாமிக்குச் சேரமான்றோழர் என்னும் பெயர் உண்டாயிற்று சுந்தரமூர்த்திசுவாமிகள் சேரமான்பெருமாணயனரைக் கையிலேபிடித்துக்கொண்டு கோயிலிலே பிரவேசித்து சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு பாவையார்வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் அவருக்கும் அவரோடுவந்த சமஸ்தசனங்களுக்கும் விருந்துசெய்து சில நாள் அவரோடுஅங்கிருந்து பின்பாண்டிநாட்டி லிருக்கின்றமதுரைமுத

லாகியசிவஸ்தலங்களுக்குயாத்திரைசெய்ய விரும்பிவண்மீகநாதரைவண ங்கிக்கொண்டு திருவாரூரை நீங்கி கீழ்வேளூரை அடைந்து சுவாமிதரிச னஞ்செய்துகொண்டு திருநாகைக் காரோணத்துக்குச்சென்று திருப்பதி கம் பாடியருளினர்.

திருநாகைக்காரோணம்-பண்-கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

பத்தூர்புக்கிரந்துண்டுபலபதிகம்பாடிப்
பாவையரைக்கிறிபேசிப்படிறுடித்திரிவீர்
செத்தார்தமெலும்பணிந்துசேவேறித்திரிவீர்
செல்வத்தைமறைத்துவைத்தீரெனக்கொருநாளிரங்கீர்
முத்தாரமிலங்கிமிளிர்மணிவயிரக்கோவையவை
பூணத்தந்தருளிமெய்க்கினிதாநாறுங்
கத்தூரிகமழ்சாந்துபணித்தருளவேண்டுங்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே.

பண்மயத்தமொழிப்பரவைசங்கிலிக்குமெனக்கும்
பற்றாயபெருமானேமற்றாரையுடையேன்
உண்மயத்தவுமக்கடியேன்குறைதீர்க்கவேண்டுமொளி
முத்தம்பூணாரமொண்பட்டும்பூவுங்
கண்மயத்தகத்தூரிகமழ்சாந்தும்வேண்டுங்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரென்
றண்மயத்தாலணிநாவலாரூரன்சொன்னவருந்
தமிழ்களிவைவல்லாரமருலகாள்பவரே.

திருச்சிற்றம்பலம்.

சிலநாள் அங்கிருந்து வேதாரணியத்துக்குப்போய்க் கோயிலிலே சென்று திருநாவுக்கரசுசுவாமிகளாலும் திருஞான சம்பந்த சுவாமிகளா லும் முறையே திறத்தற்கும் அடைத்தற்கும் பதிகம்பாடப் பெற்ற திரு வாயிலை அடைந்து ஆநந்தபாஷ்பஞ்சொரிந்து அந்நாயன்மார்களை நினை ந்துவணங்கி வேதங்களால் அருச்சிக்கப்பட்ட கடவுளை நமஸ்கரித்து திருப்பதிகம் பாடியருளினர்.

திருமறைக்காடு-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

யாழைப்பழித்தன்னம்மொழிமங்கையொருபங்கன்
பேழைச்சடைமுடிமேற்பிறைவைத்தானிடம்பேணிற்
றூழைப்பொழிலூடேசென்றுபூழைத்தலைநுழைந்து
வாழைக்கனிகூழைக்குரங்குண்ணுமறைக்காடே.

பாரூர்பலபுடைசூழ்வளவயனுவலர்வேந்தன்
வாரூர்வனமுலையாளுமைபங்கன்மறைக்காட்டை
யாரூரன்தமிழ்மாலைகள்பாடும்படித்தொண்டர்
நீரூந்தருநிலனேடுயர்புகழாகுவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

பின் புறப்பட்டுச்சிலநாள்அங்கிருந்து அகத்தியான்பள்ளிக்குப்போய்ச் சுவாமிதரிசனஞ்செய்து குழகர்கோடிக்குப்போய்ச் சுவாமிதரிசனஞ் செய்து திருப்பதிகம் பாடியருளினர்.

திருக்கோடிக்குழவர்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கடிதாய்க்கடற்காற்றுவந்தெற்றக்கரைமேற்
குடிதானயலேயிருந்தார்குற்றமாமோ
கொடியேன்கண்கள்கண்டனகோடிக்குழகீர்
அடிகேளுமக்கார்துணையாகவிருந்தீரே.

பாரூர்மலிசூழ்மறைக்காடதன்றென்பா
லேரார்பொழில்சூழ்தருக்கோடிக்குழகை
யாரூரனுரைத்தனபத்திவைவல்லார்
சீரார்சிவலோகத்திருப்பவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

பின் சோழநாட்டைக்கடந்து பாண்டிநாட்டை அடைந்தார் அந்நாட்டிலேதிருப்புத்தூரைவணங்கி மதுரைக்குச்சமீபித்து அம்மதுரையினின்று வந்துதங்களை எதிர்கொண்ட பாண்டியராசாவோடும் பாண்டியராசாவுடையபுத்திரியை விவாகஞ்செய்துகொண்டு அங்கிருந்தசோழராசாவோடும் கோயிலிலேபோய் சுவாமியைவணங்கிப் பதிகம்பாடிப் புறப்பட்டார்பாண்டியர் அவர்கள் ஓர் இரத்தினமாளிகைக்கு அழைத்துக்கொண்டுபோய் அங்கேஇருத்தினர் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் சேரமான்பெரு

மாணுயனாரும் சிலநாள் அங்கே இருந்துகொண்டு தினந்தோறும் சுவாமி தரிசனம் செய்துவந்தார்கள். பின்சுந்தரமூர்த்திசுவாமிகள் அவ்வரசர் மூவரோடும் மதுரையைநீங்கி, திருப்பூவணத்துக்குச் சமீபித்து பக்கத்திலேவரும் திருத்தொண்டர்கள் அந்தத்தலத்தைக்காட்ட, அதன்மேல் திருப்பதிகம்பாடிக்கொண்டு ஸ்தலத்திலேபோய் கோயிலிலே பிரவேசித்துசுவாமி தரிசனஞ்செய்துகொண்டு அந்தத் தலத்தில் இருந்தார்.

திருப்பூவணம் - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்.

திருவுடையார்திருமாலயனாலும், உருவுடையாருமையாளையோர்பாகம்
பரிவுடையாரடைவார்வினைதீர்க்கும், பரிவுடையாருறைபூவணமீதே.

சீரின்மிகப்பொலியுந்திருப்பூவண, மாரவிருப்பிடமாவுறைவாளை
ஊரனுரைத்தசொன்மாலைகள் பத்திவை, பாரிலுரைப்பவர்பாவமறுப்பரே

திருச்சிற்றம்பலம்.

பின் அவ்வரசர்மூவரோடும்திருப்பூவணத்தை நீங்கி மதுரையிற்சென்று தினந்தோறும் சுவாமிதரிசனம் செய்துகொண்டு சிலநாள் அங்கிருந்தார். அந்நாட்களிலே திருவாப்பனூர் திருவேடகம் முதலாகிய சிவஸ்தலங்களுக்குப்போய்த் தரிசனம்செய்து கொண்டுதிரும்பி மதுரையில் வந்திருந்தார் அதற்குப்பின் அரசர் மூவரோடும் திருப்பரங்குன்றுக்கும் போய்சுவாமிதரிசனம்செய்து பரமசிவனுடைய திருவடிகளுக்குத் தொண்டுசெய்யும் அருமையைக்குறித்தும் பதிகம்பாடியருளினார்.

திருக்கோத்திட்டையும்திருக்கோவலூரும்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கோத்திட்டையுங்கோவலுங்கோயில்கொண்டீருமைக்
  கொண்டுழல்கின்றதோர்கொல்லைச்சில்லைச்
சேத்திட்டுக்குத்தித்தெருவேதிரியுஞ்சில
  பூதமுநீருந்திசைதிசையான
சோத்திட்டுவிண்ணோர்பலருந்தொழநும்மரைக்
  கோவணத்தோடொருதொல்புடைசூழ்ந்
தார்த்திட்டதும்பாம்புகைக்கொண்டதும்பாம்
  படிகேளுமக்காட்செயவஞ்சுதுமே.

அடிகேளுமக்காட்செயவஞ்சுதுமென்றமரர்
  பெருமானையாரூரனஞ்சி

முடியாலுலகாண்டமூவேந்தர்முன்னே
  மொழிந்தாறுமோர்நான்குமோரொன்றினையும்
படியாயிவைகற்றுவல்லடியார்
  பரங்குன்றமேயபரமனடிக்கே
குடியாகிவானோர்க்குமோர்கோவுமாகிக்
  குலவேந்தராய்விண்முழுதாள்பவரே.

திருச்சிற்றம்பலம்.

அவ்வருமையை அரசர்மூவருங்கேட்டு அஞ்சி சுந்தரமூர்த்தி சுவாமிகளைவணங்கினார்கள் அப்பால் சுந்தரமூர்த்திசுவாமிகள் பாண்டிய ராசாவும் சோழராசாவும் அனுமதிபெற்றுக்கொண்டு மதுரைக்குத்திரும்பிவிடசேரமான்பெருமாளுயனுரோடும் அந்தஸ்தலத்தை நீங்கி வழிக்கொண்டு திருக்குற்றாலம் குதும்பாலா திருநெல்வேலி முதலிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு இராமீச்சரத்துக்குப்போய் சுவாமிதரிசனம் செய்துகொண்டு சிலநாள் அங்கிருந்தார் ஈழமண்டலத்தில் இருக்கின்ற மாதோட்டத்துத்திருக்கேதீச்சரத்தை அவ்விராமீச்சரத்தி லிருந்துகொண்டே வணங்கி அதன்மேலேபதிகம்பாடி யருளினார்.

திருக்கேதீச்சரம்-பண்-நட்டபாஷை.

திருச்சிற்றம்பலம்.

நத்தார்புடைஞானன்பசுவேறிநனைகவிழ்வாய்
மத்தம்மதயானைபுரிபோர்த்தமணவாளன்
பத்தாகியதொண்டர்தொழுபாலாவியின்கரைமேற்
செத்தாரெலும்பணிவான்றிருக்கேதீச்சரத்தானே.

கரையார்கடல்சூழ்ந்தகழிமாதோட்டநன்னகருட்
சிறையார்பொழில்வண்டியாழ்செயுங்கேதீச்சரத்தானை
மறையார்புகழூரன்னடித்தொண்டனுரைசெய்த
குறையாத்தமிழ்பத்துஞ்சொலக்கூடாகொடுவினையே.

திருச்சிற்றம்பலம்.

பின் இராமீச்சரத்தை நீங்கித் திருச்சுழியலிலேபோய்ச் சுவாமிதரிசனம் செய்து பதிகம்பாடிக்கொண்டு அங்கே இருக்க.

திருச்சுழியல்-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஊனுயுயிர்புலாயகலிடமாய்முகில்பொழியும்
வானுய்வருமதியாய்விதிவருவானிடம்பொழிலின்
றேனுதரித்திசைவண்டினமிழற்றுந்திருச்சுழிய
ஞானவிதனைவார்தமைநலியார்நமன்றமரே.

நீரூர்தருநிமலன்றிருமலையார்க்கயலருகே
தேரூர்தருமரக்கன்சிரநெரித்தான்றிருச்சுழியால்
பேரூரெனவுறைவானடிபெயர்நாவலர்கோமா
ஞூரனதமிழ்மாலைபத்தறிவார்துயரிலரே.

திருச்சிற்றம்பலம்

சுவாமி அவருக்குச் சொப்பனத்திலே காளைவடிவங்கொண்டு,கையிலேபொற்செண்டும் முடியின்மேல் சுழியமும் உடையவராகித்தோன்றி, நம்முடைய வாசஸ்தானம் கானப்பேர் என்றுசொல்லி மறைந்தருளினுர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் விழித்தெழுந்து திவருளைவியந்து தாம்கண்ட சொப்பனத்தைச் சேரமான் பெருமாணுயனுருக்குத் தெரிவித்து திருச்சுழியலைநீங்கி காளையார் தமைக்கண்டு தொழப்பெறுவது என்று என்று திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டு திருக்கானப்பேருக்குப்போய்சுவாமி தரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடியருளினுர்.

திருக்கானப்பேர்-பண்-புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

தொண்டர்டித்தொழலுஞ்சோதியிளம்பிறையுஞ்
　சூதனமென்முலையாள்பாகமுமாகிவரும்
புண்டரிகப்பரிசாமேனியும்வானவர்கள்
　பூசலிடக்கடநஞ்சுண்டகருத்தமருக்
கொண்டலெனத்திகழுங்கண்டமுமெண்டோளுங்
　கோலநறுஞ்சடைமேல்வண்ணமுங்கண்குளிரக்
கண்டுதொழப்பெறுவதென்றுகொலோவடியேன்
　கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே.

கன்னலையின்னமுதைக்கார்வயல்சூழ்கானப்
　பேருறைகாளையையொன்சீருறைதண்டமிழா
லுன்னிமனத்தயராவுள்ளுருகிப்பரவுமொண்
　பொழினுவலர்கோனுகியவாரூரன்

பன்னுமிசைக்கிளவிபத்திவைபாடவல்லார்
பத்தர்குணத்தினராயெத்திசையும்புகழ
மன்னியிருப்பவர்கள்வானினிழிந்திடினு
மண்டலநாயகராய்வாழ்வதுநிச்சயமே.

அங்கே சிலநாள் இருந்து திருப்புனவாயில் என்னும் திருப்பதியை யடைந்து ஆலயத்துட் புகுந்து சித்தநீநினை என்றெடுத்துத் திருப்பதிகம்பாடி சுவாமி தரிசனஞ்செய்து அங்கிருந்தார்.

திருப்புனவாயில்-பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

சித்தநீநினையென்னெடுசூளுறும்வைகலு
மத்தயானையினீருரிபோர்த்தமணாளனூர்
பத்தர்தாம்பலர்பாடிநின்றாடும்பழம்பதி
பொத்திலாந்தைகள்பாட்டறாப்புனவாயிலே.

பொடியாடுமேனியன்பொன்புனஞ்சூழ்புனவாயிலை
யடியாரடியன்னாவலனூரனுரைத்தன
மடியாதுகற்றிவையேத்தவல்லார்வினைமாய்ந்துபோய்க்
குடியாகப்பாடிநின்றாடவல்லார்க்கில்லைகுற்றமே.

திருச்சிற்றம்பலம்.

பின் பாண்டி நாட்டைக்கடந்து, சோழமண்டலத்தை அடைந்து பாதாளீச்சரத்தை வணங்கி திருவாரூரிலேசேர்ந்து வன்மீகநாதரைவணங்கிப் பதிகம்பாடி அரசரோடும் பரவையார் வீட்டிற்குப்போயிருந்துபல நாட்சென்றபின் சேரமான் பெருமாணுயனூர் சுந்தரமூர்த்தியைவணங்கி தம்முடைய ஊருக்குவரும்படி பிரார்த்திக்க சுந்தரமூர்த்தி சுவாமிகள் அதற்கு இசைந்து சேரமான் பெருமாணுயனாரோடும் எழுந்து போய்வன்மீகநாதரை வணங்கிக்கொண்டு திருவாரூரை நீங்கி மேற்றிசையைநோக்கிக்காவேரி நதியின் தென்கரைவழியே சென்று திருக்கண்டியூரை அடைந்து சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு புறப்பட்டார்கள் அப்பொழுது வடகரையிலிருக்கின்ற திருவையாறு எதிரேதோன்ற சேரமான் பெருமாணுயனூர் கண்டுவணங்கி சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பார்த்து சுவாமீ என்மனம் திருவையாற்றை வணங்க விரும்புகின்றது நாம் இந்நதியைக்கடந்துபோய் வணங்குவோம் என்றார் அதைக்கேட்ட சுந்தரமூர்த்திசுவாமிகள் அக்காவேரிநதி இருகரையையும் அழித்து ஓடங்கள் செல்லாதபடி பெருகுதலைக்கண்டு திருப்பதிகந்தொடங்கி திருப்பாட்டினிறுதியிலே ஐயாறுடைய வடிகளோ என்று சொல்லி அழைத்துப் பாடினார்.

திருவையாறு-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பரவும்பரிசொன்றறியேனான்பண்டேயும்மைப்பயிலாதே
னிரவும்பகலுநினைந்தாலுமெய்தநினையமாட்டேனான்
கரவிலருவிகமுகுண்ணத்தெங்கங்குலைக்கீழ்க்கருப்பாலை
யரவந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ.

கூடியடியாரிருந்தாலுங்குணமொன்றில்லீர்குறிப்பில்லீ
ரூடியிருந்துவுணர்கிலேனும்மைத்தொண்டனூரனேன்
தேடியெங்குங்காண்கிலேன்றிருவாரூரேசிந்திப்ப
னாடுந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ.

திருச்சிற்றம்பலம்.

அப்பொழுது கடவுள், கன்று அழைத்தலைக்கேட்டுக் கதறிக்கனைக்கின்ற பசுப்போல சராசரங்களெல்லாம் கேட்கும்படி ஓலம்என்றுசொல்லியருளினார் உடனே காவேரிநதிபிரிந்து வழிகாட்டியது. மேற்றிசையினீர் பளிங்குமலைபோல நிற்க கீழ்த்திசையினீர்வடிந்த நடுவழி மணற்பரப்பாய் யிருந்தது, அதனைக்கண்ட அடியார்கள் எல்லாரும் உரோமாஞ்சிதங்கொள்ள ஆனந்தபாஷ்பஞ்சொரிய அஞ்சலிசெய்தார்கள் சேரமான்பெருமாணாயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய திருவடிகளை நமஸ்கரிக்க சுந்தரமூர்த்திசுவாமிகளும் அவரைவணங்கி கடவுள் உமக்கருளியதன்றோ என்று சொல்லிக்கடவுளைத் துதித்துக்கொண்டு அவரோடும்பரிசனங்களோடும் நதியின் மத்தியிலிருக்கின்ற மணல்வழியே போய், திருவையாற்றை யடைந்து சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு திரும்பிக்காவேரி நதியின்முன் சென்றபடியே நடுவழியேவந்து தென்கரையிலேறினார். உடனே பிரிந்து மலைபோலநின்ற நீர்தொடர்ந்து பாய்ந்தது அதைக் கண்டு சுந்தரமூர்த்திசுவாமிகளும் சேரமான்பெருமாணாயனாரும் அதிசயித்து திருவருளைத் துதித்துக்கொண்டு மேற்றிசையைநோக்கி வழிகொண்டு கொங்கநாட்டை அடைந்து அதைக்கடந்து மலைநாட்டிற்சென்று கொடுங்கோளூரிலே போனார்கள். பின்பு சேரமான் பெருமாணாயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் திருவஞ்சைக்களத்துக்கு யழைத்துக்கொண்டுபோனார் அங்கே சுந்தரமூர்த்திசுவாமிகள் சுவாமி தரிசனஞ்செய்து பதிகம்பாடிப் புறப்பட்டார்.

முடிப்பதுகங்கை-பண்-கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

முடிப்பதுகங்கையுந்திங்களுஞ்செற்றதுமூவெயில்
நொடிப்பதுமாத்திரைநீறெழக்கணை நூறினர்
கடிப்பதுமேறுமென்றஞ்சுவன்றிருக்கைகளாற்
பிடிப்பதுபாம்பன்றியில்லையோவெம்பிரானுக்கே.

காய்சினமால்விடைமாணிக்கத்தெங்கறைக்கண்டத்
தீசனையூரனெட்டோடிரண்டும்விரும்பிய
வாயினசீர்ப்பகைஞானியப்பனடித்தொண்டன்றூன்
ஏசினபேசுமின்றொண்டர்காளெம்பிரானையே.

திருச்சிற்றம்பலம்.

பின்சேரமான் பெருமாளுயனர் யானையின்மேலே முன்னேஅவரை யேற்றி பின்தாமும் ஏறி வெஞ்சாமரம் வீசிக்கொண்டு சென்று தம்முடையமாளிகையின் வாயிலிலே புகுந்து யானையினின்றும் இரங்கிஅந்நாயனரை இறக்கி மாளிகையினுள்ளே கொண்டுபோய் சிங்காசனத்திலிருத்தி அவருக்கு அருச்சனைபண்ணி விருந்துசெய்தார் சுந்திரமூர்த்திசுவாமிகள் சேரமான் பெருமாளுயனரோடும் அந்தக்கொடுங்கோளூரிலேசிலநாள் யிருந்தார் ஒருநாள் திருவாரூரிலிருக்கின்ற வன்மீகநாதருடைய திருவடிகளை நினைந்து அவர்மேலே திருப்பதிகம் பாடியருளினர்.

திருவாரூர்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பொன்னுமெய்ப்பொருளுந்தருவானைப்போகமுந்திருவும்புணர்ப்பானைப்
பின்னையென்பிழையைப்பொறுப்பானைப்பிழையெல்லாந்தவிரப்பணிப்பா
யின்னதன்மையனென்றறிவொண்ணுவெம்மானையெளிவந்தபிரானை [னை
யன்னம்வைகும்வயற்பழனத்தணியாரூரானை மறக்கலுமானே.

ஒரூரென்றுலகங்களுக்கெல்லாமுறைக்கலாம்பொருடாயுடன்கூடிக்
காரூருங்கமழ்கொன்றைநன்மாலைமுடியன்காரிகைக்காரணமாக
ஆரூரைமறத்தற்கரியானையம்மான்றிருப்பேர்கொண்டதொண்ட
னூரன்னடிநாயுரைவல்லாரமரலோகத்திருப்பவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின் அந்த திருவாரூருக்குச் செல்லும்பொருட்டு அடியார்களோடு எழுந்து வழிக்கொண்டுசென்றூர், செல்லும்பொழுது சேரமான் பெருமாளுயனர் பிரிவாற்றுதவராகி, எழுந்து அவரைப்பின்றொடர்ந்து

போகாதபடி தடுத்து, அதற்கு அவர் உடன்படாமை கண்டு. மந்திரிகளையழைத்து, தம்முடைய நகரத்திலிருக்கின்ற களஞ்சியத்திலுள்ளபொன் இரத்தினம் ஆபரணம் வஸ்திரம் சுகந்தவர்க்கம்முதலிய திரவியங்களெல்லாம் பல ஆட்களின்மேலேசுமத்தி அனுப்பும்படி ஆஞ்ஞாபிக்க, அவர்கள் அப்படியேசெய்தார்கள். சேரமான்பெருமாணாயனார் அந்தச் சுமையாட்களைச் சுந்தரமூர்த்திசுவாமிகளுடைய பரிசனத்துக்குமுன் செல்லும்படி அனுப்பி, அவரை விழுந்து நமஸ்கரிக்க; அவர் அவரைத் தழுவி விடைகொடுத்து மலைநாட்டைநீங்கி, சுரங்களையும், கான்யாறுகளையும், வனங்களையும்,கடந்து திருமுருகன்பூண்டிவழியேபோனார். அதற்கு அயலிலேபோம்பொழுது பரமசிவன் தம்முடைய பூதகணங்களை நோக்கி, நீங்கள் வேடவடிவங்கொண்டுசென்று சுந்தரனுடைய பண்டாரங்களைக்கவருங்கள் என்று ஆஞ்ஞாபிக்க, அவைகள் சுந்தரமூர்த்தியுடைய சுமையாட்கள் வரும்வழியிலே வேடுவர்களாகிப்போய், வில்லைவளைத்து நாணிபூட்டி அம்புகளைத்தொடுத்து நாங்கள் உங்களைக்கொன்றுபோடுவோம்,இத்திரவியங்களெல்லாவற்றையும் போட்டுவிட்டுப்போங்கள் என்றுசொல்லி கோபத்தினாலே குத்தி அந்தத் திரவியங்களெல்லாவற்றையுங் கவர்ந்துக்கொண்டன. அவர்கள் துன்பத்துடனே ஓடிப்போய் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பக்கத்தில் சேர்ந்தார்கள். அவ்வேடுவர்களோ சிவாஞ்ஞையினாலே சுந்தரமூர்த்திசுவாமிகள் பக்கத்திலே செல்லாமல் நீங்கிவிட சுந்தரமூர்த்திசுவாமிகள் திருமுருகன் பூண்டியிலே சென்று கோயிலிலேபிரவேசித்து சுவாமியைவணங்கி வேடுவர்பறிக்கும் வேஞ்சுரத்தில் எத்துக்கு இங்கு இருந்தீரென்று "கொடுகுவெஞ்சிலை" என்னுந் திருப்பதிகம்பாடியருளினார்.

திருமுருகன்பூண்டி-பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

கொடுகுவெஞ்சிலைவடுகவேடுவர்விரவலாமைசொல்லித்
திடுகுமொட்டெனக்குத்திக்கூறைகொண்டாறலைக்குமிடம்
முடுகுநாறியவடுகர்வாழ்முருகன்பூண்டிமாநகர்வாய்
விடுகுநுண்ணிடைமங்கைதன்னொடுமெத்துக்கெங்கிருந்தீரெம்பிரானீரே.

முந்திவானவர்தாந்தொழுமுருகன்பூண்டிமாநகர்வாய்ப்
பந்தணைவிரற்பாவைதன்னைப்பாகம்வைத்தவனைச்
சிந்தையிற்சிவதொண்டனூரனுரைத்தனபத்துங்கொண்
டெந்தம்மடிகளையேத்துவாரிடரொன்றுந்தாமிலரே.

திருச்சிற்றம்பலம்

உடனேகடவுளுடைய திருவருளினால் அவ்வேடுவர்கள் தாங்கள் பறித்த திரவியங்களெல்லாவற்றையும் அந்தக்கோயில்வாயிலிலேகொண்டுபோய்க் குவித்தார்கள், சுந்தரமூர்த்திசுவாமிகள் அதுகண்டு சுவாமியை வணங்கி அவைகளை எடுத்துக்கொண்டு முன்னேசெல்லும்படி சுமையாட்களை ஏவி அவ்விடத்தைநீங்கி கொங்கதேசத்தைக் கடந்துபோய், திருவாரூரை அடைந்து அங்கே சுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருந்தார்

சிலநாட்சென்றபின் சுந்தரமூர்த்திசுவாமிகள் சேரமான்பெருமாணாயனாரைநினைந்து அவரிடத்திற்போம்படிகருதிருப், சோழமண்டலத்தைகடந்து கொங்கதேசத்தை அடைந்து திருப்புக்கொளியூரிர்சென்று அங்கே ஒரு வீதியிலே இரண்டுவீடுகளில் ஒன்றிலே மங்கலவொலியும் மற்றதிலே அழுகையொலியும் எழுதலைக்கேட்டு, அங்கேயிருந்த பிராமணர்களைநோக்கி இவ்விரண்டொலியும் ஒருங்குநிகழ்வது என்ன என்றார். அதற்குபிராமணர்கள், ஐந்துவயசுள்ள இரண்டுபுதல்வர்கள் குளத்திலே குளித்தபொழுது, ஒருபுதல்வனை முதலைவிழுங்கிற்று. மற்றப்புதல்வன் பிழைத்துக்கொண்டான். இந்தவீட்டில் ஒலிபிழைத்த புதல்வனுக்கு உபநயநம் செய்யும் ஒலி இந்த வீட்டில் ஒலி இறந்த புதல்வனைக்குறித்து அழும் ஒலியென்று சொன்னார்கள் அதைக்கேட்டுத்திருவுளமிரங்கி நின்றசுந்திரமூர்த்திசுவாமிகளை புதல்வனை இழந்த பிராமணனும் மனைவியுங்கண்டு, ஓடிவந்து, முகமலர்ச்சியோடு அவருடைய திருவடிகளை நமஸ்கரித்தார்கள். சுந்தரமூர்த்திசுவாமிகள் அவர்களுடைய முகத்தைநோக்கி புதல்வனை இழந்தவர்கள் நீங்களா என்று சொல்லியருள அவர்கள் பின்னும்வணங்கி சுவாமி அது முன்னே நிகழ்ந்துபோயிற்று. அதுநிற்க அடியேங்கள் தேவரீரைவணங்குதற்கு நெடுங்காலமாக அவாவி இருந்தோம் அவ்வன்புபழுதாகாமல் தேவரீர் இங்கே எழுந்தருளப்பெற்றோம் என்றார்கள், அதைக்கேட்டநாயனார் இந்தப் பிராமணனும் மனைவியும் தங்கள் புதல்வனையிழந்த துன்பத்தைமறந்து நான் வந்ததற்காகமனமகிழ்கின்றார்கள். ஆகையால் நான் இவர்கள் புதல்வனை அம்முதலைவாயினின்று அழைத்துக்கொடுத்து அவிநாசியில் வீற்றிருக்கின்ற நமதுகடவுளை வணங்குவேன் என்று அருளிச்செய்து, அந்தப் புதல்வனை முதலைவிழுங்கிய வாவி எங்கே என்று வினவி, அதன்கரையிலே எழுந்தருளி அம்முதலை தான்விழுங்கிய புதல்வனைக் கொண்டுவரும்பொருட்டுத் திருப்பதிகம்பாடியருளினார்.

திருப்புக்கொளியூர் அவிநாசி-பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

உரைப்பாருரையுகந்துள்கவல்லார் தங்களுச்சியா
யரைக்காடரவாவாதியுமந்தமுமாயினுல்
புரைக்காடுசோலைப்புக்கொளியூரவிநாசியே
கரைக்கான்முதலையைப்பிள்ளைதரச்சொல்லுகாலனையே

நீரேறவேறுநிமிர்புன்சடைநின்மலமூர்த்தியைப்
போரேறதேறியைப்புக்கொளியூரவிநாசியைக்
காரேறுகண்டனைத்தொண்டனூரன்கருதிய
சீரேறுகாடல்கள்செப்பவல்லார்க்கில்லைதுன்பமே.

திருச்சிற்றம்பலம்.

"உரைப்பாருரை" என்னுந் திருப்பாட்டு முடிதற்குமுன், இயமன் அந்தப்புதல்வனுடைய உயிரைக்கொண்டுவந்து அவ்வாயிலுள்ள முதலை வயிற்றினுள்ளே முந்தினபோதகத்தைச்சென்ற ஆண்டுகளின் வளர்ச்சியையும்உடையதாகத் தோற்றுவித்து அதனுள்ளே புகுத்திவிட்டான்உடனே முதலை அந்தப்புதல்வனைக்கரையிலே கொண்டுபோய்உமிழ்ந்தது அப்பொழுது மாதாவானவள் ஓடிப்போய் அப்புதல்வனை எடுத்துக்கொண்டுவந்து நாயகனோடுசுந்தரமூர்த்திசுவாமிகளுடைய திருவடியிலேவிழுந்துநமஸ்கரித்தாள். இவ்வற்புதத்தைக்கண்ட தேவர்கள் ஆகாயத்தில்னின்று நாயனார்மேல் புஷ்பமாரி பொழிந்தார்கள். பிராமணர்களெல்லாரும் உத்தரீயங்களை ஆகாசத்திலேவீசிஆரவாரித்தார்கள்

சுந்தரமூர்த்திசுவாமிகள் அந்தப்புதல்வனையும்அழைத்துக்கொண்டு அவிநாசிக்குப்போய், சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடிக்கொண்டுதிரும்பி, அப்புதல்வன் வீட்டிற்சென்று அவனுக்கு உபநயனம் செய்வித்து, கொங்குதேசத்தைக்கடந்து மலைநாட்டை அடைந்து தம்மை வந்து எதிர்கொண்ட சேரமான் பெருமாணாயனாரோடும் அவர் வீட்டிற்சென்று இருந்தார் இருந்த நாட்களிலே. அம்மலை நாட்டிலிருக்கின்ற சிவஸ்தலங்கள் பலவற்றிற்கும் போய்ச் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு மகோதைக்குத்திரும்பினார்.

இப்படிப் பலநாட்சென்றபின், ஒருநாள் சேரமான் பெருமாணாயனார் ஸ்நானம் பண்ணும்பொழுது சுந்தரமூர்த்திகள் திருவஞ்சைக்களத்துக்குப்போய், அங்கிருக்கின்ற சிவாலயத்தை பிரதட்சிணஞ்செய்து, உள்ளேபுகுந்து, சந்நிதானத்திலேவிழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்று அக்கினியிற்பட்ட மெழுகுபோல மனம் கசிந்துருக இரண்டு கண்ணி

னின்றும், ஆனந்தஅருவிசொரிய, சரீரத்திலே உரோமாஞ்சிதம்கொள்ள இரண்டுகைகளும் சிரசின்மேல் ஏறிக்குவிய, அடியேனை இப்பிரபஞ்சவாழ்க்கையினின்றும்நீங்கித் தேவரீருடைய திருவடியிலே சேர்த்தருளவேண்டுமென்று திருப்பதிகம்பாடியருளினார்.

திரு அஞ்சைக்களம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தலைக்குத்தலைமாலையணிந்ததென்னே
சடைமேற்கங்கைவெள்ளந்தரித்ததென்னே
யலைக்கும்புலித்தோல்கொண்டசைத்ததென்னே
யதன்மேற்கதநாகக்கச்சார்த்ததென்னே
மலைக்குநிகரொப்பனவன்றிரைகள்வலித்
தெற்றிமுழங்கிவலம்புரிகொண்
டலைக்குங்கடலங்கரைமேன்மகோதையணியார்
பொழிலஞ்சைக்களத்தப்பனே.

எந்தம்மடிகளிமையோர்பெருமானெனக்
கென்றுமளிக்குமணிமிடற்ற
னந்தங்கடலங்கரைமேன்மகோதையணியார்
பொழிலஞ்சைக்களத்தப்பனை
மந்தம்முழவுங்குழலுமியம்பும்வளர்
நாவலர்கோனம்பியூரன்சொன்ன
சந்தம்மிகுதண்டமிழ்மாலைகள்கொண்டடி
வீழவல்லார்தடுமாற்றிலரே.

திருச்சிற்றம்பலம்.

அப்பொழுது கைலாசகிரியிலே பரமசிவன் பிரமன்முதலிய தேவர்களைநோக்கி, நீங்கள்போய் நம்முடைய அடியேனாகிய சுந்தரனை வெள்ளையானையின்மேலேற்றிக்கொண்டுவாருங்களென்று ஆஞ்ஞாபித்தார் அதைக்கேட்ட தேவர்கள் சுவாமியை நமஸ்கரித்து அநுமதிபெற்று வெள்ளை யானையையுங்கொண்டு, திருவஞ்சக்களத்தை அடைந்து, கோயிலை வலஞ்செய்து, திருவாயிலிலேபோய் உள்ளே நின்றுவந்த சுந்தரமூர்த்தி சுவாமியை எதிர்கொண்டு, சுவாமியுடைய ஆஞ்ஞையைத் தெரிவித்தார்கள். அப்பொழுது சுந்தரமூர்த்திநாயனார் சுவாமியைநினைத்து நமஸ்கரித்து! எழுந்து தேவர்களுக்கு எதிரேபோனார்.

தேவர்கள் அவரை பிரதட்சிணஞ்செய்து வெள்ளையானையின்மேலேற்ற அவர் பஞ்சவாத்தியங்கள் ஆரவாரிக்கவும், தேவர்களெல்லாரும் ஸ்தோத்திரஞ்செய்து புஷ்பமாரிபொழியவும் தம்முடைய தோழராகிய சேரமான் பெருமாணாயனாரைத் திருவுளத்திலே நினைத்துக்கொண்டுசென்றார் சேரமான் பெருமாணாயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய செயலை அறிந்து அந்தக்ஷணமே அருகில்நின்றவோர் குதிரையின்மேலேறிக்கொண்டு திருவஞ்சைக் களத்துக்குப்போய் வெள்ளையானையின்மேலேறிக்கொண்டு ஆகாயத்திற் செல்லும் சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் கண்டு தாமேறிய குதிரையின் செவியிலே ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதியருளினார். உடனே அந்தக்குதிரையானது ஆகாயத்திலேபாய்ந்து, சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய வெள்ளையானையை அடைந்து அதனை வலஞ்செய்து அதற்கு முன்னாகச்சென்றது சேரமான்பெருமாணாயனாருடைய படைவீரர்கள் குதிரையிற் செல்லும் அந்நாயனாரைத் தங்கள் கண்ணுக்குப் புலப்படுமெல்லைவரைக்கும் ஆகாயத்திலேகண்டு பின் காணாமையால் மிகுந்த திடபத்தியினாலே உருவிய உடைவாட்களினால் தங்கள் தங்கள்தேகத்தைச்சேதித்து, வீரயாக்கையைப் பெற்றுப்போய் சேரமான் பெருமாணாயனாருக்கு முற்பட்டு அவரைச்சேவித்துக்கொண்டு சென்றார்கள், சேரமான்பெருமாணாயனார் முன்சொல்லப் பின்சென்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் "தானெனை முன்படைத்தான்" என்னுந்திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டு கைலாசமலையின் தெற்குவாயிலுக்கு முன்போனார்.

திருநொடித்தான்மலை-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.


தானெனைமுன்படைத்தானதறிந்துதன்பொன்னடிக்கே
நானெனபாடலந்தோநாயினேனைப்பொருட்படுத்தி
வானெனைவந்தெதிர்கொள்ளமத்தயானையருள்புரிந்து
ஊனுயிர்வேறுசெய்தானொடித்தான்மலையுத்தமனே.

ஊழிதோறூழிமுற்றுமுயர்பொன்னொடித்தான்மலையைச்
சூழிசையின்கரும்பின்சுவைநாவலவூரன்சொன்ன
வேழிசையின்றமிழாலிசைந்தேத்தியபத்தினையு
மாழிகடலரையாவஞ்சையப்பர்க்கறிவிப்பதே.

போன உடனே இருவரும் யானையினின்றும் குதிரையினின்றும் இறங்கி பலபல வாயில்களையும் கடந்து திருவணுக்கன் றிருவாயிலை அடை

ந்தார்கள். அங்கே சேரமான்பெருமாணாயனார் தடைப்பட்டுநிற்க சுந்தரமூர்த்தி சுவாமிகள் உள்ளேபோய் சுவாமி சன்னிதானத்திலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து ஸ்தோத்திரம் செய்துகொண்டு நின்றார். சுவாமி அவரைநோக்கி சுந்தர வந்தனையோவென்றார் அதைக்கேட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் சுவாமீ! அடியேன் செய்த பிழை பொறுத்து என்னையடிமையாகக்கொண்டு பந்தத்தினின்று நீக்கி அடியேனுக்குத் திருவடி தந்தருளியபெருங்கருணையை என்னாற்சொல்லுந்தரத்ததோ வென்று சொல்லி, பலமுறை நமஸ்காரஞ்செய்து சிவானந்த வெள்ளத்தில் அமிழ்ந்தி நின்றார்.

பின்பு சுவாமி தேவரீருடைய திருவடிக அடையும்பொருட்டுச் சேரமான்பெருமாள் திருவணுக்கன் திருவாயிலின் புறத்திலே வந்து நிற்கிறார் என்றுசொல்ல, சுவாமி அவரை உள்ளே அழைப்பித்து நீயும் ஆலாலசுந்தரனும் நம்முடையகணங்களெல்லாவற்றிற்குந் தலைவராயிருங்களென்று அருளிச்செய்தார். அதைக்கேட்டுச் சுவாமியைநமஸ்கரித்து எழுந்து அவருடைய திருவருளைத்தலைமேற்கொண்டு சுந்தரமூர்த்திசுவாமிகள் ஆலாலசுந்தரராகி முன்னே தாம்செய்த திருத்தொண்டைச் செய்பவரும் சேரமான்பெருமாணாயனார் கணநாதராகி அவர்செய்யும் தொழிலைச் செய்பவருமாயினார்கள். முன்னேபூமியில் அவதரித்த பரவையாரும் சங்கிலியாரும் முறையே கமலினியாரும் அநிந்திதையாருமாகி பார்வதிதேவிக்குத் தாங்கள் முன்செய்த திருத்தொண்டைச்செய்துவந்தார்கள் சுந்தரமூர்த்திசுவாமிகள் தாம் வழியிலே அருளிச்செய்த திருப்பதிகத்தை இந்தத் தக்ஷிணபூமியிலே ஏற்றும்பொருட்டுச் சமுத்திரராஜனாகிய வருணனிடத்திலே கொடுக்க அவன் அதைத் திருவஞ்சைக்களத்திலே உய்த்துத் தெரிவித்தான்



உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
முதலாவது,

தில்லைவாழந்தணர் சருக்கம்

இரண்டாவது,

தில்லைவாழந்தணர் புராணம்.

நல்லவானவர்போற்றுந்தில்லைமன்றுணடகஞ்
செய்பெருமானுக்கனியார்நற்பொற்
றெல்லைவான்பணியெடுத்தற்குரியார்வீடுந்
துறந்தநெறியார்தொண்டத்தொகைமுன்பாடத்
தில்லைவாழந்தணரென்றெடுத்துநாதன்
செப்புமருளுடையார்முத்தீயார்பத்திக்
கெல்லைகாண்பரியாரொப்புலகிற்றுமே
யேந்துளாரெமையாளவாய்ந்துளாரே.

சிவஸ்தலங்களெல்லாவற்றுள்ளும் மஹாமுக்கியமுள்ளதாகிய சிதம்பர ஸ்தலத்திலே இருக்கின்றகனகசபையிலே ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளும் சபாநாதருக்கு அருச்சனைசெய்கின்ற பிராமணர்கள் தில்லைவாழந்தணரென்று சொல்லப்படுவர்கள் அவர்கள் மூவாயிரவர் அவர்கள் இருக்கு, யசுஸ், சாமம், அதர்வணம் என்கின்ற நான்கு வேதங்களையும் அத்தியயனம் செய்தவர்கள் சிக்ஷை, கற்பம், வியாகரணம், சந்தசு சோதிடம் நிருத்தம் என்கின்ற வேதாங்கங்கள் ஆறையும் கற்று வல்லவர்கள். ஆகவனீயம் காருகபத்தியம், தட்சிணாக்கினிஎன்னும் மூன்றக்கினிகளையும் விதிப்படி வளர்க்கின்றவர்கள், குற்றமில்லாத வம்சத்தில் உதித்தவர்கள், கிருகஸ்தாச்சிரமத்தில் ஒழுகுகின்றவர்கள், ஓதல், ஓதுவித்தல், வேடல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்கின்ற அறுவகைத் தொழிலையும் செய்கின்றவர்கள் விபூதி உருத்திராட்சம் என்கின்ற சைவசாதனங்களை விதிப்படி தரிக்கின்றவர்கள் காமிகமுதல் வாதுளமீறாகிய இருபத்தெட்டுச் சைவாகமங்களிலும் பிரதிபாதிக்கப்படுகின்ற சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற நான்கு பாதங்களையும் அறிந்து அனுட்டிக்கின்றவர்கள். சிவனிடத்தில் இடைவிடாது வைக்கப்படும் அன்பே தங்களுக்குச் செல்வமெனக் கொள்கின்றவர்கள், உயர்வொப்பில்லாத கடவுளாகிய தியாகேசரே முற்காலத்திலே சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருத்தொண்டத்தொகை பாடும்படி அருளிச்செய்தபோதுமுதல் "தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன்" என்று அவர்களைத் தமது திருவாக்கினால் எடுத்துச் சொன்னாரென்னில் அவர்களுடைய அளவிறந்த மகிமையை நாமா சொல்லவல்லம்.

உ

சிவமயம்.

மூன்றாவது

திருநீலகண்ட நாயனார் புராணம்

தில்லைநகர்வேட்கோவர்தூர்த்தராகித்
தீண்டிலெமைத்திருநீலகண்டமென்று
சொல்லுமனையாடனையேயன்றிமற்றுந்
துடியிடையாரிடையின்பந்துறந்துமூர்த்தங்
கெல்லையிலோடிறைவைத்துமாற்றிநாங்க
ளெடுத்திலமென்றியம்புமெனவிழிந்துபொய்கை
மெல்லியலாளுடன்மூழ்கியிளைமைமெய்தி
விளங்குபுலீச்சரத்தானைமேவினாரே.

சிதம்பரத்திலே குயவர் குலத்திலே பொய்சொல்லல் சிறிதுமின்றித் தருமநெறியிலே வாழ்கின்றவரும், இல்லறத்திலே நிற்பவரும், சிவபத்தி அடியார் பத்திகளிலே சிறந்தவரும் ஆகிய தொண்டர் ஒருவர்இருந்தார். அவர் தம்முடைய குலத்துக்கு ஏற்பமட்கலங்களை வனைந்துவிற்றுச் சீவனஞ்செய்து ஓடுகளைச் சிவனடியார்களுக்குக் கொடுத்தும் வந்தார். அவர் ஆதிகாலத்திலே பரமசிவன் திருப்பாற்கடலில் நின்றுஎழுந்த ஆலகாலவிஷத்தை உலகம் உய்யும்பொருட்டு உண்டபொழுது அவருடைய கண்டமானது அவர் தம்மை அடைந்தவர்களுக்கு வரும் இடையூறுகளை நீக்கி அருளுவார் என்பதை நாம் எல்லாரும் அறிந்துகொள்ளும்படி ஓர் அறிகுறியாய் விளங்கும்பொருட்டு அதனை உள்ளே புகவொட்டாமல் தடுத்துத் தானே தரித்துக்கொண்டது என்று நினைந்து. அக்கடவுளுடைய கண்டத்தைத் திருநீலகண்டம் என்று எப்பொழுதும் சிறப்பித்துச் சொல்லுவார் அதனால் அவருக்குத் திருநீலகண்டநாயனார் என்னும் பெயர் உண்டாயிற்று ஒருநாள் அவர் அவ்வூரிலே ஓர் வேசியினிடம் சென்று வீட்டுக்குத்திரும்ப கற்பிலே சிறந்த அவர் மனைவியார் அதை அறிந்து அதைக்குறித்துத் தம்முடைய மனதிலே தோன்றிய கோபத்தை அடக்கிக்கொண்டு இல்வாழ்க்கைக்குரிய மற்றப்பணிகளெல்லாஞ்செய்தும், புணர்ச்சிக்குமாத்திரம் இசையாதவரானார். நாயகர் தம்முடைய மனைவியார் கொண்ட ஊடலைத் தீர்க்கும்பொருட்டு அவர் சமீபத்திலேபோய் வேண்டிய இரப்புரைகளைச்சொல்லி அவரைத் தீண்டும்படி சென்றார். அப்பொழுது மனைவியார் நீர் நம்மைத் தீண்டுவீராயில் திருநீலகண்டம் என்று ஆணையிட்டார்,

அதைக்கேட்ட நாயகர் பரமசிவனுடைய திருநீலகண்டத்தின்மேலா ம்வைத்த பத்தி குன்றுவண்ணம் அம்மனைவியாரைத் தொடாமல் நீங்கி இவர் நம்மை என்று பன்மையாகச் சொன்னதனால் இவரைமாத்திரம் அன்றி மற்றப்பெண்களையும் நான் மனதினால் நினைத்தலுஞ் செய்யேன் என்று உறுதிகொண்டார். அவர்கள் இருவரும் தங்கள் வீட்டில் நின்று புறப்படாதொழிந்து அவ்வீட்டில்தானே இருந்து, இல்லறத்திற்குரிய பிறசெய்கைகளெல்லாம் செய்துகொண்டு புணர்ச்சி இன்மையைப் பிற ரறியாதபடி வாழ்ந்தார்கள், இளமைப்பருவத்தை உடைய இருவரும் அவ்வாணையைப் பேணிக்கொண்டு பலவருஷங்கள் செல்ல, யௌவனம் நீங்கி வயோத்திகர்களாகி வருத்தமுற்றார்கள், உற்றும் சிவபக்தி சிறிது ம் குறையாதவர்களாகி இருந்தார்கள்.

இப்படி இருக்கும் காலத்திலே காருண்ணிய, ஸ்வரூபியாகிய பரம சிவன் அவ்வடியாருடைய மகிமையை உலகத்தவர்கள் ஐயந்திரிபறஅறி ந்து அவருடைய தொண்டை அனுசரித்து உய்யும்பொருட்டு ஒரு சிவ யோகி வடிவங்கொண்டு அவ்வடியார்வீட்டிற்குச சென்றார். அவவடியா ர் அவரைக்கண்டு எதிர்கொண்டு வீட்டினுள்ளே அழைத்துக்கொண்டு போய் ஆசனத்தில் இருத்தி அவருக்குச் சாஸ்திரவிதிப்படி அன்பினோ டு பூசைசெய்து நமஸ்கரித்து எழுந்து அஞ்சலி செய்துநின்று சுவாமீ அடியேன் தேவரீருக்குச் செய்யவேண்டிய குற்றேவல் யாதுஎன்று வி னவ சிவயோகியார் இந்த ஒட்டைவைத்திருந்து, நாம் கேட்கும்போது தா இந்த ஒடு தனக்கு வேறொப்பிலாதது தன்னிடத்திலேசேர்ந்த சகல வஸ்துக்களையும் பரிசுத்தம்செய்வது, பொன்னிலும் இரத்தினத்திலும் பார்க்கக் காப்பாற்றப்படத் தக்கது இப்படிப்பட்ட மேன்மையுள்ளதா கிய இந்த ஓட்டை நீ வாங்கி வைத்திரு என்று அருளிச்செய்தார், அ தைக்கேட்ட அடியவர் அவரை வந்தனஞ்செய்து, அவ்வோட்டை வாங் கிக்கொண்டு வீட்டிலே ஒருபக்கத்தில் சேமித்து வைத்துவிட்டு திரும்பி வந்துபோம்படி எழுந்த சிவயோகியாருக்குப்பின் சிறிதுதூரம் சென்று அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினார்.

வெகுநாட்கள் கழிந்தபின், ஒருநாள்பரமசிவன் தாம்வைக்கக்கொ டுத்த ஒட்டை வைக்கப்பட்ட இடத்தில் இல்லாதொழியும்படிசெய்து, அவ்வடியாருடைய உண்மை நிலையைப் பிறர்க்குப் புலப்படுத்தும் பொ ருட்டு முன்போலச் சிவயோகி வடிவங்கொண்டு அவர் வீட்டுக்குப்போ னார் அவர் சிவயோகியாரை முன்போல உபசரித்து சுவாமீ! தேவரீர் இவ்வீட்டிற்கு எழுந்தருளிவந்தது அடியேங்கள் பூர்வசன்மத்திற் செ ய்த தவத்தினால் என்று சொல்லிநிற்க, சிவயோகியார் நாம் முன்னாளி லே உன்னிடத்திலே தந்த ஓட்டை இப்பொழுது தா என்றார். அடிய வர் அதைக் கொண்டுவந்து கொடுக்கும்பொருட்டு உள்ளேபோய் பார்

த்துக் காணாமையாலே திகைத்து அங்கு நின்றவர்களிடத்திலே கேட்டு
ம் பிற இடங்களிலே தேடியக்காணாதவராகி, சிவயோகியார்க்கு உத்தரம்
சொல்வதற்கு ஒன்றுமின்றி அங்கே நின்றார் சிவயோகியார் உள்ளேநின்
று அடியார் கேட்கும்படி நொடிப்பொழுதில் வருவேன் என்றுபோன நீ
ஏன் இவ்வளவுநேரம் தாமதித்துநிற்கிறாய் என்று கேட்க அடியவர் வந்
து சிவயோகியாரை வணங்கி சுவாமி தேவரீர் தந்தஓட்டை வைத்தஇட
த்திலும் பிற இடங்களிலும் தேடிக் காணேன் பழையதாகிய அந்த ஓட்
டைப்பார்க்கிலும் புதிதாகிய வேறொரு ஓடுதருவேன் அந்த அங்கீகார
ப்செய்து அடியேன்செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும் என்
று சொல்லிப் பிரார்த்தித்து நின்றார் உடனே சிவயோகியார் அவரைக்
கோபித்துப் பார்த்து, நீ என்னசொன்னாய் நான் வைத்த மண்ணோட்
டையேயன்றிப் பொன்னோட்டை தந்தாயாயினும் நான்வாங்கேன் நான்
முன்னே உன்னிடத்தில் தந்த ஓட்டையே கொண்டுவா என்றுசொல்ல
அடியவர் சுவாமீ தேவரீர்தந்த ஓட்டைத் தேடியுங்காணேன் வேறேநல்
ல ஓடு தருகின்றேன் என்று சொல்ல அதற்கு உடன்படாமல் என்னோ
ட்டையே கொண்டுவா என்று சொல்லுகிறீர் இந்தச் சொல்லு என்ன
ற்றை முழுதையும் ஒழித்துவிட்டது என்றார். அதற்குச் சிவயோகியார்
நான் உன்னிடத்தில் வைத்த அடைக்கலப்பொருளை நீகவர்ந்துகொண்
டு பாவத்துக்குச் சிறிதும் அஞ்சாமல் பலபாகங்கள் செய்கின்றாய் சகல
ரும் அறியும்படி உன்னைத்தப்பவொட்டாமல் மறித்து என்னோட்டைவாங்
கிக்கொண்டே அன்றி நான்போகேன் என்றுசொல்ல, அடியவர் சுவாமீ
தேவரீர் தந்த ஓட்டை நான் கவர்ந்தவனல்லன், என்னிடத்தே களவில்
லாமையை எப்படித்தெரிவிப்பேன், சொல்லும் என்றார் சிவயோகியார்
உன் புத்திரனைக் கையிலே பிடித்துக்கொண்டு குளத்திலேமுழுகி நான்
கவரவில்லை என்று சத்தியம்பண்ணித்தா என்றுசொல்ல, அடியவர்அப்
படிச் செய்தற்கு எனக்குப்புத்திரன் இல்லையே, என்னசெய்வேன் சொ
ல்லும் என்றார், சிவயோகியார் உன்மனைவியைக் கைப்பிடித்து முழுகிச்
சத்தியம் பண்ணித்தா என்றுசொல்ல, அடியவர் நானும் என்மனைவியும்
எங்களிடத் துண்டாயிருக்கும் ஓர் சபதத்தினாலே ஒருங்கு முழுகுதல்
கூடாது நான்மாத்திரம் குளத்திலே முழுகிச் சத்தியம்பண்ணித் தருகி
றேன் வாரும் என்றார். அதற்குச் சிவயோகியார் நான் முன்னே தந்த
ஓட்டைத் தராமலும் அதைக் கவர்ந்து கொள்ளவில்லையெனின் உன்
மனைவியைக் கைப்பிடித்துச் சத்தியஞ்செய்து தராமலும் மனம் வலித்
திருக்கின்றாய். தில்லைவாழந்தணர்கள் கூடியிருக்கும் பெரிய சபையிலே
இவ்விஷயத்தைக் குறித்துப் பேசப்போகின்றேன் என்றுசொல்லி அந்
தச் சபைக்குப்போக திருநீலகண்ட நாயனாரும் அவருக்குப் பின்னே
போனார். சிவயோகியார் அந்தப் பிராமணர்களைப்பார்த்து இந்தக்குய
வன் தன்னிடத்திலே நான் வைத்திருக்கும்படி கொடுத்த ஓட்டைத்

தருகின்றானில்லை அதனை இழந்தானுயின் தன்மனைவியைக் கைப்பிடித்துக் குளத்தில் முழுகிச் சத்தியம்பண்ணித் தருகின்றானுமில்லை என்றார் உடனே பிராமணர்கள் அடியவரை நோக்கி திருநீலகண்டரே நடந்த சமாசாரத்தை நீர் சொல்லும் என்றுகேட்க அவர் சுவாமிகாள் இவர் தந்த ஓடு நான்வைத்த இடத்தில் நின்றும் மறைந்துபோய்விட்டது நான்தேடிப்பார்த்துங் காணேன் இதுவேநடந்த சமாசாரம் என்றார் அதற்குப் பிராமணர்கள் இவர் ஓட்டை நீர் இழந்தீராகில் இவர் கேள்விப்படி உம்முடைய மனைவியைக் கைப்பிடித்துக் குளத்திலே முழுகிச் சத்தியஞ்செய்து கொடுத்தலே நியாயம் என்றார்கள் அடியவர் அதைக் கேட்டு தாம் அம்மனைவியாரைத் தீண்டாதிருத்தலைக் குறித்துப் பேசக் கூடாதவராகி தகுந்தபடி குளத்திலே முழுகிச் சத்தியஞ்செய்து தருகிறேன்வாரும் என்று சொல்லி சிவயோகியாரோடு தம்முடைய வீட்டுக்குப்போய் மனைவியாரையும் அழைத்துக்கொண்டு திருப்புலீச்சரத்துக்கு முன்னிருக்கின்ற வாவியிலேபோய் ஒரு மூங்கிற்றண்டை ஒரு புறத்திலே மனைவியார் பிடிக்க மற்றப்புறத்திலே தாம் பிடித்துக்கொண்டு இறங்கினர் அதைக்கண்ட சிவயோகியார், உன்மனைவியைக் கைப்பிடித்துக்கொண்டு மூழ்கு என்று சொல்ல திருநீலகண்ட நாயனர் அப்படிச் செய்யக் கூடாமையை உலகத்தார் அறியும்படி முன்னுளிலே தாம்செய்த வேசிகமனமும் அதனாலுண்டாகிய சபதமும் அந்தப்பிரகாரம் தவறாமல் நடந்துவருதலும் சொல்லிமுழுகினர், முழுகிக் கரையிலேறிய திருநீலகண்டநாயனரும் மனைவியாரும் மூப்புப்பருவம் நீங்கி இளமைப்பருவம் உடையவர்களாய் பிரகாசித்தார்கள். அவ்வதிசயத்தைக்கண்ட சமஸ்தரும் அங்குநின்ற சிவயோகியாரைக் காணுதவர்களாய மயங்கி நின்றார்கள், சுவாமி பார்வதிதேவியோடும் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருளினர். அப்பொழுது திருநீலகண்டநாயனரும் மனைவியாரும் பூமியிலேவிழுந்து அவரை நமஸ்கரித்து எழுந்து ஸ்தோத்திரஞ் செய்துகொண்டு நின்றார்கள். சுவாமி அவர்களைநோக்கி ஐம்புலன்களை வென்றதனாலே சிரேஷ்டமடைந்த அன்பர்களே எக்காலத்தும் இவ்விளமைநீங்காமல் நம்மிடத்தில் இருங்கள் என்றுசொல்லி மறைந்தருளினர் பத்திவலிமையை திருநீலகண்டநாயனரும் மனைவியாரும் யாவராலும்செய்தற்கரிய பேருஞ்செய்கையைச்செய்து சிவலோகத்தை அடைந்து பேரின்பத்தை அனுபவித்து வாழ்ந்திருந்தார்கள்.

உ

சிவமயம்.

நான்காவது,

இயற்கைநாயனார் புராணம்.

எழிலாருங்காவிரிப்பூம்பட்டினத்துளியல்
வணிகரியற்பகையாரிருவர்தேட
வழலாயபிரான்றார்த்தமறையோனாகியா
யிழையைத்தரவேண்டியணையவையன்
கழலாரப்பணிந்துமனைக்கற்பின்மேன்மைக்
காதலியைக்கொடுத்தமர்செய்கருத்தால்வந்த
பிழையாருஞ்சுற்றமெலாந்துணித்துமீளப்
பிஞ்ஞகனரைழைத்தருளப்பெற்றுளாரே.


சோழமண்டலத்திலே காவேரிநதி சமுத்திரத்தோடு கலத்தலால் காவேரிசங்கமம் எனப்பெயர்கொண்ட விசேடதீர்த்தம்பொருந்தியகாவிரிப்பூம்பட்டினத்திலே வைசியர்குலத்திலே குருலிங்கசங்கமபத்திகளிற் சிறந்தவரும் ஔதாரியம் உள்ளவரும் ஆகிய இயற்பகையாரென்பவரொருவர் இருந்தார். அவர் இல்லறத்தில் இருந்து விபூதிஉருத்திராக்ஷம் தரித்த சிவபத்தர்களுக்கு அவர்கள்விரும்பிய எல்லாவற்றையும் மகிழ்ச்சியோடு கொடுத்துக்கொண்டு வருங்காலத்தில் ஒருநாள் பரமசிவனானவர் அவ்வியற்பகையார் அடியார்கள் விரும்பியவை யாவையேனும் அவற்றை மறாதுகொடுத்தலைச் சகலருக்கும் புலப்படுத்தும்பொருட்டு ஒருபிராமண வடிவங்கொண்டு விபூதிதிருமேனியிலேபிரகாசிக்க விடபுருஷவேடமுந்தோன்ற அவர் வீட்டுக்குச் சென்றார். இயற்பகையார் அதுகண்டு அவரை எதிர்கொண்டு நமஸ்கரித்து அழைத்துக்கொண்டுபோய் விதிப்படி அருச்சித்து சுவாமீ தேவரீர் இங்கே எழுந்தருளியது பூர்வசன்மத்தில் அடியேன் செய்த தவத்தினாற்போலும் என்றார்; அதுகேட்ட ஐயர் இயற்பகையாரை நோக்கி சிவனடியார்கள் விரும்பிக்கேட்பன யாவையெனினும் அவைகளைமறாமல் மகிழ்ச்சியோடு கொடுத்தலை நான் கேள்வியுற்று உம்மிடத்திலுள்ள ஒருபொருளை விரும்பி இன்றைக்கு இங்கேவந்தேன் நீர் தருதற்கு இசைவீராகில் அந்தப்பொருள் இன்னது என்று சொல்லுவேன்என்றார். அதற்கு இயற்பகையார் எப்படிப்பட்ட பொருளாயினும் என்னிடத்தில் இருக்குமாயின் அந்தப்பொருள் நமதுகடவுளாகிய பரமசிவனுடைய அடியார்களுக்கு உரியபொருளேயாம், இதைக்குறித்துத் தேவரீர் சந்தேகிக்க



வேண்டுவதில்லை, திருவுள்ளம் விரும்பியதை இன்ன என்று சொல்லிய ருளும் என்று சொல்ல ஐயர் உம்முடைய மனைவியை விரும்பி வந்தேன் என்றார்.

அப்பொழுது இயற்பகையார் முன்னிலும் பார்க்க மிகமகிழ்ந்து வணங்கி நின்று சுவாமீ தேவரீர் அடியேனிடத்தில் உள்ள பொருளையே விரும்பிக்கேட்டது அடியேனுடைய பாக்கியம் என்று சொல்லி, சீக்கிரமாக உள்ளேபோய், கற்பிலேசிறந்த தம்முடைய மனைவியரை நோக்கி, நான் இன்றைக்கு உன்னை இந்தச்சிவனடியாருக்குக் கொடுத்துவிட்டேன் என்றார், உடனே மனைவியார் மனங்கலங்கிப் பின்னே தெளிந்து பிராணநாயகரே நீர் கட்டளையிட்டது எதுவோ அதையே நான்செய்வேன் அதையன்றிச்செய்வதற்கு உரியகாரியம் எனக்குவேறென்று உண்டோ இல்லை என்று சொல்லி அவரைவணங்க அவர் தமது மனைவியாரை அங்குவந்த சிவனடியாருக்கு மனைவியாக பற்றி வணங்கினார். மனைவியார் போய் அவ்வையருடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்றார். அதுகண்ட இயற்பகை நாயனார் மனமகிழ்ந்து அவ்வையரை வணங்கி இன்னும் அடியேன் செய்யவேண்டிய பணியாது என்றுவினவ, ஐயர் இந்தப்பெண்ணை நான் தனியே கொண்டுபோகையால் உங்கள்மேலேபற்றுள்ள பந்துக்களையும் ஊரவர்களையும் கடக்கும் வரைக்கும் அவர்களால் எனக்கு ஓர் இடையூறும் உண்டாகாதிருக்கும்படி நீ துணையாகவே வரவேண்டும் என்றார். இயற்பகை நாயனார் அதைக்கேட்டு இவர் கட்டளையிடுமுன் நானே நினைந்து செய்யவேண்டிய இக்குற்றேவலைச்செய்யாமல் இவர் சொல்லும் வரைக்கும் தாழ்ந்து நின்றது குற்றம் என்று நினைந்துத் துக்கித்து ஆயுதசாலையிலேபோய், போர்க்கோலங் கொண்டு வாளும் பரிசையும் ஏந்திக்கொண்டு, ஐயரிடத்திற்கு வந்து அவரைவணங்கி அவரையும் மனைவியாரையும் முன் போம்படிசெய்து தாம் பின்னே போனார். அப்பொழுது இயற்பகை நாயனாருடைய சுற்றத்தவர்களும் அவர் மனைவியாருடைய சுற்றத்தவர்களும், இயற்பகை மைத்தியத்தினாலே தன்மனைவியைக் கொடுத்தானாயினும் அவளை ஒருவன் கொண்டுபோவது நியாயமா, என்று தங்கள் மரபுக்குவரும் பெரும் பழியை நீக்கிக்கொள்ளும் பொருட்டு அவர்களைத் தொடரக்கருதி, வேல் வில் வாள் முதலிய ஆயுதங்களை யெடுத்துக் கொண்டு சண்டமாருதம் போலத் தீவிரமாய் நடந்து, நகருக்குப்புறத்திலேபோய்,ஐயருக்கு இருபக்கத்திலும் நெருங்கி ஆரவாரித்து, ஓ துட்டனே எங்களுக்குப் பழிவாராதபடி எங்கள் குலப்பெண்ணை விட்டுபோ யென்றுசொல்லி, அவரை வளைத்துக்கொண்டார்கள் ஐயர் அதைக்கண்டு அஞ்சினவர் போல இயற்பகை நாயனாருடைய மனைவியாரை பார்க்க அம்மனைவியார் சுவாமி நீர் பயப்படவேண்டாம், இயற்பகை நாயனார் அவர்களை வெல்லுவார் என்றார். இயற்பகைநாயனார் அதைக்கேட்டு அடியேன் அவர்கள்

எல்லாரையும் இப்போது கொன்று போடுகிறேன் தேவரீர் அஞ்சவேண்டாம் என்று சொல்லி அங்குவந்த சுற்றத்தவர்களைப் பார்த்து, நீங்கள் என்னாளுக்கு இறையாவீர்கள் ஒருவரும் எனக்கு எதிர் நில்லாமல் ஓடிப்பிழையுங்கள் என்றுகூற அவர்கள் ஏடா இயற்பகை நீ என்னகாரியஞ் செய்தாய், ஊரவர்கள் பேசும் பழமொழிக்கும் எங்கள் சத்துருக்கள் நகைக்கும் நகைப்புக்கும் நீ சற்றாயினும் வெட்கப்படவில்லை மனைவியைப்பிராமணனுக்குக் கொடுத்தோ நீசாமர்த்தியம் பேசுவது நாமெல்லாரும்ஒருங்கேமடிவதன்றி இந்தப் பெண்ணைப் பிராமணனுக்குக் கொடுக்கவிட்டோம் என்றார்கள் உடனே இயற்பகை நாயனார் அதிககோபங்கொண்டு, உங்கள் சரீரங்களைத் துண்டம் துண்டமாக்கி உங்களுயிரைச் சுவர்க்கத்துக்கேற்றி ஐயரைத்தடையின்றிப் போகவிடுவேன் என்றுசொல்லி எதிர்க்க அவர்கள் அந்நாயனாரோடுயுத்தம் செய்யத்தொடங்காமல், அவர்மனைவியாரைக் கொண்டு செல்கின்ற ஐயருக்கு முற்பட்டு அதிககோபத்தோடும் அவரைத்தடுத்தார்கள் அதுகண்ட நாயனார் கோபங்கொண்டு வாளினாலே இடசாரி வலசாரியாக மாறி மாறிச் சுற்றிவந்து அவர்களுடைய தோள்களையும் கால்களையும் தலைகளையும் துணித்து வீழ்த்திபின் ஒவ்வொருவராய் வந்து எதிர்த்தவர்களையும் கொன்று, மேல் எதிர்ப்பவர் ஒருவருமின்றி யுத்தகளத்திலே உலாவினார். பின் இந்தச்செயற்கரும்செய்கையைச் செய்தநாயனார் ஐயரை நோக்கி சுவாமீ, தேவரீர் அஞ்சாவண்ணம் இந்தக்காட்டை கடக்கும் வரைக்கும் வருகிறேன் என்று சொல்லி அவரோடுபோனார் திருச்சாய்க்காடு என்னும் சிவஸ்தலத்துக்குச்சமீபத்திலே போனபொழுது ஐயர் இயற்பகை நாயனாரைநோக்கி, இனிநீர் திரும்பிப்போகலாம் என்று சொல்ல நாயனார், அவருடையதிருவடிகளை வணங்கி அஞ்சலிசெய்து தோத்திரம் பண்ணிக்கொண்டு திரும்பினார். அப்பொழுது ஐயர் இயற்பகையே இங்கேவா என்றுசொல்லி ஓலமிட்டார். நாயனார் அந்த ஓசையைக்கேட்டு, அடியேன் வந்துவிட்டேன் என்று சொல்லிக்கொண்டுவர, ஐயர் மறைந்தருளினார். வந்தநாயனார் அவ்வையரைக்காணாமல் மனைவியாரை மாத்திரங்கண்டார். பின்பு ஆகாயத்திலே பார்வதி சமேதராகி இடபவாகனத்தில் எழுந்தருளிவந்த கைலாசபதியைக்கண்டார். ஆராமையினாலே உடனே விழுந்தார் எழுந்துஸ்தோத்திரம் பண்ணினார், சுவாமி அவரைநோக்கி நம்மேலும் நம்முடைய யடியார்கள்மேலும் நிஷ்களங்கமான அன்புவைத்த இயற்பகையே நீ உன்மனைவியோடும் நம்முடனேவா என்று சொல்லி அந்தர்த்தமானமானார். இயற்பகை நாயனாரும் மனைவியாரும் சிவலோகத்தைப்பேரின்பத்தையனுபவித்து வாழ்ந்திருந்தார்கள் யுத்தத்திலே இறந்த அவர்கள்பந்துக்களும் வானுலகத்தை அடைந்து இன்பமனுபவித்தார்கள்.



உ

சிவமயம்.

ஐந்தாவது,

இளையான்குடிமாறநாயனார் புராணம்.

மன்னியவேளாண்டொன்மையிளசைமாறர்
　வறுமையாலுணவுமிகமறந்துவைகி
யன்னருநள்ளிருண்மழையிலுண்டிவேண்டி'யும்பர்
　பிரானணையவயலுழுதுவித்துஞ்
செந்நென்முளையமுதுமனைபலக்காலாக்கிச்
　சிறுபயிரின்கறியமுதுதிருந்தச்செய்து
பன்னலருமுணவருந்தற்கெழுந்தசோதிப்
　பரலோகமுழுதாண்டபான்மையாரே.

இளையான் குடியென்னும் ஊரிலே வேளாளர்குலத்திலே, எத்தொழிலினும் சிறந்த கிருஷிகர்மத்தால்வரும் குற்றமற்ற அளவிறந்தபாக்கியத்தையும் சிவனடியார்கள்மேலே முழுமையும்பதிந்த அன்புகொண்டசிந்தையையும் உடையவராகிய மாறனார் என்பர் ஒருவரிருந்தார். அவர்தம்முடையகிரகத்துக்குவரும் சிவபத்தர்கள்எந்தவருணத்தாராயினும்உண்மையாகிய அன்போடு அவர்களை எதிர்கொண்டு அஞ்சலிசெய்து இன்சொற்களைச்சொல்லி வீட்டிற்கழைத்துக்கொண்டுபோய் பாதப்பிரக்ஷாலனம்பண்ணி,ஆசனத்திலிருத்திசைவாகமவிதிப்படி அருச்சித்து, பின்பு கசப்பு, புளிப்பு, இனிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு என்கிற அறுவகைச்சுவையை யுடையனவாய் நக்கல், பருகல், உண்டல், தின்னல் என்னும்நான்கிற்கும் விஷயமாயுள்ளஉணவுகளைஅவரவர்இஷ்டப்படிஅமுதுசெய்விப்பார். இப்படித் தினந்தோறும் மகேசுரபூசை பண்ணுதலாகிய சிவபுண்ணியத்தினாலே ஐசுவரியம் அபிவிருத்தியாக அவர்குபேரனையொத்துவாழ்ந்திருந்தார்.அப்படி இருக்குங்காலத்திலே பரமசிவனானவர் அவ்விளையான் குடிமாறநாயனார்இந்தச்செய்கையைச் செல்வம்வந்தகாலத்திலன்றி வருமைவந்தகாலத்திலும் தளராதுசெய்யவல்லவர் என்பதையும் தாம்நல்லோர்களுக்கு வறுமையைக்கொடுத்தல் அவர்கள் நயத்தின்பொருட்டே என்பதையும், அந்நயம்இறுதியிலேயே பலிக்கும் என்பதையும் அக்கருத்தறியாது அதற்குள் புண்ணியஞ்செய்த நமக்குக்கடவுள் இடர்

செய்தாரே என்று அவரைநோதல்பழுதாம் என்பதையும் பிறர்க்குத்தெரிவித்து உய்க்கும் பொருட்டுத் திருவுளங்கொண்டு அந்நாயனரிடத்தில் உள்ள செல்வமெல்லாம் நாடோறும் சுருங்கி வறுமையெய்தும்படி யருள்செய்தார். அப்படிச்செல்வம் சுருங்கவும் நாயனா மகேசுரபூசையிலே பதிந்த தம்முடைய மனம் சிறிதும் சுருங்குதலின்றி, தம்மிடத்துள்ள நிலங்கள் முதலியவற்றை விற்றும் தம்மைக்கூடவிற்று இறுக்கத் தக்க அவ்வளவு கடன்களை வாங்கியும் முன்போலவே தாம்செய்யும் திருப்பணியை விடாது செய்து வந்தார்.

அவர் மழைக்காலத்திலே மழைபெய்யும் ஒருநாள் இரவில் நெடுநேரம் எதிர்பார்த்திருந்தும் ஒருவருடைய உதவியும் இல்லாமல் பகல்முழுதும் போசனஞ்செய்யாமையால் பசி யதிகப்பட்டுவீட்டுக்கதவைப் பூட்டிப்பின்பு, கைலாசபதியானவர் சைவவேடங்கொண்டு எழுந்தருளிவந்து கதவைத்தட்டி யழைக்கநாயனர் கதவைத்திறந்து அவரை உள்ளேயழைத்துக்கொண்டு போய், மழையினுல் நனைந்த அவருடைய திருமேனியை வஸ்திரங்கொண்டு துடைத்து இருத்தற்கு இடங்கொடுத்து அவருக்கு அமுதூட்டல் வேண்டும் என்னும் ஆசைமிகுதியால் தம்முடைய மனைவியாரை நோக்கி இந்தச்சைவர் மிகப்பசிகொண்டிருக்கின்றார். நமக்குமுன்னமே போசனத்துக்கு ஒன்றுமில்லை ஆயினும் இவருக்கு எப்படியும்அன்னங்கொடுக்க வேண்டுமே இதற்கு என்னசெய்வோம் என்றார் அதற்குமனைவியார் வீட்டிலே ஒருபதார்த்தமுமில்லை அயலவர்களும் இனி உதவமாட்டார்கள் நெடுநேரம் ஆயிற்று யரிசிக்கடன் கேட்கப்போவதற்குவேறிடமும் இல்லை, பாவியாகியநான் இதற்கு என்னசெய்வேன் என்றுசொல்லிப்பின்பு, இன்று பகற்காலத்திலே வயலில் விதைக்கப்பட்ட ஈரத்தால் முன்னமே முளைகொண்டிருக்கின்ற நெல்லைவாரிக்கொண்டுவந்தால் இயன்றபடி சோறுசமைக்கலாம் இதுவேயன்றி வேறொருவழியும்அறியேனென்று சொல்லித்துக்கித்தார். இந்தவார்த்தை செவிப்புலப்படுதற்கு முன் இளையான்குடிமாற நாயனர் மிகமனமகிழ்ந்து யதற்கு உடன்பட்டுமிக மழைபொழிகின்றபகாஅந்தகாரமயமாகிய அத்தராத்திரியிலேஒருபெருங்கூடையைத் தலையிலே கவிழ்த்துக்கொண்டு காலினுலே தடவிக்குறிவழியே தம்முடைய வயலிற்சென்று அதிலே யதிகமழையினுல் நீர்மேலே மிதக்கின்ற நென்முளைகளைக்கையினுலே கோலிவாரி, கூடைநிறைய இட்டு தலையிலே வைத்துச்சுமந்துகொண்டு சீக்கிரத்திலே திரும்பிவந்தார். அவரையெதிர்ப்பார்த்துக்கொண்டுவாயிலிலேநின்ற மனைவியார் மனமகிழ்ச்சியோடுஅந்த நெல்முளையைவாங்கி சேறுபோம்படி நீரினுலேகழுவியூற்றிபின்பு தம்முடையபிராணநாயகரை நோக்கி யடுப்பிலே நெருப்புமூட்டுதற்குவிறகு இல்லையே என்றுசொல்ல, அவர் கிலமாயிருக்கின்றவீட்டின்மேற்



கூரையிலுள்ள வரிச்சுக்களை அறுத்து விழுத்தினார், மனைவியார் அவைக களைமுறித்து அடுப்பிலேமாட்டி, நென்முளையை ஈரம்போய்ப் பதமாகும் படிவறுத்து பின் அரிசியாக்கி நீர்வாய்த்துக் காய்ந்திருக்கிற உலையில் அதையிட்டு சோறாக்கி தம்முடையநாயனாரைப்பார்த்து, இனிக்கறிக்கு என்னசெய்வோம் என்றார், உடனே நாயனார் புறக்கடைத் தோட்டத்துக்குச்சென்று, குழியினின்றும் மேற்படாத சிறுபயிர்களைக் கையினாலே தடவிப் பிடுங்கிக்கொண்டுவந்து கறிசமைக்கும்படி கொடுக்க, மனைவியார் அவைகளைவாங்கி ஆய்ந்து நீரினாலேகழுவி தமது சாமர்த்தியத்தினால்வெவ்வேறுகறியமுதுகள்செய்து முடித்து நாயகருக்கு அமுதும் கறியும்பாகம்பண்ணப்பட்டமையைத் தெரிவித்துசைவரை அமுதுசெய்விப்போம் என்றுசொன்னார் நாயகர் நித்திரைசெய்பவர்போலக் காட்டிய ஐயருக்குச் சமீபத்திற்சென்றுசுவாமி அமுதுசெய்ய எழுந்தருளும்என்றுசொல்லி அழைக்க அவர் ஒருசோதிஸ்வரூபமாய் எழுந்து தோன்றினார். அதைக்கண்ட இளையான் குடிமாறநாயனாரும் மனைவியாரும் திகைத்துநின்றார்கள். பின்புபரமசிவன் பார்வதிதேவியோடும் இடபாரூடராய்த் தோன்றி இளையான்குடிமாறநாயனாரை நோக்கி அன்பனே நமமுடைய அடியார்களை அமுதுசெய்வித்த நீஉன் மனைவியோடும் நம்முடைய பதத்தை அடைந்து பேரின்பத்தை அனுபவித்துக்கொண்டிரு என்று திருவாய் மலர்ந்தருளி அந்தர்த்தான மானார்.

௨

சிவமயம்.

ஆறாவது,

மெய்ப்பொருணாயனார் புராணம்.

சேதியர்நற்கோவலூர்மலாடமன்னர்திரு
  வேடமெய்ப்பொருளாத்தெளிந்தசிந்தை
நீதியினருடன்பொருதுதோற்றமாற்றா
  னெடுஞ்சினமுங்கொடும்படையுநிகழாவண்ணா
மாதவர்போலொருமுறைகொண்டணுகிவாளால்
  வண்மைபுரிந்திடமருண்டுவந்ததத்தன்
காதலுறநமர்தத்தாவென்றுநோக்கிக்
  கடிதகல்வித்திறைவனடிகைக்கொண்டாரே.

சேதிநாட்டிலே திருக்கோவிலூரிலே, மலையமானாட்டாருக்கு அரசரும் வேதாகமங்களின் உண்மையை அறிந்தவரும் சிவனடியார்களுடைய

திருவேடத்தையே மெய்ப்பொருளெனச் சிந்தைசெய்பவரும் ஆகியமெய்ப்பொருணயனர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் தம்முடையஇராச்சியத்தைத் தருமநெறிதவருமல நடத்தியும், தம்மைஎதிர்த்த பகைவர்களைஜயங்கொண்டும், சிவாலயங்களெங்கும் நித்திய நைமித்தியங்களைச் சிறப்பாகநடத்தியும், சிவபத்தர்கள் வந்தபொழுது மனமகிழ்ச்சியோடும் வேண்டிய திரவியங்களைப் பூர்த்தியாககொடுத்தும்வந்தார். இப்படி நடக்கும்காலத்திலே முத்தநாதன் என்கின்ற ஓர் அரசனனவன் அவரை வெல்லுதற்குவிரும்பி, யுத்தசந்நத்தனகி, அவரோடு பொருது, யானை, குதிரை, தேர்காலாள்என்னும் சேனைகளைப் பலமுறை இழந்துதோற்று அவமானப்பட்டுப்போனன், பின்பு அவன் யுத்தத்திலே அவரைஜயிக்க மாட்டாதவனகி, அவரிடத்திலே இருக்கின்ற அடியார் பத்தியை அறிந்து விபூதிதரிக்கின்ற அவ்வடியார் வேடங்கொண்டு அவரைக்கபடத்தினல் வெல்ல நினைந்துசரீர முழுதிலும் விபூதிதரித்து சடைகளைச் சேர்த்துக்கட்டி புத்தகக்கவளிபோலத் தோன்றுகின்ற ஆயுதத்தை மறைத்து வைத்திருக்கின்ற ஓர் கவளியை எடுத்துக்கொண்டு திருக்கோவலூரிற்சென்று மெய்ப்பொருணயனருடைய அரண்மனைவாயிலை அடைந்தான். அப்பொழுது வாயில் காவலாளர் அவனை அஞ்சலிசெய்து சுவாமி உள்ளே எழுந்தருளும் என்றுசொல்ல, அம்முத்தநாதன் உள்ளேபோய்மற்ற வாயில்களையும் அப்படியே கடந்துசென்று இறுதிவாயிலை அடைந்தபொழுது அவ்வாயிற் காவலாளனகிய தத்தனென்பவன் இப்பொழுது இராசா நித்திரைசெய்கின்றார் நீர்சமயமறிந்து போகவேண்டும்என்றான் அதைக்கேட்ட முத்தநாதன் நான் அவருக்குச் சாஸ்திரோபதேசஞ்செய்யப்போகின்றபடியால் நீ என்னைத்தடுக்கலாகாது என்றுசொல்லி உள்ளேபுகுந்து மெய்ப்பொருணயனர் கட்டிலின்மேல நித்திரைசெய்ய அவர் மனைவியார் பக்கத்திலிருக்கக்கண்டும், சமீபத்திலேசென்றான். அப்பொழுது மனைவியார் சீக்கிரமாக எழுந்து மெய்ப்பொருணயனரை எழுப்ப அவர் விழித்தெழுந்து அவனை எதிர்கொண்டு வணங்கிநின்று சுவாமீதேவரீர் இங்கே எழுந்தருளுவதற்குக் காரணம் யாது என்று வினவினர். அதற்கு முத்தநாதன் உங்கள் கடவுளாகிய பரமசிவன் ஆதிகாலத்திலே அருளிச்செய்த சைவாகமங்களுள் எவ்விடத்தும் காணப்படாத ஓர் ஆகமத்தை உமக்குபோதிக்கும்படி கொண்டுவந்தேன்என்றான், மெய்ப்பொருணயனர் அதைக்கேட்டு இதைப்பார்க்கிலும் உயர்ந்தபேறு அடியேனுக்கு உண்டோ அந்தச்சைவாகமத்தைவாசித்து அடியேனுக்கு அதன் பொருளை அருளிச்செய்யவேண்டும் என்று பிரார்த்திக்க முத்தநாதன் பட்டத்தரசி இல்லாமல் நீரும்நானும் வேறிடத்திருக்கவேண்டும் என்றான். உடனே மெய்ப்பொருணயனர் தம்முடையமனைவியாரை அந்தப்புரத்துக்குபோம்படிசெய்து பொய்வேடங்கொண்ட முத்தநாதனை ஆசனத்தின்மேல் இருத்தி தாம் கீழே இருந்துகொண்டு இனி அருளிச்செய்யும்

என்றூர். முத்தநாதன் தன்கையில் இருந்த வஞ்சக் கவளிகையை மடியி ன்மேலேவைத்துபுத்தகம் அவிழ்ப்பவன்போல அவிழ்த்து மெய்ப்பொரு ளுயனூர் வணங்கும்போது அக்கவளியில்மறைத்துவைத்த உடைவாளை எடுத்து அவரைக்குத்த அவர் சிவவேடமே மெய்ப்பொருளென்று அவ ரைவணங்கினூர், அம்முத்தநாதன் உள்ளேபுகுந்தபொழுதே இராசாவுக்கு என்ன அபாயம் சம்பவிக்குமோஎன்று மனசை அங்கேயே செலுத்திக் கொண்டிருந்ததத்தனென்பவன்நொடியளவிலே உள்ளேபுகுந்துதன்கை வாளினுல் அப்பகைவனை வெட்டப்போனுன் அதற்குமுன் உடைவாளினு லேகுத்தப்பட்டுஇரத்தம்சொரிய விழப்போகின்றமெய்ப்பொருளுயனூர் விழும்பொழுது தத்தனே இவர் சிவனடியாரர்தலால் இவருக்கு ஒருஇ டையூறும் செய்யாதே என்று கையினுலேதடுத்து விழுந்தார் அப்பொ ழுது தத்தன்மெய்ப்பொருளுயனூரைத் தலையினுல் வணங்கி அவரைத் தாங்கி அடியேன்செய்யவேண்டிய குற்றேவல்யாது என்றுகேட்கமெய்ப் பொருளுயனூர் வழியிலே இவருக்கு யாரொருவரும் இடையூறுசெய் யாதபடி இவரை யழைத்துக்கொண்டு போய்விடு என்றுசொன்னூர்.

அப்படியே தத்தன்முத்தநாதனை அழைத்துக்கொண்டு போம்பொ ழுது அம்முத்தநாதன் இராசாவைகுத்தின சங்கதியைஅறிந்தவர்களெ ல்லாரும் அவனைக்கொல்லும்படிவந்து சூழச்சூழ அவர்களெல்லாரையும் இந்தச் சிவபத்தருக்குஒருவரும் இடையூறுசெய்யாதபடி இவரைஅழை த்துக்கொண்டு போய்விடும்பொருட்டு இராசாவே எனக்கு ஆஞ்ஞாபித் தாரென்று சொல்லித்தடுத்தான் அவர்களெல்லாரும்அதைக்கேட்டவுட னேபயந்து நீங்கிவிடதத்தன் அவனை அழைத்துக்கொண்டு நகரத்தைக் கடந்துசென்று அவனுக்குரியகாட்டுவழியிலே அவனைவிட்டுநகரத்துக்கு த்திருப்பி சிவவேடங்கொண்ட முத்தநாதனையாதொரு இடையூறுவரா மல் அழைத்துக் கொண்டுபோய்விட்ட சமாசாரத்தைக் கேட்பதற்கு விரும்பி முன்னேயே நீங்கிவிடக்கூடிய உயிரைத் தாங்கிக்கொண்டிருக் கும் மெய்ப்பொருளுயனூருக்கு முன்சென்று வணங்கிநின்று சிவபத்த ரை இடையூறு ஒன்றும் வராதபடி கொண்டு போய்விட்டேன் என்று சொன்னுன். அதைக்கேட்ட மெய்ப்பொருநாயனூர் இன்றைக்கு நீ என க்குச்செய்த உபகாரத்தை வேறூர்செய்யவல்லவர் என்றுசொல்லிபின்பு தமக்குப்பின் அரசாளுதற்குரிய குமாரர்களையும் மந்திரி முதலானவர் களையும் நோக்கி சைவாகமவிதிப்படி விபூதிமேல்வைத்த அன்பைப் பா துகாக்கும்படி போதித்து கனகசபையிலே ஆநந்தத்தாண்டவம் செய்த ருளுகின்ற சபாநாதரைத் தியானம்பண்ணினூர் அப்பொழுதுசபாநாதர் மெய்ப்பொருளுயனூருக்குத் தோன்றி அவரைத்தம்முடைய திருவடியி லே சேர்த்தருளினூர்.

உ


சிவமயம்.


ஏழாவது,

விறன்மிண்டநாயனார் புராணம்.

விளங்குதிருச்செங்குன்றூர்வேளான்றொன்மை
  விறருண்டதிருவாரூர்மேவுநாளில்
வளங்குலவுதொண்டரடிவணங்காதேகும்
  வன்றொண்டன்புறகவனைவலியவாண்ட
துளங்குசடைமுடியோனும்பிறதென்றன்பாற்
  சொல்லுதலுமவர்தொண்டத்தொகைமுன்பாட
வுளங்குளிரவுளதென்றாரதனாலண்ண
  லுவகைதரவுயர்கணத்துளோங்கினாரே.

மலையமானாட்டிலே செங்குன்றூரிலே வேளாளர்குலதிலே பரமசிவனுடைய திருவடிகளை மனதில் இருத்தி உட்பற்றுப் புறப்பற்றுக்களை அறுத்தவரும்அடியார்பத்தியிலேஉயர்வொப்பில்லாதவரும் ஆகியவிறன்மிண்டநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார் அவர் சிவஸ்தலங்களுக்குப் போனபொழுதெல்லாம் முன் அடியார் திருக்கூட்டங்களுக்கு எதிரே போய்அவர்களை வணங்கிக்கொண்டே பின் சுவாமியை வணங்குகின்றவர் அவர் தாம்வசிக்கின்ற மலைநாட்டைநீங்கி பலதலங்களினும்சஞ்சரித்து சிவனடியார்கள் ஒழுகும் ஒழுக்கத்தை அனுசரித்து திருவாரூரை அடைந்துசுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருந்தார் ஒருநாள் சுந்தரமூர்த்தி சுவாமிகள்தேவாசிரிய மண்டபத்தில் இருக்கின்றசிவனடியார்களை அடைந்து வணங்காமல் ஒருபிரகாரம் ஒதுங்கிச்சென்றவை அவ்விரண்மிண்டநாயனார்கண்டு, அடியார்களை வணங்காமற்செல்கின்ற வன்றொண்டன் அவ்வடியார்களுக்குப் புறகு அவனை வலிய ஆட்கொண்ட பரமசிவனும் புறகுஎன்றார் சுந்தரமூர்த்திசுவாமிகள் அவ்விரன்மிண்ட நாயனாரிடத்தினுள்ள சங்கமபத்திவலிமையைக்கண்டு அவ்வடியார்கள்மேலே திருத்தொண்டத்தொகை என்னுந்திருப் பதிகத்தைபாடியருளினார் அதைக் கேட்ட விறன்மிண்டநாயனார் மிகமகிழ்ந்து இவ்வன்றொண்டருடைய மனம்அடியாரிடத்திலேபதிந்திருக்கின்றதுஎன்று அருளிச்செய்தார் இந்தச்சங்கம பத்திவலிமையைக்கண்ட பரமசிவனானவர் அவ்விரன்மிண்டநாயனாரைத் தம்மைச் சேவிக்கின்றகணங்களுக்குத் தலைவராக்கியருளினார்.





சிவமயம்.

எட்டாவது,

அமர்நீதி நாயனார் புராணம்.

பழையாறைவணிகரமர்நீதியார்பாற்
   பரவுசிறுமுனிவடிவாய்ப்பயிலுநல்லூர்க்
குழைகாதர்வந்தொருகோவணத்தைவைத்துக்
   கொடுத்ததனையெடுத்தொளித்துக்குளித்துவந்து
தொழிலாருமதுவேண்டி வெகுண்டுநேரித்
   துலையிலிடுங்கோவணநேர்தூக்குமென்ன
வெழிலாரும்பொன்மனைவியிளஞ்சேயேற்றி
   யேறினர்வானுலகுதொழவேறினாரே.

சோழநாட்டிலே பழையாறை என்னும் ஊரிலே வைசியர் குலத்திலேமகா ஐசுவரியமுள்ளவரும் சிவனடியார்களை அமுதுசெய்வித்து அவரவர் குறிப்பறிந்து கந்தை, கீள், கோவணம் என்பவைகளைக் கொடுப்பவரும் ஆகிய அமர்நீதிநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர்திருநல்லூர் என்னும் சிவஸ்தலத்திலே மகோற்சவதரிசனஞ் செய்யவரும் சிவனடியார்கள் அமுது செய்யும்பொருட்டு ஒரு திருமடம் கட்டுவித்துக்கொண்டு தம்முடைய சுற்றத்தார்களோடும் அவ்விடத்திற்போய் சேர்ந்து, மகோற்சவ தரிசனஞ்செய்து தம்முடையமடத்திலே சிவனடியார்களை அமுது செய்வித்துக் கொண்டு, மனமகிழ்ச்சியோடும் இருந்தார். இருக்கும் நாட்களிலே ஒருநாள் பரமசிவனானவர் பிராமணவருணத்துப் பிரமசாரிவடிவங்கொண்டு, இரண்டு கௌபீனங்களையும் விபூதிப்பையையும் கட்டியிருக்கின்ற ஒருதண்டைக் கையிலேபிடித்துக்கொண்டு அந்தத்திருமடத்திற்குவந்தார். அதுகண்ட அமர்நீதிநாயனார் மனமகிழ்ச்சியோடும் முகமலர்ச்சியோடும் அவரை எதிர்கொண்டுவணங்கி சுவாமீ! தேவரீர் இங்கே எழுந்தருளி வருவதற்கு அடியேன்பூர்வத்தில் என்னதவம் செய்தேனோ என்றுசொல்லிச் சம்மானம்பண்ண பிரமசாரியானவர் அவரைநோக்கி, நீ அடியார்களை அமுதுசெய்வித்து அவர்களுக்கு வஸ்திரங்களும் கந்தைகளும் கீள் கௌபீனங்களுங் கொடுக்கின்றீர் என்பதைக்கேள்வியுற்று, உம்மைக்காணுதற்கு விரும்பி வந்தோம் என்றார். அதுகேட்ட அமர்நீதிநாயனார், இந்தத் திருமடத்திலே பிராமணர்கள் போசனம் பண்ணும் பொருட்டும் பிராமணர்கள் பாகம்பண்ணு

வதும் உண்டு தேவரீரும் இங்கே அமுது செய்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தார், பிரமசாரியானவர் அதற்கு உடன்பட்டு, நாம் காவேரியிலே ஸ்நாநம்பண்ணிக்கொண்டு வருவோம் ஒருபோது மழைவரினும் தரித்துக்கொள்ளும்பொருட்டு நீர் இந்த உலர்ந்தகௌபீனத்தைவைத்திருந்து தாரும் என்றுசொல்லி, தண்டிலேகட்டப்பட்டிருக்கின்ற இரண்டு கௌபீனங்களில் ஒன்றை அவிழ்த்து இந்தக் கௌபீனத்தின் மகிமையை உமக்கு நான் சொல்லவேண்டுவதில்லை நான் ஸ்நானம் பண்ணிக்கொண்டு வரும்வரைக்கும் நீர் இதைவைத்திருந்து தாரும் என்று அவர் கையிலே கொடுத்துவிட்டு, காவேரியிலே ஸ்நாநம்பண்ணுதற்குப் போக அமர்நீதிநாயனார் அந்தக்கௌபீனத்தை ஒருதகுந்த இடத்திலே சேமித்துவைத்தார் ஸ்நாநம்பண்ணப்போன பிரமசாரியானவர் அமர்நீதி நாயனார் சேமித்து வைத்த கௌபீனத்தை அதுவைக்கப்பட்ட ஸ்தானத்தினின்றும் நீங்கும்படிசெய்து ஸ்நாநம்செய்துகொண்டு மழைபொழிய நனைந்து திருமடத்தை அடைந்தார். அமர்நீதிநாயனார் அது கண்டு எதிர்கொண்டு சமயலாயிற்று என்றுசொல்லி வணங்க பிரமசாரியார் இனி அந்நாயனாருடைய அன்பாகிய ஜலத்திலே முழுகவேண்டி அவரைநோக்கி ஈரம்மாற்றவேண்டும் தண்டிலே கட்டப்பட்டிருக்கின்ற கௌபீனமோ ஈரமாயிருக்கின்றது உம்மிடத்திலேதந்த கௌபீனத்தைக்கொண்டுவாரும் என்றார். அமர்நீதி நாயனார் சீக்கிரமாக உள்ளேபோய்ப்பார்த்து கௌபீனத்தைக் காணாதவராகி, திகைத்து மற்றை இடங்களிலுந் தேடிக்காணாமையால் மிகுந்த துக்கங்கொண்டு வேறொருகௌபீனத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டுபிரமசாரியார் முன்சென்று சுவாமீ? தேவரீர் தந்த கௌபீனத்தை வைத்த இடத்திலும் பிறவிடங்களிலுந் தேடிக்கண்டிலேன், அதுபோனவிதம் இன்னதென்று அறியேன், வேறொரு நல்ல கௌபீனம் கொண்டு வந்தேன். இது கிழிக்கப் பட்ட கோவண மன்று நெய்யப்பட்ட கோவணமே தேவரீர் நனைந்த கௌபீனத்தைக் களைந்து இந்தக் கௌபீனத்தைச் சாத்தி அடியேன்செய்த குற்றத்தைப்பொறுத்தருளும் என்று பிரார்த்தித்தார், அதைக்கேட்ட பிரமசாரியார் மிகக்கோபித்து உம்முடைய நிலைமை நன்றாயிருக்கின்றது நெடுநாள் செல்லவும் இல்லை இன்றைக்கே நான் உம்மிடத்தில்வைத்த கௌபீனத்தைக் கவர்ந்துகொண்டு அதற்குப் பிரதியாக வேறொரு கௌபீனத்தை ஏற்றுக்கொள்ளுமென்று நீர் சொல்வது என்ன சிவனடியார்களுக்கு நல்ல கௌபீனம் கொடுப்பேன் என்று நீர் ஊரிலே பிரசித்தம் செய்தது என்னுடைய கௌபீனத்தை கவர்தற்கோ, நீர் செய்கின்ற இவ்வர்த்தகம் நன்றாயிருக்கின்றது என்று சொல்ல அமர்நீதிநாயனார் பயந்து முகம்வாடி நடுநடுங்கி சுவாமி அடியேன் இக்குற்றத்தை அறிந்துசெய்தேனல்லேன். இதைப்பொறுத்தருளும் தேவரீருக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளெல்லாம் செய்கின்றேன் இந்தக் கோவணமன்றி வெகுபொன்களையும் பட்

டாடைகளையும் இரத்தினங்களையும் தருகிறேன் ஏற்றுக்கொள்ளும் என்றார். அதற்குப் பிரமசாரியார் கோபந்தணிந்தவர் போலத்தோன்றி பொன்களும் பட்டாடைகளும் இரத்தினங்களும் எனக்கு ஏன் நான் தரிப்பதற்கு உபயோகமாகிய கௌபீனத்துக்கு ஒத்த நிறையுள்ள கௌபீனம் தந்தாற்போதும் என்றுசொல்ல அமர்நீதிநாயனார் மனமகிழ்ந்து, எதனுடைய நிறைக்குச் சரியாகிய கௌபீனத்தைத் தரல்வேண்டும் என்றுகேட்டார் பிரமசாரியார் நீர் இழந்த கௌபீனத்தின் நிறைக்கு ஒத்த நிறையையுடைய கௌபீனம் இது என்றுசொல்லி தமது தண்டிலே கட்டப்பட்டிருந்த கௌபீனத்தை அவிழ்த்து இதற்கு ஒத்த நிறையுள்ளதாகக் கௌபீனத்தை நிறுத்துத்தாரும் என்றார். அமர்நீதி நாயனார் நன்று என்றுசொல்லி ஒரு தராசைக்கொண்டுவந்து நாட்ட பிரமசாரியார் அந்த கௌபீனத்தை ஒருதட்டிலேவைத்தார். அமர்நீதிநாயனார் தம்முடைய் கையிலிருந்த நெய்யப்பட்ட கௌபீனத்தை மற்றத்தட்டிலேவைத்தார். அது ஒத்த நிறையிலே நில்லாமல் மேலெழுந்தது. அதைக்கண்டு அடியார்களுக்குக் கொடுக்கும்படி தாம்வைத்திருந்த கோவணங்களெல்லாவற்றையும் கொண்டுவந்து ஒவ்வொன்றாக இட இட பின்னும் தூக்கிக்கொண்டு எழும்பியது அதைப்பார்த்து ஆச்சரியம் அடைந்து பலவஸ்திரங்களையும் பட்டுகளையும் கொண்டுவந்து இட இட, பின்னும் உயர்ந்தது. அதுகண்டு அநேகம் வஸ்திரப் பொதிகளைக் கொண்டுவந்து இட்டார், இட்டும் அத்தட்டுமேலே எழும்ப கௌபீனத்தட்டுக் கீழேதாழ்ந்தது அமர்நீதிநாயனார் அதைக்கண்டு மிகஅஞ்சி, பிரமசாரியாரை வணங்கி எண்ணிறந்த வஸ்திரப்பொதிகளையும் நூற்கட்டுகளையும் குவிக்கவும் தட்டு உயர்கின்றது என்னுடைய மற்றத் திரவியங்களையும் இந்தட்டிலே இடுதற்கு அனுமதி தந்தருளும் என்றார். அதற்குப் பிரமசாரியார் இனி நாம் வேறென்னசொல்லுவோம், மற்றத் திரவியங்களையும் இட்டுப் பாரும் எப்படியும் நம்முடைய கோவணத்துக்கு ஒத்த நிறையில் நிற்கவேண்டும் என்றார். அமர்நீதிநாயனார் நவரத்தினங்களையும் பொன் வெள்ளி முதலிய உலோகங்களையும் சுமை சுமையாக எடுத்துவந்து இட, தட்டு எழுந்தபடியே மேலேநின்றது, அமர்நீதிநாயனார் அதைக்கண்டு பிரமசாரியரைவணங்கி என்னுடைய திரவியங்களில் ஒன்றும் சேஷியாமல் இந்தத்தட்டிலே இட்டேன் நானும் என்மனைவியும் புத்திரனும் மாத்திரம் சேஷித்து நிற்கின்றோம் தேவரீருக்குப் பிரியமாகில், இனி நாங்களும் இத்தட்டில் ஏறுவதற்கு அனுமதிதந்தருளும் என்றார் பிரமசாரியரும் அதற்கு உடன்பட்டார். அதுகண்டு அமர்நீதிநாயனார் மனமகிழ்ந்து பிரமசாரியரைவணங்கி, தம்முடைய மனைவியாரோடும் புத்திரரோடும் தராசை வலஞ்செய்து, சிவனடியார்களுக்குச் செய்யும் திருத்தொண்டிலே நாம் தவறாமல் இருந்தோமாகில் நாம் ஏறினமாத்திரத்தே இந்தத் தட்டு மற்றத்தட்டுக்கு ஒத்துநிற்கக் கடவது என்றுசொல்லி திருநல்லூரில்

வீற்றிருக்கின்ற பரமசிவனை வணங்கி ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு மகிழ்ச்சியோடு தட்டிலே ஏறினார். ஏறினவுடனே பரமசிவனுடைய திருவரையிலே சாத்தப்படும் கௌபீனமும் பத்தியிலே சிறிதும் குறைவில்லாத அமர்நீதிநாயனாருடைய அடிமைத்திறமும் மகான்மியத்தில் ஒத்திருந்த படியால் துலாக்கோலின் இரண்டுதட்டுக்களும் ஒத்துநின்றன அவ்வற்புதத்தை கண்டவர்களெல்லாரும் அமர்நீதி நாயனாரை வணங்கி ஸ்தோத்திரஞ் செய்தார்கள். தேவர்கள் ஆகாயத்தினின்றும் கற்பகவிருக்ஷங்களின் புஷபங்களை மழைபோலப் பொழிந்தார்கள். பரமசிவனானவர் தாம்கொண்டுவந்த பிரமசாரி வடிவத்தை ஒழித்து ஆகாயத்திலே பார்வதிதேவியோடு இடபாரூடராய்த் தோன்றி தம்மைத் தரிசித்து அந்தத் தராசுத்தட்டிலே தானே நின்றுகொண்டு ஸ்தோத்திரம் செய்கின்ற அமர்நீதிநாயனாரையும் அவர்மனைவியாரையும் புத்திரரையும் கடாக்ஷித்து, நீங்கள் மூவரும் நம்முடைய அருளைப்பெற்று நம்முடையசந்நிதானத்திலே நம்மை வணங்கிக்கொண்டு இருங்கள் என்று அருளிச்செய்து மறைந்தருளினார். அமர்நீதிநாயனாரும் அவர்மனைவியாரும் புத்திரரும் அக்கடவுளுடையதிருவருளினால் அந்தத்தராசு தானேதேவவிமானமாகி மேலேசெல்ல அவரோடு சிவலோகத்தை அடைந்தார்கள்.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது,

இலைமலிந்தசருக்கம்.

ஒன்பதாவது,

எறிபத்த நாயனார் புராணம்.

திருமருவுகருவூரானிலையார்சாத்துஞ்
சிவகாமியாள்மலரைச்சிந்தயானை
யானெறியோரெறிபத்தர்பாகரோடு
மறவெறியதென்னுயிருமக்கீரென்று
புரவலனார்கொடுத்தபடையன்பால்வாங்கிப்
புரிந்தவரின்புகவெழுந்தபுனிதவாக்காற்
கரியினுடன்விழுந்தாருமெழுந்தார்தாமுங்
கணநாதராதுகாவல்கைக்கொண்டாரே.

சோழமண்டலத்திலே இராஜதானியாகிய கருவூரிலே ஆநிலை என்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற பரமசிவனை வழிபடுகின்றவரும் அவருடையஅடியார்களுக்குத் திருத்தொண்டுசெய்கின்றவரும்; அவ்வடியார்களுக்கு ஆபத்துவந்த காலத்தில் வெளிப்பட்டு அவ்வாபத்துக்குக்காரணமாயிருந்தவர்களை மழுவினால் வெட்டுகின்றவரும் ஆகிய எறிபத்த நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார்.

அவர்காலத்திலே சிவகாமியாண்டார் என்கின்ற ஒருபெரியவர்தினந்தோறும் புஷ்பங்கொய்து மாலைகட்டி அவ்வாநிலையில் வீற்றிருக்கும் கடவுளுக்குச் சாத்திவந்தார் ஒருநாள் முன்போல வைகறையிலே எழுந்துபோய், ஸ்நானஞ்செய்து வாயை வஸ்திரத்தினாலேகட்டி நந்தவனத்துக்குப்போய், புஷ்பங்களை அலருஞ்சமயத்திலே கொய்து பூங்கூடையைநிறைத்து கையிலே தண்டை ஏந்தி சுவாமிக்குத் திருப்பள்ளித்தா

மங் கட்டிச் சாத்தும்பொருட்டு அந்தச் சிவாலயத்தைநோக்கிச் சீக்கிரமாக நடந்தார் நடக்கும்பொழுது அந்நகரிலிருக்கின்ற அரசராகிய புகழ்ச்சோழருடைய பட்டவர்த்தன யானையானது மகாநவமியின் முதல் நாளாகிய அந்நாளிலே காவேரிநதியிலேமுழுகிமிக அலங்கரிக்கப் பட்டு குத்துக்கோற்காரர்முன்னே ஓட தன்மேலேறிய பாகர்களோடும் ஓர் வீதியிலே விரைவாகச்சேன்று தனக்குமுன்னே செல்லும் சிவகாமியாண்டாரைப்பின் ருெடர்ந்தோடி அவர்கையிலேதாங்கிய தண்டிலே தூங்குகின்ற பூங்கூடையைப்பறித்துச் சிதறியது. அந்தயானையின்மேல் இருக்கின்ற பாகர்கள் அதைக்கண்டு சீக்கிரமாக அதைச்செலுத்திக்கொண்டுபோக சிவகாமியாண்டார் பதைபதைத்துக்கோபித்து, அந்தயானையைத் தண்டினுல் அடிக்கும்படி அதற்குப்பின்னேபோனுர். யானை அவர் சமீபிக்கவொட்டாத மகாகதிகொண்டுசென்றது, சிவகாமியாண்டார் வயோதிகாரனபடியால் அந்தயானைக்குப்பின்விரைந்துசெல்லச் சக்தியில்லாதவராகி தவறி விழுந்து நிலத்திலேகைகளை மோதி எழுந்துநின்று, அதிதுக்கங்கொண்டு தேவரீருக்குச் சாத்தும்படி கொண்டுவந்தபூவை யானையாசிந்துகின்றது சிவதா சிவதா என்றுசொல்லி ஓலமிட்டார். அதை எதிரேவந்த எறிபத்தநாயனுர்கேட்டுமிகக்கோபித்து மழுவை எடுத்துக்கொண்டு ஓடிவந்து சிவகாமியாண்டாரைக்கண்டு வணங்கி உமக்கு இந்தத்துன்பத்தைச்செய்த யானை எங்கேபோய்விட்டது என்று கேட்க அவர் சுவாமிக்குச் சாத்தும்படி நான்கொண்டுவந்த பூவைப் பறித்துச் சிந்திவிட்டு இந்தத்தெருவழியேதான்போகின்றது என்ருர். உடனே எறிபத்தநாயனுர் அதிகோபங்கொண்டு அதிசீக்கிரமாக ஓடிப்போய் யானையைச்சமீபித்து மழுவைவீசி அதன்மேலே பாய்ந்தார். பாயவும் யானைகோபித்து எறிபத்தநாயனுர் மேலேதிரும்ப, எறிபத்தநாயனுர் சற்றும் அஞ்சாமல் அதைத்தடுத்து அதினுடைய துதிக்கையைத்துணித்தார் அப்பொழுது யானை கதறிக் கீழேவிழுந்து புரண்டழுது. பின்பு எறிபத்த நாயனுர், அதற்குமுன்னேடும் குத்துக்கோற்காரர் மூவரும் அதன்மேல் ஏறியிருந்த பாகர்கள் இருவரும் ஆகிய ஐவரைக்கொன்று நின்ருர்.

அந்த ஐவரை ஒழிந்த மற்றவர்கள் ஓடிப்போய் புகழ்ச்சோழருடைய வாயிற்காவலாளரைநோக்கி பட்டவர்த்தன யானையையும் பாகர்கள் சிலரையும் சிலர்கொன்றுபோட்டார்கள். இதை ராஜாவுக்குத் தெரிவியுங்கள் என்றுசொன்னுர்கள். உடனே வாயிற்காவலாளர்கள் அரசனிடத்திலே போய் அவரை வணங்கி அந்தச் சமாச் சாரத்தைத் தெரிவித்தார், அரசன் அதைக்கேட்ட மாத்திரத்தே அளவிறந்த கோபங் கொண்டு புறப்பட்டு குதிரையில் ஏறி சதுரங்கசேனைகளோடும் விரைந்துசென்று யானையும் பாகரும் இறந்த போர்க்களத்தை அடைந்து அங்கே நின்ற சிவவேடந் தரித்த எறிபத்தநாயனுரைமாத்திரம்கண்டு, யானையைக்கொன்றவர் அவர் என்பதை அறியாதவராகி யானையைக்கொன்றவர்யாவர்என்று கேட்டார்பாகர்கள்சமீ

பத்திலேபோய் வணங்கிநின்று மழுவைத்தரித்துக் கொண்டு இவ்விடத்தில் நிற்கின்றவரே யானையைக்கொன்றவர் என்றார்கள். அப்பொழுது புகழ்ச்சோழர் இவர்சிவபத்தராகையால் அந்தயானை குற்றஞ்செய்தாலன்றி அதைக்கொல்லார் அதுயாதோகுற்றஞ்செய்ததுபோலும் என்று நினைந்து தம்முடைய சேனைகளை அவ்விடத்துக்கு வரவொட்டாமல்நிறுத்தி குதிரையினின்றும் இறங்கி, இந்த அடியவர் யானைக்கு எதிரேபோனபொழுது அதினாலே இவருக்கு யாதொரு அபாயம் சம்பவியாமல் இருக்கும்படி பூர்வசன்மத்திலே தவஞ்செய்திருந்தேன் இப்பெரியவர் இவ்வளவு கோபங்கொள்ளும்படி என்னபிழை உண்டாயிற்றோ என்று சொல்லிப்பயந்து எறிபத்தநாயனார் முன்னேசென்று அவரை வணங்கி நின்றுசுவாமீதேவரீரே இந்தயானையைக் கொன்றீரென்பதை நான்முன்னறிந்திலேன் அது நிற்க இந்தயானைசெய்த குற்றத்தின்பொருட்டு இதனைப் பாகரோடுகொன்றதுமாத்திரம் போதுமா சொல்லியருளும்என்றார் எறிபத்தநாயனார்புகழ்ச்சோழரைநோக்கிசிவகாமியாண்டார்சுவாமிக்குச் சாத்தும்படி கொண்டு வந்தபூவை இந்தயானை பறித்துச் சிந்தினதினால் நான்இதைக்கொன்றேன் யானை தீங்குசெய்தபொழுது குத்துக்கோற்காரரும்பாகர்களும் அதைவிலக்காதபடியால் அவர்களையுங்கொன்றேன் இதுவே இங்கு நிகழ்ந்தசமாசாரம் என்றார் புகழ்ச்சோழர் அதைக் கேட்டுப்பயந்து எறிபத்தநாயனாரைவணங்கி சிவனடியாருக்குச்செய்த அபராதத்துக்கு இந்தயானையையும் பாகரையும் குத்துக்கோற்காரரையும் கொன்றதுமாத்திரம் போதாது அடியேனையும் கொல்லவேண்டும்பெரும்பாவியாகிய சிறியேனைத் தேவரீருடைய திருக்கரத்தி லிருக்கின்றமங்கலம் பொருந்திய மழுவாயுதத்தினாலே கொல்வது நியாயமன்று என்று சொல்லி உடைவாளை உரையினின்றும் உருவிஇதினாலே கொன்றருளும் என்றுநீட்டினார். எறிபத்தநாயனார் அதைக்கண்டு அவருடைய அளவிறந்த அன்பைக்குறித்து ஆச்சரியம் அடைந்து அவர் நீட்டியவாளை வாங்காமல் சொற்பநேரம் தாழ்த்து நின்று பின்பு அவர்கையிலே வாள்இருந்தால் தம்மைத்தாமே மாய்த்துக்கொள்ளுவார் என்று நினைந்து அஞ்சி அதைவாங்கினார் வாங்கிய எறிபத்தநாயனாரைப் புகழ்ச்சோழர் வணங்கி நின்று இந்தச்சிவபத்தர் என்னைவாளினாலேகொன்று என்குற்றத்தைத் தீர்க்கும்படி பெற்றேன் என்றார் எறிபத்தநாயனார் அதைக்கேட்டு மிக அஞ்சி பட்டவர்த்தனயானையும் பாகரும் இறந்துபோகவும் அதைக்குறித்துச் சிறிதும் துக்கியாமல் உடைவாளைத்தந்து தம்மையும் கொல்லும்படி கேட்கின்ற புகழ்ச்சோழ ராஜாவுக்குத் தீங்கு நினைத்தேனென்று எண்ணி முன்னே என்னுயிரைக்கொன்று முடிப்பதே தீர்ப்புஎன்று நினைத்து அந்தவாளைத் தம்முடைய கழுத்திலேபூட்டி அறுக்கத் தொடங்கினார் அதுகண்டபுகழ்ச்சோழர்பயந்து நடுநடுங்கிசீக்கிரமாகஎதிரேபோய் அவருடையகையையும் வாளையும் பிடித்துக்கொள்ள அவர் தம்முடைய எண்ணம்நிறைவேறாமையால் வருந்திநின்றார் அப்பொழுது அளவிறந்த

அன்பினாலே அவ்விருவருக்கும் உண்டாகிய இத்துக்கத்தை நீக்கும்பொருட்டு பரமசிவனுடையதிருவருளினாலே அடியார்களுடைய தொண்டை உலகத்தில் வெளிப்படுத்தும்பொருட்டு இன்றைக்குயானை புஷ்பத்தைச் சிதறும்படி பரமசிவன் அருள்செய்தாரென்று ஓர் அசரீரிவாக்கு ஆகாயத்திலேஎழுந்தது உடனே யானையும் பாகர்களோடுஎழுந்தது அப்பொழுது எறிபத்தநாயனார் கழுத்திற்பூட்டியவாளைவிட்டுப் புகழ்ச்சோழரும் அந்த வாளைஎறிந்துவிட்டு எறிபத்தநாயனாருடைய பாதத்திலேவிழுந்து நமஸ்கரித்தார், பின் இருவரும் எழுந்துஅசரீரிவாக்கைத் துதித்தார்கள் பரமசிவனுடைய திருவருளினாலே பூக்கூடையிலே முன்போலப் பூக்கள் நிறைந்திருக்க சிவகாமியாண்டார் அதைக்கண்டு மகிழ்ச்சியடைந்தார் பாகர்கள் பட்டவர்த்தனயானையை நடத்திக்கொண்டு புகழ்ச்சோழர் முன்வந்தார்கள் எறிபத்தநாயனார் புகழ்ச்சோழரை அஞ்சலிசெய்துஅடியேன் மகிழும்படி இந்தயானையின்மேல் ஏறிச்செல்லும் என்றுசொல்ல புகழ்ச்சோழர் அவரை வணங்கி யானையின்மேலேறிக்கொண்டு சேனைகளோடும் அரண்மனையை அடைந்தார் சிவகாமியாண்டார் பூங்கூடையை எடுத்துக்கொண்டு சுவாமிக்கு மாலைகட்டிச் சாத்தும்படிபோனார். எறிபத்தநாயனார் இப்படியே அடியார்களுக்கு இடையூறு வந்தகாலங்களிலே முற்பட்டு அவைகளை நீக்கிபத்திவலிமையிற் சிறந்தவராயிருந்து பின் கைலாசகிரியில் இருக்கின்ற சிவகணங்களுக்குத் தலைவரானார்.

உ

சிவமயம்

பத்தாவது,

ஏனாதிநாதநாயனார் புராணம்,

ஈழக்குலச்சான் றாரெயின னூர்வாழே னாதிநா தனாரிறைவனீற்றைத் [ற்று
தாழத்தொழுமரபார்படைகளாற்றுந் தன்மைபெறுவரிசூரன்சமரிற்றோ
வாழத்திருநீறுரிசாத்தக்கண்டுமருண்டார்தெருண்டார்கைவாள்விடார்வேர்
வீழக்களிப்பார்போனின்றேயாக்கைவிடுவித்தார் சிவனருளெமேவினாரே.

சோழமண்டலத்திலே எயினனூரிலே சான்றார் குலத்திலே விபூதியில் மகாபத்தியுடையவராகிய ஏனாதிநாதர் என்பவர் ஒருவர் இருந்தார்.



அவர் அரசர்களுக்கு வாள்வித்தையைப்பற்றி இதனால் வந்த வளங்கள் எல்லாவற்றையும் சிவனடியார்களுக்கு நாடோறும் கொடுத்துவந்தார் இப்படி நிகழும்காலத்தில் வாள்வித்தைபயிற்றலிலே அவரோடு தயாபாகம் பெற்ற அதிசூரன் வாள்வித்தையைப் பயிற்றுதலினால் வரும் ஊதியம்நாளுக்கு நாள் தனக்குக் குறைதலையும் ஏனாதிநாதநாயனாருக்கு அதிகரித்தலையும் கண்டு பொறாமையுற்று அவரோடு போர்செய்யக்கருதி வீரர்கூட்டத்தோடும்போய் அவர்வீடுத்தலைக்கடையில்நின்று போர்செய்தற்கு வரும்படி அழைக்க ஏனாதிநாதநாயனார் யுத்தசந்நத்தராகிப் புறப்பட்டார். அப்பொழுது அவரிடத்திலே போர்த்தொழில்கற்கும் மாணாக்கர்களும் யுத்தத்திலே சாமத்தியமுள்ள அவர்பந்துக்களும் அதைக்கேள்வியுற்று விரைந்துவந்து, அவருக்குஇரண்டுபக்கத்திலும் சூழ்ந்தார்கள் போருக்கு அறைகூவிய அதிசூரன் ஏனாதிநாதரைநோக்கி நாம் இருவரும் இதற்குச்சமீபமாகியவெளியிலே சேனைகளை அணிவகுத்துயுத்தஞ் செய்வோம் யுத்தத்தில் வெற்றி கொள்பவர் எவரோ அவரே வாள்வித்தை பயிற்றும் உரிமையைப்பெறல்வேண்டும் என்றுசொல்ல, ஏனாதிநாதநாயனாரும் அதற்கு உடன்பட்டார். இருவரும் தங்கள் தங்கள் சேனைகளோடு அவ்வெளியிலேபோய்கலந்து யுத்தஞ்செய்தார்கள். யுத்தத்திலே அதிசூரன் ஏனாதிநாதநாயனாருக்குத்தோற்று எஞ்சிய சிலசேனைகளோடும் புறங்காட்டியோடினான். அன்றிரவுமுழுதும் அவன் தன்னுடைய தௌப்பலியத்தை நித்திரையின்றித் துக்கித்துக்கொண்டிருந்ததுஏனாதிநாதநாயனாரைவெல்லுதற்கேற்றஉபாயத்தைஆலோசித்து வஞ்சனையிலே ஜயிக்கும்படி துணிந்து, விடியற்காலத்திலே உமக்கு உதவியாக நம்முடைய ஊரவர்களை அழைத்துச்சொல்லாமல் நாம்இருவரும் வேறோரிடத்திலே போர்செய்வோம் வாரும் என்று ஏனாதிநாதநாயனாருக்குத்தெரிவிக்கும்படி ஒருவனை அனுப்பினான். ஏனாதிநாதநாயனார் அதைக்கேட்டு அதற்கு உடன்பட்டுத் தம்முடைய சுற்றத்தார்கள் ஒருவரும் அறியாதபடிவாளையும் பரிசையையும் எடுத்துக்கொண்டு தனியேபுறப்பட்டு அவ்வதிசூரன்குறித்த யுத்தகளத்திலே சென்று அவனுடையவரவை எதிர்ப்பார்த்து நின்றார், முன்னொருபொழுதும் விபூதிதரியாத அதிசூரன் விபூதிதரித்தவர்களுக்கு ஏனாதிநாயனார் எவ்விடத்திலுந் துன்பஞ்செய்யார் என்பதை அறிந்து நெற்றியிலேவிபூதியைப்பூசி வாளையும் பரிசையையும் எடுத்துக்கொண்டு, தான்குறித்த யுத்தகளத்திற்சென்று அங்குநின்ற ஏனாதிநாதநாயனாரைக்கண்டு அவர்சமீபத்திலே போம்வரைக்கும் நெற்றியைப் பரிசையினால் மறைத்துக்கொண்டு அவருக்கு முன்னே முடுகி நடந்தான். ஏனாதிநாதநாயனார் அவ்வதிசூரனைக் கொல்லுதற்குச் சமயந்தெரிந்துகொண்டு அடிபெயர்த்தார் அப்பொழுது அதிசூரன்தன்முகத்தை மறைத்துக்கொண்டிருந்த பரிசையைப் புறத்திலே எடுக்க, ஏனாதிநாதநாயனார் அவனுடைய நெற்றியிலே தரிக்கப்பட்ட விபூதி யைக்கண்டார்

கண்டபொழுதே|ஆகெட்டேன் முன்ஒருபொழுதும் இவர்நெற்றியிலே காணுதவிபூதியை இன்றைக்குக்கண்டேன், இனிவேறென்னஆலோசனை இவர் பரமசிவனுக் அடியவராய்விட்டார், ஆதலால் இவருடையஉள்ளக் குறிப்பின்வழியே நிற்பேன் என்று மனசிலே நினைத்து, வாளையும் பரிசையையும்விடக்கருதி, பின்பு நிராயுதரைக் கொன்றதோஷம் இவரை அடையாதிருக்க வேண்டுமென்று எண்ணி அவைகளை விடாமல் எதிர்ப்பவர்போல நேராகநிற்க பாதகனுகிய அதிசூரன் அவரைக்கொன்றுன். அப்பொழுது பரமசிவன் அவருக்குத்தோன்றி அவரைத் தம்முடைய திருவடியிலே சேர்த்தருளினுர்.

உ

சிவமயம்.

பதினென்ருவது,

கண்ணப்பநாயனுர் புராணம்.

வேடாதிபதியுடுப்பூர்வேந்தனுகன்விளங்கிய
சேய்திண்ணனுர்கன்னிவேட்டைக்
காடதில்வாய்மஞ்சனமுங்குஞ்சிதருமலருங்
காய்ச்சினமென்றிடுதசையுங்காளத்தியார்க்குத்
தேடருமன்பினிலாறுதினத்தளவுமளிப்பச்
சீறுசிவகோசரியுந்தெளியவிழிப்புண்ணீ
ரோடவொருகண்ணப்பியொருகண்ணப்ப
வொழிகவெனுமருள்கொடருகுறநின்றுரே.

போத்தப்பிநாட்டிலே உடுப்பூரிலே, வேடர்களுக்கு அரசனுகிய நாகன்என்பவன் ஒருவன் இருந்தான், அவன் மனைவிபெயர் தத்தை அவ்விருவரும்நெடுங்காலம்புத்திரபாக்கியம் இல்லாமையால்அதிதுக்கங்கொண்டு குறிஞ்சிநிலத்திற்குக் கடவுளாகியசுப்பிரமண்ணிய சுவாமியினுடையசந்நிதானத்திலேசேவற்கோழிகளையும்மயில்களையும்விட்டுஅவரைவழிபட்டு வந்தார்கள், சுப்பிரமண்ணிய சுவாமியுடையதிருவருளினுலே தத்தையானவள் கருப்பவதியாகி ஒருபுத்திரனைப் பெற்றுள், அப்பிள்ளையைநாகன்



கையிலே எடுத்தபொழுது திண்ணெனவாயிருந்தபடியால், அதற்குத்தி ண்ணன் என்று பெயரிட்டான் அத்திண்ணனார் வளர்ந்து உரியபருவ த்திலே வில்வித்தை கற்கத்தொடங்கி, அதிலே மகா சாமர்த்தியம் உள் ளவரானார், நாகன் வயோதிகனானபடியால் வேட்டைமுயற்சியிலேஇளை த்தவனாகி, தன் அதிகாரத்தைத் தன் புத்திரராகிய திண்ணனாருக்குக் கொடுத்தான். அந்தத்திண்ணனார் வேட்டைக்கோலங்கொண்டுவேடர்க ளோடும் வனத்திலே சென்று வேட்டையாடினார் வேட்டை யாடும்பொ ழுது ஒரு பன்றியானது வேடரால் கட்டப்பட்ட வலையறும்படி எழுந் து, மிகுந்தவிசையுடனே ஓடியது. அதைக்கண்ட திண்ணனார் அதைக் கொல்லநினைந்து அதை தொடர்ந்து பிடிக்கத்தக்க விசையுடனே அது செல்லும் அடிவழியேசென்றார். நாணன் காடன் என்கின்ற இரண்டு வேடர்கள்மாத்திரம் அவருக்குப் பின்ஓடினார்கள். அந்தப்பன்றி நெடுந் தூரம் ஓடிப்போய், இளைப்பினாலே மலைச்சாரலிலே ஒருமரத்தின் நிழலி லே நின்றது, திண்ணனார் அதைக்கண்டு அதனைச் சமீபித்து உடைவா ளை யுருவி அதனை இருதுண்டாகும்படி குத்தினார், நாரணனும் காடனு ம் இறந்துகிடந்த அந்தப் பன்றியைக்கண்டு திண்ணனாரை வியந்து வ ணங்கி, நெடுந்தூரம் நடந்துவந்தபடியால் பசிநம்மை மிகவருத்துகின்ற து, நாம் இந்தப்பன்றியை நெருப்பிலே காய்ச்சித்தின்று தண்ணீர் குடி த்து வேட்டைக்காட்டுக்கு மெல்லப்போவோம் என்றார்கள் திண்ணனார் அவர்களைநோக்கி இவ்வனத்திலே தண்ணீர் எங்கு இருக்கின்றது என் றுகேட்க நாணன் அந்தத் தேக்கமரத்துக்கு அப்பாலே போனால் மலைப் பக்கத்திலே பொன்முகலியாறு ஓடுகின்றது என்றான். அதைக்கேட்ட திண்ணனார், இந்தப்பன்றியை எடுத்துக்கொண்டு வாருங்கள், நாம் அங் கேதானே போவோம் என்றுசொல்லி அதைநோக்கி நடந்து அரைக்கா தவழி தூரத்துக்கு அப்பால் இருக்கின்ற திருக்காளத்தி மலையைக்கண் டு நாணனைநோக்கி நமக்குமுன்னாகத் தோன்றுகின்ற மலைக்குப் போ வோம் என்று சொல்ல, நாணன் இந்தமலையிலே குடுமித்தேவர் இருக்கி றார் நாம்போனாற் கும்பிடலாம் என்றான்.

திண்ணனார், இந்த மலையைக்கண்டு இதை அணுக அணுக என்மே ல் ஏற்றப்பட்ட பெரியபாரம் குறைகின்றதுபோலும், இனி உண்டாவ து யாதோ அறியேன் என்றுசொல்லி, அதிதீவிரமாகிய விருப்பத்தோ டும் விரைந்துசென்று, பொன்முகலியாற்றை அடைந்து அதன் கரையி லிருக்கின்ற மரநிழலிலே கொண்டுவந்த பன்றியை இடுவித்து காடனை நோக்கி தீக்கடைகோல் செய்து நெருப்பை உண்டாக்கு, நாங்கள் இம் மலையிலே ஏறி சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு வந்துசேருவோம் எ ன்றுசொல்லி, நாணனோடும் அந்தன் பொன்முகலி நதியைக்கடந்துமலை ச்சாரலை அடைந்து மலையிலே நாணன் முன்னே ஏற, தாமும் ஏறிச்செ ன்று சிவலிங்கம் இருத்தலைக்கண்டார். கண்டமாத்திரத்திலே பரமசிவ

னுடைய அருட்பார்வையைப்பெற்று, இரும்பானது தரிசன வேதியினுலே உருவம்மாறிப் பொன்மயமானாற்போல, முன்னுள்ள குணங்கள்மாறிச் சிவனிடத்தில் வைத்த அன்புருவமானார். நெடுங்காலம் பிரிந்திருந்த தன்குழந்தையைக் கண்ட மாதாவைப்போலத் தாழாமல் விரைந்தோடி தோள்கள்நெருமுங்கும்படி அக்கடவுளைத்தழுவி மோந்துமுத்தமிட்டார். நெடுநேரம் பெருமூச்சு விட்டுக்கொண்டு நின்று, சரீரம் முழுதிலும் உரோமாஞ்சிதம் கொள்ள இரண்டுகண்ணில் நின்றும் கண்ணீர் சொரிய வெயிலிடைப்பட்ட மெழுகுபோல மனங்கசிந்துருக இந்தச் சுவாமி அடியேனுக்கு அகப்பட்டது என்ன ஆச்சரியம் என்றுசொல்லி ஆனந்தம்கொண்டார். ஐயையோ சிங்கம் யானை புலி கரடி முதலிய துட்டமிருகங்கள் சஞ்சரிக்கின்ற காட்டிலே நீர் யாதொரு துணையுமின்றி வேடர்போலத் தனியே இருப்பது ஏதுஎன்று சொல்லித் துக்கித்து தம்முடையகையில் இருந்தவில்லு கீழே விழுந்ததையும் அறியாதவராகிப் பரவசமடைந்தார் பின் ஒருவாறு தெளிந்து இவருடைய முடியிலே நீரைவார்த்துப் பச்சிலையையும் பூவையும் இட்டவர் யாரோஎன்றார், அப்பொழுது சமீபத்திலே நின்ற நாணன் நான் முற்காலத்திலே உம்முடைய பிதாவுடனே வேட்டையாடிக்கொண்டு இம்மலையிலே வந்தபொழுது ஒருபிராமணன் இவர்முடியிலே நீரைவார்த்து இலையையும் பூவையும் சூட்டி உணவைஊட்டி சிலவார்த்தைகள் பேசினதைக் கண்டிருக்கின்றேன். இன்றைக்கும் அவனே இப்படிச்செய்தான்போலும் என்றான் அதைக்கேட்ட திண்ணனார் அந்தச் செய்கைகளே திருக்காளத்தியப்பருக்குப் பிரீதியாகிய செய்கைகளென்று கடைப்பிடித்தார். பின்பு ஐயா இவருக்கு அமுதுசெய்தற்கு இறைச்சிகொடுப்பார் ஒருவரும் இல்லை. இவர் இங்கே தனியே யிருக்கின்றார் இறைச்சிகொண்டு வரும்பொருட்டு இவரைப் பிரியவோ மனமில்லை. இதற்கு என்னசெய்வேன் எப்படியும் இறைச்சி கொண்டுவரவேண்டும் என்று சொல்லிக்கொண்டு சுவாமியைப் பிரிந்து அற்பதூரம் போவார். கன்றைவிட்டுப் பிரிகின்ற தலையீற்றுப் பசுப்போல அவரிடத்திற்குத் திரும்பிவருவார் கட்டி அணைத்துக் கொள்வார் மீளப்போவார் அற்பதூரம்போய் அத்தியந்த ஆசையோடு சுவாமியைத் திரும்பிப்பார்த்து நிற்பார். சுவாமீ! நீர் உண்பதற்குமிருதுவாகிய நல்ல இறைச்சியை நானே குற்றமறத் தெரிந்துகொண்டு வருவேன் என்பார். நீர் யாதொரு துணையுமின்றி இங்கு தனியே இருக்கிறபடியால், நான் உம்மைப் பிரியமாட்டேன், உமக்குப் பசிமிகுந்தபடியால் இங்கே நிற்கவுமாட்டேன் ஐயையோ நான் என்னசெய்வேன் என்று சொல்லிக்கொண்டு கண்ணீர் இடைவிடாது பொழிய நிற்பார், பின்பு ஒருபிரகாரம் போய்வரத் துணிந்து வில்லை யெடுத்துக்கொண்டு கையினாலே கும்பிட்டு சுவாமி சந்நிதானத்தை அருமையாக நீங்கி மலையினின்றும் இறங்கி நாணன் பின்னேவர பிறவிஷயங்களிலேஉண்டாகும் ஆசை

பரமாணுப் பிரமாண மாயினும் இன்றி அன்புமயமாகி முகலியாற்றைக் கடந்து கரையேறி அங்குள்ள சோலையிலே புகுந்தார் அதுகண்டு காடன் எதிரேபோய்க் கும்பிட்டு, நெருப்புக்கடைந்து வைத்திருக்கின்றேன், பன்றியின் அவயவங்களெல்லாவற்றையும் உம்முடைய அடையாளப்படி பார்த்துக்கொள்ளும் திரும்பிப்போவதற்கு வெகுநேரம்சென்றுபோயிற்று. நீர் இவ்வளவுநேரம் தாழ்த்தது என்ன என்றான் நாணன் அதைக்கேட்டு மரப்பொந்தைப் பற்றிவிடாத உடும்பைப்போல அவரை நீங்கமாட்டாதவராய் நின்றார். இங்கேயும் அந்தசுவாமி உண்ணுதற்கு இறைச்சிகொண்டு போம்பொருட்டு வந்திருக்கிறார், நமது குலத்தலைமையை விட்டுவிட்டார், அந்தச்சுவாமி வசமாய்விட்டார் என்றார். உடனே காடன் திண்ணரே நீர் என்னசெய்தீர், என்ன பைத்தியங் கொண்டீர் என்றுசொல்ல, திண்ணனார் அவர் முகத்தைப் பாராமல் பன்றியை நெருப்பிலே வதக்கி அதினுடைய இனியதசைகளை அம்பினாலே வெவ்வேறாகக் கிழித்து அம்பிலேகோத்து நெருப்பிலேகாச்சி, பதமாக வெந்தவுடனே சுவைபார்க்கும்படி அவைகளைத் தம்முடைய வாயிலே இட்டுப் பல்லினாலே மெல்லமெல்லப் பலமுறை அதுக்கிப்பார்த்து மிக இனியனவாகிய இறைச்சிகளெல்லாவற்றையும் தேக்கிலையினாலே தைக்கப்பட்ட கல்லையிலே வைத்து இனியனவல்லாத இறைச்சிகள் எல்லாவற்றையும் புறத்திலே உமிழ்ந்தார். அதைக்கண்ட நாணன் காடன் இருவரும் இவர்மிகப் பைத்தியம் கொண்டிருக்கின்றார் பெறுதற்கரியஇறைச்சியைக் காய்ச்சிப் பல்லினால் அதுக்கி வீணாக உமிழ்கின்றார். மற்றை இறைச்சியைப் புறத்திலே எறிந்துவிடுகிறார், தாம் மிகப் பசியுடையராயிருந்தும் அதனை உண்கின்றார் இல்லை எங்களுக்குத் தருகின்றாரும் இல்லை இவர் தெய்வப்பைத்தியம் கொண்டிருக்கிறார் இதனைத் தீர்க்கத்தக்க வழி ஒன்றையும் அறியோம் தேவராட்டியையும் நாகனையும் அழைத்துக்கொண்டுவந்து இதைத் தீர்க்கவேண்டும், வேட்டைக் காட்டிலே நிற்கின்ற ஏவலாளரையும் கொண்டு நாம்போம்வாம் என்று நினைத்துக்கொண்டு போனார்கள்

திண்ணனார் அவ்விருவரும்போனதை அறியாதவராகி சீக்கிரமாகக் கல்லையிலே மாமிசத்தை வைத்துக்கொண்டு, திருமஞ்சனமாடும்பொருட்டு ஆற்றில் நீரை வாயினால்முகந்து பூக்களைக்கொய்து தலைமயிரிலே சொருகி ஒருகையிலே வில்லையும் அம்பையும் மற்றக்கையிலே இறைச்சி வைத்த தேக்கிலைக் கல்லையையும் எடுத்துக்கொண்டு ஐயோ! என்னுயிர்த் துணையாகிய சுவாமி மிகுந்த பசியினால் இளைத்தாரோ என்று நினைந்து இரங்கிப் பதைபதைத்து ஏங்கி தன்குஞ்சுக்கு இரை அருத்துதற்குத் தாழாதோடுகின்ற பறவைபோல மஞ்ஞைகதியும் பின்னிட ஓடிப்போய்க் கடவுளை அடைந்தார் அடைந்து அவருடைய திருமுடிமேல இருந்த பூக்களைத் தம்முடைய காற்செருப்பினால் மாற்றி, தம்முடைய வா

யில்இருக்கின்ற திருமஞ்சனநீறைத் தம்முடையமனசில் உள்ளஅன்பை உமிழ்பவர்போலத் திருமுடியின்மேல்உமிந்து தம்முடைய தலையில்இருந்த பூக்களைத் திருமுடியின் மேலே வணங்கி சாத்தி, தேக்கிலையிலே படைத்த இறைச்சியைத் திருமுன்னேவைத்து கொழுமையாகியஇறைச்சிகளெல்லாவற்றையும் தெரிந்து அம்பினுலே கோத்து நெருப்பிலே பதத்தோடுகாய்ச்சிப் பல்லினுல் அதுக்கி நாவினுலே சுவைபார்த்துப் படைத்தேன் இவ்விறைச்சி மிக நன்ருயிருக்கின்றது, சுவாமீ இதை அமுதுசெய்தருளும் என்றுசொல்லி உண்பித்தார் பின்பு சூரியன் அஸ்தமன மாயிற்று திண்ணனூர் அவ்விரவிலே துஷ்ட மிருகங்கள் சுவாமிக்குத் துன்பம்செய்தல் கூடுமென்று அஞ்சி, அம்புதொடுக்கப்பட்ட வில்லைக்கையிலேபிடித்துக்கொண்டு மறந்தும் கண்ணிமையாமல் சுவாமிக்குப்பக்கத்திலே ஜாகரூபமாக நின்றூர், நின்றதிண்ணனூர் வைகறையிலே சுவாமிக்கு இறைச்சிகொண்டுவரும்பொருட்டு வேட்டையாடுதற்கு மலைச்சாரலுக்குப்போனூர். அதுநிற்க.

அறிவு, அருள், அடக்கம், தவம், சிவபத்தி முதலியவைகளெல்லாம்திரண்டொரு வடிவமெடுத்தாற்போன்றவரும், நல்வினைதீவினைகளால் வரும் ஆக்கம் கேடுகளில் சமபுத்திபண்ணுகின்றவரும் யாவரையும்மோகிப்பிக்கவல்ல மகாசௌந்தரியமுள்ள ஸ்திரீகள் வலியவந்து தம்மைத் தழுவினும் பரமாணும் பரிமாணமாயினும் சித்தம்திரியாமல் அவர்களைத்தாயெனமதிக்கு மகாமுனிவரும், திருக்காளத்தியப்பரைத்தினந்தோறும் சைவாகமப்படி அருச்சிப்பவரும் ஆகிய சிவகோசரியார் என்பவர் பிரமமுகூர்த்தத்திலே எழுந்துபோய் பொன்முகலியாற்றிலே ஸ்நாநம் பண்ணி, சுவாமியை அருச்சிக்கும்பொருட்டுத் திருமஞ்சனமும் பத்திர புஷ்பமும் எடுத்து சிவநாமத்தை உச்சரித்துக்கொண்டு சுவாமிசந்நிதானத்திலேபோனூர் போம்பொழுது அங்கேவெந்த இறைச்சியும் எலும்பும் கிடக்கக்கண்டு நடுநடுங்கி குதித்துப் பக்கத்திலே ஓடினூர், ஓடிநின்று தேவாதிதேவனே தேவரீடைய சந்நிதானத்தை அடைதற்கு அஞ்சாத துஷ்டராகிய வேட்டுவப் புலையர்களே இந்த அநுசிதத்தைச் செய்தார்கள்போலும் அவர்கள் இப்படிச் செய்துபோதற்குத் தேவரீர் திருவுளம் இசைந்தீரோ என்றுசொல்லி பதறி அழுது விழுந்து புரண்டார் பின்பு சுவாமிக்கு அருச்சனைசெய்யாமல் தாழ்த்தலால் பயன் யாது, என்றுநினைந்து அங்கேகிடந்தஇறைச்சியையும் எலும்பையும்கல்லையும் திருவலகினுகில்மாற்றி சம்புரோக்ஷணம்செய்து மீளப்பொன்முகலி யாற்றிலே ஸ்நாநம் செய்து திரும்பி வந்து வேத மந்திரத்தினுலே சுத்திசெய்து உருத்திரசமகநமகத்தினுல் சுவாமிக்கு அபிஷேகம்பண்ணிபத்திரபுஷ்பங்களால் அருச்சனைசெய்தார், செய்துதிருமுன் நின்று, இரண்டுகைகளையும் சிரசின்மேலே குவித்து, இரண்டு கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம்சொரிய திருமேனியெங்கும் மயிர்பொடிப்ப

அக்கினியில் அகப்பட்ட மெழுகுபோல மனம்மிகஉருகி இளகநாத்தழு ம்ப, கீதநடையுள்ளதாகிய சாமவேதம்பாடினார், பாடியபின் பலமுறை பிரதக்ஷணம்செய்து சாஷ்டாங்கமாகநமஸ்கரித்து அருமையாக நீங்கிப் போய் தபோவனத்தை அடைந்தார் அதுநிற்க.

முன்னே வேட்டையாடுதற்கு மலைச்சாரலிலே சென்ற திண்ணனார் பன்றி, மான்கலை, மரை, கடமைஎன்னு மிருகங்களைக்கொன்று அவைக ளினிறைச்சியை முன்போலப் பக்குவப்படுத்தி, தேக்கிலையில் வைத்து கோற்றேனைப்பிழிந்து அதனோடுகலந்து முன்போலத் திருமஞ்சனமும் புஷ்பமும்கொண்டுமலையிலேஏறி சுவாமிசந்நிதானத்தைஅடைந்துமுன் போலப் பூசைசெய்து, இறைச்சிக்கல்லையைத் திருமுன்னே வைத்து இந்த இறைச்சி முன்கொண்டு வந்ததுபோலன்று இவைபன்றி-மான் கலை மரைகடமை என்கின்ற மிருகங்களின் இறைச்சி, இவைகளை அடி யேனும் சுவைபார்த்திருக்கின்றேன்தேனும் கலந்திருக்கின்றது, தித்திக் கும் என்றுசொல்லி உண்பித்து அவருக்குப் பக்கத்திலே பிரியாமல்நின் றார். அப்பொழுது முதனாட்போன நாணனும் காடனும ஆகிய இருவ ராலும் தன்புத்திரராகிய திண்ணனாருடைய செய்கைகளை அறிந்த நா கன் ஊணும் உறக்கமுமின்றித் தேவராட்டியையுங் கொண்டுவந்துதிண் ணனாரைப் பற்பல திறத்தினாலே வசிக்கவும், அவர்வச மாகாமையைக் கண்டு, சிந்தைநொந்து இனி என்னசெய்வோம் என்று சொல்லிக் கொ ண்டு அவரை விட்டுத் திரும்பிப் போய்விட்டான்.

இருவினையொப்பும் மலபரிபாகமுமுடைய திண்ணனார் பகர்கால த்திலே மிருகங்களைக்கொன்று சுவாமிக்குஇறைச்சியை ஊட்டியும்இரா க்காலத்திலே நித்திரைசெய்யாமல் சுவாமிக்கு அருகேநின்றும் இப்படி த்தொண்டு செய்துவந்தார் சிவகோசரியாரும் தினந்தோறும்வந்து சந் நிதானத்திலே இறைச்சி கிடத்தலைக்கண்டு, இரங்கிச் சுத்திசெய்து சை வாகமவிதிப்படி அருச்சித்துக்கொண்டு இந்த அநுசிதம் நிகழாமல்அரு ளல்வேண்டுமென்று பிரார்த்தித்துவந்தார் திருக்காளத்தியப்பர் அந்தச் சிவகோசரியாருடைய மனத்துயரத்தை நீக்கும்பொருட்டு ஐந்தாநாள் இராத்திரியில் அவருக்குச் சொப்பனத்திலேதோன்றி, அன்பனே அவ னைவேடுவனென்று நீநினையாதே அவனுடைய செய்கைகளைச் சொல்லு வோம்கேள். அவனுடைய உருவம்முழுதும் நம்மேல்வைக்கப்பட்டஅன் புருவமே, அவனுடைய அறிவுமுழுதும் நம்மை அறியும் அறிவே அவ னுடைய செய்கைகள் எல்லாம் நமக்கு இதமாகிய செய்கைகளே, நம் முடைய முடியின்மேல் உன்னாலேசாத்தப்பட்ட பூக்களை நீக்கும்படி அவன் வைக்கின்ற செருப்படி நம்முடைய குமாரனாகிய சுப்பிரமண்ணி யனுடைய காலினும்பார்க்கநமக்கு மிகுந்தஆனந்தத்தைத் தருகின்றது

அவன் தன்வாயினால் என்மேல் உமிழுகின்ற ஜலமானது அன்புமயமாகிய அவனுடைய தேகமென்னும் கொள்களத்தினின்றும் ஒழுகுகின்றபடியால் கங்கைமுதலாகிய புண்ணியதீர்த்தங்களைப் பார்க்கினும் நமக்குப்பரிசுத்தமுள்ளதாய் இருக்கின்றது. அவன்தன்னுடைய தலைமயிரிலே செருகிக்கொண்டுவந்து நமக்குச் சாத்துகின்ற புஷ்பங்கள் அவனுடைய மெய்யன்பானதுவிரிந்து விழுதல்போல விழுதலால், பிரமவிஷ்ணுமுதலாகிய தேவர்கள் நமக்குச்சாத்தும் புஷ்பங்களும் அவைகளுக்குச் சற்றேனும் சமானமாகாவாம் அவன்நமக்குப் படைக்கின்ற மாமிசம் பதமாக வெந்திருக்கின்றதோ என்று அன்பினால் உருகி இளகிய மனசினோடும் மென்று சுவைபார்த்துப் படைக்கப் பட்டபடியால் வேதவிதிப்படி யாகம்செய்கின்றவர்கள் தரும் அவியினும்பார்க்க நமக்கு அதிகம்தூரமாயிருக்கின்றது, அவன்நம்முடைய சந்நிதானத்தில்நின்று சொல்லும் சொற்கள் நிஷ்களங்கமாகிய அன்பினோடும் நம்மை அன்றி மற்றொருவரையும் அறியாதுவெளிப்படுதலால் வேதங்களும் மகாமுனிவர்கள் மகிழ்ந்து செய்கின்ற ஸ்தோத்திரங்களும் ஆகிய எல்லாவற்றிலும் பார்க்க நமக்குமிக இனியனவா யிருக்கின்றன. அவனுடைய அன்பிலாகிய செய்கைகளை உனக்குக்காட்டுவோம், நீ நாளைக்கு நமக்குப்பிற்பக்கத்திலே ஒளித்திருந்து பார் என்றுசொல்லி மறைந்தருளினர். சிவகோசரியார் சொப்பனவத்தையை நீங்கிக் சாக்கிரா வத்தையை யடைந்துபரமசிவன் தமக்குஅருளிச்செய்த வார்த்தைகளை நினைந்துநினைந்து அறியாமையே நிறைந்துள்ள இழிவாகிய வேடுவர் குலத்திலே பிறந்த அவருக்கு வேதாகமாதி சாஸ்திரங்களிலே மகா பண்டித்திய முடைய மகாமுனிவர்கள் தேவர்களிடத்திலும் காணப்படாதசமானதிகரகிதமாகிய இவ்வளவுபேரன்புவந்தது ஐயையோ எவ்வளவு அருமைஎன்று ஆச்சரியமும், இப்படிப்பட்ட பேரன்பர்செய்த அன்பில்செய்கைகளைப் புழுத்த நாயினும் கடையனாகிய பாவியேன் அநுசிதம் என்றுநினைந்தேனே ஐயையோ இது என்னகொடுமைஎன்று அச்சமும் அடைந்துஉஷக்காலத்திலேபோய்ப் பொன்முகலியாற்றிலே ஸ்நாநம்பண்ணி மலையில் ஏறி முன்போலச் சுவாமியை அருச்சித்து அவருக்குப் பிற்பக்கத்திலே ஒளித்திருந்தார்.

சிவகோசரியார் வருதற்குமுன்னே வேட்டை யாடுதற்குச் சென்ற திண்ணனர்வேட்டையாடிஇறைச்சியும் திருமஞ்சனமும் புஷ்பமும்முன்போலஅமைத்துக்கொண்டு அதிசீக்கிரமாகத்திரும்பினர். திரும்பிவரும்பொழுது, பலபலதுர்ச்சகுனங்களைக்கண்டு, இந்தச்சகுனங்களெல்லாம் உதிரங்காட்டுகின்றன ஆ கெட்டேன் எண்கண்மணிபோன்ற சுவாமிக்கு என்னஅபாயம்சம்பவித்ததோ அறியேனே என்றுமனங்கலங்கிஅதிசீக்கிரமாகநடந்தார். அடியார்களுடைய பக்திவலையில் அகப்படுகின்றஅருட்

கடலாகியபரமசிவன் திண்ணனுருடைய அன்புமுழுதையும் சிவகோசரியாருக்குக் காட்டும்பொருட்டுத் திருவுளங்கொண்டு தம்முடைய வலக்கண்ணினின்று இரத்தம்சொரியப்பண்ணினர். திண்ணனர் தூரத்திலே கண்டு விரைந்தோடிவந்தார். வந்தவுடனே இரத்தம்சொரிதலைக்கண்டார் காணவும் வாயிலுள்ள திருமஞ்சனம்சிந்த கையில்இருந்த இறைச்சி சிதற அம்பும் வில்லும் விழ தலைமயிரிலே செருகப்பட்ட புஷ்பங்கள் அலைந்துசோர ஆட்டுகின்ற கயிறு அற்றபொழுது வீழ்கின்ற நாடகப்பாவைபோலச் சீக்கிரமாகப் பதைபதைத்து நிலத்திலேவிழுந்தார். விழுந்தவர் எழுந்துபோய் இரத்தத்தைப் பலமுறை கையினலே துடைக்க அறுகாலுதல் தவிராமையைக்கண்டு அதற்கு இன்னது செய்வோம் என்று அறியாதவராகி பெருமூச்செறிந்து திரும்பிப்போய் விழுந்தார். நெடும்பொழுது உள்ளுயிர்த்தல் இன்றி இறந்தவர்கள் போலக்கிடந்தார், பின் ஒருவாறு தெளிந்து இப்படிசெய்தவர்கள் யாவர் என்று சொல்லிக்கொண்டு எழுந்தார், எங்கும்பார்த்தார், வில்லையெடுத்து அம்புகளைத்தெரிந்துகொண்டு என்னுடைய சுவாமிக்கு இத்தீங்கு வந்தது எனக்குப்பகைவர்களாகிய வேடுவர்களாலோ இந்த வனத்திற் சஞ்சரிக்கின்ற துஷ்டமிருகங்களாலோ யாதென்று தெரியவில்லையே என்றுசொல்லி மலைப்பக்கங்களிலே நெடுந்தூரமட்டுந் தேடிப்போனர். வேடர்களையேனும் விலங்குகளையேனும் காணுதவராகி திரும்பிவந்து குறைவில்லாத துன்பத்தினலே மனம்விழுங்கப்பட்டு சுவாமியைக்கட்டிக்கொண்டு இடியேறுண்ட சிங்கேறுபோல வாய்விட்டுக் கண்ணீர்சொரிய அழுதார், என்னுயிரினும் சிறந்தவரும் அடைந்தவர்கள் அன்பினலே பிரியமாட்டாதவரும் ஆகிய சுவாமிக்கு எப்படி இந்தத் துன்பம் சம்பவித்ததோ இதைத்தீர்ப்பதற்கு மருந்தொன்றை அறியேனே ஐயையோ இதற்கு என்னசெய்வேன் என்றார், இந்த உதிரம் என்னசெய்தால் நிற்குமோ இந்தத்தீங்கைச் செய்தவர்களைக்காணேன் வேடர்கள் அம்பினலாகியபுண்ணை தீர்க்கின்ற பச்சிலைமருந்துகளை மலையடிவாரத்தில் பிடுங்கிக்கொண்டுவருவேன் என்று சொல்லிக்கொண்டுபோனர். தன்னினத்வதப் பிரிந்துவந்த இடபம்போலச் சுவாமியைப் பிரிந்துவந்ததினலே வெருட்கொண்டு வனங்களெங்குந் திரிந்து பலவகையாகிய பச்சிலைகளைப்பிடுங்கிக்கொண்டு சுவாமிமேல்வைத்தமனசிலும் பார்க்கவிரைந்து வந்து அம்மருந்துகளைப்பிழிந்து அவர்கண்ணிலேவார்த்தார். அதினல் அக்கண்ணி லிரத்தம் தடைப்படாமையைக்கண்டு ஆவிசோர்ந்து இனி நா னிதற்கு என்னசெய்வேன் என்று ஆலோசித்துக்கொண்டு நின்றார், நிற்க ஊனுக்கு ஊடல் வேண்டும் என்னும் பழமொழி அவருடைய ஆத்தியானத்திலேவந்தது, உடனே இனி என்னுடையகண்ணை அம்பினலே இடந்து அம்பினல் சுவாமியுடைய கண்ணினின்றுபாயும் இரத்தம் தடைப்படும் என்று சம்பிரதாரணை செய்துகொண்டு மனமகிழ்ச்சியோடும் திருமுன்னே இருந்து அம்பையெடுத்துத் தம்முடைய

கண்ணைத்தோண்டிச் சுவாமியுடைய கண்ணிலே அப்பினார், அப்பினமாத்திரத்திலே இரத்தம் தடைப்பட்டதைக்கண்டார். உடனே அடங்குதற்கரிய சந்தோஷமாகிய கடலிலே அமிழ்ந்திக் குதித்துப்பாய்ந்தார் மலைபோலப் பருத்தபுயங்களிலே கைகளினாலே கொட்டி ஆரவாரித்தார், கூத்தாடினார், நான்செய்தசெய்கைநன்று நன்று என்று சொல்லிவியந்து, அத்தியந்த ஆனந்தத்தினாலே உன்மத்தர்போலாயினார், இப்படிச் சந்தோஷசாகரத்திலே உலாவும்பொழுது திருக்காளத்தி யீசுரர் அந்தத்திண்ணனாருடையபேரன்பைச் சிவகோசரியாருக்குப் பின்னுங்காட்டுதற்குத் திருவுளங்கொண்டு தம்முடைய மற்ற இடக்கண்ணிலும் இரத்தம் சொரியப்பண்ணினார், அது திண்ணனாருடைய பிரமாணாதீதமாகிய சந்தோஷசாகரத்தை உறிஞ்சியது அக்கினிநிரயத்துள்ளேவிழுந்து நெடுங்காலம் துன்பமுற்று அதனைநீங்கிச் சுவர்க்கத்தை அடைந்து இன்பமுற்றோனொருவன் பின்னும் அந்நிரயத்திலே வீழ்ந்தாற்போல திண்ணனார் உவகைமாறி கரையில்லாத துன்பக்கடலிலே அழுந்தி ஏங்கி பின்னர் ஒருவாறு தெளிந்து இதற்கு நான் அஞ்சேன், மருந்து கைகண்டுகொண்டேன் இன்னும் ஒரு கண்ணிருக்கின்றதே அதைத்தோண்டி அப்பி இந்நோயைத் தீர்ப்பேன் என்று துணிந்து தம்முடைய கண்ணைத் தோண்டியபொழுது சுவாமி யுடையகண் இவ்விடத்திலிருக்கின்றதுஎன்று தெரியும்பொருட்டு ஒருசெருப்புக்காலை அவர் கண்ணின் அருகிலே ஊன்றிக்கொண்டு பின்னே மனசிலே பூர்த்தியாகிய விருப்பத்தோடும் தம்முடையகண்ணைத் தோண்டும்படி அம்பைவைத்தார்.

தயாநிதியாகிய கடவுள் அதைச் சகிக்கலாற்றாதவராகி, வேதாகமங்கள் தோன்றிய தம்முடைய அருமைத் திருவாய்மலரைத் திறந்து, "கண்ணப்பாநிற்க" என்று அருளிச்செய்து அவருடையகண்ணைத் தோண்டும் கையைத் தம்முடைய திருக்கரத்தினாலே பிடித்துக்கொண்டார் பிரமாதி தேவர்கன் சமஸ்தரும் வேதகோஷத்தோடும் நிலம்புதையக் கற்பகப்பூமாரிபெய்தார்கள், மகாஞானியாராகிய சிவகோசரியார் இந்த சமாசாரம் முழுதையுங்கண்டு, அத்தியந்த ஆச்சரியமடைந்து சுவாமியை வணங்கினார் அற்றைநாள்முதலாகப் பெரியோர்கள் சுவாமிசொல்லியபடியே அவருக்குக் கண்ணப்பர் என்னும் பெயரையே வழங்குகிறார்கள். நெடுங்காலமாக உஷ்ணமாகிய அற்கினிமத்தியில் நின்று ஐம்புலன்வழியே செல்லாதபடி மனசை ஒடுக்கி அருந்தவஞ்செய்கின்றவர்களுக்கும் கிட்டாத பரம்பொருளாகிய கடவுள், ஆறுநாளுக்குள்ளேபெருகிய அன்புமேலீட்டினாலே தம்முடைய திருநயனத்தில் இரத்தத்தைக் கண்டு அஞ்சித் தம்முடைய கண்ணை இடந்து அத்திருநயனத்தில் அப்புந் திண்ணனாருடையகையைத் தமது அருமைத்திருக்கரத்தினாலே பிடித்துக்கொண்டு நிஷ்களங்கபத்தியையுடைய கண்ணப்பா நீ நமக்கு வலப்பக்கத்திலே நில்என்று திருவருள்புரிந்தார் இதைப்பார்க்கிலும் பெறவேண்டிய பெரும்பேறு யாது?



உ

சிவமயம்.

பனிரண்டாவது,

குங்கிலியக்கலயநாயனார் புராணம்.

சீலமலிதிருக்கடவூர்கலயனாராந்திகழ்மறையோர்
பணிவருமைசிதையாமுன்னே
தாலியைநெற்கொளவென்றுவாங்கிக்கொண்டு
சங்கையில்குங்கிலியத்தாற்சார்ந்தசெல்வர்,
ஞாலநிகழ்திருப்பனந்தாணாதர்நேரே
நரபதியுந்தொழக்கச்சானயந்துபோதப்
பாலமுதமுண்டாருமரசுமெய்திப்
பரிந்தமுதுசெயவருள்சேர்பான்மையாரே.

சோழமண்டலத்திலே திருக்கடவூரிலே பிராமணர்குலத்திலே சிவபத்தியிற்சிறந்த கலயர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் அந்தத்திருப்பதியில் வீரட்டானமென்னுங்கோயிலில் வீற்றிருக்கின்ற பரமசிவனுக்குத்தினந்தோறுங்குங்கிலியத்தூபம் இட்டுவந்தார் இட்டுவருங்காலத்திலே பரமசிவனுடைய திருவருளினாலே அவருக்குவறுமைஉண்டாயிற்று, உண்டாகியும் அவர் தாம்செய்யும் திருப்பணியைத்தவறாமல் நடத்திவந்தார் வறுமை மிகுதியினாலேநிலங்களைவிற்றும் அடிமைகளைவிற்றும் செளவழித்தார் இப்படி எல்லாம் செலவானமையால், அவருடையமக்களும்சுற்றத்தார்களும்வருந்தினார்கள். ஒருநாள் அவர்மனைவியார் அரிசிமுதலியன வாங்குதற்கு ஒன்றும் இல்லாமையால் இரண்டுநாளாகப் பட்டினி யிருந்து வருந்துகின்ற புதல்வரையும் சுற்றத்தாரையும்பார்த்து இரங்கி தம்முடையதாலியை அக்கணவர் கையிலேகொடுத்து, இதற்குநெல்வாங்கிக்கொண்டுவாரும் என்றார். குங்கிலியக்கலயநாயனார் அந்தத்தாலியை வாங்கிக்கொண்டு, நெல்லுக்கொள்ளும்படிபோனார். போம்பொழுது வழியிலேஒருவர்த்தகன் குங்கிலியப்பொதிகொண்டு தமக்கு எதிரேவரக்கண்டு மனமகிழ்ந்து சுவாமிக்குத் தூபம் இடும்படி குங்கிலியத்தைப் பெற்றுக்கொண்டேன், இதினும்பார்க்கமேலாகியபேறு உண்டோஎன்றுசொல்லி, தம்முடைய கையில் இருந்த தாலியைக்கொடுத்து அந்தக் குங்கிலியப்பொதியை வாங்கிக்கொண்டு ஆலயத்துக்கு விரைந்துசென்று அங்குள்ள ண்டாரத்திலே அக்குங்கிலியத்தை வைத்துவிட்டு, சுவாமியைத் துதித்

தூக்கொண்டு அங்கே இருந்தார். அவர் அங்கேஇருக்க வீட்டிலே அவர் மனைவியாரும் மக்களும் பசியினலே வாடி அன்று ராத்திரியிலே இளைப் புற்றுநித்திரைசெய்யும்பொழுது கருணைகரராகிய கடவுள் அவ்வீடுமுழு திலும் பொற்குவியலும் நெற்குவியலும், அரிசிக்குவியலும் பிறவளங்க ளும் நிறைந்து கிடக்கும்படி அருள்செய்து அம்மனைவியாருக்கு சொப் பனத்திலேதோன்றி அனுக்கிரகம்செய்தார். உடனே அவர் விழித்தெ ழுந்து அங்கேஇருக்கின்ற செல்வத்தைக்கண்டு பரமசிவனுடைய திருவ ருளை வியந்து ஸ்தோத்திரம்செய்துகொண்டு தம்முடைய நாயகராகிய குங்கிலியக்கலயநாயனருக்குத் திருவமுதுபாகம்பண்ணப் பிரயத்தனஞ் செய்தார். கிருபாநிதியாகிய பரமசிவன் குங்கிலியக் கலயநாயனருக்குத் தோன்றி நீ மிகப்பசி கொண்டிருக்கின்றாய் உன் வீட்டுக்குப்போய்ப் பா லும் அன்னமும்உண்டு துன்பத்தை ஒழி என்று திருவாய் மலர்ந்தருளி னர். குங்கிலியக்கலய நாயனர் அதைக்கேட்டுக் கைகூப்பிவணங்கி அவ ருடைய ஆஞ்ஞையை மறுத்து இருக்தற்கு அஞ்சி அதனைச் சிரசின்மே லேவகித்து கோயிலினின்றும்நீங்கிப்போய்த் தம்முடையவீட்டினுள்ளே புகுந்தார். புகுந்தநாயனர், அவ்வீடெங்கும் நிறைந்திருக்கின்ற நிதிக்கு வைகளைக்கண்டு மனைவியாரை நோக்கி இந்தச் சம்பத்துக்கள் எல்லாம் எப்படிவந்தன என்றுகேட்க, அவர் சுவாமியினுடைய அருளினல் வந்த னஎன்றார் அதுகேட்டநாயனர் ஒன்றுக்கும்பற்றாத சிறியேனையும் ஆட் கொள்ளும்பொருட்டு எங்கள் கடவுளுடைய கருணை இருந்தபடி இப்ப டியோ என்று கடவுளை வணங்கினர். மனைவியார் விரைவிலே கணவரை யும் சிவனடியார்களையும் விதிப்படி தூபதீபங்களால் ஆராதனைசெய்து அமுதுசெய்வித்தார். குங்கிலியக் கலயநாயனுபரமசிவனுடையதிருவரு ளினலே மகைசுவரியமுடையவராகி சிவனடியார்களைத் தயிர், நெய், பா லோடு அமுதுசெய்வித்துவந்தார், அவர் இப்படி நடக்குங் காலத்திலே திருப்பனந்தாளென்னும் திருப்பதியில் வீற்றிருக்கின்ற சிவலிங்கம் சாய் ந்திருக்கின்றமையால் அதனைநிமிரப்பண்ணிக்கும்பிடுதற்கு விரும்பிஇரா ஜாவானவர் தம்முடைய யானைகளெல்லாவற்றையும் பூட்டி இழுப்பித் தார் இழுப்பித்தும்அதுநிமிராமையால் அகோராத்திரம்தீராதகவலைச்சா யுற்றிருந்தார். குங்கிலியக்கலயநாயனர்அந்தசமாசாரத்தைக்கேள்வியுற்று சுவாமிதரிசனஞ்செய்யும்பொருட்டு திருப்பனந்தாளை அடைந்தார், அங் கேசிவலிங்கத்தை நிமிரப்பண்ணவேண்டுமென்கின்ற ஆசையால் இரா ஜாவருத்தமுறுதலையும் சேனைகள் யானைகளோடு சிவலிங்கத்தை இழு த்துத் தங்கள்கருத்து முற்றாமையால் பூமியின்மேலே வலிகுறைந்துவிழு ந்து இளைத்தலையும்கண்டு மனசிலே துன்பங்கொண்டு அடியேனும் இளை ப்பைத்தருகின்ற இந்தத்திருப்பணியைச் செய்யவேண்டும் என்று விரு ம்பிசிவலிங்கத்திலே கட்டப்பட்டகயிற்றைத் தம்முடையகழுத்திலேகட்



டிக்கொண்டு இழுத்தார், உடனே சிவலிங்கம் நிமிர்ந்தது. அப்படிநிமிர்ந்தது அவர்புறத்திலேகட்டி இழுத்த அக்கயிற்றினாலோ அன்று அகத்திலேகட்டியிழுத்த அன்புக்கயிற்றினாலேயாம். அதுகண்டு இராசாவும் சேனைகளும் மிகுந்தகளிப்பை யடைந்தார்கள். இராஜா குங்கிலியக்கலய நாயனாரைநமஸ்கரித்து வியந்து ஸ்தோத்திரம்பண்ணி சுவாமிக்கு வேண்டிய திருப்பணிகள் பலவற்றை நிறைவேற்றிக்கொண்டு தம்முடைய நகரத்துக்குப்போய்விட்டார்.

குங்கிலியக்கலயநாயனார் சிலநாள் சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு அங்கேயிருந்து பின்தமது வாசஸ்தானமாகிய திருக்கடவூருக்குப்போய் தாம்செய்யுந் திருப்பணியைச் செய்துகொண் டிருந்தார் இருக்குநாளிலே அந்தஸ்தலத்திற்கு எழுந்தருளிவந்த சைவசமயாசாரியர்களாகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரையும் திருநாவுக்கரசு நாயனாரையும் எதிர்கொண்டு தம்முடையவீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் அமுது செய்வித்து அவர்களுடைய திருவருளையும் பரமசிவனுடைய திருவருளையும் பெற்றார் பின்னும்சிலகாலம் அன்பு மென்மேலும் பெருகப் பலதிருப்பணிகளையும் செய்துகொண்டிருந்து சிவபதப்பிராப்தியானார்.

உ

சிவமயம்

பதின்மூன்றாவது,

மானக்கஞ்சாறநாயனார் புராணம்.

கஞ்சநகர்மானக்கஞ்சாறனார்சீர்க்காதன்
மகள்வதுவைமணங்காணநாதன்
வஞ்சமலிமாவிரதத்தலைவனாகிவந்து
புகுந்தவளளகமகிழ்ந்துநோக்கிப்
பஞ்சவடிக்காமென்னவரிந்துநீட்டும்
பத்தரெதிர்மறைந்திறைவன்பணிந்தவாக்கா
லெஞ்சலில்வண்குழல்பெற்றபேதை
மாதையேயர்பிராற்குதவியருளெய்தினாரே.

கஞ்சாறூரிலே வேளாளர் குலத்திலே அரசர்களிடத்திற்பரம்பரையாகச் சேனாதிபதிஉத்தியோகத்தில் இருக்கின்றகுடியிலே சிவபத்திஅடி

யார்பத்திகளிற்சிறந்த மானக்கஞ்சாறர் என்பவர் ஒருவர் இருந்தார்அவர்சிலகாலம் பிள்ளைப்பேறு இன்மையால் அதிதுக்கங்கொண்டு, பிள்ளைப்பேற்றின்பொருட்டுப் பரமசிவனை உபாசனைபண்ணி அவருடைய திருவருளினால் ஒரு பெண்குழந்தையைப்பெற்றார். அந்தப்பெண் வளர்ந்துமணப்பருவம் அடைய கலிக்காமநாயனார் சிலமுதியோர்களை மானக்கஞ்சாறநாயனாரிடத்தில் அனுப்பி அந்தப்பெண்ணைத் தமக்கு விவாகஞ்செய்துதரும்படி பேசுவித்து அவர் அதற்கு உடன்பட்டமையை அறிந்துசோதிடர்களாலே நியமிக்கப்பட்ட சுபதினத்திலே மணக்கோலங் கொண்டு சுற்றத்தார்களோடும் கஞ்சாறாருக்குச் செல்லும்படி புறப்பட்டார்அவர் கஞ்சாறாருக்கு வருதற்குமுன்னே கருணாநிதியாகிய பரமசிவன் ஒரு மகாவிரதிவடிவங்கொண்டு மானக்கஞ்சாறநாயனார் வீட்டுக்குச்சென்றார் அந்நாயனார் அவரைக்கண்டுஎதிர்கொண்டு, உபசாரவார்த்தைகளைச்சொல்லி வணங்கினார். மகாவிரதியார் அந்நாயனாரைநோக்கி இங்கே என்ன மங்கலகிர்த்தியம் நடக்கப்போகின்றதுஎன்று வினவநாயனார் அடியேனுடையபுத்திரியின்விவாகம்நடக்கப்போகின்றதுஎன்றார்மகாவிரதியார்உமக்குச்சோபனம்உண்டாகுகஎன்றுஆசீர்வதித்தார்.நாயனார்உள்ளேபோய் மனக்கோலங்கொண்டிருந்த தமது புத்திரியை அழைத்துவந்து மகாவிரதியாரை வணங்கும்படிசெய்தார், மகாவிரதியார் தம்மை வணங்கி எழுந்தபெண்ணினுடைய கூந்தலைப்பார்த்து, மானக்கஞ்சாற நாயனாரைநோக்கி இந்தப்பெண்ணினுடைய தலைமயிர்நமக்கு பஞ்சவடிவுக்குஉதவும் என்றார், உடனே நாயனார் தம்முடைய உடைவாளை உருவி இவர் இதுகேட்டதற்குச் சிறியேன் என்னபுண்ணியம்செய்தேனோஎன்று, அந்தப் பெண்ணினுடைய கூந்தலை அடியிலே அறிந்து அம்மகாவிரதியார் கையிலே நீட்டகடவுள்தாம்கொண்டுவந்த மகாவிரதிவடிவத்தைஒழித்து,ஆகாயத்திலே உமாதேவியோடு இடபாரூடராய்த் தோன்றினார். அதுகண்டு மானக்கஞ்சாற நாயனார் பரவசமாகி அடியற்றமரம்போலவிழுந்து நமஸ்கரித்து எழுந்து அஞ்சலியஸ்தராகி நின்றார், சுவாமி அம்மானக்கஞ்சாற நாயனாருக்குத் தம்முடைய சந்நிதானத்திலே தம்முடைய பெருங்கருணைத் திறத்தைப் புகழ்ந்து கொண்டிருக்கும் பெரும்பேற்றைக்கொடுத்து அந்தர்த்தானமாயினார். கலிக்காமநாயனார் கஞ்சாறாரிலே வந்துசேர்ந்து அங்கே நிகழ்ந்த சமாசாரத்தைக் கேள்வியுற்று மனமகிழ்ந்து திருவருளைத் துதித்து முண்டிதஸ்திரீயை விவாகம்பண்ணுதல்சாஸ்திரவிரோதமன்றோஎன்று மனந்தளர்ந்தார். அதற்குச் சுவாமி கலிக்காமா! நீமனந்தளரவேண்டாம் இந்தப்பெண்ணுக்குக் கூந்தலைமீளக் கொடுத்தருள்கின்றோம் என்று அருளிச்செய்த திருவாக்கைக்கேட்டுமனந்தளர்ச்சிநீங்கி முன்போலக் கூந்தலைப்பெற்ற அப்பெண்ணை விவாகம்செய்துகொண்டு தம்முடைய ஊருக்குப்போய்விட்டார்.



உ

சிவமயம்.

பதினன்காவது,

அரிவாட்டாயநாயனர் புராணம்.

தாவில்கணமங்கலத்துள்வேளாண்டொன்மைத்
    தாயனார்நாயனார்தமக்கேசெந்நெற்
றாவரிசியெனவிளைவதவையேயாகத்துறந்
    துணைவுவடுவரிசிதுளங்குகீரை
யாவினினைந்துடன்கொணர்வோர்கமரிற்
    சிந்தவழிந்தரிவாள்கொண்டூட்டியரியாமுன்னே
மாவடுவிடெலியுமான்கரமுந்தோன்றி
    வாள்விளக்கியமரர்தொழவைத்தவன்றே.

சோழமண்டலத்திலே கண்மங்கலம் என்கின்ற ஊரிலே வேளாளர்
குலத்திலே சிவபத்தியிற் சிறந்தவரும் இல்லறத்தை ஒழுங்காக நடத்து
கின்றவரும் மிகுந்த செல்வமுள்ளவருமாகிய தாயனார் என்பவர் ஒருவர்
இருந்தார். அவர் பரமசிவனுக்குச் செந்நெல் அரிசியும், செங்கீரையும்,
மாவடுவும் தினந்தோறுங்கொண்டுபோய், அமுதுசெய்வித்துவருவார்.
இப்படி நெடுங்காலத்தில் கடவுளுடைய திருவருளினால் அவருக்கு வ
றுமை யுண்டாயிற்று உண்டாகியும், அவர்கூலிக்குநெல் அறுப்பவராகி,
தாம்கூலியாகப்பெற்ற செந்நெல்லெல்லாம் சுவாமிக்கு அமுதுசெய்வித்து
கார்நெல்லைக்கொண்டு தாம் சீவனஞ்செய்துவந்தார், செய்யுநாளிலே,
பரமசிவன் அவ்வூரிலிருக்கின்ற வயல்களிலுள்ள நெல்லெல்லாம் செந்
நெல்லாகும்படி அருள்செய்ய, தாயனார் மனமகிழ்ந்து தினந்தோறும் வ
யல்களுக்குப்போய் நெல்லறுத்து கூலிவாங்கி இப்படிக்கிடைத்தது அடி
யேன் செய்த புண்ணியத்தால் என்று சுவாமிக்கு மிக அமுதுசெய்விப்
பாரானார். இப்படி நடக்கின்றபடியால் நாடோறும் உணவில்லாமைபற்
றி மனைவியார் வீட்டின்பின்புறத்திலுள்ள தோட்டத்திற்குப்போய் இ
லைக்கறிகொய்து சமைத்துவைக்க, தாயனார் அதையுண்டு முன்போலத்
தாம்செய்யும் திருப்பணியைச்செய்தார். செய்யுநாளிலே தோட்டத்தி
லுள்ள இலைக்கறி யெல்லாம் அற்றுப்போக, மனைவியார் தண்ணீர்வார்க்
க அதனைப் பானம்பண்ணி, திருப்பணியைச் செய்துவந்தார். இப்படிச்
செய்துவரும் நாளிலே ஒருநாள் முன்போலச் சுவாமிக்கு அமுது செய்
யும்பொருட்டுச் செந்நெல்லரிசியும் செங்கீரையும்மாவடுவும் கூடையில்

வைத்துச் சுமந்துகொண்டுபோக மனைவியார் பஞ்சகவ்வியங்கொண்டு அவருக்குப்பின்னாகநடந்தார். முன்செல்கின்ற தாயனார் பசியினால் கால் தள்ளாடித் தவறிவிழ மனைவியார் பஞ்சகவ்வியக்கலத்தை மூடியிருந்த கையினால் அவரை அணைத்தார். அணைத்தும் எல்லாம் கமரிலே சிந்திப் போகக்கண்டு தாயனார் இனி கோயிலுக்குப்போவதினாற் பயன்யாது என்று துக்கித்து இங்கே சிந்திய செங்நெலரிசியையும் செங்கீரையையும் மாவடுவையும் கடவுள் அமுதுசெய்தருளும்பேற்றை பெற்றேனில்லையே என்று அறிவாளினாலே தம்முடைய ஊட்டியை அரியத்தொடங்கினார், அப்பொழுது அவ்வடியார் தம்முடைய கழுத்தை அரிகின்ற கையைத்தடுக்கும்பொருட்டுச் சித்தசித்துப்பிரபஞ்சமெங்கும் வியாபித்திருக்கின்ற பரமசிவன் உயர நீட்டிய திருக்கரமும், மாவடுவைக்கடித்தலால் உண்டாகுகின்ற விடேல்விடேல் என்னும் ஓசையும், கமரினின்றும் ஒக்கவெழுந்தன, தாயனார் பரமசிவனுடைய திருக்கரம் வெளியில்வந்து அரிவாள்பிடித்த தம்முடையகையைப் பிடித்தபொழுது பயங்கொண்டு, முந்திய துன்பம்நீங்கி மனம் மிகமகிழ்ந்து அவர் தமக்குச்செய்த திருவருளைவியந்து அஞ்சலிசெய்து ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு நின்றார், சுவாமி இடபாரூடராய்த்தோன்றி நீ நம்மிடத்தில்வைத்த அன்பினாலே செய்தசெய்கை நன்றாயிருக்கின்றது நீ உன்மனைவியோடுவந்து நமது சிவலோகத்தில் வாழ்ந்திரு என்றுசொல்லி அவர்கள் உடன் செல்ல போயருளினார். அந்தத் தாயர் என்பவர் இங்கே சிந்தியவைகளைப் பரமசிவன் அமுதுசெய்யப்பெற்றேனில்லை என்று துக்கித்த அரிவாளினாலே தம்முடை கழுத்தை அரிதலுற்றபடியால் அவருடைய பெயர் அரிவாட்டநாயனார் என்றாயிற்று.

உ


சிவமயம்.

பதினைந்தாவது.

ஆனாயநாயனார் புராணம்.

மங்கலமாமழைநாட்டுமங்கலமாநகருண்மருவுபுகழானாயர்வளராமேய்ப்பார்[வைத்து
கொங்கலர்பூந்திருக்கொன்றைமருங்குசார்ந்து குழலிசையினைந்தெழுத்துங்குழைய
தங்குசராசரங்களெல்லாமுருகாநிற்பத்தம் பிரானணைந்துசெவிதாழ்ந்துவாழ்ந்து
பொங்கியவான்கருணைபுரிந்தென்றுமூதப்போதுகவென்றருளவுடன்போயினரே.

மழநாட்டிலே மங்கலநகரிலே ஆயர்குலத்திலே சிவபத்தியிற்சிறந்த ஆனாயர் என்பவர் ஒருவர்இருந்தார். அவர்தம்முடைய ஏவலாளராகிய



மற்றை இடையர்களோடும் பசுநிறைகளைக் காட்டுக்குக் கொண்டுபோய் மேய்த்துக்கொண்டும் காந்தருவவேதத்திலே சொல்லியபடி செய்யப்பட்டவேய்ங்குழலினாலே ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைச் சத்தசுரம் பொருந்த வாசித்து ஆன்மாக்களுக்குத் தம்முடைய இசையமுகத்தைச் செவித்துவாரத்தினாலே புகட்டிக்கொண்டும்வருவார். கார்காலத்திலேஒருநாள்இடையர்கள்பசுநிரைகளைச் சூழந்துகொண்டுசெல்ல, அவ்வானாயநாயனார்கையிலேகோலும்வேய்ங்குழலுங்கொண்டு நிரைகாக்கும்படிகாட்டுக்குச்சென்றபொழுது அவ்விடத்திலே மாலையைப்போல நீண்டபூங்கொத்துகளைத் தாங்கிக்கொண்டு புறத்திலே தாழ்கின்றசடையினையுடைய பரமசிவனைப்போலநிற்கின்ற ஒருகொன்றைமரத்துக்குச் சமீபத்திலேபோய்அதைப் பார்த்துக்கொண்டு நின்று, அன்பினாலே உருகி இளகியமனசை யுடையவராகி, வேய்ங்குழலினாலே இசைநூலிலேவிதிப்படி ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை வாசித்தார் அவர் பஞ்சாக்ஷரத்தை அமைந்து வாசிக்கின்றது அதிமதுரமாகிய இசைவெள்ளமானது எவ்வகைப்பட்ட உயிர்களின் செவிலும் தேவதருவின்பூந்தேனைத் தேவாமிர்தத்தோடு கலந்து வார்த்தல்போலப் புகுந்தது, புற்களைமேய்ந்த பசுக்கூட்டங்கள் அசைவிடாமல் அவரை அடைந்து உருக்கத்தினாலே மெய்மறந்துநின்றன. பால்குடித்துக்கொண்டுநின்ற கன்றுகள் எல்லாம் குடித்தலைமறந்துவிட்டு இசைகேட்டுக் கொண்டுநின்றன. எருதுகளும் மான்முதலாகிய காட்டுமிருகங்களும் மயிர்சிலிர்த்துக்கொண்டு அவர் சமீபத்தில்வந்தன ஆடுகின்ற மயிற்கூட்டங்கள் ஆடுதலொழிந்து அவர்பக்கத்தை அடைந்தன மற்றப்பலவகை பட்சிகளும் தங்கள் செவித்துவாரத்தினாலே புகுந்து நிறைந்த அகத்தோடும் அவரருகிலேவந்துஉருகுகின்றன, மாடுமேய்த்துக்கொண்டுநின்ற இடையர்களெல்லாரும் தங்கள் தொழிலைமறந்து கானத்தைக் கேட்டுக்கொண்டு நின்றார்கள், விஞ்ஞையர்களும் சாரணர்களும் கின்னரர்களும் தேவர்களும் மெய்ம்மறந்து விமானங்களிலேறிக்கொண்டு வந்தார்கள்வருத்துகின்ற உயிர்களும் வருத்தப்படுகின்ற உயிர்களும் அவ்விசையைக் கேட்ப அதன்வசமானபடியால் பாம்புகள்மயங்கிப் பயமின்றி மயில்களின்மேலேவிழும், சிங்கமும்யானையும் ஒருங்கேகூடிவரும், மான்கள் புலிகளின்பக்கத்திலேசெல்லும், மரக்கொம்புகள் தாமும் சலியாதிருந்தன, இப்படியே சரம் அசர என்னும் ஆன்மவர்க்கங்களெல்லாம் ஆனாயநாயனாருடைய வேய்ங்குழல்வாசனையைக் கேட்டு இசைமயமாயின அவ்விசையைப் பொய்யன்புக்ககப்படாத பரமசிவன்கேட்டுபார்வதிதேவியோடும்இடபாரூடராய் ஆகாயமார்க்கத்தில் எழுந்தருளிவந்துநின்று அவ்வானாயநாயனாரைக் கடாட்சித்து மெய்யன்பனே நம்முடைய அடியார்கள் உன்னுடைய வேய்ங்குழலிசையைக்கேட்கும்பொருட்டு நீ இப்பொழுது இவ்விடத்தில்நின்றபடியே நம்மிடத்துக்குவருவாய் என்று திருவாய்மலர்ந்தருளி அவ்வானாயநாயனார் வேய்ங்குழல் வாசித்துக்கொண்டு பக்கத்திலேசெல்லக் கைலாசத்தை அடைந்தார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மூன்றாவது

மும்மையா லுலகாண்ட


சருக்கம்.

பதினாறாவது,

மூர்த்திநாயனார் புராணம்.

வழங்குபுகழ்மதுரைநகர்மூர்த்தியாராம்
வணிகர் திருவாலவாய்மன்னர்சாத்தத்
தழங்குதிரமுழங்கைதரத்தேய்த்தலூறுந்
தவிர்ந்தமணர்வஞ்சனையுந்தவிரமன்ன
னிழந்தவுயிரினனாக ஞாலநல்கவெழில்
வேணிமுடியாகவிலங்குவேட
முழங்குபுகழணியாக்விரைநீறாக
மும்மையுலகாண்டருளின்முன்னினாரே.

பாண்டிநாட்டிலே மதுராபுரியிலே வைசியர் குலத்திலே சிவபத்தியே ஒருவடிவெடுத்தாற்போலும்மூர்த்தியார்என்பவர்ஒருவர் இருந்தார் அவர் அந்தஸ்தலத்திலே வீற்றிருக்கின்ற சொக்கநாத சுவாமிக்குத்தரிக்கும்பொருட்டுத் தினந்தோறும் சந்தனக்காப்புக்கொடுத்துவருங்காலத்திலே, கருநாடதேசத்தரசன்சதுரங்கசேனைகளோடும் அம்மதுரைக்கு வந்து பாண்டியனோடுயுத்தம்செய்து அவனைஜயித்து அந்நகருக்குஅரசனாயினான். அவன் புறச்சமயிகளாகியசமணர்களுடையபோதனாசத்தியினாலே ஆருகதமதத்திற்பிரவேசித்துசிவனடியார்களுக்குஇடுக்கண்செய்வானாயினான் ஆயினும் மூர்த்திநாயனார் தாம்செய்யுந் திருப்பணியைத் தவறாது செய்துவந்தார், அதுகண்டு அரசன் அவரை ஆருகதமதத்திலேபிரவேசிப்பி



த்தற்கு உத்தேசித்து அவருக்குப்பல கொடுஞ் செய்கைகளைச் செய்தான், செய்தும் அவர்தம்முடைய திருப்பணியினின்றும் சிறிதும் வழுவாதவராயினர் அதுபற்றி அவ்வரசன் அவர் சந்தனக்கட்டை வாங்குமிடங்களிலெல்லாம் அவருக்குக் கொடுக்கவொட்டாமற் றடுத்தான், அதனல் அவர்மனம்நொந்து இப்பாண்டிநாடு துர்ச்சமயமாகிய ஆருகத சமயத்திலே பிரவேசித்துச் சிவபுண்ணியத்துக்கு இடையூறுசெய்கின்ற அதி பாதகனாகிய இவ்வரசன் இறக்க சற்சமயமாகிய சைவசமயத்தைப் பரிபாலனம்செய்கின்ற அரசரைச்சாருங்காலம் எக்காலம் என்று நினைத்து துக்கித்து, பகற்காலமுழுதும் சந்தனக்கட்டை தேடித்திரிந்து எங்கும்பெறுமையால் ஆலயத்துக்கு வந்து சுவாமிக்குத் தரிப்பதற்குத் தேய்த்துக் கொடுக்கும்பொருட்டுச் சந்தனக்கட்டைக்கு இன்றைக்கு முட்டுவந்தாலும் அக்கட்டையைப் போலத் தேய்க்கத்தக்க கைக்கு ஒருமுட்டும் இல்லையென்று ஒருசந்தனக்கல்லிலே தம்முடைய முழங்கையைவைத்து தோலும், நரம்பும், எலும்பு தேய்ந்து குறையும்படி தேய்த்தார். தேய்க்கவும் உதிரம் ஒழுகி நாற்புறத்திலும்பெருகி எலும்பினுள்ளே இருக்கும் துவாரந்திறந்து மூளை வெளியிலேவந்தது. அப்பொழுது அன்பனே நீபத்தியினது உறுதிப்பாட்டினல் இப்படிப்பட்ட செய்கையைச் செய்யற்க உனக்கு இடுக்கண்செய்த கொடுங்கோலரசன்பெற்ற இந்தநாடுமுழுதையும் நீயே கைக்கொண்டு இதற்குமுன் இவ்விடத்திலே அவனாலுண்டாகியகொடுமைகள்யாவற்றையும்நீக்கி, பரிபாலனஞ்செய்து உன்னுடைய பணியை நடப்பித்து, பின்புநம்முடைய சிவலோகத்தை அடைதியென்று ஒரு அசரீரிவாக்கு எழுந்ததுமூர்த்திநாயனர் அதைக்கேட்டு அஞ்சி கையைத்தேய்த்தலை ஒழிந்து எழுந்தார். உடனே அவர்கையானது தேய்ந்ததனலாகிய ஊறுநீங்கிமுன்போலாயிற்று. அவ்விரவிலே அந்தக்கருநாடராஜன்இறந்து சிவனடியார்களுக்கு வருத்தம்செய்த பாவத்தினலே கொடுமையாகிய நரகத்திலேவிழுந்தான், மற்றநாள் பிராதக்காலத்திலே மந்திரிமார்கள்கூடி தகனசம்ஸ்காரம்செய்து, பின்னர் தங்கள் அரசனுக்குப் புத்திரர் இல்லாமையால் வேறொருவரை அரசராகநியமித்தற்குஉபாயத்தை ஆலோசித்துயானையைக் கண்கட்டிவிடுவோம் அந்த யானை எவரை எடுத்துக்கொண்டு வருமோ அவரே இந்நாட்டுக்கு அரசராவார் என்று சம்பிரதாரணை செய்துகொண்டு யானையை விதிப்படி அருச்சித்து நீ இந்நாட்டை ஆளுதற்கு வல்ல ஒருவரை எடுத்துக்கொண்டுவா என்றுசொல்லி, அதை வஸ்திரங்கொண்டு கண்ணைக்கட்டிவிட்டார்கள். அந்தயானை அந்தப்பட்டணத்து வீதிகளிலே திரிந்துசென்று சொக்கநாதசுவாமியுடைய ஆலயத்தின் கோபுரத்துக்கு முன்னேபோயிற்று. மூர்த்திநாயனர் இரவிலேதமக்குச்செவிப்புலப்பட்ட அசரீரிவாக்கினல் மனத்துயரம்நீங்கி, எங்கள் கடவுளாகிய பரமசிவனுக்குத் திருவுளமாகில் அடியேன் இந்நாட்டை ஆளுதற்கு உடன்படுவேன் என்று நினைத்துக்கொண்டுகோயிற்புறத்திலேநின்று

யானையானது அவர் முன்னேசென்று தாழ்ந்துஅவரை எடுத்து முது கின்மேல்வைத்துக்கொண்டது. அதுகண்ட மந்திரிமார்கள் அவரை நமஸ்கரித்து யானையின் முதுகினின்றும் இறங்கி மலர்மாலைகள்தொங்காநின்ற முடிசூடும் ஒரு சாலையினிடத்திலே கொண்டுபோய், ஒரு சிங்காசனத்தின்மேல் இருத்தி முடிசூட்டுக்குவேண்டும் மங்கலகிர்த்தியங்களைச்செய்ய ஆரம்பித்தார்கள், மூர்த்திநாயனார் அவர்களைநோக்கி ஆருகத மதம் நீங்கிச் சைவசமயம் விருத்தியாயின் நான் இந்நாட்டை ஆளுதற்கு உடன்படுவேன் என்றார். அதைக்கேட்ட மந்திரிமார்களும் சாஸ்திர பரிசயமுள்ள பிறரும் அவரைவணங்கிநின்று, சுவாமீ தேவரீருடைய ஆஞ்ஞையின்படியேயன்றி அதற்குமாறாக யாவர்செய்வார்கள் என்று சொன்னார்கள். பின்பு மூர்த்திநாயனார் நான் அரசாள்வேனாகில், எனக்கு விபூதியே அபிஷேகதிரவியமும், உருத்திராக்ஷமே ஆபரணமும், சடாமுடியே கிரீடமும், ஆகும் என்றார். அவர்கள், தேவரீர் அருளிச்செய்தபடியே ஆகுகஎன்றுசொல்லி, மகுடாபிஷேகத்துக்கு வேண்டும் செய்கைகளைச் செய்து நிறைவேற்றினார்கள், மூர்த்திநாயனார் சடைமுடிசரித்து ஆலயத்திற்சென்று, சுவாமியை வணங்கிக்கொண்டு யானையின் மேல் ஏறி அரண்மனைக்குப்போய்ச்சேர்ந்தார். அங்கே அத்தாணி மண்டபத்திலே இரத்தசிங்காசனத்தின் மேலே தவளச்சத்திர நிழலிலே வீற்றிருந்துகொண்டு பொய்ச்சமயமாகிய ஆருகதம் நீங்கவும், மெய்ச்சமயமாகிய சைவசமயமே எங்கும் விளங்கவும் பெண்ணாசை சிறிதுமின்றி நெடுங்காலம் விபூதி உருத்திராட்சம், சடைமுடி என்கின்ற மூன்றினாலும்அரசாண்டு பின் சிவபதப்பிராப்தியானார்.

உ

சிவமயம்.

பதினேழாவது,

முருகநாயனார்புராணம்.

மன்னுதிருப்புகலூர்வாழ்முருகனாராமறையவர்கோவர்த்தமானீச்சரத்தார்
சென்னியினுக்கழகமருமலர்கள்கொய்துதிருமாலைபுகழ்மாலைதிகழச்சாத்திக்
கன்னிமதிற்கழுமலக்காவலனாதன்காதன்மிகுமணங்காணுங்களிப்பினாலே
பின்னையவருடனுடன்சேவித்தருளான்மீளாநிலமருவுபெருமணத்தானையெய்தினாரே.

சோழமண்டலத்திலே திருப்புகலூரிலே பிராமணர்குலத்திலே சிவபத்தியிற் சிறந்தவராகிய முருகர்என்பவர் ஒருவர் இருந்தார். அவர்தினந்





தோறும் சூரியோதயத்துக்குமுன் எழுந்து ஸ்நாநம் பண்ணிக்கொண்டு போய், கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ நிலப்பூ என்கிற நால்வகைப்பூக்களில் உரிய பூக்களைக்கொய்து, பூங்குடைகளிலே இட்டுக்கொண்டுவந்து தனியிடத்திலிருந்து பலவகைப்பட்ட மாலைகள்செய்து அந்தஸ்தலத்திலுள்ள வர்த்தமானீச்சரம் என்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற பரமசிவனுக்குச்சாத்தி அருச்சனைசெய்தும், திவ்வியமந்திரமாகிய ஸ்ரீபஞ்சாட்சரத்தைச் செபித்தும்வருவார் இப்படிச்செய்துவருங்காலத்திலே திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்குச் சிநேகிதராகிய பெருமையையும் பெற்றார், பெற்ற அம்முருகநாயனார் அந்தத்திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகளுடைய திருமணத்திலேதம்முடைய சிவபூசாபலத்தினாலேபோய் பரமசிவனுடைய திருவடிநிழலை அடைந்தார்.

௨

சிவமயம்.

பதினெட்டாவது,

உருத்திரபசுபதி நாயனார் புராணம்.

பங்கமில்வண்புகழ்நிலவுதலையூர்வாழும்
பசுபதியாரெனுமறையோர்பணிந்துசெந்தே
னங்கமலமடுவினிடையல்லுமெல்லு
மகலாதேயாகளமாயமர்ந்துநின்று
திங்கள்வளர்சடைமுடியானடிகள்போற்றித்
திருவெழுத்துமுருத்திரமுந்திகழவோதி
மங்கையிடமுடையபிரானருளான்மேலை
வானவர்கடொழுமுலகின்மன்னினாரே.

சோழநாட்டிலே திருத்தலையூரிலே பிராமணகுலத்திலே பரமசிவனுடைய திருவடிகளிலே பதிந்த அன்பே தமக்குச் செல்வமெனக்கொண்ட பசுபதியென்பவர் ஒருவர் இருந்தார். அவர் தாமரைத்தடாகத்திலேஅகோராத்திரம் கழுத்தளவினதாகிய தண்ணீரிலே நின்றுகொண்டு இரண்டு கைகளையும் சிரசின்மேலேறக்குவித்து பரமசிவனுடைய திருவடிகளை

முதலாக சிந்தனையோடு வேதத்தின்சாரமாகிய உருத்திரத்தை ஓதி, சில நாட்சென்றபின் சிவபதத்தை அடைந்தார், அதனால் அவர்பெயர் உருத்திரபசுபதிநாயனர் என்றாயிற்று.

உ


சிவமயம்.

பத்தொன்பதாவது,

திருநாளைப்போவார் நாயனார் புராணம்.

நன்மைதிகழ்பேற்காநாட்டதனூர்வாழ்
  நந்தனார்புறத்தொண்டர்நாளைப்போக
பொன்மலிதென்புலியூர்க்கென் றுரைப்பார்புன்கூர்ப
  பொய்கையமைத்தடலேறுயரியநோக்கி
வன்மதில்சூழ்தில்லையிறையருளால்வாய்ந்த
  வண்டழலினிடைமூழ்கிமறையோர்போற்ற
மின்மலிசெஞ்சடைமுனியாயெழுந்துநாதன்
  விளங்குநடந்தொழுமன் றண்மேவினாரே.

சோழமண்டலத்திலே மேற்காநாட்டிலே ஆதனூரிலே புலையர்குலத்திலே நந்தனாரென்பவர் ஒருவர் இருந்தார். அவர்பரமசிவனுடையதிருவடிகளையன்றி மற்றொன்றையும் மறந்தும் நினையாதவர், அவ்வூரிலே தமக்குவெட்டிமைக்காக விடப்பட்டிருக்கின்றமானியமாகிய நிலத்தின்விளைவினாலே சீவனஞ்செய்துகொண்டு தாம் செய்யவேண்டும் தொழிலை நடத்துகின்றவர், சிவாலயங்கள்தோறும் பேரிகைமுதலாகிய ஒருமுகக்கருவிகளுக்கும் மத்தளமுதலாகிய இருமுகக்கருவிகளுக்கும் தோலும்வாரும் வீணைக்கும் யாழுக்கும் நரம்பும், அருச்சனைக்குக்கோரோசனையும் கொடுக்கின்றவர் ஆலயங்களின் திருவாயிற்புறத்தில் நின்றுகொண்டு அன்பின்மேலீட்டினால் கூத்தாடிப் பாடுகின்றவர், அவர் ஒருநாள் திருப்புன்கூரிலேபோய்ச் சுவாமிதரிசனம்பண்ணித் திருப்பணிசெய்தற்கு விரும்பி, அங்கேசென்று கோபுரவாயிலிலே நின்றுகொண்டு சுவாமியைநேரே தரிசித்துக்கும்பிடவேண்டும் என்றுநினைத்தார். சுவாமி அவருடைய விருப்பத்தின்படியே தமக்குமுன்னிருக்கின்ற இடபதேவரை விலகும்படிசெய்து அவரு



க்குக் காட்சிகொடுத்தருளினார். நந்தனார் அந்தஸ்தலத்திலே ஒரு பள்
ளத்தைக்கண்டு, பெரிய குளமாகவெட்டித் தம்முடையவூருக்குத்திரும்
பினார். அவர் இப்படியே பலஸ்தலங்களுக்கும்போய் வணங்கித் திருப்ப
ணி செய்துவந்தார். ஒருநாள் சிதம்பர ஸ்தலத்திற்குப் போகவேண்டும்
என்று ஆசைகொண்டு, அவ்வாசை மிகுதியினாலே அன்றிரவு முழுதும்
நித்திரைசெய்யாதவராகி விடிந்தபின் நான் சிதம்பர ஸ்தலத்திற்குப்போ
னால் கோயிலினுள்ளே பிரவேசிக்கும் யோக்கியதை என்சாதிக்கு இல்லை
யேஎன்று துக்கித்து, இதுவும் சுவாமியினுடைய அருள்தான் என்று
சொல்லிப் போகாதொழிந்தார். பின்னும் ஆசை அதிகரித்தலால் நாளைக்
குப் போவேன் என்றார். இப்படியே நாளைக்குப் போவேன் நாளைக்குப்
போவேன் என்று அநேகநாட்கள் கழித்தார். அதனால் அவருக்குத்திரு
நாளைப்போவார் என்னும் பெயர் உண்டாயிற்று.

ஒருநாள் அவர் சிதம்பரதரிசனம் பண்ணவேண்டும் என்னும் ஆ
சைபிடித் துந்துதலால், தம்முடையவூரினின்றும் புறப்பட்டு, சிதம்பரத்
தின் எல்லையை அடைந்து, அவ்வூரைச்சுற்றிய மதில்வாயிலே புகுந்து
அங்குள்ள பிராமணர்களுடைய வீடுகளிலே ஓமஞ்செய்யப் படுதலைக்க
ண்டு உள்ளேபோதற்கு அஞ்சி அங்கே நமஸ்கரித்து அவ்வெல்லையை வ
லஞ்செய்துகொண்டு போவார். இப்படி இராப்பகல் வலஞ்செய்து உள்
ளேபோகக் கூடாமையை நினைந்து வருந்துகின்ற திருநாளைப்போவார்,
சபாநாயகரை எப்படித் தரிசிக்கலாம், இந்த இழிந்தபிறப்பு இதற்குத்
தடைசெய்கின்றதே என்று துக்கத்தோடும் நித்திரைசெய்தார். சபாநா
தர் அவருடைய வருத்தத்தை நீக்கி அவருக்கு அருள்செய்யத் திருவுள
ங்கொண்டு, அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, நீ இந்தப்பிறப்பு
நீங்கும்படி நெருப்பிலே மூழ்கி எழுந்து பிராமணர்களோடும் நம்முடை
யசந்நிதானத்தில் வருவாய் என்று அருளிச்செய்து, தில்லைவாழந்தணர்
க்கும் சொப்பனத்திலே தோன்றி அந்தத் திருநாளைப் போவார் பொரு
ட்டு நெருப்பை வளர்க்கும்படி ஆஞ்ஞாபித்து மறைந்தருளினார்.

தில்லைவாழந்தணர்கள் எல்லாரும் விழித்தெழுந்து கோயில்வாயிலி
லேவந்து கூடி சபாநாயகர் ஆஞ்ஞாபித்தபடி செய்வோம் என்று சொல்
லி திருநாளைப்போவாரிடத்திலே சென்று, ஐயரே சபாநாயகருடைய ஆ
ஞ்ஞையினாலே இப்பொழுது உம்பொருட்டு நெருப்புவளர்க்கும்படி வந்
தோம் என்றார்கள். அதைக்கேட்ட திருநாளைப்போவார் அடியேன் உய்
ந்தேன் என்றுசொல்லி வணங்கினார். பிராமணர்கள் தென்மதிற் புறத்தி
லே கோபுரவாயிலுக்குமுன்னே ஒருகுழியிலே நெருப்பு வளர்த்து அ
தைத் திருநாளைப்போவாருக்குப்போய்த் தெரிவித்தார்கள். திருநாளைப்
போவார் அந்நெருப்புக்குழியை அடைந்து சபாநாயகருடைய திருவடி
களை மனதிலே தியானம்பண்ணி அதனை வலஞ்செய்து கும்பிட்டுக்கொ

ண்டு அதினுள்ளே புகுந்தார். புகுந்தநாயனார் அந்தத்தேகத்தை ஒழித்து புண்ணியமாகிய பிராமணமுனி வடிவங்கொண்டு உபவீசத்தோடும் சடைமுடியோடும் எழுந்தார். அதுகண்டு தில்லைவா ழந்தணர்களும் மற்றைச் சிவபத்தர்களும் அஞ்சலிசெய்து களிப்படைந்தார்கள், திருநாளைப்போவார் அவர்கள் உடன் செல்லச்சென்று கோபுரத்தை அணுகி அதனை நமஸ்கரித்து எழுந்து உள்ளேபோய்க் கனகசபையை அடைந்தார் பின் அவரை அங்குநின்ற பிராமணர் முதலியோர் யாவரும் காணாமையால் ஆச்சரியங்கொண்டு ஸ்தோத்திரஞ் செய்தார்கள் சபாநாயகர் திருநாளைப்போவாருக்குத் தம்முடைய ஸ்ரீபாதங்களைக் கொடுத்தருளினார்.

உ

சிவமயம்.

இருபதாவது,

திருக்குறிப்புத்தொண்டநாயனார்புராணம்.

கொந்தலர்பூம்பொழிற்கச்சிநகரகோலிக்
   குலத்தலைவர்தவர்குறிப்புக்குறித்துளார்பால்
வந்திறைவர்நமக்கின்றுதாரீராகின்
   வருந்துமுடலெனவாங்கிமாசுகீத்த
கந்தைபுலராதொழியமழையுமாலைக்
   கடும்பொழுதும்வரக்கண்டுகலங்கிக்கன்மேற்
சிந்தமுடிபுடைப்பளவிற்றிருவேகம்பர்
   திருக்கைகொடுபிடித்துயர்வான்சேர்த்தினரே.

தொண்டைமண்டலத்திலே காஞ்சிபுரத்திலே ஏகாலியர்குலத்திலே சிவனடியார்களுடைய திருக்குறிப்பையறிந்து அவர்களுக்குத் தொண்டு செய்கின்றமையால் திருக்குறிப்புத்தொண்டர் எனப்பெயர்பெற்ற ஒரு பெரியவர் இருந்தார். அவர்மிகுந்த விருப்பத்தோடு சிவபத்தர்களுக்கு வஸ்திரம் ஒலித்துக்கொடுத்து வருங்காலத்திலே ஏகாம்பரநாத சுவாமி குளிர்காலத்திலே ஒரு சிவபத்தர் வேடங்கொண்டு, மெலிந்த சரீரத்தை



யுடைய ஒரு வறியவர்போலாகி அழுக்கடைந்த கந்தையுடன் அவரிடத்திற் சென்றார் திருக்குறிப்புத் தொண்டர் அவரைக்கண்டு எதிர்கொண்டு வணங்கி பலஉபசார வார்த்தைகளைச் சொல்லி அவருடைய குறிப்பை யறிந்து உமது கந்தையைத் தந்தருளும் ஒலித்துத்தருகின்றேன் என்றார். சிவபத்தர் வேடங்கொண்ட கடவுள் இந்தக்கந்தை அழுக்கு அதிகமாக ஏறப்பெற்றுத் தரிக்கப்படுதற்குத் தகுதியில்லாததா யிருந்தாலும் குளிர் மிகுதியினால் வருத்த முறுகின்றபடியால் கைவிடுதல் கூடாது அஸ்தமயனத்திற்குமுன் தருவீராயில் கொண்டுபோய்ச் சீக்கிரமாக ஒலித்துக்கொண்டு வாரும் என்றார். திருக்குறிப்புத்தொண்டர் அடியேன் தாழாமல் ஒலித்து அஸ்தமயனத்துக்கு முன் கொண்டுவந்து தருகின்றேன் தந்தருளும் என்றுசொல்ல சுவாமி விரைவிலே ஒலித்து உலர்த்தித் தராதொழிவீராகில் இந்தத் தேகத்துக்குத் துன்பஞ் செய்தீர் என்றுசொல்லி அக்கந்தையை அவர்கையிற் கொடுத்தார். திருக்குறிப்புத்தொண்டர் அதைவாங்கிக்கொண்டு ஒருகுளத்திற் சென்றுமுன் சிறிதழுக்குப்போக்கி வெள்ளாவியில் வைத்து பின் ஒலிக்கப்புகுந்தார் அப்பொழுது பரமசிவனுடைய திருவருளினாலே நண்பகலொழிந்து பின்பகல்போலத் தோன்றும்படி மேகங்கள் இருண்டு ஆகாயவெளி எல்லாம்மறைத்து மழைபெய்தன. அதுகண்டு திருக்குறிப்புத் தொண்டர் சிவபத்தருக்குத் தாம் வாக்குச்செய்ததை நினைந்து இனிநான் யாதுசெய்வேன்என்று கவலையுற்று விரைவிலே மழைவிடவுங் கூடுமென்று அங்கே தானேநின்றார். அதுவிடவில்லை பின் இராக்காலம்வர திருக்குறிப்புத்தொண்டர் குளிரினாலே திருமேனிநடுங்குகின்ற சிவபத்தருக்கு நான் செய்ய விரும்பிய பணிவிடை ஐயையோ தவறிப்போயிற்றே என்று கீழேவிழுந்தார், மழைவிடாது சிவபத்தர் சுட்டியகாலமோ நீங்கிற்று, முன்னேயே ஒலித்து வீட்டிலே காற்றினால் உலரும்படி கட்டிவிட்டேனுமில்லை சிவபத்தருடைய திருமேனி குளிரினால் வருந்தும்படி இங்கு செய்த சிறியேனுக்கு இனி இதுவேசெயல் என்று எழுந்தார் வஸ்திரங்களைப் புடைக்கின்ற கற்பாறையிலே என்னுடைய தலையைச் சிந்தும்படி எற்றுவேன் என்றுபோய்க் கற்பாறையிலே தம்முடைய சிரசை எற்ற சர்வவியாபியாகிய பரமசிவனுடைய திருக்கரம் அந்தக் கற்பாறையின் பக்கத்திலே தோன்றி அவரைப்பிடித்துக் கொண்டது, ஆகாயத்தினின்று சொரிந்த நீர்மழை நீங்கிப் பூமழை பொழிந்தது, பரமசிவன் உமாதேவியோடும் இடபாரூடராய்க் காட்சிகொடுத்தார். திருக்குறிப்புத் தொண்டநாயனர் மிகுந்த அன்பினோடு விழுந்து நமஸ்கரித்து எழுந்து அஞ்சலிசெய்துகொண்டு நின்றார் பரமசிவன் அவரைநோக்கி, உன்னுடைய பத்திவலிமையை மூவுலகத்தார்களுக்குந் தெரிவித்தோம், இனி நீ நம்முடைய உலகத்தையடைந்து பேரின்பம்பெற்று வாழ்ந்திரு என்று திருவருள்புரிந்து சென்றருளினர்.

உ

சிவமயம்.

இருபத்தோராவது,

சண்டேசுர நாயனார் புராணம்.

வேதமலிசேய்ஞலூரெச்சதத்தன்
விளங்கியசேய்மறைபயிலும்விசாரசன்மர்
கோதனமேய்ப்பவன்கொடுமைபொறாதுதாமே
கொண்டுநிரைமண்ணியின்றென்கரையினீழற்
றாதகியின்மணலிலிங்கத்தான்பாலாட்டத்
தாதைபொறாதவையிடறுந்தாள்கண்மாளக்
காதிமலர்த்தாமமுயர்நாமமுண்ட
கலமகனும்பதமருளாற்கைக்கொண்டாரே.

சோழமண்டலத்திலே திருச்சேய்ஞலூரிலே பிராமணர் குலத்திலே காசிபகோத்திரத்திலே எச்சதத்தன் என்பவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு அவன்மனைவியாகிய பவித்திரைவயிற்றிலே விசாரசருமர் என்பவர் ஒருவர் திருவவதாரஞ்செய்தார். அவருக்கு ஐந்துவயதிலே வேதங்களையும் சைவாகமங்களையும் பூர்வசன்மத்து அறிவுதொடர்ச்சியினாலே கற்பிப்பார் இன்றித்தாமே அறியுமறிவு உண்டாயிற்று. தந்தைதாயர்கள் அவருக்கு ஏழுவயசிலே உபநயனச் சடங்குசெய்து தகுந்த ஆசாரியர்களைக்கொண்டு வேதாத்தியயனம் செய்விப்பிக்கத் தொடங்கினார்கள். அவ்வாசாரியர்கள் வேதங்களையும் பிறகலைகளையும் ஓதுவித்தற்கு முன்னமே அவ்விசார சருமக்குத் தாமே அறிந்துகொள்ளும்படி அமைந்திருக்கின்ற புத்தியின் றிறத்தைக்கண்டு ஆச்சரியம் அடைந்தார்கள். பாலியதிசையிலே சான்றோர்க்கு உரியகுணத்தை அடைந்திருக்கின்ற அவ்விசாரசருமர் ஆன்மாக்களாகிய நாமெல்லோரும் அனாதிமலபந்தர் என்பதும் அம்மலசத்தியைக் கெடுத்து அதனாலே விளங்காது தடைப்பட்டிருந்த சிவத்துவத்தை விளங்கும்பொருட்டுச் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம் அனுக்கிரகம் என்கின்ற பஞ்ச கிர்த்தியங்களையும் செய்வா ராகிய ஒருபதி உண்டு என்பதும், அப்பதிக்கு முற்றறிவுடைமை வரம்பிலின்ப முடைமை இயற்கை யுணர்வுடைமை தன்வயமுடைமை வரம்பிலாற் றுடைமை குறைவிலாற்ற லுடைமை என்கின்ற ஆறுகுணங்களும் இன்றி அமையாதன என்பதும் அக்குணங்க ளெல்லாம் உடையபதி பரமசிவனே உன்பதும் அவர் அத்தொழில் இயற்



றுதல்தமது அபின்ன பூதையாகிய சிவசத்தியாலாகும் என்பதும் அது பற்றி அவ்விருவரே நமக்குப் பரமபிதா மாதாக்கள் என்பதும் அதனல் அவர்களிடத்தேயேநாம் அன்புசெய்யவேண்டும் என்பதும் அவ்வன்பை மற்றோர் பிறவியிற்செய்குவமெனின், அதற்குக் கருவியாய்ச்சிறந்துள்ள இம்மானுடப்பிறவி பெறுதற்கரியது என்பதும், அப்படியாகில் இப்பிறவியிற்றனே இன்னுஞ் சிலநாட்சென்றபின் செய்குவமெனின் இப்பிறவி நீங்குமவதி அரிதற்கரியதுஎன்பதும், அங்ஙனமாகையால் அவ்வன்பு செய்தற்கேயன்றி மற்றென்றிற்கும் சமயமில்லைஎன்பதும், அதுசெய்யுமிடத்தும் நமக்கு ஓர்சாமர்த்தியமுள்ள தெனக்கருதி அதனை முன்னிடாது திருவருளையே முன்னிட்டுநின்று செய்யவேண்டும் என்பதுமே வேதாகமாதி சமஸ்த சாஸ்திரங்களாலும் துணியப்படும் மெய்ப்பொருள் என்று சந்தேகவிபரீதமறத் துணிந்துகொண்டார், அந்தயதார்த்தமாகிய துணிவுதோன்றவே அவருக்குச் சிவனிடத்திலே மெய்யன்புகலைதோறும் வளர்வதாயிற்று,

ஒருநாள் அவர் தம்மோடு அத்தியயனஞ் செய்கின்ற பிள்ளைகளோ பிள்ளைகளோடும் அவ்வூரவர்களுடைய பசுநிரைகளுடன் கூடிச்சென்றபொழுது ஓரீற்றுப்பசுஒன்று மேய்ப்பானுகிய இடையனைக்குத்தப்போயிற்று. அவ்விடையன் சிறிதும்பாவத்துக்கு அஞ்சாமல் அப்பசுவைக் கோலினல் அடித்தான். சாஸ்திரஞானம் உள்ளபடிகைவந்த விசாரசருமர் அதுகண்டு மிகுந்தபதைபதைப்போடும் அவன்சமீபத்திற் சென்று தீமைபயத்தலின்றி நன்மையே பயத்தலால் விவேகிகளால் பாவமென்று சிறிதும் இகழப்படாது பெரும்புண்ணியமெனநன்கு மதிக்கப்படுகின்ற மகாகோபங்கொண்டு பின்னும் அடியாதபடி அவனைத் தடுத்து நின்று, பசுக்களின் வரலாற்றையும், அவைதரும் பஞ்சகவ்வியங்கள் சிவனுக்கு அபிஷேகஞ்செய்தற்கு உபயோகித்தலையும், சைவசாதனமாகிய விபூதிக்கு மூலம் அவற்றின்சாணமாதலையும் சிந்தித்து, அந்தப்பசுக்களைத் தாமேமேய்க்கும்படி விரும்பி, அவ்விடையனைநோக்கி, இப்பசுநிரையை இனிநீ மேய்க்கவேண்டியதில்லை, நானேமேய்ப்பேன்என்றர் இடையன் அதைக்கேட்டுப்பயந்து கும்பிட்டுக்கொண்டு போய்விட்டான். விசாரசருமர் பசுக்களை அவ்வவற்றிற்குரிய பிராமணர்களின் சம்மதிபெற்று தினந்தோறும் மண்ணியாற்றங்கரையில் இருக்கின்ற காடுகளிலும் வயலோரங்களிலும் புல்லுநிறைந் திருக்கும் இடத்திற்கொண்டுபோய், வேண்டுமட்டும்மேயவிட்டும் தண்ணீரூட்டியும் வெய்யிலெறிக்கும்பொழுது நிழலிருக்குமிடங்களிலே செலுத்தியும் நன்றாகக் காப்பாற்றி சமித்துக்கள் ஒடித்துக்கொண்டு அஸ்தமயனத்துக்கு முன் அந்தந்தபசுக்களை அவரவர்வீட்டுக்கு ஓட்டிக்கொண்டுபோய் விட்டு தம்முடைய வீட்டுக்குப்போவார்.


இப்படிச் செய்யுங்காலத்திலே பசுநிரைகளெல்லாம் அழகோடுமிகப்பெருகி, போசனபானங்களிலே குறைவில்லாமையால் மகிழ்ச்சியடைந்து இராப்பகல் மடிசுரந்து பாலைமிகப்பொழிந்தன. பிராமணர்கள் நித்திய ஓமாகுதியின்பொருட்டு விட்டிருக்கின்ற தங்கள் பசுக்கள் விசாரசருமர் மேய்க்கத் தொடங்கியபின் முன்னிலும் அதிகமாகக் கறக்கக் காண்கையால் மிகுந்த சந்தோஷத்தை அடைந்தார்கள் பசுக்கள்எல்லாவகை யுபசரிப்பினாலும் அளவிறந்த களிப்பை அடைந்து வீட்டிலேகட்டப்பட்டிருக்கின்ற தங்கள் கன்றுகள் பிரிந்தாலும் சிறிதும் வருத்தமுறுதலைவைகளாகி, மிகுந்தஅன்போடு தங்களைமேய்கின்றவிசாரசருமர் சற்றாயினும் பிரிவாராகில் அப்பிரிவாற்றாமல் தாய்போல் உருகி அவர் சமீபத்திலேசென்று கனைத்து மடிசுரந்து ஒருவர்கறக்காமல் தாமே பால்பொழியும், அதுகண்டவிசாரசருமர் அப்பால் பரமசிவனுக்குத் திருமஞ்சமாந் தகுதியுடைமையை நினைந்தார், நினைக்கவே அவருக்குச் சிவார்ச்சனையிடத்தே அத்தியந்த அபிலாஷை தலைப்பட்டது உடனே அவர் மண்ணியாற்றின்கரையிலிருக்கின்ற ஒருமணற்றிட்டிலே ஆத்திமரத்தின் கீழே மணலினாலே ஒருசிவலிங்கந் நவித்து கோயிலும் கோபுரமும் மதிலும் வகுத்துஆத்திப்பூத முதலிய புஷ்பங்களும் பத்திரங்களும்பறித்துப் பூங்கூடையிலிட்டுக் கொண்டு வந்துவைத்துவிட்டு புதியகுடங்களைத்தேடி வாங்கிக் கொண்டுவந்து கறவைப்பசுக்கள் ஒவ்வொன்றினிடத்திலும் சென்று முலையைத் தீண்டினார், அவைகள் கனைத்துப் பாலைப் பொழிந்தன. பாலினாலே நிறைவுற்ற அக்குடங்களைக் கொண்டுபோய் ஆலயத்திலே வைத்து, பத்திரபுஷ்பங்களால் சுவாமியை அருச்சித்துபாலினால் அபிஷேகஞ்செய்தார், பரமசிவன் அவ்விலிங்கத்தினின்று அவ்விராசருமர் அன்போடு செய்யும் அருச்சனையை அங்கீகாரம்செய்தருளினார், விசாரசருமர் சிவபூசைக்கு அங்கமாகிய திருமஞ்சன முதலிய பொருள்களுள் கிடையாதவைகளை மானச மாகக் கிடைத்தனவாகக்கொண்டு நிறைவுசெய்து விதிப்படி அருச்சித்துவணங்கிவந்தார், பசுக்கள் அபிஷேகத்தின்பொருட்டு அவ்விசாரசருமர் கொண்டுவரும் குடங்கள் நிறையப் பாலைச்சொரிந்தும், பிராமணர்களுக்கு முன்போலக் குறைவுதீரப்பாலைக்கொடுத்துவந்தன. இப்படி நெடுநாளாகப் பார்ப்பவர்களுக்கு விளையாட்டுப்போலத்தோன்றுகின்ற சிவார்ச்சனையைச் செய்து வரும்பொழுது அதைக்கண்ட ஒருவன் அதின் உண்மையை அறியாதனாகி அதை அவ்வூர்ப் பிராமணர்களுக்குத் தெரிவித்தான். அவர்கள் அதைச் சபையாருக்குத் தெரிவிக்க, சபையார் எச்சதத்தனை அழைத்து, பிராமணர்கள் ஓமா குதியின் பொருட்டுப் பால்கறக்கும் பசுக்களை எல்லாம் உம்முடையபுத்திரனாகிய விசாரசருமன் அன்புடனே மேய்ப்பவன்போலக் கொண்டுபோய்ப் பாலைக்கறந்து விருதாவாக மணலிலேசொரிந்து விளையாடுகின்றான் என்றார்கள்

எச்சதத்தன் அதைக்கேட்டுபயந்து, சிறுபிள்ளையாகிய விசாரசருமன் செய்கின்ற இந்தச்செய்கையை இதற்குமுன் நான் சிறிதாயினும் அறிந்திலேன் அக்குற்றத்தை நீங்கள் பொறுத்துக்கொள்ளவேண்டும் என்று குறை யிரந்து வணங்கி இனி அவன் அப்படிச்செய்வானாயின் அக்குற்றம் என்மேலதாகும் என்றுசொல்லி அச்சபையாரிடத்திலே அனுமதி பெற்றுக்கொண்டு வீட்டுக்குப் போய்விட்டான்.

மற்றநாட்காலையில் அந்தச் சமாசாரத்தைச் சோதித்தறிய விரும்பி, விசாரசருமர் பசுமேய்க்கப்போனபின்பு, அவர் அறியாதபடி அவர் பின்னே சென்றான் விசாரசருமர் பசுக்களை ஓட்டி மண்ணியாற்றின் மணற்றிட்டியிலே கொண்டுபோனதைக்கண்டு, எச்சதத்தன் அருகில் இருந்த ஒரு குராமத்தில் ஏறி, அங்கே நிகழ்வதை அறியும்படி ஒளித்திருந்தான், விசாரசருமர் ஸ்நாநம்பண்ணி முன்போல மணலினாலே கோயிலும் சிவலிங்கமும்செய்து, பத்திரபுஷ்பங்கள் பறித்துக்கொண்டுவந்து வைத்து, பின்புபாற்குடங்களைக் கொண்டுவந்து தாபித்து அருச்சனைக்குவேண்டிய பிறவற்றையும் அமைத்து, மிகுந்த அன்பினோடு பூசைக்கு ஆரம்பித்து சிவலிங்கத்துக்குப் பத்திரபுஷ்பங்களைச் சாத்தி, பாற்குடங்களை எடுத்து அபிஷேகம்பண்ணினார். குராமரத்தில் ஏறியிருந்த எச்சதத்தன் அதைக்கண்டு மிகுந்த கோபங்கொண்டு சீக்கிரமாக இறங்கிப்போய்த் தன்கையி லிருக்கின்ற தண்டினால் அவ்விசாரசருமருடைய முதுகிலே அடித்துக் கொடுஞ்சொற்களைச்சொல்ல அவருடைய மனம் பூசையிலேயே முழுவதும் பதிந்துகிடந்தபடியால் அதுஅவருக்கும் புலப்படவில்லை, பின்னும் எச்சதத்தன் கோபங்கொண்டு பலமுறையடிக்க, விசாரசருமர் அவ்வடியாளாகிய வருத்தந்தோன்றப் பெறாதவராகி அபிஷேகந் திருத்தொண்டி னின்றுந் தவறாதிருந்தார்.

அவருடைய உள்ளன்பை அறியாத எச்சதத்தன் மிகக்கோபித்து திருமஞ்சனப் பாற்குடத்தைக் காலினாலே இடறிச்சிந்தினான் உடனே விசாரசருமர் அதைக்கண்டு, அதுசெய்தவன் பிதாவும் பிராமணனும் குருவுமாகிய எச்சதத்தனென்பதை அறிந்தும் அவன் செய்தது அதிபாதகமாகிய சிவாபராதமாதலால் அவன் காலைத்துணிக்கக்கருதித் தமக்குமுன்கிடந்த ஒருகோலை யெடுக்க அதுமழுவாயிற்று அதினாலே அவன் கால்களைவெட்டினார். சிவபூசைக்குவந்த அவ்விடரை நீங்கினவராகிய விசாரசருமர் முன்போல அருச்சனைசெய்ய பரமசிவன் உமாதேவியோடும் இடபாரூடராய்த் தோன்றியருளினார், விசாரசருமர் அதுகண்டு மனங்களித்து விழுந்து நமஸ்கரித்தார், பரமசிவன் அவரைத்தம்முடைய திருக்கரங்களினால் எடுத்து, நீ நம்பொருட்டு உன்னைப்பெற்றபிதாவை வெட்டினாய் இனி உனக்கு நாமேபிதா என்று அருளிச்செய்து

அவரை அணைத்து அவருடைய சரீரத்தைத்தடவி உச்சிமோந்தருளினார். சிவனுடைய திருக்கரத்தினாலே தீண்டப்பட்ட அவ்விசாரசருமருடைய திருமேனி சிவமயமாகித் திவ்வியபிரகாசத்தோடு விளங்கிற்று பரமசிவன் அவரைநோக்கி நாம் நம்முடைய தொண்டர்களுக்கெல்லாம் உன்னைத்தலைவனாக்கி நாம் ஏற்றுக் கொண்ட அமுதம் பரிவட்டமும் புஷ்பமும் எனக்கே கிடைக்கும்படி சண்டேசுர பதத்தைத் தந்தோம் என்று திருவாய் மலர்ந்து, தம்முடைய சடையிலே தரித்திருக்கின்ற கொன்றைமாலையை எடுத்து அவருக்குச் சூட்டியருளினார். அவ்விசாரசருமர் சமஸ்தரும் ஆரவாரிக்கவும் எவ்விடத்தும் புஷ்பமழைபொழியவும் சிவகணங்கள் பாடியாடிக் களிகூரவும் வேதங்கள் கோஷிக்கவும் நானாபேத வாத்தியங்கள் முழங்கவும் சற்சமயமாகிய சைவசமயம் நிலைபெறும்படி பரமசிவனைக் கும்பிட்டு அவராலே தரப்பட்ட சண்டேசுர பதத்தை அடைந்தார். எச்சதத்தர் சிவத்துரோகம் செய்தும் சண்டேசுர நாயனாராலே தண்டிக்கப் பட்டு அக்குற்றம் நீங்கிச் சுற்றத்துடன் வசிலோகத்தை அடைந்தார்.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நான்காவது,

திருநின்ற சருக்கம்.

இருபத்திரண்டாவது,

திருநாவுக்கரசுசுவாமிகள் புராணம்.

போற்றுதிருவாமூரில்வேளாண்டொன்மைப்
பொருவில்கொறுக்கையர்திபர்புகழனார்பான்
மாற்றருமன்பினிற்றிலதவதியாமாது
வந்துதித்தபின்புமருணீக்கியாருந்
தோற்றியமண்சமயமுறுதுயரநீங்கத்
துணைவரருடரவந்தசூலைநோயாற்
பாற்றருநீளிடரெய்திப்பாடலிபுத்திரத்திற்
பாழியொழித்தரனதிகைப்பதியில்வந்தார்.

வந்துதமக்கையரருளானீறுசாத்தி
வண்டமிழானாய்தீர்ந்துவாக்கின்மன்னாய்
வெந்தபொடிவிடம்வேழம்வேலைநீந்தி
வியன்சூலங்கொடியிடபம்விளங்கச்சாத்தி
யந்தமிலப்பூதிமகனரவுமாற்றி
யருட்காசுபெற்றுமறையடைப்புநீக்கிப்
புந்திமகிழ்ந்தையாற்றிற்கயிலைகண்டு
பூம்புகலூரான்பாதம்பொருந்தினாரே.

திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே வேளாளர் குலத்திலே கொறுக்கையர் குடியிலே புகழனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியார்பெயர் மாதினியார் அம்மாதினியார் வயிற்றிலே திலகவதி

யார் என்கின்ற புத்திரியார் பிறந்தார். அவர் பிறந்து சிலவருஷம் சென்றபின், சைவசமயம் அபிவிர்த்தியாகும்படி மருணீக்கியார் என்கின்ற புத்திரர் அவதரித்தார். அவருக்குத் தந்தையார் உரியபருவத்திலே வித்தியாரம்பம் செய்வித்தார் மருணீக்கியார் தந்தையாருக்குப் பெருமகிழ்ச்சியுண்டாகும்படி பலகலைகளையும் கிரமமாகக்கற்று வல்லராயினர் திலகவதியாருக்குப் பன்னிரண்டு வயசு ஆனபொழுது அப்புகழனர் மரபிற்கு ஒத்த மரபினை உடையவரும் சிவபத்தியிலே சிறந்தவரும், இராஜாவிடத்திலே சேனபதி யுத்தியோகம் செய்பவரும் ஆகிய கலிப்பகையார் என்பவர் அப்புகழனரிடத்திலே சில முதியோர்களை அனுப்பி திலகவதியாருக்கும் தமக்கும் மணம்பேசுவித்தார் புகழனர் அதற்கு இசைந்தமைகண்டு அம்முதியோர்கள் மீண்டுசென்று கலிப்பகையாருக்குத்தெரிவித்தார்கள். கலிப்பகையார் தாம் விவாகம் செய்தற்குமுன் தம்முடைய அரசனது ஆஞ்ஞையினாலே சேனைகளோடும் சிலநாளிலே அவன் பகைஞராகிய வடதேசத்தரசரிருக்குமிடத்தைச் சேர்ந்து அவர்களோடு நெடுநாள் யுத்தம் செய்தார். அங்கே அப்படி நிகழுங் காலத்திலே இங்கே புகழனர் தேகவியோகம் அடைந்தார். அப்பொழுது அவர் மனைவியாராகிய மாதினியார் சககமனம் செய்தார். அவர்கள் பிள்ளைகளாகிய திலகவதியாரும் மருணீக்கியாரும், சுற்றத்தார்களோடு மிக மனக்கவலையுற்று சுற்றத்தாருள் அறிவால் அமைந்த பெரியோர்கள் ஒருவாறு தேற்ற, தேறி தந்தை தாயர்களுக்குச் செய்யவேண்டும் அந்தியகர்மங்களை முடித்தார்கள். இங்கே இப்படி நிகழ, அங்கே கலிப்பகையார் யுத்தகளத்திலே தம்முடைய பூதவுடம்பை விட்டுப் புகழுடம்பைப் பெற்றுக்கொண்டார் அந்தச் சமாசாரம் திலகவதியாருடைய சுரோத்திரேந்திரியத்துக்குப் புலப்பட அவர் என்னுடைய பிதா மாதாக்கள் என்னை அவருக்கு மணஞ்செய்துகொடுக்க உடன்பட்டிருந்தமையால் இவ்வுயிர் அவருக்கே உரியது ஆதலால், இவ்வுயிரை அவருயிரோடு இசைவிப்பேன் என்று சாவத்துணிந்தார் அதுகண்ட மருணீக்கியார் வந்து அத்திலகவதியாருடைய இரண்டு பாதங்களிலும் விழுந்து அழுது, அடியேன் எங்கள் பிதாமாதாக்கள் இறந்தபின்னும் உம்மையே அவர்களாகப் பாவித்துப் பூசிக்கலாம் என்றன்றோ உயிர் வைத்துக்கொண்டிருக்கின்றேன் அடியேனைத் தனியே கைவிட்டிறப்பீராகில் அடியேன் உமக்கு முன்னமே இறந்துவிடுவேன் என்றார். திலகவதியார் அதைக்கேட்டு தம்பியார் உயிரோடு இருக்கவேண்டும் என்னும் ஆசையால் தமது கருத்தைத் தடுத்து உயிர்தாங்கி வேறொருவரையும் விவாகஞ்செய்து கொள்ளாமல் சீவகாருண்ணியம் உள்ளவராகி வீட்டிலே தவஞ்செய்துகொண்டு இருந்தார்.

மருணீக்கியார் யாக்கைநிலையாமையையும், செல்வநிலையாமையையும்நினைந்து தருமஞ்செய்யவிரும்பி, அன்புடனே திரவியங்களை செல்வழி

த்து, அறச்சாலைகளையும், தண்ணீர்ப்பந்தர்களையும் அமைத்தார், சோலைகளைவைப்பித்தார், குளங்களைத் தோண்டுவித்தார், விருந்தினரை உபசரித்தார், புலவர்களுக்கு கனகமாரிபொழிந்தார், பிரபஞ்சவாழ்வினது அநித்தியத்துவத்தை அறிந்து இல்வாழ்க்கையிலேபுகாமல் எல்லாவற்றையும் துறந்தார் சமஸ்த சமயங்களுள்ளும் சற்சமயம் இது என்று அறியுமறிவு அவருக்குத் தலைப்படவில்லை. அவர் பாடலிபுத்திரம் என்னும் நகரத்திற்சென்று சமணர்களுடைய பள்ளியையடைந்து அங்குள்ள சமணர்களுடைய போதனைசக்தியிலே அவர்கள் அனுசரிக்கின்ற ஆருகதசமயமே முத்தியை அடைதற்குத்தகுந்தநெறியென்று துணிந்து, அந்தச்சமயத்திலே பிரவேசித்தார். பிரவேசித்த அம்மருணீக்கியார் அந்தச் சமணசமயநூல்கள் எல்லாவற்றையும் கற்று அவைகளிலே மகா பாண்டித்தியம் உடையவராயினர் அது கண்ட சமணர்கள் அவருக்குத் தருமசேனர் என்றுபெயரிட்டு அவரைத் தங்கள் மதாசாரியராகக்கொண்டு வழிப்பட்டார்கள். அவர் தமதுவித்தியாசாமர்த்தியத்தினாலேபௌத்தர்களை வாதிலேவென்று புகழ்பெற்று ஆருகத சமயாசாரியர்களுக்குள்ளே சிரேஷ்டராய் இருந்தார், அதுநிற்க

திருவாமூரிலே இருந்ததிலகவதியார் சிவனிடத்திலே பத்திமிகுந்த சிவபுண்ணியங்கள் செய்யவிரும்பி கெடிலநதிக்குவடகரையில் இருக்கின்ற திருவதிகைவீரட்டானம் என்னும் திருப்பதியிற்சென்று பரமசிவனை வணங்கி சிவசின்னங்களைத் தரித்துத் தினந்தோறும் சூரியோதயத்துக்கு முன் கோயிலின் உள்ளும்புறமும் திருவலகிடுதல் கோமயத்தினாலே மெழுகுதல் நந்தவனங்களிற்சென்று புஷ்பங்களைப் பறித்துக்கொண்டு வந்து மாலைதொடுத்துச் சுவாமிக்குச் சாத்தக்கொடுத்தல் முதலாகிய சிவபுண்ணியங்களைச்செய்துவந்தார். செய்துவரும்நாளிலே தம்முடைய தம்பியாராகிய மருணீக்கியார் கபடமார்க்கமாகிய ஆருகதமத்திலே பிரவேசித்தமையை நினைந்து துக்கசாகரத்தில் அமிழ்ந்தி வீரட்டானேசுரரைவணங்கி சர்வாபீஷ்ட வரதரே, தேவரீர் அடியேனை ஆட்கொள்பவர் என்பது சத்தியமாயில் தவமென்றுசொல்லிப் பாயை இடுக்கித் தலைமயிரைப் பறித்தெறிந்துவிட்டு நின்றுகொண்டே உண்கின்ற சமணர்களுடைய கபடமார்க்கமாகிய படுகுழியிலே விழுந்து என்னுடைய தம்பியை அதினின்றும் தூக்கிக் காப்பாற்றியருள வேண்டும் என்று பலமுறை விண்ணப்பஞ்செய்தார் பரமசிவன் திலகவதியாருக்குச் சொப்பனத்திலே தோன்றினபோதனையே நீ உன்மனக்கவலையை ஒழி, உன்னுடையதம்பி துறவியாகிய நம்மை அடையும்பொருட்டு பூர்வ சென்மத்திலே தவஞ்செய்திருக்கின்றான். அந்தத்தவத்தின் அற்பக்குற்றத்தினாலே அந்நியமதத்திலே பிரவேசித்தான் இனி அதனைச் சூலைநோயில் வருத்தி ஆட்கொள்வோம் என்றுசொல்லி மறைந்தருளினர்.

பரமசிவன் சொல்லியருளியபடியே அவருடைய திருவருளினாலே, தருமசேனருடைய வயிற்றிலே கொடிய சூலைநோய் உண்டாகிக் குடலை

க் குடைதலுற்றது. அதனால் அவர்வருந்தி நடுக்கமுற்று சமண்பாழிய றையில் விழுந்தார். தமக்குக் கைவந்தசமணசமைய மந்திரோச்சாரண த்தால்தடுக்கவும் அச்சூலைநோய் தடைப்படாமல் மேற்கொண்டது மே ற்கொள்ளவே சர்ப்பவிஷந்தலைக்கொண்டாற்போல மயங்கிமூர்ச்சைய டைந்தார் அதுகண்ட சமணர்பலர்வந்துகூடி இந்தச்சூலைநோய்போலக் கொடியநோய் முன்னொருபோதும் கண்டறியோம் இதற்கு யாதுசெய் வோம் என்று துக்கமுற்று பின் கமண்டலத்திற் இருக்கின்ற ஜலத்தை அபிமந்திரித்துக் குடிப்பித்தார்கள். அதனாலே தணியாமையால், மயிர் பீலிகொண்டு காலளவுந் தடவினார்கள். அதினாலுந் தணியாமல் சூலை நோய் முன்னிலும் அதிகப்பட தருமசேனர் அதைச் சகிக்கலாற்றாதவ ராய்த்துன்பப்பட்டார். சமணர்கள் அதுகண்டு ஐயோ இதற்கு நாம் யாதுசெய்வோம் என்று மனங்கலங்கி, இந்த நோயைநீக்குதற்கு நாம் வல்லமல்லேம் என்று சொல்லிக்கொண்டு அவரைக் கைவிட்டுப் போயி னார்கள் பின் தருமசேனர் தம்முடைய சகோதரியாராகிய திலகவதி யாரை நினைந்து, அவரே தமக்கு உதவிசெய்ய வல்லர் எனத்துணிந்து தம்முடைய சமாசாரத்தை அவருக்கு உணர்த்தும்பொருட்டு தம்மு டைய பாகுகனை அவரிடத்திற்கு அனுப்பினர். அப்பாகுகன் திருவதி கையிற்சென்று அத்திலகவதியாரை ஒரு நந்தனவனத்துக்குச் சமீபத்தி லே கண்டுவணங்கி, நான் உம்முடைய தம்பியார் ஏவலினால் இவ்விடத் துக்கு வந்தேன் என்றுசொல்ல, திலகவதியார் தம்பியாருக்கு யாதாயி னும் தீங்கு உண்டாஎன்றார். அதற்கு அவன் ஆம் அவர்கொடிய சூலை நோயினால் மிகவருந்துகின்றார் சமணர்கள் எல்லாரும் அந்நோயைத் தீர்த்தற்கு வன்மையின்மையால், அவரைக் கைவிட்டார்கள். அவர் அ துகண்டு என்னைநோக்கி அந்தச் சமாசாரத்தைச் சகோதரியாராகிய உ மக்குத் தெரிவித்து தாம் உய்யும்நெறியைக் கேட்டுக்கொண்டு இரவி லே தம்மிடத்துக்கு வரும்பொருட்டு என்னை ஏவினர் என்றான் திலக வதியார் பதிதராகிய சமணர்களுடைய பள்ளிக்கு நான் வாரேன் இ தைத் தம்பிக்குச் சொல்லுஎன்றார். அதுகேட்ட பாகுகன் மீண்டு தரு மசேனரிடத்திற்சென்று, அதைத்தெரிவிக்க தருமசேனர் இனி இதற் கு யாது செய்வேன் என்று சோகித்தார்.

அப்பொழுது சிவனுடைய திருவருள் கூடுதலால் திருநாவுக்க ரசு சுவாமிகள் இந்தத் துர்ச்சமயமாகிய ஆருகதமார்க்கப் பிரவே சத்தால் என்னைவருத்தும் இந்நோய் நீங்கும்படி சற்சமயமாகிய சைவசமயத்தை அனுசரிக்கின்ற திலகவதியாருடைய திருவடிகளை அடைவேன் என்றுகருதினர் அக்கருத்துப் பிடித்தெழுப்ப எழு ந்து சமணர்களுடைய ஸ்தானத்தைக் கடந்து உடுத்த பாவை யும் உறியில் உற்ற கமண்டலத்தையும் மயிற்பீலியையும் நீக்கி வஸ்திரந்தரித்து, தமக்குப் பற்றுக்கோடாகக் கைதந்து வருகின்ற வர்களைப் பற்றிக்கொண்டு, ஒருவரும் காணாதபடி இரவிலே ஆருகத

மார்க்கப் பிரவேசித்தால் தமக்குகிடைத்தவைகளில் சூலைநோய் ஒன்று மாத்திரம்உடன்றொடர திருவதிகையிற்சென்றுதிலவதிகையாருடையதிருமடத்தை அடைந்து அவருடைய திருவடிகளை நமஸ்கரித்து எங்கள் குலத்தார் செய்த தவப்பயனெல்லாம் திரண்டு ஒருவடிவெடுத்தாற்போலும் அம்மே அடியேன் கொடிய சூலைநோயைச் சகிக்க லாற்றுமையால் உம்மையே கதியென்று அடைந்தேன். இனி நான் உய்ந்து கடைத்தேறும்வழியை அருளிச்செய்யும் என்றுசொல்லி, பாதத்திலேவிழுந்து அயர்ந்தார். திலகவதியார் தம்பியாரைநோக்கி தமக்குச் சொப்பனத்திலே பரமசிவன் அருளிச் செய்தபடி முடித்ததை நினைந்து மனங்கசிந்துருகி அவரை அஞ்சலி செய்துகொண்டு அறியாமையினலே பரசமயப் படுகுழியில் விழுந்து கொடுந்துயரத்தை அனுபவிக்கின்ற தம்பியாரேஎழுந்திரும் என்றார். தம்பியார் சூலைநோயுடனே நடுக்கமுற்று எழுந்து அஞ்சலிசெய்தார். திலகவதியார் இது பரமசிவனுடைய திருவருளே தம்முடைய திருவடிகளை யடைந்த மெய்யன்பர்களுக்கு இன்னருள் புரியும் அக்கடவுளையேவணங்கி அவருக்கே திருத்தொண்டு செய்யும் என உபதேசித்தார் உடனே மருணீக்கியார் அவ்வுபதேசத்தை ஏற்றுக்கொண்டு வணங்கிநிற்க, திலகவதியார் திருவருளை நினைந்து அவருக்குவிபூதியைப் பஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொடுத்தார் மருணீக்கியார் மிகுந்தஆசையோடு வணங்கி, அவ்விபூதியைவாங்கி சரீரமுழுதிலும் அணிந்து கொண்டார்.

திலகவதியார் திருப்பள்ளியெழுச்சியிலே திருவலகும், திருமெழுக்குத்தோண்டியும் எடுத்துக்கொண்டு, கோயிலுக்குத் தம்பியாரை அழைத்துக்கொண்டுபோனர். மருணீக்கியார் திருவதிகை வீரட்டானேசுரரைப் பிரதட்சிணஞ்செய்து சந்நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்து எழுந்துநின்று அவருடைய திருவருளினலே தமிழ்ச் செய்யுள் பாடும் சக்தி உண்டாகப்பெற்று தம்முடைய சூலைநோய் நீங்கும்பொருட்டும் பிற்காலத்திலே அன்போடு ஓதுகின்ற யாவருடைய துன்பமும் நீங்கும் பொருட்டும், பரமசிவன் மேல் "கூற்றுயினவாறு விலக்கிலீர்" என்னும் வாக்கியத்தை முதலினுடைய திருபதிகத்தைப் பாடியருளினர்

திருவதிகை வீரட்டானம் பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கூற்றுயினவாறுவிலக்கிலீர்கொடுமைபலசெய்தனநானறியேன்
ஏற்றுயடிக்கேயிரவும்பகலும்பிரியாதுவணங்குவனெப்பொழுதுந்
தோற்றுதென்வயிற்றினகம்படியேகுடரோடுதொடக்கிமுடக்கியிட
வாற்றேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே.

போர்த்தாயங்கோரானையினீருரிதோல்புறங்காடரங்கநடமாடவல்லா
யார்த்தனரைக்கன்றனைமால்வரைக்கிழடர்த்திட்டருள்செய்தவதுகருதா
வேர்த்தும்புரண்டும்விழுந்துமெழுந்தாலெனவேதனையான்விலக்கிவிடா
யார்த்தார்புனல்சூழதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே.

திருச்சிற்றம்பலம்.

உடனே சூலைநோய் நீங்கிற்று. அப்பொழுது மருணீக்கியார் தமக்கு உயிரையுந் தந்து முத்தி நெறியையும் தந்த பரமசிவனுடைய திருவருளாகிய கடலில் அமிழ்ந்தி, திருமேனி முழுதிலும் உரோமாஞ்சிதங் கொள்ள, இரண்டு கண்ணில்நின்றும் ஆனந்த பாஸ்பஞ்சொரிய நிலத்திலே விழுந்து புரண்டு சமணசமயப் படுகுழியிலே விழுந்து எழுமாறு அறியாது மயங்கிய பாவியேன் பரமசிவனுடைய திருவடியை அடைதலாகிய இந்தப் பேரின்பவாழ்வைப் பெறும்படி செய்த சூலைநோய்க்கு என்னபிரதியுபகாரம் செய்வேன் என்றார் இப்படி நிகழும்பொழுது வீரட்டானேசுரருடைய திருவருளினாலும் அற்புத சின்மய மதுரமாகிய தேவாரப்பதிகத்தைப் பாடினபடியால் உனக்கு நாவுக்கரசு என்னும் பெயரே சத்தலோகங்களினும் வழங்குக என்று சமஸ்தருக்கும் ஒருவியப்புத் தோன்றும்படி ஒரு அசரீரிவாக்கு ஆகாயத்திலே தோன்றிற்று அதைக்கேட்ட திருநாவுக்கரசு சுவாமிகள் பரமசிவன் இத்தனை நெடுங்காலமாகத் தம்மை நிந்தித்து சிறியேனுக்கு இந்தப் பெருவாழ்வைத்தந்தருளினாரே என்று களிகூர்ந்து, அத்தன்மையனாகிய ராவணனுக்கு அருளிய கருணையின் மெய்த்தன்மையை அறிந்து துதிப்பதையே மேற்கொண்டு வணங்கினார். திருநாவுக்கரசுசுவாமிகள் சமணசமயம் பொய் மார்க்கம் என்பது யாவருக்கும் புலப்படும்படி யைவசமயத்திலே பிரவேசித்து அருள்பெற்றபடியால் உலகம் உய்ந்தது என்றுசொல்லி திருவதிகையிலுள்ள சமஸ்தசனங்களும் களிப்புற்றார்கள் திருநாவுக்கரசு சுவாமிகள் மனம் வாக்குக் காயம் என்னும் திரிகரணங்களாலும் திருத்தொண்டு செய்யவேண்டும் என்னும் ஆசை மிகுதலால், சிவசின்னங்களைத் தரித்துக்கொண்டு தியான மறுவுணர்வும் தடையின்றியெழுகின்ற ஸ்துதிரூபமாகிய வாசகமும் உழைவாரப் பணிவிடையும் உடையவராயினார். திலகவதியார் தம்முடைய வேண்டுகோளின்படி பரமசிவன் தம்முடைய தம்பியாரை ஆட்கொண்ட பெருங்கருணைத்திறத்தை நினைந்து மகிழ்ந்து வணங்கினார்.

இந்தச் சமாசாரத்தைப் பாடலிபுரத்தில் இருக்கின்ற சமணர்கள் கேள்வி யுற்று பொறாமைகொண்டு மாறுபட்ட பலசமயங்களையும் வாதில்வெறு எங்கள் சமயத்தை ஸ்தாபித்த தருமசேனர் தமக்கு வந்த சூலைநோய் இங்கே ஒருவராலும் நீங்காமையால் உய்யும்நெறியைநாடித் திருவதிகையிற்சென்று முன்போலச் சைவத்திலே பிரவேசித்து, அந்நோய்

துவிட்டார் இனி எங்கள் சமயம்அழிந்துபோயிற்று என்று துக்கித்து தலையும் பீலியுந்தாழ ஓரிடத்திலே ஒருங்கு கூடினார்கள் கூடியசமணர்கள் தருமசேனருக்கு வந்த சூலைநோய் எங்கள் ஒருவராலும் நீங்காமல் சைவமதப் பிரவேசத்தால் நீங்கிவிட்ட உண்மையை எங்கள் அரசன் அறிந்தானாகில், எங்கள்மேற் கோபங்கொண்டு தானும் சைவனாகி எங்கள் விருத்தியையும் தவிர்ப்பான், இனி இதற்கு யாது செய்வோம் என்றுசொல்லித் தங்களுக்குள்ளே ஆலோசித்து, ஒரு சம்பிரதாரணை செய்துகொண்டு, பல்லவராஜனுடைய நகரத்திற் சென்று அரண்மனையினுள்ளே புகுந்து, அவ்வரசனைநோக்கி எங்களெல்லாருக்குந் தலைவராயிருந்த தருமசேனர், தம்முடைய சகோதரியாராகிய திலகவதியார் சைவசமயத்தில் நிற்கிறபடியால், தாமும் அவர்போலாக விரும்பி, தமக்குச் சூலைநோய் வந்ததாகக்காட்டி, அதுநம்மாலே தீர்ந்திலது என்று அவரிடத்திற்சென்று முன்போலச் சைவசமயத்திலே பிரவேசித்து, நம்முடைய கடவுளை நிந்தைசெய்தனர் என்றுசொன்னார்கள் உடனே பல்லவராஜன் கோபங்கொண்டு இதற்கு யாது செய்யலாம் என்றான். அது கேட்ட சமணர்கள், உத்தமமாகிய தங்கள் சமய மகிமையைக்கெடுத்து உம்முடைய ஆஞ்ஞையையும் கடந்த அந்த தருமசேனரை நீர் அழைப்பித்துத் தண்டிக்கவேண்டும் என்றார்கள். அப்பொழுது அரசன் மந்திரிமாரைநோக்கி, இம்முனிவர்களாற் சுட்டப்பட்ட தீயோனைப் பிடித்துக் கொண்டு வாருங்கள் என்றுசொல்லி ஆஞ்ஞாபித்தான்.

உடனே மந்திரிமார் சேனைகளோடும் புறப்பட்டு திருவதிகையை அடைந்து, திருநாவுக்கரசு சுவாமிகளிடத்திற்சென்று, எங்கள் அரசன் இன்றைக்கு உம்மை அழைத்துக்கொண்டு வரும்படி எங்களை அனுப்பினான் வாரும் என்றார்கள் அதுகேட்டதிருநாவுக்கரசுசுவாமிகள் பரமசிவன்மேலே "நாமார்க்குங்குடியல்லோம்" என்னும் வாக்கியத்தை முதலினுடைய திருத்தாண்டகத்தைப் பாடியருளினர்.

மறுமாற்றத் திருத்தாண்டகத் தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

நாமார்க்குங்குடியல்லோநமனையஞ்சோநரகத்திலிடர்ப்படோநடலையில்லோம்
ஏமாப்போம்பிணியறியோ யாம்பணிவோமல்லோமின்பமேயெந்நாளுந்துன்பமில்லைத்
தாமார்க்குங்குடியல்லாத்தன்மையானசங்கரனற்சங்கவெண்குழையோர்காதிற்
கோமாற்கேநாமென்றுமீளாவாளாய்க்கொய்ம்மலர்ச்சேவடியிணையேகுறுகினோமே.

நாவாரநம்பனையேபாடப்பெற்றோநாணற்றார்நள்ளாமேவிள்ளப்பெற்றோம்
ஆவாவென்றெமையாள்வானமரர்நாதனயனொடுமாற்கறிவரியவனலாய்நீண்ட
தேவாதிதேவன்சிவனென்சிந்தைசேர்ந்திருந்தானென்றிசைகோன்றானேவந்து
கோவாடிக்குற்றேவல்செய்கென்றாலுங்குணமாகக்கொள்ளோமென்றுணர்த்துவோமே

திருச்சிற்றம்பலம்,

நாம் நீங்கள் அழைத்தபடியே வரக்கடவோமல்லோம் என்றார். அதுகேட்ட மந்திரிமார்கள் அவரைவணங்கிப் பிரார்த்தித்து அழைக்க, அவர் அடியேனுக்குவரும் அபாயங்களுக்கெல்லாம் பரமசிவன் இருக்கிறார் என்றுபோதற்கு உடன்பட்டார் அவர்கள் அழைத்துக்கொண்டு போய் அரசன் சமுகத்திற்சென்று அறிவித்தார்கள். அரசன் அதைக் கேட்டு பக்கத்திலிருந்த சமணர்களை நோக்கி, இனி அவனுக்கு யாது செய்வோம் என்றுகேட்க சமணர்கள் நீற்றறையில் விடவேண்டும் என்றார்கள் அரசன் சமீபத்தில் நின்ற பணிவிடைக்காரர்களை நோக்கி, அவனை இவர்கள் சொல்லியபடியே செய்யுங்கள் என்று ஆஞ்ஞாபிக்க, அவர்கள் அந்நாயனாரைச் சூட்டினையுடைய நீற்றறையினுள்ளே விட்டுக் கதவைப்பூட்டினார்கள், திருநாவுக்கரசு சுவாமிகள் பரமசிவனுடைய திருவடிநிழலைத் தலைக்கொண்டு சிவனடியார்களுக்கு இவ்வுலகத்திலே துன்பம் வருவதுண்டோ என்று அக்கடவுளைத் தியானித்துத் தொழுது கொண்டு அந்த நீற்றறையினுள்ளே இருந்தார்.

கலிக்குறுந்தொகைத்தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

மாசில்வீணையுமாலைமதியமும், வீசுதென்றலும்வீங்கிளவேனிலு
மூசுவண்டறைபொய்கையும்போன்றதே, யீசனெந்தையிணையடிநீழலே.

விறகிற்றீயினன்பாலிற்படுநெய்போன், மறையநின்றுளன் மாமணிச்சோதியான்
உறவுகோனட்டுணர்வுகயிற்றினன்,முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே

திருச்சிற்றம்பலம்.

அந்நாயனார் பரமசிவனுடைய திருவடிநீழலாகப் பாவித்த அந்நீற்றறைவீணைகானமும் சந்திரனும் தென்றலும் இளவேனிலும் பொய்கையும்போலக் குளிர்ந்தது. ஏழுநாட் சென்றபின் பல்லவராஜன் சமணர்களை அழைத்து நீற்றறையைத் திறந்துபாருங்கள் என்றுசொல்ல அவர்கள் நீற்றறையைத்திறந்து நாயனார் யாதொரு ஊனமும் இன்றிக் களிப்புற்றிருத்தலைக் கண்டு ஆச்சரியமடைந்து அரசனிடத்திற் சென்று இவன் முன்னே நம்முடைய சமயத்தில் இருந்து செய்த மந்திர சாதகத்தினாலே வேவாமற் பிழைத்துக் கொண்டான். இனி இவனுக்கு நஞ்சு ஊட்டுவதே தகுப் என்றார்கள். அரசன் அப்படியே செய்யுங்கள் என்று சொல்ல அவர்கள் நாயனாருக்கு நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்ணக் கொடுத்தார்கள். நாயனார் அவர்களுடைய வஞ்சனையை அறிந்து நஞ்சை அமுதாகக் கொண்ட கடவுளுடைய அடியார்களுக்கு நஞ்சும் அமுதாம் என்று நஞ்சு கலந்த அந்தப் பாற்சோற்றை உண்டு இருந்தார் சமணர்கள் அதைக் கண்டு இவனுக்கும் நஞ்சும்

அமுதமாயிற்று இவ்விடத்திலே இவன்பிழைப்பானாயில் நமக்கெல்லாம் நாசமுண்டாகும் என்றுபயந்து அரசனிடத்திற் சென்றுநாம் நஞ்சைச் சோற்றிலேகலந்து உண்பித்தும் நம்முடைய சமயநூல்களிலே கற்றுக் கொண்ட மந்திரவலியினாலே பிழைத்துவிட்டான். அவன் இறவாதிருப் பானாயில் எங்கள் உயிரும் உம்முடைய அரசாட்சியும் நீங்குவதுதிடம் என்றார்கள். அரசன் அதைக்கேட்டு இனி அவனைக் கொல்லுதற்குஉபா யம் யாதுஎன்று கேட்க சமணர்கள் உம்முடைய யானையை அவனுக்கு எதிரே விடுவதே உபாயம் என்றார்கள். அரசனும் அப்படிச் செய்யும் பொருட்டு ஆஞ்ஞாபிக்க துஷ்டர்களாகிய சைனர்கள் நாயனாருக்குஎதி ரே யானையைக் கொண்டுவந்து விட்டார்கள், நாயனார்சிறிதும்பயமின்றி பரமசிவனுடைய திருவடிகளைச்சிந்தித்து அவ்வானையை நோக்கிசுண்ண வெண் சந்தனச்சாந்து என்னும் வாக்கியத்தை முதலிலுடைய திருப் பதிகத்தை எடுத்து ஒவ்வொருசெய்யுளின் இறுதியிலும் "கெடிலப்புன லுமுடையா ரொருவர்தமர்நா, மஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவரு வதுமில்லை" என்பதை அமைத்துப்பாடினார்.

திருக்கெடில வீரட்டானத்தேவாரம்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சுண்ணவெண்சந்தனச்சாந்துஞ்சுடர்த்திங்கட்சூளாமணியும்
வண்ணவுரிவையுடையும்வளரும்பவளநிறமு
மண்ணலரண்முரணேறுமகலம்வளாயவரவுந்
திண்ணென்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை.

நரம்பெருகைகள்பிடித்துநங்கைநடுங்கமலையை
யுரங்களெல்லாங்கொண்டெடுத்தானென்பதுமொன்றுமலற
வரங்கள்கொடுத்தருள்செய்வான்வனர்பொழில்வீரட்டஞ்சூழ்ந்து
நிரம்புகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை

திருச்சிற்றம்பலம்.

யானையானது அந்நாயனாரை வலஞ்செய்து எதிராக நிலத்திலேதா ழ்ந்து இறைஞ்சிஎழுந்துஅப்புறம்போக அதன்மேலிருக்கின்றபாகர்கள் அதனைஅங்குசத்தினாலேத்திகுத்திதிருப்பி அவரைக் கொல்லவேண்டும் என்கின்ற குறிப்பைக் காட்டினார்கள். அது அப்படிச்செய்யாமல்துதிக்

கையினால் அவர்களை எடுத்து வீசிக்கொன்றுவிட்டு வெவ்வேறிடங்களி லுள்ள சமணர்களைத் தேடி ஓடி அவர்களைத் தள்ளிமிதித்துக் கிழித்தெ றிந்துகொன்று அந்நகரத்தில் உள்ளவர்கள் எல்லாரும் கலங்கும்படி அரசனுக் ஆகுலத்தைவிளைவித்தது. அவ்வானைக்குத்தப்பிய சமணர்கள் எல்லாரும் மானமழிந்து மயங்கி மனவருந்தி அரசனையடைந்து தரும சேனன் எங்கள் சமயநூல்களிலே கற்றுக்கொண்ட மந்திரத்திரத்தின் பலத்தினாலே நாங்கள் விட்டயானையைக்கொண்டே எங்கள் வலிமை யைச் சிதைத்தான் என்றுசொல்லிப் புலம்பினார்கள், அரசன் கோபங் கொண்டு இனி அவனுக்கு யாதுசெய்யவேண்டும் என்றுகேட்க சமணர் கள் அவனைக்கல்லோடு சேர்த்துக்கயிற்றினாலேகட்டிக் கடலிலே தள்ள வேண்டும் என்றார்கள் அரசன் கொலைத்தொழில் செய்வோரை நோக்கி தருமசேனனைக் காவலோடு கொண்டுபோய் ஒரு கல்லோடு சேர்த்துக் கயிற்றினாலேகட்டி ஒருபடகில் ஏற்றி சமுத்திரத்திலே விழும்படி தள் ளிவிடுங்கள்என்று ஆஞ்ஞாபித்தான் கொலைத்தொயில்செய்வோர்அதை க்கேட்டு சமணர்களும் உடன்செல்ல அச்சம் சிறிதுமில்லாத திருநாவுக் கரசு சுவாமிகளைக் கொண்டுபோய் அரசன் சொல்லியபடியே கடலிலே தள்ளிவிட்டுத் திரும்பினார்கள்.

சமுத்திரத்திலே தள்ளிவிடப்பட்ட திருநாவுக்கரசுசுவாமிகள் அடி யேனுக்கு யாது நிகழினும் நிகழுக அடியேன் சுவாமியை ஸ்தோத்திரம் பண்ணுவேன் என்று நினைந்து, "சொற்றுணைவேதியன்" என்பதை முத லினுடைய நமச்சிவாயப் பதிகத்தைப் பாடியருளினார்.

நமச்சிவாயத்திருப்பதிகம்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சொற்றுணைவேதியன்சோதிவானவன்
பொற்றுணைதிருந்தடிபொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர்கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவதுநமச்சிவாயவே

மாப்பிணைதழுவியமாதொர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடிபொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவியநமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக்கிடுக்கணில்லையே.

திருச்சிற்றம்பலம்.

பின் சமுத்திரத்திலே கல்லானது நாயனார் மேற்பக்கத்தி லிருக்கத் தெப்பமாய் மிதந்தது. கட்டிய கயிறோ அறுந்துபோயிற்று, வருண பகவான் கல்லேசிவிகையாக அந்நாயனாரைத் தாங்கிக்கொண்டுதிருப்பா திரிப்புலியூர் என்னும் சிவஸ்தலத்திலே சேர்த்தான் நாயனார் அந்தத் திருப்பதியினின்றும் அரகரவென்னுமோசையுடன் தம்மை எதிர்கொண்ட சிவனடியார்களோடு ஆலயத்திற்சென்று சுவாமியையவணங்கித் திருப்பதிகங்கள்பாடிக்கொண்டு அங்கே சிலநாள் இருந்தார்,

திருப்பாதிருப்புலியூர் - திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்.

ஈன்றாளுமாயெனக்கெந்தையுமாயுடன்றோன்றினராய்
மூன்றாயுலகம்படைத்துகந்தான்மனத்துள்ளிருக்க
வேன்றாலிமையவர்க்கன்பன்றிருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத்துணையாயிருந்தனன்றன்னடியோங்களுக்கே.

திருந்தாவமணர்தந்நெறிபட்டுத்திகைத்துமுத்தி
தருந்தாளிணைக்கேசரணம்புகுந்தேன்வரையெடுத்த
பொருந்தாவரக்கனுடல்நெரித்தாய்பாதிரிப்புலியூ
ரிருந்தாயடியேனினிப்பிறவாமைவந்தேன்றுகொளே.

திருச்சிற்றம்பலம்,

பின் திருவதிகை வீரட்டானேசுரரைத் தரிசிக்கவேண்டும் என்கின்ற ஆசையினால் அவ்விடத்தினின்றும் புறப்பட்டு, திருமாணிக் குழியையும் திருத்தினை நகரையும் வணங்கிக்கொண்டு திருக்கெடிலநதியைக் கடந்துசென்றார். அந்நாயனார் சமணர்கள்செய்த இடர்கள் அனைத்தையும் ஜயித்துவருதலைக் கேள்வியுற்ற திருவதிகைவாசிகள் சமஸ்தரும் அவ்வூரை மிக அலங்கரித்து, மங்கலவாத்தியங்கள்முழங்க அவரை எதிர்கொண்டு நமஸ்கரித்தார்கள் விபூதியை உத்தூளனம்செய்த திருமேனியையும் தாழ்வடத்தையும் சிவனுடைய திருவடிகளைமறவாத சிந்தையையும் ஆனந்த பாஷ்பம்பொழிகின்ற கண்களையும் திருப்பதிகங்கள் தோன்றுகின்ற திருவாயையுமுடைய நாயனார் தம்மை எதிர்கொண்ட சனங்களோடு ஆலயத்திற் சென்று சுவாமியை வணங்கித் திருத்தாண்டகம் பாடியருளினார்.

திருவீரட்டானம்-ஏழைத்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வெறிவிரவுகூவிளநற்றொங்கலானை
வீரட்டத்தானைவெள்ளேற்றினானைப்
பொறியரவினானைப்புள்ளூர்தியானைப்
பொன்னிறத்தினானைப்புகழ்தக்கானை
யறிதற்கரிய சீரம்மான்றன்னை
யதியரையமங்கையமர்ந்தான்றன்னை
எறிகெடிலத்தானையிறைவன்றன்னை
யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே.

தொல்லைவான்சூழ்வினைகள்சூழப்போந்து
தூறறியேனாறறியேன்சுடராய்நின்று
வல்லையேயிடர்தீர்த்திங்கடிமைக்கொண்ட
வானவர்க்குந்தானவர்க்கும்பெருமான்றன்னைக்
கொல்லைவாய்க்குருந்தொசித்துக்குழலூதுங்
கோவலனுநான்முகனுங்கூடியெங்கும்
எல்லைகாண்பரியானையெம்மான்றன்னை
யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே.

திருச்சிற்றம்பலம்.

நாயனார் வீரட்டானேசுரர்மேல் திருப்பதிகங்களைப் பாடிப்பணி செய்துகொண்டிருக்கும் நாளிலே சமணர்களுடைய துர்ப்போதனைக்கு இசைந்து தீங்குசெய்துகொண்டிருந்த பல்லவராஜன் அத்திருவதிகையிலே வந்து நாயனாரைவணங்கி சைவசமயத்திலே பிரவேசித்தான் சமணசமயம் பொய்யென்றும் சைவசமயமே மெய்யென்றும் அறிந்துகொண்ட காடவனென்பவனும் பாடலிபுரத்திலிருந்த சமணருடைய பள்ளிகலையும் பாழிகளையும் இடித்து, அவைகளின் கற்களைத் திருவதிகையிலே கொண்டுவந்து, பரமசிவனுக்குக் குணதரவீச்சரம் என்னும் கோயிலைக்கட்டினான் அந்நாட்களிலே திருநாவுக்கரசுசுவாமிகள் சிவஸ்தலங்கள் பலவற்றிற்குஞ் சென்று சுவாமி தரிசனம்செய்து திருப்பதிகம்பாடவிரும்பி அவ்விடத்தினின்றும் நீங்கி, திருவெண்ணெய் நல்லூர் திருவாமாத்தூர் திருக்கோவலூர் முதலிய திருப்பதிகளைவணங்கிப் பதிகம்பாடிக்கொண்டு பெண்ணாடகத்திற்சென்று திருத்தூங்கானை மாடமென்னும் ஆலயத்திற் பிரவேசித்து சுவாமியை வணங்கி சுவாமீ, அடியேன் இழிவினையுடைய சமணசமயத்தொடக்குண்டு வருந்திய இத்தேகத்துடனே உயிர்வாழ்தற்குத் தரியேன்

தரிக்கும்பொருட்டுத்தேவரீருடைய இலச்சினையாகிய சூலத்தையும்இடபத்தையும் என்மேற் பொறித்தருளவேண்டும் என்னும் கருத்தால் ஒரு திருப்பதிகம் பாடியருளினார்.

திருத்தூங்கானைமாடம் திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னார்திருவடிக்கொன் றுண்டுவிண்ணப்பம்போற்றிசெய்யு
மென் னாவிகாப்பதற்கிச்சையுண்டேலிருங்கூற்றகல
மின்னாருமூவிலைச் சூலமென்மேற்பொறிமேவுகொண்டற்
றுன்னார்கடந்தையுட்டூங்கானைமாடச்சுடர்கொழுந்தே.

கடவுந்திகிரிகடவாதொழியக்கயிலையுற்றான்
படவுந்திருவிரலொன் றுவைத்தாய்பனிமால்வரைபோ
லிடபம்பொறித்தென்னையேன் றுகொள்ளாயிருஞ்சோலைதிங்கள்
தடவுங்கடந்தையுட்டூங்கானைமாடத்தெந்தத்துவனே.

திருச்சிற்றம்பலம்.

உடனே பரமசிவனுடைய திருவருளினால் ஒரு சிவபூதம் மற்றொருவருக்கும் தெரியாதபடி அவ்வாகீசருடைய தோளிலே சூலக்குறியையும் இடபக்குறியையும் பொறித்தது. நாயனார் தம்முடைய தோளிலே பொறிக்கப்பட்ட இலச்சினைகளைக்கண்டு மனமகிழ்ந்து, திருவருளைநினைந்து கண்ணீர்சொரிய விழுந்து நமஸ்கரித்து எழுந்தார் அவர் அந்த ஸ்தலத்தில் இருக்கின்ற நாளிலே திருவரத்துறைக்கும் திருமுதுகுன்றுக்கும்போய் சுவாமி தரிசனஞ்செய்து பதிகம்பாடி, நிவாவென்னும் நதிக்கரையின் வழியாக நடந்து சிதம்பரத்திலே சென்று கனகசபையிலே ஆனந்தத்தாண்டவஞ் செய்தருளுகின்ற சபாநாயகரைத் தரிசித்து விழுந்து நமஸ்கரித்து எழுந்து இரண்டுகைகளும் சிரசின்மேலேறிக் குவிய இரண்டு கண்ணில் நின்றும் ஆனந்தபாஷ்பஞ்சொரிய அக்கினியிற்பட்ட வெண்ணெய்போல மனங் கசிந்துருக என்று வந்தாய் என்னுந் திருக்குறிப்போடு நிருத்தஞ் செய்கின்ற சுவாமியுடைய திருநயனத்தினின்றும் பொழிகின்ற திருவருளாலாகிய ஆநந்த மேலீட்டினாலே திருப்பதிகங்கள் பாடினார், அவர் சுவாமி தரிசனம்பண்ணி உறைவாரப்பணி செய்துகொண்டு சிலநாள் அங்கே இருந்தார்.

கோயிற்றிருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பத்தனாய்ப்பாடமாட்டேன்பரமனேபரமயோகி
யெத்திறற்பத்திசெய்கேனென்னைநீயிகழவேண்டா
முத்தனேமுதல்வாதில்லையம்பலத்தாடுகின்ற
வத்தாவின்னுடல்காண்பானடியனேன்வந்தவாறே.

மண்ணுண்டமாலவனும்மலர்மிசைமன்னினானும்
விண்ணுண்டதிருவுருவம்விரும்பினார்காணமாட்டார்
திண்ணுண்டதிருவேமிக்கதில்லைச்சிற்றம்பலத்தே
பண்ணுண்டபாடலோடும்பரமநீயாடுமாறே.

திருச்சிற்றம்பலம்.

இத்திருப்பதிகத்தைப்பாடி மாணிக்கங்களின் சோதிநிறைந்தமுன்றிலினிடத்தும் உயர்ந்த கொடிகளாடுகின்ற அழகிய தேர்கள நிறைந்த வீதியினிடத்தும் தன்றற்கூடுமான திருப்பணிகளைச் செய்கின்றவராகி திருப்பதிகங்களையும் பாடுந் தொழிலை யுடையவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள்மிகுந்த மகிழ்ச்சிகொண்டு "அன்னம்பாலிக்கு" மென்னுமுதலையுடைய திருக்குறுந்தொகை பாடியருளினர்.

கோயிற்றிருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

அன்னம்பாலிக்குந்தில்லைச்சிற்றம்பலம்
பொன்னம்பாலிக்குமென்னுமிப்பூமிசை
யென்னம்பாலிக்குமாறுகொண்டின்புற
வின்னம்பாலிக்குமோவிப்பிறவியே.

மதுரவாய்மொழிமங்கையொர்பங்கினன்
சதுரன்சிற்றம்பலவன்றிருமாலை
யதிரவார்த்தெடுத்தான்முடிபத்திற
மிதிகொள்சேவடிசென்றணைந்துய்மினே.

திருச்சிற்றம்பலம்

பின்பு அங்ஙனம் பொருந்திய பணிவிடைகளைச்செய்து வாழுநாளில் திருவேட்களத்துக்குச் சென்று விடைக்கொடியை யுடைய பரமசிவத்தைப் பாடிவணங்கி நீலோற்பலம்போன்ற கண்டத்தையுடையகடவுள் வாழுகின்ற திருக்கழிப்பாலையென்னுந் திருப்பதியை யடைந்து சுவாமிதரிசனஞ்செய்து வணங்கி "வனபவள வாய்திறந்து வானவர்க்குந் தானவனே யென்கின்றா" ளென்றெடுத்துத் திருப்பதிகம் பாடியருளினர்

திருக்கழிப்பாலை பண் காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வனபவளவாய்திறந்துவானவர்க்குந்தானவனேயென்கின்றாலாற்
சினபவளத்திரடோண்மேற்சேர்ந்திலங்குவெண்ணீற்றனென்கின்றாளா
லனபவளமேகலையோடப்பாலைக்கப்பாலானென்கின்றாளாற்
கனபவளஞ்சிந்துங்கழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொலோ.

அடர்ப்பரியவிராவணனையருவரைக்கீழடர்த்தவனேயென்கின்றாளாற்
சுடர்ப்பெரியதிருமேனிச்சுண்ணவெண்ணீற்றவனேயென்கின்றாளான்
மடர்ப்பெரியவாலின்கீழறநால்வர்க்கன்றுரைத்தானென்கின்றாளாற்
கடற்கருவிசூழ்ந்தகழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொலோ

திருச்சிற்றம்பலம்.

பின் திருக்கழிப்பாலையென்னும் திருப்பதியைவிட்டு மீண்டு வழிக்கொண்டு வரும்போது நினைப்பவர்களது மனத்தைக் கோயிலாகக்கொண்டருளும் அம்பலத்தின்கண் ணெழுந்தருளிய நிருத்தனாரை நினைத்தனை யாம்பொழுது மறந்துய்வனோவெனப் பாடிக்கொண்டு சிதம்பரத்தையடைந்தார்.

கோயிற்றிருக்குறுந்தொகை.

திருச்சிற்றமபலம்.

பனைக்கைமும்மதவேழமுரித்தவ, னினைப்பவர்மனங்கோயிலாக்கொண்டவ
னனைத்தும்வேடவமாமம்பலக்கூத்தனைத், தினைத்தனைப்பொழுதும்மறந்துய்வனோ
ஈங்குமால்வரைவேந்தலுற்றான்சிரம், வீங்குவிம்முறவூன்றியதாளினான்
தேங்குநீர்வயல்சூழ்தில்லைக்கூத்தனைப், பாங்கிலாத்தொண்டனேன்மறந்துய்வனோ

திருச்சிற்றம்பலம்.

பின்பு அடியவருக் கெளியவனும் தன்னுள்ளத்தைவிட்டு நீங்காதவனுமாகிய சபாபதியை அரியானையென்றெடுத்து திருத்தாண்டகச்செந்தமிழ்பாடி அவரைப்பணிந்து அங்கு சிலநாளிருந்தார்.

கோயிற்பெரியதிருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அரியானையந்தணர்தஞ்சிந்தையானையருமறையினகத்தானையணுவையார்க்குந்
தெரியாததத்துவனைத்தேனைப்பாலைத்திகழொளியைத்தேவர்கடங்கோனைமற்றைக்
கரியானைநான்முகனைக்கனலைக்காற்றைக்கனைகடலைக்குலவரையைக்கலந்துநின்ற
பெரியானைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பிறவாநாளே.

காரொளியதிருமேனிச்செங்கண்மாலுங்கடிக்கமலத்திருந்தயனுக்காணாவண்ணஞ்
சீரொளியதழற்பிழம்பாய்நின்றதொல்லைத்திகழொளியைச்சிந்தைதனைமயக்கந்தீர்க்
ஏரொளியையிருநிலனும்விசும்பும்விண்ணுமேழுலகுங்கடந்தண்டத்தப்பாலின்ற [கு
பேரொளியைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பிறவாநாளே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின் செஞ்சடைக்கற்றை முற்றத் திளநிலா வெறிக்குமென்னுஞ் சிறந்த வளமைபொருந்திய தமிழ்மாலையை யாவருக்கும் அதிசயமுண்டாகும்படி பாடி அன்புடனே மனமுருகக் கண்களினின்றும் ஆநந்த நீர்பொழிய ஒழியாத திருப்பணிகளைச்செய்து இருக்குநாளில்.

கோயிற்றிருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

செஞ்சடைக்கற்றைமுற்றத்திளநிலாவெறிக்குஞ்சென்னி
நஞ்சடைக்கண்டனாரைக்காணலாநறவநாறு
மஞ்சடைச்சோலைத்தில்லைமல்குசிற்றம்பலத்தே
துஞ்சடையிருள்கிழியத்துளங்கெரியாடுமாறே.

மதியிலாவரக்கனோடிமாமலையெடுக்கநோக்கி
நெதியன்றோணெரியவூன்றிநீடிரும்பொழில்கள்சூழ்ந்த
மதியந்தோய்தில்லைதன்னுண்மல்குசிற்றம்பலத்தே
யதிசயம்போலநின்றேயனலெரியாடுமாறே

திருச்சிற்றம்பலம்.

ஒருநாள் திருநாவுக்கரசுசுவாமிகள் சீர்காழியிலே பரமசிவனது திருவருளினால் உமாதேவி ஞானப்பாலை ஊட்ட உண்டு வேதார்த்தங்களைத்தமிழிலே தேவாரமாகப் பாடியருளுகின்ற திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய மகிமையை அடியார்கள்சொல்ல கேழ்வியுற்று, அவருடைய திருவடிகளை வணங்கல்வேண்டும் என்னும் ஆசை மிகுதியினால் சபா நாயகரைத்தொழுது அனுமதி பெற்றுக்கொண்டு புறப்பட்டு திருவீதியிலே அங்கப் பிரதட்சிணஞ் செய்து அத் திருப்பதியின் எல்லையைக் கடந்து திருநாரையூரைப் பணிந்து பாடி சீர்காழிக்குச் சமீபித்தார் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் சீர்காழிக்குத் திருநாவுக்கரசு சுவாமிகள் வருதலைக் கேள்வியுற்று அத்தியந்த ஆசையோடு அடியார்கள் பக்கத்திலேசூழ அவரை எதிர்கொண்டார். திருநாவுக்கரசு சுவாமிகள் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரிக்க அவர் தம்முடைய திருக் கரங்களினால் அவருடைய திருக்கரங்களைப்பிடித்து எடுத்து தாமும்

அஞ்சலிசெய்து, அப்பரேஎன்றார்அதற்குத் திருநாவுக்கரசு சுவாமிகள் அடியேன் என்றார் அவ்விருவரும் தாங்கள் ஒருவரை ஒருவர் காணப் பெற்றதனால் மிகமனமகிழ்ந்து ஆலயத்திற்சென்று சுவாமியை வலங் கொண்டு நமஸ்கரித்து எழுந்தார்கள், திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அப்பமூர்த்தியைநோக்கி அப்பரே உம்முடைய சுவாமியைப் பாடும் என்றுசொல்ல, அவர் பதிகம்பாடி திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய திருமடத்திற்சென்று அவரோடு அளவளாவிப் பலநாள் இருந்தார்.

திருக்கழுமலம்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பார்கொண்டுமூடிங்கடல்கொண்டஞான்றுநின்பாதமெல்லா
நாலைந்துபுள்ளினமேந்தினவென்பர்நளிர்மதியங்
கால்கொண்டவண்கைச்சடை விரித்தாடுங்கழுமலவர்க்
காளன்றிமற்றுமுண்டோவெந்தணுழியகலிடமே.

கரையார்கடல்சூழிலங்கையர்கோன்றன்முடிசிதறத்
துலையாமலரடியூன்றலுமுள்ளம்விதிர்த்துத்
தலையாய்க்கிடந்துயர்ந்தான்றன்கழுமலங்காண்பதற்கே
மலையாப்பரிசிவைநாடோறுநந்தமையாள்வனவே.

திருச்சிற்றம்பலம்.

ஒருநாள்இவர் சோழமண்டலத்திலுள்ள சிவஸ்தலங்கள்எல்லாவற்றையும் வணங்கவேண்டும்என்றுதம்முடைய திருவுள்ளத்தேதோன்றிய ஆசையைத் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளுக்குத் தெரிவித்துஅவரோடும் திருக்கோலக் காவிற்குச்சென்று சுவாமிதரிசனம் பண்ணினார். திருஞானசம்பந்த சுவாமிகள் அவ்விடத்தினின்றும் மீண்டருளினார்அப்பமூர்த்திகருப்பறியலூர்-புன்கூர்-நீடூர் குறுக்கை-நின்றையூர்-நனிபள்ளி முதலிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு காவேரியாற்றின் இருகரை வழியாகவும் சென்று செம்பொன்பள்ளி- மயிலாடுதுறை துருத்திவேள்விக்குடி எதிர்கொள்பாடி-திருவாவடுதுறை இத்தலங்களை யடைந்துயாறுய்ந்தேனென்று அளவற்ற திருத்தாண்டக மருளிச் செய்து பின்னுந் திருக்குறுந்தொகையும் நேரிசையும் சந்தவிருத்தங்களும் ஆகிய வெவ்வேறு பதிகங்கள்பாடி மிகுந்த அன்பினோடு பூமியிலுள்ளார் பரவ அவ்விடத்துப் பலநாட்டங்கி கைத்தொண்டு செய்து இருந்தார்.

திருவாவடுதுறைதிருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பனைநால்வேதங்கரைகண்டானை
 ஞானப்பெருங்கடலைநன்மைதன்னை
கம்பனைக்கல்லாலிருந்தான்றன்னைக்
 கற்பகமாயடியார்கட்கருள்செய்வானைச்
செம்பொன்னைப்பவளத்தைத்திரளுமுத்தைத்
 திங்களைஞாயிற்றைத்தீயைநீரை
யம்பொன்னையாவடுதண்டுறையுண்மேய
 வரனடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே.

தரித்தானைத்தண்கடனஞ்சுண்டான்றன்னைத்தக்கன்றன்
 பெருவேள்விகர்த்தான்றன்னைப்
பிரித்தானைப்பிறைதவழ்செஞ்சடையினானைப்
 பெருவலியால்மலையெடுத்தவரக்கன்றன்னை
நெரித்தானைநேரிழையாள்பாகத்தானை
 நீசனேனுடலுறுநோயானதீர
வரித்தானையாவடுதண்டுறையுண்மேய
 வரனடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே.

திருச்சிற்றம்பலம்.

பின் திருவிடைமருதூர் திருநாகீச்சரம் பழையாரை என்கின்ற ஸ்தலங்களைப் பணிந்து பாடி திருச்சத்திமுற்றத்தை அடைந்தார் அங்கே "கோவாய்முடுகியடுதிறற்கூற்றங் குமைப்பதன்முன், பூவாரடிச்சுவடென்மேற் பொறித்துவை" என்று பதிகம்பாடவும், பரமசிவன் நல்லூருக்குவா என்று அருளிச்செய்தார்.

திருச்சத்திமுற்றம்திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கோவாய்முடுகியடுதிறற்கூற்றங்குமைப்பதன்முன்
பூவாரடிச்சுவடென்மேற்பொறித்துவைபோகவிடின்
மூவாமுழுப்பழிமூடுங்கண்டாய்முழங்குந்தழற்கைத்
தேவாதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே.

பொறித்தேரரக்கன்பொருப்பெடுப்புற்றவன்பொன்முடிதோ
ளிறந்தாளொருவிரலூன்றிட்டலறவிரங்கியொள்வாள்
குறித்தேகொடுத்தாய்கொடியேன்செய்குற்றக்கொடுவினைநோய்
செறுத்தாய்திருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே.

திருச்சிற்றம்பலம்.

அப்பமூர்த்தி திருநல்லூரிலே சென்று சுவாமியை வணங்கி எழுந்தார். எழும்பொழுது சுவாமி உன்னுடைய நினைப்பை முடிக்கின்றோம் என்றுசொல்லி தம்முடைய திருவடிகளை அவர் சிரசின்மேலே சூட்டினார். அப்பமூர்த்தி "நனைந்தனைய திருவடி யென்றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே" என்னுந் திருத்தாண்டகம் பாடியருளினார். இன்னும் திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு சிலநாள் அங்கிருந்தார் இருக்கும் நாட்களிலே கருகாவூர் திருவாரூர் திருப்பாலைத்துறை முதலாகிய ஸ்தலங்களுக்குப்போய் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு திருநல்லூருக்குத் திரும்பி விடுவார்

திருநல்லூர்த்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நினைத்துருகுமடியாரைநையவைத்தார்
நில்லாமேதீவினைகணீங்கவைத்தார்
சினந்துருகுகளிற்றுரிவைப்போர்வைவைத்தார்
செழுமதியின்றளிர்வைத்தார்சிறந்துவானோ
ரினந்துருமிமணிமகுடத்தேறத்துற்ற
வினமலர்கள்போதவிழ்ந்துமதுவாய்ப்பில்கி
நனைந்தனையதிருவடியென்றலைமேல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார்நல்லவாறே.

குலங்கிளரும்வருதிரைகளேழும்வைத்தார்
குருமணிசேர்மலைவைத்தார்மலையைக்கையா
லுளங்கிளரவெடுத்தவன்றோண்முடியுநோவ
வொருவிரலாலுறைவைத்தாரிறைவாவென்று
புலம்புதலுமருளொடுபோர்வாளும்வைத்தார்
புகழவைத்தார்புரிந்தாளாக்கொள்ளவைத்தார்
நலங்கிளர்திருவடியென்றலைமேல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார்நல்லவாறே.

திருச்சிற்றம்பலம்.

சிலநாட் சென்றபின், அப்பமூர்த்தி திருநல்லூரினின்றும் நீங்கி திருப்பழனத்தை வணங்கிக்கொண்டு திங்களூரின் வழியாகச்சென்றார். செல்லும்பொழுது, அவ்வூரிலே அப்பூதிநாயனார் என்பவர் தம்முடைய புத்திரர்களுக்குத் திருநாவுக்கரசு என்னும் பெயரைத்தரித்தும், தம்முடைய அன்னசத்திரம் கிணறு குளம் தண்ணீர்ப்பந்தல் முதலியவற்றிலும் தனித்தனியே இது திருநாவுக்கரசு சுவாமிகளுடையது என்று தீட்டியும் இருத்தலைக் கேள்வியுற்று அவருடைய வீட்டுக்குச்சென்றார்

அப்பூதிநாயனுர் அப்பமூர்த்தியைத் தம்முடைய மனைவியார் புத்திரர் முதலாயினுரோடுப் அவரைவணங்கி, அங்கே திருவமுது செய்யும்படி பிரார்த்தித்து அதற்கு இவர் உடன்பட்டதுகண்டு அமுது சமைப்பித்து திருநாவுக்கரசு என்னும் பெயர்பெற்ற தம்முடைய புத்திரரை நோக்கி தோட்டத்திற் சென்று வாழைக்குருத்து அரிந்துகொண்டுவா என்று சொல்லி யனுப்பினுர். அவர்விரைந்து வாழைக்குருத்து அரியப்புகுந்தபொழுது ஒருபாம்பு அவரைத் தீண்டிற்று. அதை அவர் பேணுமல் அப்பமூர்த்தி திருவமுது செய்யும்படி குருத்தை அரிந்துகொண்டு விரைவிலே திரும்பிவந்து விஷந் தலைக்கொள்கையால் மயக்கமடைந்துவாழைக்குருத்தைத் தம்முடைய தாயார்கையிலே கொடுத்துவிட்டு தம்மைச் சர்ப்பந்தீண்டினதைச் சொல்லிக்கொண்டு கீழேவிழுந்து இறந்தார். அதுகண்டு அப்பூதிநாயனுரும் அவர் மனைவியாரும் ஐயோ இனி நாயனுர் அமுதுசெய்யாரே என்று துக்கித்து சவத்தை மறைத்துவைத்து சிறிதும் தடுமாற்றம் இன்றி அப்பமூர்த்தியிடத்திற் சென்று சுவாமீ, எழுந்துவந்து அமுது செய்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள் அப்பமூர்த்தி அங்குநிகழ்ந்த உண்மையைத் திருவருளினுல் அறிந்துகொண்டு அவர்களுடைய அன்பைநினைந்து அருள்சுரந்து சவத்தைச் சிவாலயத்தின்முன் கொணர்வித்து "ஒன்றுகொலாம்" என்கின்றதிருப்பதிகத்தைப் பாடியருளினுர்.

விஷந்தீர்த்ததிருப்பதிகம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்றுகொலாமவர்சிந்தையுயர்வரை
யொன்றுகொலாமுயரும்மதிசூடுவ
ரொன்றுகொலாமிடுவெண்டலைகையது
வொன்றுகொலாமவரூர்வதுதானே.

பத்துக்கொலாமவர்பாம்பின்கண்பாம்பின்பல்
பத்துக்கொலாமெயிறுநெரிந்துக்கன
பத்துக்கொலாமவர்காயப்பட்டான்றலை
பத்துக்கொலாமடியார்செய்கைதானே.

திருச்சிற்றம்பலம்.

உடனே அப்புத்திரர் உணர்வுபெற்று எழுந்தார், அப்பூதிநாயனுர் தம்முடைய புத்திரர்பிழைத்ததைக்கண்டும் அதைக்குறித்துசந்தோஷியாமல் அப்பமூர்த்திஅமுதுசெய்யாதிருந்தமையைக்குறித்துதுக்கித்து

வருந்தினர். அவ்வருத்தத்தை நீக்கும்பொருட்டு, அப்பமூர்த்தி அவருடையவீட்டிற்சென்று அமுதுசெய்து அங்கே இருந்தார் சிலநாட்சென்றபின் திங்களூரினின்றும்நீங்கி திருப்பழனத்திற்குப்போய் சுவாமிதரிசனஞ்செய்து அப்பூதிநாயனாரைச் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடியருளினார்.

திருப்பழனம்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

சொன்மாலைபயில்கின்றகுயிலினங்காள்சொல்லீரே
பன்மாலைவரிவண்டுபண்மிழற்றும்பழனத்தான்
முன்மாலைநகுதிங்கள்முகிழ்விளங்குமுடிச்சென்னிப்
பொன்மாலைமார்பனென்புதுநலமுண்டிகழ்வாளே.

வஞ்சித்தென்வளைகவர்ந்தான் வாரானேயாயிடினும்
பஞ்சிக்காற்சிறகன்னம்பரந்தார்க்கும்பழனத்தா
னஞ்சிப்போய்க்கலிமெலியவழலோம்புமப்பூதி
குஞ்சிப்பூவாய்நின்றசேவடியாய்கோடியையே.

திருச்சிற்றம்பலம்.

அங்கே இருக்கும் நாளிலே திருச்சோற்றுத் துறைமுதலாகியஸ்தலங்களுக்கும்போய் வருவார் வெகுநாட் சென்றபின் திருநல்லூருக்குச் சென்று சிலநாள் அங்கேவசித்து பின் திருவாரூருக்குப் போகக்கருதி அதனைநீங்கி பழையாறை வலஞ்சுழி திருக்குடமூக்கு கும்பகோணம் நல்லூர் திருச்சேறைகுடவாயில் நறையூர் திருவாஞ்சியம் பெருவேளூர் என்கின்ற ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருவாரூரை அடைந்தபோது திருநாவுக்கரசுசுவாமிகள் திருவாரூரில் வந்ததைக் கேள்வியுற்ற அவ்வூரிலுள்ள அடியார்கள் வீதிகளையும் மாடமாளிகைகளையும் அலங்கரித்து சமணர்களுடைய மாயையைக்கடந்து கடலில் கல்லே மிதப்பாக வந்தவர் வந்தாரென்னுங் களிப்பால் அளவற்ற தொண்டர்கள் மதிற்புறத்திற் சென்றெதிர்கொண்டு திருநாவுக்கரசு சுவாமிகளை வணங்கி திருப்பதியினுள் அழைத்துவந்தபோது திருப்பதிகம் பாடியருளினார்.

திருவாரூர்த்திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

குலம்பலம்பாவருகுண்டர்முன்னேநமக்குண்டுகொலோ
வலம்பலம்பாவருதண்புனலாரூரவிர்சடையான்
சிலம்பலம்பாவருசேவடியான்றிருமூலட்டானம்
புலம்பலம்பாவருதொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே.

குற்றமுடையவமணர்திறமதுகையகன்றிட்
டுற்றகருமஞ்செய்துய்யப்போந்தேனுக்குமுண்டுகொலோ
மற்பொலிதோளாணிராவணன்றன்வலிவாட்டுவித்த
பொற்கழலானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே.

திருச்சிற்றம்பலம்

அதன்பின்பு தன்னைச்சூழ்ந்துவருகின்ற திருத்தொண்டர்களோடு தோரணவாயிலையடைந்து தேவாசிரியன் முன்வந்து வணங்கி ஆலயத்துட்புகுந்து புற்றிடங்கொண்ட கடவுளைத் தரிசித்து வணங்கி தேகம் புளகாங்கிதமாகக்;கண்களில் ஆனந்தபாஷ்பம்பொழிய திருமூலட்டானரைத்துதித்துத் திருத்தாண்டகம் பாடியருளினர்.

திருவாரூர்ப்போற்றித் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கற்றவர்களுண்ணுங்கனியேபோற்றி கழலடைந்தார்செல்லுங்கதியேபோற்றி
யற்றவர்கட்காரமுதமானுய்போற்றியல்லலறுத்தடியேனையாண்டாய்போற்றி
மற்றொருவரொப்பிலாமைந்தாபோற்றிவானவர்கள்போற்றுமருந்தேபோற்றி
செற்றவர்தம்புரமெரித்தசிவனேபோற்றிதிருமூலட்டானனேபோற்றிபோற்றி.

பிரமன்றன்சிரமரிந்தபெரியோய்போற்றி பெண்ணுருவோடாணுருவாய்நின்றாய் போற்றி, கரகான்குழுக்கண்ணுமுடையாய்போற்றி காதலிப்பார்கற்றவெளியாய் போற்றி, யருமந்ததேவர்க்கரைசேபோற்றியன்றரக்கனைஞ்ஞான்குதோளுந்தாளுஞ் சிரநெரித்தசேவடிகன்போற்றிபோற்றி திருமூலட்டானனேபோற்றிபோற்றி.

திருச்சிற்றம்பலம்.

பின்பு தூண்டுதலில்லா விளக்கையொத்த சோதிஸ்வரூபனாகிய கடவுண்முன்னின்று "காண்டலே கருத்தாயின" வென்னுந் திருப்பதிகத்தைப்பாடி மனமுருகி ஆலயத்தை வலம்வந்து வணங்கி அன்புபொருந்திய மனத்தோடு திருவாயிலின் புறத்து வந்தார்.

திருவாரூர்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

காண்டலேகருத்தாய்நினைந்திருந்தேன்மனம்புகுந்தாய்கழலடி
பூண்டுகொண்டொழிந்தேன்புறம்போயினாலறையோ
வீண்டுமாடங்கணீண்டமாளிகைமேலெழுகொடிவானிளமதி
தீண்டிவந்துலவுந்திருவாரூரம்மானே

நாடினார்கமலம்மலரயனோடிரணியனாரலங்கீண்டவ
னாடிக்காணமாட்டாததழலாய்நம்பரனைப்
பாடுவார்பணிவார்பல்லாண்டிசைகூறுபத்தர்கள்சித்தத்துள்புக்கு
தேடிக்கண்டுகொண்டேன்திருவாரூரம்மானே. [த்

திருச்சிற்றம்பலம்.

பின்பு சிவந்த மாணிக்கமணிகள் ஒளிசூழ்ந்த திருவாயிலின் முன் வந்து "கொய்யுலாமலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலுமாரூரரைக் கையினாற்றொழாதே முன் கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனென்று" திருப்பதிக மருள்செய்து அங்கிருந்தனர்.

திருவாரூர்பழமொழிபத்து-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மெய்யெலாம்வெண்ணீறுசண்ணித்தமேனியான்றாடொழாதே
யுய்யலாமென்றெண்ணியுறிதூக்கியுழிதந்தேனுள்ளம்விட்டுக்
கொய்யுலாமலர்ச்சோலைக்குயில்கூவமயிலாலுமாரூரரைக்
கையினாற்றொழாதொழிந்துகனியிருக்கக்காய்கவர்ந்தகள்வனேனே.

மறுத்தானோர்வல்லரக்கனீரைந்துமுடியினொடுதோளுந்தாளு
மிறுத்தானையெழின்முளரித்தவிசின்மிசையிருந்தான்றன்றலையிலொன்
யறுத்தானையாரூரிலம்மானையாலாலமுண்டுகண்டங் [றை
கறுத்தானைக்கருதாதேகரும்பிருக்கவிரும்புகடித்தெய்த்தவாறே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு மழைபோலும் மார்பின்கண் பெருகாநின்ற கண்ணீரும், தமது மதுரவாயினால்பாடுகின்ற இனிய தமிழ்மாலைகளும் கடவுளினது திருவடியிலே பற்றியமனமும் உழவாரப்படையுந்தாமுமாகி திருவீதிப்பணிசெய்து வணங்கி புற்றிடங்கொண்டாரைக் காலங்கடோறும் தரிசித்து, "பாடிளம்பூதத்தினான்" என்னும் பதிகமுதலான பலபதிகங்களைப்பாடி அன்பினாலுருகிச் செல்வாராயினர்.

திருவாரூர்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பாடிளம்பூதத்தினனும்பவளச்செவ்வாய்வண்ணத்தானுங்
கோடிளமென்முலையாளைக்கூடியகோலத்தினனு
மோடிளவெண்பிறையானுமொளிதிகழ்சூலத்தினனு
ராடிளம்பாம்பசைத்தானுமாரூரமர்ந்தவம்மானே.

பையஞ்சுடர்விடுநாகப்பள்ளிகொள்வானுள்ளத்தானுங்
கையஞ்சுநான்குடையானைக்கால்விரலாலடர்த்தானும்
பொய்யஞ்சிவாய்மைகள்பேசிப்புகழ்புரிந்தார்க்கருள்செய்யு
மையஞ்சினப்புறத்தானுமாரூரமர்ந்தவம்மானே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு ஒருபதிகத்திலே நமிநந்தியடிகள் நீரினல் விளக்கேற்றின மையைச் சிறப்பித்தும் பாடினர். அந்தத்திருப்பதியில்இருக்கின்ற அரனெறியென்னும் ஆலயத்தையும் வணங்கிப் பதிகம்பாடினர் அங்கிருக்கும் நாட்களிலே திருவலிவலம் கீழ்வேளூர் கன்றாப்பூர் என்னும் ஸ்தலங்களுக்குப்போய் பதிகம் பாடிக்கொண்டு அவ்விடத்திற்குத் திரும்பிவிட்டார். திருவாதிரை நட்சத்திரத்திலே வீதிவிடங்கப்பெருமாளுடைய திருவிழாவை அடியார்களுடன் சேவித்து மகிழ்ந்திருந்தார். அந்நாட்களிலே திருப்புகலூருக்குப் போம்படி கருதி திருவாரூரினின்றும் நீங்கி, பலஸ்தலங்களையும் பணிந்துசென்றார், அந்நாளிலே திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் திருப்புகலூருக்கு வந்து சுவாமிதரிசனஞ் செய்து கொண்டு முருகநாயனருடைய திருமடத்தில் இருந்தார் ஒருநாள் அப்பமூர்த்தி திருவாரூரினின்றும் திருப்புகலூரைநோக்கி வருகின்றார் என்று கேள்வியுற்று, அடியார் கூட்டத்தோடும் சென்று அவரை எதிர்கொண்டார் அப்பமூர்த்தி திருஞானசம்பந்த மூர்த்தியைவணங்க திருஞானசம்பந்தமூர்த்தியும் அப்பமூர்த்தியை வணங்கி அப்பரே நீர் வரும்நாளிலே திருவாரூரிலே நடக்கின்ற பெருமையைச் சொல்லும் என்றார். அப்பமூர்த்தி திருவாதிரைச் சிறப்பைத் திருப்பதிகத்தினல் சொல்லி யருளினர்.

திருவாரூர்த்திருவாதிரை திருப்பதிகம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

முத்துவிதானமணிப்போற்கவரிமுறையாலே
பத்தர்களோடுபாவையர்சூழப்பலிப்பின்னே
வித்தகக்கோலவெண்டலைமாலைவிரதிக
ளத்தனாரூராதிரைநாளாலதுவண்ணம்.

பாரூர்பவ்வத்தானைப்பத்தர்பணிந்தேத்தச்
சீரூர்பாடலாடலறாதசெம்மாப்பார்ந்
தோரூரொழியாதுலகமெங்கும்பணிந்தேத்து
மாரூரன்றனாதிரைநாளாலதுவண்ணம்.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்தி அதைக்கேட்டு நான் திருவாரூருக்குப் போய்ச் சுவாமிதரிசனஞ் செய்துக்கொண்டு இவ்விடத்திற்கு வருவேன் என்றுசொல்லித் திருவாரூருக்குப்போக அப்பமூர்த்தி திருப்புகலூருக்குவந்து சுவாமிதெரிசனம்செய்து பதிகம்பாடிக்கொண்டு இருந்தார். செங்காட்டங்குடி, திருநள்ளாறு, சாத்தமங்கை திருமருதல் என்கின்ற ஸ்தலங்களுக்குப்போய், தரிசனஞ்செய்துகொண்டுதிருப்புகலூருக்குத் திரும்பினார். சிலநாட்சென்றபின் திருஞானசம்பந்தமூர்த்தி திருவாரூரினின்றும் நீங்கி திருப்புகலூருக்குவந்தார். அப்பமூர்த்தி அவரை எதிர்கொண்டு அழைத்துவந்து முருகநாயனாருடைய திருமடத்தில்அவரோடும் இருந்தார். இருக்கும்நாளிலே சிறுத்தொண்டநாயனாரும், திருநீலநக்கநாயனாரும்அவர்களிடத்திற்குவந்து அவர்களோடுஇருந்தார்கள்சில நாளாயினபின் திருஞானசம்பந்தமூர்த்தியும் அப்பமூர்த்தியும்திருப்புகலூரினின்றும் நீங்கி, திருநீலநக்கநாயனாரும், சிறுத்தொண்டநாயனாரும், முருகநாயனாரும் மற்றை அடியார்களும் அனுமதிபெற்றுக்கொண்டு போய்விட, திருவம்பர் என்னும் ஸ்தலத்தை அடைந்து வணங்கி திருக்கடவூரிற்சென்று வீரட்டானேசுரரைப்பணிந்து குங்கிலியக் கலயநாயனாரால் அவருடைய திருமடத்திலே அமுதுசெய்விக்கப்பட்டு திருக்கடவூர் மயானத்தையும் வணங்கி திருவாக்கூர் முதலிய திருப்பதிகளைத் தரிசித்து திருவீழி மிழலையை அடைந்தார். அதுசமாச்சாரம் அத்தலத்திலுள்ள அடியார்கள் அறிந்து எதிர்கொண்டு போய்வணங்க அவர்களைவணங்கி ஆலயத்துட்சென்று கோயிலை வலம்வந்து வணங்கி திருவீழிமிழலை யானைச்சேராதார் தீநெறிக்கே சேர்கின்றார், என திருத்தாண்டகமொழிந்து சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு அங்கே யிருந்தார்கள்.

திருவீழிமிழலைத்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

போரானையீருரிவைப்போர்வையானைப்
புலியதளேயுடையாடைப்போற்றினானைப்
பாரானைமதியானைப்பகலானானைப்பல்லுயிராய்
நெடுவெளியாய்ப்பரந்துநின்ற
நீரானைக்காற்றானைத்தீயானானைநினையாதார்
புரமெரியநினைந்ததெய்வத்
தேரானைத்திருவீழிமிழலையானைச்
சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே.

அறுத்தானையயன்றலைகளஞ்சிலொன்றை
யஞ்சாதேவரையெடுத்தவரக்கன்றோள்க
ளிறுத்தானையேழிசரம்பிசைகேட்டானை
யிந்துவினைத்தேய்த்தானையிரவிதன்பாற்
பறித்தானைப்பகீரதற்காவானோர்வேண்டப்
பரந்திழியும்புனற்கங்கைபனிபோலாங்குச்
செறித்தானைத்திருவீழிமிழலையானைச்
சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின் சிலநாட் சென்றபின் மழையின்மையாலும் காவேரிப் பெருக்கு இன்மையாலும் பஞ்சம் உண்டாகஅதனால் உயிர்கள்எல்லாம் வருத்தமுற்றன அக்காலத்திலே பரமசிவன் திருஞானசம்பந்த மூர்த்திக்கும் திருநாவுக்கரசு சுவாமிகளுக்கும் தோன்றி, காலபேதத்தினாலே நீங்கள் மனவாட்டம் அடையீர்களாயினும் உங்களை வழிபடுகின்றஅடியார்களுக்குக் கொடுக்கும்பொருட்டு நாம் உங்களுக்குப் படிக்காசுதருகின்றோம் என்றுசொல்லி கோயிலின் கிழக்குவாயிற்படியிலும் மேற்குவாயிற்படியிலும் தினந்தோறும் படிக்காசுவைத்தருளினார் அவ்வடியார்களிருவரும் தாங்கள்பெற்ற படிக்காசுகளை அனுப்பிப் பண்டங்கள்வாங்குவித்து, அமுதுசமைப்பித்து சிவனடியார்கள் எல்லாரும் வந்துபோசனம் பண்ணக்கடவர்கள் என்று இரண்டு காலங்களினும் பறைசாற்றித் தெரிவித்து அன்னமிட்டார்கள் திருஞானசம்பந்தமூர்த்தி தாம் பரமசிவனுக்குக் குமாராரகையாலும் பாடற்றொண்டுமாத்திரம் செய்கையாலும் தாம்பெற்ற படிக்காசை வட்டங்கொடுத்து மாற்றப்பெற்றார் அப்பமூர்த்தியோ தாம் அக்கடவுளுக்கு அடியாராகையாலும், பாடற்றொண்டோடும் கைத்தொண்டும செய்கை யாலும் தாம்பெற்ற படிக்காசை வட்டங் கொடாது மாற்றப்பெற்றார் இருவருடைய திரும

டங்களினும் நாடோறும் சிவனடியார்கள் போசனம்பண்ணி மகிழ்ந்திருக்கும் காலத்திலே எங்கும் மழைபெய்து தானிய முதலியவைகள் மிக விளைந்தமையால் பஞ்சம் நீங்கிற்று. திருஞானசம்பந்தமூர்த்தியும் அப்பமூர்த்தியும் திருவீழிமிழலையினின்றும் நீங்கிதிருவாஞ்சியமுதலியஸ்தலங்களை வணங்கிக் கொண்டு வேதாரணியத்தை அடைந்து ஆலயத்திலேயே பிரவேசித்து வலஞ் செய்து வேதங்கள் அருச்சித்துத் திருக்காப்புச் செய்த அந்நாள் முதல் இந்நாள் வரைக்கும் அடைக்கப் பட்டே இருக்கின்ற கதவுக்கு முன்வந்து வேதங்களாலே திருக் காப்புச் செய்யப்பட்ட அக்கதவை அடியார்கள் நீக்கப்பெறுமையினால் வேறோர் பக்கத்திலே ஓர்வாயில் இட்டு அதன்வழியே செல்கின்றார்கள் என்பதைக் கேட்டறிந்தார்கள். திருஞான சம்பந்தமூர்த்தி அப்பமூர்த்தியை நோக்கி அப்பரே நாம் எப்படியும் சுவாமியை அபிமுகத்திருவாயில் வழியேசென்று தரிசிக்கவேண்டும் ஆதலால் இந்தக்கதவு திறக்கப்படும்பொருட்டு நீரே திருப்பதிகம் பாடும் என்றார். அப்பமூர்த்தி "பண்ணினேர்மொழியாள்" என்னுந் திருப்பதிகத்தைக் கதவுதிறக்கப்படும் பொருட்டுப்பாட, அது திறக்கப்படாமல் தாழ்த்தது. அதுகண்டு "எண்ணீ ரிரக்கமில்லீர்" என்னுந் திருக்கடைக்காப்பைப்பாடி வணங்கினார் உடனே வேதாரணியேசுரருடைய திருவருளினால் கதவுதிறக்கப்பட்டது.

திருமறைக்காடுதிருக்குறுத்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ, மண்ணினார்வலஞ்செய்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத், திண்ணமாகத்திறந்தருள்செய்மினே.

அரக்கனைவிரலாலடர்த்திட்டநீ, ரிரக்கமொன்றிலீரெம்பெருமானிரே
சுரக்கும்புன்னைகள்சூழ்மறைக்காடரோ, சுரக்கவிக்கதவந்திறப்பிம்மினே.

திருச்சிற்றம்பலம்.

அப்பொழுது நாயன்மார் இருவரும் விழுந்து நமஸ்கரித்தார்கள் அடியார்கள் எல்லாரும் ஆனந்தகோஷம் செய்தார்கள் நாயன்மார் இருவரும் பேரின்பவெள்ளத்தில் அமிழ்ந்து எழுந்து உள்ளேபுகுந்து சுவாமி தரிசனம்செய்து திருப்பதிகங்கள்பாடி அரிதில் வெளியே வந்தார்கள் அப்போது அப்பமூர்த்தி திருஞானசம்பந்தமூர்த்தியை நோக்கி சுவாமியுடைய திருவருளினாலே இந்தக்கதவு திறக்கப்பட்டும் அடைக்கப்பட்டும் என்றும் வழங்கும்பொருட்டு தேவரீர் இது அடைக்கப்படும்படி திருப்பதிகம் பாடியருளும் என்றார் திருஞானசம்பந்தமூர்த்தி திருப்பதிகத்திலே முதற்பாட்டுப்பாடிய மாத்திரத்தில் கதவு அடைக்கப்

பட்டது, அதுகண்டு நாயன்மார் இருவரும் திருவருளை வியந்து களிப்புற்று வணங்கினர்கள். திருஞானசம்பந்தமூர்த்தி தாம் எடுத்த பதிகத்தை முடித்தருளினர். அன்றுதொடுத்து அந்தக்கதவு திறத்தலும் அடைத்தலுமாகிய வழக்கம் என்றும் நிகழ்ந்தது அங்கேநிகழ்ந்த அற்புதத்தைக்கண்ட அடியார்கள் சமஸ்தரும் ஆச்சரியங்கொண்டு உரோமாஞ்சிதங்கொள்ள கண்ணீர்சொரிய நாயன்மார் இருவருடைய திருவடிகளிலும் விழுந்து நமஸ்கரித்தார்கள் நாயன்மார் இருவரும் திருமடத்தை அடைந்தபின் திருநாவுக்கரசு சுவாமிகள் தாம் திருப்பதிகமுழுதும் பாடியபின்னே கதவுதிறந்த அருமையையும் திருஞானசம்பந்தமூர்த்தி முதற்பாட்டைப்பாடியவுடனே கதவு அடைத்த எளிமையையும் நினைந்து சுவாமியுடைய திருவுள்ளம் இதுவென்று அறியமாட்டாமல் அயர்கின்றேன் என்று கவன்று மிக அஞ்சி திருமடத்தில் ஒருபக்கத்திலேபோய் கண்ணை மூடிக்கொண்டு வேதாரணியேசுரருடைய திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டு அருநித்திரை செய்தார் அப்பொழுது பரமசிவன் அவரிடத்திற்சென்று நாம்வாய்மூரில் இருப்போம் அவ்விடத்திற்குத் தொடர்ந்துவா என்று அருளிச்செய்தார் அப்பமூர்த்தி திருப்பதிகம் பாடிக்கொண்டு எழுந்து வேதாரணியத்தினின்றும் புறப்பட்டு விரைந்துபோக சுவாமி அவருக்கு முன்னுகத் தாம் அவருக்குமுன் காட்டியருளிய திருக்கோலத்தோடும் நடந்தருளினர்

திருவாய்மூர்த்திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

எங்கேயென்னையிருந்திடந்தேடிக்கொண்
டங்கேவந்தடையாளமருளினர்
தெங்கேதோன்றுந்திருவாய்மூர்ச்செல்வனு
ரங்கேவாவென்றுபோனரதென்கொலோ

தீண்டற்கரியதிருவடியொன்றினல்
மீண்டற்குமிதித்தாரரக்கன்றனை
வேண்டிக்கொண்டேன்றிருவாய்மூர்விளக்கினைத்
தூண்டிக்கொள்வேனுனென்றலுந்தோன்றுமே

திருச்சிற்றம்பலம்.

நெடும்பொழுது பரமசிவனுக்குப் பின்னுகச்செல்கின்ற அப்பமூர்த்தி அவரைச் சமீபிக்கப்பெற்றிலர்சுவாமி சமீபத்திலேகாட்சிகொடுப்பவர்போலஒருகோயிலைஎதிரேகாண்பித்து,அதனுள்ளேபுகுந்தருளஅப்ப

மூர்த்தியும் அவ்விடத்திலேவிரைந்து தொடர்ந்தார். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் அப்பமூர்த்தி திருவாய்மூருக்குப் போகின்றார் என்று கேள்வியுற்று வந்து சேர்ந்தார். அப்பமூர்த்தி சுவாமி மறைந்தமையைக் குறித்துந் துக்கித்து அடியார்களிற் சிறந்த திருஞானசம்பந்த மூர்த்தியே திறக்கவேண்டும் என்பதை நினையாமல் திறந்து குற்றஞ்செய்த சிறியேனுக்கு ஒளிக்கலாம் ஒருபதிகத்தின் முதற்பாட்டாலேயே கதவை அடைப்பித்த திருஞானசம்பந்தமூர்த்தி இங்கே வந்திருக்கிறார் அவருக்கு எப்படி ஒளிக்கலாம் என்றார் உடனே பரமசிவன் திருஞானசம்பந்தமூர்த்திக்குக் காட்சி கொடுத்தருளினார் திருஞானசம்பந்தமூர்த்தி தரிசித்து ஸ்தோத்திரம் பண்ணி அப்பமூர்த்தியுங் காணும்படி காட்ட அப்பமூர்த்தியும் தரிசித்து திருப்பதிகம் பாடியருளினார்.

திருவாய்மூர்த் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பாடவடியார்பரவக்கண்டேன்பத்தர்கணங்கண்டேன்மொய்த்தபூத
மாடன்முழவமதிரக்கண்டேனங்கையனல்கண்டேன்கங்கையானைக்
கோடலரவார்சடையிற்கண்டேன்கொக்கினிதழ்கண்டேன்கொன்றைகண்டேன்
வாடற்றலையொன்றுகையிற்கண்டேன்வாய்மூரடிகளைநான்கண்டவாறே.

கலங்கவிருவர்க்கழலாய்நீண்டகாரணமுங்கண்டேன்கருவாய்நின்று
பலங்கடரித்துகந்தபண்புங்கண்டேன் பாடலொலியெலாங்கூடகண்டே
னிலங்கைத்தலைவன்சிரங்கள்பத்து மிறுத்தவனுக்கீந்தபெருமைகண்டே
வலங்கைத்தலத்துளனலுங்கண்டேன் வாய்மூரடிகளைநான்கண்டவாறே

திருச்சிற்றம்பலம்.

பின்சுவாமி அப்பதிகத்தை ஏற்றுக்கொண்டு எழுந்தருள நாயன்மார் இருவரும் திருவாய்மூரை அடைந்து சுவாமி தரிசனம் செய்துக்கொண்டு சிலநாள் அங்கிருந்து பின் வேதாரணியத்துக்குத் திரும்பி வந்து அங்கே யிருந்தார்கள் இருக்கும்நாளிலே திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் மதுரையில் இருக்கின்ற பாண்டியனுடைய மனைவியாராகிய மங்கையர்க் கரசியாரும் மந்திரியாராகிய குலச்சிறையாரும் அனுப்பிய தூதர்களாலே பாண்டிநாட்டிலே ஆருகதசமயம் பரம்பச் சைவம்குன்றிய சமாசாரத்தைக் கேள்வி யுற்று சமணர்களைவென்று சைவஸ்தாபனம் செய்யும்பொருட்டு அவ்விடத்திற்குச் செல்லஎழுந்தார் அப்பொழுது திருநாவுக்கரசு சுவாமிகள் சமணர்களுடைய கொடுமையை நினைந்து மதுரைக்குப் போகாதிருக்கும்படி திருஞான சம்பந்தமூர்த்தி

யைத் தடுக்க திருஞான சம்பந்தமூர்த்தி அதற்கு இசையாமல் பாண்டியநாட்டுக் கெழுந்தருளினார் திருநாவுக்கரசு சுவாமிகள் வேதாரணியத்திலே சிலநாள் இருந்துபின் அதனை நீங்கி நாகைக்காரோணம் முதலிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருவீழிமிழலையை அடைந்துசிலநாள் அங்கிருந்து பின் திருவாவடுதுறையிற் சென்று திருஞானசம்பந்த மூர்த்திக்கு ஒருதிருப்பதிகத்தின் பொருட்டு ஆயிரம் செம்பொன் கொடுத்தருளிய திறத்தைப் புகழ்ந்துபாடி, பழையாறையிற்சென்றார்.

திருவாவடுதுறைத்திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மாயிருஞாலமெல்லாமலரடிவணங்கும்போலும்
பாயிருங்கங்கையாளைப்படர்சடைவைப்பர்போலும்
காயிரும்பொழில்கள்சூழ்ந்தகழுமலவூரர்க்கம்பொன்
னாயிரங்கொடுப்பர்போலுமாவடுதுறையனாரே.

பார்த்தனுக்கருளர்போலும்படர்சடைமுடியர்போலு
மேத்துவாரிடர்களைவின்பங்கள்கொடுப்பர்போலும்
கூத்தராய்ப்பாடியாடிக்கொடுவலியரக்கன்றன்னை
யார்த்தவாயலறுவிப்பாராவடுதுறையனாரே.

திருச்சிற்றம்பலம்.

அங்கே வடதளிஎன்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற பரமசிவனைச்சமணர்கள் மறைத்திருத்தலைக் கேள்வியுற்று சமீபமாகிய ஓரிடத்திற் சென்று அமுதுசெய்யாமல்சுவாமியைத் தியானித்துசுவாமீ அடியேன் தேவரீருடைய திருவுருவை மறைத்த சமணர்களுடைய செய்கையைக் கெடுத்தருளும் என்று சொல்லிக்கொண்டு இருந்தார். சுவாமி அரசனுக்குச் சொப்பனத்திலே தோன்றி நாம் சமணர்களால் மறைக்கப்பட்டிருக்கின்றோம் நாவுக்கரசன்நம்மைவெளிப்படக்கண்டு கும்பிடவேண்டும் என்று சிந்தித்துக்கொண்டு இருக்கின்றான் நீ அந்தச்சமணர்களை அழித்து நமக்கு ஆலயஞ்செய்யவேண்டும் என்றுஅருளிச்செய்து தாம்இருக்கின்ற இடத்தின் அடையாளங்களைத் தெரிவித்து மறைந்தருளினார். அரசன் விழித்தெழுந்து ஆச்சரியமடைந்து மந்திரிமாரோடும் விரைவிலே கோயிற் சென்று சுவாமி அருளிச்செய்த அடையாளத்தின் வழிகண்டு சமணர்கள் செய்தவஞ்சனையை உணர்ந்து அப்பமூர்த்தியைவணங்கி அந்தச் சமணர்களை யானைகளாலே மிதிப்பித்துக்கொன்று பரமசிவனுக்கு விமானம்செய்து நிமித்தங்கள் அமைத்தான். அப்பமூர்த்தி உள்ளேபுகுந்து சுவாமியைத்தரிசித்துத் திருப்பதிகம்பாடி சிலநாள்அங்கிருந்தார்.

திருப்பழையாறைவடதளித்திருக்குறுந்தொகை.

திருச்சிற்றமபலம்.

தலையெலாம்பறிக்குஞ்சமண்கையரு, ணிலையினான்மறைத்தான்மறைக்கொள்ளுமே
யலையினார்பொழிலாறைவடதளி, நிலையினானடியேநினைந்துய்ம்மினே
செருத்தனைச்செய்யுஞ்சேணரக்கனுடலெருத்திறவ்விரலாலிரவூன்றியே
வருத்தனைப்பழையாறைவடதளித் திருத்தனைதொழுவார்வினைதேயுமே

திருச்சிற்றம்பலம்.

பின் அவ்விடத்தினின்றும் நீங்கி திருவானைக்கா-எறும்பியூர்-திருச்சிராப்பள்ளி-கற்குடி-திருப்பராய்த்துறை என்னும் ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருப்பஞ்ஞீலியை நோக்கிச்சென்றார், செல்லும் வழியிலே பசியினாலும் தாகத்தினாலும் மிகவருந்தி இளைத்தார். இளைத்தும் சித்தமலையாமல் நடக்க பரமசிவன் அவருடைய வருத்தத்தை நீக்கும்பொருட்டு வழியிலே ஒருசோலையையும் குளத்தையும் உண்டாக்கி ஒரு பிராமண வடிவங்கொண்டு பொதிசோறு வைத்துக்கொண்டு இருந்தார். திருநாவுக்கரசுசுவாமிகள் அவர் சமீபத்தில் வந்தவுடனே ஐயர் அவரை நோக்கி நீர் வழிநடந்து மிக இளைத்துப்போனீர் என்னிடத்திலே பொதிசோறு இருக்கின்றது புசித்து இந்தக்குளத்திலே சலபானம்பண்ணி இளைப்பு நீக்கிக்கொண்டுபோம் என்றுசொல்லி பொதிசோற்றைக்கொடுத்தார், அப்பமூர்த்தி அதை வாங்கிப்புசித்து சலபானம் பண்ணிக்கொண்டு இளைப்புநீங்கி இருந்தார் சுவாமி அவரைநோக்கி நீர் எங்கே போகின்றீர் என்றுகேட்க வாகீசர் நான் திருப்பைஞ்ஞீலிக்குப் போகின்றேன் என்றுசொல்லிப் போனார் சுவாமி நானும் அங்கேதான் போகின்றேன் என்றுசொல்லி அவருடனே கூடிச்சென்று திருப்பஞ்ஞீலியைச் சமீபித்தவுடனே மறைந்தருளினார்

அப்பமூர்த்தி அதுகண்டு திருவருளை வியந்து கண்ணீர் பொழிந்தழுதுவிழுந்து நமஸ்கரித்து எழுந்து ஆலயத்திற்சென்று சுவாமியை வணங்கிப் பதிகம்பாடி கைத்தொண்டு செய்துகொண்டு இருந்தார் சிலநாளாயினபின் அவ்விடத்தினின்றும் நீங்கி, திருவண்ணாமலைக்குச் சென்று சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு திருப்பதிகம் பாடியருளினார்.

திருவண்ணாமலை திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஓதிமாமலர்கடூவியுமையவள்பங்காமிக்க
சோதியேதுளங்குமெண்டோட்சுடர்மழுப்படையினானே
யாதியேயமரர்கோவேயணியணாமலையுளானே
நீதியானின்னையல்லானினையுமாநினைவிலேனே.

இரக்கமொன்றியாதுமில்லாக்காலனைக்கடந்தவெம்மா
னுரத்தினால்வரையையூக்கவொருவிரனுதியினாலே
யரக்கனைநெரித்தவண்ணாமலையுளாயமரரேறே
சிரத்தினால்வணங்கியேத்தித்திருவடிமறப்பிலேனே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு தொண்டைநாட்டையடைந்து திருவோத்தூரென்னுந் தலத்தைவணங்கி உலகமுய்ய நஞ்சுண்டமைந்த கடவுள்வாழும் பலபதிகளையும்வணங்கி பார்வதி தழுவக்குழைந்த எம்பிரான்தங்கிய தெய்வப்பதியென்று சொல்லும் காஞ்சிநகரத்தைச் சமீபித்தார், அந்நகரிலுள்ளார் இவ்வுலகத்தா ருய்யும்பொருட்டு திருவதிகையிலெழுந்தருளிய பரமசிவன் பேரருளினால் சூலைநோயையளித்தாண்ட தொண்டர் வரப்பெற்றோமென்று முகமகிழ்ந்து நகரமெங்கு மலங்கரித்து அவரை எதிர்கொண்டு வணங்கப்போய் ஆலயத்தைக்கண்டு வணங்கி கோயிலுட் சென்று சுவாமி தரிசனஞ்செய்து "கரவாடும்வன்னெஞ்சர்க்கரியானை"யென்றெடுத்துத் திருப்பதிகம் பாடியருளினார்.

திருவேகம்பமெனத்துள்ளவைத்ததிருப்பதிகம்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கரவாடும்வன்னெஞ்சர்க்கரியானைக்கரவர்பால்
விரவாடும்பெருமானைவிடையேறும்வித்தகனை
யரவாடைச்சடைதாழவங்கையினிலனலேந்தி
யிரவாடும்பெருமானையென்மனத்தேவைத்தேனே.

அடுத்தானையுரித்தானையருச்சுனற்குப்பாசுபதம்
கொடுத்தானைக்குலவரையேசிலையாகக்கூரம்பு
தொடுத்தானைப்புரமெரியச்சுனைமல்குகயிலாய
மெடுத்தானைத்தடுத்தானையென்மனத்தேவைத்தேனே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு திருக்கச்சி மயானத்தை வலம்வந்து வணங்கி, அன்புறத் தொழுது பதிகங்கள்பாடித் தொண்டுசெய் திருந்துபின் திருமாற்பேறு முதலிய பலபதிகளினுஞ் சென்றுவணங்கிக் காஞ்சிநகரை வந்தடைந்து பதிகம்பாடி யருளினர்.

திருவேகம்பம்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கூற்றுவன்காண்கூற்றுவனைக்குமைத்தகோன்காண்
குவலயன்காண்குவலயத்தினீரானுன்காண்
காற்றவன்காண்கனலவன்காண்கலிக்குமின்காண்
கனபவளச்செம்மேனிகலந்தவெள்ளை
நீற்றவன்காணிலாவூருஞ்சென்னியான்காணிறை
யார்ந்தபுனற்கங்கைநிமிர்சடைமே
லேற்றவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே,

அறுத்தான்காணயன்சிரத்தையமரர்வேண்ட
வாழ்கடலினஞ்சுண்டங்கணிநீர்க்கங்கை
செறுத்தான்காண்தேவர்க்குந்தேவன்றான்காண்
திசையனைத்துந்தொழுதேத்தக்கலைமான்கையிற்
பொறுத்தான்காண்புகலிடத்தைநலியவந்து
பொருகயிலையெடுத்தவன்தன்முடிதோளலைந்
திருத்தான்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்தாணவனென்னெண்ணத்தானே.

திருச்சிற்றம்பலம்,

திருவேகம்பர் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

உரித்தவன்காணுரக்களிற்றையுமையாளொல்க
வோங்காரத்தொருவன்காணுரமெய்ஞ்ஞானம்
விரித்தவன்காண்விரித்தநால்வேதத்தான்காண்
வியனுலகிற்பல்லுயிரைவிதியினாலே
தெரித்தவன்காண்சில்லுருவாய்த்தோன்றியெங்குந்
திரண்டவன்காண்டிரிபுரத்தைவேவவில்லா
லெரித்தவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே.

பொன்னிசையும்புரிசடையெம்புனிதன்ருன்காண்
பூதகணநாதன்காண்புலித்தோலாடை
தன்னிசையவைத்தவெழிலரவினுன்காண்
சங்கவெண்குழைக்காதிற்சதிரன்ருன்காண்
மின்னிசையும்வெள்ளெயிற்றேன்வெகுண்டு
வெற்பையெடுக்கவடியடர்ப்பமீண்டவன்றன்வாயி
லின்னிசைகேட்டிலங்கொளிவாளீந்தோன்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே

திருச்சிற்றம்பலம்.

பின்பு திருக்கச்சியேகம்பத்தைப் பணிந்தேத்தி பரமசிவன் வாழா நின்ற பலபதிகளையும் வணங்க நினைந்து ஆங்குநின்றுஞ் சென்று திருக்கழுக்குன்றத்திற்சென்று கழுக்குன்றநாதரை வணங்கி திருப்பதிகம்பாடிபக்கத்திலுள்ள பலபதிகளிலுஞ் சென்று கடவுளைவணங்கிக் கடலாற்சூழப்பட்ட திருவான்மியூரையுடைய பரமசிவத்தைப்பணிந்து பதிகம் பாடி திருமயிலையைவந்தடைந்து கபாலீசரை வணங்கிப் பதிகம்பாடி அங்குநின்றுகடலோரமாகச்சென்று திருவொற்றியூரில்வந்துசேர்ந்தார் அந்நகரத்திலுள்ளார் திருநாவுக்கரசு சுவாமிகள் வருதலைக்கேட்டு அந்நகரெங்கும் அலங்கரித்து அடியார்களோடு எதிர்கொண்டுவந்து வணங்கினர்கள், வாகீசர் அவ்வடியார்களோடு நகரினுட்பிரவேசித்து ஆலயத்தைக்கண்டு வணங்கி யுள்ளேசென்று வலம்வந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து பரவசமாகி வண்டோங்குஞ் செங்கமல" மெனவெடுத்துத்திருத்தாண்டகம் பாடியருளினர்.

திருவொற்றியூர்த் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வண்டோங்குசெங்கமலக்கழுநீர்மல்குமதமத்தஞ்செஞ்சடைமேல்மதியஞ்சூடித்
திண்டோள்களாயிரமும்வீசிநின்றுதிசைசேரநடமாடிசிவலோகனர்
உண்டார்நஞ்சுலகுக்கோருறுதிவேண்டியொற்றியூர்மேயவொளிவண்ணனர்(டாவே
கண்டேனுன்கனவகத்திற்கண்டேற்கென்றன்கடும்பிணியுஞ்சுடுதொழிலுங்கைவிட்

வெருவுற்றமலர்க்குழலிமடவாலஞ்சமலைதுளங்கச்சிலைகடுங்கச்செறுத்துநோக்கிச்
செருவுற்றவாளரக்கன்வலிதான்மாளத்திருவடியில்விரலொன்ருலலறவூன்றி
யுருவொற்றியங்கிருவரோடிக்காணவோங்கினவவ்வொள்ளழலாரிங்கேவந்து
திருவொற்றியூர்நம்மூரென்றுபோனர்செறிவளைகளொன்ருென்ருய்ச்சென்றவாரே

திருச்சிற்றம்பலம்.

பின்பு விளங்காநின்றஆலயத்தின் முன்றிலின்கண்பொருந்தியதிருப்பணிகளைச் செய்துகொண்டு மனமகிழ்ச்சியோடு திருவிருத்தங்களும்

திருக்குறுந்தொகைகளும் திருநேரிசைகளுமாகிய பல திருப்பதிகங்களைப்பாடி சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு திருநாவுக்கரசு சுவாமிகள் பல நாளங்கிருந்தார்

திருவொற்றியூர்த் திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

செற்றுக்களிற்றுரிகொள்கின்றஞான்றுசெருவெண்கொம்பொன்
றிற்றுக்கிடந்ததுபோலுமிளம்பிரைபாம்பதனைச்
சுற்றிக்கிடந்ததுகிம்புரிபோலச்சுடரிமைக்கு
நெற்றிக்கண்மற்றதன்முத்தொக்குமாலொற்றியூரனுக்கே.

தருக்கினவாளரக்கன்முடிபத்திறப்பாதந்தன்னு
லொருக்கினவாறடியேனைப்பிறப்பறுத்தாளவல்லா
னெருக்கினவானவர்தேவர்கள்கூடிக்கடைந்தநஞ்சைப்
பருக்கினவாறென்செய்கேனொற்றியூருறைபண்டங்கனே.

திருச்சிற்றம்பலம்.

திருவொற்றியூர்த் திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஒற்றியூருமொளிமதிமாம்பினை, யொற்றியூருமப்பாம்புமதனையே
யொற்றியூரவொருசடைவைத்தவ, னொற்றியூர்தொழநம்வினையோயுமே
வரையனுருயர்தோளுடையமன்னனை, வரையினால்வலிசெற்றவர்வாழ்வி
திரையினார்புடைசூழ்திருவொற்றியூர், உரையினார்பொலிந்தாருயந்தார்களே [டர்

திருச்சிற்றம்பலம்.

திருவொற்றியூர்த் திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வெள்ளத்தைச்சடையில்வைத்தவேதகீதன்றன்பாத
மெள்ளத்தாணடையவேண்டின்மெய்தருஞானத்தீயாற்
கள்ளத்தைக்கழியநின்றார்காயத்துக்கலந்துநின்று
வுள்ளத்துளொளியுமாகுமொற்றியூருடையகோவே.

வெறுத்துகப்புலன்களைஞ்சுப் வேண்டிற்றுவேண்டுநெஞ்சே
மறுத்துகவார்வச்செற்றக்குரோதங்களானமாயப்
பொறுத்துகப்புட்பகத்தேருடையானையடரவூன்றி
யொறுத்துகந்தருள்கள்செய்தானொற்றியூருடையகோவே

திருச்சிற்றம்பலம்.

திருவொற்றியூர்த் திருநேரிசை

திருச்சிற்றம்பலம்.

ஓம்பினேன்கூட்டைவாளாவுள்ளத்தோர்கொடுமைவைத்துக்
காம்பிலாமூழைபோலக்கருதித்தேமுகக்கமாட்டேன்
பாம்பின்வாய்த்தேரைபோலப்பலபலநினைக்கின்றேனை
யோம்பிநீயுய்யக்கொள்ளாயொற்றியூருடையகோவே

மனமெனுந்தோணிபற்றிமதியெனுங்கோலையூன்றிச்
சினமெனுஞ்சரக்கையேற்றிச்செறிகடலோடும்போது
மதனெனும்பாறைதாக்கிமறியும்போதறியவொண்ணா
துனையுனுமுணர்வைநல்காயொற்றியூருடையகோவே.

திருச்சிற்றம்பலம்.

இந்தத் திருப்பதிகத்தி லிவ்விரண்டு தேவாரங்களே யிருக்கின்றன

அங்கிருக்கின்றநாளில் அதற்குச் சமீபத்திலுள்ள சிவஸ்தலங்களை த்தரிசிக்க விரும்பி பார்வதி சமேதராகிய பரமசிவன் வாழாநின்ற திருப்பாசூரென்னுந் தலத்தையடைந்து கடவுளைத் தொழுது "முந்திமூவெயிலெய்த முதல்வனாரென" எடுத்துத் திருக்குறுந்தொகையும் திருத்தாண்டகமும் பாடியருளினார்.

திருப்பாசூர்த் திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

முந்திமூவெயிலெய்தமுதல்வனார், சிந்திப்பார்வினைதீர்த்திடுஞ்செல்வனார்
அந்திக்கோன்றனக்கேயருள்செய்தவப், பந்திச்செஞ்சடைப்பாசூரடிகளே
திரியுமூவெயில்செங்கணையொன்றினா, லெரியவெய்தனரேனுமிலங்கைக்கோ
னெரியவூன்றியிட்டார்விரலொன்றினார், பரியர்நுண்ணியர்பாசூரடிகளே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பாசூர்த் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

விண்ணாகிநிலனாகிவிசும்புமாகி வேலைசூழ்ஞாலத்தார்விரும்புகின்ற
வெண்ணாகியெழுத்தாகியியல்புமாகி யேழுலகுந்தொழுதேத்திக்காணநின்ற
கண்ணாகிமணியாகிக்காட்சியாகிக் காதலித்தங்கடியார்கள்பரவநின்ற
புண்ணாகியின்னமுதம்பாசூர்மேயபரஞ்சுடரைக்கண்டியேனுய்ந்தவாறே.

வேந்தனெடுமுடியுடைய வரக்கர்கோமான் மெல்லியலாளுமைவெருவ விரைந்திட்டோடிச், சாந்தமெனநீறணிந்தான் கயிலைவெற்பைத் தடக்கையாலெடுத்திடலுந் தாளாலூன்றி, யேந்துதிரடிண்டோளுந்தலைகள்பத்துமிறுத்தவன்றனிசைகேட்டே யிரக்கங்கொண்ட, பாந்தாளணிசடைமுடியேனம்பாசூர்மேய பரஞ்சுடரைக் கண்டடியேனுய்ந்தவாறே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு அத்திருப்பதியைவிட்டுநீங்கி அயலிலுள்ள திருப்பதிகளெல்லாம் சென்று வணங்கி உண்மை வழுவாத குடிகள் வாழாநின்றபழையனூரென்னும் திருவாலங்காட்டையடைந்து திருவாலங் காட்டுறையுஞ் செல்வர்தாமெனத் திருத்தாண்டகம் பாடியருளினர்.

திருவாலங்காட்டுத் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்றாயுலகனைத்துமானார்தாமேயூழிதோறூழியுயர்ந்தார்தாமே
நின்றாகியெங்குநிமிர்ந்தார்தாமேநீர்வளிதீயாகாசமானார்தாமே
கொன்றாடுங்கூற்றையுதைத்தார்தாமேகோலப்பழனையுடையார்தாமே
சென்றாடுந்தீர்த்தங்களானார்தாமேதிருவாலங்காட்டுறையுஞ்செல்வர்தாமே

மாலைப்பிறைசென்னிவைத்தார்தாமேவண்கயிலைமாமலையைவந்தியாத
நீலக்கடல்சூழிலங்கைக்கோனைநெரியவிரலாலடர்த்தார்தாமே
பாலொத்தமேனிநிறத்தார்தாமேபழனைப்பதியையுடையார்தாமே
சீலத்தாரேத்துந்திறத்தார்தாமேதிருவாலங்காட்டுறையுஞ்செல்வர்தாமே

திருச்சிற்றம்பலம்.

பின்பு திருக்காரிக்கரை யென்னுந் திருப்பதியை வணங்கிஅப்பாற்சென்று பல திருப்பதிகளையும் பலமலைகளையும் வணங்க விருப்பங்கொண்டு பலகாடுகளைக்கடந்து தென்கைலாயமாகிய திருக்காளத்தியையடைந்து பொன்முகலியென்னுந் திருநதியில் ஸ்நானஞ்செய்து காளத்தியமலையின் அடிவாரத்தில் வீழ்ந்து வணங்கி காளத்திநாதர் வசிக்கின்ற மலையின்மீதேறி வலம்வந்து கடவுளைவணங்கி "யென்கண்ணுள்ளானென்னுங்" திருத்தொண்டக மருளிச்செய்தார்.

திருக்காளத்தித்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

விற்றாணொன்றில்லாத நல்கூர்ந்தான்காண் வியன்கச்சிக்கம்பன்காண் பிச்சையல்லான், மற்றாணொன்றில்லாத மாசதுரன்காண் மயானத்து மைந்தன்காண் மாசொன்றில்லாப், பொற்றாண்காண் மாமணிநற்குன்றொப்பான்காண் பொய்யாதபொழிலேழுந்தாங்கிநின்ற, கற்றூண்காண் காளத்திகாணப்பட்ட கணநாதன்கா ணவனென்கண்ணுள்ளானே.

உண்ணாதவருநஞ்சமுண்டான்றான்கா ணூழித்தீயன்னான்காணுகப்பார்காணப், பண்ணாரம்பல்லியம்பாடினான்காண் பயின்றநால்வேதத்தின் பண்பினான்கா, னண்ணாமலையான்காணடியாரீட்டமணைகள் தொழுதேத்தவருளுவான்காண், கண்ணாரக்காண்பார்க்கோர் காட்சியான்காண் காளத்தியானவ னென்கண்ணுள்ளானே.

திருச்சிற்றம்பலம்.

பின் மலைச்சிகரத்திலெழுந்தருளிய பரமசிவனதுமருங்கில்முன்னே நிற்கும் வில்லைப்பெரிய கையிலேயுடைய கண்ணப்பநாயனருடைய திருவடிகளை வணங்கிச் சிலநாளங்கிருந்து பின் உத்தரகைலாசத்திலே பரமசிவன் வீற்றிருக்கின்ற திருக்கோலத்தைத் தரிசிக்க விரும்பி திருக்காளத்தி மலையினின்றும் நீங்கி உத்தரதிசையி லிருக்கின்ற ஸ்ரீ சைலத்தை அடைந்துவணங்கி திருப்பதிகம் பாடியருளினர்.

திருப்பருப்பதத்திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கன்றினார்புரங்கள்மூன் றுங்கனலெரியாகச்சீறி
நின்றதோருருவந்தன்னானீர்மையுநிறையுங்கொண்டு
ஒன்றியாங்குமையுந்தாமுமூர்ப்பவிதேர்ந்துபின்னும்
பன்றிப்பின்வேடராகிப்பருப்பதநோக்கினாரே.

அடல்விடையூர்தியாசியரக்கன்றோளடரவூன்றிக்
கடலிடைநஞ்சமுண்டகறையணிகண்டனார்தாஞ்
சுடர்விடுமேனிதன்மேற்சுண்ணவெண்ணீறுபூசிப்
படர்சடைமதியஞ்சேர்த்திப்பருப்பதநோக்கினாரே.

திருச்சிற்றம்பலம்

பின்புகாசியை வணங்கிக்கொண்டு அதற்குஅப்பால் இருக்கின்றகற்சுரத்திலே சாகமூலபலங்கள் புதித்தலையும் ஒழிந்து கைலாசதரிசனஞ் செய்யல்வேண்டு மென்னும் அத்தியந்த அபிலாஷையால் இராப்பகல்

விடாதுநடந்தார் அதனால் அவருடையகால்கள் பரடுவரைக்குந்தேய்ந்தன தேய்ந்தும் ஆசைமேலீட்டினால் தம்முடைய இரண்டு கைகளையும் ஆதரவாகக்கொண்டு தாவிச்சென்றார். அந்தக்கைகளும் மணிக்கட்டு அசைந்து கரைந்து சிதைந்தன பின்னும் ஆசைசிறிதும் குன்றுதலின்றி மேலிடுதலால் கொடியநெருப்பையொத்த வெவ்விய பருக்கைக் கற்கள் பொருந்திய மார்க்கத்தில் மார்பினால் நகர்ந்துபோயினார் மார்பும் தசை நைந்து சிந்த எலும்புகளும் முறியலுற்றன பின் புரண்டுபுரண்டு போயினார் அதனால் தேகம்முழுதும் அரைய நாயனார் கைலாசகிரியினிடத்தே பதிந்த அன்பின் உறுதியினால் மெல்ல நகருதற்குமுயன்றும் கூடாமையால் வழியிலேகிடந்தார் அப்பொழுது பரமசிவன் அப்பமூர்த்தியை மீளவும் தமிழ்நாட்டிற் செலுத்தி அந்நாட்டிலுள்ளோர் உய்யும்பொருட்டுத் தமிழ்வேதமாகிய தேவாரம் பாடுவித்தற்கும், அவ்வப்பமூர்த்தியுடைய கருத்தையும் மாறின்றி முடித்தற்கும், திருவுளங்கொண்டு அவ்விடத்தில் ஒரு தடாகத்தை உண்டாக்கி, ஒரு முனிவர் வடிவங்கொண்டு அந்நாயனாருக்கு முன்வந்து நின்று நீர் அங்கங்கள் எல்லாம் அழிந்துபோக வருத்தத்தோடு இந்தக்கொடிய காட்டில் எதன்பொருட்டுவந்தீரென்று கேட்டார்.

அப்பமூர்த்தி மரவுரியாடையையும் யஞ்ஞோபவீதத்தையும் விபூதியையும் உடைய அந்த முனிவரைக்கண்டபொழுதே பேசுதற்கு அற்பசக்தியுண்டாக அவரைநோக்கி, முனிவரே நமது கடவுளாகிய பரமசிவன் உத்தர கைலாயத்திலே உமாதேவி சமேதராய் வீற்றிருக்கின்ற கோலத்தைத் தரிசித்து வணங்கும்பொருட்டு விரும்பிவந்தேன் என்றார் அதற்கு முனிவர், தேவர்களாலும் அடையப் படுதற்கு அறியதாகிய ஸ்ரீமத் கைலாசகிரி மனிதர்களால் அடையப்படுதற்கு எளியதா நீர்இந்தக் கொடுஞ் சுரத்திலே வந்து என்செய்தீர் இனித்திரும்பிவிடுதலே உத்தமம் என்றார், உடனே அப்பமூர்த்தி கைலாசகிரியிலிருக்கின்ற சுவாமியுடைய திருக்கோலத்தைத் தரிசித்தன்றி அநித்யமாகிய இந்தத் தேகத்தைக்கொண்டு திரும்பேன் என்று மறுத்தார். சுவாமி அவருடைய துணிவைக்கண்டு மறைந்தருளி, ஆகாயத்தில் அசரீரியாகிநின்று நாவுக்கரசனே எழுந்திரு என்றார் உடனே அப்பமூர்த்தி அழிந்த உறுப்புக்கள் எல்லாம் முன்போல நிரம்பப்பெற்றுச் சிறந்ததேகத்தோடும் எழுந்து சுவாமீ தேவரீர் கைலாசகிரியிலிருக்கின்ற திருக்கோலத்தை அடியேன் தரிசித்துவணங்கும் பொருட்டு அருள்செய்யும் என்று பிரார்த்தித்து நமஸ்காரம் பண்ணினார். அப்பொழுது பரமசிவன் நீ இந்தத் தடாகத்திலே முழுகித் திருவையாற்றை அடைந்து நம்மைக் கைலாசகிரியில் வீற்றிருந்தபடி அந்த ஸ்தலத்திலே தரிசித்து வணங்கு என்று பணிந்தார் அப்பமூர்த்தி அப்பணியைச் சிரமேற்கொண்டு ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதி தடாகத்திலேமுழுகி திருவையாற்றி லிருக்கின்ற ஓர் வாவியி

ன்மேலே தோன்றிக் கரையிலேறி வழியிலே அந்தத் திருப்பதியிலுள்ள சராசரங்கள் தங்கள் தங்கள் துணையோடும் பொலிதலைக் கண்டு அவைகளைச் சிவமும் சத்தியுமாகப்பார்த்து வணங்கிக் கொண்டு, ஆலயத்திற்கு முன்னே சென்றார். அவ்வாலயம் கைலாசகிரியாக, அதனிடத்தே வேதங்களும் சிவாகமங்களும் இருபக்கத்திலும் வாழ்த்தவும் தும்புரு நாரதரென்னும் இருவரும் யாழ்வாசிக்கவும், பிரமவிஷ்ணுக்களிருவரும் வஸ்திரத்தை ஒதுக்கி வாயைக்கையினாலே பொத்திக்கொண்டு ஒதுங்கி நின்று தத்தங் குறைகளைச்சொல்லவும் பூதகணங்கள் கடைதோறும்காக்கவும் தேவர் சித்தர் அசுரர் சாரணர் காந்தருவர் கின்னரர் இயக்கர் விஞ்சையர் முதலாகிய கணத்தவர்கள் துதிக்கவும் நந்திகேசுரர் கையிலே பிரம்பைத் தரித்துக்கொண்டு பணிசெய்யவும், காருண்ய ஸ்வரூபியாகிய பரமசிவன் ஒரு திவ்யாசனத்தின்மேலே அநந்தகோடி சூரியப்பிரகாசத்தோடும் பார்வதி சமேதராய் வீற்றிருந்தருளினார் அப்படி இருத்தலை அப்பமூர்த்தி கண்டமாத்திரத்திலே விழுந்து நமஸ்கரித்து உறைதடுமாற உரோமஞ் சிலிர்ப்ப ஆனந்த அருவிசொரிய கரையிறந்த அருட்பெருங் கடலிலே அன்புநதி ஈர்த்துச்செல்ல மிதந்துபோய்தெவிட்டுதலில்லாத பிரமாணுதீதமாகிய சிவானந்தாமிர்தத்தைப் பருகி சந்நிதானத்திலே ஆனந்தக் கூத்தாடித் திருத்தாண்டகங்கள் பாடினார் கைலாசபதியாகிய கடவுள் தம்முடைய திருக்கோலத்தை இப்படிஅப்பமூர்த்திக்குத் தரிசிப்பித்து பின்மறைந்தருள அவ்வப்பமூர்த்தி மனம்வருந்தி பின் ஒருவாறுதெளிந்து திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு அந்தத் திருப்பதியில் இருந்தார்.

திருவையாறு-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரார்திரிபுரங்கணீறுநோக்குமனலாடியாரமுதேயென்றேனானே
கூரார்மழுவாட்படையென்றேந்திக்குறட்பூதப்பல்படையாயென்றேனானே
பேராயிரமுடையாயென்றேனானேபிறைசூடும்பிஞ்ஞகனேயென்றேனானே
யாராவமுதேயெணையாறனேயென்றென்றேநானரற்றிநைகின்றேனே.

வில்லாடிவேடனேயென்றேனானேவெண்ணீறுமெய்க்கூயென்றேனானே
சொல்லாயசூழலாயென்றேனானேசுலாவாயதொன்னறியேயென்றேனானே
எல்லாமாமென்னுயிரேயென்றேனானேயிலங்கையர்கோன்றோளிறுத்தானென்றே
யல்லாவினைதீர்க்குமையாறனேயென்றென்றேநானரற்றிநைகின்றேனே (னானே

திருச்சிற்றம்பலம்

திருவையாறு-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஓசையொலியெலாமானாய்நீயேயுலகுக்கொருவனாய்நின்றாய்நீயே
வாசமலரெலாமானாய்நீயேமலையான்மருகனாய்நின்றாய்நீயே
பேசப்பிரிதுமினியாய்நீயேபிரானாயடியென்மேல்வைத்தாய்நீயே
தேசவிளக்கெலாமானாய்நீயேதிருவையாரகலாதசெம்பொற்சோதி

ஆருமறியாவிடத்தாய்நீயேயாகாசந்தேருரவல்லாய்நீயே
பேரும்பெரியவிலங்கைவேந்தனபெரியமுடிபத்திறுத்தாய்நீயே
யூரும்புரமூன்றுமட்டாய்நீயேயொண்டாமறையானுமாலுங்கூடித்
தேருமடியென்மேல்வைத்தாய்நீயே திருவையாறகலாதசெம்பொற்சோதி

திருச்சிற்றம்பலம்.

அவ்வாறுதிருநாவுக்கரசுசுவாமிகள் ஆனந்தமடையகைலாயத்தில் பார்திதியோடும் எழுந்தருளிய திருக்கோலத்தை திருவையாற்றில்பரமசிவன் வீற்றிருந்து தரிசனைகொடுத்து மறைய வாகீசருந்தரிசித்துஆண்டவனது திருவருளிதுவோ வென்று பரவசமடைந்து தாம்கண்டதிருக்கோலத்தைக் கண்டேனெனப் பாடியருளினர்.

திருவையாறு-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்,

மாதர்ப்பிறைக்கண்ணியானைமலையான்மகளோடும்பாடிப்
போதொடுநீர்சுமந்தேத்திப்புகுவாரவர்பின்புகுவே
னியாதுஞ்சுவடுபடாமலையாறடைகின்றபோது
காதன்மடப்பிடியோடுங்களிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன்

வளர்மதிக்கண்ணியினானைவார்குழலாலொடும்பாடிக்
களவுபடாததோர்காலங்காண்பான்கடைக்கணிக்கின்றே
னளவுபடாதரோரன்போடையாறடைகின்றபோ
இளமணநாகுதழுவியேனுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன்.

திருச்சிற்றம்பலம்

பின்பு திருநாவுக்கரசு சுவாமிகள் திருவையாற்றி லெழுந்தருளிய கடவுளைத் தரிசித்து வணங்கித் துதித்து துறுந்தொகை நேரிசை விருத்தம் திருத்தாண்டகமுதலிய பதிகங்களைப்பாடிக்கொண்டு திருத்தொண்டுசெய்து அங்கு சிலநாளமர்ந்திருந்தனர்.

திருவையாறு-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்

சிந்தைவாய்கலுளான்வந்துசீரியன், பொந்துவார்புலால்வெண்டலைக்கையினன்
முந்தியாயதொர்மூவிலைவேல்பிடித், தந்திவாயதோர்பாம்பரையாறரே.

அரக்கின்மேனியனந்தளிர்மேனிய,வரக்கின்சேவடியாளஞ்சலஞ்சலென்
றரக்கனீரைந்துவாயுமலறவே, யரக்கினனடியாலுமையாறனே.

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சிந்தைவண்ணத்தராய்த்திறம்பாவண, முந்திவண்ணத்தராய்முழுநீறணி
சந்திவண்ணத்தராய்த்தழல்போல்வதோரந்திவண்ணமுமாவரையாறரே

எடுத்தவாளரக்கன்றிறல்வண்ணமு, மிடர்க்கள்போற்பெரிதாகியவண்ணமுங்
கடுத்தகைந்நரம்பாலிசைவண்ணமு, மடுத்தவண்ணமுமாவரையாறரே.

திருச்சிற்றம்பலம்

திருவையாறு-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கங்கையைச்சடையுள்வைத்தார்கதிர்பொறியரவும்வைத்தார்
திங்களைத்திகழவைத்தார்திசைதிசைதொழவும்வைத்தார்
மங்கையைப்பாகம்வைத்தார் மான்மறிமழுவும்வைத்தா
ரங்கையுளனலும்வைத்தாரையனையாறனாரே.

இரப்பவர்க்கீயவைத்தாரீபவர்க்கருளும்வைத்தார்
கரப்பவர்தங்கட்கெல்லாங்கடுநரகங்கள்வைத்தார்
பரப்புநீர்க்கங்கைதன்னைப்படர்சடைப்பாகம்வைத்தா
ரரக்கனுக்கருளும்வைத்தாரையனையாறனாரே.

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

குண்டனாய்ச்சமணரோடேகூடிநான்கொண்டமாலைத்
துண்டனேசுடர்கள்சோதிதூநெறியாகிநின்ற
வண்டனேயமரரேறேதிருவையாரமர்ந்ததேனே
தொண்டனேன்தொழுதுன்பாதஞ்சொல்லிநான்றிரிகின்றேனே.

அறிவிலாவரக்கனேடியருவரையெடுக்கலுற்று
முறுகினன்முறுக்கங்கண்டுமூதரிவாளனோக்கி
நிறுவினன்சிறுவிரலானெரிந்துபோய்நிலத்தில்வீழ
வறிவினலருள் ‍ள்செய்தான்திருவையாறமர்ந்ததேனே

திருச்சிற்றம்பலம்

திருவையாறு - திருநேரிசை.

திருசிற்றம்பலம்.

தானலாதுலகமில்லைச்சகமலாதடிமையில்லைக்
கானலாலாடலில்லைக்கருதுவார்தங்களுக்கு
வானலாதருளுமில்லைவார்குழல்மங்கையோடு
மானலாலூர்வதில்லையையனையாறனர்க்கே;

மலையலாலிருக்கையில்லைமதித்திடவரக்கன்றன்னைத்
தலையலால்நெரித்ததில்லைத்தடவரைக்கீழடர்த்து
நிலையிலார்புரங்கள்வேவநெருப்பலால்விரித்ததில்லை
யலையினர்பொன்னிமன்னுமையனையாறனர்க்கே.

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு - திருவிருத்தம்.

திருச்சிற்றம் பலம்.

குறுவித்தவாகுற்றநோய்வினைகாட்டிக்குறுவித்தநோ
யுறுவித்தவாவுற்றநோய்வினைதீர்ப்பானுகந்தருளி
யறிவித்தவாறடியேனையையாறனடிமைக்களே
செறிவித்தவாதொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே

கறுத்துமிட்டார்கண்டங்கங்கைச்சரிடைமேற்கரந்தருளி
யிறுத்துமிட்டாரிலங்கைக்கிறைதன்னையிருபதுதோ
ளறுத்துமிட்டாரடியேனையையாறனடிமைக்களே
பொறுத்துமிட்டார்தொண்டனேனை தன்பொன்னடிக்கீழெனையே

திருச்சிற்றம்பலம்

திருவையாறு - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

சிந்திப்பரியனசிந்திப்பவர்க்குச்சிறந்துசெந்தேன்
முந்திப்பொழிவனமுத்திகொடுப்பனமொய்த்திரண்டு
பந்தித்துநின்றபழவினைதீர்ப்பனபாம்புசுற்றி
யந்திப்பிறையணிந்தாடுமையாறனடித்தலமே

வலியான்றலைபத்துவாய்விட்டலறவரையடர்த்து
மெலியாவலியுடைக்கூற்றையுதைத்ததுவிண்ணோர்கள்முன்னே
பலிசேர்படுகடைபார்த்துப்பன்னாளும்பலிகழ
வலியாநிறநிற்குமையனையாறனடித்தலமே

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

அந்திவட்டத்திங்கட்கண்ணியனையாறமர்ந்துவந்தென்
யுந்திவட்டத்திடைப்புக்குநின்றானையும்பொய்யென்பனோ
சிந்திவட்டச்சடைக்கற்றையலம்பச்சிறிதலர்ந்த
நந்திவட்டத்தொடுகொன்றையளாவியநம்பனையே

பாடகக்கால்கழற்கால்பருதிக்கருதிக்கவந்தி
நாடகக்கானங்கைமுன்செங்கணேனத்தின்பின்னடந்த
காடகக்கால்கணங்கைதொழுங்காலெங்கணாய்நின்றகா
லாடகக்காலரிமான்றேர்வலவனையாற்றனவே.

திருச்சிற்றம்பலம்.

சிலநாட் சென்றபின் திருவையாற்றி னின்றும் நீங்கி நெய்வானம் மழபாடி முதலிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருப்பூந்துருத்தியை அடைந்து சுவாமி தரிசனம்செய்து பதிகங்கள்பாடி அங்கே ஒரு திருமடங்கட்டுவித்துபலவகைத்தாண்டகம், தனித்தாண்டகம், அடைவு திருத்தாண்டகம், திருவங்கமாலை முதலிய திருப்பதிகங்களைப் பாடிக்கொண்டு இருந்தார்.

திருப்பூந்துருத்தித்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

எனக்கென்றுமினியானை யெம்மான்றன்னை யெழிலாருமேகப்பமே யான்றன்னை, மனக்கென்றும்வருவானை வஞ்சர்நெஞ்சிலில்லானை நின்றியூர்மேயான்றன்னைத், தனக்கென்றுமடியேனை யாளாக்கொண்ட சங்கரனைச்சங்கவார் குழையான்றன்னைப், புனக்கொன்றைத்தாரணிந்த புனிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்தி கண்டேனானே.

மறுத்தானைமலைகோத்தங் கெடுத்தான்றன்னை மணிமுடியோடிருபதுதோணெரியக்காலா, லிறுத்தானை மெழுநரம்பினிசைகேட்டானை யெண்டிசைக்குங் கண்ணுனசிரமேலொன்றை, யறுத்தானை யமரர்களுக்கமுதீந்தானை யாவர்க்குந்தாங்கொணுநஞ்சமுண்டு, பொறுத்தானைப் புண்ணியனைப் புனிதன்றன்னைப் பொய்யிலியைப் பூந்துருத்திக்கண்டேனுனே.

திருச்சிற்றம்பலம்

திருப்பூந்துருத்தித் திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கொடிகொள்செல்வவிழாக்குணலையறுக்
கடிகொள்பூம்பொழிற்கச்சியேகம்பனுர்
பொடிகள்பூசியபூந்துருத்திந்நக
ரடிகள்சேவடிக்கீழ்நாமிருப்பதே

துடித்ததோள்வலிவாளரக்கன்றனைப்
பிடித்தகைஞ்ஞெரிந்துற்றனகண்ணெலாம்
பொடிக்கவூன்றியபூந்துருத்திந்நகர்ப்
படிக்கொள்சேவடிக்கீழ்நாமிருப்பதே.

திருச்சிற்றம்பலம்

திருப்பூந்துருத்தி திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாலினைமாலுறநின்ருன்மலைமகடன்னுடைய
பாலனைப்பான்மதிசூடியைப்பண்புணராமதின்மேற்
போலனைப்போர்விடையேறியைப்பூந்துருத்திமகிழும்
ஆலனையாதிபுராணனைநாமடிபோற்றுவதே.

பைக்கையும்பாந்திவிழிக்கையும்பாம்புசடையிடையே
வைக்கையும்வானிழிகங்கையுமங்கைநடுக்குறவே
மொய்க்கையரக்கனையூன்றினன்பூந்துருத்தியுறையு
மிக்கநல்வேதவிகிர்தனைநாமடிபோற்றுவதே.

திருச்சிற்றம்பலம்,

பல்வகைத்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நேர்ந்தொருத்தியொரு பாகத்தடங்கக்கண்டு நிலைதளரவாயிரமாமுகத்தினேடு, பாய்ந்தொருத்தி படர்சடைமேற்பாயக்கண்டு படவரவும்பனிமதியும் வைத்தசெல்வன், தாந்திருத்தித்தம்மனத்தை யொருக்காத்தொண்டர் தனித்தொருதண்டேன்றிமெய் தளராமுன்னம், பூந்துருத்தி பூந்துருத்தி யென்பீராகிற் போல்லாப்புலாற்றுருத்தி போக்கலாமே.

தந்தைதாயாருடன்பிறந்தார் தாரமார்புத்திரரார் தாந்தாமாரே, வந்தவாரெங்ஙனேபோமாறேதா மாயமாமிதற்கேது மகிழவேண்டா, சிந்தை யீருமக்கொன்று சொல்லக்கேண்மின் றிகழரவும் மளர்மதியுந் திளைக்குஞ்சென்னி, யெந்தையார்திருநாம நமச்சிவாயவென்றழூவார்க் கிருவிசும்பி லிருக்கலாமே.

திருச்சிற்றம்பலம்.

தனித்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அப்பனீயம்மைநீயையனுநீயன்புடையமாமனுமாமியுநீ
யொப்புடையமாதருமொண்பொருளுநீயொருகுலமுஞ்சுற்றமுமோரூருநீ
துய்ப்பனவுமுய்ப்பனவுந்தோற்றுவாய்நீ துணையாயென்னெஞ்சத்துரம்பிபாய்நீ
யிப்பொனீயிம்மணிநீயிம்முத்துநீயிறைவநீயேறூர்ந்தசெல்வநீயே

சங்கநிதிபதுமநிதியிரண்டுந்தந்து தரணியொடுவானாளத்தருவரேனு
மங்குவாரவர்செல்வமதிப்போமல்லோமாதேவர்க்கேகாந்தரல்லாராகில்
அங்கமெல்லாங்குறைந்தழுகுதொழுநோயராயாவுரித்துத்தின் றுழலும்புலையரேனுங்
கங்கைவார்சடைக்கரந்தார்க்கன்பராகிலவர்கண்டீர்நாம்வணங்குங்கடவுளாரே.

திருச்சிற்றம்பலம்.

அடைவுதிருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பொருப்பள்ளிவரைவில்லாப் புரமூன்றெய்து புலந்தழியச்சலந்தரனைப்பிளந்தான்பொற்சக், கரப்பள்ளிதிருக்காட்டுப் பள்ளிகள்ளார்கமழ் கொல்லியறைப்பள்ளிநலவஞ்சாரற், சிரப்பள்ளி சிவப்பள்ளி செம்பொன்பள்ளிசெழுநன்னிபள்ளி தவப்பள்ளிசீரார், பரப்பள்ளியென்றென்று பகர்வோரெல்லாம் பரலோகத்தினிதாகப்பலிப்பாரே.

கயிலாயமலையெடுத்த கரங்களோடுஞ் சிரங்களுரநெறியக்கால்விரலாற்செற்றோன், பயில்வாயபராய்த்துறைதென்பாலைத் துறைபண்டெழுவர் தவத்துறைவெண்டுறை பைம்பொழிற், குயிலாலந்துறைசோற்றுத்துறை பூந்துறைபெருந்துறையுங் குரங்காடுதுறையினோடு, பயிலாடுதுறைகடம் பந்துறையாவடுதுறைமற்றுந் துறையனைத்தும் வணங்குவோமே.

திருச்சிற்றம்பலம்.

திருஅங்கமாலை.

திருச்சிற்றம்பலம்.

தலையேநீவணங்காய், தலைமாலைதலைக்கணிந்து
தலையாலேபலிதேருந்தலைவனைத், தலையேநீவணங்காய்.
தேடிக்கண்டுகொண்டேன், திரு-மாலொடுநான்முகனுந் [டேன்.
தேடித்தேடொணாத்தேவனையென்னுளேதேடிக்கண்டுகொண்டே

திருச்சிற்றம்பலம்.

இருக்கும் பொழுது பாண்டிநாட்டிற் சென்று சமணர்களை வாதில்வென்று சைவஸ்தாபனம் பண்ணி பாண்டியராஜனுடைய கூனை நிமிர்த்தருளிய திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அந்நாட்டினின்றும் நீங்கி சோழமண்டலத்தை அடைந்து அப்பமூர்த்தி திருபூந்துருத்தியிலிருத்தலைக் கேள்வியுற்று அதற்குச் சமீபத்திலே வந்தருளினர். அதை அப்பமூர்த்தி அரிந்து மனமகிழ்ந்து அவரை எதிர்கொண்டு வணங்கும்படி சென்று, அவர் வரும் எல்லையை அடைந்து, திருச்சின்னத்தின் ஓசையைக்கேட்டு அவரைத்தரிசிக்கும்படி சூழ்ந்த அடியார்களுடைய நெருக்கத்தினலே தம்மை ஒருவரும் இள்ளுரென்று அறியாதபடி உட்புகுந்து, அவர் ஏறிவரும் முத்துச்சிவிகையைத் தாங்குகின்றவர்களோடு தாமும் ஒருவராய்த் தாங்கிக்கொண்டு வந்தார் திருஞானசம்பந்த மூர்த்தி, திருப்பூந்துருத்திக்கு மிகச்சமீபித்தவுடனே, அப்பர் எங்குற்ருர் என்று வினவ அதைக்கேட்ட அப்பமூர்த்தி அடியேன் தேவரீரைத் தாங்கிவரும்பெருவாழ்வைப்பெற்று இங்குற்றேன்என்ருர். உடனே திருஞானசம்பந்தமூர்த்தி அதிசீக்கிரமாகச் சிவிகையினின்றும் இறங்கி, மனப்பதைப்போடு அப்பமூர்த்தியைவணங்க. இவரும் தம்மை அவர் வணங்குதற்குமுன் தாம் அவரை வணங்க அதுகண்ட அடியார்களெல்லோரும் வணங்கி ஆனந்த கோஷம் செய்தார்கள், திருஞானசம்பந்தமூர்த்தி வாகீசரோடும் திருப்பூந்துருத்தியிற் சென்று சுவாமி தரிசனம் செய்து கொண்டு இருந்தார், திருஞான சம்பந்த மூர்த்தி தாம் பாண்டிந ாட்டிற் சென்று சமணர்களை வாதில் வென்றதையும், பாண்டிய னுடைய கூனை நிமிர்த்ததையும், அந்நா டெங்கும் விபூதியை வளர்த்ததையுப், பாண்டிமா தேவியாராகிய, மங்கையர்க்கரசியார் மந்திரியாராகிய குலச்சிறையார் என்கின்ற இருவருடைய பெருமையையும், வாகீசருக்குச் சொல்லியருளினர். வாகீசர் தாம் தொண்டைநாட்டுக்குச் சென்று அங்குள்ள சிவஸ்தலங்களை வணங்கியதைத் திருஞானசம்பந்தமூர்த்திக்கு சொல்லியருளினர்,திருஞானசம்பந்தமூர்த்தி தொண்டைநாட்டுக்கு யாத்திரை செய்ய விரும்பித். திருப்பூந்துருத்தியினின்றும் புறப்பட வாகீசர் பாண்டிநாட்டுக்கு யாத்திரைசெய்ய விரும்பிப் புறப்பட்டு, அப்பாண்டிநாட்டையடைந்து திருப்புத்தூரை வணங்கிக்கொண்டு மதுரையிற்சென்று சுவாமி தரிசனம்செய்து "முளைத்தானை" யென்றெடுத்துதிருத்தாண்டகமும், திருநேரிசையும் பாடியருளிபாண்டிமாதேவியாரும் கூனிமிர்ந்த பாண்டியரும் குலச்சிறையாரும் வணங்கித் துதிக்கச் சிலநாள் அங்கிருந்தார்.

திருவாலவாய்த் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மூளைத்தானையெல்லார்க்குமுன்னேதோன்றி முதிருஞ்சடைமுடி மேன்முகிழ்வெண்டிங்கள், வளைத்தானைவல்லசுரர் புரங்கள்மூன்றும் வரைசிலையாவாசுகிமா நாணுக்கோத்துத், துளைத்தானைச் சுடுசரத்தாற் றுவளநீறுத் தூமுத்தவெண்முறுவலுமையோடாடித், திளைத்தானைத் தென்கூடற் றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே.

தூர்த்தானைத்தோள்முடி பத்திறுத்தான்றன்னைத் தொன்னரம்பினின்னிசைகேட்டருள் செய்தானை, பார்த்தானைப்பனிகண்டுபரிந்தான்றன்னைப் பரிந்தவற்குப் பாசுபதமீந்தான்றன்னை, யாத்தானையடியேனுக்கன்பன்றன்னை அளவில்லாப் பல்லூழிகண்டுநின்ற, தீர்த்தனைத்தென்கூடற் றிருவாலவாய்ச்சிவனடியே சிந்திக்கப்பெற்றேனானே.

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய்த் திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வேதியாவேதகீதாவிண்ணவரண்ணாவென்றென்
றோதியேமலர்கடூவியொருங்கிநின்கழல்கள்காணப்
பாதியோர்பெண்ணைவைத்தாய்படர்சடைமதியஞ்சூடு
மாதியேயாலவாயிலப்பனேயருள்செய்யாயே.

பொடிக்கொடுபூசிப்பொல்லாக்குரம்பையிற்புந்தியொன்றிப்
பிடித்துநின்றாள்களென்றும்பிதற்றிநானிருக்கமாட்டே
னெடுப்பனென்றிலங்கைக்கோன்வந்தெடுத்தலுமிருபதுதோ
ளடர்த்தனேயாலவாயிலப்பனேயருள்செய்யாயே.

திருச்சிற்றம்பலம்.

பின் மதுரையைநீங்கி, திருப்பூவணம்வந்து ஆலயத்துட்சென்றபோது சுவாமியெதிரில் காட்சிகொடுக்க தரிசித்துவணங்கி "வடிவேறு திரிசூல" மென்னுந்திருத்தாண்டகம் பாடியருளினர்.

திருப்பூவணந் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வடிவேறுதிரிசூலந் தோன்றுந்தோன்றும் வளர்சடைமேவிளமதியுந் தோன்றுந்தோன்றுங், கடியேறுகமழ்கொன்றைக் கண்ணிதோன்றுங் காதில்வெண்குழைதோடு கலந்து தோன்றும், இடியேறுகளிற்றுரிவைப்போர்வைதோன்று மெழிறிகழுந்திருமுடியு நிலவித்தோன்றும், பொடியேறுதிருமேனி பொலிந்துதோன்றும் பொழிறிகழும் பூவணத்தெம்புனிதனார்க்கே.

ஆருருவவுள்குவ ருள்ளத்துள்ளே யவ்வுருவாய் நிற்கின்றவருளுந் தோன்றும், வாருருவப் பூண்முலைநன் மங்கைதன்னை மகிழ்ந்தொருபால் வைத்துகந்த வடிவுந்தோன்று, நீருருவக் கடலிலங்கை யரக்கர்கோனை நெறுநெறென வடர்த்திட்ட நிலையுந்தோன்றும் பேருருவக் கூற்றுதைத்த பொற்புந்தோன்றும் பொழிநிகழும்பூவணத்தெம் புனிதனார்க்கே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு ஸ்ரீராமனுக்குப்பெரும்பாதகந்தீர்த்த கடவுளைத்தொழுதற் குநினைந்து இராமீச்சரத்திற்சென்று சுவாமி தரிசனஞ்செய்து திருநேரிசைகள் முதலானபதிகங்களைப்பாடித்தொண்டுசெய்து அங்குஇருந்தார்

திருவிராமேச்சுரத்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பாசமுங்கழிக்ககில்லாவரக்கரைப்படுத்தேதக்க
வாசமிக்கலர்கள்கொண்டுமதியினால்மால்செய்கோயி
னேசமிக்கன்பினாலேநினைமினீர்நின்றுநாளுந்
தேசமிக்கானிருந்ததிருவிராமேச்சரமே.

வரைகளொத்தேயுயர்ந்தமணிமுடியரக்கர்கோனை
விரையமுற்றறவொடுக்கிமீண்டுமால்செய்தகோயி
றிரைகண்முத்தால்வணங்குந்திருவிராமேச்சரத்தை
யுரைகள்பத்தாலுரைப்பாருள்குவாரன்பினாலே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு திருநெல்வேலி திருக்கானப்பேர்முதலாகிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, சோழமண்டலத்துக்குத் திரும்பிவந்து திருப்புகலூரை அடைந்தார் திருப்புகலூரிலே தினந்தோறும் சுவாமிதரிசனம் பண்ணி, திருமுன்றிலிலே கைத்தொண்டு செய்துகொண்டு இருந்தார். இருக்குநாட்களிலே நின்ற திருத்தாண்டகம் தனித்தாண்டகம்-க்ஷேத்திரக்கோவை-குறைந்ததிருநேரிசை-தனிநேரிசை நினைந்ததிருநேரிசை ஆருயர்த்திருவிருத்தம்-தசபுராணத்தடைவு-பாவநாசப்பதிகம் சக்கரைத்திருவிருத்தம் முதலிய திருப்பதிகங்களைப் பாடியருளினார்.

நின்றதிருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

இருநிலனாய்த்தீயாகிநீருமாகியியமானனாயெறியுங்காற்றுமாகி
யருநிலையதிங்களாய்ஞாயிறாயியாகாசமாயட்டமூர்த்தியாகிப்
பெருநலமுங்குற்றமும்பெண்ணுமாணும்பிறருருவுந்தம்முருவுந்தாமே
நெருநலையாயின்றாகிநாளையாகிநிமிர்புன்சடையடிகணின்றவாறே [யாகி

மாலாகிநான்முகனாய்மாபூதமாய்மருக்கமாயருக்கமாய்மகிழ்வுமாகிப்
பாலாகியெண்டிசைக்குமெல்லையாகிப் பரப்பாகிப்பரலோகந்தானேயாகி
பூலோகபுவலோகசுவலோகமாய்ப்பூதங்களாய்ப்புராணன்றானேயாகி
யேலாதனவெலாமேல்விப்பானாயெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே.

திருச்சிற்றம்பலம்.

தனித்தாண்டகம்,

திருச்சிற்றம்பலம்.

ஆமயந்தீர்த்தடியேனையாளாக்கொண்டா ரதிகைவீரட்டான மாட்சிகொண்டார், தாமரையோன்சிரமறிந்து கையிற்கொண்டார் தலையதனிற்பலிகொண்டார் மானிடங்கொண்டார் வலங்கைமழுவாட்கொண்டார், காமலியுமுடன்கொண்டார் கண்ணால்நோக்கிக் கண்ணப்பர்பாணியுங்கொள் கபாலியாரே.

குராமலரோடராமதியஞ்சடை மேற்கொண்டார் குடமுழநந்தீசனை வாசகனாக்கொண்டார், சிராமலைவஞ்சேர்விடமாத்திருந்தக் கொண்டார் தென்றனெடுந்தேரோனைப் பொன்றக்கண்டார், பராபரனென்பது தமதுபேராக்கொண்டார் பருப்பதங்கைக்கொண்டார்பயங்கள்பண்ணி, இராவணனென்றவனை பேரியும்பக்கொண்டா ரிடருறுநோய் தீர்த்தென்னை யாட்கொண்டாரே

திருச்சிற்றம்பலம்,

க்ஷேத்திரக்கோவை திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைச்சிற்றம்பலமுஞ் செம்பொன்பள்ளிதேவன்குடி சிராப்பள்ளி தெங்கூர், கொல்லிக்குளிரறைப்பள்ளிக் கோவல் வீரட்டங் கோகரணங்கோடிகாவு, முல்லைப்புறவமுருகன்பூண்டி முளையூர்பழையாறைசத்திமுற்றங், கல்லிற்றிகழ்சீரார்காளத்தியுங்கயிலாயநாதனையேகாணலாமே.

புலிவலம்புத்தூர்புகலூ புன்கூர் புறப்பயம்பூவணம் பொய்கைநல்லூர், வலிவலமாற் பேறுவாய்மூர்வை கல்வலஞ் சுழிவாஞ்சியம் மருகல் வன்னி, நிலமலிநெய்த்தானத்தோ டெத்தானத்து நிலபெருங்கோயில் பலகண்டாற்றொண்டர், கலிவலிமிக்கோனைக்கால் விரலாற்செற்றகயிலாயநாதனையே காணலாமே

திருச்சிற்றம்பலம்.

குறைந்ததிருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வென்றிலேன்புலன்களைந்தும் வென்றவர்களாகந்தன்னில்
சென்றிதேனுதலாலே செந்நெறியதற்குச்சேயே
னின்றுளே துளும்புகின்றேனீசனேயோ
வின்றுளேனுளையில்லே னென்செய்வான்றோன்றினேனே.

வெட்டனவுடையனாகிவீரத்தான்மலையெடுத்த
துட்டனைத்துட்டுத்தீர்த்துச்சுவைபடக்கீதங்கேட்ட
வட்டமாமூர்த்தியாயவாதியையோதிநாளு
மெட்டனையெட்டமாட்டேனென்செய்வான்றோன்றினேனே.

திருச்சிற்றம்பலம்.

தனித்திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தம்மானங்காப்பதாகித்தையலர்வலையுளாழ்ந்து
அம்மானையமுதன்றன்னையாதியையந்தமாய
செம்மானவொளிகொண்மேனிச்சிந்தையுளொன்றிநின்ற
வெம்மானைநினையமாட்டேனென்செய்வான்றோன்றினேனே

வளைத்துநின்றவர்களைவர்வந்தெனைநடுக்கஞ்செய்யத்
தலைத்துவைத்துலையையேற்றித்தழலெறிமடுத்தநீரிற்
றிளைத்துநின்றாடுகின்றவாமைபோற்றெளிவிலாத
னிளைத்துநின்றாடுகின்றனென்செய்வான்றோன்றினேனே

திருச்சிற்றம்பலம்.

தனித்திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தொண்டனேன்பட்டதென்னே தூயகாவிரியினன்னீர்
கொண்டிருக்கோதையாட்டிருக்குங்குமக்குழம்புசாத்தி
விண்டைகொண்டேறநூக்கியீசனையெம்பிரானைக்
கண்டனைக்கண்டிராதேகாலத்தைக்கழித்தவாறே.

பெருவிரலிறைதா னூன்றப்பிறையெயிறிலங்கவங்காந்
தருவரையனையதோளானரக்கனன்றலறிவீழ்ந்தா
னிருவருமொருவனுயவுருவமங்குடையவள்ளல்
திருவடிசுமந்துகொண்டுகாணநான்றிரியுமாறே.

திருச்சிற்றம்பலம்.

தனித்திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மருளவாமனத்தனுகிமயங்கினேன்மதியிலாதே
னிருளவாவறுக்குமெந்தையினையடிநீழலென்னு
மருளவாப்பெருதலின்றியஞ்சிநானலமந்தேற்குப்
பொருளவாத்தந்தவாலேபோதுபோய்புலந்ததன்றே.

நடுவிலாக்காலன்வந்துநணுகும்போதறியவொண்ணு
வடுவனவஞ்சுபூதமவைதனக்காற்றலாகே
படுபனவலருங்குற்றம்பாங்கிலாமனிதர்வாழ்க்கைஃ
கெடுவதிப்பிறவிசீசிகிளரொளிச்சடையினீரே.

திருச்சிற்றம்பலம்.

தனித்திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கடும்பகனட்டிமாடிக்கையிலோர்கபாலமேந்தி
யிடும்பலிக்கில்லந்தோறுமுழிதருமிறைவனீரே
னெடும்பொறைமலையர்பாவைநேரிழைநெறிமென்கூந்தர்
கொடுங்குழைபுகுந்தவன்றுங்கோவணமரையதேயோ.

உய்த்தகாலுதையத்தும்பருமையவணடுக்கந்தீரா
வைத்தகாலரக்கனேதன்வான்முடிதனக்குநேர்ந்தான்
மொய்த்தகான்முகில்வேண்டிங்கண்மூர்த்தியென்னுச்சிதன்மேல்
வைத்தகால்வருந்துமென்றுவாடிநானொடுங்கினேனே.

திருச்சிற்றம்பலம்.

ஆருயிர்த்திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டாந்திசைக்குமிருதிசைக்கும்மிறைவாமுறையென்
றிட்டாரமரர்வெம்பூசலெனக்கேட்டெரிவிழியா
வொட்டாக்கயவர்திரிபுரமூன்றையுமோரம்பினு
லட்டானடிகிழற்கீழற்கீழதன்றோவென்றனுருயிரே.

பழகவோரூர்தியானபைங்கட்பாரிடம்பாணிசெய்யக்
குழலுமுழவொடுமாநடமாடியுயரிலங்கைக்
கிழவனிருபதுதோளுமொருவிராலிருத்த
வழகனடிநிழற்கீழதன்றேயென்றனுருயிரே.

திருச்சிற்றம்பலம்.

தசபுராணம் பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

பருவரையொன்றுசுற்றியரவங்கைவிட்டவிமையோரரிந்துபயமாத்
திருநெடுமால்நிறத்தையடுவான்விசும்புசுடுவானெழுந்தவிசைபோய்
பெருகிடமற்றிதற்கோர்பிதிகாரமொன்றையருளாய்பிரானேயெனலு
மருள்கொடுமாவிடத்தையெரியாமலுண்டவவனண்டரண்டரரசே.

கடுகியதேர்செலாதுகயிலாயமீதுகருதேலுன்வீரமொழிநீ
முடுகுவதன்றுதன்மமெனநின்றுபாகன்மொழிவானைநன்றுமுனியா
விரைவிடுவென்றுசென்றுவிரைவுற்றரக்கன்வரையுற்றெடுக்கமுடிதோள்
நெடுநெடுவிற்றுவீழவிரலுற்றபாதநினைவுற்றதென்றன்மனனே.

திருச்சிற்றம்பலம்.

பாவநாசம்-பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

பற்றற்றார்சேர்பழம்பதியைப்பாசூர்நிலாயபவளத்தைச்
சிற்றம்பலத்தெந்திகழ்கனியைத்தீண்டற்கரியதிருவுருவை
வொற்றியூறில்விடுசுடரைவிமலர்கோனைத்திரைசூழ்ந்த
வொற்றியூரெமுத்தமனையுள்ளத்துள்ளேவைத்தேனே.

முந்தித்தானேமுளைத்தானையூரிவெள்ளேறார்ந்தானை
யந்திச்செவ்வானைபடியானையரக்கனாற்றலழித்தானைச்
சிந்தைவெள்ளப்புனலாட்டிச்செஞ்சொன்மாலையடிசேர்த்தி
யெந்தைபெம்மானென்னெம்மானென்பார்பாவநாசமே.

திருச்சிற்றம்பலம்.

சரக்கறைத்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

விடையும்விடைப்பெரும்பாகாவென்விண்ணப்பம்வெம்மழுவாட
படையும்படையாய்நிரைத்தபல்பூதமும்பாய்புலித்தோ
லுடையுமுடைதலைமாலையும்மாலைப்பிறையொதுங்குஞ்
சடையுமிருக்குஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே.

விவந்தாடியகழலெந்தாமென்விண்ணப்பமேலிலங்குந்
தவந்தானெடுக்கத்தலைபத்திறுத்தனை தாழ்புலித்தோல்
சிவந்தாடியபொடிநீறுஞ்சிரமாலைசூடிநின்று
தவந்தானிருக்குஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே.

திருச்சிற்றம்பலம்.

பின் பரமசிவன் அந்நாயனாருடைய வைராக்கியத்தை யாவருக்குங் காட்டுதற்குத் திருவுளங்கொண்டு, அவர் திருமுன்றிலேலிகைத்தொண்டுசெய்யும்பொழுது உழைவாரம் நுழைந்தவிடங்களெங்கும் பொன்னும் நவரத்தினங்களும் பிரகாசித்துக்கிடக்கும்படி அருள்செய்தார், நாயனார் அவைகளைக்கண்டு அவைகளை அங்கேகிடக்கின்ற பருக்கைகற்களோடு சமமாக எண்ணி· உழைவாரத்தில் ஏந்திக்குளத்திலேவிழ எறிந்துவிட்டார்· பின்பு கடவுளுடைய திருவருளினால் அரம்பையர்கள் சுவர்க்கத்தினின்றும் இறங்கிவந்து, நாயனார்முன்னின்று, இசைபாடியும், கூத்தாடியும், அவர்மேற் பூக்களைப் பொழிந்தும், அவரை அணைப்பவர்கள்போலச் சமீபித்தும் அளகம் அவிழ இடைநுடங்க ஓடியும் திரும்பியும், வஸ்திரம் அசைய நின்றும், இப்படி அவரை மோகிப்பித்தற்கு யத்தினம் செய்தார்கள் செய்தும் சிவனுடைய திருவருளையே முன்னிட்டு ஒழுகுகின்ற வாகீசர் தம்முடைய சித்தநிலை சிறிதும் வேறுபடாதபடி, தாம் செய்யுந் திருப்பணியிலே உறுதி கொண்டு இருவினை முதலிய வைகளை முன்னிலைப் படுத்தி நான் திருவாரூரில் வீற்றிருக்கின்ற சுவாமிக்கு ஆளானேன்· உங்களாலே நான் ஆட்டுண்ணேன் நீக்கள் என்னை அலையன்மின் என்னுங்கருத்தால் "பொய்மாயப் பெருங்கடலுள்" என்னுந் திருத்தாண்டகத்தைப் பாடியருளினார்·

திருவாரூர்த்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பொய்ம்மாயம்பெருங்கடலிற் புலம்பாநின்றபுண்ணியங்கா டிவினைகாள்திருவேசேங்க, ளிம்மாயம்பெருங்கடலைபரித்துத்தின் பீர்க்கில்லையே கிடந்ததுயானேல்வானோர் தம்மானைத்தலைமகனைத் தண்ணலாரூர்த்தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கக்செய்யு, மெம்மான்றனடித் தொடர்வானுழதாகின்றே னிடையிலேன்கெடுவீர்காளிடறேன்மின்னே.

சுருக்கமொடுபெருக்கநிலை நிற்றல்பற்றித் துப்பறையென்றனை வீரிவ்வுலகையோடிச், செருக்கிமிகைசெலுத்தியுஞ்செய்கைவைகல் செய்கின்றீர்க்கமையாதேயானேன்மிக்க தருக்கிமிகவரை யெடுத்தவரக்கனுகந்தளரவடியெடுத்தவன்றன்பாடல்கேட், டிரக்கமெழுந்தருளிய வெம்பெருமான் பாதத்திடையிலேகெடுவீர்காளிடறேன்மின்னே.

திருச்சிற்றம்பலம்.



பின்பு அரம்பையர்கள் தங்கள் கருத்து முற்றுமையால் அவரை நமஸ்கரித்துக்கொண்டு போய்விட்டார்கள், இந்த நிலைமையைச்சமஸ்த லோகத்தார்களும் அறிந்து துதிக்கலுற்றார்கள், வாகீசர் புகலூரரர் என்னை இனிச்சேவடிக்கீழிருத்திடும் என்று எழுகின்ற பூர்வஞானத்தினால் திருவிருத்தங்கள் பலவற்றைப்பாடி ஒரு சித்திரைமாசத்திலே சதயநட்சத்திரத்திலே "உன்னடிக்கேபோதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்னுந் திருத்தாண்டகத்தைச் சொல்லிச் சிவனுடைய திருவடியை அடைந்தார்.

திருப்புகலூர் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

எண்ணுகேனென் சொல்லியெண்ணுகேனோ வெம்பெருமான்றிருவடியே யெண்ணினல்லாற், கண்ணிலேன்மற்றோர்களை கண்ணில்லேன் கழலடியே கைதொழுதுகாணினல்லா, லொண்ணுளேயொன்பதுவாசல்வைத்தா யொக்கவடைக்கும்போ துணரமாட்டேன், புண்ணியனே யுன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவிய புண்ணியனே.

ஒருவனையுமல்லா துணராதுள்ள முணர்ச்சித்தடமொற்றத்துள்ளே நின்ற, விருவரையுமூவரையுமென்மேலேவி யில்லாததவாறுத்தாய்க்கில்லேனேலக், கருவரைசூழ்கானலிலங்கை வேந்தன் கடுந்தேர்மீதோடாமைக்காலாற்செற்ற பொருவரையா யுன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவிய புண்ணியனே.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

இருபத்துமூன்றாவது,

குலச்சிறை நாயனார் புராணம்.

கோதில்புகழ்தருமணமேற்குடியார் கோவண்குலச்சிறையார் தென்னர்குலவமைச்சர்குன்று, மாதவர்களடிபரவுபரமார்பாண்டி மாதேவியாரருளவான்பயிர்க்குவேலி, காதன்மிகுகவுணியர்கோன் வாதிற்றோற்ற கையரைவையைக் கரைசேர்கழுவிலேற்று, நீதினாலவாய் நிமலர்ச்சேர்ந்தநின்மலனாரென்மலங்கணீக்கினாரே.

பாண்டிநாட்டிலே மணமேற்குடியில் குலச்சிறைநாயனர் என்பவரொருவர் இருந்தார். அவர்விபூதி உருத்திராக்ஷம் தரிக்கின்றவர்களும் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதுகின்றவர்களுமாகிய சிவனடியார்களை உயர்குலம் இழிகுலங்களும் நற்குணம் தீக்குணங்களும் பாராமல் வணங்கித் துதிக்கின்றவர் அவ்வடியார்கள் பலர் கூடிவரினும் ஒருவர்வரினும், அன்பினோடு எதிர்கொண்டு அழைத்துத் திருவமுது செய்விக்கின்றவர் பரமசிவனுடைய திருவடிகளை அனுதினமும் சிந்தித்துத்துதித்து வணங்குகின்றவர், நெடுமாறர் என்னும் பெயருடைய பாண்டியருக்கு முதன்மந்திரி யாராயினவர் அந்தப்பாண்டியருடைய மாதேவியாராகிய மங்கையர்க்கரசியார் செய்கின்ற திருத்தொண்டுக்குத் துணைசெய்கிறவர் கீழ்மக்களாகிய சமணர்களுடைய பொய்ச்சமயத்தைக்கெடுத்து பாண்டிநாடெங்கும் திருநீற்றைவளர்க்கும் பொருட்டு, பரசமயகோளரியாகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய திருவடிகளை வணங்கிய சிறப்பினையுடையவர் வாதிலே அந்நாயனருக்குத்தோற்ற சமணர்களைக் கழுவிலே ஏற்றுவித்தவர்.

உ

சிவமயம்.

இருபத்து நான்காவது

பெருமிழலைக்குறும்பநாயனர்புராணம்.

கொண்டல்பனிவளர்சோலைமிழலைநாட்டுக் கோதில்புகழ்பெருமிழலைக்குறும்பனர்சீ, ரண்டர்பிரானடியவருக்கடியாராகு மாதரவாலணுக்கவன்றெண்டர்க்காளாய், மண்டொழுமெண்டருச்சித்திவாய்ந்துளார்தாம்வன்றெண்டர்வடகயிலைமருவுநாண்மு, னெண்டிகழுமறைமூலநெறியூடேகி யிலங்கொளிசேர்வடகயிலையெய்தினரே.

மிழலைநாட்டிலே பெருமிழலையென்னுமூரிலேசிவபத்தி அடியார்பக்திகளிற்சிறந்தபெருமிழலைக்குறும்பநாயனர்என்பவர் ஒருவர்இருந்தார். அவர்சுந்தரமூர்த்திசுவாமிகளுடையபெருமையைஅறிந்துஅவருடையதிருவடிகளை மனம்வாக்குக்காயங்களினலேசிந்தித்துத்துதித்துவணங்குதலே பரமசிவனுடைய திருவடிகளை அடைதற்கு உரியநெறியென்று





அப்படிச்செய்துவந்தார் அதனால் அவர், அணிமா, மகிமா, இலகிமா, கரிமாபிராத்தி, யிராகாமியம், ஈசத்துவம் வகித்துவம் என்கின்ற அஷ்டமகாசித்திகளையும் அடைந்தார். அடைந்து, ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஜபித்துவந்தார் இப்படி நிகழுங்காலத்திலே திருவஞ்சைக்களத்திற்சென்று திருப்பதிகம்பாடும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பரமசிவனுடைய திருவருளினாலே உத்தரகைலாசத்தை அடையும் வாழ்வு கிடைப்பதைத் தம்முடைய ஊரிலிருந்துகொண்டே யோகப்பிரத்தியட்சத்தால் அறிந்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் உத்தரகைலாசத்தை நாளைக்கு அடைய நான் பிரிந்து இங்கேவாழமாட்டேன் என்றுநினைந்து இன்றைக்குயோகத்தினாலே சிவனுடையதிருவடியை அடைவேன் என்று துணிந்து யோகமுயற்சியினால் உடலினின்றும்பிரிந்து, திருக்கைலாசத்தில் வீற்றிருக்கின்ற சிவனுடைய திருவடியை அடைந்தார்.

உ

சிவமயம்

இருபத்தைந்தாவது

காரைக்காலம்மையார் புராணம்.

தங்குபுகழ்க்காரைக்கால்வணிகன்மிக்கதனதத்தன் றரும்புநிதவதியார்மாவின்
செங்கனிகடிருவருளாலழைப்பக்கண்டுதிகழ்கணவனதிசயித்துத்தேசநீங்க
வங்கவுடலிழந்துமுடிநடையாலேரியம்மையேயெனநாதனப்பாவென்று
பொங்குவடகயிலைபணிந்தாலங்காட்டிற்புநிதனடமநவரதம்போற்றினரே.

காரைக்காலிலே வைசியர்குலத்திலே தனதத்தன் என்பவன் ஒருவன் இருந்தான். அவனுக்குப்புநிதவதியார் என்கின்ற ஒரு புத்திரியார் பிறந்தார் அத்தனதத்தன் அப்புத்திரியாரை நாகபட்டணத்தில் நிதிபதி என்பவனுடைய புத்திரனாகிய பரமதத்தனுக்கு விவாகஞ் செய்து கொடுத்து, தனக்கு வேறுபிள்ளை இன்மையால் அவரை நாகபட்டணத்திற்குப் போகவிடாமல் தன்னுடைய வீட்டுக்கு அருகிலே ஒருவீடுகட்டுவித்து அளவிறந்த திரவியங்களையும் கொடுத்து, கணவனோடும் அதிலிருத்தினான் பரமதத்தன் அந்தச்செல்வத்தை விருத்திசெய்து, இல்லறத்தை ஒழுங்குபெற நடத்திவந்தான் அவன் மனைவியாராகிய புநிதவதியார் பரமசிவனுடைய திருவடிகளிலே அன்பு மேன்மேலும்பெருக

இல்லறத்திற்கு வேண்டுவனவற்றை வழுவாதுசெய்வாராயினர் தம்முடைய வீட்டுக்குச் சிவனடியார்கள் வரின் அவர்களுக்கு அமுது ஊட்டி, அவரவர் வேண்டியபடி பொன் இரத்தினம்-வஸ்திரம் முதலாயின உதவுவார் இப்படி நிகழுங்காலத்தில் ஒருநாள் பரமதத்தனிடத்திற் காரியமூலமாக வந்தவர்கள் சிலர் அவனுக்கு இரண்டு மாம்பழம்கொடுக்க அவன் அவைகளை வாங்கிக்கொண்டு அவர்கள் கருத்தைமுடித்து அவைகளை மனைவியாரிடத்திற்கு அனுப்பிவிட்டான், மனைவியார் அவைகளை வாங்கிவைத்தபின்பு சிவனடியார் ஒருவர் பசியினால் வருந்தி, அவர் வீட்டிற் சென்றார். புனிதவதியார் அவ்வடியருடைய நிலையைக் கண்டு கலத்தைவைத்துச் சோறுபடைத்து அந்நேரத்திலே கறியமுது பாகம் பண்ணப்படாமையால் சிவனடியவரே பெறுதற்கு அரியவிருந்தினராய் வந்தபொழுதே இதைப்பார்க்கிலும் பெறவேண்டியபேறு நமக்கு ஒன்றும் இல்லை என்று நினைந்து தம்முடைய கணவன் அனுப்பிய மாம்பழங்கள் இரண்டினுள் ஒன்றை எடுத்துக்கொண்டுவந்து படைத்து அவ்வடியவரை அமுதுசெய்வித்தார். அடியவர்சோற்றை மாங்கனியோடு உண்டு, புனிதவதியாருடைய செய்கையை உவந்துபோயினர் போயினபின் பரமதத்தன் நடுப்பகலிலே வீட்டிற்குவந்து, போசனம்பண்ணும் பொழுது, மனைவியார் எஞ்சியிருந்த மாங்கனியைக்கொண்டு வந்து, கலத்திலே வைத்தார் பரமதத்தன் மாதுரியமுள்ள அந்தக் கனியை உண்டு அதன் இனிய சுவையினாலே திருத்தியடையாமல் மனைவியாரைநோக்கி, மற்றக்கனியையும் கொண்டுவந்துவை என்றான். மனைவியார் கொண்டுவரச் செல்வர்போலப் போய்நின்றுகொண்டு சோதித்து தம்மை விசுவசிக்கின்ற மெய்யன்பர்களுக்கு உற்ற இடத்து உதவும் பரமசிவனுடைய திருவடிகளைத் தியானித்தார். உடனே அக்கடவுளுடைய கருணையினால், அதிமதுரமாகிய ஒரு மாங்கனி அவர் கையில் வந்து இருந்தது, அவர் அதைக் கொண்டுவந்து, கணவனுடைய கலத்திலே இட அவன் அதனை உண்டு அதன் சுவை தேவாமிர்தத்தைப் பார்க்கினும் சிறந்தமையால், இது முன் நான் தந்தமாங்கனியன்று இது மூவுலகங்களினும் பெறுதற்கு அரியது, இதனை நீ எங்கே பெற்றாய் என்றான், மனைவியார் அதைக்கேட்டு, தமக்குத்திருவருள் உதவிய திருத்தை வெளிப்படுத்துவது தகுதி அன்று என்று நினைந்தமையால் நிகழ்ந்ததைச் சொல்லமாட்டாதவரும் கணவனுக்கு உண்மையை மறைத்துக் கூறுதலும் தகுதியன்று என்று நினைந்தமையால், அதனைச் சொல்லாது விடமாட்டாதவருமாய் வருந்திநின்று, பின்நிகழ்ந்தபடி சொல்வதே கடன் என்று துணிந்து. நீர் தந்த கனிகளில், ஒன்றை ஓர் அடியாருக்குக் கொடுத்து விட்டமையால் அதற்கு நான் யாதுசெய்வேன் என்று கவன்று பரமசிவனைத் தியானித்துக்கொண்டு நின்றேன் அவருடைய திருவருளினால் இந்தக்கனி என் கையில்வந்து இருந்தது என்றார். பரமதத்தன் அதை நம்பாதவனாகி, மனைவியரைநோக்கி, இந்தக்கனி சிவனுடைய திருவருளினாலே கிடைத்

ததாயின், இன்னும் ஒருகனி அவருடைய திருவருளினாலே அழைத்துத்தா என்றான், புனிதவதியார் அவ்விடத்தைவிட்டுப்போய் பரமசிவனைத்துதித்து, இன்னும் ஒருகனி தந்தருளீராகில் அடியேனுடைய வார்த்தை பொய்யாய்விடும் என்றுசொல்ல, சுவாமியுடைய திருவருளினாலே ஒரு மாங்கனி அவர்கையில் வந்து இருந்தது, அவர் அதைக் கொண்டுவந்து கணவன் கையிற்கொடுக்க அவன் ஆச்சரியமடைந்து வாங்கினான் வாங்கிய பழத்தைப் பின் காணாதவனாகி மிகுந்த பயங்கொண்டு மனந்தடுமாறி, அப்புனிதவதியாரைத் தெய்வமென நினைந்து அவரைப் பிரிந்து வாழவேண்டும் என்று துணிந்து தன்கருத்தைப் பிறருக்கு வெளிப்படுத்தாமல், அவரோடு தொடர்பின்றி ஒழுகினான் ஒழுகும் நாளிலே, ஒருமரக்கலம் செய்வித்து, தான் செல்லவிரும்பிய தேசத்திலே விரும்பப்படுகின்ற அரும்பண்டங்களை அதனிடத்து நிறையஏற்றி, சுபதினத்திலே சமுத்திரராஜனாகிய வருணனைத் தொழுதுகொண்டு, மாலுமி முதலியரோடும் ஏறி, அத்தேசத்தை அடைந்து வர்த்தகம்செய்து சில நாளாயினபின் மீண்டும், அம்மரக்கலத்தில் ஏறி பாண்டி நாட்டிலுள்ள ஓர்நகரத்தை அடைந்து அங்குள்ள ஒரு வைசியனுடையமகளை விவாகம்செய்துகொண்டு மகா ஐசுவரியத்தோடும் வாழ்ந்து இருந்தான், அவனுக்கு அம்மனைவிவயிற்றிலே ஒரு பெண்குழந்தை பிறந்தது அவன்தான் கூடிவாழ்தற்கு அஞ்சி நீங்கியமனைவியாரைத் தான் தொழும் தெய்வமாகக்கொண்டு அவருடைய புனிதவதியார் என்னும் பெயரையே அந்தப் பெண்ணிற்கு இட்டான். பரமதத்தன் இப்படி [illegible] இருக்க புனிதவதியார் காரைக்காலிலே கற்பினோடு இல்லறத்தை வழுவாது நடத்திக்கொண்டு வந்தார் அவருடைய ஞாதிகள் வர்த்தகத்தின் பொருட்டுச் சென்றபரமதத்தன் பாண்டிநாட்டிலே ஓர்நகரத்திலே செல்வத்தை விருத்திசெய்துகொண்டு வாசஞ்செய்கின்றான் என்று கேள்வியுற்று, அவனிடத்திற் சிலரை அனுப்பி, அவனுடைய நிலையை உணர்ந்து கவலைகூர்ந்து புனிதவதியாரைத் தாமே அவனிடத்திற்கு கொண்டுபோய் விடவேண்டும் என்று நினைந்து, சிவிகையில் ஏற்றிக்கொண்டு சென்று அவனிருக்கிற நகரத்திற்குச் சமீபித்து தாம், புனிதவதியாரைக்கொண்டுவந்தமையை அவனுக்கு ஆள்அனுப்பித் தெரிவித்தார்கள், அவன்அதனை அறிந்து அச்சங்கொண்டு, தன்னுடைய இரண்டாம் மனைவியோடும் மகளோடும் புனிதவதியாரிடத்திற்கு வந்து அடியேன் உம்முடைய கருணையினாலே வாழ்கின்றேன் இந்தபெண்ணுக்கு உம்முடைய பெயரையே இட்டேன் என்று சொல்லிக்கொண்டு, அவருடைய பாதங்களிலே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான், உடனே புனிதவதியார் தம்முடைய ஞாதிகளிடத்திலே அச்சத்தோடும ஒதுங்கிநிற்க அவர்கள் வெட்கி, பரமதத்தனை நோக்கி, நீ உன்னுடைய மனைவியை வணங்குவது ஏன் என்றார்கள் அதற்குப் பரமதத்தன் நான் இவரிடத்திலே ஒரு பெரிய அற்புதத்தைக் கண்டபடியால் இவர்தெய்வப் பெண்ணேயன்றி

மானிடப்பெண் அன்று என்றுதுணிந்து இவரைப்பிரிந்தேன் இவரை நான்தொழும் தெய்வம் என்று கொண்டமையால், நான்பெற்ற இந்தக் குழந்தைக்கு இவர் பெயரைத் தரித்தேன் அதுபற்றியே இவருடைய திருவடியையும் வணங்கினேன் நீங்களும் இவரை வணங்குங்கள் என்றான், அதுகேட்ட ஞாதிகள் இதுயென்ன ஆச்சரியம் என்று திகைத்து நின்றார்கள் புனிதவதியார் கணவன் சொல்லிய வார்த்தையைக் கேட்டு பரமசிவனுடைய திருவடிகளைச் சிந்தித்து சுவாமி, இவனுடைய கொள்கை இது இனி இவன்பொருட்டுத் தாங்கிய அழகு தங்கிய தசைப் போதியை நீக்கி தேவரீரைச் சூழ்ந்து நின்று துதிக்கின்ற பேய்வடிவை அடியேனுக்குத் தந்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தார், அந்தக்ஷணத்தே அக்கடவுளுடைய திருவருளினாலே மாமிசம் முழுதையும் உதறி எற்புடம்பாக மண்ணுலகமும் விண்ணுலகமும் வணங்கும் பேய்வடிவமாயினார், அதுகண்டஞாதிகள் எல்லாரும் அஞ்சி அவரை நமஸ்கரித்துக்கொண்டு போய்விட்டார்கள் புனிதவதியார் தமது உள்ளத்திலே சிவசத்தியால் விளக்கப்பட்ட சிற்சத்திக்கொண்டு, அற்புதத்திருவந்தாதியும், திருவிரட்டை மணமாலிகையும் பாடியருளினார்.

அற்புதத்திருவந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

பிறந்துமொழிப்பயின்றபின்னெல்லாங்காதல்
சிறந்துநின்சேவடியேசேர்ந்தே-நிறந்திகழு
மைஞ்ஞான்றகண்டத்துவானோர்பெருமானே
யெஞ்ஞான்றுதீர்ப்பதிடர்.

உரையினாலிம்மாலையந்தாதிவெண்பா
கரவினற்காரைக்காற்பேய்ச்சொற்-பரவுவார்
ஆராதவன்பினோடண்ணலைச்சென்றேற்றுவர்
பேராதகாதல்பிரந்து.

திருச்சிற்றம்பலம்.

திரு இரட்டைமணிமாலை.

திருச்சிற்றம்பலம்.

கட்டளைக்கலித்துறை

கிளர்ந்துந்துவெந்துயர்வந்திடும்போதஞ்சிநெஞ்சமென்பாய்
தளர்ந்திங்கிருத்தறவிர்திகண்டாய்தளராதுவந்தி
வளர்ந்துந்துகங்கையும்வானத்திடைவளர்கோட்டுவெள்ளை
யிளந்திங்களுமெருக்கும்மிருக்குஞ்சென்னியீசனுக்கே.

வெண்பா.

உத்தமராய்வாழ்வாருலந்தக்காலுற்றூர்கள்
செத்தமரமடுக்கித்தீயாமுன்-உத்தமனைய்
நீளாழிநஞ்சுண்டநெய்யாடிதன்றிரமே
கேளாழிநேஞ்சேகிளர்ந்து.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமத் கைலாயகிரிக்குப் போகவிரும்பி, புரப்பட்டு, மனசிலும்பார்க்கமிருந்த வேகத்தோடுசென்று அந்தக் கைலாசகிரியின் பக்கத்தை அடைந்து அங்கேகாலினல் நடத்தல்தகுதி அன்றென்று ஒழிந்து,தலையினலேநடந்துபோய் மலையிலேறினர் ஏறும்பொழுது உமாதேவியார், அதைக்கண்டு எம்போலிகள் புனிதவதியாருடைய திடபத்தியைக்குறித்து உலகமாதாவாகியஉமாதேவியாரே ஆச்சரிம் அடைந்தராயின்நாம் எவ்வளவு ஆச்சரியம் அடைதல்வேண்டும் என்று சிந்திக்கச்செய்யும் பொருட்டுத்தாம் ஆச்சரியமுடையவராகி அவரது பத்திமகிமையை உயர்வொப்பில்லாத பரமசிவனுடைய திருவாக்கினலேயேநமக்கு உணர்த்துவித்து நம்மை உய்விக்கத்திருவுளங்கொண்டு அக்கடவுளை வணங்கிநின்று, சுவாமீஇங்கே தலையினல் நடந்து ஏறி வருகின்ற எற்புடம்பை உடையவரது அன்பின்மகிமை இருந்தபடி என்னென்றுசொல்ல பரமசிவன் இங்கேவருகின்றவள் நம்மைத் துதிக்கின்ற அம்மை என்றறிஇந்தப்பெருமை பொருந்திய வடியத்தையும் வேண்டிப்பெற்றுள் என்றூர். பின்புனிதவதியார் சமீபத்தில் வந்தவுடனே உலகமெல்லாம் உய்யும் பொருட்டு அவரைநோக்கி அம்மையே என்று அழைத்தார், அதுகேட்ட புனிதவதியார் அப்பாஎன்று சொல்லிக்கொண்டு அவருடையதிருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்து எழுந்தார் சுவாமி அவரைநோக்கி உனக்கு வேண்டும்வரம்யாது என்று வினவ புனிதவதியார் வணங்கிநின்று சுவாமீ, அடியேனுக்கு இனிபிரவாமையே வேண்டும் பிறக்கினும் தேவரீரை ஒருகாலமும் மறவாமைவேண்டும் இன்னும் தேவரீர் நிருத்தஞ்செய்யும்பொழுது தேவரீருடைய திருவடியின்கீழ் சிவானந்தத்தை உடையேனுகி தேவரீரைப்பாடிக்கொண்டு இருத்தல் வேண்டும்என்றூர், சுவாமி அவரைநோக்கி நீ தென்றிசையிலுள்ள ஆலங்காட்டிலே நம்முடைய நடனத்தை தரிசித்து பேரானந்தத்தோடு நம்மைப்பாடிக்கொண்டு இருஎன்று அருளிச்செய்தார் அதுகேட்ட காரைக்காலம்மையார் சுவாமியை நமஸ்கரித்து அநுமதி பெற்றுக்கொண்டு திருவாலங்காட்டுக்குத் தலையினல் நடந்துசென்று சுவாமியுடைய திருநடனத்தைத் தரிசித்து "கொங்கைதிரங்கி" என்பதை முதலிலுடைய மூத்ததிருப்பதிகத்தையும் "எட்டியிலவமீகை" என்பதைமுதலிலுடையதிருப்பதிகத்தையும் பாடியருளினர்.

கொங்கைதிரங்கிநரம்பெழுந் துகுண்டுகண்வெண்பற்குழிவயிற்றுப்
பங்கிசிவந்திருபற்கணீண்டுபாடுயநீள்கணைக்காலோர்பெண்பேய்
தங்கியலறியுலறுகாட்டிற்றாழ்சடையெட்டுத்திசையும்வீசி
யங்கங்குளிர்ந்தனலாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே (க)

கள்ளிக்கவட்டிடைக்காலைநீட்டிக்கடைக்கொள்ளிவாங்கிமசித்துமையை
விள்ளவெழுதிவெடுவெடென்னநக்குவெருண்டுவிலங்குகாட்டிற்
றுள்ளித்துடித்துச்சுடுபிணத்தீச்சுட்டிடமுற்றுஞ்சுழிந்துபூழ்தி
யள்ளியவிக்கநின்றாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே (உ)

வாகைவிரிந்துறவெண்ணெற்றொலிப்பமயங்கிருள்கூர்நடுநாளையாங்கே
கூகையோடாண்டலைபாடவாந்தைகோடதன்மேற்குதித்தோடிவீசி
யீகைபடர்தொடர்கள்ளிநீழலீமமிடுசுடுகாட்டகத்தே
யாகங்குளிர்ந்தனலாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே (ங)

குண்டுலோமிக்குழிச்சோற்றைவாங்கிக்குறுநரிதின்னவதனைமுன்னே
கண்டிலோமென்றுகனன்றுபேய்கள்கையடித்தோடிடுங்காடரங்கா
மண்டிலநின்றங்குளாளமிட்டுவாதித்துவீசியெடுத்தபாத
மண்டமுறநிமிர்ந்தாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே (ச)

விழுதுநிணத்தைவிழுக்கியிட்டுவெண்டலைமாலைவிரவிப்பூட்டிக்
கழுதுதன்பிள்ளையைக்காளியென்றுபேரிட்டுச்சீருடைத்தாய்வளர்த்துப்
புழுதிதுடைத்துமுலைகொடுத்துப்போயினதாயைவரவுகாணா
தழுதுறங்கும்புறங்காட்டிலாடுமப்பனிடந்திருவாலங்காடே. (ரு)

பட்டடிநெட்டுகிர்ப்பாறுகாற்பேய்பருந்தொடுகூகைபரண்டையாந்தை
குட்டியிடமுட்டைகூகைபேய்கள்குறுநரிதின்றிணங்காடுகாட்டிற்
பிட்டடித்துப்புறங்காட்டிலிட்டபிணத்தினைப்போகப்புரட்டியாங்கே
யட்டமேபாயநின்றாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே, (சு)

சுழலுமழல்விழிக்கொள்ளிவாய்ப்பேய்சூழ்ந்துதுணங்கையிட்டோடியாடித்
தழலுளெரியும்பிணத்தைவாங்கித்தான்றடிதின்றினங்காடுகாட்டி
கழலொலியோசைச்சிலம்பொலிப்பக்காலுயர்வட்டணையிட்டுநட்ட
மழலுமிழ்ந்தோரிகதிக்கவாடுமப்பனிடந்திருவாலங்காடே (எ)

நாடுநகருந்திரிந்துசென்றுநன்னெறிநாடிநயந்தவரை
மூடிமுதுபிணத்திட்டமாடேமுன்னியபேய்க்கணஞ்சூழச்சூழக்
காடுங்கடலுமலையுமண்ணும்விண்ணுஞ்சுழலவனல்கையேந்தி
யாடுமமரர்புயங்களெங்களப்பனிடந்திருவாலங்காடே (அ)

துத்தங்கைக்கிளைவிளரி தாரமுழையிளியோசைபண்கெழுமப்பாடிச்
சச்சரிகொக்கரை தக்கையோடுதகுணிச்சந்துந்துமிதாளம்வீணை
மத்தளங்கரடிகைமுன்கைமென்றோற்றமருகங்குடமுழாமொந்தைவாசித்
தத்தனைகவினோடாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (௯)

புந்திகலங்கிமதிமயங்கியிறந்தவரைப்புறங்காட்டிலிட்டுச்
சந்தியில்வைத்துக்கடமைசெய்துதக்கவரிட்ட செந்தீவிளக்கா
முந்தியமரர்முழவினோசை திசைகதுவச்சிலம்பார்க்கவார்க்க
வந்தியின்மாநடமாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (௧௦)

ஒப்பிணையில்லவன்பேய்கள்கூடியொன்றினையொன்றடித்தொக்கலித்துப்
பப்பிணையிட்டுப்பரண்டைபாடப்பாடிருந்தந்நரியாழமைப்ப
வப்பனையணிதிருவாலங்காட்டுளடிகளைச்செடிதலைக்காரைக்காற்பேய்
செப்பியசெந்தமிழ்பத்தும்வல்லார்சிவகதிசேர்ந்தின்பமெய்துவாரே.

திருச்சிற்றம்பலம்.

தேவாரம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டியிலவமீகைசூரைகாரைபடர்ந்தெங்குஞ்
சுட்டசுடலைசூழ்ந்தகள்ளிசோர்ந்தகுடர்கவ்வப்
பட்டபிணங்கள்பறந்தகாட்டிற்பறைபோல்விழிகழிகட்பேய்
கொட்டமுழவங்கூளிபாடக்குழகனாடுமே. (௧)

நிணந்தானுருகிநிலந்தானனைப்பநெடும்பற்குழிகட்பேய்
சுணங்கையெறிந்துசூழநோக்கிச்சுடரவித்தெங்கும்
கணங்கள்கூடிப்பிணங்கண்மாந்திக்களித்தமனத்தவா
யணங்குகாட்டிலனல்கையேந்தியழகனாடுமே, (௨)

புட்கள்பொதுத்தபுலால்வெண்டலையைப்புரமேநரிகவ்வ
வட்கென்றழைப்பவாந்தைவீசவருகேசிறுகூகை
யுட்கவிழிக்கவூமன்வெருட்டவோரிகதித்தெங்கும்
பிட்கநக்கம்பேணுமிறைவன்பெயரும்பெருங்காடே. (௩)

செத்தபிணத்தைத்தெளியாதொருபேய்சென்றுவிரல்சுட்டிக்
கத்தியுறுமிக்கனல்விட்டெறிந்துகடக்கப்பாய்ந்துபோய்ப்
பத்தல்வயிற்றைப்பதைக்கமோதிப்பலபேயிரிந்தோடப்
பித்தவேடங்கொண்டுநட்டம்பெருமானாடுமே. (௪)

முள்ளிதீர்ந்துமுளரிகருகிமூளைசொரிந்துக்குக்
கள்ளிவற்றிவெள்ளில்பிறங்குகடுவெங்காட்டுள்ளே
புள்ளியுழைமான்றோலொன்றுடுத்துப்புலித்தோல்பியற்கிட்டுப்
பள்ளியிடமுமதுதேயாகப்பரமனாடுமே. (ரு)

வாளைக்கிளரவளைவாலெயிற்றுவண்ணச்சிறுகூகை
மூளைத்தலையும்பிணமுமிழுங்கிமுரலுமுதுகாட்டிற்
றுளிப்பனையினிலைபோன்மயிர்க்கட்டழல்வாயழல்கட்போய்
கூலிக்கணங்கள்குழலோடியம்பக்குழகனாடுமே. (சு)

நொந்திக்கிடந்தசுடலைதவிநுகரும்புழுக்கின்றிச்
சிந்தித்திருத்தங்குறங்குஞ்சிறுபேய்சிரமப்படுகாட்டின்
முந்திமுழவம்விழவினேயைமுறைமைவழுவாவே
யந்திநிருத்தமனல்கையேந்தியழகனாடுமே. (எ)

வேய்களோங்கிவெண்முத்துதிரவெடிகொள்சுடலையுள்
ஓயுமுருவிலுலறுகூந்தலலறுபகுவாய்ப்
பேய்கள்கூடிப்பிணங்கண்மாந்தியணங்குபெருங்காட்டின்
மாயனாடமலையான்மகளுமருண்டுநோக்குமே. (அ)

கடுவனுகளுங்கழைசூழ்பொதும்பிற்கழுகும்பேயுமா
யிடுவெண்டலையுமீமப்புகையுமெழுந்தபெருங்காட்டிற்
கொடுவெண்மழுவும்பிறையுந்ததும்பக்கொள்ளென்றிசைபாடப்
படுவெண்டுடியும்பறையுங்கறங்கப்பரமனாடுமே. (௯)


குண்டைவயிற்றுக்குறியசிறியநெடியபிறங்கற்பேய்
இண்டுபடர்ந்தவிருள்சூழ்மயானத்தெரிவாயெயிற்றுப்பேய்
கொண்டுகுழவித்தடவிவெருட்டிக்கொள்ளென்றிசைபாட
மிண்டிமிளிர்ந்தசடைகடாழவிமலனாடுமே. (௧௦)

சூடுமதியஞ்சடைமேலுடையர்சுழல்வர்திருநட்ட
மாடுமரவமரையிலார்த்தவடிகளருளாலே
காடுமலிந்தகனல்வாயெயிற்றுக்கரைக்காற்பேய்தன்
பாடல்பத்தும்பாடியாடப்பாவநாசமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

அவர் சுவாமியுடைய தூக்கிய திருவடியின்கீழே சிவானந்தத்தை அனுபவித்துக்கொண்டு எக்காலமும் இருக்கின்றார்.

34



உ

சிவமயம்.

இருபத்தாறாவது,

அப்பூதி நாயனார் புராணம்.

Contemporary and devotee of Appar. His son snake bitten

அந்திமினங்களூர்வருவப்பூதியருமறையோர்திருநாவுக்கரசினுமம்
பந்தரிடையெழுதக்கண்டாசுமெய்தப்பணிந்துபரிகலநேடிப்படப்பைசேர்ந்த
மைந்தனுயிருயர்கதலியிலைமேற்றுஞ்சும்வாளரவுகவரவுடன்மறைத்தல்கேட்டுச்
சிந்தைமகிழ்ந்துயர்பதிகமருந்தாற்றீந்துத்திருவமுதுசெயவருளைச்சேர்ந்துளாரே

சோழமண்டலத்திலே திங்களூரிலே பிராமணர்குலத்திலே, பாவங்கள் என்று சொல்லபட்டவைகள்எல்லாவற்றையும்நீங்கினவரும்புண்ணியங்களென்றுசொல்லப்பட்டவைகள் எல்லாவற்றையும்தாங்கினவரும், கிருகஸ்தாச்சிரமத்தையுடையவரும்சிவபத்திஅடியார்பத்திகளிற்சிறந்தவரும்ஆகிய அப்பூதிநாயனார்என்பவர் ஒருவர் இருந்தார். அவர்சுவானுபூதிமானாகியதிருநாவுக்கரசு சுவாமிகளுடையமகிமையைக்கேள்வியுற்று அவர்மேலே மிக அன்புகூர்ந்து தம்முடையவீட்டினுள்ள அளவைகள் பிள்ளைகள் -பசுக்கள்-எருமைகள் முதலிய எல்லாவற்றிற்கும் அந்நாயனாருடைய பெயரையே சொல்லிவருவார் இன்னும் அவர் மேலாசையினாலே திருமடங்கள் தண்ணீர்ப்பந்தர்கள் குளங்கள் நந்தவனங்கள்முதலியவற்றை அந்நாயனார் பெயரினாற் செய்துகாண்டு இருந்தார். இருக்கும் நாளிலே, அத்திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பழனம் என்னும் ஸ்தலத்தைவணங்கிக்கொண்டு, பிறதலங்களையும் வணங்கும் பொருட்டு அந்தத்திங்களூரிருக்குச் சமீபமாகிய வழியே செல்லும்பொழுது ஒரு தண்ணீர்ப்பந்தரை அடைந்து,திருதாவுக்கரசு சுவாமிகள் என்னும்பெயர்எங்கும் எழுதப்பட்டிருத்தலைக் கண்டு,அங்கு நின்றவர்கள் சிலரை நோக்கி இந்தத்தண்ணீர்ப்பந்தரை இப்பெயரிட்டுச் செய்தவர் யாவர் என்றுவினாவ அவர்கள் இப்பந்தரை மாத்திரமன்று இவ்விடத்தெங்கும் உள்ள அறச்சாலைகள் குளங்கள் நந்தவணங்கள் எல்லாவற்றையும் அப்பூதிநாயனார் ரென்பவர் இத்திருநாவுக்கரசு சுவாமிகள் என்னும் பெயராலேயேசெய்தனர் என்றார்கள் அதைத் திருநாவுக்கர சுவாமிகள் கேட்டு இங்ஙனம் செய்தற்குக்காரணம் யாதோ என்றுநினைந்து அவர்களை நோக்கி அவர் எவ்விடத்தில் இருக்கின்றவர் என்றுவினாவ அவர்கள் இவ்வூரவரே இப்பொழுது தான் வீட்டுக்குப் போகின்றார் அவ்வீடும் தூரமன்று சமீபமே என்றார்கள் உடனே, திரு நாவுக்கரசு

சுவாமிகள் அப்பூதி நாயனாருடைய வீட்டுத் தலைகடை வாயிலிற் செல்ல உள்ளிருந்த அப்பூதிநாயனார் சிவனடியார் ஒருவர்வாயிலில் வந்துநிற்கிறார் என்று கேள்வியுற்று விரைந்து சென்று அவருடைய திருவடிகளிலே நமஸ்கரிக்க அவரும் வணங்கினார். அப்பூதிநாயனார் சுவாமீதேவரீர்இவ்விடத்திற்கு எதுபற்றிஎழுந்தருளினீர் என்றுவினவ திருநாவுக்கரசுசுவாமிகள் நாம்திருப்பழனத்தை வணங்கிக்கொண்டுவரும்பொழுது வழியிலே நீர்வைத்த தண்ணீர்ப்பந்தரைக்கண்டு அப்படியே நீர் செய்திருக்கின்ற பிறதருமங்களைக்கேட்டும் உம்மாலே சந்தோஷங் கொண்டு இங்கேவந்தோம் என்று சொல்லி பின்பு சிவனடியார்கள் பொருட்டுநீர்வைத்த தண்ணீர்ப்பந்தலிலே உம்முடைய பெயரை எழுதாது வேறொரு பெயரை எழுதியதற்குக்காரணம் யாது என்று வினவ அப்பூதிநாயனார் நீர்நல் வார்த்தையருளிச் செய்திலீர் பாதர்களாகிய சமணர்களோடுகூடிப்பல்லவ ராஜன்செய்த விக்கினங்கிகளைச்சிவபத்தி வலிமையினாலேஜயித்த பெருந்தொண்டரது திருப்பெயரே வேறொரு பெயர் என்று கோபித்து பின்னும் பரமசிவனுக்குத் திருத்தொண்டு செய்தலாலே இம்மையினும் பிழைக்கலாம் என்பதைஎன்போலும்அறிவிலிகளும் தெளியும்பொருட்டு அருள்புரிந்த திருநாவுக்கரசு சுவாமிகளுடைய திருப்பெயரை நான்எழுதநீர் இந்தக்கொடுஞ்சொலலை நான் கேட்கும்படி சொன்னீர் கற்றூணியைக் கொண்டு கடல்கடந்த அந்த நாயனாருடைய மகிமையை இவ்வுலகத்திலே அறியாதார் யாருளர்நீர்சிவவேடத்தோடு நின்றுஇவ்வார்த்தை பேசினீர்நீர்எங்கேயிருக்கிறவர் சொல்லும் என்றார் திருநாவுக்கரசு சுவாமிகள் அவ்வப்பூதி யடிகளுடைய அன்பை அறிந்து, ஆருகதசமயப் படுகுழியிலேநின்றும் ஏறும் பொருட்டுப்பரமசிவன் சூலைநோயை வருவித்து ஆட்கொள்ளப் பெற்ற உணர்வில்லாத சிறுமையேன்யான் என்று சொன்னார் உடனே அப்பூதிநாயனார், இரண்டுகைகளும் சிரசின்மேலே குவிய,கண்ணீர் சொரிய,உரை தடுமாறஉரோமஞ்சிலிர்ப்ப பூமியிலேவிழுந்து திருநாவுக்கரசு சுவாமிகளுடைய ஸ்ரீபாதாரவிந்தங்களைப் பூண்டார், திருநாவுக்கரசு சுவாமிகள் அப்பூதியடிகளை எதிர்வணங்கி எடுத்தருள அப்பூதியடிகள் மிகக்களிப்படைந்து கூத்தாடினார் பாடினார் சந்தோஷ மேலீட்டினால் செய்வது இன்னது என்று அறியாமல் வீட்டினுள்ளே சென்று மனைவியாருக்கும் பிள்ளைகளுக்கும் பிறபந்துக்களுக்கும் திருநாவுக்கரசு சுவாமிகள்எழுந்தருளிவந்த சந்தோஷசமாசாரத்தைச் சொல்லிஅவர்களை அழைத்துக்கொண்டுவந்துநாயனாரை வணங்கும்படி செய்துஅவரைஉள்ளேஎழுந்தருளிவித்து பாதப்பிரக்ஷாளனஞ்செய்தார் அங்ஙனம் செய்ததீர்த்தத்தைஅவர்கள்எல்லாரும் தங்கள்மேலேதெளித்து உள்ளும்பூரித்தார்கள் நாயனாரை ஆசனத்தில் இருத்தி விதிப்படி அருச்சனை செய்து சுவாமீ தேவரீர் இங்கேதிருவமுது செய்தருளவேண்டும் என்று பிரார்த்திக்க அவரும் அதற்குஉடன்பட்டார் அப்பூதிநாயனார் திருவமுது சமைப்பி

த்து தங்கள் புத்திரராகிய மூத்த திருநாவுக்கரசை வாழைக்குறுத்து அரிந்துக்கொண்டுவரும்பொருட்டு அனுப்ப அவர் விரைந்து தோட்டத்திற்சென்று வாழைக்குறுத்து அரியும்பொழுது, ஒருபாம்பு அவருடைய கையிலே தீண்டி அதனைச் சுற்றிக்கொண்டது அவர் அதை உதறி வீழ்த்து படைப்புடனே அதுபற்றிய வேகத்தினாலே வீழுமுன் கொய்தகுறுத்தை வேகத்தோடு கொண்டோடி வந்துவிஷம்முறையே ஏறித் தலைக்கொண்ட ஏழாம்வேகத்தினாலே பல்லும் கண்ணும் சரீரமும் கருகித் தீய்ந்து உரைகுழறி மயங்கி குறுத்தைத் தாயார் கையில் நீட்டி கீழேவிழுந்து இறந்தார், அதுகண்டு தந்தையாரும் தாயாரும் ஐயோ இதுதெரிந்தால் இனி நாயனார் அமுதுசெய்யாரே, என்று துக்கித்து சவத்தை வீட்டுப்புறத்து முற்றத்தின் ஓர் பக்கத்திலே பாயினால் மறைத்து வைத்துவிட்டு அப்பமூர்த்தியிடத்திற் சென்று சுவாமி எழுந்து வந்து அமுது செய்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். அப்பமூர்த்தி எழுந்து கைகால் சுத்திசெய்து கொண்டு வேறோர் ஆசனத்தில் இருந்து விபூதி தரித்து அப்பூதிநாயனாருக்கும் அவர் மனைவியாருக்கும் விபூதிகொடுத்து புதல்வர்களுக்கும் கொடுக்கும்போது அப்பூதிநாயனாரைநோக்கி நாம் இவர்களுக்கு முன்னே விபூதிசாத்தும்படி உம்முடைய சேட்டபுத்திரரை வருவியும் என்றார். அப்பூதிநாயனார் இப்போது அவன் இங்கே உதவான் என்றார், அப்பமூர்த்தி அதைக் கேட்டவுடனே சிவனுடைய திருவருளினாலே தம்முடைய திருவுள்ளத்திலே ஒரு தடுமாற்றந்தோன்ற அப்பூதிநாயனாரை நோக்கி அவர் என் செய்தான் உண்மை சொல்லும்என்றார். அப்பூதிநாயனார் அஞ்சி நடுக்குற்று வணங்கிநின்று நிகழ்ந்த சமாசாரத்தைச் சொன்னார், அப்பமூர்த்தி அதைகேட்டு நீர்செய்தது நன்றாயிருக்கிறது இப்படிவேறியார் செய்தார், என்றுசொல்லிக் கொண்டு எழுந்துசிவாலயத்துக்கு முன் சென்றுசவத்தை அங்கேகொணர்வித்து விஷத்தை நீக்கியருளும்பொருட்டு பரமசிவன்மேலே திருப்பதிகம்பாடினார், உடனே அப்புத்திரர் உயிர்பெற்று எழுந்து அப்பமூர்த்தியுடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரிக்க அப்பமூர்த்தி விபூதிகொடுத்தருளினார். அப்பூதிநாயனாரும் மனைவியாரும் தங்கள் புத்திரர் பிழைத்தமையைக்கண்டும் அதைக்குறித்துச் சந்தோஷியாமல் நாயனார் அமுதுசெய்யாதிருந்தமையைக் குறித்துச் சிந்தைநொந்தார்கள், அப்பமூர்த்தி அதனை அறிந்து அவர்களோடும் வீட்டிற்சென்று அப்பூதிநாயனாரோடும் அவர் புத்திரரோடும் ஒருங்கிருந்து அமுதுசெய்தருளினார் அப்படியே சிலநாள் அங்கிருந்து பின் திருப்பழனத்திற்குப் போயினார், அப்பூதியடிகள் சைவசமயாசாரியராகிய திருநாவுக்கரசு சுவாமிகளுடைய திருவடிகளைத் துதித்தலேதமக்குப்பெருஞ்செல்வமெனக்கொண்டு வாழ்ந்திருந்து சிலகாலம் சென்றபின், பரமசிவனுடைய திருவடிகளை அடைந்தார்.

உ


சிவமயம்.

இருபத்தேழாவது

திருநீலநக்கநாயனார் புராணம்.

நீதிதரும்மறையோர்வாழ்சாத்தமங்கைநீலநக்கரைவந்திமலர்மேனி
பூதிவிழுஞ்சிலம்பிகடிந்தவளைநீத்தார்க்குமியாதவிடநாதனுறுநோய்காட்ட [அ
காதன்மிகுமனைவியையுமகிழ்ந்துமேவிக்காழியர்கோனமுதுசெய்யக்களித்துவாழ்
வேதிகையிற்பாணனார்க்கிடமுநல்கி விளங்குபெருமணத்தானைமேவினாரே.

சோழமண்டலத்திலே, சாத்தமங்கையிலே பிராமணர் குலத்திலே, திருநீலநக்கநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் வேதத்தின் உள்ளுறையாவது பரமசிவனையும் அவருடைய அடியார்களையும் அன்பினோடு அருச்சித்து வணங்குதலே வன்று துணிந்து, தினந்தோறும் சைவாகமவிதிப்படி சிவார்ச்சனைபண்ணி, சிவபத்தர்களுக்குத் திருவமுது செய்வித்தல் முதலாகிய பலவகைப்பட்ட பணிகளையும்செய்வார். அப்படிச் செய்யும் நாளிலே ஒரு திருவாதிரை நட்சத்திரத்திலே சிவபூசையை முடித்துக்கொண்டு அந்த ஸ்தலத்திலுள்ள ஐவந்திஎன்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற சுவாமியையும் அருச்சிக்கவிரும்பி தம்முடைய மனைவியார் பூசைக்குவேண்டும் உபகரணங்களைக் குறைவறக் கொண்டுவர அவ்வாலயத்திற் சென்று, பூசைபண்ணிப் பிரதக்ஷிணஞ் செய்து சந்நிதானத்திலே நமஸ்கரித்து இருந்துகொண்டு வேதாகமாதி சமஸ்த சாஸ்திரங்களின் உண்மைப்பொருளாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஜபித்தார் ஜபிக்கும்பொழுது ஒரு சிலம்பிபோல நின்று வழுவி சிவலிங்கத்தின்மேல் விழுந்தது அதைச்சமீ த்திலேநின்ற மனைவியார் கண்டு அச்சமடைந்து விரைந்து குழந்தைமேல் விழுஞ்சிலம்பி நீங்கும்படி ஊதித்துமிபவர்போல அன்புமிகுதியினாலே அந்தச்சிலம்பி நீங்கும்படி ஊதித்துமிந்தார் திருநீலநக்கநாயனார் அதைக்கண்டு தம்முடைய கண்ணைப்புதைத்து அறிவில்லாதவளே நீ இப்படிச்செய்ததென் என்று சொல்ல மனைவியார் சிலம்பிவிழுந்தபடியால் ஊதித்துமிந்தேன் என்றார் நாயனார்மனைவியாருடைய அன்பின் செய்கையை நன்குமதியாமல் அது அநுசிதம்என்றுநினைந்து அவரைநோக்கி நீசிவலிங்கத்தின்மேலே விழுந்தசிலம்பியை வேறொருபரிசினாலே நீக்காமல் முற்பட்டுவந்து ஊதித்துமிந்தாய் இந்த அநுசிதத்தைச் செய்த உன்னை நான் இனித்துறந்



தேன் நீங்கிவிடுமென்றார். அப்பொழுது சூரியாஸ்தமனமாயிற்று மனைவியார் நாயகருடைய ஏவலினாலே ஒருவழிநீங்க நாயகர் பூசையை முடித்துக்கொண்டு வீட்டிற்குத் திரும்பிவிட்டார். மனைவியார் அஞ்சுகின்ற உள்ளத்தோடும் அவரிடத்திற் செல்ல மாட்டாதவராகி ஆலயத்தில் இருந்தார். நாயனார் நித்திரை செய்யும்பொழுது பரமசிவன் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி தம்முடைய திருமேனியைக்காட்டி உன் மனைவி மனம்வைத்து ஊதித்துமிந்த இடமொழிய இப்புறம் சிலம்பியின் கொப்புளம் என்று சொல்லியருளினார், நாயனார் அச்சத்துடனே அஞ்சலிசெய்துகொண்டு விழித்து எழுந்து கூத்தாடினார் பாடினார் சிவனுடைய திருவருளை வியந்து நின்று அழுதார், விடிந்தபின் ஆலயத்துக்குப்போய் சுவாமியை நமஸ்கரித்து ஸ்தோத்திரஞ்செய்து மனைவியாரையும் அழைத்துக்கொண்டு வீட்டுக்குத்திரும்பினார், அதற்குப்பின் முன்னிலும்பார்க்க மிகுந்த மகிழ்ச்சியோடு சிவார்ச்சனையையும் மகேசுரபூசையையும் செய்துகொண்டு இருந்தார்.

அப்படி இருக்கும்நாளிலே பரமாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய மகிமையைக் கேள்வியுற்று இவருடைய ஸ்ரீபாதார விந்தங்களைத் தரிசிக்கவேண்டும் என்னும் அத்தியந்த ஆசையையுடையராயினார் அப்படி இருக்கும்பொழுது, திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் ஐவந்திநாதரை வணங்கும்பொருட்டுத் திருக்கூட்டத்தோடும் சாத்தமங்கைக்குவர திருநீலநக்கநாயனார் கேள்வியுற்று மிகுந்த மகிழ்ச்சியோடும் நடைப்பந்தரிட்டு வாழைகளையும் கமுகுகளையும் நாட்டிதோரணங்கள் கட்டி நிறைகுடங்களும் தூபதீபங்களும் வைத்து தம்முடைய ஞாதிகள் சமஸ்தரோடும் அவரை எதிர்கொண்டு நமஸ்கரித்து தம்முடைய வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய் திருவமுது செய்வித்தார். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அன்றிரவிலும் அங்கேதானே திருவமுதுசெய்து திருநீலநக்கநாயனாரை அழைத்து திருநீலகண்டப் பெரும்பாணருக்கும் விறலியாருக்கும் இன்றுதங்குதற்கு ஓரிடங்கொடும் என்று சொல்லியருள திருநீலநக்கநாயனார் வீட்டுக்கு நடுவிலிருக்கின்ற வேதிகையின் பக்கத்திலே அவர்களுக்கு இடம்கொடுத்தார் திருநீலகண்டயாழ்ப்பாணர் அவ்விடத்திலே வேதிகையிலுள்ள நித்தியாக்கினி வலஞ்சுழித்து ஓங்கி முன்னையிலும் சிறந்து பிரகாசித்து வருணமன்று பத்தியேமகிமைதருவது என்பதை விளக்கவும் அதுகண்ட திருநீலநக்கநாயனார் மகிழ்ச்சியடையவும் விரலியாரோடு நித்திரைசெய்தார் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் விடிந்தபின் ஐவந்தியிற்சென்று சுவாமிமேலே திருநீலநக்க நாயனாரைச் சிறப்பித்துத் திருப்பதிகம்பாடி சிலநாள் அங்கிருந்துபின் திருநீலநக்கநாயனாருக்கு விடைகொடுத்து அந்தத் திருப்பதியினின்றும் நீங்கியருளினார் திருநீலநக்கநாயனார் திருஞானசம்பந்தமூர்த்தி மேலேபதிந்த அன்பும் அவருடைய கேண்மையும் அவருக்குப்பின் சொல்லும்படி தம்மை

வலிந்தன வாயினும் தாம் அவருடைய ஆஞ்ஞையை வலியமாட்டாமை யால் அந்தத் திருப்பதியிலே அவருடைய திருவடிகளைத்தியானித்துக் கொண்டிருந்தார். திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் செல்லுந் தலங்களிலே இடைநாட்களிற்சென்று, அவரோடிருந்துபின்திரும்பி விடுவார் இப்படிநெடுநாட் சென்றபின் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய திருமணத்தைச் சேவித்து சிவபதமடைந்தார்.

உ

சிவமயம்.

இருபத்தெட்டாவது

நமிநந்தியடிகணாயனார்புராணம்.

நண்ணுபுகழ்மறையோர் வாழேமப்பேறூர்நமிநந்தியடிகடிருவிளக்குநல்க
வெண்ணெயமணர்கள்விலக்கநீராலாரூரிலங்குமாமெரியாருக்கேற்றுநாளிற்
கண்ணமணர்கெடக்கண்பெற்றடிகள்வாழக் காவலனுனிமிந்தங்கட்டுவித்தே
யண்ணலருள் கண்டாரூரமர்ந்துதொண்டர்க்காணியெனுமரசினருளடைந்துளாரே.

சோழமண்டலத்திலே ஏமப்பேரூரிலே பிராமணர்குலத்திலே பரமசிவனுடைய திருவடிகளை மிகுந்த அன்போடும் ஒழியாத அகோராத்திரம் வழிபடுதலே இன்பமெனக்கொண்ட நமிநந்தியடிகள் என்பவர் ஒருவர் இருந்தார் அவர் பலநாளும் திருவாரூருக்குப்போய் வன்மீகநாதரை வணங்கினார் ஒருநாள் வணங்கிக்கொண்டு புறப்பட்டுத் திருமுன்றிலை அடைந்து பக்கத்தில் இருக்கின்ற அரநெறி என்னும் ஆலயத்துட் புகுந்து சுவாமியை நமஸ்கரித்து அங்கே செய்யவேண்டிய பலதொண்டுகளைச் செய்து இரவிலே அங்கே எண்ணில்லாதீபமேற்றுதற்கு:விரும்பி எழுந்தார் எழுந்தபொழுது மாலைக்காலமாதலைக் கண்டு அப்பாற்செல்லிற்பொழுது செல்லும் என்று நினைந்து சமீபத்திலே ஓர்வீட்டில் அதுசமணர் வீடென்று அறியாமையினாலே புகுந்து சிவாலயத்தில விளக்கேற்றுதற்கு நெய் தாருங்கள் என்றுகேட்டார் அதற்கு அவர்கள் கையிலே சுவாலிக்கின்ற அக்கினியையுடைய பரமசிவனுக்கு விளக்குமிகையன்றோ இங்கே நெய் இல்லை விளக்கெரிப்பீராகில் நீரைமுகந்து எரியும் என்றார்கள் நமிநந்தியடிகள் அந்தச்



சொல்லைப் பொறுதவராகி அப்பொழுதேயிருந்த மனவருத்தத்தோடும் திரும்பிப்போய் சுவாமி சந்நிதானத்திலேவிழுந்து நமஸ்கரித்தார் அப்பொழுது ஆகாயத்திலே நமிநந்தியே நீ உன்னுடைய கவலையைநீக்கி இதற்குச் சமீபத்தில் இருக்கின்ற குளத்தில் நீரைமுகந்து கொண்டு வந்து விளக்கேற்று என்று ஒரு அசரீரிவாக்குத் தோன்றிற்று நமிநந்தியடிகள் அதைக்கேட்டு மனமகிழ்ந்து திருவருளை வியந்துகொண்டெழுந்துபோய் குளத்தில் இறங்கி சிவநாமத்தை உச்சரித்து நீரை முகந்துகொண்டு கோயிலிலேவந்து அகலிலே முறுக்கிய திரியின்மேலே அந்நீரைவார்த்து விளக்கேற்றினார் அது சுடர்விட்டெழுந்தது அதுகண்டு அவ்வாலயம் முழுதிலும் சமணர்கள் எதிரேயிருந்த களிப்புடனேநாடிய நீரினாலே விளக்கெரித்தார் திருவிளக்கு விடியுமளவும் நின்று எரியும்படி குறைகின்ற தகளிகளுக்கெல்லாம் நீர்வார்த்து இரவிலேதானே தம்முடைய ஊருக்குப்போய் சிவார்ச்சனைபண்ணி அமுதுசெய்து நித்திரைகொள்வார் உதையகாலத்திலே பூசையை முடித்துக்கொண்டுதிருவாரூரை அடைந்து அரநெறி என்னும் ஆலயத்திற்சென்று சுவாமி தரிசனம் பண்ணி, பகல்முழுதினும் திருத்தொண்டுகள் செய்து இரவிலே எங்கும் விளக்கேற்றுவார் இப்படி நிகழும் காலத்திலே தண்டியடிகளாலே சமணர்கள் கலக்கம் விளைந்து நாசமடைய திருவாரூர் பெருமையடைந்து விளங்கியது சோழமகாராஜா, நமிநந்தியடிகளை அத்தியட்சராகவன்மீக நாதருக்குவேண்டும் நிமித்தங்கள் பலவற்றையும்வேதாகம விதிவிளங்க அமைத்தான் நமிநந்தியடிகள் வீதிவிடங்கப் பெருமானுக்குப் பங்குனி மாதத்திலே மகோற்சவம் நடத்துவித்தார் நடத்து விக்கும்பொழுது சுவாமி ஒருநாள் திருமணலிக்கு எழுந்தருளசகல சாதியர்களும் ஒருங்குசேவித்துப் போனார்கள் நமிநந்தி யடிகளும் சேவித்துப்போய் அங்கே சுவாமியுடைய திருவோலக்கத்தைக்கண்டு களிப்படைந்தார் பொழுதுபடசுவாமி திரும்பிக்கோயிலிலேபுக நமிநந்தியடிகள் வணங்கிக்கொண்டு, தம்முடைய ஊரைஅடைந்து, வீட்டினுள்ளே புகாமல் புறக்கடையிலே படுக்க, மனைவியார்வந்து உள்ளே எழுந்தருளிச் சிவார்ச்சனையையும் அக்கினி காரியத்தையும் முடித்துக்கொண்டு, பள்ளிகொள்ளும் என்றார், நமிநந்தியடிகள், இன்றைக்குச் சுவாமி திருமணலிக்கு எழுந்தருளியபோது நானும் சேவித்துப்போனேன் சகலசாதியும் கலந்துவந்தபடியால், ஆசௌசமுண்டு ஆதலால், ஸ்நாநம் பண்ணிப் பிராயச்சிதம் செய்துகொண்டே உள்ளேபுகுந்து சிவார்ச்சனையைத் தொடங்கல் வேண்டும் அதற்குநீ ஜலம்முதலாயின கொண்டுவா என்று சொல்ல மனைவியாரும் கொண்டு வரும்பொருட்டு விரைந்துசென்றார் அப்பொழுது நமிநந்தியடிகள் சிறிதுரக்கம்வர, நித்திரை செய்தார். செய்யும்பொழுது, வீதிவிடங்கப் பெருமாள் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி திருவாரூரிலே பிறந்த வர்கள் எல்லாரும் நம்மு

டைய கணங்கள் அதை நீ காண்பாய் என்றுசொல்லி மறைந்தருளினூர் நமிநந்தியடிகள் விழித்தெழுந்து தாம் நினைத்தது குற்றமென்றுகருதி, எழுந்தபடியே சிவார்ச்சனையை முடித்து மனைவியாருக்கு நிகழ்ந்ததைச்சொல்லி, விடிந்தபின் திருவாரூருக்குப்போனூர் போனபொழுது அந்தத்திருப்பதியிலே பிறந்தவர்கள எல்லாரும் சிவசாரூப முள்ளவர்களாய்ப் பிரகாசிக்கக்கண்டு, பூமியிலே விழுந்து நமஸ்கரித்து அவர்கள் அவ்வுருமம் நீங்கி முன்போயினமையையுங்கண்டு, அடியேன்செய்த குற்றத்தைப் பொருத்தருளும் என்று சுவாமியைப் பிரார்த்தித்தார் பின்பு திருவாரூரிலேதானே குடிபுகுந்து தம்முடைய திருத்தொண்டுகளைச் செய்து கொண்டிருந்தார் நெடுங்காலம் சிவனடியார்களுக்கு நியதியாகவேண்டுவன எல்லாவற்றையும் செய்து கொண்டு இருந்தமையால், தொண்டர்களுக்கு ஆணிப்பொன் என்று திருநாவுக்கரசு சுவாமிகளாலே தேவாரப்பதிகத்தாலேசிறப்பித்துப் பாடப்பட்டார். இவர் இந்தப் பிரகாரம் சமஸ்தலோகங்களும் தொழும்படி திருப்பணிகளைச் செய்து கொண்டிருந்து சிவபதத்தை அடைந்தார்.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாவது,

வம்பறாவரிவண்டுச்சருக்கம்

இருபத்தொன்பதாவது

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்புராணம்.

காழிநகர்ச்சிவபாதவிதயர்தந்தகவுணியர்கோனமுதுமையாள்கருதியூட்டு
மேழிசையினமுதுண்டுதாளம்வாங்கியிலங்கியர்த்திலச்சிவிகையிசையவேறி
வாழுமுயலகனகற்றிப்பந்தரேய்ந்துவளர்கிழிபெற்றரவின்விடமருகர்நீர்த்து
வீழிநகர்க்காசெய்திமறைக்கதவம்பிணித்துமீனவன்மேனியின்வெப்புவிடுவித்தாரே

ஆரெரியிட்டேடுத்தவேடவைமுன்னேற்றியாற்றிலிடுமேடெதிர்போயணையவேற்றி
யோரமணரொழியமேகழுவிலேற்றியோதுதிருப்பதிகத்தாலோடமேற்றிக்
காருதவமிடிபுத்தன்றலையிலேற்றிக்காயாதபனையின்முதுகனிகளேற்றி
யீரமிலாவங்கமுயிரெய்தவேற்றியிலங்குபெருமணத்தானையெய்தினரே.

சோழமண்டலத்திலே பிரமபுரம், வேணுபுரம், புகலிவெங்குரு, தோணிபுரம், பூந்தராய் சிரபுரம், புறவம், சண்பை, சீர்காழிகொச்சை, வயம், கழுமலம் என்கின்ற பன்னிரண்டு திருப்பெயரையுடைய சிவஸ்தலத்திலே பிராமணர்குலத்திலே, வேதங்களிலே மகா பாண்டியத்தியமுடைய கௌணியர் கோத்திரத்திலே, சிவபாதவிருதயர் என்பவர் ஒருவர் இருந்தார் அவர்மனைவியார் கற்பிலேதமக்கு உயர்வொப்பில்லாத பகவதியாரென்பவர் அவ்விருவருடைய தாய்மரபு தந்தைமரபு என்னும் இருமரபும் சைவநெறி வழிவந்தனவேயாம் அவர்கள் அநாதிமலமுத்தபதியாகிய பரமசிவனையே] யன்றி, அவிவேகிகளாலே பதிகளெனத்திரித்துணரப்பட்ட பசுக்களைத்தெய்வமென்று கருதாத மெய்யறிவினையும், உண்மாசை நீக்கும் பெருமையையுடைய தென்று வேதத்தின் உட்பொருளாகிய உபநிடதங்களிலே துணிந்து அறுதியிடப்பட்ட அருமருந்தாகிய விபூதிமேல்வைத்த பேரன்பைப்பரிபாலிக்குந் தன்மையையும், உடையவர்களாகி, இல்லறத்திலே சிறந்து வாழ்ந்திருந்தார்கள். அப்படியிருக்கும்பொழுது சீவகாருண்ணியமேதிரண்டு ஒரு வடி

வு எடுத்தாற்போல விளங்குகின்ற சிவபாதவிருதயர் தமிழ்நாடெங்கும் சமணரும் பௌத்தருமாகிய இவ்விருவகைப்பதிதர்கள் போதிக்கும் அசத்திய போதன சக்தியினாலே அவர்கள் அநுசரிக்கின்ற கபடமார்க்கமாகிய ஆருகதமும் பௌத்தமுமேபெருக, பரமாப்தராகிய அநாதிமலமுத்த பதிவாக்காயுள்ள வேதாகமொத்த சற்சமயமாகிய சைவசமயம் அருகி, விபூதி சாதனவிளக்கம் குன்றுதலைக்கண்டு கவலைக்கொண்டு நிகழ்காலத்தும் எதிர்காலத்தும் உள்ள சர்வான்மாக்களும் உய்தல் வேண்டுமென்பதைத் திருவுளத்தடைந்து ஒருதிவ்ய புத்திரரைப் பெறல்வேண்டுமென்னும் ஆசையினாலே, இல்லறத்திலிருந்துகொண்டே சர்வாபீஷ்டவரதராகிய தோணியப்பரையும்நோக்கி, பெரியநாயகியாரையும் பரசமயநிராகரணம் பண்ணிச்சைவசமய ஸ்தாபனம் செய்யவல்ல சபாதிகரகிதராகிய ஒரு திவ்யபுத்திரரைப் பெறும்படி, மிகுந்த அன்பினோடு தவஞ்செய்தார் அங்ஙனஞ்செய்த தபோபலம்பற்றி தோணியப்பருடைய பெருங்கருணையினாலே, உலகமெல்லாம் உய்யும்படி பகவதியாருடைய அருமைத்திருவயிற்றிலே கர்ப்போர்பத்தியாகிய பெரும்பேறு உளதாயிற்று. சிவபாதவிருதயர் அதனை உணர்ந்து திருவருளைத் துதித்துமூளுகின்ற மகிழ்ச்சியோடுதெங்கள் வேதவிதிப்படி செய்யவேண்டும் சடங்குகளைப் பத்துமாசங்களினும் ஞாதிகளோடு சிறக்கச்செய்து பேரின்பத்தை நுகரும்நாளிலே சூரியன்முதலிய கிரகங்கள் அனைத்தும் உச்சங்களிலே மிக்கவலியுடன்நிற்ற திவ்யலக்கினம் எழ, திருவாதிரை நக்ஷத்திரத்திலே பரசமயத்தருக்குநீங்கவும்வைதீக மார்க்கமும் சைவமார்க்கமும் தழைத்தோங்கவும் பிராமணர்களுடைய ஆகுதிகள்பெருகவும் எம்மொழிகளினும் தமிழ்மொழியே உயர்ச்சியடையவும், பலவுலகங்களுக்கும் பூலோகமும் அப்பூலோகத்துள்ள பலநாடுகளுக்கும் தமிழ்நாடுமே சிறக்கவும் பிள்ளையார் திருவவதாரம் செய்தருளினார். அவருக்கு சாதகர்மம், நாமகரணம், அன்னபிராசனம், சௌளம்என்கிற கர்மங்கள் உரிய காலங்களிலே மிகுந்த சிறப்போடு செய்யப்பட்டன. பிள்ளையார் மூன்றும் ஆண்டிலே தம்முடைய தந்தையாராகிய பரமசிவன் தம்மைச் சிவபாதவிருதயருக்குப் புத்திராகக்கொடுக்க அவரைப்பிரிந்தமையால் ஓரோர்கால் அப்பிரிவு உள்ளத்திற்றோன்ற வெருக்கொண்டாற்போலக் குறிப்பயிலாய் அழுவர். இங்ஙனம் நிகழும்நாளிலே வேறொருநாள் தந்தைதாயாராகிய சிவபாதவிருதயர் ஸ்நானம்பண்ணுதற்குப் போம்பொழுது பிள்ளையார் பரமசிவனுடைய திருவருள் கூட, அவரைத்தொடர்ந்து அழுதுகொண்டு பின்சென்றார். பின்சென்ற பிள்ளையாரைத் தந்தையார் திரும்பிப்பார்த்து கோபமுடையவர்போல விளக்குகலும் பிள்ளையார்கால்கொட்டி மீளாராக தந்தையர் உன்செய்கை இதுவாயில்வாவென்றுகொண்டுசென்றுஆலயத்திலுள்ளிருக்கின்றதீர்த்தத்தைஅடைந்து, அப்பிள்ளையாரைக்கரையிலேவைத்து தாம்தீர்த்தத்திலுள்ளேஇறங்கிஸ்நானஞ்செய்து, தர்ப்பித்துநியமங்களைப்பிள்ளையார்கா

னுமுன்செய்து அகமருஷண ஸ்நானம்பண்ணினார் பண்ணும்பொழுது பிள்ளையார் அவரைக்காணாது இறையளவாயினும் தரியார் என்னும் நிலைமை தலைக்கீடாக, பரமசிவனுடைய திருவடிகளை வழிப்பட்ட முன்னுணர்ச்சிமூள கரையினின்று கண்களைக் கண்ணீர்ததும்பும்படி கைகளினாலே பிசைந்து அதரம் துடிக்க எவ்வுலகங்களும் குதுகலிக்கபொருமி அழுதார் தம்முடைய முற்சார்பை அறிந்தோ பிள்ளை மையாலோ சுவாமியுடைய திருத்தோணிச் சிகரத்தைப்பார்த்து அம்மே அப்பாஎன்று அழைத் தழைத்து அழுதார்.

அப்பொழுது, சுத்தசாட்குண்ணிய பரிபூரணராகிய தோணியப்பர், அவருடைய முற்றிருத்தொண்டை நினைந்து, அவருக்கு அருள் செய்தற்குத் திருவுளங்கொண்டு, பார்வதிதேவியோடும் இடபாரூடராய் எழுந்தருளி, தீர்த்தக்கரையை அடைந்து, உலகமாதாவாகிய உமாதேவியாரை நோக்கி உன்னுடைய முலைப்பாலைப் பொன்வள்ளத்திலே கறந்து இவனுக்கு ஊட்டு என்று அருளிச்செய்தார், ஆன்மாக்களிடத்திலே சகசமாயுள்ள மலத்தைநீக்கி முன்றடைப் பட்டிருந்த பேரறிவு பெருந்தொழிலாகிய சிவத்துவத்தை அருளுகின்ற பராசத்தியாகிய உமாதேவியார் சென்றணைந்து தம்முடைய திருமுலைப்பாலைப் பொன்வள்ளத்திலே கறந்து, சிவஞானத்தைக் குழைத்து, பிள்ளையாருடையகண்ணீரைத்துடைத்து கையிலே தொடுத்து ஊட்ட, சுவாமி அழுகைதீர்த்து அனுக்கிரகம் செய்தருளினார் அப்பிள்ளையார் சர்வான்மாக்களுக்கும்பரம பிதாமாதாக்களாகிய சிவன்சத்தி இருவராலும் ஆளப்பட்டமையால், ஆளுடையபிள்ளையார் என்னும் பெயரும், அரிபிரமேந்திராதி தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் எட்டாசத்திய நிர்மல சிவஞானத்தோடு சம்பந்தஞ் செய்தலால் திருஞானசம்பந்தமூர்த்தி என்னும் பெயரும் உடையராயினார் சிவபாதவிருதயர் சிறுபொழுதிலே தம்முடைய நியமங்களை முடித்துக்கொண்டு கரையிலேறி, பரஞானக் கண்ணினாலே சிவந்தைத் தரிசித்து அதில் அந்தப்பட்டுநின்ற ஆளுடைய பிள்ளையாரை நோக்கி நீயார் தந்தபாலை உண்டாய் என்றுகோபித்து, எச்சில் மயங்க உனக்கு இதனைத் தந்தவரைக்காட்டு என்றுசொல்லி, கையில் எடுத்த ஒருசிறிய மாறுகொண்டு ஓச்ச, பிள்ளையார் ஆனந்த பாஷ்பம் சொரிய உச்சியின்மேல் எடுத்தருளிய ஒருதிருக்கை விரலினாலேசுட்டி, ஆகாயத்திலே இடபாரூடராகி உமாதேவியோடு நின்றருளிய பரமசிவனைக் காட்டி, உள்ளே நிறைந்து எழுந்த சத்தியஞானத் திருமொழியினாலே, வல்லையில்லாத வேதத்தினுட் சிறந்த தாற்பரியங்கள் எல்லாவற்றையும் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டுத் தமிழினாலே திருவாய் மலர்ந் தருளுதற்குத் திருவுளங்கொண்டு அவ்வேதத்திற்கு ஆதியாகிய அக்ஷரத்தை மெய்யொடுபுணர்த்தி தம்முடைய பாடல் பரமசிவனுடைய திருச் செவியில் ஏறும் பொருட்டு முன்னர் அத்திருச்செவியையே சிறப்பித்து "தோடுடையசெவியின்விடை யேறிபோர் தூவெண்மதி" என வெடுத்துப் பாடத் தொடங்கி யருளினார்.

திருப்பிரமபுரம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவியின்விடையேறியோர்தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிப்பூசியென்னுள்ளங்கவர்கள்வ
னேடுடையமலரான்முன்னாள்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.

அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையலர்மேய
பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவன்றன்னை
யொருநெறியமனம்வைத்துணர்ஞானசம்பந்தனுரைசெய்த
திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளிதாமே.

திருச்சிற்றம்பலம்

பின்பு பரமசிவன் தமக்குப் பிழைசெய்த ஆன்மாக்களும் பின்தம்மைவந்தடையின் அவர்களுக்கு அனுக்கிரகம் செய்வாரென்பதை விளக்கும்பொருட்டு, தம்மைமதியாமல் தாம் வீற்றிருக்கின்றகைலாசத்தை எடுத்துத்தன்வலியிழந்த இராவணன்பின் தம்மேல் இசைபாட அவனுக்கு அருள்புரிந்த திறத்தை எட்டாந்திருபபாட்டிலும், எவ்வகைப்பட்ட சிறப்பினரும் பரமசிவனை அன்போடு வழிபடினன்றி அவரை அடையார்கள் என்பதை விளக்கும்பொருட்டு, பரமசிவன் தம்மை வணங்குகின்றவர்களுக்கே அருள்செய்வர் எனநினைந்து அவரை வணங்காது வழுவாகியமானத்தை மேற்கொண்டு வயங்கிய பிரமவிட்டுணுக்கள் இழிவாகிய பன்றியும் அன்னமுமாய்த் தேடியும் அடையாதவர்க ளாகிப் பின் ஐந்தெழுத்தைத் துதித்தே உயர்ந்ததிறத்தை ஒன்பதாந் திருப்பாட்டிலும், வேதகாரணராகிய கடவுளை அடையு நெறியை அறிந்து உய்யாத சமணரும் புத்தருமாகிய் கையருடைய சமயங்கள் கபட மார்க்கங்கள் என்னுந்திறத்தைப் பத்தாந்திருப்பாட்டிலும், அமைத்துப் பாடியருளினார். இங்ஙனந் திருப்பதிகத்தை நிறைவித்து திருக்கடைக்காப்புச்சாத்தித் தொழுதுகொண்டு நின்றார் பரமசிவனுடைய பெருங்கருணையைக் கண்டு ஆகாயத்திலே தேவர்கள் எல்லாரும் புஷ்பமழை பொழிந்தார்கள், பரமசிவன் தேவதுந்துமிகள் முழங்க கந்தருவர்களும் கின்னரர்களும்கீதவொலிசெய்ய அரிபிரமேந்திராதி தேவர்கள் எல்லாரும் ஸ்தோத்திரம்பண்ண சிவகணநாதர்கள் ஹரஹரஎன்றுசொல்லும் ஓசைதழைக்க, முனிவர்கள் வேதகோஷத்தோடு பக்கத்திலேசூழ், பார்வதியாரோடு திருத்தோணிக்கு எழுந்தருளினர் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அதைக்கண்டு அவரைத்தொடர்ந்து எழுகின்ற அன்புமேலீட்டினாலே தம்முடைய கணவழியே சென்றகருத்து நீங்காமற் கலந்துசெல்ல சுவாமிஎழுந்தருளிய கோயிலினுள்ளேபிரவேசித்தார்அனந்தகோடிசிவ

புண்ணியங்களைச்செய்து அப்பிள்ளையாருக்குப்பிதாவாயிருக்கப்பெற்றுக்கொண்ட சிவபாதவிருதயர் கைகுவித்து ஆனந்தக்கூத்தாடி வெருட்சியும் வியப்பும் விருப்பும் அடைந்து அவர்திருவாய் மலர்ந்தருளியதிருநெறித்தமிழின்பொருளை உணர்ந்தார் பரமசிவனைத் தனியேகண்டுதொடர்ந்த பிள்ளையாரைப்போலக் காணப்பெற்றிலராயினும்அங்குநிகழ்ந்த அற்புதத்தைக்கண்டு, அதுதோணியப்பருடைய திருவருளெனத்துணிந்து மகா சந்தோஷத்தோடும் முன்சென்ற பிள்ளையாருக்குப்பின்சென்ருர் அப்பொழுது அங்கே நிகழ்ந்ததைக் கேள்வியுற்று பிராமணர் சமஸ்தரும் உரோமப்புளகங்கொண்டு இதற்கு ஒப்பாகிய அற்புதம்எங்கே நிகழ்ந்தது என்றுசொல்லிக்கொண்டு கோயில் வாயிற்புறத்திலே வந்து சூழ்ந்தார்கள் பிள்ளையார் திருத்தோணியில்வீற்றிருந்தசுவாமியைஅடைந்து திருப்பதிகம்பாடி கோயினின்றும் புறப்பட்டார், அதுகண்ட பிராமணர்களும் மற்றையோர்களும் எதிர்கொண்டு வந்து நின்று ஸ்தோத்திரம்பண்ணி பூமியிலேவிழுந்து அவருடைய திருவடிகளை நமஸ்கரித்து எழுந்தார்கள். சிவபாதவிருதயர் பிள்ளையாரை எடுத்து தோனின்மேலே வைத்துக்கொண்டு மங்கலவாத்தியங்கள் ஒலிக்க பிராமணர்கள் வேதகோஷம்செய்ய சிவனடியார்களெல்லாரும் ஸ்தோத்திரம்பண்ண சீர்காழியை வலஞ்செய்துகொண்டு தம்முடையதிருமாளிகையை அடைந்தார். திருஞானசம்பந்தப்பிள்ளையார் மற்றநாள் பிராதக்காலத்திலேஆலயத்திற்சென்று தம்முடையபிதா மாதாவாகிய பரமசிவனையும் பார்வதியாரையும் வணங்கித்துதித்து அருள்பெற்று திருக்கோலக்கா என்னும் திருப்பதியை அடைந்து கோயிலை வலஞ்செய்து முன்னின்று கையினுலே ஒற்றறுத்துத் திருப்பதிகம் பாடத்தொடங்கினுர்.

திருக்கோலக்கா - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மடையில்வாளைபாயமாதரார், குடையும்பொய்கைக்கோலக்காவுளான்
சடையும்பிறையுஞ்சாம்பர்பூச்சுங்கீ, ழுடையுங்கொண்டவுருவமென்கொலோ

நலங்கொள்காழிஞானசம்பந்தன், குலங்கொள்கோலக்காவுளானையே
வலங்கொள்பாடல்வல்லவாய்மையா, ருளங்கொள்வினைபோயோங்கிவாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்.

பாடும்பொழுது பரமசிவனுடைய திருவருளினுலே ஸ்ரீ பஞ்சாட்சரம் எழுதப்பட்டிருக்கின்ற பொற்றுளம்உலகமெல்லாம் உய்யும்படிபிள்ளையாருடைய திருக்கரத்தே வந்திருந்தது பிள்ளையார் அதைக் கண்டு திருவருளை வியந்து களிகூர்ந்து ஏழிசையும் தழைத்தோங்கத் திருப்பதிகத்தைப் பாடிமுடித்து திருக்கடைக்காப்புச் சாத்திநின்றுர். அவர்பா

டும்பொழுது விண்ணுலகமும் அதிசயிக்கும்படி ஓங்கிய அதிமதுரநாதத்தைநோக்கி, தும்புருநாரதர்முதலாகிய சங்கீதவித்துவான்கள்ஸ்தோத்திரம்செய்து புஷ்பமாரி பொழிந்தார்கள். வேதாகமங்கள் வாழும்படி திருவவதாரஞ்செய்த பிள்ளையார் மீண்டுஞ் சீர்காழிக்குப் போகும்படி நடந்தார் நடக்கும்பொழுது சிவபாதவிருதயர் தரித்த லாற்றுமையால் தோளின்மேலே தரித்துக்கொள்ளப்பிள்ளையார் அத்தோளின்மேல்எழுந்தருளிச் சீர்காழியிலிருக்கின்ற கோயிலை அடைந்து வலஞ்செய்து சந்நிதானத்திலே நின்று திருப்பதிகம் பாடியருளினர்.

சீர்காழி - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்

பூவார்கொன்றைப்புரிபுன்சடையீர், காவாயெனநின்றேத்துங்காழியார்
மேவார்புரமூன்றட்டாரவர்போலாம், பாவாரின்சொற்பயிலும்பரமரே.

காரார்வயல்சூழ்காழிக்கோன்றனைச், சீரார்ஞானசம்பந்தன்சொன்ன
பாரார்புகழ்ப்பரவவல்லவ, ரேரார்வானத்தினிதாவிருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுமலம்-திருத்தாளச்சத்தி-பண்-வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

பந்தத்தால்வந்தெப்பால் பயின்றுநின்றவும் பரப்பாலேசேர்வாயேனோர்காண்பயில்கணமுனிவர்களுஞ், சிந்தித்தேவந்திப் பச்சிலம்பின்மங்கைதன்னொடுஞ் சேர்வார்நாளுணீள்கயிலைத்திகழ்தருபரிசதெலாஞ், சாதித்தேயிந்தப் பார்சனங்கணின்றுதங்கணூற்றுமே காணுவாழ்வாராத்தரவுசெய்வனதிடம்; கந்தத்தாலெண்டிங்குங்கமழ்திலங்குசந்தனக் காடார்பூவார்சீர்மேவுங் கழுமலவளநகரே.

கஞ்சத்தேனுட்டிட்டேகளித்துவண்டுசெண்பகக் கானேதேனேபோருங்கழுவலநகரிறையைத், தஞ்சார்சண்பைக்கோன் சமைத்தரற்கலைத்துறைதாமேபோல்வார்தேனேரார்தமிழ்விரகன்மொழிக,ளெஞ்சததேய்வின்றிக்கேகி மைத்திசைத்தமைத்தகொண் டேழேயேழேநாலேமூன்றியலிசையியல்வா, வஞ்சத்தேய்வின்றிக்கேமனங்கொளப்பயிற்றுவோர் மார்பேசேவாள்வானோர்சீர்மதிநுதன்மடவரலே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு கடவுளை வணங்கிக்கொண்டு, தம்முடைய திருமாளிகையை அடைந்து, அந்தச்சீர்காழியில்வாழுகின்றவர்கள்சமஸ்தர்களும்வாழும்

பொருட்டு தம்முடைய இளந்திருக்கோலம் காட்சியைக்கொடுத்துவீற் றிருந்தருளினர். அப்படி இருக்கும்பொழுது அவருடைய தாயாராகிய பகவதியார் பிறந்த திருநனிபள்ளியில் இருக்கின்ற பிராமணர்கள் எல்லாரும் பெருமகிழ்ச்சியோடு அவ்விடத்திற்கு வந்துசேர்ந்து அவரை வணங்கப்பெற்று இருந்தார்கள். பிள்ளையார் உலகமெல்லாம் உய்யும்படி சிவஞானம்பெற்ற பெருவார்த்தையைக் கேள்வியுற்று, சமீபஸ்தலங்களி லிருக்கின்ற பிராமணர்களும் திருத்தொண்டர்களும் மற்றை அனைவரும் அதிசயித்து திரண்டுவந்து பிள்ளையாரை வணங்கி உய்ந்தார்கள் இங்ஙனம் செல்லும் நாளிலே திருநனிபள்ளியிற் பிராமணர்கள் பிள்ளையாரை வணங்கி அடியேங்கள் எல்லாரும் உய்யும்படி திருவவதாரஞ் செய்தருளிய பரமகிருபாளுவாகிய சுவாமீ, அடியேங்களுடைய வாசஸ்தானமாகிய திருநனிபள்ளியில் வீற்றிருக்கும் சுவாமியை வணங்கும் பொருட்டு அவ்விடத்திற்கு எழுந்தருளல் வேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். சிவானுபூதிப் பெருவாழ்வாகிய பிள்ளையார் அதற்கு இசைந்து தோணியப்பரை வணங்கி, அருள்பெற்று பிறதலங்களையும் வணங்கச் சென்றார் செந்தாமரை மலரினும் சிறந்த அருமைத் திருவடிகள் தரையின்மேற் செல்வதையும் பிறரொருவர் தாங்குவதையும் பொறாத அன்பினையுடைய சிவபாதவிருதயர் வந்து எடுத்துத் தோளின்மேலே வைத்துக்கொண்டு சென்றார். திருநனி பள்ளிக்குச் சமீபித்தபொழுது பிள்ளையார், அந்தச் சோலை தோன்றும் பதி யாது என்று வினவியருள, தந்தையார் திருநனிபள்ளியென்றார். அதுகேட்டு திருப்பதிகம்பாடிக்கொண்டு கோயிலை அடைந்து சுவாமியை வணங்கிக்கொண்டு அந்தஸ்தலத்தில் இருந்தார்.

திருநனிபள்ளி-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

காரைகள்கூகைமுல்லைகளவாகையீகைபடர்தொடரிகள்ளிகவினிச்
சூரைகள்பம்மிவிம்முசுடுகாடமர்ந்தசிவன்மேவுசோலைநகர்தான்
தேரைகளாரைசாயமிதிகொள்ளவாளைகுதிகொள்ளவள்ளைதுவள
நாரைகளாரல்வாரவயன்மேதிவைகுநனிபள்ளிபோலுநமர்காள்.

சடையிடைபுக்கொடுங்கியுட்டங்குவெள்ளம்வளர்திங்கள்கண்ணியயலே
யிடையிடைவைத்ததொக்குமலர்தொத்துமாலையிறைவன்னிடங்கொள்பதிதன்
மடையிடைவாளைபாயமுகிழ்வாய்நெரிந்துமணநாறுநீலமலரும்
நடையுடையன்னம்வைகுபுனலம்படப்பைநனிபள்ளிபோலுநமர்காள்

கடல்வரையோதமல்குகழிகானல்பானல்கமழ்காழியென்றுகருதப்
படுபொருளாறுநாலுமுளதாகவைத்தபதியானஞானமுனிவ
னிடுபறையொன்றவத்தர்பியன்மேலிருந்தினிசையாலுரைத்தபனுவ
னடுவிருளாடுமெந்தைநனிபள்ளியுள்கவினைகெதலாணைநமதே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு அவ்விடத்தினின்று நீங்கி, தலைச்செங்காடு, வலம்புரம் பல்லவனீச்சரம், சாய்க்காடு, திருவெண்காடு, திருமுல்லைவாயல் என்னும் ஸ்தலங்களுக்குப்போய்ச் சுவாமி தரிசனஞ்செய்து, பதிகம் பாடிக்கொண்டு மீண்டு சீர்காழியை அடைந்து, சுவாமி தயசனஞ் செய்துகொண்டு இருந்தார்.

திருவலம்புரம்-பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

கொடியுடைமும்மதிலூடுருவக்குனிவெஞ்சிலைதாங்கி
யிடிபடவெய்தமரர்பிரானடியாரிசைந்தேத்தத்
துடியிடையாளையோர்பாகமாகத்துதைந்தாரிடம்போலும்
வடிவுடைமேதிவயல்படியும்வலம்புரநன்னகரே.

நல்லியனுன்மறையோர்புகலித்தமிழ்ஞானசம்பந்தன்
வல்லியந்தோலுடையாடையினுன்வலம்புரநன்னகரைச்
சொல்லியபாடல்கள்பத்துஞ்சொல்லவல்லவர்தொல்வினைபோய்ச்
செல்வன்சேவடிசென்றணுகிச்சிவலோகஞ்சேர்வாரே.

திருச்சிற்றம்பலம்.

திருச்சாய்க்காடு-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மண்புகார்வான்புகுவர்மனமிளையார்பசியாலுங்
கண்புகார்பிணியறியார்கற்றாருங்கேட்டாரும்
விண்புகாரெனவேண்டாவெண்மாடநெடுவீதித்
தண்புகார்ச்சாய்க்காட்டெந்தலைவன்றாள்சார்ந்தாரே.

நொம்பைந்துபுடைத்தொல்குநூபுரஞ்சேர்மெல்லடியார்
அம்பந்தும்வரிக்கழலுமரவஞ்செய்பூங்காழிச்
சம்பந்தன்றமிழ்பகர்ந்தசாய்க்காட்டுப்பத்தனையு
மெம்பந்தமெனக்கருதியேத்துவார்க்கிடர்கெடுமே.

திருச்சிற்றம்பலம்.

திருச்சாய்க்காடு-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நித்தலுங்நியமஞ்செய்துநீர்மலர்தூவிச்
சித்தமொன்றவல்லார்க்கருளுஞ்சிவன்கோயில்
மத்தயானையின்கோடும்வண்பீலியும்வாரித்
தத்துநீர்ப்பொன்னிசாகரமேவுசாய்க்காடே.

ஏனையோர்புகழ்ந்தேத்திய வெந்தசாய்க்காட்டை
ஞானசம்பந்தன்காழியர்கோனவில்பத்து
மூனமின்றியுரைசெயவல்லவர்தாம்போய்
வானநாடினிதாள்வரிம்மானிலத்தோரே.

திருச்சிற்றம்பலம்.

திருவெண்காடு-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

கண்காட்டுநுதலானுங்கனல்காட்டுங்கையானும்
பெண்காட்டுமுருவானும்பிறைகாட்டுஞ்சடையானும்
பண்காட்டுமிசையானும்பயிர்காட்டும்புயலானும்
வெண்காட்டிலுறைவானும்விடைகாட்டுங்கொடியானே.

பேயடையாபிரிவெய்தும்பிள்ளையினோடுள்ளநினை
வாயினவெலாம்பெறுவரையுறவேண்டாவொன்றும்
வேயனதோளுமைபங்கன்வெண்காட்டுமுக்குளநீர்
தோய்வினையாரவர்தம்மைத்தோயவாந்தீவினையே.

தண்பொழில்சூழ்சண்பையர்கோன்றமிழ்ஞானசம்பந்தன்
விண்பொலிவெண்பிறைச்சென்னி விகிர்தனுறைவெண்காட்டை
பண்பொலிசெந்தமிழ்மாலைபாடியபத்திவைவல்லார்
மண்பொலியவாழ்ந்தவர்போய்வான்பொலியப்புகுவாரே.

திருச்சிற்றம்பலம்.

திருமுல்லைவாயில்-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

துளியுமண்டியுண்டுநிறம்வந்தகண்படைமன்னுதன்னுசுடரோ
ளொளிமண்டியும்பருலகங்கடந்தவுமைபங்கனெங்களரனூர்
களிமண்டுசோலைகழனிக்கலந்தகமலங்கடங்குமதுவின்
றெளிமண்டியுண்டுசிறைவண்டுபாடுந்திருமுல்லைவாயிலிதுவே.

அணிகொண்டகோதையவணன்றுமேத்த வருள்செய்தவெந்தைமருவா
திணிகொண்டமூன்றுபுரமெய்தவில்லிதிருமுல்லைவாயிலதன்மேற் [ர்
றணிகொண்டசிந்தையவர்காழிஞானமிகுபந்தனெண்டமிழ்களி
னணிகொண்டபத்துமிசைபாடபத்தரகல்வானமாள்வர்மிகவே.

திருச்சிற்றம்பலம்.

அப்படி இருக்கும் நாளிலே மயேந்திரப்பள்ளி, குருகாவூர் முதலாகிய ஸ்தலங்களை வணங்கித் திருப்பதிகம் பாடியருளினர்.

திருமயேந்திரப்பள்ளி-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

திரைதருபவளமுஞ்சீர்திகழ்வயிரமுங்
கரைதருமகிலொடுகனவளைபுகுதரும்
வரைவிலாவெயிலெய்த்தமயேந்திரப்பள்ளியுள்
ளரவரையழகனையடியிணைபணிமினே.

வம்புலாம்பொழிலணிமயேந்திரப்பள்ளியு
ணம்பனார்கழலடிஞானசம்பந்தன்சொ
னம்பரம்மிதுவெனநாவினனவில்பவ
ரும்பராரெதிர்கொளவுயர்பதியணைவாரே.

திருச்சிற்றம்பலம்

இப்படி நிகழுங்காலத்தில் திருநீலகண்டப்பெரும்பாணர் ஆளுடையபிள்ளையாரைத் தரிசிக்கும்பொருட்டு விறலியாரோடு யாழ்கொண்டு சீர்காழியிலே வந்துசேர்ந்தார். பிள்ளையார் அவருடைய வரவை அறிந்து அவரை எதிர்கொள்ள, அவர்பிள்ளையாருடைய ஸ்ரீபாதங்களைநமஸ்கரித்து, ஸ்தோத்திரஞ் செய்தார் பிள்ளையார் அவரை அழைத்துக்கொண்டு கோயிற்புற முன்றிலிலேசென்று கும்பிடுவித்து அவரை நோக்கி நீர் இங்கே சுவாமிக்கு யாழ்வாசியும் என்றார் திருநீலகண்டப் பெரும்பாணர் பிள்ளையாரை வணங்கிக்கொண்டு பரமசிவன் மேலதாகிய பாணியை விரலியாரோடும் பாடியாழ்வாசிக்க பிள்ளையார் மகிழ்ச்சியடைந்தார் திருநீலகண்டப் பெரும்பாணர் யாழ்வாசித்தபின் பிள்ளையார் அவரைக் கொண்டுபோய் அவருக்கு உறைவிடம்கொடுத்து விருந்துசெய்தார், திருநீலகண்டப் பெரும்பாணர் சுவாமிமேலே பிள்ளையார் பாடிய திருப்பதிகங்களைக்கேட்டு பெருமகிழ்ச்சிகொண்டு, அவைகளின் இசைகளை யாழியிலே இட்டு வாசித்தார் பின் பிள்ளையாரை நோக்கி சுவாமி இன்னும் தேவரீர் அருளிச்செய்யுந் திருப்பதிகங்களின் இசையை அடியேன் யாழியிலே இட்டு தேவரீரைப் பிரிவின்றிச் சேவிக்கப் பெறவேண்டும் என்று சொல்லித் தொழுதார். பிள்ளையார் திருவுளமகிழ்ந்து அதற்கிசைந்தருளினர். திருநீலகண்டப் பெரும்பாணர் அற்றைநாட்டொடங்கி பிள்ளையார்பாடுந் திருப்பதிகத்தி னிசைகளை யாழிலே இட்டு வாசித்துக்கொண்டு என்றுமகலாத நண்புடனிருந்தார் திருஞானசம்பந்தப்பிள்ளையார் பூமிக்குச் சுழுமுனநாடியாகிய தில்லையில் விளங்குகின்ற திருச்சிற்றம்பலத்திலே நிருத்தஞ் செய்தருளும் சபாநாயக

ரைத் தரிசனஞ் செய்தற்கு விரும்பி, தந்தையாரோடும் திருநீலகண்டப் பெரும்பாணரோடும் அடியார்கள் பக்கத்திலேசூழ சீர்காழியைக் கடந்துசென்று, சிதம்பரத்தினது திருவெல்லையை அடைந்து நமஸ்கரித்துக்கொண்டு, அந்தத் திருப்பதியைச்சூழ்ந்த மதிலினது தெற்குவாயிலை அடைந்து தில்லைவாழந்தணர்களும் மற்றையடியார்களும் மகா அலங்காரத்தோடும் எதிர்கொள்ளப் போய் திருவீதியைத்தொழுது ஸ்தூல லிங்கமாகிய கோபுரத்தை நமஸ்கரித்து எழுந்து உள்ளே புகுந்து திருமாளிகையை வலஞ்செய்து பேரம்பலத்தை வணங்கிக்கொண்டு கனக சபையை அடைந்தார் ஆயிரம் ஆதித்தப் பிரகாசம் கூடிய மண்டலம் போலக் குறைவற நிறைந்த ஞானசபையிலே சத்தி காரியமாகிய திருமேனியைக்கொண்டு ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்ற சபா நாயகரைத் தரிசனம்பண்ணினர் உடனே அவயத்திலே யாதொரு சேட்டையுமின்றி, வாதனையினாலே திருக்கரங்கள் சிரசின்மேலேறிக்குவிய உரோமாஞ்சிதங்கொள்ள நாத்தழும்ப விழி நீர்த்தாரைகொள்ள சிவானந்தசாகரத்தில் அமிழ்ந்திநின்று "கற்றாங்கெரி" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினர்.

கோயில் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கற்றாங்கெரியோம்பிக்கலியைவாராமே, செற்றார்வாழ்த்தில்லைச்சிற்றம்பலமேய
முற்றாவெண்டிங்கண்முதல்வன்பாதமே, பற்றாநின்றாரைப்பற்றாபாவமே.

பறப்பைப்படுத்தெங்கும்பசுவேட்டெரியோம்புஞ், சிறப்பார்வாழ்தில்லைச்சிற்றம்பல
பிறப்பில்பெருமானைப்பின்றாழ்சடையானை,மறப்பிலார்கண்டீர்மையறீர்வாரே(மே

ஞாலத்துயர்காழிஞானசம்பந்தன், சீலத்தார்கொள்கைச்சிற்றம்பலமேய
சூலப்படையானைச்சொன்னதமிழ்மாலை, கோலத்தாற்பாடவல்லார்நல்லாரே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு திருமாளிகையை வலஞ்செய்துபுறப்பட்டு திருமுன்றிலிலே நமஸ்கரித்து எழுந்து கோபுரவாயிலைக்கடந்து பணிந்து நான்கு திருவீதிகளையும் தொழுது அங்கே இருத்தற்கு அஞ்சி திருவேட்களத்தை அடைந்து சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடியருளினர்.

திருவேட்களம்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அந்தமுமாதியுமாதியுமாகியவண்ணலாரழலங்கையமர்ந்திலங்க
மந்தமுழவம்மியம்பமலைகள்காணநின்றாடிக்
சந்தமிலங்குநகுதலைகங்கைதண்மதியம்மயலேததும்ப
வெநதவெண்ணீறுமெய்பூசம்வேட்களநன்னகராரே.

விண்ணியன்மாடம்விளங்கொளிவீதிவெண்கொடியெங்கும்விரிந்திலங்க
நண்ணியசீரவர்காழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
பெண்ணினல்லாளொருபாகமமர்ந்துபேணியவேட்களமேன்மொழிந்த
பண்ணியல்பாடல்வல்லார்கள்பழியொடிபாவமிலாரே

திருச்சிற்றம்பலம்

அவ்விடத்தி லிருந்துகொண்டே சிதம்பரத்துக்கும்வந்து சபா நாயகரைத்தரிசிப்பார் அப்படியிருக்கும் நாளிலே, திருக்கழிப்பாலைக்குப் போய்சுவாமி தரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடியருளினர்.

திருக்கழிப்பாலை-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

புனலாடியபுன்சடையாயரண, மனலாகவிழித்தவனேயழகார்
கனலாடலினய்கழிப்பாலையுளா, யுனவார்கழல்கைதொழுதுள்குதுமே.
கழியார்பதிகாவலனைப்புகலிப், பழியாமறைஞானசம்பந்தன்சொல்
வழிபாடிவைகொண்டடிவாழ்த்தவல்லார், கெழியாரிமையோரொடுகேடிலரே.

திருச்சிற்றம்பலம்

அவர்பாடும் பதிகவிசைகளை யாழ்ப்பாணரும்யாழிலிட்டுவாசிபபாராயினர். ஒருநாள்பிள்ளையார் திருவேட்களத்தைக் கடந்து சிதம்பரத்தை அடைந்தபொழுது சபாநாயகருடைய திருவருளினலே தில்லைவாழந்தணர் மூவாயிரரும் சிவகணநாதராய்த் தோன்றக்கண்டு, அத்தன்மையைப் பெரும்பாணருக்குங் காட்டினர், தில்லைவாழந்தணர் பிள்ளையாரைக் கண்டவுடனே வணங்க, பிள்ளையார் அவர்கள்வணங்கு முன் தாமும்வணங்கி, கோயிலிற் பிரவேசித்து சபாநாயகரை வணங்கி "ஆடினய்நறு நெய்யொடு பாறயிர்" என்னுந்திருப்பதிகத்தைப்பாடினர். அந்தத்திருப்பதிகத்தின் ஓர் திருப்பாட்டிலே தில்லைவாழந்தணரைத் தாம் கண்டபடிகூறி, அவர்கள் தொழுதேத்தும் சிற்றம்பலம் என்று அருளிச்செய்தார்.

கோயில் பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆடினாய்நறுநெய்யொடுபாலுமிரந்தணர்பிரியாதசிற்றம்பல
நாடினாயிடமாநறுங்கொன்றைநயந்தவனே
பாடினாய்மறையோடுபல்கீதமும்பல்சடைப்பனிகால்கதிர்வெண்டிங்கள்
சூடினாயருளாய்சுருங்கவெந்தொல்வினையே.

நாறுபூம்பொழினண்ணியகாழியுண்ஞான்மறைவல்லஞானசம்பந்த
னூறுமின்றமிழாலுயர்ந்தாருறைதில்லைதன்னு
ளேறுதொல்புகழேந்துசிற்றம்பலத்தீசனையிசையார்சொன்னபத்திவை
கூறுமாறுவல்லாருயர்ந்தாரொடுங்கூடுவரே.

திருச்சிற்றம்பலம்.

பின்கோயிலினின்றும் புறப்பட்டபொழுது, பெரும்பாணர்பிள்ளையாருடைய திருவடிகளைவணங்கி நின்றுசுவாமி! அடியேனுடைய ஜன்மஸ்தலமாகிய திருவெருக்கத்தம்புலியூர் முதலாக நிவாவென்னும் நதிக்கரையில் இருக்கின்ற தலங்களை வணங்குவதற்கு எழுந்தருளல் வேண்டும் என்றுபிரார்த்தித்தார் ஆளுடையபிள்ளையார் அதற்கிசைந்தருளி தந்தையார் முதலிய சமஸ்தரோடும் பெரும்பாணர் திருவவதாரஞ் செய்த திருவெருக்கத் தம்புலியூருக்கும் திருமுதுகுன்றுக்கும்போய் சுவாமிதரிசனஞ் செய்து கொண்டு திருப்பதிகம் பாடியருளினர்.

திருஎருக்கத்தம்புலியூர்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

படையார்தருபூதப்பகடாருரிபோர்வை, புடையானுமையோடொருடனுபிடுகக்கைச்
சடையானெருக்கத்தம்புலியூர்த்தருகோயில்விடையானடியேத்தமேவாவினைதானே

ஏராரெருக்கத்தம்புலியூருறைவானைச் சீரார்திகழ்காழித்திருவார்சம்பந்த
ஞராவருந்தமிழ்மாலையிவைவல்லார், பராரவரேத்தம்பதிவானுறைவாரே.

திருச்சிற்றம்பலம்.

திருமுதுகுன்றம்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மத்தாவரைநிறுவிக்கடல்கடைந்தவ்விடமுண்ட
தொத்தார்தருமணிநீண்முடிச்சுடர்வண்ணனதிடமாங்
கொத்தார்மலர்குளிர்சந்தகிலொளிர்குங்குமங்கொண்டு
முத்தாறுவந்தடிவீழ்தருமுதுகுன்றடைவோமே.

தழையார்வடவியவீதனிற்றவமேபுரிசைவ
னிழையாரிடைமடவாளொடுமினிதாவுறையிடமா
மழைவானிடைமுழவவ்வெழில்வளைவாளுகிரெரிகண்
முழைவாளரிகுமிறும்முயமுதுகுன்றடைவோமே.

முகில்சேர்தருகுன்றுடையானைம்மிகுதொல்சீர்ப்
புகலின்னகர்மறைஞானசம்பந்தன்னுரைசெய்த
நிகரில்லனதமிழ்மாலைகளிசையோடிவைபத்தும்
பகரும்மடியவர்கட்கிடர்பாவமடையாவே.

திருச்சிற்றம்பலம்.

திருமுதுகுன்றம்-திருவிருக்குறள்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நின்றுமலர்தூவி-யின்றுமுதுகுன்றை-நன்றுமேத்துவீர்க்-கென்றுமின்பமே
யின்றமுதுகுன்றை-நன்றுசம்பந்த-னொன்றுமுரைவல்ல-ரென்றுமுயர்வோரே.

திருச்சிற்றம்பலம்.

திருமுதுகுன்றம்-திருமுக்கால்-பண்-சாதாரி

திருச்சிற்றம்பலம்.

முரைசதிர்ந்தெழுதருமுதுகுன்றமேவிய, பரசமர்படையுடையீரே
பரசமர்படையுடையீருமைப்பரவுவா, ரரைசர்களுலகிலாவாரே.
மூடியசோலைசூழ்முதுகுன்றத்தீசனை, நாடியஞானசம்பந்த
னாடியஞானசம்பந்தன்செந்தமிழ், பாடியவவர்பழியிலரே.

திருச்சிற்றம்பலம்,

பின்பெண்ணாகடத்தை அடைந்து அங்கே திருத்தூங்கானைமாடம் என்னும் ஆலயத்தில் இருக்கின்ற சுவாமியைத்தரிசனஞ் செய்துகொண்டு திருப்பதிகம் பாடியருளினார்.

திருத்தூங்கானைமாடம்-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒடுங்கும்பிணிபிறவிகேடென்றிவையுடைத்தாயவாழ்க்கையொழித்தவ
மடங்குமிடங்கருதிநின்றீரெல்லாமடிகளடிநீழற்கீழாளாம்வண்ணங்
கிடங்குமதிலுஞ்சுலாவியெங்குங்கெழுமனைகடொறுமறையினொலி
தொடங்குங்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே.

மண்ணார்முழவதிருமாடவீதிவயற்காழிஞானசம்பந்தனல்ல மேயான்
பெண்ணுகடத்துப்பெருங்கோயில்சேர்பிறையுரிஞ்சுந்தூங்கானைமாட
கண்ணார்கழல்பரவுபாடல்பத்துங்கருத்துணரக்கற்றுருங்கேட்டாரும்போய்
விண்ணோருலகத்துமேவிவாழும்விதியதுவேயாகும்வினையுமாயுமே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு திருவரத்துறைக்குப்போக விரும்பி தந்தையாருடைய தோண்மேலிருத்தலை ஒழிந்து அவர்மனம் வருந்தும்படி பிராமணர் முதலியோர்சூழ்ந்துசெல்ல திருவடித்தாமரைநோவ பையப்பையநடந்து மாறன்பாடி என்னும் பதிவந்தவுடனே வழிசென்றவருத்தத்தினாலே ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டு அப்பதியிற்சென்றார். அப்பொழுது சூரியன் அஸ்தமனமாயிற்று, அன்றிரவு பிள்ளையார் அடியார்களோடும் அந்தப் பதியிலேயே தங்கினார். திருவரத்துறையில் வீற்றிருக்கின்றகடவுள் தம்முடைய திருக்குமாரராகிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளுடைய வழிவருத்தைத் திருவுளத்தடைத்து, அவர் ஏறுதற்கு முத்துச்சிவிகையும் அவருக்கு நிழற்றுதற்கு முத்துக்குடையும் ஊதுதற்கு முத்துச்சின்னங்களும் கொடுத்தருளநினைந்து அந்தஸ்தலத்திலிருக்கின்ற பிராமணர்களெல்லாருக்குந் தனித்தனியே சொப்பனத்திலே தோன்றி, ஞானசம்பந்தன் நம்மிடத்துக்கு வருகின்றான் நீங்கள் முத்துச்சிவிகையும் முத்துக்குடையும் முத்துச்சின்னங்களும் நம்மிடத்தில் எடுத்து அவனிடத்திற்குக் கொண்டுபோய்க்கொடுங்கள் என்று ஆஞ்ஞாபித்து மறைந்தருளினார், உடனே பிராமணர்கள் விழித்தெழுந்து மகிழ்ந்து அற்புதமெய்திய சிந்தையோடு ஆலயத்திலே வந்துகூடி திருப்பள்ளியெழுச்சிக்காலம்வர, திருக்காப்பை நீக்கி முத்துச்சிவிகையையும் முத்துக்குடையையும் முத்துச்சின்னங்களையுங்கண்டு, ஆனந்தங்கொண்டு துந்துமிமுதலிய வாத்தியங்கள் ஒலிப்ப, சிவனடியார்களோடு அந்தச்சிவிகை முதலாயினவற்றைத் தாங்கிக்கொண்டு ஆளுடைய பிள்ளையாரிடத்திற்குப் போனார்கள், அதற்குமுன் பரமசிவன் ஆளுடைய பிள்ளையாருக்கும் சொப்பனத்திலே தோன்றி நாம் உனக்கு முத்துச்சிவிகையும் முத்துக்குடையும் முத்துச்சின்னங்களும் அனுப்புகின்றோம் நீ அவைகளை ஏற்றுக்கொள் என்று திருவாய்மலர்ந்தருளினார் பிள்ளையார் விழித்தெழுந்து தாம்கண்ட சொப்பனத்தைத் தந்தையாருக்கு அடியார்களுக்கும் அருளிச்செய்து வைகறையிலே விபூதிதரித்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு எழுந்தருளினார், அப்பொழுது பிராமணர்கள் சிவனடியார்களோடு ஹரஹர என்னும் ஓசையுடனே முத்துச்சிவிகை முதலியனவற்றைக்கொண்டு எதிரேவந்து பிள்ளையாரை வணங்கிநின்று இவை திருவரத்துறையில் வீற்றிருக்கின்றகடவுள் தந்தபொருள்கள் ஏற்றருளும் என்றார்கள். பிள்ளையார் அதைக் கேட்டு அக்கடவுளுடைய திருவருளைத் துதித்து திருப்பதிகம்பாடியருளினார்.

திருநெல்வாயில் திருஅரத்துறை-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

எந்தையீசனெம்பெருமானேறமர்கடவுளென்றேத்திச்
சிந்தைசெய்பவர்க்கல்லால்சென்றுகைகூடுவதன்றாற்
கந்தமாமலருந்திக்கடும்புனனிவாமல்குகரைமே
லந்தண்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே.

கரையினார்பொழில்சூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்த
னுறையும்பூம்புனல்பரந்தவரத்துறையடிகடம்மருளை
முறைமையாற்சொன்னபாடன்மொழியுமாந்தர்தம்வினைபோய்ப்
பரையுமையுறவில்லைப்பாட்டிவைபத்தும்வல்லார்க்கே.

திருச்சிற்றம்பலம்.

திருவருள்வடிவாகிய முத்துச்சிவிகையை வலஞ்செய்து பூமியிலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு உலகம் எல்லாம் உய்யும்படி அதில் ஏறியருளினார் அப்பொழுது சிவனடியார்களெல்லாரும் ஆரவாரித்தார்கள், பிராமணர்கள் சமஸ்தரும் வேதகோஷஞ்செய்தார்கள். இந்திராதிதேவர்கள் ஆரவாரித்துப் புஷ்பமாரிபொழிந்தார்கள். பலவகைப்பட்ட மங்களவாத்தியங்கள ஒலித்தன, முத்துச்சிவிகையிலே ஏறியருளிய நிருகேதுக் கருணைசாலியாகிய திருஞானசம்பந்தபிள்ளையார் மேலே முத்துக்குடைநிழற்றவும், சிவனடியார்களும் பிராமணர்களும் நெருங்கி ஆனந்தமேலீட்டினாலே கூத்தாடித் தங்கள் கண்களினின்றும் பொழிகின்ற ஆநந்தவெள்ளத்தினுள்ளே குளிக்கவும், முத்துச்சின்னங்கள் சமஸ்தலோகங்களும் சிவனடியார்களும் வேதங்களும் உய்யும்படி சைவசிகாமணிவந்தார். சித்தசித்துப் பிரபஞ்சங்களெங்கும் வியாபித்திருக்கின்ற உமாதேவியார் ஞானப்பாலூட்ட உண்ட திருஞானசம்பந்தமூர்த்திவந்தார், வேதாகமாதி சமஸ்தசாத்திரங்களையும் ஓதாதுணர்ந்த முத்தமிழ்விரகர் வந்தார்என்று ஊதவும் சென்று திருவரத்துறையை அடைந்து கோபுரவாயிலுக்குத் தூரத்திலேபோனபொழுது முத்துச்சிவிகையினின்றும் இறங்கி நமஸ்கரித்து எழுந்து கோயிலுள்ளே பிரவேசித்து வலஞ்செய்து சந்நிதானத்திலே நமஸ்கரித்து திருப்பதிகம்பாடி, சிலநாள் அந்தஸ்தலத்திலே இருந்தார் இருக்கும்நாளிலே நெல்வெண்ணை என்னும் ஸ்தலத்துக்குப் போய் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு திரும்பினார்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் சிலநாளாயினபின், சீர்காழிக்குத்திரும்பும்படி திருவுளங்கொண்டு அத்திருவரத்துறையில் வீற்றிருக்கும் கடவுளை வணங்கி, விடைபெற்று முத்துச்சிவிகையில் ஏறிச்சென்று, பழுவூர், விசயமங்கை, வைகா, புறம்பயம் இன்னும் ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருப்பதிகம்பாடியருளினார்.

திருப்பழூவூர் திருவிராகம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

எண்ணுமோரெழுத்துமிசையின்கிளவிதேர்வார்
கண்ணுமுதலாயகடவுட்கிடமீதென்பர்
மண்ணின்மிசையாடிமலையாளர்தொழுதேத்திப்
பண்ணினெலிகொண்டுபயில்கின்றபழுவூரே.

அந்தணர்களானமலையாளரவரேத்தும்
பந்தமலிகின்றபழுவூரரனையாரச்
சந்தமிகுஞானசம்பந்தனுரைபேணி
வந்தவணமேத்துமவர்வானமுடையாரே.

திருச்சிற்றம்பலம்.

திருவிசயமங்கை-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

இதமுன்னிசைதரக்கிளரும்வீணையர், பூதமுன்னியல்வுடைப்புரிதர்பொன்னதர்
கோதனம்வழிபடக்குலவுநான்மறை, வேதியர்தொழுதெழுவிசயமங்கையே.

விண்ணவர்தொழுதெழுவிசயமங்கையை, நண்ணியபுகலியுள்ஞானசம்பந்தன்
பண்ணியசெந்தமிழ்ப்பத்தும்வல்லவர், புண்ணியர்சிவகதிபுகுதறிண்ணமே.

திருச்சிற்றம்பலம்.

திருவைகா திருவிராகம்- பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

கோழைமிடறாககவிகோளுமிலவாகவிசைகூடும்வகையா
லேழையடியாரவர்களியாவைசொனசொன்மகிழுமீசனிடமாந்
தாழையிளநீர்முதியகாய்கமுகின்வீழநிரைதாறுசிதறி
வாழையுதிரவீழ்கனிகளூறியவல்சேறுசெயும்வைகாவிலே.

மூற்றுநமையாளுடையமுக்கண்முதல்வன்றிருநல்வைகாவிலதனைச்
செற்றமவினர்சிரபுரத்தலைவன்ஞானசம்பந்தனுரைசெய்
யுற்றதமிழ்மாலையீரைந்துமிவைவல்லவருருத்திரரெனப்
பெற்றமாலோகமிகவாழ்வர்பிரியாரவர்பெரும்புகழோடே.

திருச்சிற்றம்பலம்.

திருப்புறம்பயம் திருவிராகம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மறம்பயமலைந்தவர்மதிட்பரிசறுத்தனை
நிறம்பசுமைசெம்மையொடிசைந்துனதுநீர்மை
திறம்பயனுறும்பொருடெரிந்துணருநால்வர்க்
கறம்பயனுரைத்தனைபுறம்பயமமர்ந்தோய்.

கருங்கழிபொருந்திரைகரைக்குலவுமுத்தந்
தருங்கழுமலத்திறைதமிழ்க்கிழமைஞானன்
சுரும்பவிழ்புறமபயமமர்ந்ததமிழ்வல்லார்
பெரும்பிணிமருங்கறவொருங்குவர்பிறப்பே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு திருச்சேய்ஞலூரின் எல்லையை அடைந்து, அது சண்டேசுரநாயனார் திருவவதாரஞ் செய்த திருப்பதிஆதலால் முத்துச்சிவிகையினின்றும் இறங்கி அப்பதியினுள்ளே நடந்துபோய் ஆலயத்தில் பிரவேசித்து சுவாமி தரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடியருளினர்.

திருச்சேய்ஞலூர்-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பீரடைந்தபாலதாட்டப்பேணுதவன்றாதை
வேரடைந்துபாய்ந்ததாளைவேர்தடிந்தான்றனக்குத்
தாரடைந்தமாலைசூட்டித்தலைமைவகுத்தலென்னே
சீரடைந்தகோயின்மல்குசேய்ஞலூர்மேயவனே.

சேயடைந்தசேய்ஞலூரிற்செல்வன்சீர்பரவித்
தோயடைந்ததண்வயல்சூழ்தோணிபுரத்தலைவன்
சாயடைந்தஞானமல்குசம்பந்தனுன்னுரைகள்
வாயடைந்துபாடவல்லார்தானுலகாள்பவரே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு திருப்பனந்தாள், பந்தணைநல்லூர், ஓமமாம்புலியூர், வாழ்கொளிபுத்தூர், கடம்பூர், நாரையூர், கருப்பறியலூர் என்னும் ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருப்பதிகம் பாடியருளினர்.

திருப்பனந்தாள் திருத்தாடகையீச்சுரம்-பண்-பழம்பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கண்பொலிநெற்றியினன்றிகழ்கையிலோர்வெண்மழுவாள்
பெண்புணர்கூறுடையான்மிகுபீடுடைமான்விடையான்
விண்பொலிமாமதிசேர்தருசெஞ்சடைவேதியனூர்
தண்பொழில்சூழ்பனந்தாட்டிருத்தாடகையீச்சுரமே.

தண்வயல்சூழ்பனந்தாட்டிருத்தாடகையீச்சுரத்துக்
கண்ணயலேபிறையானவன்றன்னைமுன்காழியர்கோ
னண்ணுயசெந்தமிழான்மிகுஞானசம்பந்தனல்ல
பண்ணியல்பாடல்வல்லாரவர்தம்வினைபற்றறுமே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பந்தணநல்லூர்-பண்-புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

இடறினர்கூற்றைப்பொடிசெய்தார்மதிலையெய்தார்சொல்லியுலகொழுந்தேத்தக்
கடறினராவர்காற்றுளாராவர்காதலித்துறைதருகோயில்
கொடியணற்யாதுங்குறைவிலார்தாம்போய்க்கோவணங்கொண்டுகூத்தாடும்
பாடினர்போடும்பந்தணநல்லூர்நின்றவெம்பசுபதியாரே.

கல்லிசைபூணக்கலையொலியோவாக்கழுமலமுதுபதிதன்னி
னல்லிசையாளன்புல்லிசைகேளாநற்றமிண்ஞானசம்பந்தன்
பல்லிசைபகுவாய்ப்படுதலையேந்திமேவியபந்தணநல்லூர்ச்
சொல்லிசைபாடல்பத்தும்வல்லார்மேற்றொல்வினைசூழ்கிலாவே.

திருச்சிற்றம்பலம்.

திருஓமாம்புலியூர் - பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

பூங்கொடிமடவாளுமையொருபாகம்புரிதருசடைமுடியடிகள்
வீங்கிருணட்டமாடுமெம்விகிர்தர்விருப்பொடுமுறைவிடம்வினவிற்
றேங்கமழ்பொழிலிற்செழுமலர்கோதிச்செறிதருவண்டிசைபாடு
மோங்கியமறையோரோமாம்புலியூருடையதளியதுவே.

விளைதருவயலுள்வெயில்செறிபவளமெய்திகழ்மெய்புலத்திடறி
யொளிதரமல்குமோமாம்புலியூருடையசீர்வடதளியானைக்
களிதருநிவப்பிற்காண்டகுசெல்வக்காழியுள்ஞானசம்பந்த
னளிதருபாடல்பத்தும்வல்லார்கள்மாலோகத்திருப்பாரே

திருச்சிற்றம்பலம்.

திருவாழ்கொளிபுத்தூர் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொடியுடைமார்வினர்போர்விடையேறிப்பூதகணம்புடைசூழ்க்
கொடியுடையூர்திரிந்தையங்கொண்டுபலபலகூறி
வடிவுடைவாணெடுங்கண்ணுமைபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்க்
கடிகமழ்மாமலரிட்டுக்கறைமிடற்றானடிகாண்போம்.

கல்லுயர்மாக்கடனின்றுமுழங்குங்கரைபொருகாழியமூதூர்
நல்லுயர்நான்மறைநாவினற்றமிழ்ஞானசம்பந்தன்
வல்லுயர்சூலமும்வெண்மழுவாளும்வல்லவன்வாழ்கொளிபுத்தூர்
சொல்லியபாடல்கள்வல்லார்துயர்கெடுதலெளிதாமே.

திருச்சிற்றம்பலம்

திருநாரையூர் - பண் பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

காம்பினைவென்ற மென்றோளிபாகங் கலந்தானலந்தாங்கு, தேம்புனல்சூழ் திகழ்மாமடுவிற்றிரு நாரையூர்மேய, பூம்புனல்சேர்புரி புன்சடையான் புலியினுரிதோன்மேற், பாம்பினைவீக்கிய பண்டரங்கன்பாதம்பணிவோமே.

தண்மதிதாழ் பொழில்சூழ்புகலித்தமிழ்ஞானசம்பந்த, னெண்மதிசேர் சடையானுதையுந் திருநாரையூர்தன்மேற், பண்மதியாற்சொன்ன பாடல்பத்தும் பயின்றார்வினைபோகி, மண்மதியாது போய்வான்புகுவர் வானோரெதிர்கொளவே.

திருச்சிற்றம்பலம்.

திருநாரையூர் - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

கடலிடைவெங்கடு நஞ்சமுண்ட கடவுள்விடையேறி, யுடலிடையிற் பொடிப்பூசவல்லா னுமையொடொருபாக, னடலிடையிற் சிலைதாங்கியெய்தவம்மானறியார்மே, னடலைவினைத்தொகை தீர்த்துகந்தானிட நாரையூர்தானே.

பாடியலுந் திரைசூழ்புகலித் திருஞானசம்பந்தன், சேடியலும் புகழோங்குசெம்மைத் திருநாரையூரான்மேற், பாடியதண்டமிழ் மாலைபத்தும்பரவித் திரிந்தாக, வாடிய சிந்தையினார்க்கு நீங்கு மவலக்கடறானே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கருப்பறியலூர்-திருவிராகம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சுற்றமொடுபெற்றவைதுயக்கறவறுத்துக், குற்றமில்குணங்களொடுகூடுமடியார்கண்
மற்றவரைவானவர்தம்வானுலகமேற்றக், கற்றவனிருப்பதைகருப்பறியலூரே.

நலந்தருபுனற்புகலிஞானசம்பந்தன், கலந்தவர்கருப்பறியன்மேயகடவுள்ளைப்
புலந்தருதமிழ்க்கிளவிபத்துமிவைகற்று, வலந்தருமவர்க்குவினைவாடலெளிதாமே.

திருச்சிற்றம்பலம்

பின்பு அங்குநின்று புறப்பட்டுசீர்காழிக்குச் சமீபத்திலேபோனார். போம்பொழுது சீர்காழியிலிருக்கின்ற பிராமணர்களெல்லாரும் அவருடைய வரவைக்கேள்வியுற்று மிகுந்தமகிழ்ச்சிகொண்டு வீதிகளை அலங்கரித்து எதிர்கொள்ளும்படி திரண்டு சென்று திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளை முத்துச்சிவிகையின்மேலே முத்துக்குடைநிழலின் கீழே தரிசித்தார்கள் தரிசித்தவுடனே கைகள் சிரசின்மேலேறிக்குவிய கண்ணும் மனமும் களிக்க, அவரைச்சூழ்ந்து ஸ்தோத்திரம் பண்ணினார்கள், பிள்ளையார் முத்துச்சிவிகையினின்றும் இறங்கி, அவர்களோடு கூடச்சென்று, கோயிலை அடைந்து சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடிக்கொண்டு புறப்பட்டுச்சென்றார்.

செல்லும்பொழுது திருநீலகண்டப்பெரும்பாணர் பின்னேவர, அவருக்கு வீட்டுக்குப்போம்படி விடைகொடுத்து, தாம் தம்முடைய திருமாளிகைக்கு எழுந்தருளினார், எழுந்தருளும்பொழுது பார்ப்பனிகள் நெருங்கி, நிறைகுடம்தீபம் முதலாயின ஏந்த, தாயாராகிய பகவதியார் வந்துதிருநீற்றுக் காப்புச்சாத்தி வணங்கித்துதிக்க, பிள்ளையார் அவருக்கு அருள்செய்து திருமாளிகையினுள்ளே பிரவேசித்தார், திருஞானசம்பந்தப் பிள்ளையார் தினந்தோறும் தோணியப்பரைத் தரிசனஞ்செய்து பதிகம் பாடிக்கொண்டு இருக்கும்நாளிலே உபநயனப்பருவம் வர, பிராமணர்கள் வேதவிதிப்படி உபநயனச்சடங்கு செய்ய, சுத்தசாட்குண்ணிய பரிபூரணமாகிய சிவத்துவம் பெற்ற திருஞானசம்பந்தப் பிள்ளையார்தமக்கு அது வேண்டுவதன்றாயினும் உலகத்திலே வைதிக கர்மத்தை ஸ்திரப்படுத்தல்வேண்டும் எனத்தமது திருவுளத்திலே முகிழ்த்த பெருங்கருணையினாலே அதற்கிசைந்து, யஞ்ஞோபவீததாரணம் செய்தருளினார். பின்பு பிராமணர்கள் உமக்கு நான்குவேதத்திற்கும் அதிகாரம் தந்தோம் என்று சொல்லி மந்திரோபதேசம் செய்யப் புகும்பொழுது பிள்ளையார். எண்ணிறந்த வேதங்களைஓதி' அவற்றிற்கு அங்கமாகிய பலகலைகளையும் எடுத்துச்சொல்லியருளினார். பிராமணர்கள் அவர் பரமசிவனுடைய திருவருள் பெற்றமையை நினைந்து வியந்து அவரை நமஸ்கரித்து ஸ்தோத்திரஞ்செய்து, தாங்கள் முன்பயின்ற வேதங்களை அவரிடத்திற்கேட்டு ஐயந்திரிபற உணர்ந்தார்கள், பரமாசாரியராகிய ஆளுடையபிள்ளையார் அந்தப்பிராமணருடைய சந்தேகந் தீரும்படி எல்லாவற்றையும் அருளிச்செய்துபின் சகல மந்திரங்களுக்கும்வித்து ஸ்ரீபஞ்சாக்ஷரம் என்பதை அவர்களுக்கும் மற்றை யாவருக்கும் விளக்கும்பொருட்டு, "மந்திரநான்மறையாகி" என்பதை முதலினுடைய ஸ்ரீபஞ்சாட்சரப் பதிகத்தைப் பாடியருளினார்.

திருப்பஞ்சாட்சரப்பதிகம் - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

துஞ்சலுந்துஞ்சலிலாதபோழ்தினு, நெஞ்சகநைந்துநினைமினுநாடொறும்
வஞ்சகமற்றடிவாழ்த்தவந்தகூற், றஞ்சவுதைத்தனவஞ்செழுத்துமே.

மந்திரநான்மறையாகிவானவர், சிந்தையுணின்றவர்தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க், கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே,

நற்றமிழ்ஞானசம்பந்தனுன்மறை, கற்றவன்காழியர்மன்னனுன்னிய
வற்றமிழ்மாலையீரைந்துமஞ்செழுத், துற்றனவல்லவரும்பராவரே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு பிராமணர்கள் அதைக்கேட்டு மனமகிழ்ந்து அவருடைய திருவருளைத் தலைமேற்கொண்டு வணங்கித்துதித்து உய்ந்தார்கள். பிள்ளையார் தினந்தோறும் தோணியப்பரை வணங்கிப் பதிகம்பாடிக்கொண்டு அடியார்களோடும் இருக்குநாளிலே, திருநாவுக்கரசு சுவாமிகள் அவருடைய மகிமையைக் கேள்வியுற்று அவரை வணங்குதற்கு நினைந்து சீர்காழிக்குச் சமீபத்திலே வந்தருளினர். பிள்ளையார் அதைக்கேட்டுத் திருவுளமகிழ்ந்து அடியார்கூட்டத்தோடும் அவரை எதிர்கொள்ளப் போனார் எதிரேவந்த திருநாவுக்கரசு சுவாமிகள் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளை வணங்க திருஞானசம்பந்த மூர்த்தியும் அவரைவணங்கி கோயிலுக்கு அழைத்துக் கொண்டுபோய் சுவாமிதரிசனம் செய்வித்து, தம்முடைய திருமாளிகையிற் கொண்டு சென்று திருவமுது செய்வித்தார், சிலநாள் ஆயினபின் திருநாவுக்கரசு சுவாமிகள் பிறஸ்தலங்களை வணங்கும்படி செல்ல திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருக்கோலக் காவரைக்கும் அவரோடு சென்று சீர்காழிக்குத் திரும்பினர் அங்கே தோணியப்பர்மேல்பலவகைப்பட்ட திருப்பதிகங்களைப்பாடிக் கொண்டிருந்தார். அவைகள் எல்லாவற்றையும் திருநீலகண்டப் பெரும்பாணர் விறலியாரோடும்பாடி, யாழில் இட்டு வாசித்துக்கொண்டு பிள்ளையாரோடு சீர்காழியில் இருந்தார்.

திருப்பிரமபுரம்-மொழிமாற்று-பண் வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

காடதணிகலங்காரரவம்பதிகாலதனிற்
றோடதணிகுவர்சுந்தரக்காதினிற்றாச்சிலம்பர்
வேடதணிவர்விசயற்குருவம்வில்லுங்கொடுப்பர்
பீடதணிமணிமாடப்பிரமபுரத்தாரே.

கல்லுயர்கழுமலவிஞ்சியுண்மேவியகடவுடன்னை
நல்லுரைஞானசம்பந்தன்ஞாநந்தமிழ்நன்குணர்தல்
சொல்லுதல்கேட்டல்வல்லோர்தொல்லைவானவர்தங்களோடுஞ்
செல்குவர்சீரருளாற்பெறலாஞ்சிவலோகமதே.

திருச்சிற்றம்பலம்.

* காடது - பதி அணிகலம் காரரவம் காலதனிற்றாச்சிலம்பர்-தோடதணிகுவர்-சுந்தரக்காதினில் வேடதணிவர் உருவம்விசயற்குவில்லுங் கொடுப்பவர் இவ்வாறு மொழிமாற்றத்தக்கது.

ஸ்ரீகாழி - திருமாலைமாற்று.

திருச்சிற்றம்பலம்.

யாமாமாநீயாமாமா, யாழீகாமாகாணாகா, காணாகாமாகாழீயா, மாமாயாநீமாமாயா.

(இதன்பொருள்.)

யாமாமா-என்பது. எனது ஆத்மபோதசேட்டையுங் கருவிகளின் சேட்டையும் இவைகளால் அவைகள் ஆமாறெவ்வாறென்னில்நீயாமாம் அறிவுக்கறிவாய்நிற்கின்ற நினதுசேட்டையொழிந்து வேறொன்றற்ற சற்காரியமாயுள்ளவனே, மாயாழீ-எ-து. மிகுதிப்பட்டு மேலாயிருந்துள்ள நாதசொரூபமா யிராநின்ற யாழையுடையானே அத்தன்மை மிகுதிபட்டு நலஞ்சிறந்துள்ள யாழை யிடைவிடாமல் தடவிவாசித்தலான்மகா நல்ல வீணைதடவியென்றும்பொருள். கா-இது இடைநிலை, மாகாணாகா எ-து, பரமாகாசத்தைக் கீழ்ப்படுத்தப்பட்டு மலைகளுக் கெல்லாங் குலமலையாகிய ஸ்ரீகயிலாயத்தின் கண்ணேயெழுந்தருளி யிருப்பவனே, காணாகா-எ-து என்னுள்ளக்கண்ணுக்குத் தோன்றப்பட்டுள்ள திருமேனியையுடையானே, மாகாழீயா-எ-து ஊழிகாலத்தின்கண்ணும் அழிவின்மையாகிய மேன்மையைப் பொருந்தியுள்ளகாழியையுடையானே, மாம் எ-து ஈங்குனதருள்பெறாத பேரிழப்பையுடையமாகிய எம்மை, ஆயாவீ-இடபவாகனத்தின் கண்ணே ஏறிவந்தெனக்குப் பொய்கைக்கரையின்கண்ணேவெளிப்பட்டவனே, மாமாயா- எ-து. மாமாயையாகிய குடிலையைக்கொண்ட சுத்தமாயையிலுள்ள தத்துவங்களையுண்டாக்கிக்கன்மம்பொசித்தல் காரணமாகத்திரோதாயி சத்தியாலே மறைத்துள்ளமயக்கமே யறிவாகப்பெத்ததைச் செலுத்தப்பட்டவனே, இடையே நிறுத்தின, கா-எ-து. அந்தமாயாமயக்கம் எனதறிவிற்சீவியாமல் ஒழித்துஉன்னை எனக்குள்ளபடி தந்து என்னை நீ நிகழாமற்கொண்டு இவ்வாறு நீயிரண்டறவாழ்ந்து இரட்சிப்பாயாக-என்றவாறு.

திருச்சிற்றம்பலம்.

நேரகழாமிதயாசழிதா, யேனனியேனனிளாயுழிகா
காழியுளானினயேனினயே, தாழிசயாதமிழாகானே

(இதன்பொருள்)

நோகழாமிதயசழிதா-என்பது மானைக்காட்டி மானைப்பிடிப்பது போல வெனற்பால திருமேனி கொண்டருளியென்னை யொருகாலத்திலும் விட்டு நீங்கப்படாமல் என்னிடத்திலே மிருதியாகச் சீவிக்கிப்பட்டமலத்திரயங்களாகிய குற்றங்களை அழியாநின்றுள்ளவனே, எனநீ எ-து ·இனதுபரிபூரணமான அனுவருவநிலையில் எனக்குண்டானதாசோகநிலை யெல்லாநீயே ஏனநிளாயுழி- எ-து. என்னிடத்திலே நின்று என்னையொழித்துக்கோதிலாவமுதாக நீயேவாழப்பட்டுஎன்னை சிறிதும் தோன்றவிடாமல் ;இரட்சியாநின்றுள்ளவனே, காழியுலா இத்தன்மையானபிரமசாயுச்சியத்தை அடியேற்குப் பிர[illegible]திப்பான் பொருட்டாக காழியென்னும்பதியைப்படைத்துளானே எனதொருவிண்ணப்பத்தைக்கேட்டருள்வாயாக, நினயேநினயேதாழிச- உன்னைச் செய்யுட்கருத்தாக வுடைய இம்மாற்றென்னும் பெயரையுடையதுமாய் விரிந்துள்ள பாடலானது ஆதமிழாகரனே-ஐயோதமிழுக்குப்படுதுறையாகிய யான் எனதுபோதத்தாற்பாடியபாடலென்று உலகத்தாருரைசெய்வதேயாதலால் நீயறிய யான்பாடியதில்லை என்கின்றசெய்தி யுனக்கே நிகழுமாதலால் இப்பாடலையேத்தத் தவஞ்செய்தாரு நீயேயடிமைகுலையாத சாயுச்சியத்தைப் பெறுவார்கள்—எ-று.

திருச்சிற்றம்பலம்.

திருப்பிரமபுரம்·வழிமொழித்திருவிராகம்·பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

சுரருலகுநரர்கள்பயிறரணிதலமுரணழியவரணமதின்முப்
புரமெரியவிரவுவகைசரவிசைகொள்கரமுடையபரமனிடமாம்
வரமருளவரன்முறையினிரைநிறைகொள்வருசுருதிசிரவுரையினாற்
பிரமனுயரரனெழில்கொள்சரணவிணைபரவிவளர்பிரமபுரமே.

ஒழுகலரிதழிகலியிலுழியுளகுபழிபெருகுவழியைநினையா
முழுதுடலிலெழுமயிர்கடழுவுமுனிகுழுவினொடுகெழுவுசிவனைத்
தொழுதுலகிலிழுகுமலமழியும்வகைகழுவுமுரைகழுமனகரப் [வே.
பழுதிலிறையெழுதுமொழிதமிழ்விரகன்வழிமொழிகண்மொழிதகைய

திருச்சிற்றம்பலம்.

திருக்கோமூத்திரி-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பூமகனூர்பூத்தேளுக்கிறைவனூர்குறைவிலாப்புகலிபூமேன்
மாமகளூர்வெங்குருநற்றோணிபுரம்பூந்தராய்வாய்ந்தசிரஞ்சிச்
சேமமிகுசிரபுரஞ்சீர்ப்புறவநிறைபுகழ்ச்சண்பைகாழிகொச்சை
காமனைமுன்காய்ந்தநுதற்கண்ணவனூர்கழுமலநாங்கருதுமூரே.

அம்மான்சேர்கழுமலமாச்சிரபுரம்வெங்குருக்கொச்சைபுறவமஞ்சீர்
மெய்ம்மானத்தொண்புகலிமிகுகாழிதோணிபுரந்தேவர்கோனூ
ரம்மான்மன்னுயர்சண்பைதராயயனூர்வழிமுடக்குமாவின்பாச்சு
றம்மாளுென்றியஞானசம்பந்தன்றமிழ்கற்போர்தக்கோர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுமலம் - திருஇயமகம்.

திருச்சிற்றம்பலம்.

உற்றுமைசேர்வதுமெய்யினையேயுணர்வதுநின்னருண்மெய்யினையே
0 கற்றவர்காய்வதுகாமனையேகனல்விழிகாய்வதுகாமனையே
0 யற்றமறைப்பதுமுன்பணியேயமரர்கள்செய்வதுமுன்பணியே
பெற்றுமுகந்ததுகந்தனையேபிரமபுரத்தையுகந்தனையே.

கற்றவர்காய்வது காமனையே-எ-து. உனதுசத்திய தரிசனத்தை யலைவறக் கற்றவர்கள் விடப்படடது பசுத்துவம் பொருந்திய க்ஷேத்திர மாகிய தேகாதி பிரபஞ்சமே. 0 அற்றமறைப்பது முன்பணியே-எ-து. உனது திருவாணத்தை மறைப்பது முன்தொங்கலான பாம்புகளே.

பருமதின்மதுரைமன்னவையெதிரேபதிகமதெழுதிலையவையெதிரே
வருநதியிடமிசைவருகரனேவசையொடுமலர்கெடவருகரனே
கருதலின்இசைமுரறருவருளேகழுமலமரிறைதருமருளே
மருவியதமிழ்விரகன்மொழியேவல்லவர்தம்மிடர்திடமொழியே.

(இதன்பொருள்)

பருமதின் மதுரைமன்னவையெதிரே-எ-து. பருத்தமதில்சூழ்ந்த மதுரைக்குப் பதியாகிய பாண்டியராசனது சபைக்குமுன்பே, பதிகம தெழுது-எ-து. திருப்பதிக மெழுதப்பட்ட, இலையவைஏடுகளானவை வருந்தியிடைமிசை வருகரனே-எ-து. வருகின்ற வைகையாற்றினடுவே எதிரிட்டுப் போம்வகை துணைசெய்து செலுத்திப் போக்கின்ற திருக் கரங்களை யுடையவனே, வசையொடும் அலர்கெட-எ-து, ஏடெதிர் போக விசயஞ்செய்து சமனரது புறனுரையும், பரிபவச் சொல்லும் கெடுவான்பொருட்டாக, அருகு-எ-து. சமணரை, அரனே-எ-து- கெடுக்கப்பட்டவனே, கருதலின்இசை முரல் தருமருளே-எ-து. கேட்போரது கருத்தையழிக்கும் இசைத்திரத்துக் குரியாருமாய்த் தன்மசிலரு மாகிய மறையோர் வாழ்கின்ற, கழுமலம் அமரிறை தருமருளே-எ-து. திருக்கழுமலத்தின்கண் வீற்றிருக்கும் தம்பிரான் பிரசாதத் திருவருளை, மருவிய தமிழ்விரகன் மொழியே-எ-து. இடைவிடாமற் பொருந்திய தமிழ்விரகனாகிய யான்பாடிய பாடலையே, வல்லவர் தம்மிடர் திட மொழியே-எ-து. செல்கின்றவர்களுடைய பிறவித்துன்பமானது விட்டு நீங்குவது சத்தியமே—என்றவாறு.

திருச்சிற்றம்பலம்

சீகாழி - திருஏகபாதம் - பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

பிரமபுரத்துறைபெம்மானெம்மான், பிரமபுரத்துறைபெம்மானெம்மான்
பிரமபுரத்துறைபெம்மானெம்மான், பிரமபுரத்துறைபெம்மானெம்மான்.

(இதன்பொருள்)

"பிரமபுரத்துறை பெம்மானெம்மான்" என்பது பிரமம்-ஞானாகாசமாகிய பராசத்தியை, புரத்து-அந்தப் பரபூரணத்தை. உறை - மிகுதியா கவியக்கப்பட்ட, பெம்மான் பெருமான், எம்மான் - எந்தப்பெரியோன், (இனிப்பொழிப்பு) ஞானாகாசமாகிய பராசத்தியான பம்பூரணத்தை மிகவும்வியந்து அந்தப் பராசத்திக்கு அதீதமாகிய சுகமே வடிவாய் முதல் நடுவிறுதிகாணுதவஸ்து எந்தப்பெரியோன், "பிரமபுரத்துறை பெம்மானெம்மான்" எ-து. பிரமம்-மேல், புரம்-நிலம், உறை-நீர், பெம்-விருப்பம்-மான் மான்போலும் விழியையுடையபெண், எம்-எம்மை நீங்காத நிலைமையையுடைய ஆன்-ஆத்மா, (இனிப்பொழிப்பு) ஆகாசத்தின்கண்ணே யோடுகின்ற கங்காதேவியை விரும்பித் திருமுடியிலே, வைத்தவன் என்னை நீங்காத நிலைமையையுடைய எனதுயிர், "பிரமபுரத்துறை பெம்மானெம்மான்" பிரமம்-என்பது. பிரமத்துவம், புரம் சரீரம், உறை-எண்ணுதல், பெம்-எ-து ஆசை, ஆன்-அமையாமை, எம்மான் என்னையொக்க வந்தவன், (இனிப்பொழிப்பு) பிரமரூபத்திலே யெண்ணப்பட்ட என்னை முத்தியிலே விடுமைக்கு அமையாத இச்சையனுகிவந்தவன் என்னையொத்த தன்மையன், "பிரமபுரத்துறை பெம்மானெம்மான்" எ-து. பிரமபுரமென்கின்ற திருப்பதியிலே யுறைகின்ற கர்த்தாவானவன் என்னுடைய சுவாமி—என்றவாறு,

திருச்சிற்றம்பலம்.

கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை, கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை
கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை, கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை.

(இதன்பொருள்)

"கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை" கழுமல்என்பது. மிகுதிப்பட்டகுற்றம், அமுது-எ-து. நீர், பதிக்க-எ-து, விளைவிக்க, உணியன்-எ-து. உள்ளநீர், கட்டு-எ-து. வடிவாகக்கட்டுண்டல், உரை-எது. தேய்தல், (இனிப்பொழிப்பு) மிகுதிப்பட்டதோஷமாயுள்ள சுக்கிலசுரோணிதமாகிய விருநீரின்கண்பதிந்து விளைதற்குள்ள தந்தம்மைக்குலையாம லெக்கண்ணும் விட்டுவிளங்குகிற, " கழுமலமுதுபதிக்கவுணியன் கட்டுரை" கழும்-என்பது. மயக்கம், அலம்-எ-து. அலக்கண்படுதல், அமுது-எ-து. அமுதம், பதி-எ-து. கத்தா, க-சிரசு, உணியன் எ-து. உண்ணப்பட்டவன், கட்டு-எ-து விளக்கம் உறை-எ-து பொன், (இனிப்பொழிப்பு மாயாமயக்கத்தின் கண்ணேமயங்கிப் பெத்தமுத்திபிரண்டுந்தெரியாமல்திண்டாடப்பட்டமலபோதர்க்கு

அமுதம்போன்றசித்தாயுள்ளவனுமாய் விட்டுவிளங்காநின்றபொன்னுருவுடையவனைப் சிருட்டிக்குக் கர்த்தாவாகிய பிரமாவினது கபாலத்திலே பிச்சைகொண்டு நுகருங் கருணையாளன், "கழுமலமுதிபதிக் கவுணியன்கட்டுரை" கீழ்ச்சொன்ன பதியின்கண் கவுணியகோத்திரத்துவந்த மறையோனாகிய எனது கட்டுகட்டாகியபாடலை, உரை- உரைப்பீராக. காட்டு-எ-து. கட்டெனக் குறுகிநின்றது (இனிப்பொழிப்பு) திருக்கழுமலமென்னு மூவாப்பழம்கிழமைப் பன்னிருபெயர்பெற்ற அனாதி மூலமாகிய பதியிடத்துக் கவுணியகோத்திரத்தில் உற்பவமானநான் நிவேதிக்கப்படுங் காட்டாகிய இப்பாடலைக் கீழ்ச்சொன்னவயிற்றிலும் மலத்திரயங்களிலும் அழுந்தாநின்ற ஒருத்தராகிலும் பலராகிலும் உரைசெய்வார் உயர்ந்தார்களாதலால் இப்பாடலை இடைவிடாமல் உரைசெய்வீராக-என்றவாறு.

திருச்சிற்றம்பலம்.

திருப்பிரமபுரம்-திருவிருக்குக்குறள் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அரணையுள்குவீர்-பிரமனூருளெம்-பரனையேமனம்-பரவியுய்மினே. [மே
தொழுமனத்தவர்-கழுமலத்துறை-பழுதில்சம்பந்தன்-மொழிகள்பத்து

திருச்சிற்றம்பலம்.

திருவெழுகூற்றிருக்கை.

திருச்சிற்றம்பலம்.

ஒருருவாயினை மானாங்காரத் - தீரியல்பாயொருவிண்முதல் பூதலமொன்றியவிருசுடரும்பர்கள் பிறவும்படைத்தளித்தழிப்பமும் மூர்த்திகளாயினை-யிருவரோடொருவ னாகிநின்றனை-யோரானீழலுன் கழலிரண்டு-முப்பொழுதேத்திர நால்வர்க் கொளிநெறிகாட்டினை-நாட்டமூன்றாகக்கோட்டினை-யிருநதியரவமோடொருமதிசூடினை-யொருதாளீரயின் மூவிலைச்சூல நாலைகான்மான்மறி யைந்தலையரவ-மேந்தினை காய்ந்தநால் வாய்மும்மதத்திருகோட்டொரு கரியீடழித்துரித்தினை-யொருதனுவிரு கால்வளையவாங்கி முப்புரத்தோடு நானிலமஞ்சக்கொன்றுதலத்துறதவுணரை யறுத்தனை-யைம்புலனாலாமந்தக் கரணமுக்குண மிருவளியொருங்கியவானோ-ரேத்தநின்றனையொருங்கியமனத்தோ டிருபிறப்போர்ந்து முப்பொழுதுகுறைமுடித்து-நான்மறையோதி யையவகைவேள்வி-யமைத்தாரங்கமுத லெழுத்தோதி-வரன்முறைபயின்றெழு வான்றனைவளர்க்கும்-பிரமபுரம்பேணினை-யறுபதமுரலும் வேணுபுரம்விரும்பினை-யிகலிய மைந்துணர்புகடியமர்ந்தனைபொங்கு நாற்கடல்சூழ்வெங்குருவிளங்கினை பாணிமூவுலகும்புதையமேன்மிதந்த - தோணிபுரத்துறைந்தனை தொலையாவிருநிதி-வாய்ந்த பூந்தராயேய்ந்தனை-வரபுரமென்றுணர் சிரபுரத்து

றைந்தனை-யொருமலையெடுத்த விருதிறலரக்கன் - விரல்கெடுத்தருளினை புரவம்புரிந்தனை-முந்நீர்த்துயின்றோனுன் முகனறியாப் பண்பொடுநின் றனை சண்பையமர்ந்தனை-யையுறுமமணரு மருவகைத்தேரரு-மூழியுமு ணராக் காழியமர்ந்தனை யெச்சனேழிசையோன் கொச்சையை மெச் சினை-யாறுபதமுமைந்தமர்கல்வியுமறைமுதனுள்குமூன்றுகாலமுந்தோ ன்ற நின்றனை யிருமையினொருமையு-மொழிமைதன்பெருமையு மறுவி லாமறையோர்-கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை-கழுமலமுதுப்திக் கவுணியனறியு-மனையதன்மையை யாதலினின்னை - நினையவல்லவரில்லை நீணிலத்தே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பூந்தராய்ஈரடிமேல்வைப்பு-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றமபலம்.

தக்கன்வேள்விதகர்த்தவன்பூந்தராய், மிக்கசெம்மைவிமலன்வியன்கழற் சென்றுசிந்தையில்வைக்கமெய்க்கதி, நன்றதாகியநம்பன்றானே.

புந்தியான்மிகநல்லவர்பூந்தரா, யந்தமில்லெம்மடிகளைஞானசம் பந்தன்மாலைகொண்டேத்திவாழுதும், பந்தமார்வினைபாறிடுமே.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீபுகலிநாலடிமேல்வைப்பு-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

இயலிசையெனும்பொருணின்றிறமாம், புயலனமிடறுடைப்புண்ணியனே கயலனவரிநெடுங்கண்ணியோடு, மயலுலகடிதொழவமர்ந்தவனே.

கலனுவதுவெண்டலைகடிபொழிற்புகலிதன்னு
ணிலனுடொருமின்புறநிறைமதியருளினனே.

புண்ணியர்தொழுதெழுபுகலிந்நகர். விண்ணவரடிதொழவிளங்கினானை நண்ணியஞானசம்பந்தன்வாய்மை,பண்ணியவருந்தமிழ்பத்தும்வல்லார்.

நடலையவையின்றிப்போய்நண்ணுவார்சிவனுலக
மிடராயினவின்றித்தாமெய்துவர்தவநெறியே.

திருச்சிற்றம்பலம்.

திருச்சண்பைநகர் திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

எந்தமதுசிந்தைபிரியாத பெருமானெனவிறைஞ்சியிமையோர்
வந்துதுதிசெய்யவளர் தீபமொடுதூபமலிவாய்மையதனு
லந்தியமர் சந்திபலவர்ச் சனைகள்செய்வமர்கின்றவழகன்
சந்தமலிகொந்தளனன் மாதினொடுமேவுபதிசண்பைநகரே.

வாரின்மலிகொங்கையுமைநங்கையொடுசெங்கரன்மகிழ்ந்தமருமூர்
சாரின்முரறெண்கடல்விசும்புறமுழங்கொலிகொள்சண்பைநகர்மேற்
பாரின்மலிகின்றபுகழ்கின்றதமிழ்ஞானசம்பந்தனுரைசெய்
சீரின்மலிசெந்தமிழ்கள்செப்புமவர்சேர்வர்சிவலோகநெறியே.

திருச்சிற்றம்பலம்.

திருச்சக்கரமாற்று-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

விளங்கியசீர்ப்பிரமனூர்வேணுபுரம்புகலிவெங்குருமற்சோலை
வளங்கவருந்தோணிபுரம்பூந்தராய்சிரபுரம்வண்புறவமண்மேற்
களங்கமிலூர்சண்பைகமழ்காழிவயங்கொச்சைகழுமலமென்றின்ன
விளங்குமரன்றன்னைப்பெற்றிமையவர்தம்பகையெறிவித்திறைவனூரே.

அக்கரஞ்சேர்தருமனூர்புகலிதராய்தோணிபுரமணிநீர்ப்பொய்கை
புக்கரஞ்சேர்புறவஞ்சீர்ச்சிலம்பனூர்புகழ்க்காழிசண்பைதொல்லூர்
மிக்கரஞ்சீர்க்கழுமலமேகொச்சைவயம்வேணுபுரமயனூர்மேவிச் [ரே
சக்கரஞ்சீர்தமிழ்விரகன்றான்சொன்ன தமிழ்தரிப்போர்தவஞ்செய்தோ

திருச்சிற்றம்பலம்.

சிலநாட் சென்றபின் திருஞானசம்பந்தப்பிள்ளையார்தந்தையாரையும் மற்றைப் பிராமணர்களையும் நோக்கி இந்தத் தமிழ்நாட்டிலுள்ள சிவஸ்தலங்கள் எங்குஞ்சென்று சுவாமி தரிசன்ஞ்செய்து திருப்பதிகம் பாடிக் கொண்டு இங்கே வருவேன் என்றார், தந்தையார் நான் அருமையாக உம்மைப்பெற்றமையால் உம்மைப் பிரிந்திருக்க மாட்டேன் இருமைக்கும் இன்பம்பயக்கும் யாகமும் நான் செய்யவேண்டும் ஆதலால் இன்னுஞ்சிலநாள் உம்முடன் யாத்திரைசெய்வேன் என்றார்பிள்ளையார் அதற்கு இசைந்து தோணியப்பரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு தந்தையார்பின்வர முத்துச்சிவிகைமேற்கொண்டு முத்துக்குடை நிழற்ற திருநீலகண்டம் பெரும்பாணரோடும் மற்றையடியார்களோடும்சென்று கண்ணார்கோயிலை வணங்கிக்கொண்டு காவேரிக்கு வடபாலிலே மேற்றிசை நோக்கிப்போய் புள்ளிருக்கும் வேளூர், நின்றியூர், நீடூர், புன்கூர் மண்ணிபடிக்கரை, குருக்கை, அன்னியூர், பந்தனநல்லூர், மனஞ்சேரி, எதிர்கொள்பாடி, வேள்விக்குடி, கோடிகா, கஞ்சனூர் மங்கலக்குடி, வியலூர், திருந்துதேவன்குடி, இன்னம்பர், வடகரங்காடுதுறை, பழனம், திருவையாறு, பெரும்புலியூர், நெய்த்தானம், மழபாடிகானூர், அன்பிலாந்துறை மாந்துறை என்னும் ஸ்தலங்கள் தோறும் போய் சுவாமி தரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடியருளினர்.

திருக்கண்ணார்கோயில்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

தண்ணார்திங்கட்பொங்கரவந்தாழ்புனல்சூடிப்
பெண்ணாணயபேரருளாளன்பிரியாத
கண்ணார்கோயில்கைதொழுவோர்கட்கிடர்பாவந்
நண்ணவாகுநல்வினையாயநணுகும்மே.

காமருகண்ணார்கோயிலுளானைக்கடல்சூழ்ந்த
பூமருசோலைப்பொன்னியல்மாடப்புகலிக்கோ
னாமருவொன்மைத்தன்மையுள்ஞானசம்பந்தன்
பாமருபாடல்பத்தும்வல்லார்மேற்பழிபோமே.

திருச்சிற்றம்பலம்.

திருப்புள்ளிருக்குவேளூர்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

கள்ளார்ந்தபூங்கொன்றைமதமத்தங்கதிர்மதிய
முள்ளார்ந்தசடைமுடியெம்பெருமானாருறையுமிடந்
தள்ளாயசம்பாதிசடாயென்பார்தாமிருவர்
புள்ளானார்க்கரையனிடம்புள்ளிருக்கும்வேளூரே.

செடியாயவுடறீர்ப்பான்றீவினைக்கோர்மருந்தாவான்
பொடியாடிக்கடிமைசெய்தபுள்ளிருக்கும்வேளூரைக்
கடியார்ந்தபொழிற்காழிக்கவுணியன்சம்பந்தன்சொன்
மடியாதுசொல்லவல்லார்க்கில்லையாமறுபிறப்பே.

திருச்சிற்றம்பலம்.

திருநின்றியூர்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

சூலம்படைசுண்ணப்பொடிசாந்தஞ்சுடுநீறு
பாலம்மதிபவளச்சடைமுடிமேலதுபண்டைக்
காலன்வலிகாலினொடுபோக்கிக்கடிகமழுந்
நீலம்மலர்ப்பொய்கைநின்றியூரின்னிலையோர்க்கே.

குன்றம்மதுவெடுத்தானுடல்தோளுந்நெரிவாக
நின்றங்கொருவிரலாலுறவைத்தானின்றியூரை
நன்றார்தருபுகலித்தமிழ்ஞானமிகுபந்தன்
குன்றாத்தமிழ்சொல்லக்குறைவின்றிநிறைபுகழே.

திருச்சிற்றம்பலம்.

திருப்புன்கூர்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

முந்திநின்றவினைகளவைபோகச், சிந்திநெஞ்சேசிவனார்திருப்புன்கூ
ரந்தமில்லாவடிகளவர்போலுங், கந்தமல்குகமழ்புன்சடையாரே.

மாடமல்குமதில்சூழ்காழிமன், சேடர்செல்வருறையுந்திருப்புன்கூர்
நாடவல்லஞானசம்பந்தன், பாடல்பத்தும்பரவிவாழ்மினே.

திருச்சிற்றம்பலம்.

திருமணஞ்சேரி-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

அயிலாருமம்பதனாற்புரமூன்றெய்து, குயிலாருமென்மொழியாளொருகூறாகி
மயிலாருமல்கியசோலைமணஞ்சேரி, பயில்வானைப்பற்றிநின்றார்க்கில்லைபாவமே.

கண்ணாருங்காழியர்கோன்கருத்தார்வித்த, தண்ணார்சீர்ஞானசம்பந்தன்றமிழ்மாலை
மண்ணாருமாவயல்சூழ்ந்தமணஞ்சேரி, பண்ணாரப்பாடவல்லார்க்கில்லைபாவமே.

திருச்சிற்றம்பலம்.

திருத்துருத்தியுந் திருவேள்விக்குடியும்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

ஓங்கிமேலுழிதருமொலிபுனற்கங்கையையொருசடைமேற்
றாங்கினாரிடுபலிதலைகலனாக்கொண்டதம்மடிகள்
பாங்கினாலுமையொடும்பகலிடம்புகலிடம்பைம்பொழில்சூழ்
வீங்குநீர்த்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே

விண்ணுலாம்விரிபொழில்விரைமணற்றுருத்திவேள்விக்குடியு
மொண்ணுலாமொலிகெழலாடுவராரிவையோடுறைபதியை
நண்ணுலாம்புகலிரிளருமறைஞானசம்பந்தன்சொன்ன
பண்ணுலாமருந்தமிழ்பாடுவாராடுவார்பழியிலரே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கோடிகாத் திருவிராகம்-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

இன்றுநன்றுநாளைநன்றென்றுநின்றவிச்சையாற்
பொன்றுகின்றவாழ்க்கையைப்போகவிட்டுப்போதுமின்
மின்றயங்குசோதியான்வெண்மதிவிரிபுனற்
கொன்றைதுன்றுசென்னியான்கோடிகாவுசேர்மினே.

கொந்தணிகுளிர்பொழிற்கோடிகாவுமேவிய
செந்தழலுருவனைச்சீர்மிகுதிறலுடை
யந்தணர்புகலியுளாயகேள்விஞானசம்
பந்தன்றமிழ்வல்லார்பாவமானபாறுமே.

திருச்சிற்றம்பலம்.

திருமங்கலக்குடி-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சீரினார்மணியும்மகில்சந்துஞ்செறிவரை
வாரிநீர்வருபொன்னிவடமங்கலக்குடி
நீரின்மாமுனிவன்னெடுங்கைகொடுநீர்தனைப்
பூரித்தாட்டியர்ச்சிக்கவிருந்தபுராணனே.

மந்தரமாம்பொழில்சூழ்மங்கலக்குடிமன்னிய
வெந்தையையெழிலார்பொழியற்காழியர்காவலன்
சிந்தைசெய்தடிசேர்த்திடுஞானசம்பந்தன்சொன்
முந்தியேத்தவல்லாரிமையோர்முதலாவரே.

திருச்சிற்றம்பலம்.

திருவியலூர்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

குரவங்கமழ்நறுமென்குழலரிவையவள்வெருவம்
பொருவெங்கரிபடவென்றதனுரிவையுடலணிவோ
னரவும்மலைபுனலும்மிளமதியுங்நகுதலையும்
விரவுஞ்சடையடிகட்கிடம்விரிநீர்வியலூரே.

விளங்கும்பிறைசடைமேலுடைவிகிர்தன்வியலூரைத்
தளங்கொண்டதொர்புகலித்தகுதமிழ்ஞானசம்பந்தன்
றுளங்கில்தமிழ்பரவித்தொழுமடியாரவரென்றும்
விளங்கும்புகழதனோடுயர்விண்ணும்முடையாரே.

திருச்சிற்றம்பலம்.

திருந்துதேவன்குடி-பண் கொல்லி.

திருச்சிற்றம்பலம்

மருந்துவேண்டில்லிவைமந்திரங்களில்லிவை
புரிந்துகேட்கப்படும்புண்ணியங்களிவை
திருந்துதேவன்குடித்தேவர்தேவெய்திய
வருந்தவத்தோர்தொழுமடிகள்வேடங்களே.

சேடர்தேவன்குடித்தேவர்தேவன்றனை
மாடமோங்கும்பொழின்மல்குதண்காழியா
னுடவல்லஃதமிழ்ஞானசம்பந்தனற்
பாடல்பத்தும்வல்லார்க்கில்லையாம்பாவமே.

திருச்சிற்றம்பலம்.

திருஇன்னம்பர் திருமுக்கால்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

எண்டிசைக்கும்புகழின்னம்பர்மேவிய, வண்டிசைக்குஞ்சடையீரே
வண்டிசைக் குஞ்சடையீருமைவாழ்த்துவார். கொண்டிசைக்குந்தொழிலோரே.

ஏடமர்பொழிலணியின்னம்பரீசனை, நாடமர்ஞானசம்பந்த
னுடமர்ஞானசம்பந்தனற்றமிழ், பாடவல்லார்பழியிலரே.

திருச்சிற்றம்பலம்.

திருவடகுரங்காடு துறை பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

கோலமாமலரொடுதூபமுஞ்சாந்தமுங்கொண்டுபோற்றி
வாலியார்வழிபடப்பொருந்தினர்திருந்துமாங்கனிகளுந்தி
யாலுமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
நீலமாமணிமிடற்றடிகளைநினையவல்வினைகள்வீடே.

தாழிளங்காவிரிவடகரையடைகுரங்காடுதுறைப்
போழிளமதிபொதிபுரிதருசடைமுடிப்புண்ணியனைக்
காழியானருமறைஞானசம்பந்தன்கருதுபாடல்
கோழையாவழைப்பினுங்கூடுவார்நீடுவானுலகினூடே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பழனம்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்,

வேதமோதிவெண்ணூல்பூண்டுவெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப்பொலியவருவார்புலியினுரிதோலார்
நாதாவெனவுநக்காவெனவுநம்பாவெனநின்று
பாதந்தொழுவார்பாவந்தீர்ப்பார்பழனநகராரே.

வேய்முத்தோங்கிவிரைமுன்பரக்கும்வேணுபுரந்தன்னு
ளுவுய்த்தனையதிறலால்மிக்கஞானசம்பந்தன்
பேசற்கினியபாடல்பயிலும்பெருமான்பழனத்தை
வாயிற்பொலிந்தமாலைபத்தும்வல்லார்நல்லாரே.

திருச்சிற்றம்பலம்

திருவையாறு-பண்-மேகாராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

புலனைந்தும்பொறிகலங்கிநெறிமயங்கியறிவழிந்திட்டைமேலுந்தி
யலமந்தபோதாகவஞ்சேலென்றருள்செய்வானமருங்கோயில்
வலம்வந்தமடமார்கண்டமாடமுழவதிரமழையென்றஞ்சிச்
சிலமந்தியலமந்துமரமேறிமுகில்பார்க்குந்திருவையாறே.

அன்னமலிபொழில்புடைசூழையாற்றம்பெருமானையந்தண்காழி
மன்னியசீர்மறைநாவன்வளர்ஞானசம்பந்தன்மருவுபாட
லின்னிசையாலிவைபத்துமிசையுங்காலீசனடியேத்துவார்க
டன்னிசைபோடமருலகிற்றவனெறிசென்றெய்துவார்தாழாதன்றே.

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கோடல்கோங்கங்குளிர்கூவிள மாலைகுலாயசீ
ரோடுகங்கையொளிவெண்பிறைசூடுமொருவனார்
பாடல்வீணைமுழவங்குழன்மொந்தைபண்ணாகவே
யாடுமாறுவல்லானுமையாறுடையையனே.

பலிதிரிந்துழல்பண்டங்கன்மேயவையாற்றினைக்
கலிகடர்தகையான்கடற்காழியர்காவலனெ
கொள்சம்பந்தனொண்டமிழ்பத்தும்வல்லார்கள்போய்
மலிகொள்விண்ணிடைமன்னியசீர்பெறுவார்களே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பெரும்புலியூர்-பண்-காந்தாரம்

திருச்சிற்றம்பலம்.

மண்ணுமோர்பாகமுடையார்மாலுமோர்பாகமுடையார்
விண்ணுமோர்பாகமுடையார்வேதமுடையவிமலர்
கண்ணுமோர்பாகமுடையார்கங்கைசடையிற்கரந்தார்
பெண்ணுமோர்பாகமுடையார்பெரும்புலியூர்பிரியாரே.

பிறைவளருமுடிச்சென்னிப்பெரும்புலியூர்ப்பெருமானை
நறைவளரும்பொழிற்காழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
மறைவளருந்தமிழ்மாலைவல்லவர்தந்துயர்நீங்கி
நிறைவளரநெஞ்சினராகிநீடுலகத்திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்

திருநெய்த்தானம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மையாடியகண்டன்மலைமகள்பாகமதுடையான்
கையாடியகேடிற்கரியுரிமூடியவொருவன்
செய்யாடியகுவளைம்மலர்நயனத்தவளோடுந்
நெய்யாடியபெருமானிடநெய்த்தானமெனீரே.

தலமல்கியபுனற்காழியுட்டமிழ்ஞானசம்பந்தன்
நிலமல்கியபுகழான்மிகுநெய்த்தானனைநிகரில்
பலமல்கியபாடல்லிவைபத்தும்மிகவல்லார்
சிலமல்கியசெல்வன்னடிசேர்வார்சிவகதியே.

திருச்சிற்றம்பலம்.

திருமழபாடி பண் கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

அங்கையாரழலன்னழகார்சடைக், கங்கையான்கடவுள்ளிடமேவிய
மங்கையாளுறையும்மழபாடியைத், தங்கையாற்றொழுவார்தகவாளரே.

மந்தமுந்துபொழின்மழபாடியு, ளெந்தைசந்தமினிதுகந்தேத்துவான்
கந்தமார்கடற்காழியுண்ஞானசம், பந்தன்மாலைவல்லார்க்கில்லைபாவமே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கானூர் பண் தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வானார்சோதிமன்னுசென்னிவன்னிபுனங்கொன்றைத்
தேனார்போதுதானார்கங்கைதிங்களொடுசூடி
மானேர்நோக்கிகண்டங்குவப்பமாலையாடுவார்
கானூர்மேயகண்ணார்நெற்றியானூர்செல்வரே.

கழுதுதுஞ்சுங்கங்குலாடுங்கானூர்மேயானைப்
பழுதில்ஞானசம்பந்தன்சொற்பத்தும்பாடியே
தொழுதுபொழுதுதோத்திரங்கள்சொல்லித்துதித்துநின்
றழுதுநக்குமன்புசெய்வாரல்லலறுப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

திருஅன்பிலாலந்துறை-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

கணைநீடெரிமாலரவம்வரைவில்லா. விணையாவெயில்மூன்றுமெரித்தவிறைவா
பிணையாமயிலுங்குயில்சேர்மடவன்ன, மணையும்பொழிலன்பி லாலந்துறையாரே.

அரவார்புனலன்பிலாலந்துறைதன்மேற், கரவாதவர்காழியர்ஞானசம்பந்தன்
பரவாதமிழ்பத்திவைபாடவல்லார்போய், விரவாகுவவானிடைவீடெளிதாமே

திருச்சிற்றம்பலம்

திருமாந்துறை-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பெருகுசந்தனங்காரகில்பீலியும்பெருமரநிமிர்ந்துந்தித்
பொருதுகாவிரிவடகரைமாந்துறைப்புநிதனெம்பெருமானைப்
பருவினுலிருந்திரவியுமதியமும்பார்மன்னர்பணிந்தேத்த
மருதவானவர்வழிபடுமலரடிவணங்குதல்செய்வோமே

வரைவளங்கவர்காவிரிவடகரைமாந்துறையுறைவானைச்
சிரம்புரம்பதியுடையவன்கவுணியன்செழுமறைநிறைநாவ
னரவெனும்பணிவல்லவன்ஞானசம்பந்தன்புறுமாலை
பரவிடுந்தொழில்வல்லவரல்லலும்பாவமுமிலர்தாமே.

திருச்சிற்றம்பலம்

பின் மழநாட்டிலே காவேரிவடகரையே சென்று, பாச்சிலாச்சிராமத்துக்குச்சமீபிக்குமுன், அந்நகரத்திலே கொல்லி மழவன் தன்னுடைபுத்திரி முயலகனென்னும்கோயினுல் வருந்துதலைக்கண்டு கவலையுற்றுவேறொரு பரிசினுலும் நீங்காமைகண்டு தான் சைவபரம்பரையோன் ஆதலால் அவளைக் கோயிலினுள்ளே கொண்டுபோய் சுவாமி சந்நிதானத்திலே இட்டுவைத்தான். ஆளுடையபிள்ளையார் அந்நகரத்திற்கு சமீபிக்கும்பொழுது, திருஞானசம்பந்த சுவாமிவந்தார் என்று ஊதுகின்ற திருச்சின்னத்தின் ஓசையைக்கேட்டு, கொல்லிமழவன் புத்திரியைவிட்டு விரைந்து சென்று, அந்நகரத்தை மிக அலங்கரிப்பித்து பிள்ளையாரைஎதிர்கொண்டு, ஆனந்தபாஷ்பஞ் சொரிய முத்துச்சிவிகைக்கு முன்னே அடியற்றமரம்போல விழுந்தான், அதுகண்டு பிள்ளையார் எழுக என்று அருளிச்செய்ய கொல்லிமழவன் எழுந்து மனமகிழ்ந்து, சிரசின்மேலே கைகுவித்துக்கொண்டு, பிள்ளையாருடன் சென்றான் பிள்ளையார்கோயிற்புறத்துச் சமீபித்தவுடனே முத்துச்சிவிகையினின்றும் இறங்கி உள்ளே பிரவேசித்து வலஞ்செய்துகொண்டு, சந்நிதானத்திலே போனார் போனபொழுது அறிவுகெட்டு நிலத்திலே கிடக்கின்ற கன்னியைக்கண்டு இது என் என்புவினவ, மழவன்வணங்கி நின்று, இவள் அடியேனுடைய புத்திரி இவள் முயலகன் என்னும் நோயினுல் மிக வருந்துகின்றமையால் இவளைச் சுவாமி சந்நிதானத்திலே கொணர்வித்தேன் என்றான், திருஞானசம்பந்தப் பிள்ளையார் அதைக்கேட்டு அருள் சுரந்து அவ்விடத்தில்நின்றே சுவாமியை நமஸ்கரித்து அவளுடைய நோயை

நீக்கும் பொருட்டு, மணிவளர் கண்டரோமங்கையை வாடமயல் செய்வதோ விவர் மாண்பே,, என்னுந் திருப்பதிகத்தைப் பாடி யருளினர் மழவன் மகளுக்குக் கண்டவியாதி குமரகண்டவலியென்றறிக.

திருப்பாச்சிலாச்சிராமம் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

துணிவளர்திங்கள்துளங்கிவிளங்கச்சுடர்சடைசுற்றிமுடித்துப்
பணிவளர்கொள்கையர்பாரிடஞ்சூழவாரிடமும்பலிர்தேர்வ
ரணிவளர்கோலமெலாஞ்செய்துபாச்சிலாச்சிராமத்துறைகின்ற
மணிவளர்கண்டரோமங்கையைவாடமயல்செய்வதோவிவர்மாண்பே.

அகமலியன்பொடுதொண்டர்வணங்கப்பாச்சிராமத்துறைகின்ற
புகைமலிமாலைபுனைந்தழகாய புனிதர்கொலாமிவரென்ன
நகைமலிதண்பொழில்சூழ்தருகாழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
றகைமலிதண்டமிழ்கொண்டிவையேத்தச்சாரகிலாவினைதானே.

திருச்சிற்றம்பலம்.

அப்பொழுது அந்தக் கன்னிநோய்நீங்கிஎழுந்துஓல்கிவந்துதந்தையின் பக்கத்தை அடைந்தாள். அதுகண்ட மழவன் மிகுந்த மகிழ்ச்சிகொண்டு, அவளோடும் பிள்ளையாரை விழுந்து நமஸ்கரித்தார்கள். பிள்ளையார்அங்கே சுவாமிதரிசனம் செய்துகொண்டு சிலநாள் இருந்தார். அதன்பின் திருப்பைஞ்ஞீலியையும் ஈங்கோய்மலையையும்வணங்கித்திருப்பதிகம்பாடி யருளினர்.

திருப்பைஞ்ஞீலி - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரிடம்பாடிலரடிகள்காடலர், லோரிடங்குறைவிலருடையகோவணந்
நீரிடஞ்சடைவிடையூர்திகித்தலும், பாரிடம்பனிசெயும்பயில்பைஞ்ஞீலியே.

கன்புனல்லிளையவயற்காழிக்கற்பகந் நண்புணருமறைஞானசம்பந்தன்
பண்பிணர்பரவுபைஞ்ஞீலிபாடுவா,ருண்பினவுலகினிலோங்கிவாழ்வாரே

திருச்சிற்றம்பலம்.

திருஈய்ங்கோம்மலை தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வானத்துயர்தண்மதிதோய்சடைமேல்மத்தமலர்சூடித்
தேனைத்தனமென்மொழிமான்விழியாள்தேவிபாகமாக்
கானத்திரவிலரிகொண்டாடுங்கடவுளுலகேத்த
வேனத்திரள்வந்திழியுஞ்சாரலீங்கோய்மலையாரே

விழவாரொலியுமுதவுமோவாவேணுபுரந்தன்னு
ளழலார்வண்ணத்தடிகளருள்சேரணிகொள்சம்பந்த
னெழிலார்சுனையும்பொழிலும்புடைசூழிங்கோய்மலைமீசன்
கழல்சேர்பாடல்பத்தும்வல்லார்கவலைகழல்வாரே.

திருச்சிற்றம்பலம்.

பின்கொங்கதேசத்திலே காவேரிக்குத் தென்கரையிற்சென்றுகொடிமாட செங்குன்றூரை அடைந்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருந்தார், இருக்கும்நாளிலே, திருநணாவிற்கும்போய்ப் பதிகம்பாடி கொடிமாடச் செங்குன்றூருக்குத் திரும்பிவிட்டார்.

திருக்கொடிமாடச்செங்குன்றூர்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வெந்தவெண்ணீறணிந்துவிரிநூறிகழமார்பினல்ல
பந்தணவும்விரலாலொருபாகமமர்ந்தருளிக்
கொந்தணவும்பொழில்சூழ்கொடிமாடச்செங்குனறூர்
நின்றவந்தணனைத்தொழுவார்வலம்மறுப்பாரே.

அலைமலிதன்புனல்சூழ்ந்தழகார்புகலிந்நகர்பேணுந்
தலைமகனாகிநின்றதமிழ்ஞானசம்பந்தன்
கொலைமலிமூவிலையான் கொடிமாடச்செங்குன்றூரேத்து
நலமலிபாடல்வல்லார்வினையானநாசமே.

திருச்சிற்றம்பலம்.

திருநணா - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பந்தார்விரலிமடவாள்பாகமாநாகம்பூண்டேறுதேறி
யந்தாரரவணிந்தவம்மானிடம்போலுமந்தண்சாரல்
வந்தார்மடமந்திகூத்தாடவார்பொழிலில்வண்டுபாடச்
செந்தேன்றெளிரத்தேமாங்கனியுதிர்க்குந்திருநணாவே.

கல்வித்தகத்தாற்றிரைசூழ்கடற்காழிக்கவுணிசீரார்
நல்வித்தகத்தாலினிதுணருஞானசம்பந்தனென்று
சொல்வித்தகத்தாலிறைவன்றிருநணாவேத்துபாடல்
வல்வித்தகத்தான்மொழிதார்பழியிலரிம்மண்ணின்மேலே.

திருச்சிற்றம்பலம்.

அங்கேஇருக்கும்பொழுது, மழைக்காலம்நீங்கிப்பனிக்காலம்வரகுளிர்மிகுந்ததுபிள்ளையாருடைய பரிசனங்கள்தாம்பலநாளும் அந்நாட்டி

லேபயின்றதனல்குளிரினலே தமக்குநோய்விளைவதைக்கண்டுபிள்ளையாரைவணங்கி அவருக்குத் தெரிவித்தார்கள், பிள்ளையார்திருநீலகண்டப்பதிகத்தைப் பாடியருளினர்.

திருநீலகண்டம்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அவ்வினைக்கிவ்வினையாமென்றுசொல்லுமஃதறிவீ
ருய்வினைநாடாதிருப்பதுமுந்தமக்கூனமன்றே
கைவினைசெய்தம்பிரான்கழல்போற்றுதுநாமடியோஞ்
செய்வினைவந்தெமைத்தீண்டப்பெறுதிருநீலகண்டம்

பிறந்தபிறவியிற்பேணியெஞ்செல்வன்கழலடைவா
ணிறந்தபிறவியுண்டாகிலிமையவர்கோனடிக்கட்
டிறம்பயில்ஞானசம்பந்தன்செந்தமிழ்பத்தும்வல்லார்
நிறைந்தவுலகினில்வானவர்கோனொடுங்கூடுவரே.

திருச்சிற்றம்பலம்.

உடனே அந்நகரவாசிகளுக்குமாத்திரமேயன்றி அந்நாளிலே பனிப்பிணி அந்நாடுமுழுதும் தீர்ந்தது பிள்ளையார் சிலநாள் அங்கிருந்து பின் அவ்விடத்தை நீங்கி பாண்டிக்கொடுமுடி, வெஞ்சமாக்கூடல், கருவூர் என்னும் ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு கொங்கநாட்டைக் கடந்து சோழநாட்டை அடைந்தார்.

திருப்பாண்டிக்கொடுமுடி-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பெண்ணமர்மாமேனியினரும்பிறைபுல்குசெஞ்சடையாருங்
கண்ணமர்நெற்றியினருங்கந்தமருங்குழையாரு
மெண்ணமருங்குணத்தாருமிமையவரேத்தநின்றாரும்
பண்ணமர்பாடலினரும்பாண்டிக்கொடுமுடியாரே.

கலமல்குதண்கடல்சூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்தன்
பலமல்குவெண்டலையேந்திப்பாண்டிக்கொடுமுடிதன்னைச்
சொலமல்குபாடல்கள்பத்துஞ்சொல்லவல்லார்துயர்தீர்ந்து
நலமல்குசிந்தையராகிநன்னெறியெய்துவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கருவூர்த் திருவானிலை - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தொண்டரெலாமலர்தூவியேத்தநஞ், சுண்டலாயிராயதன்மையார்
கண்டனர்கருவூருளானிலை,யண்டனாளருளீயுமன்பரே.

கந்தமார்பொழிற்காழிஞானசம், பந்தன்சேர்கருவூருளானிலை
யெந்தையைச்சொன்னபத்தும்வல்லவர், சிந்தையிற்றுயராவதீர்வரே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு சோழமண்டலத்திலே பராய்த்துறை, கற்குடிமலை, முற்கீச்சரம், திருச்சிராப்பள்ளி, ஆனைக்காப்பாற்றுறை, எறும்பியூர், நெடுங்களம், மேலைக்காட்டுப்பள்ளி, ஆலம்பொழில், பூந்திருத்தி, கண்டியூர், சோற்றுத்துறை, வேதிகுடி, வெண்ணி, சக்கரப்பள், புள்ளமங்கை, பாலைத்துறை, நல்லூர், கருகாவூர்,அவளிவணல்லூர், பருதிநியமம்,பூவனூர் ஆவூர்என்னும் ஸ்தலங்களைவணங்கிக்கொண்டு வலஞ்சுழியை அடைந்து திருப்பதிகங்கள்பாடி சுவாமீதரிசனம் செய்துகொண்டு இருந்தார்.

திருப்பராய்த்துறை - பண் - மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீறுசேர்வதோர்மேனியர்நேரிழை, கூறுசேர்வதோர்கோலமாய்ப்
பாறுசேர்தலைக்கையர்பராய்த்துறை, யாறுசேர்சடையண்ணலே

செல்வமல்கியசெல்வர்பராய்த்துறை, செல்வமேற்சிதையாதன
செல்வன்ஞானசம்பந்தன்செந்தமிழ், செல்வமாமிவைசெப்பவே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கற்குடி - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வடந்திகழ்மென்முலையாளைப்பாகமாகமதித்துத்
தடந்திரைசேர்புனல்மாதைத்தாழ்சடைவைத்தசதுர
ரிடந்திகழ்முப்புரிநூலர்துன்பமோடின்பமதெல்லாங்
கடந்தவர்காதலில்வாழுங்கற்குடிமாமலையாரே.

காமருவார்பொழில்சூழுங்கற்குடிமாமலையாரை
நாமருவண்புகழ்காழிநலந்திகழ்ஞானசம்பந்தன்
பாமருசெந்தமிழ்மாலைபத்திவைபாடவல்லார்கள்
பூமலிவானவரோடும்பொன்னுலகிற்பொலிவாரே.

திருச்சிற்றம்பலம்.

திருமூக்கீச்சரம் - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

சாந்தம்வெண்ணீறெனப்பூசிவெள்ளஞ்சடைவைத்தவர்
காந்தளாரும்விரலேழையோடாடியகாரண
மாய்ந்துகொண்டாங்கறியந்நிறைந்தாரவரார்கொலோ
வேந்தன்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்மெய்ம்மையே.

மல்லையார்மும்முடிமன்னர்மூக்கீச்சரத்தடிகளைச்
செல்வராகநினையும்படிசேர்த்தியசெந்தமிழ்
நல்லராய்வாழ்பவர்காழியுண்ஞானசம்பந்தன்
சொல்லவல்லாரவர்வானுலகாளவும்வல்லரே.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிராப்பள்ளி - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கைம்மகவேந்திக்கடுவனோடேக்கழைபாய்வான்
செம்முகமந்திகருவரையேறுஞ்சிராப்பள்ளி
வெம்முகவேழத்தீருரிபோர்த்தவிகிர்தாநீ
பைம்முகநாகம்மதியுடன்வைத்தல்பழியன்றே.

தேனயம்பாடுஞ்சிராப்பள்ளியானைத்திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங்கழுமலவூரிற்கவுணியன்
ஞானசம்பந்தனலமிகுபாடலிவைவல்லார்
வானசம்பந்தத்தவரொடுமன்னிவாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்.

திருவானைக்கா - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

செக்கட்பெயர்கொண்டவன்செம்பியர்கோ, னங்கட்கருணைபெரிதாயவனே
வெண்கண்விடையாயெம்வெண்ணாவலுளா, யங்கத்தவாவாயினளாயிழையே.

வெண்ணாவலமர்ந்துறைவேதியனைக், கண்ணார்கமழ்காழியர்தந்தலைவன்
பண்ணோடிசைபாடியபத்தும்வல்லார், விண்ணோரவரேத்தவிரும்புவரே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கயிலாயமுந் திருவானைக்காவுந் திருமயேந்திரமுந் திருவாரூருங்கூடச்சதுக்கம்.

திருச்சிற்றம்பலம்.

மண்ணதுவுண்டரிமலரோன்காணா, வெண்ணாவல்விரும்புமயேந்திரருங்
கண்ணதுவோங்கியகயிலையாரு, மண்ணலாரூராதியானைக்காவே.

ஏனமாலயனவர்காண்பரியார், கானமார்கயிலைநன்மயேந்திரு
மானவாரூராதியானைக்காவை, ஞானசம்பந்தன் தமிழ்சொல்லுமே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பாற்றுறை - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

காரார்கொன்றைகலந்தமுடியினர், சீரார்சிந்தைசெலச்செய்தார்
பாரார்நாளும்பரவியபாற்றுறை, யாராரதிமுதல்வரே.

பத்தர்மன்னியபாற்றுறைமேவிய, பத்துநூறுபெயரனைப்
பத்தன்ஞானசம்பந்தனதின்றமிழ், பத்தும்பாடிப்பரவுமே.

திருச்சிற்றம்பலம்.

திருநெடுங்களம்-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மறையுடையாய்தோலுடையாய்வார்சடைமேல்வளரும்
பிறையுடையாய்பிஞ்ஞகனேயென்றுன்னைப்பேசினல்லாற்
குறையுடையார்குற்றமோராய்கொள்கையினாலுயர்ந்த
நிறையுடையாரிடர்களையாய்நெடுங்களமேயவனே.

நீடவல்லவார்சடையான்மேயநெடுங்களத்தைச்
சேடர்வாழுமாமறுகிற்சிரபுக்கோனலத்தால்
நாடவல்லபனுவன்மாலைஞானசம்பந்தன்சொன்ன
பாடல்பத்தும்பாடவல்லார்பாவம்பறையுமே.

திருச்சிற்றம்பலம்.

மேலைத்திருக்காட்டுப்பள்ளி-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

வாருமன்னும்முலைமங்கையோர்பங்கின
னூருமன்னும்பலியுண்பதும்வெண்டலை
காருமன்னும்பொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
நீருமன்னுஞ்சடைமேவர்தஞ்சீர்மையே.

பொருபுனல்புடையணிபுரவநன்னகர்மன்ன
னருமறையவைவல்லவணிகொள்சம்பந்தன்சொற்
கருமணிமிடற்றினன்கருதுகாட்டுப்பள்ளி
பரவியதமிழ்சொலப்பறையுமெய்ப்பாவமே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கண்டியூர்திருவீரட்டம்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

வினவினேனறியாமையிலுரைசெய்மினீரருள்வேண்டுவீர்
கனைவிலார்புனற்காவிரிக்கரைமேய்கண்டியூர்வீரட்டன்
றனமுனேதனக்கின்மையோதமராயினாரண்டமாளத்தான்
வன்னில்வாழ்க்கைகொண்டாடிப்பாடியிவ்வையமாப்பலிதேர்ந்ததே

கருத்தனைப்பொழில்சூழுங்கண்டியூர்வீரட்டத்துறைகள்வனை
யருத்தனைத்திறமடியர்பான்மிகக்கேட்டுகந்தவினாவுரை
திருத்தமாந்திகழ்காழிஞானசம்பந்தன்செப்பியசெந்தமி
ழொருத்தராகிலும்பலர்களாகிலுமுரைசெய்வாருயர்ந்தார்களே.

திருச்சிற்றம்பலம்.

திருச்சோற்றுத்துறை - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

செப்பநெஞ்சேநெறிகள்சிற்றின்பந், துப்பனென்னாதருளேதுணையாக [வோமே
வொப்பரொப்பர்பெருமானொளிவெண்ணீற், றப்பர்சோற்றுத்துறைசென்றடை

அந்தண்சோற்றுத்துறையெம்மாதியைச், சிந்தைசெய்மினடியீராயினீர்
சந்தம்பரவுஞானசம்பந்தன், வந்தவாறேபுனைதல்வழிபாடே.

திருச்சிற்றம்பலம்.

திருவேதிகுடி-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

நீறுவரியாடரவொடாமைமனவென்புநிறைபூண்பரிடவ
மேறுவரியாவருமிறைஞ்சுகழலாதியரிருந்தவிடமாந்
தாறுவிரிபூகமலிவாழைவிரிநாறவிளைவாளைமடுவில்
வேறுபிரியாதுவிளையாடவளமாரும்வயல்வேதிகுடியே.

கந்தமலிதண்பொழினன்மாடமிடைகாழிவளர்ஞானமுணர்சம்
பந்தன்மலிசெந்தமிழின்மாலைகொடுவேதிகுடியாதிகழலே
சிந்தைசெயவல்லவர்கணல்லவர்களென்னநிகழ்வெய்தியிமையோ
ரந்தவுலகெய்தியரசாளுமதுவேசரதமாணைநமதே

திருச்சிற்றம்பலம்.

திருவெண்ணி-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சடையானைச்சந்திரனொடுசெங்கண்ணரா
வுடையானையுடைதலையிற்பலிகொண்டூரும்
விடையானைவிண்ணவர்தாந்தொழும்வெண்ணியை
யுடையானையல்லதுள்காதெனதுள்ளமே.

மருவாருமல்குகாழித்திகழ்சம்பந்தன்
றிருவாருந்திகழ்திருவெண்ணியமர்ந்தானை
யுருவாருமெண்டமிழ்மாலையிவைவல்லார்
பொருவாகப்புக்கிருப்பார்புவலோகத்தை.

திருச்சிற்றம்பலம்.

திருச்சக்கரப்பள்ளி-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

படையினார்வெண்மழுப்பாய்புலித்தோலரை
யடையினாருமையொருகூறனாருர்வதோர்
விடையினார்வெண்பொடிப்பூசியார்விரிபுனற்
சடையினாருறைவிடஞ்சக்கரப்பள்ளியே.

தண்வயல்புடையணிசக்கரப்பள்ளியெங்
கண்ணுதலவனடிகழுமலவளநகர்
நண்ணியசெந்தமிழ்ஞானசம்பந்தன்சொற்
பண்ணியலிசைசொலப்பறையுமெய்ப்பாவமே.

திருச்சிற்றம்பலம்.

திருப்புள்ளமங்கை - திரு ஆலந்துறை - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பாலுந்துறுதிரளாயின பரமன்பிரமன்றான்
போலுந்திறலவர்வாழ்தருபொழில்சூழ்புளமங்கைக்
காலன்றிறலறச்சாடியகடவுள்ளிடங்கருதி
லாலந்துறைதொழுவார்தமைபடையாவினை தானே.

பொந்தின்னிடைத்தேனூறியபொழில்சூழ்புளமங்கை
யந்தண்புனல்வருகாவிரியாலந்துறையானைக்
கந்தம்வலிகமழகாழியுட்கலைஞானசம்பந்தன்
சந்தம்மலிபாடல்சொலிபாடத்தவமாமே.

திருச்சிற்றம்பலம்.

திருநல்லூர்-திருவிராகம்-பண் சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

வண்டிரியவிண்டமலர்மல்குசடைதாழவிடையேறிப்
பண்டெரிகைகொண்டபரமன்பதியதென்பரதனயலே
நண்டிரியநாரையிரைதேரவரைமேலருவிமுத்தந்
தெண்டிரைகண்மோதவிரிபோதுகமழுந்திருநல்லூரே.

திரைகளிருகரையும்வருபொன்னிநிலவுந்திருநல்லூர்மேற்
பரசுதருபாணியைநலந்திகழ்செய்தோணிபுரநாத
னுரைசெய்தமிழ்ஞானசம்பந்தனிவைதமாலைமொழிவார்போய்
விரைசெய்மலர்தூவவுதிபேறுகதிபேறுபெறுவாரே.

திருச்சிற்றம்பலம்

திருநல்லூர்-பண்-குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

கொட்டும்பறைசீரற்குழுமவனலேந்தி, நட்டம்பயின்றுடுநல்லூர்ப்பெருமானை
முட்டின்றிருபோதுமுனியாதெழுந்தன்பு, பட்டமணத்தாற்களரியார்பாவமே
தண்ணம்புனற்காழிஞானசம்பந்த, னண்ணும்புனல்வேலிநல்லூர்ப்பெருமானை
வண்ணம்புனைமாலைவைகலேத்துவார். விண்ணுநிலனுமாய்விளங்கும்புகழோரே.

திருச்சிற்றம்பலம்.

திருக்காவூர்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்

முத்திலங்குமுறுவலுமையஞ்சவே, மத்தயானைமறுகவ்வுரிவாங்கியக்
கத்தைபோர்த்தகடவுள்கருகாவூரெம், மத்தர்வண்ணம்மழலும்மழவண்ணமே
கலவமஞ்ஞையுலவுங்கருகாவூர், நிலவுபாடலுடையான்றன்றனீள்கழல்
குலவுஞானசம்பந்தன்செந்தமிழ், சொலவல்லாரவர்தொல்வினைதீருமே

திருச்சிற்றம்பலம்:

திருஅவளிவநல்லூர்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்

கொம்பிரியவண்டுலவுகொன்றைபுரிநூலொடுகுலாவித்
தம்பரிசினோடுசுடுநீறுதடவந்திடவமேறிக்
கம்பரியசெம்பொனெடுமாடமதில்கல்வரைவிலாக
வம்பெரியவெய்தபெருமானுறைவதவளிவணல்லூரே.

ஆனமொழியானதிறலோர்பரவுமவளிவணல்லூர்மேற்
போனமொழிநன்மொழிகளாயபுகழ்தோணிபுரவூரன்
ஞானமொழிமாலைபலநாடுபுகழ்ஞானசம்பந்தன்
றேனமொழிமாலைபுகழ்வார் துயர்கடீபதிலர்தாமே

திருச்சிற்றம்பலம்.

திருப்பருதிநியமம்-பண்-பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்.

விண்கொண்டதூமதிசூடிநீடுவிரிபுன்சடைதாழப்
பெண்கொண்டமார்பில்வெண்ணீறுபூசிப்பேணார்பலிதேர்ந்து
கண்கொண்டசாயலொடேர்கவர்ந்தகள்வர்க்கிடம்போலும்
புண்கொண்டவண்டினம்பாடியாடும்பருதிநியமமே

திருஅரதைப்பெரும்பாழி - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பைத்தபாம்போடரைக்கோவணம்பாய்புலி
மொய்த்தபேய்கண்முழக்கமுதுகாட்டிடை
நித்தமாகநடமாடிவெண்ணீறணி
பித்தர்கோயிலரதைப்பெரும்பாழியே.

நீரினார்புன்சடைவிமலனுக்கிடமெனப்
பாரினார்பரவரதைப்பெரும்பாழியைச்
சீரினார்காழியுண்ஞானசம்பந்தன்செய்
யேரினார்தமிழ்வல்லார்க்கில்லையாம்பாவமே

திருச்சிற்றம்பலம்.

திருச்சேறை - திருவிராகம் பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

முறியுறுநிறமல்குமுகிழ்முலைமலைகள்வெருவமுன்
வெறியுறுமதகரியதள்படவுரிசெய்தவிறலினர்
நறியுறுமிதழியின்மலரொடுநதிமதிநகுதலை
செறியுறுசடைமுடியடிகடம்வளநகர்சேறையே

கற்றநன்மறைபயிலடியவரடிதொழுகவினுறு
சிற்றிடையவளொடுமிடமெனவுறைவதோர்சேறைமேற்
குற்றமில்புகலியுளிகலறுஞானசம்பந்தன்
சொற்றகவுறமொழிபவரழிவிலர்துயர்தீருமே

திருச்சிற்றம்பலம்

திருநாலூர்த்திருமயானம் பண் சீகாமரம்

திருச்சிற்றமபலம்.

பாலூருமலைப்பாம்பும்பனிமதியுமத்தமு
மேலூருஞ்செஞ்சடையான்வெண்ணூல்சேர்மார்பினா
னாலூர்மயானத்துநம்பரன்றனடிநினைந்து
மாலூருஞ்சிந்தையர்பால்வந்தூராமறுபிறப்பே

ஞாலம்புகழ்காழிஞானசம்பந்தன்று
ஞாலுமறையோர்நாலூர்மயானத்தைச்
சீலம்புகழாற்சிறந்தேத்தவல்லார்க்
கேலும்புகழ்வானத்தின்பராயிருப்பாரே

திருக்குடவாயில் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்

திகழுந்திருமாலொடுநான்முகனும், புகழும்பெருமானடியார்புகல
மகிழும்பெருமான்குடவாயின்மன்னிநிகழும்பெருங்கோயினிலாயாவனே

கடுவாய்மலிநீர்குடவாயிறனி, னெடுமாபெருங்கோயினிலாயவனைத்
தடமார்புகலித்தமிழார்விரகன், வடமார்தமிழ்வல்லவர்நல்லவரே.

திருச்சிற்றம்பலம்,

திருநரையூர்-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

நேரியனாகுமல்லனொருபாலுமேனியரியான்முனையவெளியா
னீரியல்காலுமாகிநிறைவானுமாகியுறுதீயுமாயநிமல
னூரியல்பிச்சைபேணியுலகங்களேத்தநலகண்டுபண்டுசுடலை
நாரியோர்பாகமாகநடமாடவல்லநறையூரினம்பனவனே.

கானலுலாவியோதமெதிர்மல்குகாழிமிகுபந்தன்முந்தியுணர
ஞானமுலாவுசிந்தையடிவைத்துகந்தநறையூரினம்பனவனை
யீனமிலாதவண்ணமிசையாலுரைத்ததமிழ்மாலைபத்துநினைவார்
வானநிலாவவல்லார்நிலமெங்குநின்றுவழிபாடுசெய்யுமிகவே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பத்தூர்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வெங்கள்விம்முவெறியார்பொழிற்சோலைத்திங்களொடுதிளைக்குந்திருப்பு
கங்கைதங்குமுடியாரவர்போலு, மெங்களுச்சியுறையுமிறையாரே (த்தூர்

நல்லகேள்விஞானசம்பந்தன், செல்வர்சேடருறையுந்திருப்புத்தூர்
சொல்லல்பாடல்வல்லார்தமக்கென்று, மல்லல்தீருமவலமடையாவே.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிவபுரம்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

இன்குரலிசைகெழுமியாழ்முரலத், தன்காமருவியசதுரணகர்
பொன்கரைபொருபழங்காவிரியின், றென்கரைமருவியசிவபுரமே,

சிவனுறைதருசிவபுரநகரைக், கவுணியர்குலபதிகாழியர்கோன்
றவமல்குதமிழிவைசொல்லவல்லார், நவமொடுசிவகதிநண்ணுவரே

திருச்சிற்றம்பலம்,

திருக்குடமூக்கு -பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

அரவிரிகோடனீடலணிகாவிரியாரத்தயலே
மரவிரிபோதுமவ்வன்மணமல்லிகைகள்ளவிழுங்
குரவிரிசோலைசூழ்ந்தகுழகன்குடமூக்கிடமா
யிரவிரிதிங்கள்சூடியிருந்தானவனெம்மிறையே.

வெண்கொடிமாடமோங்குவிரல்வெங்குருநன்னகரா
னண்பொடுநின்றசீரான்றமிழ்ஞானசம்பந்தனல்ல
தண்குடமூக்கமர்ந்தானடிசேர்தமிழ்பத்தும்வல்லார்
விண்புடைமேலுலகம்வியப்பெய்துவர்வீடெளிதே.

திருச்சிற்றம்பலம்.

திருக்குடந்தைக்காரோணம்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வாரார்கொங்கைமாதோர்பாகமாகவார்சடை
நீரார்கங்கைதிங்கள்சூடிநெற்றியொற்றைக்கண்
கூரார்மழுவொன்றேந்தியந்தண்குழகன்குடமூக்கிற்
காரார்கண்டத்தெண்டோளெந்தைகாரோணத்தாரே.

கருவார்பொழில்சூழ்ந்தழகார்செல்வக்குடந்தைக்காரோணத்தா
திருவார்செல்வமல்குசண்பைத்திகழுஞ்சம்பந்த (ரைத்
னுருவார்செஞ்சொன்மாலையிவைபத்துரைப்பாருலகத்துக்
கருவார்தொல்லைப்பிறப்பதறுத்துக்கவலைகழிவாரே.

திருச்சிற்றம்பலம்.

திருநாகேச்சரம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னேர்தருமேனியனேபுரியும், மின்னேர்சடையாய்விரைக்காவிரியி
னன்னீர்வயனாகேச்சரநகரின், மன்னேயெனவல்வினைமாய்ந்தறுமே.
அலைமார்கடல்சூழ்ந்தருகாழியர்கோன், றலைமார்தருசெந்தமிழின்விரக
னலமார்தருநாகேச்சரத்தானைச், சொலமாலைகள்சொல்லநில்லாவினையே.

திருச்சிற்றம்பலம்.

திருஇடைமருது-பண் தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஓடேகலனுண்பதூரிடுபிச்சை, காடேயிடமாவதுகல்லாலனிழற்கீழ்
மாடாமுலைமங்கையுந்தானுமகிழ்ந், தீடாவுறைகின்றவிடைமருதீதோ.
சண்ணார்கமழ்காழியுண்ஞானசம்பந்த, னெண்ணார்புகழெந்தையிடைமருதின்மேற்
பண்ணோடிசைபாடியபத்தும்வல்லார்கள், விண்ணோருலகத்தினில்வீற்றிருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

திருவிடைமருதூர் - திருவிராகம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

விரிதருபுலியுரிவிரவியவரையினர், திருதரு[illegible]யிலலைபுனைகணேபனி[illegible]
வெரிதருசடையினரிடைமருதடைபுனல், புரிதருமன்னவர்புகழ்மிகவுளரே.

பொருகடலடைதருபுகலியர்தமிழொடு, விரகினன்விரிதருபொழிலிடைமருதினைப்
பரவியவொருபதுபயிலவலரிடர், விரவிலர்வினையொடுவியனுலகுறுமே.

திருச்சிற்றம்பலம்.

நடைமருதிரிபுரமெரியவுண்ணகை[illegible], படைமரு[illegible]
புடைமருதிள[illegible]பொதுளிய, [illegible]வெளிசெ[illegible].
தடமலிபுகலியர்தமிழ்கெழும்வி[illegible], [illegible]
படமலிதமிழிவைபரவவல்லார்வினை, கெடமலிபுகழொடு[illegible].

திருச்சிற்றம்பலம்.

மருந்தவன்வானவர்தானவர்க்கும், பெருந்தகைபிறவி[illegible]
னருந்தவமுனிவரோடால்நிழற்கீ, ழிருந்தவன்வளநகரிடைமருதே
இலைமலிபொழிலிடைமருதிறையை, நலமிகுஞானசம்பந்தன்சொன்ன
பலமிகுதமிழிவைபத்தும்வல்லா,ருலகுறுபுகழினேடோங்குவரே.

திருச்சிற்றம்பலம்.

திருக்குறங்காடுதுறை பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பரவக்கெடும்வல்வினைபாரிடஞ்சூழ, விரவிற்புறங்காட்டிடைநின்றெறியாடி
யரவச்சடையந்தணன்மேயவழகார், குரவப்பொழில்சூழ்குரங்காடுதுறையே.

நல்லார்பயில்காழியுண்ஞானசம்பந்தன். கொல்லேறுடையான்குரங்காடுதுறைமேற்
சொல்லார்தமிழ்மாலைபத்தும்தொழுதேத்த, வல்லாரவர்வானவரோடுறைவாரே.

திருச்சிற்றம்பலம்.

அங்கே சுவாமிதரிசனம் செய்துகொண்டிருக்கும் நாளிலே சிவபாதவிருதயர் பிள்ளையாரை நோக்கி, நான் யாகஞ்செய்தற்கு ஆகுங்காலம் சமீபித்தது அதுசெய்யும்படி போதற்குப் பொருள் தரல்வேண்டும் என்றார் பிள்ளையார் அதைக்கேட்டுகோயிலிற்சென்று திருப்பதிகம் பாடியருளினார்.

—ooo—

திருவாவடுதுறைநாலடிமேல்வைப்பு-பண்-காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

இடரினுந்தளரினுமெனதுறுநோய், தொடரினுமுனகழறொழுதெழுவேன்
கடறனிலமுதொடுகலந்தநஞ்சை, மிடறினிலடக்கியவேதியனே,
யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுனதின்னருளாவடுதுறையானே.

அலைபுனலாடுவதுறையமர்ந்த, இலைநுனைவேற்படையெம்மிறையை
நிலமிகுஞானசம்பந்தன்சொன்ன, விலையுடையருந்தமிழ்மாலைவல்லார்
வினையாயினநீங்கிப்போய்விண்ணவர்வியனுலகம்
நிலையாகமுன்னேறுவர்நிலமிசைநிலையிலரே.

திருச்சிற்றம்பலம்.

அப்பொழுது பரமசிவனுடைய திருவருளினாலே, ஒருபூதம் விரைந்துவந்து பீடத்தின்மேலே ஆயிரம் பொன்பொருந்திய கிழி ஒன்றுவைத்து, முன்னே நின்று, இந்தக்கிழி பொன்னுலவாக்கிழி, இது பரமசிவனால் உமக்கு அருளிச்செய்யப்பட்டது என்று சொல்லபிள்ளையார் திருவருளை நினைந்து நமஸ்கரித்து எழுந்துகும்பிட்டு, பீடத்தின்மேலே வைக்கப்பட்ட பொற்கிழியைச் சிரமேற்கொண்டு, தந்தையார் கையிற்கொடுத்து, பரமசிவனையே தலைவராக நினைந்து வேதவிதிப்படி செய்யப்படும் யாகத்தை நீரும் சீர்காழியில் இருக்கின்ற மற்றப்பிராமணர்கள் சமஸ்தரும் செய்ய இக்கிழிகுறையாது மிகும் என்றுசொல்லி, சீர்காழிக்குப் போகும்படி அவருக்கு விடைகொடுத்து அனுப்பிதாம் திருவாவடுதுறையில்இருந்தார், சிலநாட்சென்றபின் அவ்விடத்தைஅகன்று, கோழம்பம் வைகன்மாடக்கோயில், நல்லம், அழுந்தூர், துருத்தி, மாயூரம்,செம்பொன்பள்ளி, விளநகர்பறியலூர், வேட்டக்குடி என்னும் ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருப்பதிகங்கள் பாடிதருமபுரத்தை அடைந்தார்.

திருக்கோழம்பம்-பண் இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நீற்றானைநீள்சடைமேனிறைவிள்ளதோர், ஏற்றானையழகமர்மென்முலையாளையோர்
கூற்றானைக்குளிர்பொழிற்கோழம்பமேவிய, வேற்றானையேத்துமினும்மிடரேகவே.

தண்புனலோங்குதண்ணந்தராய்மாநகர், நண்புடைஞானசம்பந்தனம்பானுறை
விண்பொழிற்கோழம்பமேவியபத்திவை, பண்கொளப்பாடவல்லார்க்கில்லைபாவமே.

திருச்சிற்றம்பலம்.

திருவைகல்மாடக்கோயில்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

துளமதியுடைமறித்தோன்றுகையின, ரிளமதியணிசடையெந்தையாரிட
முளமதியுடையவர்வைகலோங்கிய, வளமதிதடவியமாடக்கோயிலே

மைந்தனதிடம்வைகன்மாடக்கோயிலைச், சந்தமர்பொழிளணிசண்பைஞானசம்
பந்தனதமிழ்கெழுபாடல்பத்திவை, சிந்தைசெய்பவர்சிவலோகஞ்சேர்வரே.

திருச்சிற்றம்பலம்.

திருநல்லம் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கல்லானிழல்மேயகறைசேர்கண்டாவென்
றெல்லாமொழியாலுமிமையோர்தொழுதேத்த
வில்லான்மூன்றும்வெந்துவிழவெய்த
நல்லானமையாழ்வானல்லந்நகரானே.

நலமார்தருமறையோர்வாழ்நல்லந்நகர்மேய
கொலைசேர்மழுவானைக்கொச்சயமர்ந்தோங்கு
நலமார்தமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
கலைகளிவைவல்லார்கவலைகழிவாரே.

திருச்சிற்றம்பலம்.

திருஅழுந்தூர்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தொழுமாறுவல்லார்துயர்தீரநினைந், தெழுமாறுவல்லாரிசைபாடவிம்மி
யழுமாறுவல்லாரழுந்தைம்மறையோர், வழிபாடுசெய்மாமடமன்னினையே.

அருஞானம்வல்லாரழுந்தைம்மறையோர், பெருஞானமுடைப்பெருமானவனை
திருஞானசம்பந்தன்செந்தமிழ்க, ளருஞானமுண்டாமுணர்ந்தார்தமக்கே.

திருச்சிற்றம்பலம்.

திருத்துருத்தி திருவிராகம்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வரைத்தலைப்பசும்பொனோடருங்கலன்களுந்திவந்
திரைத்தலைச்சுமந்துகொண்டெறிந்திலங்குகாவிரிக்
கரைத்தலைத்துருத்திபுக்கிருப்பலேகருத்தினா
யுரைத்தலைப்பொலிந்துனக்குணர்த்துமாறுவல்லமே

கற்றுமுற்றினார்தொழுங்கழுமலத்தருந்தமிழ்
சுற்றுமுற்றுமாயினானவன்பகர்ந்தசொற்களாற்
பெற்றமொன்றுயர்த்தவன்பெருந்துருத்திபேணவே
குற்றமுற்றுமின்மையிற்குணங்கள்வந்துகூடுமே.

திருச்சிற்றம்பலம்.

திருமயிலாடுதுறை-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

கரவின்றிநன்மாமலர்கொண், டிரவும்பகலுந்தொழுவார்கள்
சிரமொன்றியசெஞ்சடையான்வாழ், வரமாமயிலாடுதுறையே

நயர்காழியுள்ஞானசம்பந்தன், மயல்தீர்மயிலாடுதுறைமேற்
செயலாலுரைசெய்தனபத்து, முயர்வாமிவையுற்றுணர்வார்க்கே.

திருச்சிற்றம்பலம்

திருச்செம்பொன்பள்ளி-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மருவார்குழலிமாதோர்பாகமாய், திருவார்செம்பொன்பள்ளிமேவிய
கருவார்கண்டத்தீசன்கழல்களை, மருவாதவர்மேன்மன்னும்பாவமே

நறவார்புகலிஞானசம்பந்தன், செறுவார்செம்பொன்பள்ளிமேயானைப்
பெறுமாறிசையாற்பாடலிவைபத்துமுறுமாறுசொல்லவோர்க்கிவாழ்வரே

திருச்சிற்றம்பலம்

திருவிளமர் திருவிராகம் பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்

மத்தகமணிபெறமலர்வதோர்மதிபுரைநுதல்கர
மொத்தகநகமணிமிளிர்வதோரரவினொளிகிள
ரத்தகவடிதொழவருள்பெறுகணமொடுமுமையவள்
வித்தகருறைவதுவிரிபொழில்வளநகர்விளமரே

வெந்தவெண்பொடியணியடிகளைவிளமருள்விகிர்தரைச்
சிந்தையுறிடைபெறவுரைசெய்தமிழிவைகெழுவிய
வந்தணர்புகலியுளழகமரருமறைஞானசம்
பந்தனமொழியிவையுரைசெயுமவர்வினைபறையுமே

திருச்சிற்றம்பலம்.

திருப்பரியலூர் வீரட்டம் பண் மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கருத்தன்கடவுள்கனலேந்தியாடி, நிருத்தன்சடைமேனிரம்பாமதியன
திருத்தம்முடையார்திருப்பரியலூரில், விருத்தனெனத்தகும்வீரட்டத்தானே.

நறுநீருகுங்காழிஞானசம்பந்தன்வெறிநீர்த்திருப்பறியல்வீரட்டத்தானைப்
பொறிநீடரவன்புனைபாடல்வல்லார்க், கறுநீடவலம்பிறப்புத்தானே

திருச்சிற்றம்பலம்.

திருவேட்டக்குடி பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வண்டிரைக்குமலர்க்கொன்றைவிரிசடைமேல்மதியரவங்
கண்டிரைக்கும்பிறைச்சென்னிக்காவாலி கணைகழல்க
டொண்டிரைத்துத்தொழுதிறைஞ்சத்துளங்கொளிநீர்ச்சுடர்ப்பவளந்
தெண்டிரைக்கள்கொணர்ந்தெறியுந்திருவேட்டக்குடியாரே

தெண்டிரைசேர்வயலுடுத்ததிருவேட்டக்குடியாரைத்
தண்டலைசூழ்கலிக்காழித்தமிழ்ஞானசம்பந்த
னொண்டமிழ்நூலிவைபத்துமுணர்ந்தேத்தவல்லார்போ
யுண்டுடுப்பில்வானவரோடுயர்வானத்திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்

அந்தத் தருமபுரம் திருநீலகண்டப் பெரும்பாணருடைய தாயாரது ஜன்மஸ்தானமாதலால் அங்குள்ள அவருடைய சுற்றத்தார்கள் வந்து எதிர்கொண்டு வணங்கித் துதித்தார்கள், அதுகண்டு பெரும்பாணர் பிள்ளையார் அருளிச்செய்த அருமையாகிய திருப்பதிகங்களின் இசையைத்தாம் யாழில் இட்டு வாசிக்கப்பெற்ற பெரும்பேற்றை அவர்களுக்கு அருளிச்செய்தார், அவர்கள் அதைக்கேட்டு நீர் திருப்பதிகவிசையை அளவுபெறயாழிலே அமைத்து வாசித்தலினாலே உலகமுழுதிலும் இசைவிளங்குக என்றார்கள், உடனே பெரும்பாணர் மனம்நடுங்கி பிள்ளையாருடைய திருவடிகளைவணங்கினராய் சுவாமீ திருப்பதிகவிசை அளவுபடாத தன்மையை இவர்களேயன்றி உலகத்திலுள்ள மற்றையாவரும் அறிந்து உண்மையை உணர்ந்து உய்யும்பொருட்டுத் தேவரீர் ஒரு திருப்பதிகம்பாடியருளுவீராகில் அடியேன் அதனிசையாழிலே அடங்காமையைக்காட்டப்பெறுவேனென்றார் அப்பொழுது பிள்ளையார் பரமசிவனை வணங்கிக்கொண்டு திருப்பதிகத்தின் உண்மையை பூமியிலுள்ளோருடைய கண்டத்திலும் யாழியிலும் இசைநூலிற்கூறப்பட்ட இசைமுயற்சிகளினால் அடங்காமையை காட்டும்பொருட்டு "மாதர்மடப்பிடி" என்பதை முதலிலுடைய திருப்பதிகத்தைப்பாடியருளினர்.

யாழ்மூரி திருத்தருமபுரம் பண் வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

மாதர்மடப்பிடியும் மடவன்னமுமன்னதோர் நடையுடைம்மலைமகள் துணையெனமகிழ்வர், பூதவினப்படைநின் றிசை பாடவுமாடுவர்படர்சடைநெடிமுடியதோர்புனலர், வேதமோடேழிசைபாடுவ ராழ்கடல் வெண்டிரை யிரைந்நுரைகரைபொருது விம்மிநின்றயலே, தாதவிழ்புன்னை தயங்குமலர்ச்சிறைவண்டறை யெழில்பொழில்குயில்பயி தருமபுரம் பதியே.

பொன்னெடுநண்மணிமா ளிகை சூழவிழவம்மலி பொருபுனல்திருவமர்புகலியென்றுலகிற் றன்னொடுநேர்பிறவில் பதிஞானசம்பந்தனஃது செந்தமிழ்த்தடங்கடற் றருமபுரம்பதியைப், பின்னெடுவார்சடையிற் பிறையும்மரவும்முடை யவன்பிணை துணைகழல்கள் பேணுதலுரியா, ரன்னெடுநன் னுலகெய்துவ ரெய்தியபோதமுமுறுவர்களிடர் பிணிதுயரணைவிலரே

திருச்சிற்றம்பலம்.

பின்பு பெரும்பாணர் அப்பதிகவிசையைத் தம்முடைய யாழ்நரம் பிலேமுன்போல இட்டு வாசிக்கப்புக அது அதனிடத்தே அடங்கிற்றி ல்லை அப்பொழுது பெரும்பாணர் அதனைவிட்டு அச்சங்கொண்டு பிள் ளையாருடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து சுவாமி அருளிச்செய்த திருப்பதிகத்தினிசையை யாழிலே ஏற்பேன் என்று சொல்லப்பண்ணியது இந்தயாழ் அன்றோ என்று அதனை முரிக்கும்படி ஓங்கினார்உடனே பிள்ளையார்தடுத்தருளி ஐயரே இந்தயாழைத் தாரும் என்று வாங்கிக்கொண்டு ஐயரே நீர் இந்த யாழைமுரிப்பது என் பரம சிவனும் பார்வதியம்மையும் அருளிச்செய்த திருவருளின் பெருமையெ ல்லாம் இந்தக்கருவியில் அளவுபடுமோ மனசினாலும் அளவுபடாதே நீர் இந்த யாழைக்கொண்டேசுவாமியுடைய திருப்பதிகவிசையை இயன்ற ளவுஉதில் அமைத்துவாசியும் என்று சொல்லி பெரும்பாணர்கையிலே யாழைக்கொடுத்தார் பெரும்பாணர் பிள்ளையாரைத்தொழுது, யாழை வாங்கி சிரமேற்கொண்டார். சிலநாட்சென்றபின் பிள்ளையார் தருமபுர த்தை அகன்று திருநள்ளாறறை அடைந்து கோயிலிற் பிரவேசித்து சு வாமியைவணங்கி, "போகமார்த்த பூண்முலையாள்" என்னும் திருப்பதி கத்தை யாழ்நரம்பிலே இசைகூடும்படிப்பாடிமுடித்து புறத்தணைந்து பெரும்பாணரை நோக்கியாழில் இட்டு வாசிக்கும்படி பணித்து தாம் திருத்தாளங்கொண்டு பாடியருளினார்

திருநள்ளாறு பண் பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

போகமார்த்தபூண்முலையாள்தன்னோடும்பொன்னகலம்
பாகமார்த்தபைங்கணவெள்ளேற்றண்ணல்பரமேட்டி
யாகமார்த்ததோலுடையான்கோவணவாடையின்மேல்
நாகமார்த்தஎம்பெருமான்மேயதுநள்ளாறே

தண்புனலும்வெண்பிறையுந்தாங்கியதாழ்சடையன்
நண்புநல்லார்மல்குகாழிஞானசம்பந்தனல்ல
பண்புநள்ளாறேத்துபாடல்பத்துமிவைவல்லா
ருண்புநீங்கிவானவரோடுலகிலுறைவாரே

திருச்சிற்றம்பலம்.

பின்பு பெரும்பாணர் அப்பதிகவிசையை யாழில்இட்டு வாசித்தார் அதுகேட்டுப் பிள்ளையார் திருவுளமகிழ்ந்தருளினார், பின்பிள்ளையார்திரு நள்ளாற்றினின்றும் நீங்கிசாத்த மங்கைக்குச் சமீபித்து, அந்தத்திருப்ப தியினின்று வந்து தம்மை எதிர்கொண்டு வணங்கிய திருநீலநக்கநாயனா

ரோடுசென்று அயவந்தி என்னும் ஆலயத்திற்சென்று சுவாமிதரிசனம்செய்துகொண்டுதிருநீலநக்கநாயனாருடைய வீட்டுக்குப்போய்த்திருவமுதுசெய்து அன்றிரவு அங்கே பள்ளிகொண்டார், மற்றநாள்பிராதக்காலத்தில் திருநீலநக்கநாயனாரோடும்அயவந்தியிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து திருநீலநக்கநாயனாரைச்சிறப்பித்துப்பதிகம்பாடியருளினார்

திருச்சாத்தமங்கை - பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

திருமலர்க்கொன்றைமாலைதிளைக்கும்மதிசென்னிவைத்தீ
ரிருமலர்க்கண்ணிதன்னோடுடனாவதுமேற்பதொன்றே
பெருமலர்ச்சோலைமேகமுரிஞ்சும்பெருஞ்சாத்தமங்கை
யருமலராதிமூர்த்தியயவந்தியமர்ந்தவனே

மறையினார்மல்குகாழித்தமிழ்ஞானசம்பந்தன்மன்னு
நிறையினார்நீலநக்கனெடுமாநகரென்றுதொண்ட
ரரையுமூர்சாத்தமங்கையயவந்திமேலாய்ந்தபத்து
முறைமையாலேத்தவல்லாரிமையோரிலுமுந்துவரே

திருச்சிற்றம்பலம்

சிலநாளாயினபின் திருநீலநக்கநாயனாருக்கு விடைகொடுத்துசாத்தமங்கையைநீங்கிநாகைக்காரோணம்,கீழ்வேளூர் என்னும் ஸ்தலங்களை வணங்கித்திருப்பதிகம் பாடிக்கொண்டு பிறதலங்களையும் வணங்கும்படி எழுந்தருளினார்

திருக்கடனாகைக்காரோணம் - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

கூனற்றிங்கட்குறுங்கண்ணிகான்றநெடுவெண்ணிலா
வேனற்பூத்தமராங்கோதையோடும்விரிவுஞ்சடை
வானநாடனமரர்பெருமாற்கிடமாவது
கானல்வேலிகழிசூழ்கடனாகைக்காரோணமே.

மல்குதணண்பூம்புனல்வாய்ந்தொழுகும்வயற்காழியா
னல்லகேள்வித்தமிழ்ஞானசம்பந்தனல்லாற்கண்முன்
வல்லாரேபுனைத்தேத்துங்காரோணத்துவண்டமிழ்
சொல்லுவார்க்கும்மிவைகேட்பவர்க்குந்துயரில்லையே.

திருச்சிற்றம்பலம்

திருக்கீழ்வேளூர் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னுலாவியசடையினர்விடையினர்மிளிர்தருமாவோடும்
பன்னுலாவியமறையொலிநாவினர்கறையணிகண்டத்தர்
பொன்னுலாவியகொன்றையந்தாரினர்புகழ்மிகுகீழ்வேளூ
ருன்னுலாவியசிந்தையர்மேல்வினையோடிடவீடாமே,

குருண்டவார்குழற்சடையுடைக்குழகனையழகமர்கீழ்வேளூர்த்
திரண்டமாமறையவர்தொழும்பெருந்திருக்கோயிலெம்பெருமானை
யிருண்டமேதியினினமிகுவயன்மல்குபுலிமன்சம்பந்தன்
றெருண்டபாடல்வல்லாரவர்சிவகதிபெறுவது திடமாமே.

திருச்சிற்றம்பலம்.

அப்பொழுது திருச்செங்காட்டங்குடியில் இருக்கின்ற சிறுத்தொண்டநாயனர் ஓடிச்சென்று பிள்ளையாரை எதிர்கொண்டு தம்முடைய திருப்பதியில் அழைத்துக்கொண்டுபோனர் பிள்ளையார்அப்பதியிலிருக்கின்றகணபதீச்சரமென்னுங் கோயிலைவணங்கி சிறுத்தொண்டரைச்சிறப்பித்துத் திருப்பதிகம்பாடி சிறுத்தொண்டர் வீட்டிற்போய்த் திருவமுது செய்தார்.

திருச்செங்காட்டங்குடி . பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பைங்கோட்டுமலர்ப்புன்னைப்பறவைகாள்பயப்பூரச்
சங்காட்டந்தவிர்த்தென்னைத்தவிராநோய்த்தானே
செங்காட்டங்குடிமேயசிறுத்தொண்டன்பணிசெய்ய
வெங்காட்டுளனலேந்திவிளையாடும்பெருமானே.

செந்தண்பூம்புனல்பரந்தசெங்காட்டங்குடிமேய
வெந்தநீறணிமார்பன்சிறுத்தொண்டனவன்வேண்ட
வந்தண்பூங்கலிக்காழியடிகளையேயடிபரவுஞ்
சந்தங்கொள்சம்பந்தன்றமிழுரைப்போர்தக்கோரே.

திருச்சிற்றம்பலம்.

அங்கே இருக்குநாளிலே திருமருகலுக்குப்போய், சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு அங்கிருந்தார். அந்நாளிலே ஒருவணிகன் பதிகனுகி ஒருகன்னிகையும்உடன்கொண்டுகோயிலுக்குப்புறத்திலேஒருமடத்தில் இராத்திரியில்நித்திரைசெய்யும்போது பாம்பினலேதீண்டப்பட்டுமாண்டான். அதுகண்டுஅக்கன்னியானவள் தளர்ந்துஅவனைப்பாம்புதீண்டியும் தான்தீண்டாமல் சமிபத்திலேவீழ்ந்துபுரண்டுஅழுதாள். அப்பொழுது

விஷவைத்தியர் வந்து தீர்க்கவும் தீராதாயிற்று விடியகாலத்திலே அக் கன்னிகை மிக அயர்ந்து புலம்பி கோயிலின்வாயிற் றிக்கைநோக்கி கை தொழுது தேவர்கள் உய்யும்பொருட்டு நஞ்சை அமுதாக்கிய கடவுளே வெந்துபொடியாகிய மன்மதனுடைய உயிரை அவன் மனைவியாகிய இ ரதிவேண்ட அருளிச்செய்த கருணாநிதியே மார்க்கண்டர்பொருட்டு இ யமனை உதைத்த திருவடித்தாமரைகளை யுடையவரே, திருமருகலில் வீற்றிருக்கும் பரமசிவனே தேவரீர் இந்தக்கொடிய விஷம் நீங்கும்பொ ருட்டும் அடியேன் துக்கசாகரத்தினின்று கரையேறும் பொருட்டும் அ ருள்செய்யும் என்றுஸ்தோத்திரம் பண்ணினாள். அவ்வோசையைச் சுவாமி தரிசனஞ்செய்யும்படி எழுந்தருளிவருகின்ற திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் கேட்டு திருவுளம் இரங்கி அவளுக்கு அருள்செய் யும் பொருட்டு அடியார்களோடு எழுந்தருளி நின்று அவளைநோக்கி பயப்படேல், நிகழ்ந்த சமாசாரத்தைச்சொல் என்று வினவியருளினார். கன்னிகை கண்ணீர் சொரிய பிள்ளையாருடைய திருவடியிலே விழுந்து நமஸ்கரித்து எழுந்துநின்று வைப்பூரில் இருக்கின்ற என் பிதாவுக்குப் புத்திரிகள் எழுவர். அவர்களில் என்னை ஒழிய மூத்தோர் அறுவரை யும் தன் மருமகனாகிய இவனுக்கே விவாகம்செய்து கொடுப்பேன் என் று சொல்லி பிறரிடத்திலே திரவியம் வாங்கிக்கொண்டு அவர்களுக்கு விவாகம்செய்து கொடுத்துவிட்டான் அதுகண்டு மனவருத்தமுற்றுஇவ னுக்கே நான் மனைவியாதல் வேண்டும்என நினைந்து, என் பிதாமாதாக் களை மறந்து இவனையே சார்ந்துவந்தேன் இவனும் பாம்பினாலே தீண் டப்பட்டு இறந்தான். அடியேன் கடனடுவேகலங்கவிழப் பெற்றார்போ ல நிற்கின்றேன் தேவரீர் எழுந்தருளிவந்து அடியேனுடைய துன்ப மெல்லாம் நீங்க அருள்செய்தீர்என்றாள். பிள்ளையார் விஷம்நீங்கும் பொருட்டு திருமருகற்கடவுள்மேல் திருப்பதிகம்பாடியருளினார்.

திருமருகல்விடந்தீர்த்த திருப்பதிகம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சடையாயெனுமால்சரணீயெனுமால், விடையாயெனுமால்வெருவாவிழுமான்
மடையார்குவளை மலரும்மருக, லுடையாய்தகுமோவிவளுண்மெலிவே.

வயஞானம்வல்லார் மருகற்பெருமா, னுயர்ஞானமுணர்ந் தடியுள்குதலா
லியன்ஞானசம்பந் தன்பாடல்வல்லார், வியன்ஞானமெல்லாம்விளங்கும்புகழே.

திருச்சிற்றம்பலம்.

உடனே வணிகன் விடந்தீர்ந்து எழுந்துபிள்ளையாரை நமஸ்கரித் தான். அதுகண்ட திருத்தொண்டர்களெல்லாரும் ஆரவாரித்தார்கள் கன்னிகைமனமகிழ்ந்து பிள்ளையாருடைய திருவடியிலே விழுந்துவணங் கினாள் பிள்ளையார் அக்கன்னிகையையும் வணிகனையும் மணம்புணரும்

படி செய்து அவர்களுக்கு விடைகொடுத்து அங்கே இருந்தார் இருக்கும்நாளிலே சிறுத்தொண்டர்வந்து பிரார்த்திக்க பிள்ளையார் மீண்டும் செங்காட்டங்குடிக்கு எழுந்தருள விரும்பி அடியாரோடும் அத்திருமருகற்கோயிலிற்சென்று வணங்க பரமசிவன் தாம் செங்காட்டங் குடியிலிருக்கின்ற திருக்கோலத்தை அவருக்குக் காட்டியருளினர். பிள்ளையார் அதுகண்டு மனமகிழ்ந்து பதிகம்பாடி அந்தத் திருப்பதியிலேதானே இருந்தார்.

திருமருகலுந் திருச்செங்காட்டங்குடியும் வினவுரை-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

அங்கமும்வேதமுமோதுநாவரந்தணர்நாளுமடிபரவ
மங்குல்மதிதவழ்மாடவீதிமருகல்நிலாவியமைந்தசொல்லாய்
செங்கயலார்புனற்செல்வமல்குசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
கங்குல்விளங்கெரியேந்தியாடுங்கணபதீச்சரங்காமுறவே.

நாலுங்குலைக்கமுகோங்குகாழிஞானசம்பந்தனலந்திகழு
மாலின்மதிகவழ்மாடமோங்குமருகலின்மற்றதன்மேல்மொழிந்த
சேலுங்கயலுந்திளைத்தகண்ணார்சீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
சூலம்வல்லான்கழலேத்துபாடல் சொல்லவல்லார்வினையில்லையாமே.

திருச்சிற்றம்பலம்.

சிலநாட்சென்றபின், அப்பதியை நீங்கி, தம்மைதொடர்ந்த சிறுத்தொண்டநாயனருக்கு விடைகொடுத்து சிவஸ்தலங்கள் பலவற்றை வணங்கிக்கொண்டு திருப்புகலூருச்குச் சமீபித்து அப்பதியினின்று வந்து தம்மை எதிர்கொண்டு வணங்கியமுருகநாயனர் முதலிய அடியார்களோடு சென்று கோயிலை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்து முருகநாயனருடைய திருமடத்திற்குப்போய் அவர் உபசரிக்க வீற்றிருந்தார். இருக்கும்நாளிலே வர்த்தமானீச்சரத்தை வணங்கி முருகநாயனருடைய திருத்தொண்டைச் சிறப்பித்து திருப்பதிகம் பாடியருளினர்.

திருப்புகலூர் - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்

வாழ்ந்தநாளுமினிவாழுநாளுமிவையறிதிரேல்
வீழ்ந்தநாளெம்பெருமானையேத்தாவிரகில்லிகாள்
போழ்ந்ததிங்கட்புரிசடையினனன்றன்புகலூரையே
சூழ்ந்தவுள்ளமுடையீர்களுங்கடுயர்தீருமே

புந்தியார்ந்தபெரியோர்களேத்தும்புகலூர்தனுன்
வெந்தசாம்பற்பொடிப்பூசவல்லவிடையூர்தியை
யந்தமில்லாவனலாடலானையணிஞானசம்
பந்தன்சொன்னதமிழ்பாடியாடக்கெடும்பாவமே.

திருச்சிற்றம்பலம்.

திருப்புகலூர்வர்த்தமானீச்சரம்-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

ஈசனேறமர்கடவுளின்னமிர்தெந்தையெம்பெருமான்
பூசுமாசில்வெண்ணீற்றர்பொலிவுடைப்பூம்புகலூரின்
மூசுவண்டறைகொன்றைமுருகன்முப்போதுஞ்செய்முடிமேல்
வாசமாமலருடையார்வர்த்தமானீச்சரத்தாரே.

பொங்குதண்புனல்சூழ்ந்தபோதணிபொழிற்புகலூரின்
மங்குன்மாமதிதவழும்வர்த்தமானீச்சரத்தாரைத்
தங்குசீர்திகழ்ஞானசம்பந்தன்றண்டமிழ்பத்து
மெங்குமேத்தவல்லார்களெய்துவரிமையவருலகே.

திருச்சிற்றம்பலம்.

அங்கேயிருக்குங்காலத்தில் திருநாவுக்கரசுசுவாமிகள் திருவாரூரை வணங்கிக்கொண்டு திருப்புகலூரை வணங்குதற்கு அடியார்களோடும் எழுந்தருளும் திருவார்த்தையைக் கேட்டு அத்தியந்த ஆசையோடு அவரை எதிர்கொள்ளும்பொருட்டு திருக்கூட்டத்தோடும் திருப்புகலூரின் எல்லையைக் கடந்துசென்றார். திருநாவுக்கரசு சுவாமிகளும் பிள்ளையாருக்கு எதிரேவந்தார் இருவரும் பரஸ்பர நமஸ்காரம்பண்ணி நல்வரவுசொல்லி மகிழ்ந்தார்கள். அப்போது பிள்ளையார் அப்பமூர்த்தியை நோக்கி அப்பரே நீர்வரும்நாளிலே திருவாரூரிலே நிகழ்ந்த சிறப்பைச் சொல்லும் என்றுசொல்ல அப்பமூர்த்தி திருவாதிரைச் சிறப்பைத் திருப்பதிகத்தினாலே சொல்லியருளினார். பிள்ளையார் அதுகேட்டு நான் திருவாரூருக்குப்போய்ச் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு மீண்டு இவ்விடத்திற்கு வந்து உம்முடன் இருப்பேன் என்று சொல்லி அப்பமூர்த்தி திருப்புகலூருக்குப் போக தாம் சென்று விற்குடியை வணங்கிக்கொண்டு திருவாரூரை அடைந்து வன்மீகநாதரை வணங்கிப் பதிகம் பாடி யப்பதியில் இருந்தார்.

திருஆரூர்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றமபலம்.

பாடலன்நான்மறையன்படிபட்டசோலத்தன்றிங்கள்
சூடலன்மூவிலையசூலம்வலனேந்திக்
கூடலர்மூவெயிலுமெரியுண்ணக்கூரெரிகொண்டெல்லி
யாடலனாதிரையனாரூரமர்ந்தானே,

நல்லபுனற்கலித்தமிழ்ஞானசம்பந்தனல்ல
வல்லிமலர்க்கழனியாரூரமர்ந்தானை
வல்லதோரிச்சையினல்வழிபாடிவைபத்தும்வாய்க்கச்
சொல்லுதல்கேட்டல்வல்லார்துன்பந்துடைப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

திருவிற்குடிவீரட்டானம்-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

வடிகொண்மேனியர்வானமாமதியினர்நதியினர்மதுவார்ந்த
கடிகொள்கொன்றையஞ்சடையினர்கொடியினருடையபுலியதளார்ப்ப
விடையதேறுமம்மானமர்ந்தினிதுறைவிற்குடிவீரட்ட [ர்
மடியராகிநின்றேத்தவல்லார்தமையருவினையடையாவே.

விலங்கலேசிலையிடமெனவுடையவன்விற்குடிவீரட்டத்
திலங்குசோதியையெம்பெருமான்றனையெழிறிகழல்பேணி
நலங்கொள்வாழ்பொழிற்காழியுண்ஞானசம்பந்தனற்றமிழ்மாலை
வலங்கொடேயிசைமொழியுமின்மொழிந்தக்கான்மற்றதுவரமாமே.

திருச்சிற்றம்பலம்.

திருஆரூர்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

உள்ளமோரிச்சையினலுகந்தேத்தித்தொழுமின்றொண்டீர்மெய்யே
கள்ளமொழிந்திடுமின்கரவாதிருபொழுதும்
வெள்ளமோர்வார்சடைமேற்கரந்திட்டவெள்ளேற்றான்மேய
வள்ளழகன்கழனியாரூரடைவோமே.

நல்லபுனற்கலித்தமிழ்ஞானசம்பந்தனல்ல
வல்லிமலர்க்கழனியாரூரமர்ந்தானை
வல்லதோரிச்சையினல்வழிபாடிவைபத்தும்வாய்க்கச்
சொல்லுதல்கேட்டல்வல்லார்துன்பந்துடைப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்த்திருவிராகம்-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பருக்கையானைமத்தகத்தரிக்குலத்துகிர்ப்புகந்
நெருக்கிவாயநித்திலங்நிரக்குநீள்பொருப்பனூர்
கருக்கள்சோலைசூழநீடுமாடமாளிகைக்கொடி
யருக்கன்மண்டலத்தளாவுமந்தணாரூரென்பதே.

வல்லிசோலைசூதநீடுமன்னுவீதிபொன்னுலா
வல்லிமாதமர்ந்திருந்தவந்தணுயிராதியை
நல்லசொல்லுஞானசம்பந்தனுவிலின்னுரை
வல்லதொண்டர்வானமாளவல்லர்வாய்மையாகவே.

திருச்சிற்றம்பலம்.

திருஆரூர்-திருவிருக்குக்குறள்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சித்தந்தெளிவீர்கா, ளத்தனாருரைப், பத்திமலர்தூவ, முத்தியாகுமே
சீரூர்சம்பந்த, ஞரூரைச்சொன்ன, பாரூர்பாடலார், பேரார்ன்பமே.

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

அந்தமாயுலகாதியுமாயினன், வெந்தவெண்பொடிப்பூசியவேதியன்
சிந்தையேபுகுந்தான்றிருவாரூரெம், மெந்தைதானெனையேன்றுகொளுங்கொலோ

வன்னிகொன்றைமதியொடுகூவிளஞ், சென்னிவைத்தபிரான்றிருவாரூரை
மன்னுகாழியுண்ஞானசம்பந்தன்வாய், பன்னுபாடல்வல்லார்க்கில்லைபாவமே.

திருச்சிற்றம்பலம்.

பின் அங்குள்ள அரநெறியென்னும் ஆலயத்தையும் காலந்தோறும் பணிந்தார். அங்கிருக்கும்நாளிலேவலிவலம், கோளிலிமுதலிய ஸ்தலங்களுக்கும்போய் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு திருப்பதிகம் பாடியருளினர்.

திருவலிவலம் திருவிராகம்-பண் வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பூவியல்புரிகுழல்வரிசிலைநுகர்நுத, லேவியல்கணைபிணையெதிர்விழியுமையவண்
மேவியதிருவுருவுடையவன்விரைமலர், மாவியல்பொழில்வலிவலமுறைறையிறையே.

மன்னியவலிவலநகருறைறையிறைவனை, யின்னியன்மலநகரிறையெழின்மறை
தன்னியல்கலைவலதமிழ்விரகனதுரை, யுன்னியவொருபதுமுயர்பொருடருமே.

திருச்சிற்றம்பலம்

திருக்கோளிலி - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

நாளானபோகாமேநஞ்சணியுங்கண்டனுக்கே
யாளாயவன்புசெய்வோமடநெஞ்சேயாரனைமங்
கேளாய்நங்கிளைகிளைக்குக்கேடுபடாத்திறமருளி
கோளாயநீக்குமவன்கோளிலியெம்பெருமானே.

நம்பனைநல்லடியார்கள்நாமுடைமாடென்றிருக்குங்
கொம்பனையாள்பாகனெழிற்கோளிலியெம்பெருமானை
வம்பமருந்தண்காழிச்சம்பந்தன்வண்டமிழ்கொண்
டின்பமரவல்லார்களெய்துவர்களீசனையே

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பவனமாய்ச்சோடையாய்நாவெழாப்பஞ்சுதோய்ச்சட்டவுண்டு
சிவனதாட்சிந்தியாப்பேதைமார்போலநீவெள்கினையே
கவனமாய்ப்பாய்வதோரேறுகந்தேறியகாளகண்ட
னவனதாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே.

பல்லிதழ்மாதவியல்லிவண்டியாழ்செயுங்காழியூர்
னல்லவேநல்லவேசொல்லியஞானசம்பந்தனரு
ரெல்லியம்போதெரியாடுமெம்மீசனையேத்துபாடல்
சொல்லவேவல்லவர்தீதிலரோதநீர்வையகத்தே.

திருச்சிற்றம்பலம்.

மீண்டும் அத்திருவாரூரில் வந்து இருந்தார். சிலநாளாயினபின்திரு நாவுக்கரசு சுவாமிகளை காணுதற்கு விரும்பி திருவாரூரை நீங்கி பனையூரிற்சென்று சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு திருப்பதிகம் பாடியருளினர்.

திருப்பனையூர் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அரவச்சடைமேல்மதிமத்தம், விரவிப்பொலிகின்வனூரா
நிரவிப்பலதொண்டர்களுளும், பரவிப்பொலியும்பனையூரே.

பாரார்விடையான்பனையூர்மேற், சீரார்தமிழ்ஞானசம்பந்த
னாற்சொன்னமாலைகள்பத்து, மூரார்நினைவாருயர்வாறே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு திருப்புகலூருக்குச் சமீபித்து அப்பதியினின்று வந்து தம்மைஎதிர்கொண்ட அப்பமூர்த்தி. முருகநாயனர் முதலாகியதிருத்தொண்டர்களோடும்போய் சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு திருப்பதிகம் பாடியருளினர்,

---

திருப்புகலூர்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

குறிகலந்தவிசைபாடலினனசையாலிவ்வுலகெல்லா
நெறிகலந்ததொருசீர்மையனுயெருதேறும்பலிபேணி
முறிகலந்ததொருதோலரைமேலுடையானிடமெய்ம்மலரின்
பொறிகலந்தபொழில்சூழ்ந்தயலேபுயலாரும்புகலூரே.

புற்றில்வாழுமரவம்மரையார்த்தவன்மேவும்புகலூரைக்
கற்றநல்லவர்காழியுளஞானசம்பந்தன்றமிழ்மாலை
பற்றியென்றும்மிசைபாடியமாந்தர்பரமன்னடிசேர்ந்து
குற்றமின்றிக்குறைபாடொழியாப்புகழோங்கிப்பொலிவாரே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு முருகநாயனருடைய திருமடத்தை அடைந்து அங்கே இருந்தருளினர். இருக்கும் நாளிலே திருநீலநக்க நாயனரும் சிறுத்தொண்டநாயனரும் அவ்விடத்திற்கு வந்து அவர்களோடு இருந்தார்கள் சிலதினஞ் சென்றபின் பிள்ளையாரும் அப்பமூர்த்தியும் பிறதலங்களை வணங்க விரும்பிப் புறப்பட்டு முருகநாயனரை அங்கே இருக்கவும் திருநீலநக்கநாயனரையும் சிறுத்தொண்ட நாயனரையும் தங்கள் தங்கள் ஊருக்குச் செல்லவும் ஏவினர்கள் பிள்ளையார் அப்பமூர்த்தியை விட்டுப் பிரியாமல் முத்துச்சிவிகையின்வர வழிக்கொள்ளும்பொழுது அப்பமூர்த்தி பிள்ளையாரை நோக்கி பரமசிவன் தேவரீருக்கு அருளிச்செய்த இம்முத்துச்சிவிகையின்மேலே எழுந்தருளும் என்றுசொல்ல பிள்ளையார் நீர் அடியார்களோடும் எங்கே முன்போவீரோ அங்கேநான் பின்வருவேன் என்றார். அப்பமூர்த்தி தேவரீர் அருளிச்செய்தபடியே செய்வேன் என்று சொல்லிக்கொண்டு அன்றுமுதல் அவருடன் செல்லுநாள் எல்லாம் அப்படியே செய்வாராகி சென்று முன்னே அடியாரோடும் திருவம்பருக்குச் சென்றார். பிள்ளையார் பரமசிவனுடைய திருவருள் வழியே நிற்பாராகி முத்துச்சிவிகையில் ஏறி திருப்புகலூரைக் கடந்து சென்று, அப்பமூர்த்தி எங்கே சென்றார் என்று வினவிப்போய் திருவம்பரை அடைந்து மாகாளத்தில் இருக்கின்ற சுவாமியை வணங்கிப்பதிகம்பாடி அப்பமூர்த்தியோடும் அந்தத்திருப்பதியில் இருந்தார்.

திருஅம்பர்மாகாளம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அடையார்புரமூன்று மனலாய்விழவெய்து, மடையார்புனலாம்பர் மாகாளச்மேய, விடையார்கொடியெந்தை வெள்ளைப்பிறைசூடுஞ், சடையான் கழலேத்தஞ் சாராவினைதானே.

வெருநீர்கொளவோங்குவேணுபுரந்தன்னுட்,டிருமாமறைஞானசம்பந்தன்சேணர்
பெருமான்மலியம்பர்மாகாளம்பேணி, யுருகாவுரைசெய்வாருயர்வானடைவாரே.

திருச்சிற்றம்பலம்

திருஅம்பர்மாகாளம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

படியுளார்விடையினர்பாய்புலித்தோலினர்பாவநாசர்
பொடிகொண்மாமேனியர்பூதமார்படையினர்பூணநூலார்
கடிகொண்மாமலரிடுமடியினர்பிடிநடைமங்கையோடு
மடிகளாரருள்புரிந்திருப்பிடமம்பர்மாகாளந்தானே.

செம்பொன்மாமணிகொழித்தெழுதிரைவருபுனலரிசில்சூழ்ந்த
வம்பர்மாகாளமேகோயிலாவணங்கினோடிருந்தகோனைக்
கம்பினார்நெடுமதிற்காழியுண்ஞானசம்பந்தன்சொன்ன
நம்பிநாண்மொழிபவர்க்கில்லையாம்வினைநலம்பெறுவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

பின் அங்கே கோச்செங்கட் சோழராஜா செய்த கோயிலை அடைந்து, சுவாமி தரிசனஞ்செய்து அவ்விராஜாவைச் சிறப்பித்துத் திருப்பதிகங்கள் பாடியருளினர்.

திருஅம்பர்மாகாளம்-பண் நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

புல்குபொன்னிறம்புரிசடைநெடுமுடிப்போழிளமதிசூடிப்
பில்குதேனுடைநறுமலர்க்கொன்றையும்பிணையல்செய்தவர்மேய
மல்குதண்டுறையரிசிலின்வருபுனன்வடகரைமாகாள
மல்லுநண்பகலுந்தொழுமடியவர்க்கருவினையடையாவே.

மாறுதன்னொடுமண்மிசையில்லதுவருபுனன்மாகாளத்
தீறுமாதியுமாகியசோதியையேறமர்பெருமானை
நாறும்பூம்பொழிற்காழியுண்ஞானசம்பந்தன்தமிழ்மாலை
கூறுவாரையுங்கேட்கவல்லாரையுங்குற்றங்கள்குறுகாவே.

திருச்சிற்றம்பலம்.

திருஅம்பர்பெருந்திருக்கோயில் - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மையகண்மலைமகள்பாகமாயிருள், கையதோர்கனலெரிகனலவாடுவ
ரையநன்பொருபுனலம்பர்ச்செம்பியர், செய்யகணிறைசெய்தகோயில்சேர்வரே.

அழகரையடிகளையம்பர்மேவிய, நிழறிகழ்சடைமுடிநீலகண்டரை (யே
யுமிழ்திரையுலகினிலோதுவீர்கொண்மின், றமிழ்செழுவிரகினன்றமிழ்செய்மாலை

திருச்சிற்றம்பலம்.

சிலநாட்சென்றபின் திருவம்பரைநீங்கி அப்பமூர்த்தியோடு திருக்கடவூருக்குச்சமீபித்து அங்குநின்றுவந்துஎதிர்கொண்டுவணங்கியகுங்கிலியக் கலயநாயனர்முதலாகிய அடியார்களோடு, திருவீரட்டானத்திற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து பதிகம்பாடி அக்குங்கிலியக்கலயநாயனர்வீட்டில்திருவமுதுசெய்து திருமயானத்தையும் வணங்கிக்கொண்டு

திருக்கடவூர்த் திருவீரட்டம்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

சடையுடையானுநெய்யாடலானுஞ்சரிகோவண
வுடையுடையானுமையார்ந்தவொண்கண்ணுமைகேள்வனுங்
கடையுடைநன்னெடுமாடமோங்குங்கடவூரதனுள்
விடையுடையண்ணலும்வீரட்டானத்தானல்லனே.

வெந்தவெண்ணீறணிவீரட்டானத்துறைவேந்தனை
யந்தணர்தங்கடவூருளானையணிகாழியான்
சந்தமெல்லாமடிசாத்தவல்லமறைஞானசம்
பந்தன்செந்தமிழ்பாடிபாடக்கெடும்பாவமே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கடவூர்மயானம் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வரியமறையார்பிறையார்மலையோர்சிலையாவணங்கி
பெரியமதில்களெய்தாரெரியுமுசலமுடையார்
கரியமிடறுமுடையார்கடவூர்மயானமமர்ந்தரர்
பெரியவிடைமேல்வருவாரவரெம்பெருமானடிகளே

மரவம்பொழில்சூழ்கடவூர்மன்னுமயானமமர்ந்த
வரவமசைத்தபெருமானகலமறியலாகா
பரவுமுறையேபயிலும்பந்தன்செஞ்சொன்மாலை
யிரவும்பகலும்பரவுநினைவார்வினைகளிலரே.

திருச்சிற்றம்பலம்.

பின் திருக்கடவூரை நீங்கி ஆக்கூர், மீயச்சூர், பாம்புரம் என்றும் ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருவீழிமிழலையை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்து திருப்பதிகங்கள் பாடியருளினர்.

திருஆக்கூர்-தான்தோன்றுமாடம் பண் சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

அங்கிருந்தவாரமுமாடரவுமாமையின்
தொக்கிருந்தமார்பினன்றோலுடையான்வெண்ணீற்றான்
புக்கிருந்ததொல்கோயில்பொய்யிலாமெய்நெறிக்கே
தக்கிருந்தாராக்கூரிற்றான்றோன்றிடமாமே.

ஆடலமர்ந்தானையாக்கூரிற்றான்றோன்றி
மாடமமர்ந்தானைமாடஞ்சேர்தண்காழி
நாடற்கரியசீர்ஞானசம்பந்தன்சொற்
பாடலிவைவல்லார்க்கில்லையாம்பாவமே

திருச்சிற்றம்பலம்

திருமீயச்சூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

காயச்செவ்விக்காமற்காய்ந்துகங்கையைப்,பாயப்படர்புன்சடையிற்பதித்தபரமேட்டி
மாயச்சூரனறுத்தமைந்தன்றாதைதன், மீயச்சூரேதொழுதும்வினையைவீட்டுமே.

வேடமுடையபெருமானுறையுமீயச்சூர்நாடும்புகழார்புகலிஞானசம்பந்த
பாடலாயதமிழீரைந்துமொழிந்துள்கி, யாடுமடியாரகல்வானுலகமடைவாரே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பாம்புரம் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

சீரணிதிகழ்திருமார்பில்வெண்ணூலர்திரிபுரமெரிசெய்தசெல்வர்
வாரணிவனமுலைமங்கையோர்பங்கர்மான்மறியேந்தியமைந்தர்
காரணிமணிதிகழ்மிடறுடையண்ணல்கண்ணுதல்விண்ணவரேத்தும்
பாரணிதிகழ்தருநான்மறையாளர்பாம்புரநன்னகராரே

பார்மலிந்தோங்கிப்பருமதில்சூழ்ந்தபாம்புரநன்னகராரைக்
கார்மலிந்தழகார்கழனிசூழ்மாடக்கழுமலகுதுபதிக்கவுணி
நாமலிந்தோங்குநான்மறைஞானசம்பந்தன்செந்தமிழ்வல்லார்
சீர்மலிந்தழகார்செல்வமதோங்கிச்சிவனடிநண்ணுவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலை - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அரையார்விரிகோவணவாடை, நரையார்விடையூர்திநயந்தான்
விரையார்பொழில்வீழிம்மிழலை, யுரையாலுணர்வாருயர்வாரே.

நளிர்காழியுண்ஞானசம்பந்தன், குளிரார்சடையானடிகூற
மிளிரார்பொழில்வீழிம்மிழலை, கிளர்பாடவல்லார்க்கில்லைகேடே.

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலை பண் நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

சடையார்புனலுடையானொருசரிகோவணமுடையான்
படையார்மழுவுடையான்பலபூதப்படையுடையான்
மடமான்விழியுமைமாதிடமுடையானெனையுடையான்
விடையார்கொடியுடையானிடம்வீழிம்மிழலையே.

வீழிம்மிழலைம்மேவியவிகிர்தன்றனைவிரைசேர்
காழிந்நகர்க்கலைஞானசம்பந்தன்றமிழ்பத்தும்
யாழின்னிசைவல்லார்சொலக்கேட்டாரவரெல்லா
மூழின்வலிவினைபோயிடவுயர்வானடைவாரே.

திருச்சிற்றம்பலம்.

பினபு அக்கோயிலின் புறத்தணைந்து அப்பமூர்த்தி ஒருமடத்தை அடைய தாம் வேறொருமடத்திலே போயிருந்தார். அவ்விருவரும் பெருந்துறை திலகைப்பதிஎன்னும் ஸ்தலங்களுக்குப்போய்த் தரிசனம் செய்துகொண்டு, மீண்டும் திருவீழிமிழலையில் வந்திருந்தார்கள். இருக்கும்நாளிலே சீர்காழியிற் பிராமணர்கள் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளைக் காணல்வேண்டும் என்னும் ஆசைசெலுத்த, திருவீழிமிழலையை அடைந்து தங்களை எதிர்கொண்ட அவ்வூர்ப்பிராமணர்களோடு கோயிலிலேபோய்ச் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு, அந்நாயனாரிருக்கும் திருமடத்திற்சென்று, அவரை நமஸ்கரித்து சுவாமி தேவரீர் அடியேங்களோடு சீர்காழிக்கு எழுந்தருளல்வேண்டும் என்று பிரார்த்தித்தார்கள் பிள்ளையார்அதுகேட்டு மிக நன்று இன்றுகழிந்து திருவீழிமிழலையில் வீற்றிருக்குங் கடவுளுடைய அருளைப்பெற்றுக்கொண்டு திருத்தோணியப்பரை வணங்குதற்கு உங்களோடு வருவேன் என்றார். சீர்காழிப்பிராமணர்களுக்குத் திருவீழிமிழலைப் பிராமணர்கள் விருந்துசெய்தார்கள். தோணியப்பர் அன்றிரவு பிள்ளையாருக்குச் சொப்பனத்திலே தோன்றி நாம் திருத்தோணியில் வீற்றிருக்குங்கோலத்தை இத்திருவீழிமிழலையிலே உள்ளவிண்ணிழிந்த விமானத்திலே காட்டுவோம் காண் என்றுசொல்லி மறைந்தருளினார். பிள்ளையார் விழித்து எழுந்து கோயிலிற்சென்று அங்கே சுவாமியை தாம் முன்னே திருத்தோணியிற் கண்டபடியே கண்டு திருவுளமகிழ்ந்து வினவுரைப் பதிகம் பாடியருளினார்.

ஸ்ரீபுகலியுந் திருவீழிமிழலையும் வினவுரை-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மைம்மருபூங்குழற்கற்றைதுற்றவாணுதல்மான்விழிமங்கையோடும்
பொய்ம்மொழியாமறையோர்களேத்தப்புகலிநிலாவியபுண்ணியனே
யெம்மிறையேயிமையாதமுக்கணீசவனேகவிதென்கொல்சொல்லாய்
மெய்ம்மொழிநான்மறையோர்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே.

விண்ணிழிகோயில்விரும்பிமேவும்வித்தகமென்கொலிதென்றுசொல்லிப்
புண்ணியனைப்புகலிந்நிலாவுபூங்கொடியோடிருந்தானைப்போற்றி
நண்ணியசீர்த்திகலங்கொள்கேள்விநான்மறைஞானசம்பந்தன்சொன்ன
பண்ணியல்பாடல்வல்லார்களிந்தப்பாரொடும்விண்புரிபாலகரே.

திருச்சிற்றம்பலம்.

அங்குநின்றும்போந்து சீர்காழிப்பிராமணர்களைநோக்கி திருத்தோணியப்பர் தாம் வீற்றிருக்கும் ஸ்தலங்களெங்கும் சென்று தரிசித்துப் பதிகம்பாடி வருதலின் மேற்கொண்ட என் விருபத்தைக்கண்டு தாம் அங்கே அமர்ந்த திருக்கோலத்தை இங்கேஎனக்குக் காட்டியருளினர் நீங்கள் சீர்காழிக்குப் போங்கள் என்றார்.

அதைக்கேட்ட பிராமணர்கள் சீர்காழிக்குப் போய்விட்டார்கள். பிள்ளையார் அப்பமூர்த்தியோடும் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு திருவீழி மிழலையில் இருக்கும்நாளிலே மழையின்மையாலும் காவேரிப் பெருக்கு இன்மையாலும் பஞ்சம் உண்டாக அதனல் உயிர்கள் எல்லாம் வருத்தமுற்றன. சிவனடியார்களையும் பசிநோய் வருத்திற்று அது கண்டு பாலறுவாயராகிய பிள்ளையாரும் அப்பமூர்த்தியும் பரமசிவனது விபூதியைத்தரித்த அடியார்களுக்கும் கவலைவருமோஎனத்திவுவிளமிரங்கி பரமசிவனுடைய திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டு அன்றிரவு துயின்றார்கள் துயிலும்போது பரமசிவன் அவ்விருக்கும்சொப்பனத்திலேதோன்றி,காலபேதத்தினலே நீங்கள் மனவாட்டம் அடையீர்களாயினும் உங்களை வழிபடுகின்ற அடியார்களுடைய வருத்தத்தை நீக்கும் பொருட்டு இப்பஞ்சம் நீங்கும்வரைக்கும் நாம் தினம்தோறும்கோயிலின் கிழக்கு வாழிற்படியினும் மேற்கு வாயிற்படியினும் ஒவ்வொருகாசு உங்களுக்குத்தருகின்றோம் என்றுசொல்லி மறைந்தருளினர். பிள்ளையார் விழித்தெழுந்துதிருவருளைத்துதித்து அப்பமூர்த்தியோடு கோயிலுற் புகுந்தபோது கிழக்குவாயிற்படியிலே காசு இருத்தலைக் கண்டு விருப்பத்தோடுந் தொழுது அதனை எடுத்து நாடோறும் சிவனடியார்கள் எல்லாரும் வந்து அமுது செய்யக்கடவர் என்று இரண்டு காலங்களினும் பறைசாற்றித் தெரிவித்து தம்முடைய திருமடத்தில்

வரும் அடியார்களுக்குக் கறி, நெய், பால், தயிரோடு அன்னம் இட்டுக்கொண்டு இருந்தார் அப்பமூர்த்தியும் மேற்கு வாயிற்படியில் வைக்கப்படுங் காசைஎடுத்து அப்படியே அடியார்களைத் திருவமுது செய்வித்தார். இப்படி நிகழும்நாளிலே பிள்ளையார் அப்பமூர்த்தியுடைய திருமடத்திலே அடியார்கள் காலம்பெறத் திருவமுது செய்தலைக்கண்டு தம்முடைய திருமடத்திற் பாகுகர்களை நோக்கி நீங்கள் காலம்பெற அமுதுபாகம்பண்ணி இங்கேவரும் அடியார்களுக்குக் கொடாமைக்குக் காரணம்யாது என்று வினவி யருளினர். பாகுகர்கள் பாலறுவாயரைவணங்கிநின்று சுவாமீ தேவரீர் கடவுளிடத்திற் பெறும்படிக்காசைத் தினந்தோறும் பண்டம் வாங்குதற்குக் கொண்டுபோனால் அதற்கு வாசிகேட்கின்றார்கள். அப்பமூர்த்தி பெற்ற காசையோ வாசியின்று ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இதினலே காலம் தாழ்க்கின்றது என்றார்கள். பிள்ளையார் அதைக்கேட்டு அப்பமூர்த்தி கைத்தொண்டு செய்தலாய் அவர் பெறுங் காசு வட்டமின்றி ஏற்கப்படுகின்றது என்றுசிந்தித்து இனி வரும் நாட்களிலே தரும் காசு வாசிதீரும்பொருட்டுப் பாடுவேன் எனத் திருவுளங்கொண்டார் மற்றநாள் கோயிலிலே புகுந்து வாசி தீர்த்தருளும் என்று திருப்பதிகம்பாடி நற்காசுபெற்றார்.

திருவீழிமிழலை-திருவிருக்குக்குறள்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்

அந்தக்காசைப் பாகுகர்கள்கொண்டுபோய் ஆவணத்திலே காட்ட அங்குள்ளோர் இக்காசு மிகநன்று வேண்டுவனவற்றை நாம்தருவோம் என்று கொடுத்தார்கள் அன்றுதொடங்கிப்பாகுகர் அடியவர்களைக்காலம்பெறஅமுதுசெய்வித்தார்கள்இவருடைய திருமடங்களிலும்நாடோறும்எண்ணிறந்த சிவனடியார்கள் வந்து திருவமுது செய்துமகிழ்ந்திருக்குங்காலத்திலே எங்கும் மழைபெய்து தானிய முதலியவைகள்மிகவிளைந்தமையால்உயிர்கள் துன்பம் நீங்கி இன்பமுற்றன திருஞானசம்பந்மூர்த்தியும் அப்பர்மூர்த்தியும் சிலநாட் சென்றபின் திருவீழிமிழலைஅகன்று திருவாஞ்சியம், தலையாலங்காடு, பெருவேளூர், கரவீரம், விளமர் திருவாரூர்,காறுயில்,தேவூர்,நெல்லிக்கா,கச்சினம், தெங்கூர்,கொள்ளிக்காடு,கேட்டூர், வெண்டுறை,தண்டலை,நீணெறி,திருக்களர், முதலியஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருப்பதிம்பாடியருளினர்.

திருவாஞ்சியம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

வன்னிகொன்றைமதமத்தமெருக்கொடுகூவிளம்
பொன்னியனற்சடையிற்பொலிவித்தபுராணனர்
தென்னவென்றுவரிவண்டிசைசெய்திருவாஞ்சியத்
மென்னையாள்வுடையானிடமாகவுகந்ததே.

தென்றறுன்றுபொழில்சென்றணையுந்திருவாஞ்சியத்
தென்றுநின்றவிறையானையுணர்ந்தடியேத்தலா
னன்றுகாழிமறைஞானசம்பந்தன்செந்தமி
ழொன்றுமுள்ளமுடையாரடைவாருயர்வானமே.

திருச்சிற்றம்பலம்

திருப்பெருவேளூர்-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

அண்ணவுங்கழுக்குன்றுமாயமலையவைவாழ்வார்
விண்ணோருமண்ணோரும்வியந்தேத்தவருள்செய்வார்
கண்ணாவாருலகுக்குக்கருத்தானார்புரமெரித்த
பெண்ணாளும்பெருமானார்பெருவேளூர்பிரியாரே.

பைம்பொன்சீர்மணிவாரிப்பமவுஞ்சேர்கனியுந்தி
யம்பொன்சேய்மடவரலாரணிமல்குபெருவேளூர்
நம்பன்றன்கழல்பரவிநவில்கின்றமறைஞான
சம்பந்தன்றமிழ்வல்லார்க்கருவினைநோய்சாராவே.

திருச்சிற்றம்பலம்

திருக்கரவீரம் - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அரியுமநம்வினையுள்ளனவாசற, வரிகொள்மாமணிபோற்கண்டங்
கரியவன்றிகழுங்கரவீரத்தெம், பெரியவன்கழல்பேணவே.

வீடிலான்விளக்குங்கரவீரத்தெஞ், சேடன்மேற்பரிவாற்றமிழ்
நாடிஞானசம்பந்தன்சொல்லிவை, பாடுவார்க்கில்லைபாவமே.

திருச்சிற்றம்பலம்

திருவிளமர் - திருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

மத்தகமணிபெறமலர்வதோர்மதிபுரைநுதல்கர
மொத்தகநகமணிமிளிர்வதோரரவினரொளிகிளி
ரத்தகவடிதொழவருள்பெறுகண்ணொடுமுமையவள்
வித்தகருறைவதுவிரிபொழில்வளநகர்விளமரே.

வெந்தவெண்பொடியணியடிகளைவிளமருள்விகிர்தரைச்
சிந்தையுளிடைபெறவுரைசெய்தமிழிவைகெழுமிய
வந்தணர்புகலியுளழகமரருமறைஞானசம்
பந்தன்மொழியிவையுரைசெய்யுமவர்வினைபறையுமே.

திருச்சிற்றம்பலம்.

திருக்காறாயில் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நீரானே நீள்சடைமேலொருநிரைகொன்றைத், தாராானே தாமரைமேலயன்றான்றொ
சீரானே சீர்திகழுந் திருக்காறாயி, லூரானே யென்பவரூனமிலாதாரே. [ழுஞ்

எய்ந்தசீரெழிறிகழுந் திருக்காறாயி, லாய்ந்தசீரானடியேத்தியருள்பெற்ற [ரே.
பாய்ந்தநீர்க்காழியுள் ஞானசம்பந்தன்சொல், வாய்ந்தவாறேத்துவார்வானுலகாள்வா

திருச்சிற்றம்பலம்

திருத்தேவூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பண்ணிலாவியமொழியுமைபங்கனெம்பெருமான்
விண்ணில்வானவர்கோன்விமலன்விடையூர்தி
தெண்ணிலாமதிதவழ்தருமாளிகைத்தேவூ
ரண்ணல்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே.

அல்லலின்றிவிண்ணாள்வர்கள்காழியர்க்கதிப
னல்லசெந்தமிழ்வல்லவன்ஞானசம்பந்த
னெல்லையில்புகழ்மல்கியவெழில்வளர்தேவூர்த்
தொல்லைநம்பனைச்சொல்லியபத்தும்வல்லாரே.

திருச்சிற்றம்பலம்.

திருத்தேவூர் திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்,

காடுபயில்வீடுமுடையோடுகனன்மூடுமுடையானைபுலிதோ
றேடுபலியூணதுடைவேடமிகுவேதியதிருந்துபதிதா
னாடகமதாடமஞைபாடல்வரிகோடல்கைமறிப்பநலமார்
சேடுமிகுவேடையெனமூடிமகிழ்மாடமிசைதேவூரதுவே.

துங்கமிகுபொங்கரவுதங்குசடைநங்களிறைதுன்றுகுழலார்
செங்கயல்கண்மங்கையுமைநங்கையொருபங்கனமாதேவூரதன்மேற்
பைங்கமலங்கணிகொண்டின்புகலிஞானசம்பந்தனுரைசெய்
சங்கமலிசெந்தமிழ்கள்பத்துமிசைவல்லவர்கள்சங்கையிலரே.

திருச்சிற்றம்பலம்.

திருநெல்லிக்கா - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

அறத்தாலுயிர்காவலமர்ந்தருளிமறத்தான்மதின்மூன்றுடன்மாண்பழித்த
திறத்தாற்றெறிவெய்தியதீவெண்டிங்க; ணிறத்தானெல்லிக்காவுணிலாயவனே

புகரேதுமில்லாதபுத்தேளுலகி, னிகரானெல்லிக்காவுணிலாயவனை
நகரார்நலஞானசம்பந்தன்சொன்ன, பகர்வாரவர்பாவமிலாதவரே.

திருச்சிற்றம்பலம்

திருக்கைச்சின்னம் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

தையலோர்கூறுடையான்றண்மதிசேர்செஞ்சடையான்
மையுலாமணிமிடற்றான்மறைவிளங்குபாடலா
னெய்யுலாமூவிலைவேலேந்திநிவந்தொளிசேர்
கையுடையான்மேவியுறைகோயிலகைச்சினமே.

தண்வயல்சூழ்காழித்தமிழ்ஞானசம்பந்தன்
கண்ணுதலான்மேவியுறைகோயில்கைச்சினத்தைப்
பண்ணிசையாவேத்திப்பயின்றவிவைவல்லார்
விண்ணவராயோங்கிவியனுலகமாள்வாரே.

திருச்சிற்றம்பலம்.

திருத்தெங்கூர் - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

புரைசெய்வல்வினைதீர்க்கும்புண்ணியர்விண்ணவர்போற்றக்
கரைசெய்யாமல்கடனஞ்சையுண்குவர்கருதலர்புரங்க
ளிரைசெய்தாரழலூட்டியுழல்பவரிடுபலிக்கெழில்சேர்
விரைசெய்பூம்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே.

வெந்தநீற்றினர்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே
கந்தமார்பொழில்சூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்தன்
சந்தமாயினபாடற்றண்டமிழ்பத்தும்வல்லார்மேல்
பந்தமாயினபாவம்பாறுதறேறுதல்பயனே.

திருச்சிற்றம்பலம்

திருக்கொள்ளிக்காடு - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

நிணம்படுசுடலையினீறுபூசிநின், றிணங்குவர்பேய்களோடிடுவர்மாணட   [டரே.
முணங்கல்வெண்டலைதனிலுண்பராயினும், குணம்பெரிதுடையர்நங்கொள்ளிக்கா

நற்றவர்காழியுண்ஞானசம்பந்தன், குற்றமில்பெரும்புகழ்க்கொள்ளிக்காடரைச்
சொற்றமிழின்னிசைமாலைசோர்வின்றிக், கற்றவர்கழலடிகாணவல்லரே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கோட்டூர் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நீலமார்தருகண்டனேநெற்றியோர்கண்ணனேயொற்றைவிரிசடைச்
சூலமார்தருகையனேதுன்றுபைம்பொழில்கள்சூழ்ந்தழகார்
கோலமாமலர்மணங்கமழ்கோட்டூர்நற்கொழுந்தேயென்றழுவார்கள்
சாலநீள்தலத்திடைப்புகழ்மிகத்தாங்குவர்பாங்காலே.

பந்துலாவிரற்பவளவாய்த்தேன்மொழிப்பாவையோடுருவாருங்
கொந்துலாமலர்விரிபொழிற்கோட்டூர்நற்கொழுந்தினைச்செழும்பவளம்
வந்துலாவியகாழியுண்ஞானசம்பந்தன்வாந்துறைசெய்த
சந்துலாந்தமிழ்மாலைகள்வல்லவர்தாங்குவர்புகழாலே.

திருச்சிற்றம்பலம்.

திருவெண்டுறை பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆதியன்றாதிரையன்னலாடியவாரழகன்
பாதியோர்மதினேடும்பயிலும்பரமாபரன்
போதியலும்முடிமேற்புனலோடரவம்புனைந்த
வேதியன்மாதிமையால்விரும்பும்மிடம்வெண்டுறையே

திண்ணமரும்புரிசைத்திருவெண்டுறைமேயவனைத்
தண்ணமரும்பொழில்சூழ்தருசண்பையர்தந்தலைவ
னெண்ணமர்பல்கலையானிசைஞானசம்பந்தன்சொன்ன
பண்ணமர்பாடல்வல்லார்வினையாயினபற்றறுமே.

திருச்சிற்றம்பலம்.

திருத்தண்டலை நீணெறி-பண்-கௌசிகம்

திருச்சிற்றம்பலம்.

விரும்புந்திங்களுங்கையும்விம்மவே, சுரும்புந்தும்பியுஞ்சூழ்சடையார்இடங்
கரும்புஞ்செந்நெலுங்காய்கமுகின்வளநெருங்குந்தண்டலைநீணெறிகாண்மினே.

நீற்றர்தண்டலைநீநெறிநாதனைத், தோற்றுமேன்மையர்தோணிபுரத்துறை
சாற்றுஞானசம்பந்தன்றமிழ்வல்லார்மாற்றில்செல்வர்மறப்பர்புறப்பையே

திருச்சிற்றம்பலம்.

திருக்களர்-பண்-சீகாமரம்

திருச்சிற்றம்பலம்.

நீருளார்கயல்வாவிசூழ்பொழினீண்டமாவயலீண்டுமாதிற்
றேறினார்மறுகில்விழாமல்குதிருக்கள
ரூருளாரிச்சைபேணுமொருவனேயொளிர்செஞ்சடைம்மதி
யாரநின்றவனேயடைந்தார்க்கருளாயே

இந்துவந்தெழுமாடவீதியெழில்கொள்காழிந்நகர்க்கவுணியன்
செந்துநேர்மொழியாரவர்சேருந்திருக்களரு
ளந்தியன்னதோர்மேனியனையமரர்தம்பெருமானைஞானசம்
பந்தன்சொல்லிவைபத்தும்பாடத்தவமாமே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு வேதாரணியத்தை அடைந்து கோயிலிற்பிரவேசித்து, வலஞ்செய்து வேதங்கள் அருச்சித்துத் திருக்காப்புசெய்த அந்நாள்முதல் இந்நாள்வரைக்கு அடைக்கப்பட்டே இருக்கின்ற திருவாயிலுக்கு முன்வந்து வேதங்களாலே திருக்காப்புச் செய்யப்பட்ட அக்கதவை அவ்வேதங்களை ஓதும் அடியார்கள் நீக்கப் பெறாமையினால் வேறோர் பக்கத்தில் ஓர்வாயிலிட்டு அதன்வழியே செல்கின்றார்கள் என்பதைக் கேட்டறிந்தார்கள் திருஞான சம்பந்தமூர்த்தி அப்பமூர்த்தியை நோக்கி அப்பரே நாம் எப்படியும் சுவாமியை அபிமுகத்திருவாயில் வழியே சென்று தரிசிக்கவேண்டும் ஆதலால் இந்தக்கதவு திறக்கப்படும்பொருட்டு நீரே திருப்பதிகம்பாடும் என்றார். அப்பமூர்த்தி திருப்பதிகத்தைக் கதவுதிறக்கப்படும் பொருட்டுப் பாட அது திறக்கப்படாமல்தாழ்த்தது. அதுகண்டு "இரக்கமொன்றிலீர்" என்று திருக்கடைக் காப்பிலே பாடி வணங்கினார். உடனே வேதாரணியேசுரருடைய திருவருளினால் கதவு திறக்கப்பட்டது அப்பொழுது, நாயன்மார் இருவரும் விழுந்து நமஸ்கரித்தார்கள். அடியார்கள் எல்லாரும் ஆனந்தகோஷம் செய்தார்கள் நாயன்மார் இருவரும் பேரின்பவெள்ளத்திலே அமிழ்ந்து எழுந்து உள்ளேபுகுந்து சுவாமி தரிசனஞ்செய்து திருப்பதிகங்கள் பாடி, அரிதில் வெளியேவந்தார்கள், அப்பொழுது அப்பமூர்த்தி திருஞானசம்பந்த சுவாமியைநோக்கி சுவாமியுடைய திருவருளினாலே இந்தக் கதவு திறக்கப்பட்டும் அடைக்கப்பட்டும் என்றும் வழங்கும்பொருட்டு தேவரீர் இது அடைக்கப்படும்படி திருப்பதிகம் பாடியருளும் என்றார். திருஞானசம்பந்த சுவாமி திருப்பதிகத்திலே "சதுரம்மறை" என்னும் முதற்பாட்டுப் பாடியமாத்திரத்தில் கதவு அடைக்கப்பட்டது.

திருமறைக்காடு - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சதுரம்மறைதான்றுதிசெய்துவணங்கும்
மதுரம்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
விதிநன்கிறைவைத்தருள்செய்தவெனக்குன்
கதவந்திருக்காப்புக்கொள்ளுங்கருத்தாலே.

காழிந்நகரான்கலைஞானசம்பந்தன்
வாழிம்மறைக்காடனைவாய்ந்தறிவித்த
வேழின்னிசைமாலைபீரைந்திவைவல்லார்
வாழியுலகோர்தொழவானடைவாரே.

திருச்சிற்றம்பலம்

அதுகண்டு நாயன்மார் இருவரும் திருவருளைவியந்து களிப்புற்று வணங்கினார்கள். திருஞானசம்பந்தமூர்த்தி தாம் எடுத்த திருப்பதிகத்தைமுடித்தருளினர். அன்று தொடுத்து அந்தக்கதவும் திறத்தலும் அடைத்தலுமாகிய வழக்கம் என்றும் நிகழ்ந்தது அங்கே நிகழ்ந்த அற்புதத்தைக்கண்ட அடியார்கள் சமஸ்தரும் ஆச்சரியங்கொண்டு உரோமாஞ்சிதங்கொள்ள கண்ணீர்சொரிய நாயன்மார் இருவருடைய திருவடிகளிலும்விழுந்து நமஸ்கரித்தார்கள் நாயன்மார் இருவரும் திருமடத்தை அடைந்தபின் திருநாவுக்கரசுசுவாமிகள் பரமசிவன் ஆதியிலே அருளிச்செய்த முதனூலாகிய வேதங்களின் தாற்பரியங்களை அமைத்துத் தமிழ்வேதம் செய்தருளும் சுத்தசாட் குண்ணியராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தாமே அக்கடவுளைப்போல அருட்செய்கை செய்யவல்லவர் அவரொழிந்த என்போலும் அடியார்களுக்கும் அவ்வேதங்களோடு இடைஈடு பெரிதாகும் அவ்வேதங்களாலே திருக்காப்புச் செய்யப்பட்டகதவு என்பாடலினல் அரிதிற் றிறக்கப்பட்டதும், அவர் பாடலினல் எளிதில் அடைக்கப்பட்டதும் இதனல் அன்றோஎன்றுசிந்தித்து அருநித்திரைசெய்தார். அப்பொழுது பரமசிவன் அவரிடத்திற் சென்று நாம் வாய்மூரிலே இருப்போம் அவ்விடத்திற்குத் தொடர்ந்து வாஎன்று அருளிச்செய்துபோக அப்பமூர்த்தி அவருக்குப்பின் விரைந்துசென்ருர். நெடும்போதுசென்றும் அவரைச் சமீபிக்கப் பெற்றிலர் சுவாமி சமீபத்திலே காட்சிகொடுப்பவர்போல ஒருகோயிலை எதிரே காண்பித்து அதனுள்ளே புகுந்தருள அப்பமூர்த்தியும் அவ்விடத்திலே விரைந்துதொடர்ந்தார் பிள்ளையாரும் அப் மூர்த்தி திருவாய் மூருக்குப் போகின்ருர் என்று கேள்வியுற்று வந்துசேர்ந்தார் அப்போது பரமசிவன் பார்வதியாரோடு ஆடல்காட்ட பிள்ளையார் தரிசித்துப் பதிகம் பாடியருளினர்.

திருவாய்மூர் - பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்.

தளரிளவளரெனவுமைபாடத்தாளமிடவோர்தழல்வீசிக்
கிளரிளமணியரவரையார்த்தாடும்வேடக்கிறிமையார்
விளரிளமுலையவர்கருணல்கிவெண்ணீரணிந்தோர்சென்னிமேல்
வளரிளமதியமொடிவாரணிர்வாய்மூரடிகள்வருவாரே.

திங்களோடருவரைப்பொழிற்சோலைத்தேனலங்கானலந்திருவாய்மூ
ரங்கமோடருமறையொலிபாடலழனிறவண்ணர்தம்மடிபரவி
நங்கடம்வினைகெடமொழியவல்லஞானசம்பந்தன்றமிழ்மாலை
தங்கியமனத்தினாற்றொழுதெழுவார்தவநெடியுலகுக்கோர்தவநெறியே

திருச்சிற்றம்பலம்.

பின் அப்பமூர்த்தியோடு வாய்மூருக்குப்போய் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு, இருந்து சிலநாளாயினபின் வேதாரணியத்துக்குத் திரும்பிவந்து சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு திருப்பதிகம்பாடி யங்கிருந்தார்.

திருமறைக்காடு பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்

பொங்குவெண்மணற்கானற்பொருகடற்றிரைதவழ்முத்தங்
கங்குலாரிருளபோழுங்கலிமறைக்காடமர்ந்தார்தாங்
திங்கள்சூடினரேனுந்திரிபுரமெரித்தனரேனு
மெங்குமெங்கள்பிரானார்புகலதிகழ்பழியிலரே

மையுலாம்பொழில்சூழ்ந்தமாமறைக்காடமர்ந்தாரைக்
கையினாற்றொழுதெழுவான்காழியுண்ஞானசம்பந்தன்
செய்தசெந்தமிழ்பத்துஞ்சிநதையுட்சேர்த்தனவல்லார்
பொய்யில்வானவரோடும்புகவலர்கொளவலர்புகழே.

திருச்சிற்றம்பலம்.

அதுநிற்க பாண்டிநாட்டிலே பாண்டியராஜன்தான் பூர்வஜன்மத்திலே செய்த தீவினையினால் உலகமெல்லாம் இப்படியே நித்யமாய் இருக்கும் அருகேசுரன் குருத்துவமாத்திரத்தில் கருத்தாவாய் இருப்பன் எனப்பிதற்றுகின்ற கபடிகளாகிய சமணர்களுடைய துர்ப்போதனையை மெய்யென்று துணிந்து சத்தியமார்க்கமாகிய சைவத்தைவிட்டு அவர்களுடைய அகத்திய மார்க்கமாகிய ஆருகத மதத்திலேபிரவேசித்தான்

அரசன் அவ்வாறாயினமையால் 'மன்னனெப்படி' மன்னுயிரப்படி என்னும் பழமொழிப்படி குடிகளும் அவ்வாறாயின மயிர்பறிக்கப்பட்ட தலையையும் ஊத்தை வாயையும் உறிபொதி கலனும் மயிற்பீலியும் பொருந்தியகையையும் பாயுடையையும் மனம்போல மாசுண்ட சரீரத்தையும் நின்றுண்டலையும் வெற்றரையையும் உடைய சமணப்பதிதர்களே எங்கும்பரந்தார்கள், இங்ஙனம்பாண்டிநாடெங்கும் வைதிகமார்க்கமும் சைவமார்க்கமுமாகிய இரண்டுங்குன்றி சமணசமயமேவிருத்தியாகியும் அப்பாண்டியனுடைய மனைவியாரும் சோழமகாராஜாவுடைய புதல்வியாரும்ஆகிய் மங்கையர்க்கரசியார் அவ்வரசனுடைய முதன்மந்திரியராகிய குலச்சிறைநாயனார் என்கின்ற இருவரும் தாங்களும் அப்பாண்டியனும் பாண்டிநாட்டாரும் மற்ற யாவரும்செய்த புண்ணியத்தினாலே சைவர்களாலே இருந்தார்கள். அவர்கள் அப்பாண்டிநாட்டுள்ளோர்பொருட்டுக் கவலைகொண்டு தாங்கள் சைவவொழுக்கத்தில் நிற்குந்தன்மை அரசனுக்கு விளங்காவண்ணம் ஒழுகினார்கள். இங்ஙனம் ஒழுகும்நாளிலே உலகம் எல்லாம் உய்யும்படி திருவவதாரம்செய்தருளிய உயர்வொப்பில்லாத சைவ சமயாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய அளவிறந்த மகிமைகளையும் அவர்வேதாரணியத்திற்சென்று இருத்தலையும் பாண்டிநாடுசெய்த பெருந்தவத்தினாலே கேள்வியுற்றார்கள் கேள்வியுற்றபொழுதே அளவிறந்த மகிழ்ச்சிகொண்டு சில பரிசனங்களை திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளிடத்திற்குச் செல்லும்பொருட்டு ஏவினார்கள் ஏவப்பட்ட அப்பரிசனங்கள் பாண்டிநாட்டைக்கடந்துசென்று வேதாரணியத்தையடைந்து திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் இருந்தருளுகின்ற திருமடத்தையடைந்து தங்கள்கருத்தை வாயிற்காவலாளருக்குத்தெரிவிக்க அவர்கள் உள்ளேபோய் நாயனாரைவணங்கிநின்று சுவாமி பாண்டிமாதேவியாராகிய மங்கையர்க்கரசியாரும் மந்திரியராகிய குலச்சிறைநாயனாரும் ஏவுதலால் தேவரீருடைய ஸ்ரீபாதாரவிந்தங்களைவணங்குதற்குச் சிலர்புறத்துவந்து நிற்கின்றனர் என்று விண்ணப்பஞ்செய்தார்கள். பிள்ளையார் திருவருள்சுரந்து அவர்களை இங்கேஅழையுங்கள்என்று அருளிச்செய்ய வாயிற்காவலாளர்கள் அவர்களைக்கூவ அவர்கள் உள்ளேபுகுந்து பிள்ளையாரை விழுந்துநமஸ்கரித்து எழுந்து அஞ்சலியஸ்தர்களாகி நின்றார்கள் பிள்ளையார் அவர்களைநோக்கி மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் க்ஷேமமாயிருக்கிறார்களாஎன்று வினவியருள அவர்கள் ஆம்என்றுசொல்லி பின் ஏழுலகமும்உய்யும்படி திருவவதாரஞ்செய்தருளிய பரமகிர்பாளுவே சைவ சமயசாரியமூர்த்தியே பாண்டியனும் பாண்டியநாட்டாரும் சமணர்களுடைய துர்ப்போதனையினாலே விபூதிசாதனங்களைவிட்டு ஆருகதமதத்திலே பிரவேசித்தமையால் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறைநாயனாரும் மிக்ககவலைகொண்டிருந்தார்கள். பின்பு தேவரீருடைய மகிமையைக்கேள்வியுற்று அந்

தச்சமாசாரத்தைத் தேவரீருக்குத் தெரிவிக்கும்பொருட்டு அடியேங்களையனுப்பினர் என்று பிரார்த்தித்தார்கள். அதுகேட்ட சிவனடியார்கள் சமஸ்தரும் பிள்ளையாரைநமஸ்கரித்து எழுந்துநின்று சுவாமிதேவரீர் பாண்டிநாட்டுக்கு எழுந்தருளி எங்கள்கடவுளாகிய பரமசிவனுடையதிருவடிகளை அடையாத அதிபாதகர்களாகிய சமணர்களை வாதிலே வென்று வேதாகமோக்தமாகிய சைவசமயத்தை ஸ்தாபனம்பண்ணி பாண்டியனையும் விபூதியிடுவித்து உய்விக்கும்பொருட்டுத் திருவுளங்கொண்டருளவேண்டும் என்றார்கள். பிள்ளையார் அவர்களுக்கு அருள் புரிந்து அப்பமூர்த்தியோடு கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து கொண்டு திருக்கோபுரத்துள்ளிருந்து பாண்டிமா தேவியாரும் குலச்சிறையாரும் சொல்லியனுப்பியவார்த்தையை அவருக்குச்சொல்லிய பாண்டிநாட்டுக்கு எழுந்தருளுதற்குத் துணிந்தார். அப்பொழுது அப்பமூர்த்தி தேவரீர் சிறுபிள்ளையாயிருக்கிறீர். அச்சமணர்களுடையவஞ்சனைக்கே ஓர்எல்லையில்லை. தேவரீருக்கு இப்போது கோள்கள் வலியில் ஆதலால் தேவரீர் அவ்விடத்திற்கு எழுந்தருளுதற்கு உடன்படுவது ஒண்ணாது என்றுசொல்ல பிள்ளையார் பரமசிவன்நம்முடையசிந்தையே கோயில்கொண்டு வீற்றிருத்தலினால் நமக்குத் தீங்குவராது என்றுசொல்லி பரமசிவனுடைய திருவடிகளைத்துதித்து 'வேயுறுதோளி' என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

வேயுறுதோளி-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன்மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனா [னே
ஞாயிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழம்வெள்ளிசனிபாம்பிரண்டுமுட
யாசறுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே.

தேனமர்பொழில்கொளாலைவிளைசெந்நெறுன்னிவளர்செம்பொனெங்கு
நான்முகனாதியாயபிரமாபுரத்துமறைஞானஞானமுனிவன் [நிகழ
ரூனுறுகோளுநாளுமடியாரைவந்துநலியாதவண்ணமுரைசெ
யான்சொன்மாலையோதுமடியார்கள்வானிலரசாள்வராணைநமதே.

திருச்சிற்றம்பலம்.

அந்தத் திருப்பதிகத்தைக்கேட்டதன்பின் அப்பமூர்த்தியும் அதற்குடன்பட்டு தாமும்அவர்முன்னேஎழுந்தருள அமைந்தபொழுது பிள்ளையார்அப்பரே நீர் இந்தச்சோழமண்டலத்திலேதானே எழுந்தருளியிரும்என்றுசொல்லிகைகுவித்துவணங்கிதடுக்கஅப்பமூர்த்தியும் வணங்கி

அதற்கு ஒருவாறு அருமையாக உடன்பட்டார் பிள்ளையார் வேதத்தை வளர்த்தற்கும் சைவத்தை விளக்குதற்கும் எழுந்து வேதாரணியேசுரரை மீண்டும்போய் நமஸ்கரித்துப் பாடித்துதித்து அனுஞ்ஞைபெற்றுக் கொண்டுபுறப்பட்டு அப்பமூர்த்தி மருதவண்ணம் அவரைவணங்கி விடைகொடுத்துநீங்கி முத்துச்சிவிகையில் ஏறி ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதி சுவாமியுடைய விபூதியணிந்த திருமேனியைச்சிந்தித்துக்கொண்டுசென்றார். அகத்தியான்பள்ளி கோடிக்குழகர்கோயில் கடிக்குளம் இடும்பாவனம், உசாத்தனமுதலிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருப்பதிகங்கள் பாடியருளினார்.

திருஅகத்தியான்பள்ளி - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வாடியவெண்டலைமாலைசூடிமயங்கிரு
ணீடெரிகொள்ளிவிளக்குமாகநிவந்தெரி
யாடியவெம்பெருமானகத்தியான்பள்ளியைப்
பாடியசிந்தையினார்கட்கில்லையாம்பாவமே.

ஞாலமல்குந்தமிழ்ஞானசம்பந்தன்மாமயிலாடுஞ்
சோலைபுடைசூழகத்தியான்பள்ளியுட்
சூலநல்லபடையானடிதொழுதேத்திய
மாலைவல்லாரவர்தங்கள்மேல்வினைமாயுமே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கடிக்குளம்-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொடிகொண்மேனிவெண்ணூலினர்தோலினர்புலியுரியதளாடை
கொடிகொளேற்றினர்மணிகிணினெனவருகுரைகழல்சிலம்பாரக்
கடிகொள்பூம்பொழில்சூழ்தருகடிகுளத்துறையுங்கற்பகத்தைத்தம்
முடிகள்சாய்த்தடிவீழ்தருமடியரைமுன்வினைமூடாவே.

தனமலிபுகழ்தயங்குபூந்தராயவர்மன்னனற்சம்பந்தன்
மனமலிபுகழ்வண்டமிழ்மாலைகண்மாலதாய்மகிழ்வோடுங்
கனமலிகடலோதம்வந்துலவியகடிக்குளத்தமர்வானை
யினமலிந்திசைபாடவல்லார்கள்போயிறைவனோடுறைவாரே.

திருச்சிற்றம்பலம்.

திருஇடும்பாவனம்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மனமார்தருமடவாரொடுமகிழ்மைந்தர்கண்மலர்த்தூய்த்
தனமார்தருசங்கக்கடல்வங்கத்திரளுந்திச்
சினமார்தருதிறல்வாறெயிற்றரக்கன்மிகுகுன்றி
லினமாதவரிறைவர்க்கிடமிடும்பாவனமிதுவே.

கொடியார்நெடுமாடக்குன்றளூரிற்கரைக்கோல
விடியார்கடலடிவீழ்தருமிடும்பாவனத்திறையை
யடியாயுமந்தணர்காழியுள்ஞானசம்பந்தன்
படியார்சொன்னபாடல்சொலப்பறையும்வினைதானே.

திருச்சிற்றம்பலம்.

திருஉசாத்தானம் - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

நீரிடைத்துயின் றவன் றம்பிநீள்சாம்பு வான்பொபருடைச்சுக்ரீவனநுமன்றொழக்
காருடைநஞ்சுண்டுகாத்தருள்செய்தவெஞ்,சீருடைச்சேடர்வாழ்திருவுசாத்தானமே

வரைதிரிந்திழியுநீர்வளவயற்பகலிமன், றிரைதிரிந்தெரிகடலூர்திருவுசாத்தானரை
யுரைதெரிந்துணருஞ்சம்பந்தனொண்டமிழ்வல்லார்கரைதிரையின்றியோநன்னெறி
சேர்வரே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு சோழநாட்டைக்கடந்து பாண்டிநாட்டை அடைந்து கொடுங்குன்றத்திற்சென்று சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு திருப்பதிகம் பாடி மதுரைக்குச்சமீபித்தார்.

திருக்கொடுங்குன்றம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

வானிற்பொலிவெய்தும்மழைமேகங்கிழித்தோடிக்
கானற்பிறைசேருங்குளிர்சாரற்கொடுங்குன்றம்
ஆனிற்பொலிவைந்துமமர்ந்தாடியுலகேத்த
தேனிற்பொலிமொழியாளொடுமேயான்திருநகரே.

கூனற்பிறைசடைமேன்மிகவுடையான்கொடுங்குன்றை
கானற்கழுமலமாநகர்த்தலைவன்னலகவுணி
ஞானத்துயர்சம்பந்தனலங்கொள்தமிழ்வல்லா
ரூனத்தொடுதுயர்தீர்ந்துலகேத்துமொழிலாரே.

திருச்சிற்றம்பலம்.

அதுநிற்க எட்டுமலைகளிலும் வசிக்கின்றசமணர்கள் எல்லாரும்துர்நிமித்தங்களுந் துர்ச்சொப்பனங்களும் மதுரையிலே ஒருங்குவந்துகூடி தாம்தாம்கண்ட சொப்பனங்களை ஒருவர்க்கொருவர்சொல்லி பாண்டியனுக்குந்தெரிவித்து தங்களுக்குத் தீங்குவிளைவது திடமெனக்கருதி உணவின்றி கவலைகொண்டு இருந்தார்கள். சைவர்களாகிய பாண்டிமாதேவியாரும் குலச்சிறை நாயனாருமோ அளவில்லாத மகிழ்ச்சியைக் காட்டுகின்ற நன்னிமித்தங்களைக்கண்டு சமணசமயங்குன்றிச் சைவசமயம் விருத்தியாதல் திடமெனக்கருதி மகிழ்ந்து இருந்தார்கள். இருக்கும்பொழுது சர்வலோகங்களும் உய்யும்படி திருவவதாரஞ்செய்தருளிய பரமசாரியராகிய திருஞான சம்பந்தமூர்த்திசுவாமிகள் எழுந்தருளி வருகின்றார் என்று சிலர் அவர்களுக்குப்போய்ச்சொன்னார்கள் மங்கையர்க்கரசியார் அதைக்கேட்டு அவ்வார்த்தையைச்சொல்லியவர்களுக்கு அளவிறந்த திரவியங்களைக் கொடுத்து எல்லையில்லாத மகிழ்ச்சி யுடையாராகி தம்மைவணங்கிநின்ற குலச்சிறையாரைநோக்கி எங்கள்தம்பிரானாகிய திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளை எதிர்கொள்ளும் என்றார் குலச்சிறையார் பாண்டிமாதேவியாரை வணங்கிப்போந்து அரசனுக்கும் உறுதியேயென்றுவிரைந்து மதுரைக்குப்புறத்திலேபோய் பிள்ளையாரை எதிர்கொள்ளுதற்குச்செல்ல பாண்டிமாதேவியாரும் தம்முடைய பரிசனங்கள்சூழ, ஆலயத்திற்சென்று சொக்கநாத சுவாமியை நமஸ்கரித்து பிள்ளையாருடைய நல்வரவை ஏற்றுநின்றார். ஆருகதம் பௌத்தம்முதலிய பரசமயஇருளை நீக்குகின்ற ஞானாதித்தராகிய திருஞான சம்பந்தமூர்த்திசுவாமிகள் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என்னும் நால்வகை வாத்தியங்களும் ஒலிக்க எண்ணிறந்த பிராமணர்கள் உதாத்த அநுதாத்த ஸ்வரிதப் பிரசயங்களோடு வேதகோஷஞ்செய்ய அடியார்கள் ஹர ஹர என்றுசொல்லும் ஓசையினாலே திக்குகள் எல்லாஞ்செவிடுபட ;செந்தமிழ் மாருதமாகிய தென்றல் எதிர்கொண்டு எம்மருங்கும் சேவிக்க விபூதியைத்தரித்த திருமேனியையுடைய திருக்கூட்டம் சர்வலோகத்தாரும்செய்த சிவ புண்ணியங்களின் படையெழுச்சிபோலப் பொலிந்துவிளங்க சமணசமயம்பாழ்பட சைவசமயந்தழைத்தோங்க தம்முடைய திருநாமங்கள் பலவற்றையும் ஊதுகின்ற முத்துச்சின்னங்கள்எல்லாம் 'பரசமயகோளரி வந்தார்' "பரசமயகோளரி வந்தார்" என்று பணிமாற அடியார்கள் பலர் உரோமோத்தர்ஷணங்கொள்ள ஆனந்த பாஷ்பம்சொரிந்து எங்கும்பெருகி அலைப்பத் தம்முடைய மகிமைகள் எல்லாவற்றையும் பாடிஆட இவற்றைக்கண்ட கேட்ட சமணப்புல்லர்கள் எல்லாரும் ஓட்டம்பிடிக்க அற்புத சின்மயத் திருவருள்வடிவாகிய முத்துச்சிவிகையின்மேலே முத்துக்குடைநிழற்ற எழுந்தருளிவந்தார்.

சத்திய நிர்மல சிவஞானானந்த வடிவாகியபிள்ளையார் இப்படிஎழுந்தருளிவரும்போது ஒப்பில்லாத முத்துச்சின்னம் உலகமெல்லாம் உய்யும்படி ஊதுகின்ற அதிமாதுரியமாகிய பேரொலியானது குலச்சிறைநாயனாருடைய திருச்செவிகளிலே திவ்வியாமிர்தம் போலப்புகுந்து சுவைக்க உடனே அந்நாயனார் பூமியிலேவிழுந்து நமஸ்கரித்து அளத்தற்கரிய பெருங்களிப்பினையுடையராகி எழுந்து இரண்டுகைகளும் சிரசின்மேல் ஏறிக்குவிய உரோமாஞ்சிதங்கொள்ள எதிரே நடுகிநடந்தார் பிள்ளையாரோடு கூடிவருகின்ற அடியார்கள் திருக்கூட்டத்தை நெடுந்தூரத்திலே கண்டு வணங்கி எழுந்து விரைந்து சமீபத்திற்சென்றுஆனந்தபரவசராகிய அடியற்றமரம்போல நிலத்திலே விழுந்துகிடந்தார். அக்குலச்சிறைநாயனாரே எதிரேவந்த அடியார்கள் பலர்வணங்கி அவர் பூமியினின்று எழாமையைக்கண்டு திரும்பித் திருஞானசம்பந்த மூர்த்திசுவாமிகளை அடைந்து வணங்கிவாய் பொத்திநின்று சுவாமீபாண்டியனுடைய மந்திரியாகிய குலச்சிறையார் திருமுன்னேவந்து அடியற்ற மரம்போல விழுந்து கிடக்கின்றனர் என்று விண்ணப்பஞ்செய்தார்கள் சர்வசீவதயாநிதியாகியபிள்ளையார் அதுகேட்டு திருமுகத்தாமரை மலர்ந்து முத்துச்சிவிகையினின்றும் இறங்கி விரைந்து சென்று அவரை அணைந்துதம்முடைய அருமைத் திருக்கரங்களினாலே பற்றி எடுக்கஅத்திருக்கரங்கள் தீண்டுதற்குப் பூர்வஜன்மங்களிலே அனந்தகோடி சிவபுண்ணியங்களைச் செய்திருந்த குலச்சிறைநாயனார் அப்பிள்ளையாருடைய திருமுகமண்டலம் பொழியாநின்ற பெருங்கருணை வெள்ளத்திலும் தம்முடைய கண்களில் நின்றுபொழியாநின்ற ஆனந்தவெள்ளத்திலும் முழுகி உரைதடுமாற உரோமஞ் சிலிர்ப்ப சரீரம்நடுங்க எழுந்து கைகளைச்சிரமேற்குவித்து நின்றார் பிள்ளையார் அவரைக் கடாட்சித்து அன்பரே பாண்டிமாதேவியாருக்கும் உமக்கும் நமதுகடவுளாகிய பரமசிவன் துதிவருள்பெருகும் நன்மைதான் வாலிதே என்று சொல்லியருள, அம்மதுரவாசகத்தைக் கேட்ட குலச்சிறைநாயனார் வணங்கிநின்று அடியேங்கள்செய்த தவப்பயனே அருட்குன்றே, சிவஞானதீபமே அடியேங்களுக்குப் பூதகாலத்திலே பழுதடையாத் திறமும் பௌஷிய காலத்திலே தேவரீர் இந்தநாட்டில் எழுந்தருளுதலினாலே பெற்ற பேறாகும்அதனால் அடியேங்கள் எக்காலத்துந் திருவருளுடையேம்அஃதன்றியும் பொய்ச்சமயமாகிய சமணசமயத்தில் அமிழ்ந்து இந்நாடும் அரசனும்வெற்றிபொருந்திய விபூதிப்பிர காசத்தாலே விளங்கும்மேன்மையையும்பெற்றோம் பாண்டிமாதேவியார் தேவரீர் இங்கெழுந் தருளுதலைக் கேட்டு பெருமகிட்சிகொண்டு எங்கள் பெருவாழ்வு எழுந்தருளியது நீர்போய்எதிர்கொண்டு திருவடிபணிவீர் என்று அடியேனைஏவினார்என்று விண்ணப்பஞ்செய்து மிகக்களிப்பினாலே மீளவும் பணிந்து ஸ்தோத்திரம் பண்ணினார்.

பிள்ளையார் அங்ஙனம்பணிந்து துதித்த குலச்சிறைநாயனருக்கு அருண்மொழிகூறியருளும்பொழுது மதுராபுரி தோன்றுதலும் அடியாரை நோக்கி எங்கள்பரமசிவனுடைய திருவாலவாய் எம்மருங்கினது என்றுவினவியருள அவ்வடியவர் பிள்ளையாருடைய திருவடிகளைவணங்கித்திரு முன்னே நின்று கையினலேகாட்டி இங்கேகோபுரந் தோன்றுகின்றது திருவாலவாய் இதுஎன்றுர் அதுகண்டு பிள்ளையார் கைகுவித்து மிகுந்த அன்போடு பூமியின்மேலேவிழுந்து நமஸ்கரித்து "மங்கையர்க்கரசி "என்று எடுத்து மங்கையர்க்கரசி குலச்சிறையாரும ஆகிய இருவருடைய திருத்தொண்டுகளைக்கொண்டமையைச்சிறப்பித்துசெய்யுள்தோறும் இறுதியிலே "ஆலவாயாவதுமிதுவே" என்பதை அமைத்து திருப்பதிகம்பாடிக்கொண்டு இருந்தார்.

திருஆலவாய் - பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

மங்கையர்க்கரசிவளவர்கோள்பாவைவரிவளைக்கைமடமாணி
பங்கயச்செல்விபாண்டிமாதேவிபணிசெய்துநாடொறும்பரவப்
பொங்கழலுருவன்பூதநாயகனல்வேதமும்பொருள்களுமருளி
யங்கயற்கண்ணிதன்னெடுமமர்ந்தவாலயாவதுமிதுவே.

வெற்றவேயடியாரடிமிசைவீழும்விருப்பினன்வெள்ளைநீறணியுங்
கொற்றவன்றனக்குமந்திரியாயகுலச்சிறைகுலாவிநின்றேத்து
மொற்றைவெள்விடையனும்பரார்தலைவனுலகினிலியற்கையையொழிந்
டற்றவர்கற்றசிவனுறைகின்றவாலயாவதுமிதுவே. [திட்

பன்னலம்புணரும்பாண்டிமாதேவிகுலச்சிறையெனுமிவர்பணியு
மன்னலம்பெறுசீராலவாயீசன்றிருவடியாங்கவைபோற்றிக்
கன்னலம்பெரியகாழியுள்ஞானசம்பந்தன்செந்தமிழிவைகொண்
டின்னலம்பாடவல்லவரிமையோரேத்தவீற்றிருப்பவரினிதே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு அடியார்களோடும் திருவாலவாயை அணைந்து கோபுரத்தை வணங்கி உள்ளேபுகுந்து வலஞ்செய்து மந்திரியாரோடு சந்நிதானத்தை அடைந்தார்சொக்கநாத சுவாமியைத் தரிசித்து அட்டாங்கபஞ்சாங்கமாக பலமுறை நமஸ்கரித்து உரோமப்புளகிதங் கொள்ள ஆனந்தஅருவிசொரியநின்று திருப்பதிகங்கள் பாடியருளினர்.

திருஆலவாய் - திருவிருக்குக்குறல் - பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்

நீலமாமிடற்,றாலவாயிலான்,பாலதாயினான்,ஞாலமாள்வரே.
அடிகளாலவாய்,படிகொள்சம்பந்தன்,முடிவிலின்றமிழ்,செடிகணீக்குமே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு திருமுன்றிலை அடைந்தார் முன்னே சுவாமிதரிசனம்செய்யும்பொருட்டுப் பிள்ளையார் உள்ளணையும்போது எதிர்செல்லாமல்ஒரு பக்கத்திலே ஒதுங்கிநின்றபாண்டிமாதேவியார், முன்னேவரகுலச்சிறையார் பிள்ளையாரைவணங்கிநின்று சுவாமீ இங்கேசிரசின்மேற்கைவிருத்துக்கொண்டு வருகின்றவரே பாண்டிமா தேவியார் என்று சொல்ல பிள்ளையார் பெருங் கொளிப்பொடு விரைந்து எதிரே சென்றார் பாண்டியமாதேவியார்பிள்ளையாருடைய திருவடிகளைவிழுந்து நமஸ்கரித்தார் பிள்ளையார் திருவருள் சுரந்து அவரைத் திருக்கரத்தினால் எடுத்தருளினார் பாண்டியமாதேவியார் தம்முடைய மனகருத்து முற்றியதுஎன்றுநினைந்து கண்ணீர் சொரிய வாய்குழறி அடியேனும் அடியேனுடைய பதியும் செய்ததவம் என்றுசொல்லி வணங்கினார் பிள்ளையார் பரசமயத்தார்களுளிருந்தும் சைவநெறியிலேவாழும் ஆன்பரே உம்மைக்காணுதற்குவந்தோம் என்றுசொல்லி அவரைவிடைகொடுத்து அனுப்பிக்கொண்டு அடியார்சூழ எழுந்தருளினார் எழுந்தருளும்பொழுது திருவாலவாயிலேதிருத்தொண்டு செய்துகொண்டிருக்கின்ற அடியார்கள் எல்லாரும்வந்து பிள்ளையாரை நமஸ்கரித்து ஞானதித்தராகிய சுவாமி. சமணிருள் நீங்கும்படி தேவரீர் இங்கே எழுந்தருளிவருதற்கு அடியேங்கள் அளவிறந்த தவங்களைச்செய்திருந்தோம் என்றார்கள் பாலறாவாயர் அவர்களுக்கு அருள்செய்து புறத்தணைந்து குலச்சிறையார் திருமடங்காட்ட பரிசனங்களோடும் அதில் வீற்றிருந்தருளினார், பாண்டிமாதேவியாருடைய ஆஞ்ஞையின்படி குலச்சிறையார் பிள்ளையாருக்கும் பரிசனங்களுக்கும் விருந்தளித்தார். பகலிலே பிள்ளையார் அடியார்களோடு எருந்தருளிவரக்கண்ட சமணர்கள் எல்லாரும் மனங்கலங்கி சூரியன் அஸ்தமயமானபின் ஒருங்குகூடினார்கள் பிள்ளையார் வீற்றிருக்கின்ற திருமடத்திலே திருத்தொண்டர்கள் ஓதுகின்ற திருப்பதிகவிசையின் பேரொலி செவிப்புலப்பட்ட சமணர்கள் அதுபொறாராகிய பாண்டியராஜனிடத்திற் சென்று சொல்லுவோம் என்றுதுணிந்து அப்பாண்டியராஜனை அடைந்தார்கள் பாண்டியன் அவர்களுடையமனத்துயரத்தைக்கண்டு நீங்கள் இங்ஙனங் திரண்டுவருதற்குக் காரணம் யாது என்று பரிந்து பரிந்து வினவ சமணர்கள் மஹாராஜனே உன்னுடைய மதுரையிலே சைவப்பிராமணர்கள் வருதலால் இன்றைக்கு நாங்கள் கண்டு

முட்டு என்றார்கள் உடனே அரசன் நான்கேட்டு முட்டு என்று சொல்லி கோபித்து அந்தச் சிவனடியார்கள் இன்றைக்கு இந்நகரத்திற்கு வருதற்குக் காரணம் யாது அவர்கள் யாவர் என்றான் அதற்குச் சமணர்கள் சோழநாட்டிலே சீர்காழியிலிருக்கின்ற ஓர்பிராமணப் பாலன் சிவனிடத்தே ஞானம்பெற்றவனென்று முத்துச்சிவிகை மேற்கொண்டு எங்களை வாதிலே வெல்லும்பொருட்டு அடியார்களோடு வந்திருக்கின்றான் என்றார்கள். பாண்டியன் மிகக்கோபித்து இதற்கு நாம் யாதுசெய்வோம் என்றுசொல்ல உபஜாபகராகிய சமணர்கள் நாங்கள் அந்தப் பிராமணப்பிள்ளை இருக்கின்ற மடத்திலே மந்திரவித்தையினாலே அக்கினிபற்றச் செய்வோமாயில் அவன் இந்நகரத்திலே இராமல் போய்விடுவான் என்றார்கள் பாண்டியன் அதைக்கேட்டு விரைந்து சென்று அங்ஙனம் செய்யுங்கள் என்றுசொல்லி அவர்களைப்போக்கி யாதொரு பேச்சுமின்றி மனக்கவலையோடு சயனத்திற் புக்கான் பாண்டிமாதேவியாரும் புகுந்தார். பாண்டியன் ஒன்றும் பேசாதிருக்க மாதேவியார் என் பிராணநாயகரே! நீர் முன் உள்ள மகிழ்ச்சி யின்றி முகம் புலர்ந்து இருக்கின்றீர், உம்முடைய மனசிலே வந்த கவலையாது சொல்லியருளும் என்றார் பாண்டியன் தேவியாரை நோக்கி என் அதி பிரியமுள்ள பிராணநாயகியே! சோழ நாட்டிலே சீர்காழியி லிருக்கின்ற ஒரு பிராமணப் பாலியன் சிவனுடைய அருளைப் பெற்று எங்கள் ஆசாரியர்களை வாதிலே வெல்லும் பொருட்டு அடியார்களோடு இங்கே வந்திருக்கின்றான் ஆசாரியர்கள் அவர்களைக் கண்டு முட்டுநான்கேட்டு இதுவே என்கவலைக்குக்காரணம் என்றான். மங்கையர்க் கரசியார் என் பிராணநாயகரே! நீர் கோபிக்கவேண்டுவதில்லை இருபக்ஷத்தாரும் வாதுசெய்தால் வென்றவர்பக்கஞ்சேர்ந்து அவர் அனுசரிக்குஞ்சமயத்தையே அனுசரித்தல் உறுதியாகும் என்றுசொல்லி பெருமகிழ்ச்சியோடு தம்முடைய மாடத்திற்சென்று இருந்தார். குலச்சிறையார்அங்கே எய்த பாண்டிமாதேவியார் இந்தச் சமாசாரத்தை அவருக்குச்சொல்லினர். குலச்சிறையார் கைகுவித்து நின்று இன்றைக்குத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் இங்கே எழுந்தருளி வரப்பெற்றுக் கொண்டோம் இனிச் சமணர்கள் செய்யும் வஞ்சனையை அறியேன் என்றார். பாண்டிமா தேவியாரும் அஞ்சிவஞ்சகப் புலையராகிய சமணர்கள் தீத்தொழில் செய்யவல்லவர்கள் என்செய்வோம் என்றுநினைந்து திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்கு யாதாயினும் ஒரூறுவருமாயின் நாமும் உயிர் துறந்துவிடுவோமென்றார் அதுநிற்க.

தவமறைந்து அல்லனசெய்யுஞ் சமணர்கள் பிள்ளையார் இருக்கின்றதிருமடத்திலே அக்கினி பற்றும்படி மந்திரம் செபித்தார்கள். உயர்வொப்பில்லாத ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதும் மகான்கள் பார்க்குந்திசையிலும்மற்றை மந்திரங்கள் பலிக்குமோ பலியா அடியாருடைய திருமடத்திலே தங்கள் மந்திரசாதனைகள் பலியாமையைக்கண்ட சமணர்கள்

மனந்தளர்ந்து அரசன் இதனை அறியின் நம்மைச் சிறிதும் நன்கு மதியான் நம்முடைய விருத்தியையும் ஒழித்துவிடுவான் என்று நினைந்து பயந்து அக்கினியைக் கொண்டுபோய் திருமடபுறச்சுற்றிலே கொளுத்தினர்கள் அத்தொழில் வெளிப்படுதலும் பரிசனத்தவர்கள் மறுகிப் பதைப்புடனே சிதைத்துநீக்கி அது செய்தவர்கள் பாதகர்களாகிய சமணரென்பதை உணர்ந்து சென்று, பிள்ளையாரை நமஸ்கரித்து நின்று சமணர்கள் செய்த தீங்கை விண்ணப்பஞ் செய்தார்கள். உடனேபிள்ளையார் சிவனடியார்கள் துயில்கின்ற இந்தத் திருமடத்திலே பாவிகள் பழுதுசெய்யலாமோ என்று பரிந்தருளி அவர்கள் என்பொருட்டுச் செய்த தீங்காயினும் சிவனடியார்களுக்கு இப்படி வருமோ என்று பின்னும் அச்சுற்று மகா கோபங்கொண்டு இத்தீங்கு அரசனால் வந்ததுஎனத் திருவுளங்கொண்டு, "செய்யனே திருவாலவாய்" என்னும் திருப்பதிகத்தை "அமணர்கொளுவுஞ் சுடர்பையவே சென்று பாண்டியற்காகவே" என்று திருப்பதிகம் பாடியருளினர்.

திருவாலவாய்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

செய்யனே திருவாலவாய்மேவிய,வையனேயஞ்சலென் றருள்செயெனைப்
பொய்யராமமணர்கொளுவுஞ்சுடர்,பையவேசென் றுபாண்டியற்காகவே

அப்பனாலவாயாதியருளினால், வெப்பந்தென்னவன்மேலுறமேதினிக்
கொப்பஞானசந்தனுரைபத்துஞ், செப்பவல்லவர்தீதிலாச்செல்வரே. ௰

திருச்சிற்றம்பலம்.

பின்பு சிவபத்தியிற் சிறந்த பாண்டிமாதேவியாருடைய திருமங்கிலியத்தைப் பாதுகாத்தல் வேண்டினமையாலும், மந்திரியராகிய குலச்சிறைநாயனருடைய அன்பினாலும் அரசனிடத்தில் அபராதம் உறுதலாலும், அவனுக்கு மீண்டு சைவமார்க்கத்தை அடையும் விதிஉண்மையாலும் அவன் வெப்புநீங்கும்படி தம்முடைய அருமைத் திருக்கரங்களினாலே தீண்டிவிபூதி சாத்தும் பெரும்பேற்றை உடையனாதலாலும் தீப்பிணியைப்பையவே செல்க என்று அருளிச்செய்தார் திருப்பதிகம் பாடியவுடனே அக்கினி வெம்மைப் போய்ப் பாண்டியனை அடைந்து சூரியன் உதித்தபின் பாண்டிமாதேவியார் இரவிலே சமணர்கள்செய்த தீங்கைக் குலச்சிறையாரோடுகேள்வியுற்று திருஞானசம்பந்தப் பிள்ளையாரை இந்தப்பாதகர்களுடையநாட்டிலேவர அழைத்த நாங்கள் இறப்பதே திண்ணம் என்று மனமயங்கி அச்சுற்று பதைபதைத்தார். பின்பு திருமடத்திலே தின்மையைத்தெளிந்து சமணர்கள் செய்ததீங்குஇறுதி

யில் எப்படி முடியுமோஎன்று நினைக்கும்பொழுது அரசனுக்கு வெப்பு நோய் அடுத்தது என்று கஞ்சுகிகள்வந்து சொல்லமாதேவியார் பதை பதைத்து சென்றார். குலச்சிறையாரும் விரைந்துபோனார் பாண்டியன் வெப்புநோயினாலே மிகவருந்தி வைத்தியர்கள் வந்து பலவைத்தியங்க ளைச் செய்தும் அந்நோய் சிறிதும் நீங்காமல்மேற்பட அறிவிழந்துபேச் சின்றிக்கிடந்தான். சமணர்கள் அதனைக்கேள்வியுற்று வெய்துயிர்த்து ஓடிவந்து அந்நோயின்மூலம் இதுஎன்று அறியாமல் தங்கள் மந்திரங் களைச் சொல்லி மயிர் பீலியினாலே தடவ பீலிகள் பிரம்பினோடு தீந்து பொரிசிதறி வீழ்ந்தன அவ்வெப்பின் அதிசயத்தைநோக்கி தங்கள்கை யிலே தூங்குகின்ற குண்டிகையிலுள்ள ஜலத்தை அருகனே காவாய் என்று சொல்லி பாண்டியன்மேலே தெளிக்க அந்தஜலம் மிகசுவாலிக் கின்ற அக்கினியிலேசொரிந்த நெய்போலாக பாண்டியன்மிகவருந்திசம ணர்களைநோக்கிய நீங்கள் ஒருவரும் இங்கேஇராமல் போய்விடுங்கள் என்றுசொல்லி அறிவுசோர்ந்தான் பாண்டிமாதேவியார்பயமெய்தி குல ச்சிறைநாயனாரை நோக்கி இராத்திரியிலே திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளுக்குச் சமணர்கள்செய்த தீங்கு இப்படி முடிந்ததோ என்று சொல்ல குலச்சிறையார் வணங்கிநின்று அசுரர்களுடைய முப்புரத்தை யும் எரித்த பரமசிவனுடைய அடியாராகிய திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளுக்கு இவர்கள்செய்த தீங்கே அரசனிடத்திலேபலித்தது இவ ர்கள் தீர்க்கப்புகில் அமுது முதிர்வதேயாகும் என்றார் மாதேவியாரும் மந்திரியாரும் அரசனை வணங்கிநின்று திருஞான சம்பந்தமூர்த்தி சுவா மிகளுக்குச் சமணர்கள் செய்த தீங்கினாலே உமக்கு இந்தவெப்புநோய் அடுத்தது ஆதலால் இப்பாதகர்கள் செய்யும் மாயம் இந்நோயை வள ர்ப்பதேயன்றித் தீர்ப்பதில்லை. அந்தத் திருஞான சம்பந்தமூர்த்தி சுவா மிகள் திருவளமிரங்கிக் கடாட்சிப்பாராயின் இந்த வெப்புநோய் மாத் திரமா எவர்களாலும் நீங்குதற்கரிய பிறவிநோயும் நீங்கிவிடும் இது சத் தியம் என்றார்கள் பாண்டியன் தன்செவியிலே மெய்யறிவினையுடைய அவ்விருவரும் சொல்லி "திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்" என்கி ன்ற திருமந்திரம் புகுந்தவுடனே அயர்வுநீங்க, இந்தச்சமணர்கள்செய் யும் செய்கைகள் எல்லாம் இந்நோய்க்கு ஏதுவாயே இருக்கின்றனஎன் றுநினைந்து, அவ்விருவரையும்நோக்கி அந்தத்திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளை இங்கேஅழையுங்கள் என்னுடையநோயைநீக்கி வென்றவர் எவரோ அவர்பக்கஞ்சேர்வேன் என்றான் மங்கையர்க் கரசியார் அது கேட்டு பெருங்களிப்புடையவராகி சிவிகையிலேறி பெண்கள்சூழ குலச் சிறைநாயனார் குதிரையிலேறிக்கொண்டு முன்னேசெல்லசென்று திரு மடத்தை அடைந்தார், குலச்சிறைநாயனார் குதிரையினின்றும் இறங்கி பரிசனங்களைநோக்கி அடியேங்கள்வந்து நிற்றலைச் சுவாமிக்குவிண்ணப் பஞ்செய்யவேண்டும் என்றார், அவர்கள் உள்ளேபுகுந்து திருஞான சம் பந்தமூர்த்தி சுவாமிகளை வணங்கி நின்றுசுவாமி பாண்டிமாதேவியாரும்

குலச்சிறைநாயனாரும்வந்து நிற்கின்றனர் என்று விண்ணப்பஞ்செய்ய பிள்ளையார் அவர்களை இங்கே அழையுங்கள்என்று அருளிச்செய்தார் பரிசனங்கள் மீண்டுபோய் அழைக்க இவர்கள் இருவரும் உள்ளே பிரவேசித்து திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளைக் கண்களிக்கக்கண்டுசமணர்கள் செய்த கொடுந்தொழிலை நினைந்து நெடிதுயிர்த்து சோகபாஷ்பம் சொரிய ஸ்ரீபாதங்களின் கீழேவிழுந்தார்கள், உரைகுழற சரீரம்நடுங்க ஒன்றும் அறிந்திலராகி நிலத்திலே புரண்டுஅயர்ந்து திருவடிகளைப் பற்றிக்கொண்டு கவலைக்கடற்கு ஓர்கரை பற்றினார்போன்று மெய்யன்பினாலே விடாதுகிடந்தார்கள் பிள்ளையார் அதுகண்டு அவ்விருவரையும் திருக்கரத்தினால் எடுத்தருளித்தேற்றவும் அவர்கள் தெளியாராக அவர்களைநோக்கி அன்பர்களே உங்களிடத்திலே யாதாயினும் தீங்கு உண்டா என்றுவினாவியருளினார். அதற்கு அவர்கள் அடியேங்கள் சமணர்கள் முன்செய்தவஞ்சனைக்குமிக அஞ்சி வருந்தினோம் அது திருமேனிக்கு அடாதுஎன்று உணர்ந்து அதுதீர்ந்தோம் அவ்வஞ்சகர்கள்செய்த தீத்தொழில் வெப்புநோயாகி அரசனை அடைந்து மிக வருத்துகின்றது சமணர்கள் அதனைத் தீர்க்கப்புக அது வளர்கின்றது ஆதலால் தேவரீர் அவ்வரசன் முன் அவர்களை வென்றருளில் அவனுயிரும் எங்களுயிரும் உய்யும் என்று விண்ணப்பஞ்செய்தார்கள் அப்பொழுது கருணாகரராகிய பிள்ளையார் நீங்கள் சிறிதும் அஞ்சவேண்டாம், நாம் மெய்யுணர்வு இல்லாத சமணர்களை இன்றைக்கு நீங்கள்மகிழும்படி சமஸ்தருங்காண வாதிலே வென்று பாண்டியனை விபூதியணிவிப்போம் என்று சொல்லியருளினார், அவ்விருவரும் அதைக்கேட்டு தேவரீர் அடியேங்களைத்துன் பக்கடலினின்றும் எடுத்தருளும்பொருட்டு இவ்விடத்துக்கு எழுந்தருளிவரப்பெற்றுக்கொண்ட நாங்கள்என்பெறோம் என்றுசொல்லி வணங்கினார்கள பிள்ளையார் பாவிகளாகிய சமணர்களை நோக்கி வாது செய்து வெல்லுதற்குச் சொக்கநாத சுவாமியினுடைய திருவுள்ளத்தை அறிவோம்என்று திருமடத்தினின்றும் நீக்கி திருக்கூட்டஞ் சூழச்சென்று திருவாலவாயிலே புகுந்து நோக்க விதியில்லாத சமணர்களை நோக்கி வாதுசெய்தற்குத் திருவுள்ளமோ என்பதை அறியும்பொருட்டு "காட்டுமாவதுரித்து" என்னுந் திருப்பதிகம் பாடியருளினார்.

திருவாலவாய் - பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்

காட்டுமாவதுரிபோர்த்துட, லூட்டநூன்றுடையாயுரைசெய்வனூன்
வேட்டுவேள்விசெய்யாவமண்கையரையேட்டுவாதுசெயத்திருவுள்ளமே

செந்தெனுமுர லுந்திருவாலவாய், மைந்தனேயென்றுவல்லவமணுசறச்
சந்தமார்தமிழ்கேட்டமெய்ஞ்ஞானசம்பந்தன்சொற்பகரும்பழிநீங்கவே

திருச்சிற்றம்பலம்.

சுவாமியுடைய திருவுள்ளத்தை அறிந்து பின்னும் சமணர்களைவா தில் வென்று அழிக்கும் பொருட்டும் சிவநாமத்தையே பரப்பும்பொரு ட்டும் "வேதவேள்வியை" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினர்.

திருவாலவாய் - நாலடிமேல்வைப்பு - பண் - பழம்பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வேதவேள்வியைநிந்தனைசெய்துழ, லாதமில்லியமணொடுதேரரை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே, பாதிமாதுடனுயபரமனே.

ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே.

கூடலாலவாய்க்கோனைவிடைகொண்டு வாடன்மேனியமணரைவாட்டிட
மாடக்கழிச்சம்பந்தன்மதித்தவிப், பாடவல்லவர்பாக்கியவாளரே.

திருச்சிற்றம்பலம்.

திருவருள்பெற்று திருவுளமகிழ்ந்து விடைகொண்டு கோபுரவாயி லைக்கடந்து முத்துச்சிவிகைமேல் ஏறி முத்துக்குடைநிழற்ற அடியார் சூழ பலவகைப்பட்ட வாத்தியங்கள் தொனிக்க முத்துச்சின்னங்கள் ஊத மங்கையர்க்கரசியார் முத்துச்சிவிகைமே லேறிக்கொண்டு பின்னுக வர குலச்சிறையார் முன்னே அடியாற்கூட்டத்திற் செல்லபாண்டிய னுடைய கோயிலுக்கு எழுந்தருளினர், குலச்சிறைநாயனர் முன்னே விரைந்து பாண்டியனிடத்திற் சென்று திருஞானசம்பந்தமூர்த்திசுவா மிகளுடைய வரவைச்சொல்ல பாண்டியன்தன்னுடையதுயரம் சிறிது நீங்கி தன்முடியின் பக்கத்திலே இரத்தினசனத்தை இடுவித்து குலச்சி றை நாயனரைப்பின்னுமெதிர்செல்லும்பொருட்டுஏவினன் குலச்சிறை நாயனர் மனமகிழ்ந்து எதிர் கொளச்சென்றூர் சமணர்கள் அரசனு டைய தன்மையைக்கண்டு மகாராஜனே நம்முடைய சமயத்தை ஸ்தா பிக்கும்நெறி இதுவே என்று பின்னும் உம்முடைய தருமநெறியை

நீரே காத்தருளவேண்டும், ஆயில் அவரை இங்கே அழைத்தீர், உம்முடைய நோயை அவரும் நாங்களும் ஒருங்கு தீர்க்கும்படி சொல்லி, முழுமையும் அவராலேயே தீர்க்கப்பட்டதாயினும் எங்களாலும் தீர்க்கப்பட்டதாகச்சொல்லும் என்றார்கள். அதுகேட்டஅரசன் தான் பூர்வஜன்மத்திலே செய்த தவப்பயனை அடையும்சமயம் சமீபித்தலால் சமணர்களைநோக்கி நீங்கள் இருபக்ஷத்தீரும் உங்கள் உங்கள் தெய்வச்சார்பினாலே தீருங்கள் நான் வஞ்சகம்பேசேன் என்றான் அதைக் கேட்ட சமணர்கள் என் செய்வோம் என்று கவலை கொண்டிருந்தார்கள் அப்பொழுது தமிழ்நாடுசெய்த தவக்கொழுந்துபோலுந் திருஞானசம்பந்தமூர்த்திசுவாகள் அரண்மனைவாயிலுள் அணைந்து, முத்துச்சிவிகையினின் இறங்கி, குலச்சிறையார் முன்செல்ல பாண்டிமாதேவியாரும் சிவிகையினின்றும் இறங்கிஉள்ளே எழுந்தருளினர் பாண்டியன் பிள்ளையாரைக் கண்டவுடன் அஞ்சலிசெய்து அவர் சமீபத்தில்வர அவரைநோக்கிதன் முடியின் பக்கத்தில் இருக்கின்ற இரத்தினசனத்தைக்காட்ட அவர் அதிலே வீற்றிருந்தருளினர் சமணர்கள் எல்லாரும் அச்சங்கொண்டார்கள் பாண்டியன் பிள்ளையாருடைய திருமேனியைத் தரிசிக்கப்பெற்றதனுல் வெப்பு நோய் சிறிது நீங்கி சுவாமீ தேவரீருடைய ஊர்யாதுஎன்றுவினவ, பிள்ளையார் "கழுமலநாங்கருதுமூரே" என்று திருப்பதிகத்தினலே உத்தரங் கொடுத்தருளினர்

திருப்பிரமபுரம் திருச்சக்கரமாற்று-பண்-காந்தாரம்

திருச்சிற்றம்பலம்.

பிரமனூர்வேணுபுரம்புகலிவெங்குருப்பெருநீர்த்தோணி
புரமன்னுபூந்தராய்பொன்னஞ்சிரபுரம்புறவஞ்சண்பை
யரன்மன்னுதண்காருகொச்சைவயமுள்ளிட்டங்காதியாய
பரமனூர்பன்னிரண்டாய்நின்றதிருக்கழுமலநாம்பரவுமூரே.

காவிமலர்புரையுங்கண்ணார்கழுமலத்தின்பெசரைநாளும்
பாவியசீர்ப்பன்னிரண்டுநண்ணூலாப்பத்திமையாற்பனுவன்மாலை
நாவினலம்புகழ்சீர்நான்மறையான்ஞானசம்பந்தன்சொன்ன
மேவியகைமொழிவார்விண்ணவரிலெண்ணுதலைவிருப்புளாரே.

திருச்சிற்றம்பலம்

பிள்ளையர்இரத்தினசனத்தி இருந்தபொழுது சமீபத்தில்இருந்த சமணர்கள் பொறாமைகொண்டு தங்கள் உள்ளத்திலுள்ள அச்சத்தைமறைத்துகோபாக்கினி சொலிக்கக் கண்கள் சிவந்துபாலசூரியனைச்சூழ்கி

ன்ற கருமுகிற்குழாங்கள்போலப் பிள்ளையாரைச் சூழ்ந்து அவரைவாதினால்வெல்லக்கருதி, தங்கள்சமயநூல்களைஎடுத்துச்சொல்லிக்குரைத்தார்கள் பிள்ளையார் அதைக்கேட்டு உங்கள் சமயநூற்றுணிவை உள்ளபடி கிரமமாகப் பேசுங்கள் என்று சொல்லியருள சமணர்கள் துள்ளி எழுந்து அனேகர்களாய்ச் சூழ்ந்து பதறிக்கதறினார்கள். பாண்டிமாதேவியார் அதுகண்டு பொறாராகி மனம்நடுங்கி பாண்டியனைநோக்கிசுவாமிகள் சிறுபாலர் இச்சமணர்களோ எண்ணில்லாதவர்கள் என் பிராணநாயகரே, எங்கள் சுவாமிகள் உம்முடைய நோயை நீக்குக பின்பு இச்சமணர்கள் பேசவல்லரேல் பேசுக என்றார், பாண்டியன் தேவியாரைநோக்கி ஒ வருந்தேல் என்றுசொல்லி சமணர்களை நோக்கி நீங்களும் இந்தச் சிவபத்தரும் உங்களுங்கள் தெய்வத்தன்மையை என்னுடைய வெப்புநோயை நீக்குதலினாலே தெரிவியுங்கள் என்றான் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் பாண்டிமா தேவியாரை நோக்கி மாதேவியே என்னை நீ பாலன் என்று அஞ்சவேண்டாம் திருவாலவாயான் நிற்க நான் சமணர்களுக்கு எளியேன் அல்லேன் என்னுங் கருத்தினையுடைய திருப்பதிகத்தைப் பாடி யருளினார்.

திருவாலவாய்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

மானினேர்விழிமாதராய்வழுதிக்குமாபெருந்தேவிகேள்
பானல்வாயொருபாலனீங்கிவனென்றுநீபரிவெய்திடே
லானைமாமலையாதியாயவிடங்களிற்பலவல்லல்சே
ரீனர்கட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே

எக்கராமமண்கையருக்கெளியேனலேன்றிருவாலவாய்ச்
சொக்கனென்னுளிருக்கவேதுளங்கும்முடித்தென்னன்முன்னிவை
தக்கசீர்ப்புகலிக்குமன்றமிழ்நாதன்ஞானசம்பந்தன்வா
யொக்கவேயுரைசெய்தபத்துமுரைப்பவர்க்கிடரில்லையே.

திருச்சிற்றம்பலம்.

அதுகேட்ட அரசன் பிள்ளையாரையும் குரைத்தல்ஒழியாதசமணர்களையும் நோக்கி நீங்கள் என்னுடையநோயை இகலித்தீருங்கள். தீர்த்தவர் எவரோ அவரே வாதில்வென்றவர் என்று சொல்ல சமணர்கள் மகாராஜரே, உம்முடைய இடப்பாகத்துநோயை நாங்கள் எங்கள் சமயமந்திரத்தினாலே தீர்ப்போம் அவர் வலப்பாகத்துநோயைத் தீர்க்கக்கடவர் என்றுசொல்லி அரசனுடைய இடப்பாகத்தை பீலியினாலே தடவி

னூர்கள் அதினாலே வெப்புநோய் வளர பாண்டியன் அதைப் பொறுக்க லாற்றாதவனாகி பிள்ளையாரைப் பார்த்தான். பிள்ளையார் அரசனுடைய நோக்கத்தைக் கண்டு "மந்திரமாவதுநீறு" என்னுந் திருநீற்றுப் பதிகத்தைப் பாடியருளினார்.

திருவாலவாய்-திருநீற்றுபதிகம்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவதுநீறுவானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறுதுதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறுசமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்றிருவாலவாயான்றிருநீரே.

ஆற்றலடல்விடையேறுமாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவுபூசுரன்ஞானசம்பந்தன்
றேற்றித்தென்னுடலுற்றதீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும்வல்லவர்நல்லவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

அவனுடைய வலப்பாகத்தை விபூதிகொண்டுதிருக்கையினாலேதடவியருள அவ்வலப்பாகம் வெப்புநோய்நீங்கிப் பொய்கைபோலக்குளிர்ந்தது இடப்பாகத்து வெப்புநோய் முன்னையிலும் இருமடங்காய் மிகுந்துபொங்க, சமணர்கள் மனம் நடுக்குற்று மயிற்பீலிதீய, அவ்வெப்புத்தீ தம்மேலும்தாவ சரீரமுங்குன்றி செருக்கு அழிந்து அருகுவிட்டுத்தூரத்திலே நின்றார்கள். பாண்டியன் சமணர்களைநோக்கி சமணர்களே, நீங்கள் தோற்றுப்போனீர்கள் என்னைவிட்டு அகலப்போய்விடுங்கள்என்று சொல்லி பின் பிள்ளையாரை நோக்கி அடியேனை ஒருபொருளெனக் கொண்டு உய்வித்த காருண்ணிய சாகரமாகிய சுவாமி இடப்பாகத்து வெப்பத்தையும் தேவரீரே நீக்கியருளும் என்று மனசினால் வணங்கி பிரார்த்தித்தான் பிள்ளையார் இடப்பாகத்தையும் முன்போலவிபூதிகொண்டு தடவியருள பாண்டியன் வெப்புநோய் முழுதும்நீங்கி உய்ந்தான் அதுகண்ட பாண்டிமாதேவியாரும் குலச்சிறையாரும் பிள்ளையாருடைய திருவடிகளை விழுந்து நமஸ்கரித்து எங்கள் அரசர் பிறவாமேன்மை பெற்றனர் என்று களிப்படைந்தார்கள். பாண்டியர் சயனத்தை விட்டெழுந்து இரண்டு கைகளையும் சிரசின்மேலேறக்குவித்து, பொய்யராகிய சமணர்கள்முன் அடியேனுடைய நோயை நீக்கியருளிய திருஞானசம்பந்தசுவாமியுடைய ஸ்ரீபாதங்களை அடைந்து உய்ந்தேன் என்றார் சமணர்கள்பிள்ளையாருடைய சொல்வெற்றியை அவர் தமிழ்ப்பதிகத்தினாலே பாண்டியனுடைய வெப்புநோயை நீங்கினமையால் அறிந்தபின்

தருக்கம்பேசி அவரை வெல்லுதல் கூடாது அக்கினியினாலும்ஜலத்தினாலும் வெல்லல்வேண்டும் என்று தங்களுள்ளே சிந்தித்தார்கள் பிள்ளையார் சமணர்களை நோக்கி இனி உங்கள் சமயநூற்றுணிவைப் பேசுங்கள்என்று அருளிச்செய்ய சமணர்கள் தருக்கம்பேசி வெல்லவேண்டுவதில்லை நாங்கள் இருபக்ஷத்தேழும் எங்கள் எங்கள் சமய உண்மையை உள்ளபடி பிரத்தியக்ஷமாகக்காட்டி வெல்லுவோம் என்று ஏட்டினார்கள் அப்பொழுது பாண்டியராஜர் என்னுடைய வெப்புநோயை நீங்கள் ஒழித்திலீர்கள் உங்களுக்கு என்ன வாது என்று சொல்ல சமணர்கள் அரசர் உங்களுக்கு என்னவாது என்றதையே வினவாகக்கொண்டு நாங்கள் இருபக்ஷத்தேழும் எங்கள் எங்கள் சமயக்கருத்தை ஏட்டிலே தீட்டி, அக்கினியில் இடக்கடவோம் வேவைப்பெருமையே வெற்றி என்றார்கள். அப்போது அரசர் ஒன்றும் சொல்லும்முன் பிள்ளையார் நீங்கள் சொல்லியது நன்று அரசன் சமுகத்தில் அப்படியே செய்வோம் வாருங்கள் என்று சொல்லியருளினார். பிள்ளையாருடைய ஆஞ்ஞையினால் பாண்டியர் சபைமுன்னே அக்கினி அமைக்கும்படி வேலைக்காரரை ஏவ அவர்களும் அக்கினி அமைத்தார்கள் பிள்ளையார் சமீபத்திலே எழுந்தருளி வந்து பரமசிவனே மெய்ப்பொருள் என்று தாம்பாடியருளிய தமிழ்வேதத்திருமுறையே ஸ்தோத்திரஞ் செய்து எங்கள் பரமசிவனே பரம்பொருள் என்றுசொல்லி வணங்கி திருக்கரத்தினால் எடுத்து சிரசின்மேற்கொண்டு திருக்காப்பிட்ட கயிற்றை அவிழ்ந்து அத்திருமுறையைத் தமது திருக்கரத்தினால்மறிக்க திருநள்ளாற்றின் மேலதாகிய "போகமார்த்த பூண்முலையாள்" என்னும் திருப்பதிகம் வந்து நேர்ந்தது.

திருநள்ளாறு பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்

போகமார்த்தபூண்முலையாள் தன்னோடும்பொன்னகலம்
பாகமார்த்தபைங்கண்வெள் ளேற்றண்ணல்பரமேட்டி
யாகமார்த்ததோலுடையன்கோவணவாடையின்மேல்
நாகமார்த்தநம்பெருமான்மேயதுநள்ளாறே.

தண்புனலும்வெண்பிறையுந்தாங்கியதாழ்சடையன்
நண்புநல்லார்மல்குகாழிஞானசம்பந்தனல்ல
பண்புநள்ளாறேத்துபாடல்பத்துமிவைவல்லா
ருண்புநீங்கிவானவரோடுலகிலுறைவாரே.

திருச்சிற்றம்பலம்.

பிள்ளையார் அத்திருப்பதிகத்தையே விரும்பி திருநள்ளாறரைவணங்கி, அது எழுதப்பட்டதிருவேட்டைக்கழற்றி திருக்கரத்திலேகொண்டு பரமசிவனே மெய்ப்பொருள் என்பதைச் சமஸ்தருக்கும் உணர்த்து

ம்பொருட்டு, இவை அக்கினியில் இடப்படுமாயில் பழுதில்லை இது சத்தியம், என்னும் கருத்தை யுடைய "தளரிளவளரொளி" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினர்.

திருநள்ளாறு-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

தளிரிளவளரொளிதனதெழிறருதிகழ்மலைமகள்
குளிரிளவளரொளிவனமுலையிணையவைகுலவலி
னளிரிளவளரொளிமருவுநள்ளாறர்தந்நாமமே
மிளரிளவளரெயிடிலிவைபழுதிலைமெய்மையே.

சிற்றிடையரிவைதன்வனமுலையிணையொடுசெறிதரு
நற்றிறமுறுகழுமலநகர்ஞானசம்பந்தன்
கொற்றவனெதிரிடையெரியினிலிடவிவைகூறிய
சொற்றெரியொருபதுமறிபவர்துயரிலர்தூயரே.

திருச்சிற்றம்பலம்.

பார்ஷதர்கள் சமஸ்தரும்காண சமணர்களுடைய சிந்தைவேவ அவ்வக்கினியிலே அவ்வேட்டை இட்டருளினர். இட்டஏட்டில் எழுதப்பட்ட திருப்பதிகம் பரஞானம் அபரஞானம் என்கின்ற இருதனங்களையுடைய உமாதேவி பாகராகிய பரமசிவனையே பொருள் என உடைமையால் மிகச் சுவாலிக்கின்ற அக்கினியிலே பச்சையாய் விளங்கிற்று, சமணர்களும் தங்கள் நூற்பொருளை எழுதியஏட்டை இது உய்யுமோ என்கின்ற கவலையோடு நடுங்கினின்று அக்கினியில் இட்டார்கள் அது தகிக்கப்பட்டொழிந்தது அதுகண்டு பயத்தினலே மனஞ்சோர்ந்து நின்றார்கள். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தாம் அக்கினியில் இட்ட ஏட்டைக்குறித்த நாழிகையிலே ஈனமின்மைகண்டு யாவரும் வியக்கும்படி எடுத்தார் அது முன்னையிலும் பசுமையும் புதுமையும் உடைத்தாய் விளங்கிற்று பிள்ளையார் அவ்வேட்டைச் சபைமுன்னே காட்டி திருமுறையிலே முன்போலக் கோத்தருளினர் அரசர் அத்தியந்த ஆச்சரியம் அடைந்து சமணர்களை நோக்கி நீங்கள் இட்ட ஏட்டைக் காட்டுங்கள் என்றார் சமணர்கள் தாங்கள் இட்ட ஏட்டை எடுக்கும்படி சென்றணையும்போது அக்கினிமிகச் சுவாலித்தமைகண்டு திரும்பிவிட்டார்கள். அதுகண்டஅரசர் ஜலத்தினலே அக்கினியைத் தணிப்பித்தார், சமணர்கள் அங்கே சாம்பலுங்கரியுமன்றி பற்றென்றுங்காணர்களாகி செய்வதொன்றறியாது திகைப்பினலே திரண்ட சாம்பரைக் கையின

லே பிசைந்து தூற்றிப்பார்த்தார்கள் அதுகண்ட அரசர் புன்முறுவல் செய்து ஏட்டையின்றும் அரித்துபபாருங்கள்பொய்நெறியையே மெய்ந்நெறியாகக் கொண்டு உலேகின்றவர்களே போங்கள் முன்நான்வெப்பாகிய தீயினின்றும் உய்யநீங்கள் அப்பொழுது தோற்றீர்கள் ஆதலால் அதுவேவழியாக இப்பொழுது அக்கினியில் இடப்பட்ட ஏடு உயர்ந்ததில்லை என்றால்நீங்கள் தோற்றிலீர்போலும் என்றார் சமணர்கள் பாண்டியர் நகைஉட்கொண்டு சொல்லிய சொற்பொருளை அரியாராகி திரித்துணர்ந்துமுன்னே இரண்டு தரம் வாதுசெய்தோம் இன்னும் ஒருதரம் செய்யவேண்டும் மூன்றுதரத்தில் ஒருதரமாயினும் வெற்றி பெறுவோம் என்றார்கள், பாண்டியர் இது என்னவார்த்தை என்று மறுத்தபின்னும் பிள்ளையார் சமணர்களை நோக்கி இனி என்னவாது செய்வோம் என்று வினவியருள சமணர்கள் நாங்கள் இருபட்சத்தேமும் எங்கள் எங்கள் சமய உண்மையை எழுதியஏட்டை ஓடுகின்ற வையையாற்றிலே இடுவோம் எதிர்ந்துசொல்லும் ஏடேமெய்ப்பொருளை உடையது என்றார்கள், பிள்ளையாரும் அப்படியே செய்வோம் என்று அருளிச்செய்தார்.

அப்பொழுது குலச்சிறைநாயனார் சமீபத்தில் வந்து இனிச்செய்யப்படும் இவ்வாதிலே தோற்றவர்கள் செய்வதுயாது என்றார் அதைக்கேட்டசமணர்கள் அவர்மேற் கோபங்கொண்டுபொறாமை காரணமாகதங்கள் வாய்சோர்ந்து நாங்கள் வாதிலே தோற்றோமாகில் எங்களை இவ்வரசர் கழுவில் ஏற்றுக என்றார்கள் அதைக்கேட்ட அரசர் வையையாற்றிலே ஏடுஇடும்பொருட்டுப் புறப்படுங்கள் என்று சொல்ல முன்னே பிள்ளையார் இரத்தினசனத்தினின்றும் இயங்கிப்போய் முத்துச்சிவிகைமேற்கொண்டு சென்றார் அவர் பின்னே பாண்டிய குதிரைமேற்கொண்டுசென்றார் சமணர்கள் மயக்கமேற்கொண்டு சென்றார்கள் சமுத்திரத்தைநோக்கித் திரைஎறிந்து அதிவேகத்துடன் பாய்கின்ற வையையாற்றின்கரையை அடைந்தவுடனே பாண்டியர் இருபக்ஷத்தாரும்தங்கள் தங்கள் சமய உண்மையை எழுதிய ஏட்டை இடக்கடவர் என்றார் அரிசியாகிய உள்ளீடில்லாத நெற்பத்தர்போல அறிவாகிய உள்ளீடுஇல்லாத மக்கட்பதராகிய சமணர்கள் "அத்தி நாத்தி" என்றுஎழுதியஏட்டை அது அதிவேகத்துடன் பாய்தலேக்கண்டும், அவாவின்மேலீட்டினால் இடவும் அதுவிரைந்துகொண்டுகடலைநோக்கி ஓடிற்று. சமணர்கள் ஆறுகொண்டோடும் ஏட்டைத்தொடர்ந்துஎதிரே அணைப்பவர்போலக்கரைமேல் ஓடிப்போனார்கள். அவ்வேடு நூறுவிற்கிடைக்கு அப்பாற்சென்றமையால் அதைக்காணுதற்கும் கூடாதவர்களாகிவேறொரு செயலுமின்றி தங்களுக்கு நாசகாலம் வந்தது என்று அஞ்சி நடுநடுங்கி அரசருக்கு எதிரேவந்து தங்கள் நெஞ்சில்அச்சம்வெளிப்பட ஒளிப்பார்போல பிள்ளையாரை நோக்கி நீரும் உம்முடைய ஏட்டை இட்டால் அறியலாம் என்றார்கள் பாண்டியராஜர் அவர்களைவிட்டு பிள்ளையாருடையதி

ருக்குறிப்பைநோக்க தம்மைஅடைந்த அன்பர்களுடையசனனமரணங்களுக்கு ஏதுவாய் இருக்கின்றமலமாயாகர்மங்களை நீக்கியருளும் தேசிகோத்தமராகிய திருஞானசம்பந்தப்பிள்ளையார் பாண்டியராஜர் தம்முடைய அருமைத்திருக்கரத்தினாலே தீண்டி விபூதி பூசப்பெற்று மலபரிபாககர்மசத்துவம் உற்றுநிற்றலால் அவருக்கும் அவர்போலப் பக்குவப்படும் சமஸ்த ஆன்மாக்களுக்கும் சைவசமயத் துண்மைப்பொருளைவிளக்கும் உபதேசமொழியாகிய "வாழ்மதந்தணர்" என்னும்திருப்பாசுரத்தைப்பாடி ஏட்டில்எழுதி அத்திருவேட்டைத் தமதுதிருக்கரத்தினாலே வையைநதியில் இட்டருளினர்.

திருப்பாசுரம் - பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்கவந்தணர்வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமரனாமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே.

அரியகாட்சியராய்த்தமதங்கைசே
ரெரியரேறுகந்தேறுவர்கண்டமுங்
கரியர்காடுறைவாழ்க்கையராயினும்
பெரியராரறிவாரவர்பெற்றியே.

வெந்தசாம்பல்விரையெனப்பூசியே
தந்தையாரொடுதாயிலர்தம்மையே
சிந்தியாவெழுவார்வினைதீர்ப்பரா
லெந்தையாரவரெவ்வகையார்கொலோ.

ஆட்பாலவர்க்கருளும்வண்ணமுமாதிமாண்புங்
கேட்பான்புகிலளவில்லைகிளக்கவேண்டா
கோட்பாலனவும்வினையுங்குறுகாமையெந்தை
தட்பாலவணங்கித்தலைநின்றிவைகேட்கதக்கார்.

ஏதுக்களாலுமெடுத்தமொழியாலுமிக்குச்
சோதிக்கவேண்டாசுடர்விட்டுளனெங்கள்சோதி
மாதுக்கநீங்கலுறுவீர்மனம்பற்றிவாழ்மின்
சாதுக்கள்மிக்கீரிறையேவந்துசார்மின்களே.

ஆடும்மெனவும்மருங்கூற்றமுதைத்துவேதம்
பாடும்மெனவும்புகழல்லதுபாவநீங்கக்
கேடும்பிறப்பும்மறுக்கும்மெனக்கேட்டீராகி
ஞடுந்திறத்தார்க்கருளல்லதுநாட்டலாமே.

கடிசேர்ந்தபோதுமலரானகைக்கொண்டுநல்ல
படிசேர்ந்தபால்கொண்டங்காட்டிடத்தாதைபண்டு
முடிசேர்ந்தகாலையறவெட்டிடமுக்கண்மூர்க்தி
யடிசேர்ந்தவண்ணம்மறிவார்சொலக்கேட்டுமன்றே.

வேதம்முதல்வன்முதலாகவிளக்கிவையம்
மேதப்படாமேயுலகத்தவரேத்தல்செய்யப்
பூதமுதல்வன்முதலேமுதலாகப்பொலிந்த
சூதன்னொலிமாலையென்றேகலிக்கோவைசொல்லே.

பாராழிவட்டம்பகையானலிந்தாட்டவாடிப்
பேராழியானதிடர்கண்டருள்செய்தல்பேணி
நீராழிவிட்டேறிநெஞ்சிடங்கொண்டவர்க்குப்
போராழியீந்தப்புகழும்புகழுற்றதன்றே.

மாலாயவனும்மறைவல்லநான்முகனும்
பாலாயதேவர்பகரில்லமுதூட்டல்பேணிக்
காலாயமுந்நீர்கடைந்தார்க்கரிதாயெழுந்த
வாலாலமுண்டங்கமரர்க்கருள்செய்ததாமே.

அற்றன்றியந்தண்மதுரைத்தொகையாக்கினனும்
தெற்றென்றுதெய்வந்தெளியார்கரைக்கோலைதெண்ணீர்ப்
பற்றின்றிப்பாங்கெதிர்விரவும்பண்புநோக்கிற்
பெற்றென்றுயர்த்தபெருமான்பெருமானுமன்றே.

நல்லார்கள்சேர்புகலிஞானசம்பந்தனல்ல
வெல்லார்களும்பரவுமீசனேயேத்துபாடல்
பல்லார்களும்மதிக்கப்பாசுரஞ்சொன்னபத்தும்
வல்லார்கள்வானேருலகாளவும்வல்லரன்றே.

திருச்சிற்றம்பலம்.

அந்தத் திருவேடு நதியிலே எதிர்ந்துஜலத்தை கிழித்துக்கொண்டு சர்வான்மாக்களுக்கும் இதுவே மெய்ப்பொருள் என்றுகாட்டிக்கொண்டு சென்றது பரமசிவனே எல்லர்ப்பொருளும் என்றுஎழுதியதிருவேட்டிலே "வேந்தனும்வெல்க" என்று பாடியருளியபடியால் பாண்டியராஜ

ருடைய கூன்நிமிர்ந்தது ஏடு எதிர்ந்து செல்லும்பொழுது தேவர்கள் எல்லாரும் ஸ்தோத்திரஞ்செய்து புஷ்பமாரி பெய்தார்கள் பாண்டியர் அற்புதங்கொண்டு நின்றார். சமணர்கள் எல்லாரும் அஞ்சிப் பதைபதைத்து தலைகுனிந்து நின்றார்கள் குலச்சிறைநாயனார் அத்திருவேட்டைத் தொடர்ந்து எடுத்தற்கு விரும்பி காற்றைப்போலஅதிவேகத்தோடு செல்கின்ற குதிரைமேல் ஏறிக்கொண்டு பின் சென்றார் பிள்ளையார் அவ்வேடு தங்கும் பொருட்டுத் திருப்பதிகம் பாடியருளினார்.

திருஏடகம்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

வன்னியமத்தமுமதிபொதிசடையினன், பொன்னியரிருவடிபுதுமலரதுகொடு
மன்னியமறையவர்வழிபடவடியவ, ரின்னிசைப்பாடலரேடகத்தொருவனே.

கோடுசந்தனமகில்கொண்டிழிவைகைநீ, ரேடுசென்றணைதருமேடகத்தொருவனை
நாடுதென்புகலியுண்ஞானசம்பந்தன்,பாடல்பத்திவைவல்லார்க்கில்லையாம்பாவமே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு குலச்சிறைநாயனார் சிவாலயத்துக்குப் பக்கத்தில் இருக்கின்ற நீர் நடுவிலே புகுந்து, அங்கே தங்கிய ஏட்டை எடுத்துச் சிரமேற்கொண்டு பெருமகிழ்ச்சி பொங்க கரையில் ஏறி திருவேடகத்தில் வீற்றிருக்கும் கடவுளை வணங்கித் துதித்து பாண்டியர் முன்னே கொண்டு வந்து சமஸ்தருக்குங்காட்ட அடியார்கள் எல்லாரும் அத்தியந்த ஆனந்தத்துடனே ஹரஹரவென்று ஆரவாரித்தார்கள். பாண்டியராஜர்கண்டு குலச்சிறையாரை நோக்கி வாதிலே ஒட்டித்தோற்ற இந்தச் சமணர்கள் முன்னே எங்கள் பரமாசாரியராகிய சுவாமிகளிடத்திலே அநுசிதம்செய்தவர்கள் ஆதலால் இவர்களைக் கழுவிலே ஏற்றுக என்றார். கருணாகரராகிய பிள்ளையார் அதைக்கேட்டு தாம் அவர்கள்மேற் சிறிதும் பகையிலராயினும் அவர்கள் சிவனடியார்கள் வாழும் திருமடத்திலே செய்த தீங்கு அதிபாதகம் ஆதலாலும் அதிபாதகம் செய்தார் யாவராயினும் அவரைக்கொல்லல் வேண்டும் என்பது சைவாகமத் துணிவாதலாலும் பாண்டியருடைய குற்றமற்ற செய்கையை விலக்காதிருந்தார் திடபத்தியையுடைய குலச்சிறைநாயனார் கழுத்தறிகளை நிரையாக நாட்டுவித்து அவைகளில் ஏற்ற அதிபாதகர்களாகிய சமணர்கள் எண்ணாயிரும்ஏறினார்கள் பிள்ளையார் பாண்டியராஜருக்கு விபூதிகொடுக்க அவர் அவருடைய ஸ்ரீபாதங்களை விழுந்துநமஸ்கரித்து எழுந்துவாங்கி அணிந்து நின்றார் பாண்டியநாட்டுள்ள சமஸ்தரும் விபூதி அணிந்துகொண்டார்கள் அரசர் சைவராயினமையால் சமணசமயம் பாழாக சைவசமயமேதழைத்தோங்கிற்று. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுடையதிருப்புகழே

எங்கும்பரந்ததுபிள்ளையார் சொக்கநாதசுவாமியைத் தரிசிக்கவேண்டும் என்று எழுந்துசென்று, முத்துச்சிவிகைமேற் கொண்டுபோனார். பாண்டியரும் மங்கையர்க்கரசியாரும் அவரைஸ்தோத்திரம் செய்துகொண்டு உடன்சென்றார்கள் அடியார்கள் சமஸ்தரும் பெருமகிழ்ச்சி பொங்க, பிள்ளையாரைத் துதித்துக்கொண்டு கூடிப்போனார்கள் பிள்ளையார் கோயிலை அணைந்து முத்துச்சிவிகையினின்றும் இறங்கி பாண்டியராஜரும் மாதேவியாரும் மந்திரியாரும் தம்மை ஸ்தோத்திரஞ் செய்துகொண்டு உடன்புகப் புகுந்து வலஞ்செய்து சந்நிதானத்தை அடைந்து, சொக்கநாத சுவாமியை வணங்கித் திருப்பதிகம் பாடியருளினார்.

திருவாலவாய் திருவிராகம் - பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வீடலாலவாயிலாய்விழிமியார்கணின்கழற்
பாடலாலவாயிலாய்பரவநின்றபண்பனே
காடலாலவாயிலாய்கவாலிநீள்கடிம்மதிற்
கூடலாலவாயிலாய்குலாயலென்னகொள்கையே.

போயநீர்வளங்கொளும்பொருபுனற்புகலியான்
பாயகேள்விஞானசம்பந்தனல்லபண்பினா
லாயசொல்லின்மாலைகொண்டலாலவாயிலண்ணலைத்
தீயதீரவெண்ணுவார்கள்சிந்தையாயதேவரே.

திருச்சிற்றம்பலம்.

பாண்டியர் சொக்கநாதசுவாமியை நமஸ்கரித்து நின்று, திருவாலவாயில் வீற்றிருக்கும் சுவாமீ சமணர்களுடைய மாயையினாலே மயங்கித்தேவரீரை அறியாதிருந்த சிறியேனைச் சனனமரணத் துன்பங்களை நீக்கி ஆட்கொள்ளும் பொருட்டுத்திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளை தந்தருளிய பெருங்கருணையை என்னென்றுபேசுவேன் என்றுஸ்தோத்திரம் பண்ணினார் பிள்ளையார் சுவாமியைவணங்கி அருள்பெற்றுஅங்கு நின்று அரிதில்நீங்கி, திருமடத்திற்சென்று வீற்றிருந்தருளினார். பாண்டியரும்மாதேவியாரும் பிள்ளையாரை வணங்கி அனுமதி பெற்றுக்கொண்டு தங்கள் மாளிகைக்குப்போனார்கள் பிள்ளையார் திருவியமதத்தில் திருநீலகண்டப் பெரும்பாணருக்கு அருளியதிறத்தையும் துதித்துஅவரோடும் அளவளாவி இருந்தார்.

திருவாலவாய் - திரு இயமகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆலநீழலுகந்திருக்கையேயானபாடலுகந்ததிருக்கையே
பாலினேர்மொழியாளொருபங்கனேபாதமோதலர்சேர்புரபங்கனே
கோலநீறணிமேதகுபூதனேகோதிலார்மனமேவியபூதனே
யாலநஞ்சமுதுண்டகளத்தனேயாலவாயுறையண்டர்களத்தனே.

ஈனஞானிகடம்மொடுவிரகனேயேறுபல்பொருண்முத்தமிழ்விரகனே
யானகாழியுண்ஞானசம்பந்தனேயாலவாயினின்மேயசம்பந்தனே
யானவானவர்வாயிலுளத்தனேயன்பரானவர்வாயிலுளத்தனே
நாலுரைத்தனசெந்தமிழ்பத்துமேவல்லவர்க்கிவைநற்றமிழ்பத்துமே.

திருச்சிற்றம்பலம்.

பிள்ளையார் பாண்டியரும் மாதேவியாரும் குலச்சிறையாரும்தினந் தோறும்வந்து தம்முடைய திருவடிகளை வணங்கித்துதிக்கதாம்சொக்க நாதசுவாமியைவணங்கித் துதித்துக்கொண்டுஇருக்குநாளிலேசீர்காழியிலிருந்தசிவபாதவிருதயர்சமணர்களுடன்வாதுசெய்துவெல்லுதற்கும் பாண்டிநாடெங்கும விபூதியைப்பரப்புதற்கும் போயருளிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளிடத்தில் நிகழ்ந்தவற்றை அறிவேன் என்று புறப்பட்டு, மதுரையைஅடைந்து திருவாலவாயிற்சென்று சொக்கநாதசுவாமியைவணங்கிக்கொண்டு பிள்ளையார் வீற்றிருக்கின்றதிருமடத்தை அணைந்தார். பிள்ளையார் தந்தையார்வந்தமையை அடியார்கள் சொல்லக்கேட்டு திருவுளமகிழ்ந்து எழுந்தருள சிவபாதவிருதயர் தொழுதுகொண்டு முன்சென்றணைய பிள்ளையார் அவரை எதிர்தொழுது தமக்குச் சிவஞானம் அருளிய திருத்தோணியப்பரை நினைந்து சீர்காழிமேலே திருப்பதிகம் பாடியருளினர்.

திருக்கழுமலம் - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

மண்ணினல்லவண்ணம்வாழலாம்வைகலு
மெண்ணினல்லகதிக்கியாதுமோர்குறைக்
கண்ணினல்லஃதுறுக்கழுமலவளநகர்ப்
பெண்ணினல்லாளொடும்பெருந்தகையிருந்ததே

கருந்தடந்தேன்மல்குகழுமலவளநகர்ப்
பெருந்தடங்கொங்கையோடிருந்தவெம்பிரான்றனை
யருந்தமிழ்ஞானசம்பந்தன்செந்தமிழ்
விரும்புவாரவர்கள்போய்விண்ணுலகாள்வரே.

திருச்சிற்றம்பலம்.

சிலநாள் ஆயினபின் பிள்ளையார் அடியார்களோடு பிறதலங்களையு ம் வணங்கும்பொருட்டுப் புறப்பட்டு பாண்டியரும் மாதேவியாரும் குல ச்சிறையாரும் பிறவாற்றாமையால் உடன்செல்லசென்று திருப்பரங்குன் றம், ஆப்பனூர், திருப்பத்தூர், திருப்பூவணம், கானப்பேர், திருச்சுழி யல், திருக்குற்றாலம், குறும்பலா திருநெல்வேலி என்னுந் தலங்களைவ ணங்கிப் பதிகம் பாடியருளினர்.

திருப்பரங்குன்றம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீடலர்சோதிவெண்பிறையோடுநிறைகொன்றைச்
சூடலனந்திச்சுடரெரியேந்திச்சுடுகானி
லாடலனஞ்சொலணியிழையாளையொருபாகம்
பாடலன்மேயநன்னகர்போலும்பரங்குன்றே.

தடமலிபொய்கைச்சண்பைமண்ஞானசம்பந்தன்
படமலிநாகமரைக்கசைத்தான்றன்பரங்குன்றைத்
தொடைமலிபாடல்பத்தும்வல்லார்தந்துயர்போகி
விடமலிகண்டனருள்பெறுதன்மைமிக்கோரே.

திருச்சிற்றம்பலம்

திருஆப்பனூர்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

முற்றுஞ்சடைமுடிமேன்முதிராவிளம்பிறைய
னொற்றைப்படவரவமதுகொண்டரைக்கணிந்தான்
செற்றமிகுசீரானைத்திருவப்பனூரானைப்
பற்றுமனமுடையார்வினைப்பற்றுப்பாரே.

அந்தண்புனல்வகையணியாப்பனூர்மேய
சந்தமலர்க்கொன்றைசடைமேலுடையானை
நந்தியடிபரவுநலஞானசம்பந்தன்
சந்தமிவைவல்லார்தமொற்றுமறுப்பாரே.

திருச்சிற்றம்பலம்

திருப்புத்தூர்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வெங்கள்விம்மூவெறியார்பொழிற்சோலைத், திங்களோடுதிளைக்குந்திருப்
கங்கைதங்குமுடியாரவர்போலு,மெங்களுச்சியுறையுமிறையாரே[புத்தூர்

நல்லகேள்விஞானசம்பந்தன், செல்வர்சேடருறையுந்திருப்புத்தூர்
சொல்லல்பாடல்வல்லார்தமக்கென்று, மல்லல்தீருமவலமடையாவே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பூவணம்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அறையார்புனலுமாமலருமாடரவார்சடைமேற்
குறையார்மதியஞ்சூடிமாதோர்கூறுடையானிடமா
முறையால்முடிசேர்தென்னர்சேரர்சோழர்கடாம்வணங்குந்
திறையாரொளிசேர்செம்மையோங்குதென்றிருப்பூவணமே.

திண்ணார்புரிசைமாடமோங்குதென்றிருப்பூவணத்துப்
பெண்ணார்மேனியெம்மிறையைப்பெரியவின்றமிழால்
நண்ணாருட்கக்காழிமல்குஞானசம்பந்தன்சொன்ன
பண்ணார்பாடல்பத்தும்வல்லார்பயில்வதுவானிடையே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கானப்பேர்-பண்-கொல்லி.

திருச்சிற்றமபலம்.

பிடியெலாம்பின்செலப்பெருங்கைமாமலர்தழீஇ
விடியலேதடமூழ்கிவிதியினால்வழிபடுங்
கடியுலாம்பூம்பொழிற்கானப்பேரண்ணலின்
னடியலாலடைசரணுடையரோவடியரே.

காட்டகத்தாடலான்கருதியகானப்பேர்
கோட்டகத்திளவரால்குதிகொளுங்காழியா
ளுட்டகத்தோங்குசீர்ஞானசம்பந்தன்
பாட்டகத்திவைவல்லார்க்கில்லையாம்பாவமே.

திருச்சிற்றம்பலம்

திருக்குற்றாலம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வம்பார்குன்றநீடுயர்சாரல்வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக்கோலவண்டியாழ்செய்குற்றால
மம்பானெய்யோடாடலமர்ந்தானலர்கொன்றை
நம்பான்மேயநன்னகர்போலுநமரங்காள்.

மாடவீதிவருபுனற்காழியார்மன்னன்
கோடலீன்றுகொழுமுளைகூம்புங்குற்றால
நாடவல்லநற்றமிழ்ஞானசம்பந்தன்
பாடல்பத்தும்பாடநம்பாவம்பறையுமே.

திருச்சிற்றம்பலம்.

திருக்குறும்பலா - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்,

திருந்தமதிசூடித்தெண்ணீர்சடைகரந்துதேவிபாகம்
பொருந்திப்பொருந்தாதவேடத்தாற்காடுறைதல்புரிந்தசெல்வ
ரிருந்தவிடம்வினவிலேலங்கமழ்சோலையின்வண்டியாழ்செய்
குருந்தமணநாறுங்குன்றிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே.

கொம்பார்பூஞ்சோலைக்குறும்பலாமேவியகொல்லேற்றண்ண
னம்பானடிபரவுநான்மறையான்ஞானசம்பந்தன்சொன்ன
வின்பாயபாடலிவைபத்தும்வல்லார்விரும்பிக்கேட்பார்
தம்பாசதீவினைகள்போயகலுநல்வினைகடளராவன்றே.

திருச்சிற்றம்பலம்.

திருநெல்வேலி - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

மருந்தவைமந்திரம்மறுமைநன்னெறியவையற்றுமெல்லா
மருந்துயர்கெடுமவர்நாமேசிந்தைசெய்நன்னெஞ்சமே.
பொருந்துதண்புறவினிற்கொன்றைபொன்சொரிதரத்துன்றுபைம்பூஞ்
செருந்திசெம்பொன்மலர்திருநெல்வேலியுறைசெல்வர்தாமே.

பெருந்தண்மாமலர்மிசையயனவனனையவர்பேணுகல்வித்
திருந்துமாமறையவர்திருநெல்வேலியுறைசெல்வர்தம்மைப்
பொருந்துநீர்த்தடமல்குபுகலியுண்ஞானசம்பந்தன்சொன்ன
வருந்தமிழ்மாலைகள்பாடியாடக்கெடுமருவினையே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு இராமேச்சரத்தை அடைந்து சுவாமிதரிசனஞ்செய்து பதிகம்பாடி அங்கே இருந்தருளினர்.

திருவிராமேச்சரம் - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

அலைவளர்தண்மதியோடயலேயடக்கியுமை
முலைவளர்பாகமுயங்கவல்லமுதல்வன்முனி
யிலைவளர்தாழைகள்விம்முகானவிராமேச்சரந்
தலைவளர்கோலநன்மாலையன்றானிருந்தாட்சியே.

பகலவன்மீதியங்காமைக்காத்தபதியோன்றனை
யிகலழிவித்தவனேத்துகோயிலிராமேச்சரம்
புகலியுண்ஞானசம்பந்தன்சொன்னதமிழ்புந்தியா
லகலிடமெங்குநின்றேத்தவல்லார்க்கில்லையல்லலே.

திருச்சிற்றம்பலம்.

அங்கிருந்தே ஈழமண்டலத்தில் உள்ள திருகோணமலை திருக்கேதீச்சரம் என்னும் ஸ்தலங்களை வணங்கித் திருபபதிகம்பாடினர்.

திருக்கோணமாமலை - பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

நிரைகழலரவஞ்சிலம்பொலியலம்புநிமலர்நீறணிதிருமேனி
வரைகெழுமகளோர்பாகமாப்புணர்ந்தவடிவினர்கொடியணிவிடையர்
கரைகெழுசந்துங்காரகிற்பிளவுமளப்பருங்கனமணிவரன்றிக்
குரைகடலோதநித்திலங்கொழிக்குங்கோணமாமலையமர்ந்தாரே

குற்றமிலாதார்குரைகடல்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரைக்
கற்றுணர்கேள்விக்காழியர்பெருமான்கருத்துடைஞானசம்பந்த
னுற்றசெந்தமிழார்மாலையீரைந்துமுரைப்பவர்கேட்பவருயர்ந்தோர்தே
சுற்றமுமாகித்தொலவினையடையார்தோன்றுவார்வானிடைப்பொலிந்

திருச்சிற்றம்பலம்

திருக்கேதீச்சரம் - பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்.

விருதுகுன்றமாமேருவினாணரவாவனலெரியம்பாற்
பொருதுமூவெயில்செற்றவன்பற்றிநின்றுறைபதியெந்நாளுங்
கருதுகின்றவூர்கனைகடற்கடிகமழ்பொழிலணிமாதோட்டங்
கருதிநின்றகேதீச்சரங்கைதொழக்கடுவினையடையாவே.

மாடெலாமணமுரைசெனக்கடலினிதொலிகடன்மாதோட்டத்
தாடலேறுடையண்ணல்கேதீச்சரத்தடிகளேயணிகாழி
நாடுளார்க்கிறைஞானசம்பந்தன்சொனவின்றெழுபாமாலே
பாடலாயினபாடுமின்பத்தர்கள்பரகதிபெறலாமே.

திருச்சிற்றம்பலம்

சிலநாள் சென்றபின், இராமேச்சரத்தைநீங்கி திருவாடானே, திருப்புனவாயில் என்னுந் தலங்களே வணங்கித் திருப்பதிகம்பாடியருளினார்

திருஆடானே-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

மாதோர்கூறுகந்தேறதேறிய, வாதியானுறையாடானேப்
போதினேர்புனேந்தேத்துவார்தமை, வாதியாவினேமாயுமே.
வீடினார்மலிவெங்கடத்துநின், ருடினானுறையாடானே
நாடிஞானசம்பந்தன்செந்தமிழ், பாடநோய்பிணிபாறுமே.

திருச்சிற்றம்பலம்.

திருப்புனவாயில்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்,

மின்னியல்செஞ்சடைவெண்பிறையன்விரிநூலினன்
பன்னியநான்மறைபாடியாடிப்பலவூர்கள்போ
யன்னமன்னநடையாளொடுமமருமிடம்
புன்னேநன்மாமலர்பொன்னுதிர்க்கும்புனவாயிலே.

பொற்றொடியாளுமைபங்கன்மேவும்புனவாயிலேக்
கற்றவர்தாந்தொழுதேத்திநின்றகடற்காழியா
னற்றமிழ்ஞானசம்பந்தன்சொன்னதமிழ்நன்மையா
லற்றமில்பாடல்பத்தேத்தவல்லாரருள்சேர்வரே.

திருச்சிற்றம்பலம்.

பின் குலச்சிறைநாயனாருடைய ஊராகிய மணமேற்குடியை அடைந்து சிலநாள் அங்கிருந்து பின் மதுரையைச்சேர்ந்து சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு இருந்தார் சிலதினங் கடந்தபின் சோழநாட்டுக்கு மீண்டு செல்லுதற்குத் திருவுளங்கொள்ள பாண்டியரும் மாதேவியாரும் குலச்சிறையாரும் அவருடைய திருவடிகளேப்பிரியலாற்றாமையால் அவருடன்போதற்கு ஒருப்பட்டார்கள் பிள்ளேயார் அதுகண்டு அன்பர்

களே நீங்கள் நம்முடைய சொல்லை மறுமல் சைவசமயத்தைப் பரிபாலனஞ் செய்துகொண்டு இங்கேதானே இருங்கள்என்று அருளிச் செய்தார். அவர்கள் பிள்ளையாருடைய ஆஞ்ஞையை மறுத்தற்குஅஞ்சி அவருடைய ஸ்ரீபாதங்களை நமஸ்கரித்து அனுமதிபெற்று, அவரை ஒருபொழுதும் மறவாத சிந்தையுடன் சிவசமயபரிபாலனம் செய்துகொண்டு இருந்தார்கள் பிள்ளையார் திருக்கூட்டத்தோடு பாண்டிநாட்டைக் கடந்து சோழநாட்டை அடைந்து திருக்களர் பாதாளீச்சுரம் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு திருப்பதிகம்பாடி முள்ளிவாய்க்கரையை அணைந்தார்.

திருப்பாதாளீச்சுரம்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மின்னியல்செஞ்சடைமேல்விளங்கும்மதிமத்தமொடுநல்ல
பொன்னியல்கொன்றையினன்புனல்சூடிப்பொற்பமரு
மன்னமனநடையாளொருபாகத்தமர்ந்தருளிநாளும்
பன்னியபாடலினனுறைகோயில்பாதாளே.

பன்மலர்வைகுபொழில்புடைசூழ்ந்தபாளேச்சேர்ப்
பொன்னியன்மாடமல்குபுகலிந்நகர்மன்னன்
றன்னொளிமிக்குயர்ந்ததமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
வின்னிசைபத்தும்வல்லாரெழில்வானத்திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

அங்கே ஆறு மிகப்பெறுதலால் நீர் வாணர்கள் ஓடத்தை ஓடக்கோல் நிலையில்லாமை பற்றிக் கரையிலே நிறுத்திப் போய்விட்டார்கள் பிள்ளையார் அதுகண்டு கரையிலே எழுந்தருளி நின்றபோது கொள்ளம்பூதூர் எதிரே தோன்ற அங்கேசென்று சுவாமி தரிசனஞ் செய்தற்குத் திருவுளம் விரும்புதலால் அதிசீக்கிரமாக ஓடத்தின் கட்டை அவிழ்த்து சிவனடியார்களை அதிலே ஏற்றி, நாவலமே கோலாக அதன்மேல் நின்று, "கொட்டமேகமழும்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடி யருளினார்.

திருக்கொள்ளம்பூதூர்சரடிமேல்வைப்பு - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கொட்டமேகமழும்கொள்ளம்பூதூர், நட்டமாடியநம்பனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையாந்தொழ, நல்குமாறருணம்பனே.

கொன்றைசேர்சடையான்கொள்ளம்பூதூர், நன்றுகாழியுள்ஞானசம்பந்த
னின்றுசொன்மாலைகொண்டேத்தவல்லார்போ, யென்றும்வானவரோடிருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

பரமசிவனுடைய திருவருளினல் ஓடம் சென்று மற்றகரையை அடைந்து, பிள்ளையார் அடியார்களுடனே இறங்கி கோயிலை அடைந்து சுவாமிதரிசனஞ்செய்து அங்கேயிருந்தார் சிலநாள் ஆயினபின் வாதிலே அக்கினியில் வேவாத திருப்பதிகத்தை யுடைய கடவுளை வணங்கி விரும்பிகொள்ளப் பூதூரை நீங்கி திருநல்லாற்றை அடைந்து சுவாமி தரிசனம்செய்து வினவுரைப் பதிகம்பாடி சிலநாள் அங்கிருந்தார்.

திருநல்லாறுந் திருஆலவாயும் வினவுரை-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பாடகமெல்லடிப்பாவையோடும்படுபிணக்காடிடம்பற்றிநின்று
நாடகமாடுநள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
சூடகமுன்கைமடந்தைமார்கள்துணைவரொடுந்தொழுதேத்திவாழ்த்த
வாடகமாடநெருங்குகூடலாலவாயின்கணமர்ந்தவாறே.

அன்புடையானையரனைக்கூடலாலவாய்மேவியதென்கொலென்று
நன்பொனைநாதனைநள்ளாற்றானைநயம்பெறப்போற்றிநலங்குலாவு
பொன்புடைசூழ்தருமாடக்காழிப்பூசுரன்ஞானசம்பந்தன்சொன்ன
வின்புடைப்பாடல்கள்பத்தும்வல்லாரிமையவரேத்தவிருப்பர்தாமே.

திருச்சிற்றம்பலம்

பின் திருத்தேளிச்சேரியை அடைந்து சுவாமி தரிசனஞ் செய்து திருப்பதிகம் பாடியருளினர்.

திருத்தேளிச்சேரி-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பூவலர்ந்தனகொண்டுமுப்போதுமும்பொற்கழ
றேவர்வந்துவணங்குமிகுதெளிச்சேரியீர்
மேவருந்தொழிலாளொடுகேழற்பின்வேடனும்
பாவகங்கொடுநின்றதுபோலுநம்பான்மையே.

திக்குலாம்பொழில்சூழ்தெளிச்சேரியெஞ்செல்வனை
மிக்ககாழியுள்ஞானசம்பந்தன்விளங்கிய
தக்கபாடல்கள்பத்தும்வல்லார்கடடமுடி
தொக்கவானவர்சூழவிருப்பவர்சொல்லிலே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு செல்லும்போது பௌத்தர்கள் இருக்கின்ற போதிமங்கை சமீபிக்க அதனை அறிந்த அடியார்களெல்லாரும் கடலொலிபோலச்சங்குதாரை முதலிய பலவகைப்பட்ட வாத்தியங்களையும் முழக்கி ஆரவாரித்தார்கள் முத்துச்சின்னங்கள் எல்லாம் பரசமயகோளரி வந்தாரென்றுஊதின பௌத்தர்கள் ஒருங்குகூடி, பிள்ளையார் தங்கள் எல்லையில் எழுந்தருளும்போது அடியார்கள் எடுத்த ஆரவாரத்தினாலும் திருச்சின்னவொளியினாலும் பொறாமை கொண்டு, தங்கள் சமயநூலிலேமகா பாண்டித்தியம் உள்ள புத்தநந்தி முதலியோருக்குச் சொன்னார்கள்.

அவர்களுடைய சொல்லும் பிள்ளையார் முன் வருகின்ற திருச்சின்னஒலியும் அடியார்களுடைய ஆரவாரமும் காதினுள்ளே புகுத்தியநாராசம்போலப் புகுந்தபோது புத்தநந்தி மிகக்கோபித்து எழுந்து பௌதர்கூட்டம் சூழச்சென்று அடியார்களை அணைந்து நீங்கள் எங்களைத் தருக்கத் தருக்கத்தில் வென்றன்றோ வெற்றிச்சின்னங்கள் ஊதல்வேண்டும் என்றுகோபங்கொண்டு விலக்கினான் அப்பொழுது திருத்தொண்டர்கள் மிகக்கோபித்து இந்தக்கொடுஞ் செயலுக்கு இவர்களைக்கொல்லாது பொறுக்கில் இவர்கள் தங்கள் நிலைஎடுப்பார்கள் என்றுமுத்துச்சிவிகைமேல் வீற்றிருக்கின்ற திருஞானசம்பந்தப் பிள்ளையாரைஅடைந்து வணங்கி நிகழ்ந்ததைவிண்ணப்பஞ்செய்தார்கள், பிள்ளையார் நாம் வருமிடத்திலே இதுநமக்கு அழகிதாய் இருக்கின்ற புத்தநந்தி மற்றவர்கள் தங்கள் சமயநாற்பொருநிலையைமாறுதவண்ணம் வாதுசெய்யப்புகுமிடத்து அவனுடைய பொய்ம்மேற்கோளை அறிகின்றோம் என்று அருளிச்செய்தார அதற்குமுன்னே தேவாரத்திருமுறை எழுதும் அடியவர் பொறாமல் ஆளுடைய பிள்ளையாரது திருவாக்காலே இடியிடித்துவிழ இப்புத்தனுடைய சிரம் விழக்கடவது என்று சொல்லியருளினார் அவ்வாக்கினாலே இடியிடித்துப் புத்தநந்தி யுடைய சரீரத்தையும் தலையையும் வேறாகக் கூறுபடுத்த பௌத்தர்கூட்டம் அஞ்சிக் குலைந்தோடிற்று பௌத்தர்களுடைய நிலைமையையும் புத்தநந்தியுடைய சரீரமும் தலையும் அகற்றுவிழும்படி தமிழ்வேதலேககர்சொல்அம்பினால் அறுத்ததையும்கண்ட அடியார்களெல்லாரும் ஓடிப்போய்பிள்ளையாருக்கு விண்ணப்பம் செய்தார்கள். பிள்ளையார் அங்ஙனம் எதிர்ந்த விலக்கை நீக்கும் முறை அதுவேயாம் நீங்கள் எல்லீரும் ஹர ஹர என்றுஆரவாரியுங்கள் என்று அருளிச்செய்ய அவ்வொலி மிக்கோங்கிற்று.

திருச்சிற்றம்பலம்.

புத்தர்சமண்கழுக்கையர்பொய்கொளாச், சித்தத்தவர்கடெளிந்துதேறின
வித்தகநீறணிவார்வினைப்பகைக், கத்திரமாவனவஞ்செழுந்துமே. [ன

திருச்சிற்றம்பலம்.

பின்பு அஞ்சி ஓடிய பௌத்தர்கள் எல்லாரும் ஆச்சரியங்கொண்டு மீண்டும் ஒருங்குகூடி இச்செய்கை வஞ்சனையோ அவர்களுடைய சைவ சமயத்து உண்மையோ எனமருண்டு நீங்கள் எங்களோடு மந்திரவாதம் இன்றி எதிர்ந்து தருக்கம்பேச வாருங்கள் என்று தங்களுக்குள்ளே தலைவனாகிய சாரிப்புத்தனையே முன்கொண்டு பின்னும் வந்தார்கள் பிள்ளையார் அதைக்கேட்டுத் திருவுளமகிழ்ந்து விரைந்துசென்று முத்துச்சிவிகையி னின்றும் இறங்கி ஒரு சத்திரமண்டபத்தின்மேல் ஏறி சைவர்கள்சூழ வீற்றிருந்து திருமுன்னேநின்ற அடியார் சிலரைநோக்கி தருக்கம்பேச விரும்பிய பௌத்தர்களை இங்கே அழையுங்கள் என்று ஆஞ்ஞாபித்தருளினர். அவ்வடியார்கள் அவ்வாஞ்ஞையைச் சிரமேற்கொண்டு பௌத்தர் கூட்டத்தை அணைந்து வேதாகமாதிசமஸ்தசாத்திரங்களையும் ஓதாதுணர்ந்தவரும், முத்தமிழ்வேந்தரும், பரசமய கோளரியும், எங்கள் பரமாசாரியரும் ஆகிய திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் உங்கள் விருப்பத்தின்படி வாதுசெய்தற்கு உங்களை மகிழ்ச்சியோடு அழைக்கின்றார் வாருங்கள் என்றார்கள் அதுகேட்ட சாரிப்புத்தன் பௌத்தர்களோடு வந்து மண்டபத்திலே பிள்ளையாருக்குச் சமீபத்தில் நின்றான். அப்பொழுது திருச்சின்னத்தைத் தடுத்த புத்தநந்தியினுடைய சிரசைப் பொடிபடுத்திய தமிழ்விரகர் பிள்ளையாருடைய திருவடிகளை வணங்கித் துதித்து சாரிப்புத்தனோடு வாதுசெய்து, பௌத்தசமயத்தை நிராகரணம்பண்ணி அவனைவென்று பிள்ளையாருடைய திருவடிகளை நமஸ்கரித்தார். பௌத்தர்கள் தோற்று தங்கள் சமயம் பொய்ந்நெறி என்றுகண்டு, பிள்ளையாரை விழுந்து நமஸ்கரித்தார்கள் பிள்ளையார் சைவசமயமே சற்சமயம் என்பதை அவர்களுக்கு ஐயம் திரிபற உணர்த்தியருள அவர்கள் அவருடைய கருணைநோக்கம் பெற்றமையால் அதனை இனிதுணர்ந்து அவரைவணங்கி சைவர்கள் ஆயினார்கள். பிள்ளையார் அவ்விடத்தை நீங்கி திருக்கடவூரிலே சென்று சுவாமி தரிசனஞ்செய்து கொண்டு அங்கே இருந்தார்.

சிலநாளாயினபின் திருநாவுக்கரசுசுவாமிகள் பூந்துருத்தியில் இருத்தலைக் கேள்வியுற்று அவரைக் காண விரும்பி புறப்பட்டுச்சென்று பூந்துருத்திக்குச் சமீபித்தார், அதைத் திருநாவுக்கரசு சுவாமிகள் கேட்டு மனமகிழ்ந்து அவரை எதிர்கொண்டு வணங்கும்படி சென்று அவர்வரும் எல்லையை அடைந்து திருச்சின்னத்தின் ஓசையைக்கேட்டு அவரைத் தரிசிக்கும்படி சூழ்ந்த சனங்களுடைய நெருக்கத்திலே தம்மை ஒருவருங் காணாதபடி உட்புகுந்து அவர் ஏறிவரும் முத்துச்சிவிகையைத் தாங்குகின்றவர்களோடு தாமும் ஒருவராய்த் தாங்கிக் கொண்டு வந்தார். பிள்ளையார் பூந்துருத்திக்கு மிகச் சமீபித்தவுடனே அப்பர் எங்குற்றார் என்று வினவ அதைக்கேட்ட அப்பமூர்த்தி அடியேன் தேவரீரைத் தாங்கிவரும் பெருவாழ்வைப் பெற்று இங்குற்றேன் என்றார். உடனே பிள்ளையார் சிவிகையினின்றும் இறங்கி மனப் பதைப்

போடும் அப்பமூர்த்தியைவணங்க, அப்பமூர்த்தியும் தம்மை அவர்வணங்குதற்கு முன் தாம் அவரைவணங்க அதுகண்ட அடியார்கள் எல்லாரும் வணங்கி ஆனந்தகோஷம் செய்தார்கள் பிள்ளையார் அப்பமூர்த்தியோடும் பூந்துருத்தியிற்சென்று சுவாமிதரிசனஞ் செய்துகொண்டுஇருந்தார். பிள்ளையார் தாம்பாண்டி நாட்டிற் சென்று சமணர்களை வாதில் வென்றதையும், பாண்டியனுடைய கூனை நிமிர்த்ததையும், அந்நாடெங்கும் விபூதியைவளர்த்ததையும் மங்கையர்க்கரசியார் குலச்சிறையார்என்கின்ற இருவருடைய பெருமையையும் அப்பமூர்த்திக்குச் சொல்லியருளினர். அப்பமூர்த்தி தாம தொண்டைநாட்டுக்குச் சென்று அங்குள்ள சிவஸ்தலங்களை வணங்கியதைப் பிள்ளையாருக்குச் சொலியருளினர் அப்பமூர்த்தி விடைபெற்றுக்கொண்டு பாண்டிநாட்டுக்குப் புறப்பட பிள்ளையார் நெய்தானம், திருவையாறு, திருப்பழனம் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு சீர்காழியை அடைந்து சுவாமி தரிசனஞ் செய்து பதிகம் பாடிக்கொண்டு இருந்தார்.

திருக்கழுமலம் - திருஇயமகம்.

திருச்சிற்றம்பலம்.

உற்றுமைசேர்வதுமெய்யினையேயுணர்வதுநின்னருண்மெய்யினையே
கற்றவர்காய்வதுகாமனையேகனல்விழிகாய்வதுகாமனையே
யற்றமறைப்பதுமுன்பணியேயமரர்கள்செய்வதுமுன்பணியே
யெற்றுமுகந்ததுகந்தனையேபிரமபுரத்தையுகந்தனையே.

"உணர்வதுநின்னருள் மெய்யினையே"

(இதன்கருத்து) நின் அருளாகிய சத்தியத்தையேயானுணர்ந்துகொண்டிருப்பது.

"கற்றவர்காய்வது காமனையே"

(இ-து. கற்றுணர்ந்தவர்களாய் விடப்பட்டது பசித்துவம்பொருந்திய க்ஷேத்திரமாகிய தேகாதிபிரபஞ்சமே

"அற்றமறைப்பது முன்பணியே"

(இ-து) உமது நிருவாணத்தைமறப்பது முன்தொங்கலாகிய பாம்புகளே மற்றவை வெளிப்படை.

பருமதின்மதுரைமன்னவையெதிரேபதிகமதெழுதிலையவையெதிரே
வருநதியிடைமிசைவருகரனேவசையொடுமலர்கெடவருகரனே
கருதலிலிசைமுரறருமருளேகழுமலமரிறைதருமருளே
மருவியதமிழ்விரகன்மொழியேவல்லவர்தம்மிடர்திடமொழியே.

திருச்சிற்றம்பலம்.

"பதிகமதேழுதிலையவை"

(இ-து) திருப்பதிகம்எழுதப்பட்டஏடுகளவை-வருந்தியிடைமிசை வருகின்ற வைகையாற்றினிடத்திலே. எதிர்வரு கரனே - எதிரிட்டுப் போம்படி துணைசெய்த ஸ்ரீ அத்தங்களையுடையவனே, வசையொடும் சமணருடைய வசைச்சொல்லும், அலர்-பரிபவச்சொல்லும்'கெட- கெடும்பொருட்டாக, அருகு-அரனே, சமண்குலத்தைக் கெடுக்கப்பட்டவனே, கருதலில்-கேட்போர்கள் கருத்தை அழிக்கத்தக்க, இசைமுரல் இசைக்குரியோருமாய், தருமர்உள் - தருமசீலருமாகிய பிராமணர்கள், வாழ்கின்ற - உள எனற்பாலது-விகாரவகையால்-உள் எனநின்றது.

''கழுமலமமரிறைதரும் அருளே. மருவியதமிழ்விரகன்.,,

(இ-து.) திருக்கழுமலத்தி லிராநின்ற தம்பிரானார் பிரசாதித்தருளிய திருவருளை யிடைவிடாமற் பொருந்திய தமிழ்விரகனாகிய யான்-மற்றவைவெளிப்படை.

நெடுநாள்சென்றபின் பிள்ளையார்தொண்டைமண்டலத்துக்குயாத்திரைசெய்யத் திருவுளங்கொண்டு தோணியப்பரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, அடியார்களோடு புறப்பட்டு தம்மோடு உடன்வருதற்குத்துணிந்த தந்தையாராகிய சிவபாத விருதயரைநோக்கி அப்பரே நீர்இங்கேதானே யாகஞ்செய்து சிவதரிசனம்பண்ணிக்கொண்டு இரும் என்று சொல்லிச்சென்று சிதம்பரம், தினைநகர், மாணிகுழி பாதிரிப் புலியூர், வடுகூர், வக்கரை.இரும்பைமாகாளம், திருவதிகை ஆமாத்தூர் கோவலூர், அறையணி, நல்லூர், திருவண்ணாமலை என்னும்ஸ்தலங்களை வணங்கித் திருப்பதிகம் பாடிக்கொண்டு தொண்டைநாடடை அடைந்தார்.

திருமாணிகுழி- திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

பொன்னியல்பொருப்பரையன்மங்கையொருபங்கர்புனறங்குசடைமேல்
வன்னியொடுமத்தமலர்வைத்தவிறல்வித்தகர்மகிழ்ந்துறைவிடங்
கன்னியிளவாளைகுதிகொள்ளவிளவள்ளைபடரள்ளல்வயல்வாய்
மன்னியிளமேதிகழ்படிந்துமணைசேருதவிமாணிகுழியே.

உந்திவருதண்கெடிலமோடுபுனல்சூழுதவிமாணிகுழிமே
லந்திமதிசூடியவெமானையடிசேருமணிகாழிநகரான்
சந்தநிறைதண்டமிழ்தெரிந்துணருஞானசம்பந்தனதுசொன்
முந்தியிசைசெய்துவொழிவார்களுடையார்கணெடுவானகிலனே.

திருச்சிற்றம்பலம்.

திரிப்பாதிரிப்புலியூர் - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

முன்னநின்றமுடற்காலமுயற்கருள்செய்துநீள்
புன்னைநின்றுகமழ்பாதிரிப்புலியூருளான்
றன்னைநின்றுவணங்குந்தனைத்தவமில்லிகள்
பின்னைநின்றபிணியாக்கையைப்பெறுவார்களே.

அந்தணல்லாரகண்காழியுள்ளணிஞானசம்
பந்தனல்லார்பயில்பாதிரிப்புலியூர்தனுட்
சந்தமாமுத்தமிழ்பத்திவைதரித்தார்கள்மேல்
வந்துதீயவ்வடையாமையால்வினைமாயுமே.

திருச்சிற்றம்பலம்

திருவடுகூர் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சுடுகூரெரிமாலையணிவர்சுடர்வேலர், கொடுகூர்மழுவாளொன்றுடையார்விடையூர்
கடுகூர்பசிகாமங்கவலைபிணியில்லார், வடுகூர்புனல்சூழ்ந்தவடுகூரடிகளே [மே

படிநோன்பவையாவர்பழியில்புகழான, கடிநாணிகழ்சோலைகமழும்வடுகூரைப்
படியானமுந்தைமொழியார்சம்மந்த, னடிஞானம்வல்காரடிசேர்வார்களே.

திருச்சிற்றம்பலம்.

திருவக்கரை - பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கறையணிமாடமிற்றுன்கரிகாடரங்காவுடையான்
பிறையணிகொன்றையினன்வொருபாகமும்பெண்ணமர்ந்தான்
மறையவன்றன்றலையிற்பலிகொள்பவன்வக்கரையி
லுறைபவனெங்கள்பிரானொலியார்கழலுள்குதுமே.

தண்புனலும்மரவுஞ்சடைமேலுடையான்பிறைதோய்
வண்பொழில்சூழ்ந்தழகாரிறைவன்னுறைவக்கரையைச்
சண்பையர்தந்தலைவன்றமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
பண்புனைபாடல்வல்லாரவர்தம்வினைபற்றறுமே.

திருச்சிற்றம்பலம்.

திருஇரும்பைமாகாளம்-பண்-செவ்வழி.

திருச்சிற்றம்பலம்

மண்டுகங்கைசடையிற்கரந்தும்மதிசூடிமான்
கொண்டகையாற்புரமூன்றெரித்தகுழகன்னிட
மெண்டிசையும்புகழ்போய்விளங்குமிரும்பைதனுள்
வண்டுகீதமுரல்பொழில்சுலாநின்றமாகாளமே.

எந்தைபெம்மானிடமெழில்கொள்சோலையிரும்பைதனுண்
மந்தமாயபொழில்சூழ்ந்தழகாருமாகாளத்தி
லந்தமில்லாவனலாடுவானையணிஞானசம்
பந்தன்சொன்னதமிழ்பாடவல்லார்பழிபோகுமே.

திருச்சிற்றம்பலம்.

திருஅதிகைவீரட்டானம்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

குண்டைக்குறட்பூதங்குழுமவனலேந்திக்
கெண்டைப்பிறழ்தெண்ணீர்கெடிலவடபக்கம்
வண்டுமருள்பாடவளர்பொன்விரிகொன்றை
விண்டதொடையலானும்வீரட்டானத்தே

ஞாழல்கமழ்காழிஞானசம்பந்தன்
வேழம்பொருதண்ணீரதிகைவீரட்டானத்துச்
சூழுங்கழலானைச்சொன்னதமிழ்மாலை
வாழுந்துணையாகநினைவார்வினையிலரே.

திருச்சிற்றம்பலம்.

திருஆமாத்தூர்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

குன்றவார்சிலைநாணராவரிவாளிகூரெரிகாற்றின்மும்மதில்
வென்றவாறெங்ஙனேவிடையேறும்வேதியனே
தென்றலார்மணிமாடமாளிகைசூளிகைக்கெதிர்நீண்டபெண்ணைமே
லன்றில்வந்தணையுமாமாத்தூரம்மானே.

வாடல்வெண்டலைமாலையார்த்துமயங்கிருள்ளெரியேந்திமாநட
மாடன்மேயதென்னென்றுமாத்தூரம்மானைக்
கோடலுகமரும்புபைம்பொழிற்கொச்சையாரிறைஞானசம்பந்தன்
பாடல்பத்தும்வல்லார்பரலோகஞ்சேர்வாரே

திருச்சிற்றம்பலம்.

திருக்கோவலூர்வீரட்டம்-திருவிராகம் பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

படைகொள்கூற்றம்வந்துமெய்ப்பாசம்விட்டபோதின்க
ணிடைகொள்வாரெமக்கில்லையெழுகபோதுநெஞ்சமே
குடைகொள்வேந்தன்மூதாதைகுழகன்கோவலூர்தனுள்
விடையதேறுங்கொடியினான்வீரட்டானஞ்சேர்துமே.

கழியோடுலவுகானல்சூழ்காழிஞானசம்பந்தன்
பழிகடீரச்சொன்னசொற்பாவநாசமாதலா
லழிவிலீர்கொண்டேத்துமினந்தண்கோவலூர்தனில்
விழிகொள்பூதப்படையினான்வீரட்டானஞ்சேர்துமே.

திருச்சிற்றம்பலம்.

திருஅறையணி நல்லூர்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பீடினாற்பெரியோர்களும்பேதைமைகெடத்தீதிலார்
வீடினாலுயர்ந்தார்களும்வீடிலாரிளவெண்மதி
சூடினார்மறைபாடினார்சுடலைநீறணிந்தாரழ
லாடினாரறையணிநல்லூரங்கையாற்றொழுவார்களே

கழியுலாங்கடற்கானல்சூழ்கழுமலமமர்தொல்பதிப்
பழியிலாமறைஞானசம்பந்தனல்லதோர்பண்பினார்
மொழியினாலறையணிநல்லூர்முக்கண்மூர்த்திதன்றாடொழக்
கெழுவினாரவர்தம்மொடுங்கேடில்வாழ்பதிபெறுவரே.

திருச்சிற்றம்பலம்.

திருஅண்ணாமலை-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

உண்ணாமுலையுமையாளொடுமுடனாகியவொருவன்
பெண்ணாகியபெருமான்மலைதிருமாமணிதிகழ
மண்ணார்ந்தனவருவித்திரண்மழலைம்முழவதிரு
மண்ணாமலைதொழுவார்வினைவழுவாவணமறுமே.

வெம்புந்தியகதிரோனொளிவிலகும்விரிசார
லம்புந்திமூவெயிலெய்தவண்ணாமலையதனைக்
கொம்புந்துவகுயிலாலுவகுளிர்காழியுள்ஞான
சம்பந்தன்தமிழ்வல்லவரடிபேணுதல்தவமே.

திருச்சிற்றம்பலம்.

திருஅண்ணாமலை-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பூவார்மலர்கொண்டடியார்தொழுவார்புகழ்வானோர்கள்
மூவார்புரங்களெரித்தவன்றுமூவர்க்கருள்செய்தார்
தூமாமழைநின்றதிரவெருவித்தொருவின்னிரையோடு
மாமாம்பிணைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே.

அல்லாடரவமியங்குஞ்சாரலண்ணுமலையாரை
நல்லார்பரவப்படுவான்காழிஞானசம்பந்தன்
சொல்லால்மலிந்தபாடலானபத்துமிவைகற்று
வல்லாரெல்லாம்வானோர்வணங்கமன்னிவாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்

அங்கே திருவோத்தூரிற்சென்று சுவாமிதரிசனம் செய்துகொண்டுஇருந்தார். இருக்கும்நாளிலே அந்தஸ்தலத்திலே உள்ள சிவனடியார் ஒருவர் வந்து பிள்ளையாரை வணங்கி நின்று பரசமயங்களைப் பற்றிச் சைவஸ்தாபனம்செய்யும் சுவாமி மெய்க்கடவுளாகிய பரமசிவனுக்கு அடியேனாகிய நான் ஆக்கும் பனைகளெல்லாம் மிக உயர்வாகவளர்ந்தும் ஆண்பனைகளாகி காயாவாயின அதுகண்ட சமணர்கள் நீர் ஆக்கும் ஆண்பனைகள் எல்லாவற்றையும் காய்க்கப்பண்ணுதல் கூடுமோ என்று நகைசெய்து இகழ்ந்து சொன்னார்கள் தேவரீர் அருள்செய்ய வேண்டும் என்று விண்ணப்பஞ்செய்தார். பிள்ளையார் அதுகேட்டு பரிந்தருளி எழுந்துவிரைந்து கோயிலிற் சென்று சுவாமியை வணங்கி திருப்பதிகம் பாடி அப்பதிகத்தின் திருக்கடைக் காப்பிலே "குரும்பை யாண்பனையீன் குலையோத்தூர்" என்று பாடியருளினர்.

திருஓத்தூராண்பனை பெண்பனையானது-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பூத்தேர்ந்தாயனகொண்டுநின்பொன்னடி,'யேத்தாதாரில்லையெண்ணுங்
லோத்தூர்மேயவொளிமழுவாளங்கை, கூத்தீரும்மகுணங்களே. [கா

குரும்பையாண்பனையின்குலையோத்தூ, ரரும்புகொன்றையடிகளைப்
பெரும்புகலியுள்ஞானசம்பந்தன்சொல், விரும்புவார்வினைவீடே.

திருச்சிற்றம்பலம்.

அதனால் ஆண்பனைகள் எல்லாம் குரும்பைக் குலைகளை யுடையனவாய்ப் பெண்பனைகளாயின அதனைக்கண்டவர்கள் எல்லாரும் ஆச்சரியங்கொண்டார்கள் பிள்ளையார் ஆண்பனைகள் காய்த்துப் பழுக்கும்படி அன்பருக்கு அருள்செய்து சுவாமிதரிசனம் செய்துகொண்டு அங்கே இருந்தார். சமணர்கள் பரசமய கோளரியாராகிய பிள்ளையாருடைய செய்கையைக் கண்டு அந்நாட்டைவிட்டு ஓடினார்கள் அவர்களிற் சிலர் பரமசிவனே மெய்க்கடவுள் என்று துணிந்து சைவராகி உய்ந்தார்கள். பிள்ளையாருடைய திருவாக்கிலே பிறத்தலால், அப்பனைகள் எல்லாம் தங்கள் காலத்தைக்கழித்து ஒழியாப் பிறவியை ஒழித்து சிவத்தை அடைந்தன பிள்ளையார் சில நாளாயினபின், அப்பதியை நீங்கி மாகறல்,

குரங்கணி, முட்டம், கச்சியேகம்பம், கச்சிநெறிக்காரைக்காடு, அனேகதங்காவதம் கச்சிமேற்றளி, மாற்பேறுவல்லம், இலம்பையங் கோட்டூர் திருவிற்கோலம் திருவூறல் முதலாகிய ஸ்தலங்களை வணங்கிக் கொண்டு பதிகம்பாடி பழையனூர் திருவாலங்காட்டுச் சமீபத்திலே போனார்.

திருமாகறல்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

விங்குவிளைகழனிமிகுகடைசியர்கள்பாடல்விளையாடலரவ
மங்குலொடுநீள்கொடிகண்மாடமலிநீடுபொழின்மாகறலுளான்
கொங்குவிரிகொன்றையொடு கங்கைவளர்திங்களணிசெஞ்சடையினான்
செங்கண்விடையண்ணலடிசேர்பவர்கடீவினைகடீருமுடனே.

கடைகணெடுமாடமிகவோங்குகமழ்வீதிமலிகாழியவர்கோ
னடையும்வகையாற்பரவியரனையடிகூடுசம்பந்தனுரையான்
மடைகொள்புனலோடுவயல்கூடுபொழின்மாகறலுளானடியையே
யுடையதமிழ்பத்துமுணர்வாரவர்கடொல்வினைகளொல்குமுடனே.

திருச்சிற்றம்பலம்.

குரங்கணின்முட்டம்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

விழுநீர்மழுவாட்படையண்ணல் விளங்கும், கழுநீர்குவளைம்மரக்கல்பாயும்
கொழுநீர்வயல்சூழ்ந்தகுரங்கணின்முட்டந், தொழுநீர்மையர்தீதுறுதுன்பமிலரே.

கல்லார்மதிகட்காழியுள்ஞானசம்பந்தன், கொல்லார்மழுவேந்திகுரங்கணின்முட்ட
சொல்லார்தமிழ்மாலைசெவிக்கினிதாக, வல்லார்க்கெளிதாம்பிறவாவகைவீடே. (ஞ்

திருச்சிற்றம்பலம்

திருஏகம்பம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்

மறையானைமாசிலாப்புண்சடைமல்குவெண்
பிறையானைப்பெண்ணொடாணாகியபெம்மானை
யிறையானையேர்கொள்கச்சித்திருவேகம்பத்
துறைவானையல்லதுள்காதெனதுள்ளமே.

அந்தண்பூங்கச்சியேகம்பனையம்மானைக்
கந்தண்பூங்காழியூரன்கவிக்கோவையாற்
சந்தமேபாடல்வல்லதமிழ்ஞானசம்
பந்தன்சொற்பாடியாடக்கெடும்பாவமே.

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பம் - திருஇயமகம்.

திருச்சிற்றம்பலம்.

பாயுமால்விடைமேலொருபாகனேபாவைதன்னுருமேலொருபாகனே
தூயவானவர்வேதத்துவனியேசோதிமாலெரிவேதத்துவனியே
யாயுநன்பொருணுண்பொருளாதியேயாலநீழலரும்பொருளாதியே
காயவன்மதன்பட்டதுகம்பமேகண்ணுதற்பரமற்கிடங்கம்பமே.

"பாயுமால்விடைமே லொருபாகனே" இதன் கருத்து வானளவுந் தத்தப்பட்ட பெரிய ரிஷபத்தின் மேலேறிச் செலுத்துகைக்கு ஒப்பில்லாதபாகனுயுள்ளவனே "பாவைதன் உருமேல்ஒருபாகனே" இ-து பரமேசுவரியினுடைய திருமேனியினை-உனது திருவடியின் ஒருபாதியிலே வைத்தவனே. 'தூயவானவர் வேதத்துவனியே' இ-து நின்மலரானவானவரது-துதியாகிய வேதங்களினுடைய நாதசொரூபமா யிருக்கின்றவனே. "சோதிமால் ஏறிவு எது அத்துவனியே" இ-து, பிரகாசத்தையுடைத்தாய் மிகுதிப்பட்டு அச்சக்தியினுடைய பிரகாசம் எப்படி யிருக்கும்-அப்படித்தானவழியாயுள்ளவனே "ஆயுநன்பொருள் நுண்பொருளாதியே" இ-து. மனபோகத்தர் லுணரப்பட்ட அத்தங்களுக்கெல்லா ங்கிட்டுதற்கரிதாகிய சூனியமாயுள்ள மூலவத்துவா யிருப்பவனே "ஆலநீழலரும் பொருளாதியே" இது கிழ்ச்சொன்ன பொருளைவட விருக்ஷத்தின்கீழ் எழுந்தருளியிருந்து ஆத்மபோதத்தால் உணர்தற்கரிய பொருளென வுணர்த்தி யப்பொருளைத் தெருட்சிபட ஆயாமின்றனையே'காயவன்மதன் பட்டது கம்பமே' இ-து உனது நெற்றிவிழியாலேதகனஞ்செய்ய-யாவராலுஞ் செயித்தற்கரிய காமன்பட்டவாறுஅங்கமொடாத நடுக்கமே. "கண்ணுதற்பரமற் கிடங்கம்பமே" இ-து. இவ்வாறு காமன் வடிவு அழியநுதற்கண்விழிந்த கருணையாளனாகிய சிவனுக் கிடமேதென்னில்-திருவேகம்பமென்னுந்திருப்பதியேஎன்க.

கந்தமார்பொழில்சூழ்தருகம்பமேகாதல்செய்பவர்தீர்த்திடுகம்பமே
புந்திசெய்துவிரும்பிப்புகலியேபூசுரன்றன்விரும்பிப்புகலியே [மே
யந்தமில்பொருளாயினகொண்டுமேயண்ணலின்பொருளாயினகொண்டு
பந்தனின்னியல்பாடியபத்துமேபாடவல்லவராயினபத்துமே.

திருச்சிற்றம்பலம்.

கந்தம் ஆர்பொழில் சூழ்தருகம்பமே" இ-து. மணல் பொருந்திய சோலைசூழ்ந்த திருவேகம்பத்தை, காத்தல்செய்பவர் தீர்த்திடுகம்பமே' இ-து இடைவிடாமற் காதலித்துநினைப்பவரது சன்மநடுக்கத்தையொழிக்கப்பட்டவனே. "புந்திசெய்து விரும்பிப்புகலியே" இ-து இத்தன்மைகாதலித்தாரது சென்மநடுக்கத்தை யொழிப்பை யென்பதை யானுமுணர்ந்து கனகமாடங்கள் சூழப்பட்ட புகலியென்கின்ற பதியின்கண்

வாழ்கின்ற இந்தமறையோனாகிய யான்-அத்தன்மை கருணையாளனாகிய தன்னை-யானுங் காதலித்துரைத்த தமிழ்மாலையை. அந்த மில்பொருளாயின கொண்டுமே'' இ-து. முடிவில்லாத அத்தங்களில் எனக்குத் தோன்றின மதியாதியைக்கொண்டு ''அண்ணநின் பொருளாயின கொண்டுமே'' ''பந்தன்னியல் பாடியபத்துமே'' இ-து. கத்தாவாகிய நினது சிவானந்தரது அறிவினுள்ளே தோன்றப்பட்ட சிவானந்தம் ஏகமாகிய விசேடத்தையுடைய நின்னை இரண்டரத் தழுவப்பட்ட ஞானசம்பந்தனவன் இனிய தமிழாகப்பாடிய இம்மாலைபத்துமே ''பாடதல்லவராயினபத்துமே'' இ-து. இம்மாலையைக்கொண்டு நின்னைப்பாடுவார்க்கு ஆகுவதேதென்னில் அழகாகிய பத்திஞான வைராக்கியங்கள் என்க.

திருவேகம்பம் திருவிருக்குறள்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கருவார்கச்சித், திருவேகம்பத், தொருவாவென்ன, மருவாவினையே

கொச்சைவேந்தன், கச்சிகம்ப, மெச்சுஞ்சொல்லை, நச்சும்புகழே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கச்சிநெறிக்காரைக்காடு-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வாரணவுமுலைமங்கைபங்கினராயங்கையினிற்
போரணவுமழுவொன்றங்கேந்திவெண்பொடியணிவார்
சாரணவுமணிமாடங்கடைநவின்றகலிக்கச்சி
நீரணவுமலர்ப்பொய்கைநெறிக்காரைக்காட்டாரே.

கண்ணாருங்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டுறையும்
பெண்ணாருந்திருமேனிப்பெருமானதடிவாழ்த்தி
தண்ணாரும்பொழிற்காழித்தமிழ்ஞானசம்பந்தன்
பண்ணாருந்தமிழ்வல்லார்பரலோகத்திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

திருமாற்பேறு-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஊறியார்தருநஞ்சினையுண்டுமை, நீறுசேர்திருமேனியர்
சேறுசேர்வயற்றென்றிருமாற்பேற்றின், மாறிலாமணிகண்டரே.

மன்னிமாலொடுசோமன்பணிசெயு, மன்னுமாற்பேற்றடிகளை
மன்னுகாழியுண்ஞானசம்பந்தன்சொற், பன்னவேவினைபாறுமே.

திருவல்லம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

எரித்தவள்முப்புரமெரியின்மூழ்கத், தரித்தவன்கங்கையைத்தாழ்சடைமேல்
விரித்தவன்வேதங்கள்வேறுவேறு, தெரித்தனுறைவிடந்திருவல்லமே.

கற்றவர்திருவல்லங்கண்டுசென்று, நற்றமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
குற்றமில்செந்தமிழ்கூறவல்லார், பற்றுவரீசன்பொற்பாதங்களே.

திருச்சிற்றம்பலம்.

திருஇலம்பையங்கோட்டூர் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மலையினார்பருப்பதந்துருத்திமாற்பேறுமாசிலாச்சீர்மறைக்காடுநெய்த்தான
நிலையினானெனதுரைதனதுரையாகநீறணிந்தேறுகந்தேறியநிமலன்
கலையினார்மடப்பிணைதுணையொடுந்துயிலக்கானவனம்பெடைபுல்கிக்கணமயிலாலு
மிலையினார்பைம்பொழிலிலம்பையங்கோட்டூரிருக்கையாப்பேணியென்னெழில்கொ
[ள்வதியல்பே.

கந்தனைமலிகனைகடலொலியோதங்கானலங்கழிவளர்கழுமலமென்னு
நந்தியாருறைபதிநான்மறைநாவனற்றமிழ்க்கின்றுணைஞானசம்பந்த
னெந்தையார்வளநகரிலம்பையங்கோட்டூரிசையொடுகூடியபத்தும்வல்லார்போய்
வெந்துயர்கெடுகிடவிண்ணவரோடும்வீடுபேறின்மையின்வீடெளிதாமே

திருச்சிற்றம்பலம்.

திருவிற்கோலம்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

உருவினாருமையொடுமொன்றிநின்றதோர்
திருவினான்வளர்சடைத்திங்கள்கங்கையான்
வெருவிவானவர்தொழவெண்டுநோக்கிய
செருவினானுறைவிடந்திருவிற்கோலமே.

கோடல்வெண்பிறையனைக்கூகமேவிய
சேடனசெழுமதிற்றிருவிற்கோலத்தை
நாடவல்லலந்தமிழ்ஞானசம்பந்தன்
பாடல்வல்லார்களுக்கில்லைபாவமே.

திருச்சிற்றம்பலம்.

திருஊறல் - பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

மாறிலவுணராணம்மவைமாயவோர்வெங்கணையாலன்று
நீறெழவெய்தவெங்கணிமலனிடம்வினவிற்
றேறலிரும்பொழிலுந்திகழ்செங்கறல்பாயவயலுஞ்சூழ்ந்த
ஊறலமர்ந்தபிரானொலியார்கழலுள்குதுமே.

கோடலிரும்புரவிற்கொடிமாடக்கொச்சையர்மனமெச்ச
வோடுபுனல்சடைமேற்கரந்தான்றிருவூரலல்
நாடலரும்புகழான்மிகுஞானசம்பந்தன்சொன்னநல்ல
பாட்ல்கள்பத்தும்வல்லார்பரலோகத்திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

அது காரைக்காலம்மையார்திருத்தலையாலே நடந்த திருப்பதிஆதலால் அதை மிதிக்கஅஞ்சி, அதற்குச் சமீபத்திலேஉள்ள ஒரூரிலேஅன்றிரவு பள்ளிகொண்டார். திருவாலங்காட்டில் வீற்றிருக்குங்கடவுள் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி நம்மைப் பாடுதற்கு மறந்தனையோ என்று அருளிச்செய்ய பிள்ளையார் உடனேவிழித்து எழுந்துதிருவருளைத்துதித்து திருப்பதிகம் பாடியருளினர்.

திருப்பழையனூர் திருஆலங்காடு-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

துஞ்சவருவாருந்தொழுவிப்பாரும்வழுவிப்போய்
நெஞ்சம்புகுந்தென்னைநினைவிப்பாருமுனைநட்பாய்
வஞ்சப்படுத்தொருத்திவாணாள்கொள்ளும்வகைகேட்
டஞ்சும்பழையனூராலங்காட்டெம்மடிகளே.

போழம்பலபேசிப்போதுசாத்தித்திரிவாரும்
வேழம்வருமளவும்வெயிலேதுற்றித்திரிவாரும்
கேழல்வினைபோகக்கேட்பிப்பாருங்கேடிலா
வாழ்வர்பழையனூராலங்காட்டெம்மடிகளே.

சாந்தங்கமழ்மறுகிற்சண்பைஞானசம்பந்த
னுந்தண்பழையனூராலங்காட்டெம்மடிகளை
வேந்தனருளாளேவிரித்தபாடலிவைவல்லார்
சேர்ந்தவிடமெல்லாந்தீர்த்தமாகச்சேர்வாரே.

திருச்சிற்றம்பலம்

மற்றநாள் உதயத்திலேதிருக்கூட்டம் தம்மை அணைந்தபொழுது இரவிலே நிகழ்ந்ததை அவர்களுக்குச் சொல்லியருளினர் பின்பு பாசூர் வெண்பாக்கம் காரிகரை முதலிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருக்காளத்திமலைக்குச் சமீபித்து அதன்மேல் கண்ணப்ப நாயனருடைய திருத்தொண்டைச் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடிக்கொண்டுசென்று மலைமேல்ஏறி சந்நிதானத்தை அடைந்து சுவாமியை வணங்கினர்.

திருப்பாசூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சிந்தையிடையார்தலையின்மிசையார்சொன்சொல்லார்
வந்துமாலைவைகும்போழ்தென்மனத்துள்ளார்
மைந்தாமணாளாவென்னமகிழ்வாரூர்போலும்
பைந்தண்மாதவிசோலைசூழ்ந்தபாசூரே.

ஞானமுணர்வான்காழிஞானசம்பந்தன்
றேனும்வண்டுமின்னிசைபாடுந்திருப்பாசூர்க்
கானமுறைவார்கழல்சேர்பாடலிவைவல்லா
ரூனமிலராயும்பர்வானத்துறைவாறே.

திருச்சிற்றம்பலம்.

திருக்காளத்தி திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

வானவர்கடானவர்கள்வாதைபடவந்ததொருமாகடல்விடந்
தானமுதுசெய்தருள்புரிந்தசிவன்மேவுமலைதன்னைவினவி
லேனமினமானினொடுகிள்ளைதினைகொள்ளவெழிலார்கவணினார்
கானவர்தமாமகளிர்கனகமணியிலகுகாளத்திமலையே.

காடதிடமாகநடமாடுசிவன்மேவுகாளத்திமலையை
மாடமொடுமாளிகைகணீடுவளர்கொச்சைவயமன்னுதலைவ
னூடுபலநீடுபுகழ்ஞானசம்பந்தனுரைநல்லதமிழின்
பாடலொடுபாடுமிசைவல்லவர்கணல்லவர்பரலோகமெளிதே.

திருச்சிற்றம்பலம்

பின் அவ்வண்ணக்கத்தார் பெற்றபயனைக்காண்பார்போலஅன்புருவமாகிய கண்ணப்பநாயனுரைக்கண்டு ஆனந்த அருவிசொரியவிழுந்து நமஸ்கரித்தார் பின்மலையினின்று இரங்கி ஒருதிருமடத்தில் வீற்றிருந்தருளினுர் காலந்தோறும் காளத்தியப்பரை வணங்கிக்கொண்டு அங்கே இருக்கும்நாளிலே வடதிசையிலும் மேற்றிசையிலும் தமிழ்மொழி வழக்கு இன்மையால் உத்தரகைலாசம், திருக்கேதாரம், கோகர்ணம்திருப்பருப்பதம், இந்திரநீலப்பருப்பதம் முதலிய ஸ்தலங்களை அங்கிருந்தே வணங்கித் திருப்பதிகம்பாடி சிலதினங் கழிந்தபின் திருக்காளத்தியை நீங்கி வேற்காடு, வலிதாயம் முதலிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருவொற்றியூரை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு இருந்தார்.

ஸ்ரீ கைலாயம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பொடிகொளுருவர்புலியினதளர்புரிநூறிகழ்மார்பிற்
கடிகொள்கொன்றைகலந்தநீற்றர்கறைசேர்கண்டத்த்
ரிடியகுரலாலரியுமடங்கஞெடங்குமுனைசாரற்
கடியவிடைமேற்கொடியென்றுடையார்கயிலைமலையாரே.

போராற்கடலிற்புனல்சூழ்காழிப்புகர்வார்சம்பந்தன்
காரார்மேகங்குடிகொள்சாரற்கயிலைமலையார்மேற்
றேராதுரைத்தசெஞ்சொன்மாலைசெப்புமடியார்மேல்
வாராபிணிகள்வானேருலகில்மருவுமனத்தாரே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கேதாரம் - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

தொண்டரஞ்சுங்களிறும்மடக்கிச்சுரும்பார்மல
ரிண்டைகட்டிவழிபாடுசெய்யும்மிடமென்பரால்
வண்டுபாடமயிலாலவான்கன்றுதுள்ளவரி
கெண்டைபாயச்சுனைநீலமொட்டலருங்கேதாரமே.

வாய்ந்தசெந்நெல்விளைகழனிமல்கும்வயற்காழியா
னேய்ந்தநீர்க்கோட்டிமையோருறைகின்றகேதாரத்தை
யாய்ந்துசொன்னவ்வருந்தமிழ்கள்பத்துமிசைவல்லார்
வேந்தராகியுலகாண்டுவீடுகெதிபெறுவரே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கோகரணம்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

என்றுமரியானல்வர்க்கியலிசைப்பொருள்களாகியெனதுள்
நன்றுமெளியானுளிசிறந்தபொன்முடிக்கடவுணண்ணுமிடவா
மொன்றியமனத்தடியார்கூடியிமையோர்பரவுநீடரவமார்
குன்றுகணெருங்கிவிரிதண்டலைமிடைந்துவளர்கோகரணமே.

கோடலரவீனும்விரிதண்டலைமிடைந்துவளர்கோகரணமே
யீடமிளிதாககுறைவானடிகள்பேணியணிகாழிநகரா
ணுடியதமிழ்க்கிளவியின்னிசைசெய்ஞானசம்பந்தன்மொழிகள்
பாடவலபத்தரவரெத்திசையுமாழ்வர்பரலோகமெளிதே.

திருச்சிற்றம்பலம்

திருஇந்திரநீலபருப்பதம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்

குலவுபாரிடம்போற்றவீற்றிருந், திலகுமான்மழுவேந்துமங்கையர்
நிலவுமிந்திரநீலபர்ப்பதத், துலவினானடியுள்கநல்குமே

கந்தமார்பொழில்சூழ்ந்தகாழியா, னிந்திரன்றொழுநீலபர்ப்பதத்
தந்தமில்லியையேத்துஞானசம், பந்தன்பாடல்கொண்டோதிவாழ்மினே

திருச்சிற்றம்பலம்.

திருப்பருப்பதம்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சுடுமணியுமிழ்நாகஞ்சூழ்தரதரைக்கசைத்தா
னிடுமணியெழிலானையேறலனெருதேறி
விடமணிமிடறுடையான்மேவியநெடுங்கோட்டுப்
படுமணிவிடுசுடரார்பருப்பதம்பரவுதுமே.

வெண்செநெல்விளைகழனிவிழவொலிகழுமலத்தான்
பண்செலப்பலபாடலிசைமுரல்பருப்பதத்தை
நண்சொலினாற்பரவுஞானசம்பந்தனல்ல
வொண்சொலினிவைமாலையுருவெணத்தவமாமே.

திருச்சிற்றம்பலம்.

திருவனேகதங்காபதம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நீடல்மேவுநிமிர்புன்சடைமேலோர்நிலாமுளை
சூடல்மேவுமறையின்முறையாலோர்சுலாவழ
லாடன்மேவுமவர்மேயவனேகதங்காபதம்
பாடல்மேவுமனத்தார்வினைபற்றறுப்பார்களே.

தொல்லையூழிப்பெயர்தோன்றியதோணிபுரத்துறை
நல்லகேள்வித்தமிழ்ஞானசம்பந்தனல்லார்கண்மு
னல்லல்தீரவுரைசெய்தவனேகதங்காபதஞ்
சொல்லநல்லவடையும்மடையாசுடுதுன்பமே.

திருச்சிற்றம்பலம்.

திருக்காளத்தி-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

சந்தமாரகிலொடுசாதிதேக்கம்மரந், துந்துமாமுகலியின்கரையினிலுமையொடு
மந்தமார்பொழில்வளர்மல்குகாளத்தியை, யெந்தையாரிணையடியென்மனத்துள்ளவே,

அட்டமாசித்திகளணைதருகாளத்தி, வட்டவார்சடையனைவயலணிகாழியான்
சிட்டநான்மறைவலஞானசம்பந்தன்சொ, லிட்டமாம்பாவோர்க்கில்லையாம்பாவமே

திருச்சிற்றம்பலம்.

திருவேற்காடு-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒள்ளிதுள்ளக்கதிக்காமிவனொளி, வெள்ளியானுறைவேற்கா
டுள்ளியாருயர்ந்தாரிவ்வுலகினிற், றெள்ளியாரவர்தேவரே.

விண்டமாம்பொழில்சூழ்தருவேற்காடு, கண்டுநம்பன்கழல்பேணிச்
சண்பைஞானசம்பந்தன்செந்தமிழ், கொண்டுபாடக்குணமாமே.

திருச்சிற்றம்பலம்

திருவலிதாயம்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பத்தரோடுபலரும்பொலியம்மலரங்கைப்புனல்தூவி
யொத்தசொல்லியுலகத்தவர்தாந்தொழுதேத்தவுயர்சென்னி
மத்தமவைத்தபெருமான்பிரியாதுறைகின்றவலிதாயஞ்
சித்தம்வைத்தவடியாரவர்மேலடையாமற்றிடர்நோயே.

வண்டுவைகும்மணமல்கியசோலைவளரும்வலிதாயத்
தண்டவாணனடியுன்குதலாலருமாலைத்தமிழாகக்
கண்டல்வைகுகடற்காழியுள்ஞானசம்பந்தன்றமிழ்ப்பத்துங்
கொண்டுவைகியிசைபாடவல்லார்குளிர்வானத்துயர்வாரே.

திருச்சிற்றம்பலம்.

திருவொற்றியூர்-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

விடையவன்விண்ணுமண்ணுந்தொழநின்றவன்வெண்மழுவாட்
படையன்பாய்புலித்தோலுடைகோவணம்பல்கரந்தைச்
சடையன்சாமவேதனைச்சிதங்கியசங்கவெண்டோ
டுடையவன்னூனமில்வியுறையும்மிடமொற்றியூரே.

ஒண்பிறைமல்குசென்னியிறைவன்னுறையொற்றியூரைச்
சண்பையர்தந்தலைவன்றமிண்ஞானசம்பந்தன்சொன்ன
பண்புனைபாடல்பத்தும்பரவிப்பணிந்தேத்தவல்லா
விண்புனைமேலுலகம்விருப்பெய்துவர்வீடெளிதே.

திருச்சிற்றம்பலம்.

அதுநிற்க திருமயிலாப்பூரிலே வைசியர்குலத்திலே சிவபத்தி அடியார்பத்திகளிற் சிறந்தவரும், பரசமயங்களைப் பாற்றல்வேண்டும் என்னும் சிந்தையுள்ளவரும், பெருஞ்செல்வரும் ஆகிய சிவநேசர் என்பவர் ஒருவர் உளர் அவர் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் ஞானப்பால் உண்டமையையும், உலகம் உய்யும்பொருட்டுத் திருப்பதிகங்களிலே ஆருகதத்தையும் பௌத்தத்தையும் இழித்துரைத்தலையும் சிவனடியார்கள் சொல்ல கேள்வியுற்று மனமிகமகிழ்ந்து அவருடையதிருவடிகளிலே பேரன்புடையராகி, அகோராத்திரம் அவருடைய திருவருட்டிறங்களையே பேசல் கேட்டல் ஆகிய தொழிலினராயினர். அவர் மகா ஐசுவரியமும் கீர்த்தியும் உடையாராயினும் பிள்ளைப்பேறு இன்மையால் மிகக் கவலையுற்று, சிவபூசை அடியார் பூசைகள்செய்து ஒருபெண்பிள்ளையைப் பெற்றார். அப்பெண் செந்தாமரை ஆசனியாகிய இலக்குமிபோல மகா சௌந்தரியம் உடையளாதலால் அவளுக்கு பூம்பாவை என்னும் பெயர் கொடுக்கப்பட்டது. அவளுக்குப் பெதும்பைப்பருவம் வந்தபின் தந்தையார் அவளுடைய குணாதிசயங்களைக்கண்டு வியப்புற்று மனமகிழ்ந்து இவளை விவாகம் செய்பவரே என்னுடைய அளவிறந்த திரவியங்களுக்கு உரியவர் என்றார். அந்நாட்களிலே திருஞானசம்பந்தப் பிள்ளையார் பாண்டிநாட்டிற் சென்று செய்தருளி திருவருட்டிறங்கள் எல்லாவற்றையும் அறிந்தவர்கள் வந்து சிவநேசருக்குச் சொன்னார்கள் சிவநேசர் அதைக்கேட்டு மனமகிழ்ந்து அவாகள் எல்லாருக்கும் அளவிறந்த திரவியங்களைக்கொடுத்து, பிள்ளையாரைத் திக்குநோக்கி நமஸ்கரித்து எழுந்து நின்று தம்முடைய சுற்றத்தார்கள் சமஸ்தரும்கேட்க அடியேன் என்னுடைய புத்திரியாகிய பூம்பாவையையும் திரவியங்களையும் என்னையும் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக் கொடுத்துவிட்டேன் என்றுசொல்லி அத்தியந்த ஆனந்தம் அடைந்தார். ஒருநாள் பூம்பாவை சேடியரோடு கன்னிமாடத்துக்குப் பக்கத்தில் இருக்கின்ற பூஞ்சோலையிற்சென்று பூக்கொய்யும்பொழுது ஒருபாம்பு மாதவிப்பந்தரிலே மறைந்துவந்து அவளுடைய விரலிலே காளிகாளாத்திரி யமன் யமதூதி என்னும் நாலுதந்தங்களும் எலும்பிலே தாவக்கடித்து நஞ்சை உகுத்து மேலேபடத்தைவிரித்து நின்றடி- அடங்கிற்று பூம்பாவை மயங்கிவிழ சேடியர்கள் அச்சுற்றுஅவளைத்தாங்கி கன்னிமாடத்தினுள்ளே கொண்டுபோனார்கள் சிவநேசர் சுற்றத்தாரோடு மனங்கலங்கி அழுதார் விஷவைத்தியர்கள் அனேகர் தனித்தனியே மந்திரதியான பாவங்கள் செய்தும் எண்ணிறந்த ஔஷதங்களைப் பிரயோகித்தும் விஷம் நீங்காமல் எழுவேகமும் முறையேபொங்கித் தலைக்கொண்டது ஆவிதங்குதற்கு உரிய குறிகள் இல்லாமையால் விஷவைத்தியர்கள் கைவிட, சுற்றத்தார்கள் அவள்மேல் விழுந்து அலறி அழுதார்கள் சிவநேசர் ஒருவாறு தெளிந்து இந்தவிஷத்தை நீக்கினவர்களுக்கு என்னுடைய அளவிறந்த திரவியங்களைக் கொடுப்பேன் என்று பறை அறைவித்தார் மூன்றுநாள்

அளவும் அரசரிடத்துள்ளோர் முதலாகிய மந்திரவாதிகள் சமஸ்தரும் வந்து தங்கள் செய்கையினலே தராமையால் திரும்பிவிட்டார்கள் சிவநேசர் அதுகண்டு மயங்கி பின்பு இவளைப் பிள்ளையாருக்கு என்று சொல்லியதனல் நான் துன்புறவேண்டுவது இல்லை என்று துன்பம் நீங்கி பிள்ளையார் வருமளவும் இவ்வுடலைத் தகனஞ்செய்து எலும்பையும் சாம்பரையும் சேமித்துவைப்பேன் எனறு துணிந்து அப்படியே தகனம் செய்து எலும்பையும் சாம்பரையும் ஓர்குடத்தில் இட்டு கன்னிமாடத்திலே வஸ்திரஞ்சாத்தி ஆபரணங்கள் அணிந்து பஞ்சணைமேல் வைத்தார். தினந்தோறும் தவருமல் மஞ்சனம் மாலை சந்தனம் அன்னம் விளக்கு முதலியவைகளை அமைத்தார் அதனை அறிந்த யாவரும் வியப்புற்ருர்கள்.

இப்படி நிகழும்நாளிலே பிள்ளையார் திருக்கூட்டத்தோடு திருவொற்றியூரில் வந்து சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு இருக்கின்ருர் என்று அவ்வூரார்கள் பலர்வந்து சிவநேசருக்குச் சொன்னர்கள் அவர் அவர்கள் எல்லாருக்கும் வஸ்திரங்களையும் பொன்களையுங் கொடுத்து, பெருங்களிப்புடையாராகி திருவொற்றியூர்வரைக்கும் நடைப்பந்தல்இட்டு வஸ்திரங்களால் விதானித்து கமுகுகளும் வாழைகளும் நாட்டிதோரணங்கள் நிறைத்து கொடிகள்கட்டி மாலைகள் தூக்கி அலங்கரிப்பித்தார். பின்பு திருவொற்றியூரிற் சென்று திருஞானசம்பந்தப் பிள்ளையாருடைய திருவடிகளை வணங்குவேன் என்று எழுந்து அம்மயிலாப்பூரில் இருக்கின்ற சிவனடியார்களும் உடன் செல்லச்சென்று, திருவொற்றியூருக்குச் சமீபித்தார், அப்பொழுது பிள்ளையாரும் திருவொற்றியூரை அகன்று மயிலாப்பூரைநோக்கி அடியார் கூட்டத்தோடு எழுந்தருளி வந்தார். சிவநேசரும் சிவனடியார்களும் அடியார் திருக் கூட்டத்தைத் தூரத்திலேகண்டு சிவகுமாரராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் எழுந்தருளிவருகின்ருர் என்று அளவில்லாத மகிழ்ச்சிகொண்டுவிழுந்து நமஸ்கரித்தார்கள். பிள்ளையார் அவர்களை எதிர்தொழுது சிவநேசருடைய செய்கையை அடியார்கள் சொல்லக்கேட்டு மயிலாப்பூரை அடைந்தார் சிவநேசரிடத்து நிகழ்ந்ததைத் திருவுளத்தடைத்து, அவருடைய கருத்தை முற்றுவித்தற்கும் சமணரும் பௌத்தரும் ஆகிய புறச்சமயிகளுடைய இழிப்புரைகளை ஒழித்தற்கும் திருவுளங்கொண்டு கபாலீச்சரம் என்னும் ஆலயத்திற் பிரவேசித்து பரமசிவனை நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்துகொண்டு கோயிலுக்குப்புறத்திலே வந்து சிவநேசரை நோக்கி உம்முடைய மகளினது எலும்பை நிறைத்தகுடத்தைக் கோயிற் புறபதிற்றிருவாயிலே கொண்டுவாரும் என்று அருளிச் செய்தார். சிவநேசர் பெருங்களிப் புடையராகி விழுந்து நமஸ்கரித்துஎழுந்து தம்முடைய வீட்டை அடைந்து கன்னியாமாடத்திலே புகுந்து வெந்தசாம்பரும் எலும்பும் நிறைத்த குடத்தை எடுத்து மூடுகின்ற

இரத்தினச்சிவிகையி லுள்ளேவைத்து சேடியர்கள் சூழ்ந்து சொல்லும்படி எடுப்பித்துக்கொண்டுவந்து கோபுரத்துக்கு எதிரே சிவிகையை நீங்கி அக்குடத்தை எடுத்து சுவாமிக்கு அபிமுகத்திலே வைத்து நமஸ்காரம் பண்ணினர் மயிலாப்பூரில் இருக்கின்றவர்களும் மற்றை ஊர்களில் உள்ளவர்களும் சமணர்முதலாகிய புறச்சமயிகளும் பார்க்கும்பொருட்டுப் பக்கத்திலேவந்து சூழ்ந்தார்கள் தேவர்கள் முதலியோர் ஆகாயத்திலேவந்து நெருங்கினர்கள் பசுகரணமின்றிச் சிவகரண முடைய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் சர்வான் மாக்களுக்கும் உறுதி பயப்பித்தற் பொருட்டு அடியார் திருக்கூட்டம் பக்கத்திலே தம்மைச் சூழ்ந்துவரும்படி கோபுரவாயிலின் நேரேவந்துபூம்பாவையினது அத்தியிருக்கின்ற மட்குடத்தைக் கண்டு சுத்தசாட்குண்ணிம சொரூபியாகிய பரமசிவனுடைய திருவருளின் பெருமையைச் சிந்தித்து இப்பூமியிலேஇறந்தவர்களுடைய எலும்பைப் பின்னும் நன்னெறிப்படுத்த அந்நன்மை அவ்வெலும்போடு தொடர்ச்சியாகும் என்று அருளுக்கினலே பூம்பாவாய் என்று விளித்து பூமியிலே மானுடப்பிறப்பு எடுத்தவர்கள் பெறும்பயன் அன்புடனே பரமசிவனுடைய அடியார்களை அமுதுசெய்வித்தலும் சைவாகமவிதிப்படி செய்யப்படுகின்ற அவருடைய திருவிழாவைத் தரிசித்து ஆனந்தம் அடைதலுமே என்பது சத்தியமாயில் நீ இவ்வுலகர் முன்வருவாய் என்று "மட்டிட்டபுன்னை" என்னும் திருப்பதிகத்தை எடுத்தருளினர்.

திருமயிலாப்பூர் பூம்பாவைத்திருப்பதிகம்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மட்டிட்டபுன்னையங்கானன்மடமயிலைக்
கட்டிட்டங்கொண்டான்கபாலீச்சரமமர்ந்தா
னொட்டிட்டபண்பினுருத்திரபல்கணத்தார்க்
கட்டிட்டல்காணுதேபோதியோபூம்பாவாய்.

கானமர்சோலைக்கபாலீச்சரமமர்ந்தான்
றேனமர்பூம்பாவைப்பட்டாகச்செந்தமிழான்
ஞானசம்பந்தனலம்புகழ்ந்தபத்தும்வல்லார்
வானசம்பந்தத்தவரோடும்வாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்.

அதிலே அருளிச்செய்யப்பட்ட "போதியோ" என்னுந் திரிவாக்காகிய அமிர்தம் அவ்வங்கத்திலே பொருந்த அதுகுடத்தினுள்ளே சரீரமாய்ப்பரிணமித்தது பூம்பாவை முதற்பாட்டிலே வடிவுபெற்றுவேறெட்டுப்பாட்டிலே பன்னிரண்டு வயசடைந்து குடத்தினுள் அடங்கியிருந்தனள். பின்பு பிள்ளையார் சமணர்களும்பௌத்தர்களும் இச்செய்கையை ஏற்றதன்று என்று எடுத்துச்சொல்வார்கள் என்னுங் கருத்தினல்

பத்தாந்திருப்பாட்டை அருளிச்செய்தார். அப்பொழுது பூம்பாவை தன்கை வெளியேதோன்ற குடம் உடைந்து எழுந்தார்கள். அங்ஙனம் எழுந்துநின்ற பூம்பாவையைக் கண்டவர்கள் எல்லாரும் அற்புதம்யெய்திஞர்கள் சிவனடியார்கள் எல்லாரும் ஹர ஹர என்று சொல்லும் ஓசை மிக்கோங்கிற்று தேவர்களும் முனிவர்களும் திருவருட் சிறப்பை நோக்கி புஷ்பமாரி பொழிந்தார்கள் பூமியில் உள்ளவர்கள் இதுஎங்கள் பரமசிவனுடைய பெருங்கருணையே என்று கைகள் சிரசின்மேல் ஏறிக்குவிய ஆனந்தபராயணராய் வீழ்ந்தார்கள் அவ்வற்புதத்தைக் கண்ட சமணர்முதலிய புறச்சமயிகள் எல்லாரும் ஏங்கித் தள்ளாடி விழுந்தார்கள் எண்ணில்லாத வயசுள்ள பிரமதேவர் தம்மாலே படைக்கப்பட்ட திலோர்த்தமையினிடத்தே அவளினது அழகின் வெள்ளத்தை நான்குமுகத்திஞலே கண்டார் பதிஞறுவயசுள்ள திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளோ அவளிலும்பார்க்க மிகுந்த சௌந்தரியத்தையுடைய தெம்மாலே படைக்கப்பட்ட பூம்பாவையினிடத்தே பரமசிவனது பெருங்கருணை வெள்ளத்தை ஆயிரமுகத்திஞலே கண்டார். பூம்பாவையைக்கண்ட தந்தையாராகிய சிவநேசர் பிள்ளையாருடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்தார். பூம்பாவை பரமசிவனை வணங்கி பின்பு பிள்ளையாரை நமஸ்கரித்து எழுந்துநின்ருள். பிள்ளையார் சிவநேசரை நோக்கி இனி உம்முடைய புத்திரியை வீட்டிற்குக் கொண்டுபோம் என்று திருவாய்மலர்ந்தருளிஞர். சிவநேசர் பிள்ளையாருடைய திருவடிகளை வணங்கித்துதித்து சுவாமீ அடியேன் அருமையாகப்பெற்ற இப்புத்திரியைத் தேவரீர் திருமணஞ் செய்தருளல்வேண்டும் என்று பிரார்த்திக்கபிள்ளையார் அவரைநோக்கி நீர்பெற்ற பெண்விஷத்திஞல் இறந்தபின் நாம் சர்வான்மாக்களும் உய்யும்படி அவர்களுக்குப் பரமசிவனது திருவருண்மகிமை விளங்கும்பொருட்டு உற்பவித்தமையால் இவ்வார்த்தை தகாது என்று மருத்தருளிஞர். அதுகேட்டுச் சிவநேசரும் அவர் பந்துக்களும் மயங்கி பிள்ளையாருடைய திருவடிகளிலே விழுந்து அழ பிள்ளையார் அவர்களுடைய பெருந்துயரம் தணியும்பொருட்டு வேதாகமத் துணிவை அவர்களுக்கு எடுத்துப் போதித்தருளிஞர். அதுகேட்ட சிவநேசரும் பந்துக்களும் கவலைநீங்கிஞர்கள். பிள்ளையார் கோயிலினுள்ளே எழுந்தருளிஞர் சிவநேசர் பூம்பாவையை வேருெருவருக்கும் விவாகம்செய்து கொடுப்பதில்லை என்று கொண்டுபோய் கன்னிமாடத்தில் வைத்தார் அவள் சிவத்தை அடைந்தனள். கோயிலினுள்ளே எழுந்தருளிய பிள்ளையார் சுவாமியைவணங்கி திருவருளைத்துதித்து திருப்பதிகம்பாடிக்கொண்டு புறம்போந்து வீற்றிருந்தருளிஞர்.

சிலநாளாயினபின் பிள்ளையார் அம்மயிலாப்பூரைஅகன்றுஅங்குள்ள திருத்தொண்டர்கள் விடைகொள்ள சிவநேசருக்கு வருத்தம் நீங்கும்படி மதுரமொழிஅருளி விடைகொடுத்துச் சென்று வான்மியூர், இ

டைச்சுரம், திக்கழுக்குன்று, அச்சிருபாக்கம், அரசிலி, புறவார், பணங்காட்டூர் முதலாகிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு சிதம்பரத்தை அடைந்து காலந்தோறும் சபாநாயகரைத் தரிசனம் செய்துகொண்டு இருந்தார்.

திருவான்மியூர்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கரையுலாங்கடலிற்பொலிசங்கமவெளிப்பிவன்
றிரையுலாங்கழிமீனுகளுந்திருவான்மியூ
ருரையுலாம்பொருளாயுலகாளுடையீர்சொலீர்
வரையுலாமடமாதுடனாகியமாண்பதே.

மாதொர்கூறுடைநற்றவனைத்திருவான்மியூ
ராதியெம்பெருமானருள்செய்யவினாவுரை
போதியன்றெழுகாயுள்ஞானசம்பந்தன்சொன்
னிதியானினைவார்நெடுவானுலகாள்வரே.

திருச்சிற்றம்பலம்.

திருஇடைச்சுரம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வரிவளரவிரொளியரவரைதாழவார்சடைமுடிமிசைவளர்மதிசூடிக்
கரிவளர்தருகழல்கால்வலனேந்திக்கனலெரியாடுவர்காடரங்காக
விரிவளர்தருபொழிலிளமயிலாலவெண்ணிறத்தருவிகடிண்ணெனவீழு
மெரிவளரினமணிபுனபணிச்சாரலிடைச்சுரமேவியவிவர்வணமென்னே.

மடைச்சுரமறிவனவாழையுங்கயலுமருவியவயறனில்வருபுனற்காழிச்
சடைச்சுரத்துறைவதோர்பிறையுடையண்ணல்சரிகைகள்பரவின்றருகுசம்பந்த
புடைச்சுரத்தருவரைப்பூக்கமழ்சாரற்புணர்மடநடையவர்புடையிடையார்ந்த (ன்
விடைச்சுரமேத்தியவிசையொடுபாடலிவைசொலவல்லவர்பிணியிலர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுக்குன்றம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையானொருகாதிற்றூயகுழைதாழ
வேடுடையான்றலைகலனாகவிரந்துண்ணு
நாடுடையானள்ளிருளேமநடமாடுங்
காடுடையான்காதல்செய்கோயில்கழுக்குன்றே.

கண்ணுதலான்காதல்செய்கோயில்கழுக்குன்றை
நண்ணியசீர்ஞானசம்பந்தன்றமிழ்மாலை
பண்ணியல்பாற்பாடியபத்துமிவைவல்லார்
புண்ணியராய்விண்ணவரோடும்புகுவாரே.

திருச்சிற்றம்பலம்.

திருஅச்சிருபாக்கம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பொன்றிரண்டன்னபுரிசடைபுரளப் பொருகடற்பவளமொ டழனிறம்புரையக், குன்றிரண்டன்ன தோளுடையகலங்குலாய வெண்ணூலொடு கொழும்பொடியணிவர், மின்றிரண்டன்ன நுண்ணிடையரிவை மெல்லியாளையோர்பாகமாப்பேணி, யன்றிரண்டுருவமாயவெம்மடிகளச் சிறுபாக்கம் தாட்கிகொண்டாரே.

மைச்சைறிகுவளைதவளைவாய் நிரையமதுமலர்ப்பொய்கையிற்புது மலர்கிழியப், பச்சிறவெறிவயல்வெறிகமழ்காழிப்பதியவரதிபதி கவுணியர்பெருமான், கைச்சிறுமறியவன்கழலலாற்பேணுக் கருத்துடைஞான சம்பந்தன்தமிழ்கொண், டச்சிறுபாக்கத்தடிகளையேத்து மன்புடையடியவ ரருவினையிலரே.

திருச்சிற்றம்பலம்.

திருஅரைசிலி-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பாடல்வண்டறையான்மதிபாய்புனர்கங்கை
கோடல்கூவிளமாலைமத்தமுஞ்செஞ்சடைக்குலாவி
வாடல்வெண்டலைமாலைமருவிடவல்லியுந்தோண்மே
லாடன்மாசுணமயைத்தவடிகளுக்கிடமரைசிலியே.

அல்லிநீள்வயல்சூழ்ந்தவரசிலியடிகளைக்காழி
நல்லஞானசம்பந்தன்றமிழ்பத்திவைநாளுஞ்
சொல்லவல்லவர்தம்மைச்சூழ்ந்தமரர்தொழுதேத்த
வல்லவர்வானுலகேத்திவைகலுமகிழ்ந்திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு சிவபாதவிருதயரும் சீர்காழியில்உள்ள மற்றப் பிராமணர்களும் அடியார்களும்பிள்ளையார் சிதம்பரத்தில்வந்து இருக்கின்றார் என்று கேள்வியுற்று வந்துசேர்ந்தார்கள். பிள்ளையார் அவர்களோடு சபாநாயகரை வணங்கி அருள்பெற்று சிதம்பரத்தை அகன்று சீர்காழியை அடைந்து காலந்தோறும் தோணியப்பரை வணங்கிக் கொண்டு இருந்தார் இருக்கும்நாளிலே முருகநாயனார் திருநீலநக்கநாயனார் முதலாகிய திருத்தொண்டர்கள் சுற்றத்தார்களோடு சீர்காழியில் வந்து பிள்ளையாரைச் சேவித்துக்கொண்டு இருந்தார்கள்.

திருவேணுபுரம் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

வண்டார்குழலரிவையொடுபிரியாவகைபாகம்
பெண்டான்மிகவானபிறைச்சென்னிப்பெருமானூர்
தண்டாமரைமலராளுறைதவளந்நெடுமாடம்
விண்டாங்குவபோலும்மிகுவேணுபுரமதுவே.

வேதத்தொலியானமிகுவேணுபுறந்தன்னைப்
பாதத்தினின்மனம்வைத்தெழுபந்தன்னுரைபாட
லேதத்தினையில்லாவிவைபத்தும்மிசைவல்லார்
கேதத்தினையில்லாவர்சிவகெதியைப்பெறுவாரே

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீசீகாழி - திருவிராகம் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பொருணமக்கவென்றுநச்சுயிச்சைசெய்துநீ
ரம்பரவடைந்துசாலவல்லலுப்பதன்முன
மும்பர்நாதனுத்தமனெளிம்மிகுத்தசெஞ்சடை
நம்பன்மேவுநன்னகர்நலங்கொள்காழிசேர்மினே.

தக்கனார்தலையறிந்தசங்கரன்றனக்கரை
யக்கினோடரவசைத்தவந்திவண்ணர்காழியை
யொக்கஞானசம்பந்தனுரைத்தபாடல்வல்லவர்
மிக்கவின்பமெய்திவீற்றிருந்துவாழ்தன்மெய்ம்மையே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு சிவபாதவிருதயரும் அவர்பந்துக்களும் ஒருங்குகூடி திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருமணஞ் செய்தருளுதற்குஇதுவே பருவம் என்று எண்ணி பிள்ளையாரை அணைந்து சுவாமி தேவரீர்வைதிகச்சடங்கைப் பிறருக்குக் காட்டும்பொருட்டு ஓர்கன்னியை விவாகம் செய்தருளல்வேண்டும் என்று விண்ணப்பஞ் செய்தார்கள். பிள்ளையார் அதுகூடாது என்றுமறுத்தருள பிராமணர்கள் பின்னும் கைதொழுது தேவரீர் இப்பூமியின்கண்ணே வேதநெறியை ஸ்தாபிக்கப்புகுந்தீர் ஆதலால் அவ்வேதவிதிப்படி திருமணஞ்செய்தருளுதற்குத் திருவுளஞ் செய்தல்வேண்டும் என்றார்கள் பிள்ளையார் வேதநெறிநிலைப்படும்பொருட்டு அதற்கு உடன் பட்டருளினார். அதுகண்ட தந்தையாரும் மற்றப் பிராமணர்களும் இதுபரமசிவனுடைய திருவருள் என்று உருகி மனமகிழ்ந்து திருநல்லூரில்இருக்கின்ற பிராமணருள் நம்பாண்டார்நம்பிஎன்பவருடைய புத்திரியே திருஞான சம்பந்தபிள்ளையாருக்கு மனைவியாத

ற்கு யோக்கியதை உடையவள்என்று எண்ணினார்கள். தந்தையாராகிய சிவபாதவிருதயர் பிராமணர்களோடும் திருத்தொண்டர்களோடும்விவாகம் பேசுதற்குத் திருநல்லூரைச்சமீபித்து அங்குநின்று சுற்றத்தாரோடுவந்து தம்மை எதிர்கொண்டு வணங்கியநம்பாண்டார் நம்பியோடு அவர் வீட்டை அடைந்தார்.

நம்பாண்டார்நம்பி சிவபாதவிருதயரையும் மற்றையோரையும் சற்காரம்செய்து நீங்கள்இங்கே எழுந்தருளிவந்து என்னென்றுவினவஅவர்கள் நம்பாண்டார் நம்பியைநோக்கி நாங்கள் திருஞானசம்பந்தப்பிள்ளையாருக்கு உம்முடைய புத்திரியை விவாகம் பேசவந்தோம்என்று சொல்ல நம்பாண்டார் நம்பி பெருங்களிப்புடையராகி சிவகாத விருதயரை நோக்கி சுவாமீ தேவரீருடைய பெருந்தவத்தினால் திருவவதாரம் செய்தவரும் உலகமாதாவாகிய உமாதேவியுடைய திருமுலைப்பாலை உண்டவரும் ஆகியதிருஞானசம்பந்த பிள்ளையாருக்கு அடியேன் யானும்என் குலமும்உய்யும்பொருட்டுஎன்குலக்கொழுந்தை விவாகம்செய்துகொடுத்தற்குஎன்னதவம் செய்தோனோ என்றார்தந்தையார் மற்றவர்களோடு மகிழ்ச்சியுடன் சீர்காழிக்கும் மீண்டுசென்று பிள்ளையாருக்கு அதனைத் தெரிவித்து சோதிடர்களைக்கொண்டு விவாகத்திற்குச் சுபதினமும் சுபமுகூர்த்தமும் நியமிப்பதுஎங்கும் விவாகபத்திரம் பெருஞ்சிறப்பினோடு அனுப்பி விவாகத்துக்கு வேண்டும் முயற்சிகளைச் செய்வித்தார். நம்பாண்டார்நம்பியும் விவாகத்துக்கு வேண்டும் முயற்சிகளைச் செய்வித்தார் பிள்ளையார்விவாகதினத்துக்கு முதற்றினத்திலேசமாவர்த்தனம்பண்ணி ரக்ஷாபந்தனஞ் செய்து மற்றநாள்காலையில் நித்தியகர்மங்களைச்செய்து திருத்தோணியப்பரை வணங்கிக்கொண்டு முத்துச்சிவிகைமேல் ஏறி திருக்கல்யாணந்தரிசிக்கவந்த சமஸ்தரும்சூழ மங்கலவாத்தியங்கள்ஒலிக்க குடைகள் சாமரங்கள் ஆலவட்டங்கள் முதலியனநெருங்கமுத்துக்குடைய நிழற்றமகா அலங்காரத்தோடு சென்று திருநல்லூரைச் சமீபித்து அங்கிருந்துவந்து அனேகர் எதிர்கொள்ளப்போய் அங்குள்ள திருப்பெருமணம் என்னும் ஆலயத்திற் பிரவேசித்து சுவாமியை வணங்கித் திருப்பதிகம் பாடிக்கொண்டு பிராமணர்களுடைய வேண்டுகோளின்படி கோயிலுக்குப்புறத்தில் இருக்கின்ற ஒருமாடத்திலே புகுந்தருளினார். பிராமணர்கள் பிள்ளையாரைப் பத்துத்துவரையும் ஓமாலிகை முப்பத்திரண்டும் விரை ஐந்தும்ஆகிய இருவகை வாசனைத் திரவியங்களையும்வெவ்வேறுசேர்த்து அரைத்துத் திருமேனியிலேபூசிதிருமஞ்சன நீர்ஆட்டி விலைமதிப்பில்லாதவஸ்திராபரணங்களாலேகோலம் செய்தார்கள்பின்புபிள்ளையார்பரமசிவனது திருக்கண்ணினின்றும் உதிக்கும்திருவருட்குறியாகியஉருத்திராக்ஷமாலையைச்சர்வலோகத்தாரும் துதிக்கும்படிவணங்கி தாமே எடுத்துத்தரித்து பசுமலநீக்கத்துச் சிவத்துவக்குறியாகி அழகுக்குஅணியாய்விளங்குகின்ற திருவெண்ணீற்றைத்திருவைந்

தெழுத்தோதிச் சாத்திக்கொண்டு மிக அலங்கரிக்கப்பட்ட வீதியிலே எழுந்தருளிவந்து பரமசிவனை வணங்கி முத்துச்சிவிகைமேல் ஏறியருளினார் அப்பொழுது பலவகைப்பட்ட வாத்தியங்களும் ஒலித்தன ஆகாயத்திலுள்ள தேவர்கள் கர்பகப்பூமாரிபெய்தார்கள். பிராமணர்கள் வேதகோஷஞ் செய்தார்கள் பிள்ளையார் முத்துக்குடைய நிழற்ற முத்துச்சின்னங்கள் எல்லாம் தம்முடைய எண்ணில்லாத் திருநாமங்களை எடுத்து ஊத எழுந்தருளிவந்தார். பூம்பந்தருக்குமுன் வந்தவுடனே முத்துச்சிவிகையி னின்றும் இறங்கி பூக்களும் பொற்சுண்ணமும்பரந்த பாவர்டைமேல் நடந்து திருக்கல்யாண மண்டபத்துட்சென்று, இரத்தினாசனத்தின்மேல் வீற்றிருந்தருளினார் அப்பொழுது நம்பாண்டார்நம்பி தம்முடைய மனைவியார் பசுப்பாலும் சுத்தஜலமும் ஏந்திப்பின் வரவந்து பிள்ளையாரைப் பரமசிவனாகப் பாவித்து தம்முடைய மனைவியார் கரகநீரைவார்க்க அவருடைய ஸ்ரீபாதங்களைவிளக்கி அங்ஙனம்செய்த தீர்த்தத்தைத் தம்முடைய சிரசின்மேலே புரோட்சித்து உள்ளம் பூரித்து சுற்றத்தார்கள் மேலும் தெளித்தார் பிள்ளையாருடைய திருக்கரத்திலே ஜலத்தை வார்த்து தம்முடைய கோத்திரத்தைச்சொல்லி, என்னுடைய புத்திரியைத் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்குக் கொடுத்தேன் என்றார். விவாக முகூர்த்தம் வர மணமகளைக்கொண்டு வந்து பிள்ளையாருக்கு வலப்பக்கத்தில் இருத்தினார்கள். திருநீலநக்கநாயனார் திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருமுன்பே பரமசிவனைத் தியானித்துக்கொண்டு வேதவிதிப்படி சடங்குசெய்ய வேதங்கள் ஒலிக்க திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருமங்கிலியத்தைச் சாத்தி பாணிக்கிரகணம் பண்ணி பொரியை அக்கினியில் இட்டு பரமசிவனைத் துதித்து அக்கினியை வலஞ்செய்யவேண்டி அக்கினியாவார் பரமசிவனே என்று திருவுளங்கொண்டு திருப்பெருமணம் என்னும் சிவாலயத்திற் செல்லக்கருதி வேத விதிப்படி வளர்க்கப்பட்ட அக்கினியை வலஞ்செய்து இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே நான் இவளோடு பரமசிவனது திருவடியை அடைவேன் என்று நினைந்து சமஸ்தரும் சூழும்படி மனைவியாரோடு சென்று அச்சிவாலயத்திற் பிரவேசித்து தம்முடைய திருமணத்தைத் தரிசித்தவர்களுடைய பாசத்தை நீக்கத் திருவுளங்கொண்டு திருநல்லூர்ப் பெருமணத்தில் வீற்றிருக்குங் கடவுளை தேவரீருடைய திருவடிகளை அடையும்பதம் இதுஎன்று "கல்லூர்ப் பெருமணம்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடி யருளினார்.

திருநல்லூர்ப்பெருமணம்-பண்-அந்தாளக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கல்லூர்ப்பெருமணம்வேண்டா கழுமலம்,பல்லூர்ப்பெருமணம்பாட்டுமெய்யாய்த்தில
சொல்லூர்ப்பெருமணஞ்சூடலரேதொண்டர், நல்லூர்ப்பெருமணமேயநம்பானே.

நறும்பொழிற்காழியுண்ஞானசம்பந்தன், பெரும்பதநல்லூர்ப்பெருமணத்தானை
யுரும்பொருளாற்சொன்னவொண்டமிழ்வல்லார்க், கறும்பழிபாவமவலமிலரே.

திருச்சிற்றம்பலம்

அப்பொழுது கருணாநிதியாகிய பரமசிவன் நீயும் உன் மனைவியும் உன்னுடைய விவாகத்தைக்காணவந்தவர்கள் சமஸ்தரும் இந்தச்சோதியினுள்ளே வந்துநம்மை அடையுங்கள் என்று அருளிச்செய்து சுத்த சோதிவடிவமாகி கோயிலுட்பட மேலோங்குந் தன்மையால் அச்சோதிக்கு ஒருவாயிலைவகுத்துக் காட்டியருளினார். கிருபா சமுத்திரமாகிய திருஞானசம்பந்த சுவாமி சோதிவடிவாய் நின்ற கடவுளை வணங்கித் துதித்து உலகம் உய்யும்பொருட்டு அதனை அடையும் நெறியை அருளிச்செய்யத் திருவுளங்கொண்டு யாவருக்கும் ஞானமெய்ந்நெறி நமச்சிவாய என்கின்றமந்திரம் என்னுங் கருத்தையுடைய நமச்சிவாயத்திருப்பதிகத்தைச் சமஸ்தருங்கேட்க அருளிச்செய்தார்.

நமச்சிவாயத்திருப்பதிகம் - பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

காதலாகிக்கசித்துகண்ணீர்மல்கி,யோதுவார்தமைநன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினும்மெய்ப்பொருளாவதும், நாதநாமநமச்சிவாயவே. [ம்

நந்திநாமநமச்சிவாயவெனுஞ், சந்தையாற்றமிழ்ஞானசம்பந்தன்சொற்
சிந்தையான்மகிழ்ந்தேத்தவல்லார்கள்மேற்,பந்தபாசமறுக்கவல்லர்களே

திருச்சிற்றம்பலம்.

இக்கலியாணங் காணவந்த எல்லீரும் உங்கள் சனனநோய் தீரும் பொருட்டு இந்தச்சோதியினுள்ளே பிரவேசியுங்கள்என்று திருவாய் மலர்ந்தருளினார். பிறவிக்கடலிலே கரைகாணாது அழுந்திஅறிவின்றி மயங்குகின்றவர்கள் பிள்ளையாருடைய திருமணத்தைச் சேவிக்கப் பெற்றமையால் அந்தச்சோதியினுள்ளே புகுந்தார்கள் திருநீலநக்கநாயனார். முருகநாயனார் சிவபாதவிருதயர் நம்பாண்டார் நம்பி திருநீலகண்டப் பெரும்பாணர் முதலிய திருத்தொண்டர்கள் தங்கள்தங்கள் மனைவியாரோடும் சுற்றத்தாரோடும் புகுந்தார்கள் பிள்ளையாருடைய முத்துச் சிவிகை முதலியவற்றைத் தாங்கிச் சென்றவர்களும் மற்றைப் பரிசனங்களும் தொழுது புகுந்தார்கள் சைவ பாசுபதர் மகாவிரதர் காளாமுகர் வாமர் வைரவர் என்கிற அறுவகை உட்சமயிகளும் வைதிக சைவர்களும் சைவ சித்தாந்திகளும் ஆகிய சமஸ்தரும் அந்தச் சுத்த சோதியினுள்ளே புகுந்த பின் சர்வான்மாக்களையும் உய்விக்கும்பொருட்டுத் திருவவதாரம் செய்தருளிய சைவசித்தாந்த சமயசாரியராகிய திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தம்முடைய மனைவியாரை



க்கைம்பற்றிக்கொண்டு அந்தச் சோதியை வலஞ்செய்து அதனுள்ளே புகுந்துசிவசாயுச்சியம் அடைந்தார். அதன்பின் அந்தச்சோதியை மறைந்துவிட ருப்பெருமணமாகிய கோயில் தோன்றுதலும் உலகத்திலே பேறில்லாதவர்கள் எல்லாரும் கவலைகொண்டார்கள் பிள்ளையார் சோதியுட்புகுந்தமையைத் தூரத்தே கண்டு நணுகப்பெறாத அரிபிரமேந்திராதிதேவர்களும் முனிவர்களும் கவலைநீங்க எடுத்து ஸ்தோத்திரம் பண்ணினார்கள்

உ

சிவமயம்.


முப்பதாவது

ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்.

ஏதமில்வேளாளர்பெருமங்கலத்துளேயர்கோன்கலிக்காமரிறையை நேரே. தூதுகொளுமவனணுகிலென்னாமென்னுந் துணிவினர்பாலிறைவனருஞ் சூலையேவி, வேதனைவன்றொண்டன்வரிநீங்குமென்னவெகுண்டுடல்வாள்கொடுதுறந்துமேயநாவற்,போதகமுமுடலிகழவெழுந்துதாழ்ந்துபோற்றியதுவிலக்கியருள்பொருந்தினாரே.

சோழநாட்டிலே திருப்பெருமங்கலத்திலே வேளாளர் குலத்திலே சோழராஜாக்களிடத்திலே பரம்பரையாகச் சேனாதிபதி உத்தியோகம் செய்கின்ற ஏயர்குடியிலே கலிக்காமநாயனார் என்பவர்ஒருவர் இருந்தார் அவர் குருலிங்க சங்கபத்திகளிலே சிறந்தவர் திருப்புன்கூரிலுள்ள சிவாலயத்திலே அநேகந்திருப்பணிகள் செய்தவர் அவர் சுந்தரமூர்த்திசுவாமிகள் பரமசிவனைப் பரவையாரிடத்திற்குத் தூதாக அனுப்பியசமாசாரத்தைக் கேள்வியுற்று வெம்மிமிகக்கோபித்து நாயனை அடியான் ஏவுங்காரியம் மிகநன்று இப்படிச்செய்பவன் தொண்டனாம் இதுஎன்னபாவம் பொருக்கவொண்ணாத இந்தப்பெரும்பாதகத்தைக் கேட்டு உயிரோடு இருக்கின்றேனே என்றார் ஒருவன் பெண்ணாசைமேலிட்டினால் ஏவ ஒப்பில்லாத கடவுள் தூதராய் ஓர் இரவும்முழுதும் போக்குவரவு செய்துஉழன்றாராம் அரிபிரமேந்திராதி தேவர்களாலும் அறியப்படாத கடவுள் இசைந்தாராயினும் அவன் அவரை ஏவலாமா இதற்கு மனம்நடுங்காத அந்தத்துரோகியைநான் காணுநாள் எந்நா

ளோ பெண்பொருட்டுக்கடவுளை இரவிலே தூதனுப்பிய பாதகனைக் கா
ண்பேனாயில் என்னசம்பவிக்குமோ என்று சொல்லிமிகச் செற்றங்கொ
ண்டு இருந்தார் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இதனைக் கேள்வியுற்று அத
னைக்குறித்துப் பரமசிவனுக்கு விண்ணப்பஞ் செய்ய பரமசிவன் இருவ
ரையுங்கூட்டுதற்குத் திருவுளங்கொண்டு கலிக்காம நாயனாரிடத்திலே
சூலை நோயைஏவஅது அக்கினியிலே காய்ச்சப்பட்டவேல் குடைதல்
போலமிக்க வேதனைசெய்ய கலிக்காமநாயனார் அதனால் மிகவருந்திவீழ்
ந்து உயிர்த்துணையாகிய பரமசிவனுடைய திருவடிகளைச் சிந்தித்துத்
துதித்தார் அப்பொழுது பரமசிவன் அவரிடத்தில் எழுந்தருளி சுந்தர
னால் அன்றிஇந்நோய் தீராது என்று அருளிச்செய்ய அவர்சுவாமி பரம்
பரையாகத் தேவரீரே மெய்க்கடவுள் என்றுதுணிந்து தேவரீருக்குத்
திருத்தொண்டுகள் செய்துவருகின்ற குடியிலுள்ளேனாகிய என்னை வரு
த்துகின்ற சூலைநோயைநூதனமாக ஆண்டுகொள்ளப்பட்ட ஒருவனாக
வந்து தீர்ப்பான் அவனாலே தீர்க்கப்படுதலிலும் தீராதொழிந்த என்னை
வருத்துதலைநன்றுதேவரீர் செய்யும்பெருமையை அறிந்தவர்யாவர் வன்
றொண்டனுக்கு ஆகும்உறுதியையேசெய்வீர்என்றார்உடனேபரமசிவன்
அவர்முன்னே மறைந்து சுந்தரமூர்த்தி யிடத்திற் சென்று நம்முடைய
ஏவலாலே கலிக்காமனை வருத்துகின்ற சூலையைநீ போய்த் தீர்ப்பாஎன்
றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அதைக்கேட்டுத் திருவுளமகிழ்ந்து கலிக்
காமநாயரிடத்திற்குப் போம்படி புறப்பட்டு சூலைதீர்க்கும்படி தாம்
வருஞ்சமாசாரத்தை அவருக்குத்தெரிவித்தற்கு முன்னே ஆள் அனுப்பி
னார் அவ்வாளினாலே சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய வரவை அறிந்த
கலிக்காமநாயனார்எங்கள்கடவுளைத்தூதனுப்பியவன் சூலைநோய் தீர்த்த
ற்குவரில் நான் செய்வதுஎன்னும் அவன்இங்கேவந்து தீர்த்தற்கு முன்
னேஇச்சூலையை வயிற்றினோடுங் கிழிப்பேன் என்று உடைவாளினாலே
தம்வயிற்றைக் கிழித்துக்கொண்டு இறந்துபோனார் அதுகண்டஅவர்
மனைவியாரும் அனுமரணம்செய்யப்புகும் சுந்தரமூர்த்திசுவாமிகள்சமீபி
த்துவந்துவிட்டார்என்று முன்வந்தோர்சொல்லஒருவரும்அழாதொழிக
என்றுசொல்லிபின்புதம்முடையநாயகரது செய்கையைமறைத்து சுந்த
ரமூர்த்திசுவாமிகளை எதிர்கொள்ளும்பொருட்டுத் தங்கள் பந்துக்களை
ஏவ அவர்போய்எதிர்கொண்டு வணங்கினார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்
அவர்களுக்கு அருள்செய்துவந்து கலிக்காமநாயனார் வீட்டில்புகுந்து
ஆசனத்தில் இருந்து தமக்குச்செய்யப்பட்ட அருச்சனைகளை அங்கீகரி
த்து கலிக்காமநாயனாருடைய சூலையைநீக்கி அவருடன இருத்தற்கு
மிகவருந்துகின்றே என்றார் அப்பொழுது மனைவியாரது ஏவலால் வீட்
டுவேலைக்காரர் வணங்கிநின்று சுவாமீ அவருக்குத்தீங்கு ஒன்றும்இல்லை
உள்ளே பள்ளிகொள்ளுகின்றார் என்றுசொல்ல சுந்தரமூர்த்திசுவாமிகள்
தீங்குஒன்றும் இல்லையென்றீர் ஆயினும் என்மனந்தெளிந்திலது ஆதலா
ல்அவரைநான் காணவேண்டும் என்றார் அவர்கள் அதுகேட்டு கலிக்காம
நாயனாரைக்காட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் இரத்தம் சோரக்குடர்



சொரிந்து உயிர்பொன்றிக் கிடந்தவரைக் கண்டு புகுந்தவாறு நன்று நானும் இவர்போல இறந்துபோவேன்என்றுசொல்லி உடைவாளைஎடுத்தார், உடனேபரமசிவனது திருவருளினால் கலிக்காமநாயனார் உயிர்த்து எழுந்து அவர்கையில் வாளைப்பிடித்துக் கொள்ள அவர்விழுந்து நமஸ்கரித்து கலிக்காமநாயனாரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளை நமஸ்கரித்தார். அப்பால் இருவரும் அதிக நண்புள்ளவர்களாகித் திருப்புன் கூருக்குப் போய் சுவாமி தரிசனம் செய்து சிலநாட் சென்றபின்பு திருவாரூரை அடைந்தார்கள் கலிக்காம நாயனார்சிலநாள் அங்கே சுவாமி தரிசனம் சேய்துகொண்டு இருந்து பின்பு சுந்தர மூர்த்திகளிடத்திலே அனுமதி பெற்று தம்முடைய ஊருக்குந் திரும்பிவந்து திருத்தொண்டு செய்து கொண்டு இருந்து சிவபதம் அடைந்தார்.

உ

சிவமயம்.

முப்பத்தோராவது,

திருமூல நாயனார் புராணம்.

கயிலாயத்தொரு சித்தர்பொதியிற் சேர்வார்காவிரிசூழ்சாத்தனூர்
கருதுமூலன்,பயிலாநோயுடன்வீயத்துயா நீடும்பசுக்களைக்கண்டவனுட
லிற்பாய்ந்துபோத, வயலாகப்பண்டையுடலருளான்மேவியாவடுதண்டுற
யாண்டுக்கொருப்பாவாக் குயிலாருமரசடியிலிருந்துகூறிக்கோதிலாவட
கயிலைகுறுகினாரே.

திருக்கயிலாசத்திலே பரமசிவனது ஆலயத்துக்கு முதற்பெரு நாயகராகிய திருநந்திதேவருடைய திருவருளைப்பெற்ற மாணாக்கர்களாகிய சிவயோகிகளில் ஒருவர் அகஸ்தியமகா முனிவரிடத்தே பொருந்திய நண்பினாலே அவன் சிலநாள் இருத்தற்கு அவர் வீற்றிருக்கும் பொதிய மலையை அடைதற்பொருட்டு, திருக்கைலாசத்தை அகன்று வழிக்கொண்டுதிருக்கேதாரம் பசுபதிநேபாளம், காசி,திருக்காளத்தி திருவாலங்காடு காஞ்சீபுரம், திருவதிகை,சிதம்பரம் என்னுந்தலங்களை வணங்கிக் கொண்டு திருவாவடுதுறையை அடைந்து அங்கேசுவாமி தரிசனம் செய்து

கொண்டு இருந்தார் ஒருநாள் அந்தஸ்தலத்தை அகன்று செல்லும்பொழுது காவிரியாற்றங்கரையிலுள்ள புறவிலே பசுக்கூட்டங்கள் அழுதலை எதிரேகண்டார் சாத்தனூரில் இருக்கின்ற இடையனாகிய மூலன் என்பவன் ஒருவன் அவைகளை மேய்க்கின்றவன் அவன் அத்தினத்திலே அவ்விடத்தில் இறந்துகிடந்தான் அப்பசுக்கூட்டங்கள் அவனுடைய சரீரத்தை வந்தணைந்து சுற்றி மிகக் கதறிச் சுழன்றுமோப்பனவாக சிவயோகியார்கண்டு பரமசிவனது திருவருளினாலே இப்பசுக்களுடைய துயரத்தை நீக்கல்வேண்டும் என்று ஆலோசித்து இவ்விடையன் உயிர்பெற்று எழின் அன்றிப்பசுக்கள்துயரம் நீங்காஎன்று திருவுளங்கொண்டு தம்முடைய சரீரத்துக்கு அரண்செய்து தாம் அவ்விடையனுடைய சரீரத்தினுள்ளே பிரவேசித்து திருமூலராய் எழுந்தார் எழவும் பசுக்கள் எல்லாம் நாத்தழும்ப நக்கிமோந்து கனைத்து மிகுந்த களிப்பினாலே வாலெடுத்துத் துள்ளிப் பின்புபோய் மேய்ந்தன திருமூலநாயனார் அதுகண்டு திருவுளமகிழ்ந்து அவைகள் மேயுமிடத்திற் சென்று அவைகளை நன்றாகமேய்ந்தார். சூரியன் அஸ்தமயனமாக பசுக்கள் தத்தங்கன்றுகளை நினைந்து தாமேமுன்பையநடந்து சாத்தனூரைஅடைந்தன சிவயோகியார் அப்பசுக்களுக்கு பின்சென்று அவைகள்எல்லாம் வீடுகள்தோறும் புகநின்றார் மூலனுடைய மனைவி நாயகா இன்றைக்கு மிகதாழ்த்தார். என்று பயங்கொண்டு சென்று சிவயோகியார் நின்ற இடத்தை அடைந்து இவருக்கு ஈனம் அடுத்ததுபோலும் என்று அவருடையசரீரத்தைத் தீண்ட அவர் அதற்கு இசையாராயினார் அவள் அச்சுற்றுமயங்கி என்செய்தீர் என்று தளர திருமூலநாயனார் உனக்கு என்னோடு யாதொரு சம்பந்தமும் இல்லைஎன்று மறுத்து ஒருபொது மடத்தினுள்ளே புகுந்து சிவயோகத்தில் இருந்தார் மனைவி அவ்விரவுமுழுதிலும் நித்திரைகொள்ளாது கவலைகொண்டு இருந்து மற்றநாள் அதனை விவேகிகள் பலருக்குந் தெரிவிக்க அவர்கள்வந்துபார்த்து அவளைநோக்கி இதுபைத்தியம் அன்று வேறு சார்பு உள்ளதும் அன்று இவர்கருத்துச் சிவயோகத்தி னிடத்தேயாம் இனிஇவர் உங்கள் சுற்றவியல்போடு கூடார், என்றார்கள். அவள் அதுகேட்டுத் துயரம் எய்தி மயங்க அவர்கள் அவளைக்கொண்டு அகன்றார்கள் சிவயோகத்தில் இருந்த திருமூல நாயனார் எழுந்து முதனாளிலே பசுக்கள்வந்த வழியேசென்று தாம் சேமித்த சரீரத்தைக் காணாது மெஞ்ஞானத்தை யுடைய சிந்தையினால ஆராய்ந்து பரமசிவன் ஆதிகாலத்திலே தம்முடைய பஞ்சவத் திரத்தினின்றும் தோன்றுவித்த காமிகம் முதலிய சைவாகமங்களிலே பேசப்பட்ட மெய்ப்பொருளைத் தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கு உபயோகமாகும் பொருட்டுத் தம்மைக் கண்டு தமிழினாலே ஒருநூல் செய்வித்தற் பொருட்டு அச்சரீரத்தை மறைத்தருளினார் என்று தெளிந்து திருவருளைத் துதித்து திருவாவடு துறையை அடைந்து அங்குள்ள சிவாலயத்திலே பிரவேசித்து பரம சிவனை வணங்கி, அதற்குப் புறக்கடைப் பக்கத்தில் இருக்கின்ற அரசின் கீழே போய் சிவயோகத்தில் இருந்தார். மூவாயிரம் வரு



ஷமளவு அங்கனம் இருந்து ஒவ்வொருவருஷத்திற்கு ஒவ்வொருதிருப்பாட்டாக மூவாயிரம் திருப்பாட்டினாலே சைவாகமங்களிலே பிரதிபாதிக்கப்பட்ட ஞானம், யோகம், கிரியை, சரியை, என்னும் நான்கு பாதங்களையும் பேசுகின்ற திருமந்திரம் என்னும் தமிழ்நூலைப்பாடியருளி பின் திருக்கைலாசத்தை அடைந்தார்

உ

சிவமயம்.

முப்பத்திரண்டாவது,

தண்டியடிகணாயனார் புராணம்.

(*)

திருவாரூர்வருந்தண்டியடிகள்காட்சிசேராதார்குளந்தொட்டற்சமணர்சீறி
குருடாநீமுன்செவிடுங்கூடிற்றென்றுகுறித்தறியைப்பறித்தெறியக்கொதித்துதங்க
ணருளாலேவிழித்தெலாருமந்தராகவமணர்கலக்கம்பலகண்டவர்கள்பாழிப்
பருவானகர்ப்புறித்தாவிக்கரையுங்கட்டிப்பரனருளாலமருகலம்பற்றினுமர.

சோழநாட்டிலே திருவாரூரிலே தண்டியடிகணாயனார் என்பவர் ஒருவர் இருந்தார் அவர் பிறவிக்குருடர் அவர் தம்முடைய அகக்கண்ணினாலே பரமசிவனைத் தரிசித்து ஸ்தோத்திரம் பண்ணுகின்றவர்கள் எப்பொழுதும் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை மிகுந்த அன்பினோடு ஜபிக்கின்றவர் அந்தத்திருப்பதியிலுள்ள பூங்கோயிலைக் காலந்தோறும் வலஞ்செய்கின்றவர் இப்படி இருக்கும்நாளிலே அவ்வாலயத்துக்கு மேற்றிசையில் இருக்கின்ற திருக்குளம்பக்கம் எங்கும் சமணர்களுடைய பாழிகளாகி இடத்தினாலே குறைவு எய்தினமையால் தண்டியடிகள் அதனை அறிந்து அத்திருக்குளத்தைத் தாம்பெருக்ககல்லல்வேண்டும் என்று நினைந்து அவ்விடத்திற் சென்று குளத்தினுள்ளே கல்லுமிடத்தில் ஒருதறிநட்டு அதிலே கயிறுகட்டி கரையிலும் தறிநட்டு அக்கயிற்றின்நுனியை அதனில் இசைக் கட்டி மண்வெட்டியையுங் கூடையையும் எடுத்து அக்கயிற்றிலே தடவிக்கொண்டு சென்று மண்ணைக் கல்லிக் கூடையில் எடுத்துக்கொண்டு மீண்டும் அக்கயிற்றைத் தடவிப்போய்க் கரையிலே போடுவார் இப்படித் தினந்தோறும் மிகுந்த விருப்பத்துடன் திருக்குளங் கல்லும்பொழுது சமணர்கள் பொறாமைகண்டு அவரை அணைந்து மண்ணைக் கல்லில் பிராணிகள் இறந்துபோம் வருத்தல்வேண்டாம் என்று சொல்ல தண்டியடிகள் அவிவேகிகளே இது மெய்க்கடவுளாகிய பரம

சிவனுக்குச் செய்யும் குற்றமற்ற புண்ணியம் இதன் அருமை உங்களுக்கு விளங்குமா என்றார். அதுகேட்ட சமணர்கள் நாம்சொன்ன தருமமுறையைக்கேட்டாயில்லை நீ கண்ணையன்றிக் காதினையும் இழந்தனையோ என்றுசொல்ல தண்டியடிகள் மந்தபுத்தியும்காணுக்கண்ணும் கேளாச்செவியும் உங்களுக்கே உள்ளன என்றுசொல்லி திரிபுரதகனஞ்செய்தகடவுளுடைய திருவடிகளையேயன்றி வேறொன்றையும் நான் காணேன் அதனையறிதற்கு நீங்கள் அக்கடவுளுடைய திருவருளினால் உலகம் எல்லாம் அறியும்படி என் கண் காணவும் உங்கள் கண் குருடாகவும் பெற்றால் நீங்கள் யாதுசெய்வீர்கள் என்றார் சமணர்கள் நீ உன்கடவுளது அருளினால் கண்பெற்றாயாகில் நாங்கள் இவ்வூரில்இரோம் என்று சொல்லி அவருடைய மண்வெட்டியைப் பறித்து குறித்தறிகளைப் பிடுங்கி எறிந்தார்கள் தண்டியடிகள் மிகக்கோபங்கொண்டு கோயில் வாயிலே சென்று நமஸ்கரித்து சுவாமீ இன்றைக்குத் தேவரீரை நிந்தனை செய்யும் அதிபாதகர்களாகிய சமணர்கள் திருக்குளங் கல்லுதலாகிய சிவபுண்ணியத்தையும் அதனைச்செய்யப் பெற்ற அடியேனையும் அவமானஞ்செய்தமையால் அடியேன் அதுபொறாது மிக வருந்துகின்றேன் சர்வசாமர்த்தியம் உள்ள தேவரீர் இவ்வருத்தத்தை நீக்கியருளல்வேண்டும் என்று பிரார்த்தித்து நமஸ்காரஞ்செய்து தம்முடைய திருமடத்திற் சென்று அழுதுகொண்டு இருந்தார். அன்றிரவு அவர் நித்திரைசெய்யும் பொழுது பரமசிவன் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி தண்டியே உன் கவலையை ஒழி நாளைக்கு உன் கண் காணவும் அந்தச் சமணர்களுடைய கண்கள் மறையவும் அருள்செய்வோம் பயப்படாதொழி என்று அருளிச்செய்து சோழராசாவுக்கும் சொப்பனத்திலே தோன்றி தண்டி என்பவன் நமக்குக் குளங்கல்ல சமணர்கள் அதுகண்டு பொறாது அப்பணிக்கு விக்கினஞ்செய்தனர் நீ அவனிடத்திலே சென்று அவன்கருத்தை முடிப்பாய் என்று ஆஞ்ஞாபித்து மறைந்தருளினார். சோழராஜா விழித்து எழுந்து பரமசிவனை ஸ்தோத்திரஞ்செய்து சூரியன் உதித்தபின் தண்டியடிகளை அடைந்து தான்கண்ட சொப்பனத்தைச் சொல்ல தண்டியடிகள் மகாராஜரே நான் திருக்குளங் கல்லும்போது சமணர்கள் வந்து அதுதருமம் அன்றென்று பலசொல்லி நான்நட்ட குறித்தறிகளைப்பிடுங்கி என்னை வலிசெய்து மண்வெட்டியைப் பறித்துக் கொண்டார்கள் இன்னும் நீ கண்ணையன்றிக் காதினையும் இழந்தனையோ என்றார்கள் அதற்கு நான் எங்கள் பரமசிவனது திருவருளினால் என்கண்காணவும் உங்கள் கண்கள் மறையவும் பெற்றால் நீங்கள் யாது செய்வீர்கள் என்றுகேட்க நாங்கள் இந்தஊரில் இரோம் என்று ஒட்டினார்கள் இனி நிகழ்வதைக்கண்டு நீர் இந்த வழக்கை முடித்தல் வேண்டும் என்றார். அப்பொழுது அரசன் சமணர்களை அங்கே அழைத்துக் கேட்கஅவர்கள் அதற்குஉடன்பட்டார்கள். அதுகண்டுதண்டியடிகள்முன் செல்ல அரசன்பின்சென்று திருக்குளக்கரையிலே நின்றுதண்டியடிகளை



நோக்கி சிவபத்தரே நீர்பரமசிவனது திருவருளினாலே கண்பெறுதலைக் காட்டும் என்று சொல்ல தண்டியடிகள் பரமசிவனேமெய்க்கடவுளுஞ்சிறியேன் அவருக்கு அடியேனும் ஆயில் இவ்வரசருக்கு முன்னே நான்கண் பெற்றுச்சமணர்கள்கண் இழப்பர்கள் என்றுசொல்லிஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டு திருக்குளத்திலே முழுகிகண்பெற்று எழுந்தார் சமணர்களோ கண்இழந்து தடுமாறினார்கள் அதுகண்ட அரசன் தன் ஏவலாளரை நோக்கி தண்டியடிகளுடனே ஒட்டிக்கெட்டசமணர்களைத் திருவாரூரினின்றும் அகன்றுபோம்படி துரத்துங்கள் என்று ஆஞ்ஞாபிக்க அவர்கள் அவ்வாறே துரத்தவும் சமணர்கள் கண்காணாமையால்மன ங்கலங்கி குழியிலே விழுவார்கள் கோலும் இல்லையே என்பார்கள் இதுவழி என்று தூற்றை அடைவாகள் பொய்ப்பொருளை மெய்ப்பொருளெனக்கொண்டு அழிந்தோம் என்பார்கள் பாய்களை இழப்பார்கள்பீலிகளைத் தடவிக்காணாமல் திரும்புவார்கள் மயங்கி நிற்பார்கள் காலும் கையும் முறியக்கற்களின்மேல் இடறி விழுவார்கள் மிகநெருங்கி ஒருவரை ஒருவர் முட்டிக்கொள்வார்கள் ஓடுதற்கு வழியறியாது மயங்குவார்கள் இந்தப்பிரகாரம் சமணர்கள் கலக்கங்கண்டு ஓடத்துரத்திய பின்னர்சோழராஜா சமணர்களுடைய பாழிகளையும் பள்ளிகளையும் பறித்து திருக்குளத்துக்கு கரைகட்டிமனமகிழ்ந்து தண்டியடிகளை வணங்கிக்கொண்டு போயினான் அவர் பரமசிவனைத் தியானித்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஜபித்துதிருத்தொண்டு செய்துகொண்டிருந்து சிவபதம் அடைந்தார்.

உ

சிவமயம்.

முப்பத்துமூன்றுவது,

மூர்க்கநாயனார் புராணம்.

தொண்டவள நாட்டுவளர்வேர் காட்டூர்வாழ் தொல்லுழவர்நற்கு ஞர்சூதுவென்று, கொண்டபொருள் கொண்டன்பார்க்கமுதளிக்குங்கொள்கையினார் திருக்குடந்தை குறுயுகிள்வார், விண்டிசைவுகுழறு மொழி வீணர்மாட வெகுண்டிடலான் மூர்க்கரெனவிளம்புநாம மெண்டிசையுமிக வுடையாரண்டர் போற்மேழுலகு முடனாளுமியல்பினாரே.

தொண்டை நாட்டிலே திருவேற்காட்டிலே வேளாளர் குலத்திலே தலைமைபெற்ற ஒருவர்தினந்தோறும் சிவனடியார்களைச் சிவனெனவணங்கித் துதித்து அமுது செய்வித்துப் பின் தாம் உண்பவரும் அவர்கள்

விரும்பும் பொருள்களையும் கொடுப்பவருமாய் இருந்தார் இப்படி இருக்கும்நாளிலே அடியார்கள் அனேகர் வருகின்றமையால் அவர் தம்மிடத்துள்ள திரவியங்கள் எல்லாம் செலவாகிவிட அடிமை நிலம் முதலியனவற்றை விற்றும் மகேசுரபூசையை வழுவாது மனமகிழ்ச்சியோடு செய்துவந்தார். அதன்பின் மகேசுர பூசைச்செலவுக்கு பொருள் இன்மையால் கவலைகொண்டு தாம் முன்னே பயின்ற சூதினாலே பொருள் சம்பாதிக்கநினைந்து அவ்வூரிலே சூதாடுவோர் இல்லாமைபற்றி அவ்வூரை அகன்று சிவஸ்தலங்கள் தோறுஞ்சென்று சுவாமி தரிசனஞ்செய்து சூதாடலால் வரும் பொருளினாலே தம்முடைய நியதியை முடித்து சிலநாளிலே கும்பகோணத்தை அடைந்தார். அங்கே சூதாடி பொருள்தேடி மகேசுரபூசைசெய்தார், சூதிலே முதலாட்டத்திலே தாம்தோற்று பின் ஆட்டங்களிலே பலமுறையும் வென்று அதனாலே பொருள் ஆக்கி சூதிலே மறுத்தவர்களை உடைவாளை உருவிக்குத்தி நற்சூதர் மூக்கர் என்னும் பெயர்களை பெற்றார். சூதினாலே வரும்பொருளைத் திருவமுது ஆக்குவோர்கள் கொள்ள தாம் தீண்டார் அடியார்கள் அமுதுசெய்தபின் தாம் கடைப்பந்தியிலே அமுதுசெய்வாராயினார் இவர் இப்படிச்சிலகாலம் மகேசுரபூசை செய்துகொண்டிருந்து அந்த மகத்தாகிய சிவபுண்ணியத்தினாலே சிவபதம் அடைந்தார்.

உ

சிவமயம்.

முப்பத்துநான்காவது,

சோமாசிமாறநாயனார் புராணம்.

அம்பர்நகரந்தணர் சோமாசிமாற ரன்பர்களாம்யாவர்க்கு மன்பினமுதளிப்பா, ரும்பர்நிகழ்வகை யாகம்பலவுஞ் செய்யுமுண்மையினாரைந் தெழுத்துமோவாநாவார், நம்பர்நிகழ் திருவாரூர்நயந்துபோற்றுநாவலர்கோனடிபரவுநன்மையாலே, யிம்பர்தொழவும்பர் டணிந்தேத்தமேலையே மூலகுமுடனாரு மியல்பினாரே.

சோழமண்டலத்திலே திருவம்பரிலே பிராமணர்குலத்திலேசோமாசிமாறநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார் அவர் பரமசிவனது ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை மிகுந்த அன்பினோடு ஜபித்தலை நித்திய நியமம் எனக்கொண்டவர் எந்த குலத்தினராயினும் எந்த குணத்தினராயினும் பரமசிவன்மேல் அன்புடையவர்களாயில் அவர்களே நம்மை ஆள்பவர் என்னும்மெய்யறிவினை உடையவர் அவ்வன்பர்கள் தம்முடைய வீட்டுக்கு வந்தால் அவர்களை எதிர்கொண்டு வணங்கித் திருவமுது செயவிப்பவர் பரமசிவனுக்குப் பிரீதியாகிய யாகங்களை புகழ்பயன் முதலியன கருதாது நிஷ்காமியமாக வேதவிதிப்படி செய்பவர் அவர் திருவாரூரில் சென்றுசைவசமயாசாரியராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளை அடைந்து அவருடைய திருவடிகளை பத்திபண்ணி அதனாலே சிவபதத்தைப் பெற்றார்.





உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஆருவது,

வார்கொண்டவனமுலையாள் சருக்கம்.


முப்பத்தைந்தாவது,

சாக்கியநாயனார் புராணம்.

சங்கமங்கைவரும் வேளாண்டலைவர் காஞ்சிச்சாக்கியரோடியைந்த
வர்தந்தவருஞ்சைவத்துங்கமலிபொருளு முணர்ந்தந்தவேடந்துறவாதே
சிவலிங்கந் தொழுவோர்கண்டோ, ரங்கன்மலர்திருமேனியழுந்தச் சாத்
தியமருநாண்மறந் தொருநாளருந்தாதோடிச், செங்கலெறிந்திடுமளவின்
மகிழ்ந்தநாதன் றிருவருளாலமருலகஞ் சேர்ந்துளாரே.

திருச்சங்கமங்கையிலே வேளாளர்குலத்திலே உதித்த ஒருவர்ஜனனமரணத்துன்பங்களை நினைந்து நினைந்து கவலைகொண்டு அவைகளினின்று நீங்கும் நெறியாதுஎன்று ஆராய்வராயினர். அந்நாளிலேகாஞ்சிபுரத்தை அடைந்து பௌத்தர்களை அணுகி அவர்கள் அனுசரிக்கும் பௌத்தசமயத்திலே பிரவேசித்து அச்சமயநூல்களைஓதிஅவற்றின்பொருள்களைஆராய்ந்தார். ஆராய்ந்தபொழுது அச்சமயம்சற்சமயம் அன்றுஎன்பது அவருக்குதெள்ளிதிற்புலப்பட்டது அதுபோல மற்றைச் சமயநூல்களையும் ஆராய்ந்து அவைகளும் மெய்அன்று எனத்தெளிந்து பரமசிவனது திருவருள் கூடுதலால் அறிவிக்கஅறியும்சித்தாகிய ஆன்மாக்களும் அவ்வான்மாக்களினாலே செய்யப்படும் ஜடமாகிய புண்ணியம்பாவம்என்னும் கர்மங்களும் அக்கர்மங்களாலே பெறப்படும் சுகம்துக்கம் என்னும் பலங்களும் அப்பலங்களைக் கொடுக்கின்றதானே அறியும்சித்தாகிய பதியும் எனப்பொருள்கள் நான்கு என்றும் அவைகளைப் பூர்வோத்திரவிரோதமின்றியதார்த்தமாக உணர்த்தும் நூல்சைவசமயநூலே என்றும் அந்நூல் உணர்த்தும்பதிபரமசிவனே என்றும் அறிந்துகொண்டார்எந்த

நிலையிலே நின்றாலும் எந்தவேஷத்தை எடுத்தாலும் பரமசிவனுடைய திருவடிகளை மறவாமையே பொருளென்றுகருதி தாமெடுத்த பௌத்த வேஷத்தைத் துறவாமல் பரமசிவனையிருந்த அன்பினோடு இடைவிடாது தியானஞ்செய்வாராயினர் சிவசாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்திசாதாக்கியம் கத்துருசாதாக்கியம் கர்மசாதாக்கியம் என்னும் பஞ்ச சாதாக்கியங்களுள் கர்மசாதாக்கியமாகிய சிவலிங்கத்தின் மகிமையை உணர்ந்து தினந்தோறும் சிவலிங்கதரிசனம் செய்துகொண்டே போசனம்பண்ணல்வேண்டும் என்றுவிரும்பி சமீபத்தில் ஓர்வெளியிடையிலிருக்கின்ற சிவலிங்கத்தைத் தரிசித்து அத்தியந்த ஆனந்தம் உள்ளவராகி தாம்செய்யும்செயல் இதென அறியாது அருகிலேகிடந்த ஒருசெங்கல்லைக்கண்டு அதைப்பதைப்பினுடனே எடுத்து அச்சிவலிங்கத்தின் மேல் எறிந்தார். சிறுபிள்ளைகள்செய்யும் இகழ்வாகிய செய்கைகளும் தந்தையார்களுக்குப் பிரீதியாமாறுபோல அந்தச்சாக்கியநாயனாருடைய செய்கையும்பரமசிவனுக்கும் பிரீதியாயிற்று அந்நாயனார் அன்றுபோய் மற்றைநாள் அந்நியமத்தை முடித்தற்குஅணைந்தபொழுது முதனாளிலேதாம் சிவலிங்கத்தின்மேற் கல்லெறிந்த குறிப்பையுன்னி ஆலோசித்து நேற்று எனக்கு இவ்வெண்ணம் வந்ததுபரமசிவனது திருவருளேயென்று துணிந்து அதனையே திருத்தொண்டாக நினைந்து எப்பொழுதும் அப்படியே செய்யக்கருதினர் எல்லாச்செயல்களும் சிவன்செயல் என்றேதெளிந்தமையால் அந்நியதியை தினந்தோறும் வழுவாமல் அன்பினுடன்செய்ய அதுஆன்மாக்கள்தோறும் வியாபித்திருந்து எல்லாவற்றையும் உணரும் பரமசிவனுக்கு மிகச்சிறந்த திருத்தொண்டாகி முடிந்தது ஒருநாள் அந்நாயனார்திருவருளினாலே மறந்துபோசனஞ் செய்யப்புகும்பொழுதின்றைக்குளங்கள் சுவாமியை எறியாமல் மறந்துவிட்டேன் என்று எழுந்து அத்தியந்த ஆசையுடன் மிகவிரைந்து புறப்பட்டு சிவலிங்கத்தை அணைந்து ஒருகல்லை எடுத்து அதன்மேல் எறியபத்திவலையிற் படுவாராகியபரமசிவன் உமாதேவியாரோடு இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றி அவரைத் தமதுதிருவடியிலே சேர்த்தருளினர்.





உ

சிவமயம்.

முப்பத்தாருவது,

சிறப்புலிநாயனார் புராணம்.

திருவாக்கூரருமறைபோ ருலகமேத்துஞ் சிறப்புலியார்மறப்புலியா ருரிமேற்செங்க, ணரவார்த்தூதருமேற்றூர்க் கன்பராஞர்க்கமுதளிப்பா ரொனிவெண்ணீறணிந்தமார்பர், பெருவாக்கான்மறைபரவி யாகம்போற் றும்பெற்றியினைரைந்தெழுத்தும்பிறழாதோதிக், கருவாக்காவிரைவள்ளு ளிணைகள்சேர்ந்த கருத்தினரெனை யாவுந்திருத்தினரே.

சோழநாட்டிலே திருவாக்கூரிலே பிராமணர் குலத்திலே சிறப்புலி நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார் அவர்சிவனடியார்கள் வந்தபொழு து அவர்களை நமஸ்கரித்து இன்சொற்களைச்சொல்லி அவர்களை அமுது செய்வித்து அவர்களுக்கு வேண்டும் திரவியங்கள் எல்லாவற்றையும் கொடுக்கின்றவர் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை அன்பினேடு ஜபிக்கின்றவர் பரம சிவனைக்குறித்து யாகங்கள் செய்கின்றவர் அவர் இன்னும் பல சிவபுண் ணியங்களைச் செய்துகொண்டு இருந்து சிவபதம் அடைந்தார்.

உ

சிவமயம்.

முப்பத்தேழாவது,

சிறுத்தொண்ட நாயனார் புராணம்.

பல்குமருத்து ரதிபர்செங்காட்டங் குடிவாழ் படைத்தலைவ ரமுத ளிக்கும்பரஞ்சோதியார்மேய்ச், செல்வமிகுசிறுத்தொண்டர்காழிநாடன் றிருவருள்சேர்ந்தவர்வளருஞ் சீராளன்றனை, நல்குதிருவெண்காட்டு ந ங்கைசமைத்திடப் பின்னன்பதிச்சந்தனத் தாதிதலைக்கறியிட்டுதவப், பு ல்கவரும்வயிரவர்தாமகிழ்ந்து மகவருளப்போற்றியவர் சிவனருளேபொ ருந்தினரே.

சோழமண்டலத்திலே திருச்செங்காட்டங் குடியிலே ஆமாத்தியர் குலத்திலே பரஞ்சோதியார் என்பவர் ஒருவர்இருந்தார். அவர் ஆயுள் வேதங்களிலும் படைக்கலத் தொழில்களிலும் குதிரையேற்றம் யானை யேற்றங்களிலும் மிகச்சிறந்தவர் வேதாகமங்களை மெய்ப்பொருளை அறி தல்வேண்டும் என்னும் அவாவினேடு திருவருளை முன்னிட்டுப் பரிட்சித் தமையால் பரமசிவனே மெய்க்கடவுள் என்றும் அவருடைய திருவடிக ளை அடைதலே முத்திநெறியென்றும் தெளிந்து அவருடைய திருவடிக ளை அகோராத்திரம் இடைவிடாது அன்பினேடு தியானிப்பவர் சிவனடி யார்களுக்கு எக்காலமுந் திருத்தொண்டு செய்பவர் அவர் அரசனிடத் திலே அணுக்கராகி அவன்பொருட்டு யானை செலுத்திக்கொண்டு சென்

று அவனோடு மாறுபட்ட பல அரசர்களை வென்று அவர்கள்தேசங்களைக் கைபற்றி அவனால் நன்கு மதிக்கப்பட்டவர் ஒருமுறை உத்தரதேசத்திலே வாதாவி என்னும் நகரத்திற்சென்று அதனைவென்று பலவகை இரத்தினங்களும் நிதிக்குவைகளும் யானைக்கூட்டங்களும் குதிரைக்கூட்டங்களும் அரசனுக்கு முன்கொண்டு வந்தார். அதுகண்டு அரசன் அவருடைய யானையேற்றத்தின் வலிமையை அதிசயத்துப் புகழ்ந்துபேச அவரை அறிந்த மந்திரிகள் அரசனைநோக்கி மகாராஜரே இவர் பரமசிவனுக்குத் திருத்தொண்டு செய்கையால் இவ்வுலகத்திலே இவருக்கு எதிராவார் ஒருவருமில்லை என்றார்கள். அரசன் அதைக்கேட்டு அஞ்சி நடு நடுங்கி இரண்டு கண்களினின்றும் சோகபாஷ்பஞ்சொரிய இவர் எங்கள் கடவுளாகிய பரமசிவனுடைய திருத்தொண்டர்என்பதை உணராதுகொடிய போர்முனையிலே விட்டிருந்தேன் ஐயையோ இதுஎவ்வளவு கொடியபாவம் என்றுசொல்லி பின்பு பரஞ்சோதியாரைநோக்கி சுவாமீ இக்குற்றத்தைப் பொருத்தருளல் வேண்டும்என்று பிரார்த்தித்து நமஸ்கரித்தான் பரஞ்சோதியார் அரசன் தம்மை நமஸ்கரித்தற்கு முன்தாம் அவனை நமஸ்கரித்து மகாராஜரே நான் எனது உரிமைத்தொழிற்கு அடுத்த திறத்தைச்செய்தேன் அதனாலே என்னதீங்கு என்றார். அரசன் அவருக்கு நிறைந்த நிதிக்குவைகளையும் விருத்திகளையும் கொடுத்து நீர் உம்முடைய நிலைமையை நான் அறியாவண்ணம்நடத்திக்கொண்டு வந்தீர் இனி என் மனக்கருத்துக்கு இசைந்து எனக்குப் பணிசெய்தலை ஒழிந்து நீர் விரும்பியவாறே சிவனுக்கும் சிவனடியார்களுக்கும் வெளிப்படத் திருத்தொண்டு செய்யும் என்று விடைகொடுத்தான் பரஞ்சோதியார் விடைபெற்றுக்கொண்டு தம்முடைய திருப்பதியிற் சென்று கணபதீச்சரத்தில் வீற்றிருக்கின்ற கடவுளை வணங்கி அவருக்குத் திருத் தொண்டுகளை வழுவாது செய்வாராயினர் திருவெண்காட்டு நங்கையார் என்னும் மங்கையாரோடுகூடி இல்லறத்தில் வாழ்ந்திருந்து நாடோறும் முன்னே சிவனடியார்களைத் திருவமுதுசெய்வித்து பின் தாம் உண்பார் சிவனடியார்களை மிகுந்த அன்பினோடு வழிபட்டு அவர்கள் திருமுன்பே மிகச் சிறியராய் ஒழுகின்றமையால் அவருக்குச் சிறுத்தொண்டர் என்னும் பெயர் கொடுக்கப்பட்டது. கணபதீச்சுரருடைய திருவருளினாலே அவருக்குத் திருவெண்காட்டு நங்கையாரிடத்திலே சீராளதேவர் என்னும் புத்திரர் அவதரித்தார். அப்பிள்ளைக்கு ஐந்துவயதிலே வித்தியாரம்பஞ் செய்வித்தார். அந்நாளிலே அத்திருப்பதிக்கு எழுந்தருளிவந்த திருஞானசம்பந்தப்பிள்ளையாரை எதிர்கொண்டு அழைத்து அவரைவணங்கித் துதித்து அவருடையதிருப்பதிகத்திலே சிறப்பித்துப் பாடப்பெற்றார்.

பரமசிவன் சிறுத்தொண்டநாயனாருடைய மெய்யன்பை நுகர்ந்தருளுதற்குத் திருவுளங்கொண்டு உட்சமயங்கள் ஆறனுள் ஒன்றாகிய வைரவத்துக்கு உரியதிருவேடங்கொண்டுதிருக்கைலாசத்தினின்றும்நீங்கிதிருச்

செங்காட்டங் குடியை அடைந்து சிறுத்தொண்ட நாயனாருடைய வீட்
டு வாயிலிற்சென்று சிறுத்தொண்டர் வீட்டில் இருக்கின்றாரோ என்று
வினவ தா .யாகிய சந்தன நங்கையார் முன்வந்து வணங்கிசுவாமீ
அவர் சிவனடியார்களைத்தேடிப் புறத்தே போய்விட்டார். தேவரீர் உள்
ள எழுந்தருளும் என்றார். அதற்கு வைரவர்பெண்கள் இருக்குமிடத்
தில் நாம் தனியேபுகோம் என்று அருளிச்செய்ய திருவெண்காட்டு நங்
கையார் அதைக்கேட்டு இவ்வடியவர் போய்விடுவார்போலும் என்று
பயந்து விரைந்து வந்து சுவாமீ அடியேனுடைய நாயகர் எப்போதும்
சிவனடியாரை அமுது செய்விப்பவர் இன்றைக்கு ஒருவரையுங் காணா
மையால் தேடிப்போயினார் தேவரீருடைய திருவேடத்தைக் கண்டாரா
யில் மிக மகிழ்வர் இனித்தாழார் இப்பொழுதே வந்துவிடுவார் எழுந்
தருளியிரும் என்று விண்ணப்பஞ்செய்ய வைரவர் நாம் உத்தரதேசத்தி
லுள்ளேம் சிறுத்தொண்டனைக்காணவந்தோம் எப்படியும் அவர் இல்
லாதபோது நாம் இங்கே இரோம் கணபதீச்சரத்தில் உள்ள திருவாத்தி
மரத்தின்கீழ் இருககின்றோம் அவர் வந்த பாத்திரத்தே அவருக்குத்
தெரிவியுங்கள் என்றுசொல்லி திருவாத்தியை அணைந்து அதன்கீழ்
இருந்தருளினார் சிறுத்தொண்டநாயனார் சிவனடியார்களைத் தேடி எங்
குங்காணாது வீட்டுக்குத் திரும்பிவந்து மனைவியாருக்குச் சொல்லித்
துக்கித்தார். மனைவியார் உத்தரதேச வாசியாகிய ஒருவைரவர் இங்கு
வந்து நாங்கள் இங்கே எழுந்தருளியிருக்கும்படி சொல்ல அதுகேளா
கணபதீச்சரத்தில் உள்ள திருவாத்தியின் கீழேபோய் இருக்கின்றனர்
என்றார் உடனே சிறுத்தொண்டர் மிகுந்த விருப்பத்தோடு விரைந்து
சென்று அவரைக்கண்டு வணங்கிநிற்க அவர்பெரிய சிறுத்தொண்டர்
நீரோ என்று திருவாய்மலர்ந்தருளினார் சிறுத்தொண்டர் அவரை வண
ங்கி சுவாமீ சிவனடியார்கள் தங்கள் கருணைமேலீட்டினாலே அடியேனை
யே அப்படி அருளிச்செய்வார்கள். அதுநிற்க இன்றைக்குத் திருவமுது
செய்வித்தற்குச் சிவனடியார்களைத்தேடியும் கண்டிலேன் இப்போது
அடியேன்செய்த புண்ணியத்தினாலே தேவரீரைக் கண்டேன் தேவரீர்
அடியேன் வீட்டுக்கு எழுந்தருளி திருவமுது செய்யவேண்டும் என்று
விண்ணப்பஞ்செய்ய வைரவர் அன்பரே நாம் உத்தரதேசத்தில் உள்
ளேம் உம்மைக்காணவந்தோம் நம்மை அமுதுசெய்வித்தல் உம்மால்முடி
யாது அதுமிக அருமைஎன்றார் சிறுத்தொண்டர் தேவரீர் அமுதுசெய்
யும் இயல்பை அருளிச்செய்யும் சீக்கிரமாகபாகம் பண்ணுவிப்பேன்சி
வனடியார்கள் தலைப்படின் தேடுதற்கு அரியனவும் எளியனவாம் என்
று சொல்லவைரவர் நாம் ஆறுமாசத்துக்கு ஒருமுறை பசுவைக்கொன்
று உண்போம் அதற்கு உரியநாளும் இந்நாளேயாம் அப்படி யூட்டுதல்
உம்மாலியலாவது என்றார். சிறுத்தொண்டர் மிக நன்று அடியேன் அ
னேகம் பசுக்களை உடையேன் தேவரீருக்குப் பிரீதியாகிய பசு இன்னது
என்று அருளிச்செய்வீராகில் அடியேன் விரைந்துசென்று பாகம்பண்
ணுவித்துக்காலம் தாழ்க்காமல் வருவேன்என்று சொல்ல வைரவர் நாம்
உண்பது நரபசி அது ஐந்துவயசினை உடையதாயும் அவயவப் பழுதில்

லாததாயும் ஒரு குடிக்குத் தான் ஒன்றேயாயும் இருக்கவேவேண்டும் அப்படிப்பட்ட சிறுவனை மனமகிழ்ச்சியோடு தாய்பிடிக்கத் தந்தை அரிதல்வேண்டும் இப்படிசமைக்கப்பட்ட கறியே நாம்இட்டு உண்பேம் என்றார் சிறுத்தொண்டர் தேவரீர் அமுதுசெய்வீராகில் அடியேனுக்கு இதுவும் அரிதன்று என்றுசொல்லி அவரை வணங்கி விடை பெற்றுக் கொண்டு வீட்டுக்குப் போயினர் சிறுத்தொண்டருடைய வரவைநோக்கி நின்றமனைவியார அவருடைய மலர்ந்த முகத்தைக்கண்டு அவரை வணங்கி அடியாருடைய செய்கையை வினவி அவர் மனைவியாரைநோக்கி ஒரு குடிக்கு ஓரே சிறுவனாகிய ஐந்து வயசு உடையனுமாய் அவயவப் பழுதில்லாதவனுமாய் இருக்கும் பிள்ளையை மனமகிழ்ச்சியோடு தாய் பிடிக்கத் தந்தையறிந்து சமைத்தால் அமுதுசெய்வதற்கு உடன்பட்டனர் என்றார். அப்பொழுதுமனைவியார் அவ்வடியவர் விரும்பியபடி அமுதுசெய்விக்கும் பொருட்டு ஒருகுடிக்கு ஒருவனாஞ் சிறுவனைப் பெருமாறு எங்ஙனம் என்றுசொல்ல சிறுத்தொண்டர் என்பிராணநாயகியே இத்திறத்துச் சிறுவரை வேண்டிய திரவியங்களைக் கொடுத்தால் தருவாருளராயினும் நேர்நின்று அச்சிறுவனை அரியத்துணியுந் தந்தையாரோ இல்லை இனித்தாழாமல் நாம்பெற்ற சிறுவனையே அழைப்போம் என்றார் மனைவியார் அதற்கு இசைந்து எங்களைக் காக்கும்பொருட்டு அவதரித்த புதல்வனைப் பள்ளிக்கூடத்தினின்றும் அழைத்துக்கொண்டு வாரும் என்றுசொல்ல சிறுத்தொண்டர் மனமகிழ்ச்சியோடு பள்ளிக்கூடத்துக்கு விரைந்து சென்று தம்முடைய புதல்வராகிய சீராளதேவரை எடுத்துத் தோண்மேல் வைத்துக்கொண்டு வீட்டிற்குத் திரும்பிவந்தார். மனைவியார் எதிர்வந்து புதல்வரைவாங்கி திருமஞ்சனம் ஆட்டி கோலஞ்செய்து நாயகர் கையிற்கொடுத்தார் அவர் அடுக்களையிற் செல்லாது உலகத்தவர்ர்ள் அறியாவண்ணம் ஓர் மறைவிடத்திற் கொண்டு போனார் அப்பிள்ளையைப் பெற்ற தாயார் பாத்திரங்களைக் கழுவிக்கொண்டு வந்தார் தந்தையார் புதல்வரை எடுத்து அவருடைய தலையைப்பிடிக்க தாயார் அப்புதல்வருடைய இரண்டுகால்களையும் தம்முடைய மடியிலேயிடுக்கி அவர்கைகள் இரண்டையும் தம்முடைய கைகளினாலே பிடிக்க அப்புதல்வர் தம்முடைய தந்தைதாயார் மிக மகிழ்கின்றனர் என்று மகிழ்ந்து நகைசெய்ய தந்தைதாயார் மனமகிழ்ச்சியோடு ஆயுதத்தினாலே அவருடைய தலையை அரிதலாகிய அரிய செய்கையைச் செய்தார் அறுத்த தலையின் இறைச்சி திருவமுதுக்கு ஆகாது என்று கழித்து அதனைமறைத்து நீக்கும்பொருட்டு சந்தனநங்கையார் கையில்கொடுத்து மற்றை யுறுப்புகளின் இறைச்சிகள் எல்லாவற்றையும் அறுத்துப்பாகம் பண்ணி வேறுகறிகளும் அமைத்து சோறும்சமைத்து நாயகருக்குத் தெரிவித்தார். நாயகராகிய சிறுத்தொண்டர்பெருங்களிப்புடையராகி, விரைந்து சென்று திருவாத்தியின்கீழ் இருந்த வைரவரைவணங்கி சுவாமி தேவரீர் பிரியப்படி பாகம்பண்ணுவித்தேன் எழுந்தருளிவந்து திருவமுது செய்தரு

ளல்வேண்டும் என்றுவிண்ணப்பஞ்செய்து அவரை வீட்டுக்குஅழைத்துக்கொண்டுபோய், அசனத்தில்இருத்தி அவருடையதிருவடிகளை ஜலத்தினால்விளக்கி அந்தத்தீர்த்தத்தைத் தங்கள் சிரசின்மேலே தெளித்து வீடெங்கும் புரோக்ஷித்து தூபதீபங்களாலே அருச்சித்து வணங்கினார் மனைவியாராகிய திருவெண்காட்டு நங்கையார் பரிகலந்திருத்தி, அன்னமும் கறியமுதும் படைத்தார் வைரவர் அதைப்பார்த்து நாம் சொல்லியமுறையே கொன்ற பசுவினது உறுப்புகள் எல்லாவற்றையும் பாகம்பண்ணினீரா? என்றுவினவ திருவெண்காட்டு நங்கையார் தலைஇறைச்சி மாத்திரம் திருவமுதுக்கு ஆகாது என்று கழித்துவிட்டோம் என்றார், வைரவர் அதுவும்நாம் உண்பது என்றார் அதுகேட்டு சிறுத்தொண்டர் மனைவியாரோடும் திகைத்து அயர சந்தனநங்கையார் நான் அத்தலை இறைச்சியை அடியவர் அமுதுசெய்யும்பொழுது நினைக்கவரும் என்று முன்னமே பாகம்பண்ணி வைத்தேன்என்று எடுத்துக்கொடுக்க திருவெண்காட்டு நங்கையார் முகமலர்ந்து வாங்கிப்படைத்தார். அதன்பின் வைரவர் சிறுத்தொண்டரை நோக்கி நாம் தனியே உண்ணோம் சிவனடியார்களைக்கொண்டுவாரும் என்றுஅருளிச்செய்ய சிறுத்தொண்டர் ஏங்கி ஐயோ அடியவர் திருவமுதுசெய்தற்கு இடையூறுஇதுவே என்று நினைந்து வீட்டுக்குப் புறத்திலேபோய் சிவனடியார்களைத் தேடிக்காணாது துக்கத்தோடு வந்து வைரவரை வணங்கி சுவாமீ சிவனடியார்களைக் காணேன் அடியேன் திருநீறு இடுவாரைக்காணேன் அடியேன் திருநீறு இடுவாரைக்கண்டு அன்னங்கொடுப்பேன் என்று விண்ணப்பஞ்செய்ய வைரவர் சிறுத்தொண்டரை நோக்கி உம்மைப்போலத் திருநீறுஇட்டார் உளரோ நீர்இருந்து உண்ணும் என்று சொல்லி பின் திருவெண்காட்டு நங்கையாரை நோக்கி, இவருக்குச் சோறுங்கறியும் படையும் என்று அருளிச்செய்ய அவரும்படைத்தார் சிறுத்தொண்டர் வைரவரை ஊட்ட வேண்டி உண்ணப்புகலும் வைரவர் தடுத்தருளி ஆறுமாசத்துக்கு ஒருமுறை உண்ணுகின்ற நாம் உண்ணுமளவும் தரியாமல் எப்பொழுதும் உண்கின்றநீர் முன்உண்பது என் உம்முடன்உண்ணும்பொருட்டு உமக்குப்புத்திரன் உண்டேல் அழையும்என்றார் சிறுத்தொண்டர் இப்போது அவன் உதவான்என்றுசொல்ல வைரவர் அவன்வந்தாற்றான் நாம் உண்பேம் தேடிஅழையும் என்றார் சிறுத்தொண்டர் தரியாதுஎழுந்துமனைவியாரோடு விரைந்து வீட்டுக்குப் புறத்திலேபோய் புதல்வனே வா என்று அழைக்க மனைவியாரும் நாயகரதுபணியில் நிற்பாராகி சீராளனே சிவனடியார் அடியேங்கள்உய்யும்பொருட்டு உடனுண்ணஉன்னை அழைக்கின்றார் வாஎன்று அழைத்தார் அபபொழுது அப்புதல்வர் பரமசிவனது திருவருளினாலே பள்ளிக்கூடத்தினின்று ஓடி வருபவர்போல வந்தார்.

தாயார் அவரைஎடுத்துத்தழுவி நாயகர்கையிற்கொடுக்க அவர் இனிச் சிவனடியார் அமுதுசெய்யப் பெற்றேம் என்று மனமிகமகிழ்ந்து அப்புதல்வரை விரைவிற்கொண்டு அடியவரை அமுது செய்வித்தற்கு

உள்ளேவந்தார் அதற்குமுன் வைரவர் மறைந்தருள சிறுத்தொண்டர் அவரைக் காணுமையால் மனங்கலங்கித் திகைத்துவிழுந்தார் கலத்திலே இறைச்சிக்கறி யமுதைக் காணுமையால் அச்சமுற்றூர் வைரவர் அடியேங்கள் உய்யும்பொருட்டுத் திருவமுதுசெய்யாமல் எங்கேஒளித்தனரோ என்று தேடிமயக்கங்கொண்டு புறத்திற்செல்ல அச்சிறுத்தொண்டர்செய்தது நிஷேதாநுட்டானமாயினும் அவர் சிவானந்தாநுபவ மேலிட்டு நிற்கையால் கருவிகரணங்கள் தற்போதச்சீவிப்பாய் எழுந்து செய்தமைபற்றி அதனை விகிதாநுட்டானமாகவே கொண்டருளிய பரமசிவன் அரிபிரமேந்திராதி தேவர்கள் முதலாயினோர் சேவிக்க உமாதேவியோடும் சுப்பிரமண்ணியசுவாமியோடும் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருளினர், சிறுத்தொண்டரும் மனைவியாரும் புதல்வரும் தாதியாரும் ஆகியநால்வரும் அவர்களைத்தரிசித்து ஆனந்தஅருவிசொரிய எலும்பும் மனமும் நெக்குநெக்குருக பரவசமாய்விழுந்து நமஸ்கரித்து எழுந்து அஞ்சலியஸ்தர்களாகிநின்று ஸ்தோத்திரம் பண்ணினர்கள் பின்பு பரமசிவனும் பார்வதியம்மையும் சுப்பிரமண்ணியசுவாமியும் அவர்கள் நால்வரையும் தங்களைஎக்காலமும் பிரியாதுவணங்கிப் பேரின்பத்தை நுகர்ந்துகொண்டு இருக்கும்பொருட்டு உடன்கொண்டு திருக்கைலாசத்தைஅடைந்தார்கள்.

உ

சிவமயம்.

முப்பத்தெட்டாவது,

கழற்றறிவார்நாயனர் புராணம்.

காவலர்மகோதையார் கொடுங்கோளூர்க் கோக்கழறியவையறிந்த கோச்சிலம் போசைக்கருத்தார், நாவலர்கோ னண்பரடிச்சேரனென்றேநவின்றுவரும் மண்ணுநயந்தகோநற், பாவலர்கோப்பாணபத்திரனுல்வாய்ந்தபரமர் திருமுகம்வாங்கிப்பணிகோவெற்பின், மேவியகோவரணைக்குக் குதிரைவைத்தவீரர்கோ வெனையாளுஞ்சேர்கோவே.

மலைநாட்டிலே இராஜதானியாகிய மகோதை என்னும் பெயரையுடைய கொடுங்கோளூரிலே சேரர்குடியிலே பெருமாக்கோதையார் என்னும் பெயரையுடைய ஒரு சற்புத்திரர் சைவநெறிவாழும்படி அவதரித்தார், அவர் பாலியதசையிலேதானே வியாதிபீடையினுல் வரும் சன்னவைராக்கியம் தன்னுடைய தேகதோஷத்தைக்கண்டுவரும் தேகவைராக்



கியம் சகலசம்பத்துக்களையும் குறைவற அனுபவித்து இப்போதும் என்றுவரும் ஐசுவரியவைராக்கியம் ஆன்மிக தைவிக உற்பௌதிகங் களினாலேவரும் பிரபஞ்சவைராக்கியம் அருத்தத்தைத் தேடுதலினாலும் காத்தலினாலும் கள்ளர்கொண்டு போதலினாலும் உண்டாகுந் துக்கம்பற்றிவரும் திரவியவைராக்கியம் மாதாப்பிதா ஸ்திரீபுத்திர இஷ்டபந்துசினேகிதர்களைப் பிரிந்த துக்கத்தினாலே கூட்டமெல்லாம் பிரிந்தகாலத்திலே துக்கத்துக்கு ஏதுவென்றுவரும் சங்கவைராக்கியம் காமுகனாயிருக்கிறவன் தான் போகிக்கப்பெற்ற ஸ்திரீயினிடத்திலே குணத்திலாயினுந் தேகத்திலாயினும் வைராக்கியத்துக் கேதுவாகிய ஒருதோஷத்தைக் கண்டபோதுவரும் ஸ்திரீவைராக்கியம் அன்பானதிகள் ஒருபொழுது இல்லாதிருக்கினும் தேகம் நில்லாது எத்தனைநாள் எத்தனைவகையாகப்புசித்தாலும் திருத்தியடையாது என்றுவரும் போசனவைராக்கியம் தானத்துக்குப்போய்த் தள்ளுண்டதனால் வரும் பிரதிக்கிரகவைராக்கியம் இகத்திலே இப்படிப்பட்டதொரு ஏதுவும் இன்றிப் பூர்வஜன்ம சிவபூஜா புண்ணியபலத்தினாலே தேகாதியாகிய சர்வ வஸ்துக்களிலும்வரும் வைராக்கியம் என்னும் பத்துவகை வைராக்கியங்களுள் இறுதியில்நின்ற நிருகேதுகமாகிய உத்தமவைராக்கியத்தை உடையராகிய பரமசிவனுடைய திருவடியை அடைதல்வேண்டும் எனக்கருதி இராஜபுத்திரிக்குரிய தொழில்களைசெய்தல் இன்றி திருவஞ்சைக் களம் என்னும் சிவஸ்தலத்தை அடைந்து பரமசிவன் ஸ்வதந்திரர் நாம்பரதந்திரர் என்று உணர்ந்து சிவாதீனமாய் நின்று தினந்தோறும் பிராமமுகூர்த்தத்தில் எழுந்துஸ்நானம்பண்ணி அனுஷ்டானஞ் செய்துகொண்டு திருநந்தனவனம் வைத்தல், பூக்கள்பறித்தல், திருமாலைகட்டல், திருவலகிடல், திருமெழுக்கிடல், திருப்பாட்டுப் பாடல் முதலிய திருத்தொண்டுகளைச் செய்வாராயினர்.

இப்படி நிகழுங்காலத்திலே செங்கோற்பொறையன் என்னும்சேரமகாராசனுக்கு இது நித்தியம் இது அநித்தியம் என்கின்ற பகுத்தறிவும் அநித்தியமாகிய இம்மை மறுமை யின்பங்களில் வெறுப்பும் பிறவித்துன்பங்களும் அவன்செய்த புண்ணியபலத்தினாலே தோன்றின, அவைதோன்றவே நித்தியமாகிய மோக்ஷத்திலே ஆசைஉண்டாயிற்று அதனால் அவன்பிறவிக்குக் காரணமாகிய யோக முயற்சியைச் செய்யல்வேண்டும் என்று தெளிந்து அரசியற்றுதலினின்றும் நீங்கி தவஞ்செய்யும் பொருட்டுத் தபோவனத்தை அடைந்தான் மந்திரிமார்கள் சிலநாள் ஆலோசித்துத்தெளிந்து திருவஞ்சைக்களத்திலே திருத்தொண்டு செய்துகொண்டு இருக்கின்ற அச்சேரர்மரபிற்கு முதல்வராகிய பெருமாக்கோதையாரிடத்திலேபோய் அவரை வணங்கிநின்று இம்மலைநாட்டை நீரே முடிசூடி அரசியற்றல் வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ய பெருமாக்கோதையர் இவர்கள் வார்த்தை இன்ப மயமாகிய திருத் தொண்டுக்கு இடையூறாய் இருக்கின்றது சிவபத்தியிலே சிறிதும்வழுவாது அரசியற்று

தற்குத் திருவருள்உளதாயில் இதனைச்சுவாமிக்கு விண்ணப்பஞ்செய்து அறிவேன்என்று ஆலயத்தினுள்ளே பிரவேசித்து சுவாமியைவணங்கி விண்ணப்பஞ்செய்து அவருடைய திருவருளினாலே அவரிடத்தே வைத்த பத்திவழுவாது அரசியற்றும் சத்தியையும் யாரும் யாவும் கழறினவைகள் அனைத்தையும் அறியும் அறிவையும் நாசமில்லாத மகா பராக்கிரமத்தையும் பெருங்கொடையையும் அரசருக்கு உரியபடை வாகனம் முதலிய எல்லாவற்றையும் கைவரப்பெற்று நமஸ்கரித்துக்கொண்டு புறத்தணைந்து மந்திரிமார்களுடைய வேண்டுகோளுக்கு உடன்பட்டார் மந்திரிமார்கள் பெருங்களிப்புடையர்களாகி அவரை நமஸ்கரித்தார்கள் கழறிற்றறிவாராகிய அப்பெருமாக்கோதையார் ஆன்மாக்கள் எல்லாம் உய்யும்பொருட்டுச் சுபதினத்திலே சுபமுகூர்த்தத்திலே முடிசூடி சிவாலயத்தைவலஞ்செய்து சந்நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து யானைமேற்கொண்டு கொற்றக்குடையும் வெண்சாமரமும் உரியவர்கள்தாங்க மகா அலங்காரத்தோடு நகரிவலஞ்செய்தார் செய்யும்பொழுது ஒரு வண்ணான் தோளிலே உவர்ப்பொதி சுமந்துகொண்டு தமக்குமுன்னே வரக்கண்டு அவனுடைய சரீரம் மழையினாலே கரைந்த உவர் ஊறப்பெற்று வெளுத்திருத்தலால் விபூதியை உத்தூளனம் செய்த சிவனடியாரது திருவேடம் போலுதலை உணர்ந்து அந்தக்ஷணத்திலே தானே யானையினின்றும் இறங்கி அத்தியந்த ஆசையோடுவிரைந்துசென்று அவனுடைய காற்களிலேவிழுந்து நமஸ்கரித்தார் உடனே இவ்வண்ணான் மனங்கலங்கி அவர் நமஸ்கரித்தற்கு முன் அவரைநமஸ்கரித்து அடியேனை யார் என்றுகொண்டது அடியேன் அடிவண்ணான் என்றுசொல்ல சேரமான் பெருமாணாயனாரும் அடியேன் அடிச்சேரன் தேவரீர் திருநீற்று வேடத்தை நினைப்பித்தீர் வருந்தாதே போம்என்றுசொல்லி நமஸ்காரம்பண்ணினார். மந்திரிமார்முதலிய சமஸ்தரும் சேரமான்பெருமா ணாயனாருடைய சங்கமபத்தி மேலீட்டைக்கண்டு ஆச்சரியம்எய்தி சிரசின்மேலே அஞ்சலிசெய்து ஸ்தோத்திரம் பண்ணினார்கள். சேரமான்பெருமாணாயனார் யானைமேல்ஏறி நகரியைவலங்கொண்டு மாளிகைவாயிலிலே புகுந்து யானையினின்றும் இறங்கி மண்டபத்தினின்றும் இறங்கி மண்டபத்தை அடைந்து இரத்தின சிங்காதனத்தில் ஏறி வெண்கொற்றக் குடைநிழற்ற வெண்சாமரம்வீச அரசர்கள் மலர்தூவி வணங்கித்துதிக்க வீற்றிருந் தருளினார். இங்ஙனம் இருந்து மனுநீதி நெறியை நடத்தி எண்ணிறந்த அரசர்கள் திறைகொணர அகத்தும் புறத்தும் பகையை அறுத்து சைவசமயம் அபிவிர்த்தியாகும்படி அரசிபற்றுவா ராயினார். தில்லையின்கண்ணுள்ள திருச்சிற்றம்பலத்திலே ஆனந்தத்தாண்டவம் செய்தருளுகின்ற சபாநாயகருடைய ஸ்ரீபாதமே தாம் தேடும் பொருளும் தமக்கு உரிய பெருந் துணையும் என்று தெளிந்து மெய்யறிவினாலே அத்திருவடியை மிகுந்த அன்பினோடு சைவாகம விதிப்படி எந்நாளும் அருச்சிப்பார் அருச்சனைமுடிவிலே சபாநாயகர் அவரைத் தமது திருச்சிலம்பொலியைக் கேட்பிப்பார் சேரமான் பெருமா ணாயனார் சிவனடியார் களுக்கும்

தரித்திரர்களுக்கும் கனகமாரிபொழிகின்றவராகி பரமசிவனுக்கு உரிய பலயாகங்களைச்செய்தார்.

இப்படி நிகழுங்காலத்திலே பாண்டிநாட்டிலே மதுரையில் வீற்றிருக்கும் சொக்கநாத சுவாமியானவர் தம்மை அன்பினோடும் இசைப்பாட்டினாலே துதிக்கின்ற பாணபத்திரற்குப் பெருஞ்செல்வத்தைக்கொடுத்தருளுதற்குத் திருவுளங்கொண்டு இரவில் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி உனக்குப்பொன் இரத்தினம் பட்டாடைமுதலியவைகள் எல்லாவற்றையும் நீவேண்டியபடி குறைவின்றித் தரும்பொருட்டு நம்மேல் எப்பொழுதும் அன்புடையனாகிய சேரனுக்கு ஓலைதருவோம் தாழாமல்போய்வா என்று அருளிச்செய்து "மதிமலிபுரிசைமாடக்கூடற், பதிமிசைநிலவும் பானிற வரிச்சிறகன்னம்பயில் பொழிலாலவாயின் மன்னிய சிவன்யான்மொழி தருமாற்றம் பருவக்கொண் மூப்படியெனப் பாவலர்க்குரிமையி னுரிமையி னுதவியொளிதிகழ் குருமாமதிபுரை குலவியகுடைக்கீழ்ச் செருசெருமாவுகைக்குஞ் சேரலன்காண்க, பண்பாலியாழ்பயில் பாணபத்திரன்றன்போ லென் பாலன்பன்றன் பாற்காண்பது கருதிப் போந்தனன்மாண்பொருள் கொடுத்துவர விடுப்பதுவே"

என்னும் திருப்பாசுரத்தைவரைந்த திருமுகத்தைக் கொடுத்தருளினார். பாணபத்திர அத்திருமுகத்தைத் தலைமேற்கொண்டு அப்பொழுதே புறப்பட்டு கொடுங்கோளூரை அடைந்து மாளிகைக்குமுன்வந்து சேரமான்பெருமாணுயனருக்கு அறிவித்தார். உடனே அவர் சிரசின்மேலே கைகுவித்து மிகுந்த அன்பினோடும் கண்ணீர்சொரிய எழுந்துமாளிகைக்குப்புறத்தில்வந்து பாணபத்திரரைப் பலமுறைவணங்கி சுவாமீ தேவரீர் அடியேனை ஒருபொருள் எனமதித்து திருமுகங்கொண்டுவந்தீர்என்றார். அப்பொழுது பாணபத்திரர் சுவாமிதந்தருளிய திருமுகத்தைக் கையிலேகொடுத்து வணங்க சேரமான் பெருமாணுயனார் அதனை முடிமேற்கொண்டு கூத்தாடி மொழிகுழற ஆனந்த அருவிசொரிய பரவசமாய்ப் பூமியிலேபலமுறை விழுந்தார். திருமுகத்தைப் பலதரம்வணங்கி அதனை வாசித்து திருவருளைத் துதித்து மாளிகையினுள்ளே புகுந்து மந்திரிமார்களைநோக்கி நம்முடைய குலமாளிகையில் இருக்கின்ற பண்டாரம் முழுதையும் பொதிசெய்து ஆளின்மேல் ஏற்றிக்கொண்டு வாருங்கள் என்று ஆஞ்ஞாபிக்க அவர்கள் ஏற்றிக்கொண்டுவந்து வணங்கினார்கள். சேரமான்பெருமாணுயனார் பாணபத்திரருக்கு அந்தத்தனங்களை வெவ்வேறாகக்காட்டி சுவாமி தேவரீர் இவைகளையும் யானை குதிரை தேர் காலாள்என்னும் சதுரங்கங்களையும் அடியேனுடைய அரசையும் கைக்கொண்டருளும் என்றுசொல்ல பாணபத்திரர் தமக்குச்சேரமான் பெருமாணுயனார் தந்த தனங்களெல்லாவற்றையும் கண்டு மனமகிழ்ந்து அதிசயித்தி அவரைநோக்கி சுவாமீ அடியேன் எனக்கு வேண்டுவனவற்றை மாத்திரம் கொள்ளும்பொருட்டே சிவாஞ்ஞை அரசையும் அரசுறுப்பையும் தேவரீரே கைக்கொண்டருளும் என்றுசொல்லி வணங்கினார். சேரமான் பெருமாணுயனாரும் சிவாஞ்ஞையை மறுத்தற்கு

அஞ்சி அதற்கு உடன்பட்டார். பாணபத்திரர் தனங்கள் எல்லாவற்றை யும் யானைகுதிரை உள்ளிட்டனவற்றுள் வேண்டுவனவற்றையும் கொண்டு ஓர் யானைமேல் ஏறிப்போனார். சேரமான் பெருமாணாயனார் பாணபத்திரருக்குப் பின் கண்ணீர்சொரிய கைதொழுதுகொண்டு செல்ல பாணபத்திரர் நகர்ப்புறத்தில் அவரிடத்திலே விடைபெற்றுக்கொண்டுபோய் அடைந்தார்.

சேரமான் பெருமாணாயனார் ஒருநாள் முன்போலப் பூஜாந்தத்திலே சபாநாயகருடைய திருச்சிலம்பொலி தமக்குக்கேளாதொழிய மனமயங்கி அடியேன என்னபிழைசெய்தேனோ என்றுபொருமி இனிஇந்தத் தேகத்தினால் அடையும் வேறின்பம் யாதுஎன்று உடைவாளை உருவி தமது மார்பிலேநாட்ட சபாநாயகர் விரைந்து திருச்சிலம்பொலியைக் கேட்பித்தார். உடனே நாயனார் உடைவாளை அகற்றி நமஸ்காரம்பண்ணி ஸ்தோத்திரம் செய்து சுவாமி இத்திருவருளை முன்செய்யாதொழிந்தது என் என்றார் அப்பொழுது சபாநாயகர் சைவசமயாசாரியராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளை நினைக்கும்பொருட்டு எதிர்நின்றருளாது வன்றொண்டாகிய சுந்தரன் கனகசபையின்கண்ணே நமது ஆனந்த நிருத்தத்தை வந்து வணங்கிப்பதிகம் பாடுதலால் நாம் நின்று அதனைக்கேட்டுவரத் தாழ்த்தோம் என்னுந் திருவாக்கை அருளிச்செய்தார், சேரமான் பெருமாணாயனா அடியார்களுக்கு இவர் அருளுங்கருணை இருந்தவாறு என் என்று கனகசபையை வணங்கி வன்றொண்டரையும் தரிசித்தல்வேண்டும் என்று விரும்பி சுபதினத்திலே திருவஞ்சைக்களத்தில் வீற்றிருக்கும் கடவுளைவணங்கி சேனைகளோடு புறப்பட்டுப்போய்ச் சிதம்பரத்தை அடைந்து கனகசபையிலே நிருத்தம் செய்கின்ற சபாநாயகரை வணங்கி சிவானந்தக்கடலுள் அமிழ்ந்தி பொன்வண்ணத்தந்தாதி பாடியருளினார். சபாநாயகர் அதற்குப்பரிசிலாகத் தமதுகுஞ்சித பாதத்தினது திருச்சிலம்பின் ஓசையை எதிரேகேட்பித்தார். சேரமான்பெருமாணாயனார் காலந்தோறும் சபாநாயகரைத் தரிசனம் செய்துகொண்டு அப்பதியில் இருந்தார்.

சிலநாளாயினபின் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தரிசித்து வணங்குதற்கு விரும்பிப் புறப்பட்டு இடையில் உள்ள சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருவாரூரை அடைந்து, தம்மை எதிர்கொண்ட சுந்தரமூர்த்தி சுவாமிகளை நமஸ்கரித்து அவரோடு கோயிலிற்சென்று வன்மீகநாதரை வணங்கி, திருமும்மணிக்கோவைபாடி, பரவையார் வீட்டிலேபோய் சுந்தரமூர்த்தி சுவாமிகளோடு திருவாரூரை அகன்று வேதாரணியத்தை அடைந்து சுவாமிதரிசனம் செய்து திருவந்தாதி பாடினார் அதன்பின் பாண்டிநாட்டிற்சென்று அங்குள்ள மதுரை முதலாகிய திருப்பதிகளை வணங்கிக்கொண்டு சுந்தரமூர்த்தியோடும் திருவாரூருக்குத் திரும்பிவந்து, அவரோடு சுவாமிதரிசனம் செய்து கொண்டு இருந்தார். பலநாட்சென்றபின் சுந்தரமூர்த்தியைத் தம்முடைய ஊருக்குவரும்படி பிரார்த்தித்து அழைத்துக்கொண்டு சென்று தம்முடைய கொடுங்கோளூரை அடைந்து அவரோடும் இருந்தார், ஒருநாள் சுந்தரமூர்த்திசுவாமி வன்மீகநாதரைநினைந்து உருகி திருவாரூரு

க்குப்போம்படி எழுந்துசொல்ல சேரமான் பெருமாணுயனூர் பிரிவாற்றாதவராகி எழுந்து அவரைப்பின்றொடர்ந்து போகாதபடி தடுத்து, அதற்கு அவர் உடன்படாமைகண்டு மந்திரிகளைக்கொண்டு தம்முடைய மாளிகையில் இருக்கின்ற பண்டாரம் முழுதையும் பொதிசெய்து ஆட்களின் மேலே ஏற்றுவித்து சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு முன்செல்லும்படி அனுப்பி அந்தச் சுவாமிகள் விழுந்து நமஸ்கரித்தார் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான்பெருமாணுயனூரைத் தழுவி விடைகொடுத்துச் சென்று திருவாரூரை அடைந்தார் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்திலே விடைபெற்ற சேரமான் பெருமாணுயனூர் சுந்தரமூர்த்தி சுவாமிகளை மறவாத சிந்தையோடு கொடுங்கோளூரிலே அரசுசெய்துகொண்டு இருந்தார்.

நெடுநாள் ஆயினபின் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பின்னும் கொடுங்கோளூருக்கு வந்து சேரமான் பெருமாணுயனூரோடு இருந்தார் பலநாளாயினபின் ஒருநாள் சேரமான் பெருமாணுயனூர் ஸ்நானம் பண்ணும்பொழுது சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவஞ்சைக் களத்துக்குப் போய் சுவாமி தரிசனம் செய்து திருக்கைலாசத்தில் இருந்து பரமசிவனால் அனுப்பப்பட்ட வெள்ளை யானையின் மேலேறி தம்முடைய தோழராகிய சேரமான் பெருமாணுயனூரை நினைத்துக் கொண்டு சென்றார் சேரமான் பெருமாணுயனூர் சுந்தர மூர்த்தி சுவாமிகளுடைய செயலை அறிந்து அந்த க்ஷணத்தில் அருகில் நின்ற ஓர் குதிரையில் ஏறிக் கொண்டு திருவஞ்சைக் களத்துக்குப் போய் வெள்ளை யானையின் மேற்கொண்டு ஆகாயத்திற் செல்லும் சுந்தர மூர்த்தி சுவாமிகளைக் கண்டு தாம் ஏறிய குதிரையின் செவியிலே ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதி யருளினார் உடனே அந்தக்குதிரையானது ஆகாயத்திலே பாய்ந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய வெள்ளையானையை அடைந்து அதனை வலஞ்செய்து அதற்கு முன்னாகச்சென்றது சேரமான்பெருமாணுயனூருடைய படைவீரர்கள் குதிரையிற்செல்லும் அந்நாயனாரை தங்கண்ணுப் புலப்படும் எல்லவரைக்கும் ஆகாயத்திலேகண்டு பின்காணமையால் மிகுந்த திடபத்தியினாலே உருவிய உடைவாட்களினால் தங்கள் தங்கள் தேகத்தை வீழ்த்தி வீரயாக்கையைப் பெற்றுப்போய் சேரமான் பெருமாணுயனூருக்கு முற்பட்டு அவரைச் சேவித்துக்கொண்டு சென்றார்கள் சேரமான் பெருமாணுயனூரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் திருக்கைலாசத்தின் தெற்குவாயிலுக்கு முன்போன உடனே குதிரையினின்றும் யானையினின்றும் இறங்கி பலவாயில்களையும் கடந்து திருவணுக்கன் திருவாயிலை அடைந்தார்கள், அங்கேசேரமான்பெருமாணுயனூர் தடைபட்டு நிற்க சுந்தரமூர்த்திசுவாமிகள் உள்ளேபோய்ச்சுவாமி சந்நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து ஸ்தோத்திரம்பண்ணி சுவாமீ தேவரீருடைய திருவடிகளை அடையும்பொருட்டு சேரமான்பெருமான் திருவணுக்கன் திருவாயிலின் புறத்திலேவந்து நிற்கின்றார் என்று விண்ணப்பஞ்செய்ய பரமசிவன் சேரமான் பெருமாணுயனூரை உள்ளே அழைப்பிக்க அவர் விரைந்துவந்து சந்நிதானத்திலே நமஸ்கரித்து ஸ்தோத்திரம்பண்ணினார், பரமசிவன் திருமுறுவல்செய்து இங்கேநாம் அழையாதிருக்க நீ வந்தது என் என்று அருளிச்செய்ய சேரமான்பெருமாணுயனூர் அஞ்சலிசெய்து நின்று சுவாமீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய திருவடிகளைத்

துதித்து அவர் ஏறிய வெள்ளையானைக்கு முன் அவரைச் சேவித்துக்கொண்டுவந்தேன் தேவரீர் பொழிகின்ற பெருங்கருணைவெள்ளம் முன்கொண்டு புகுதலால் திருமுன்பு வரப்பெற்றேன் இனி ஒருவிண்ணப்பம் உண்டு அரிபிரமேந்திராதி தேவர்களாலும் முனிவர்களாலும் வேதங்களாலும் துதிக்கப் படுதற்கு அரியபெருமையை உடையதேவரீர்மேல் அன்பினாலே தேவரீரது திருவருள்கொண்டு திருவுலாப் பாடினேன் அதனைத் தேவரீர் கேட்டருளல்வேண்டும் என்று விண்ணப்பஞ்செய்தார் அப்பொழுது பரமசிவன் பஞ்சபாசத்தடை நீங்கும் பசுவன்றெண்டனை அடைந்தசேரனே அவ்வுலாவைச்சொல்லு என்று திருவாய்மலர்ந்தருள சேரமான் பெருமாணாயனாரும் அதனைக் கேட்பித்தார் பரமசிவன் அதற்கு அருள்செய்து நம்முடைய கணங்களுக்கு நாதராய் இருஎன்று சொல்லியருளினர் சேரமான் பெருமாணாயனர் சிவகணநாதராகி சுவாமியை சேவிப்பாராயினர் அவர் அருளிச்செய்த திருக்கைலாச ஞானவுலாவைக் கைலாசகிரியிலே அன்றுகேட்ட மாசாத்தரானவர் அதனைத் தரித்து இந்தத் தமிழ்நாட்டில் உள்ள திருக்கடவூரிலே வெளிப்படச் சொல்லி இப்பூமியிலே விளங்கும்பொருட்டு நாட்டியருளினர்.

உ


சிவமயம்.


முப்பத்தொன்பதாவது,

கணநாதநாயனர் புராணம்.

கந்தமலிவயற்காழி மறையோரேத்துங்கணநாதர் திருத்தோணிக் கடவுளார்க்கு, நந்தவனம்பலவமைத்து மலருங்கொய்து நற்றுமஞ்சொற்றொடையுஞ்சாத்தி, வந்தவரைத்தொண்டாக்கிப் பணிகள்பூட்டி வாதுசெய்கவாரணத்தை மகிழ்ந்துவாழ்த்தி, புந்திமகிழ்தானருளாற்கயிலைமேவிப் பொருவில் கணத்தவர் காவல்பொருந்தினரே.

சீர்காழியிலே பிராமணர்குலத்திலே கணநாதநாயனர் என்பவர் ஒருவர் இருந்தார் அவர் திருத்தோணியப்பருக்கு மிகுந்த அன்பினோடு தினந்தோறும் திருப்பணிகள் செய்பவர் தம்மைவிரும்பிவந்து அடைபவர்களை நந்தவனம் அமைத்தல் பூக்கொய்தல் திருமாலைக்கட்டல் திருமஞ்சனம் எடுத்தல் திருவலகிடுதல் திருமெழுகிடுதல் திருவிளக்கேற்றல் திருமுறை எழுதல் திருமுறைவாசித்தல் முதலாகிய திருத்தொண்டுகளுள் அவரவருக்கு ஏற்ற திருத்தொண்டுகளிலே பயில்வித்து அவர்களைச் சிவனடியார்கள் ஆக்குவார் கிருகஸ்தாச்சிரமத்தில் இருந்து சிவனடியார்களை வழிபடுவார் சமய குரவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளைத் தினந்தோறும் முப்பொழுதினும் அத்தியந்த ஆசையோடு விதிப்படி பூசைசெய்தார் அந்தப் பூசாபலத்தினாலே திருக்கைலாசமலையை அடைந்து சிவகணங்களுக்கு நாதரானார்.





உ

சிவமயம்.

நாற்பதாவது

கூற்றுவ நாயனார் புராணம்.

குனமுதபுகழாளர் களந்தைவேந்தர் கூற்றுவனார் மாற்றலர்மண் கொண்டுசூடப், பொன்முழிமுடிவேண்டப் புலியூர்வாழும் பூசுரர்கள் கொடாதகலப்புகிதனீந்த, மன்றுடுந்திருவடியே முடியாச்சூடி மாநிலங் காத்திறைவனுறைமாடக்கோயிற், சென்றுசையுடன் வணங்கிப்பணிகள் செய்து திருவருளாலமருலகஞ்சேர்ந்துளாரே.

களந்தைவேந்தராகிய கூற்றுவநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார் அவர் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை விதிப்படி உச்சரிப்பவர், சிவனடியார்களுக்குத் திருத்தொண்டுசெய்பவர் அவர் திருவருள் வலியினால் மகா ஐசுவரியம் உடையவராகி ரதகஜதுரகபதாதி என்னும் சதுரங்கள் நிறைந்த வீரச்செருக்கில்மேலாயினா, பல அரசர்களோடு யுத்தம்செய்து அவர்களையும் ஜயித்து அவர்களுடைய நாடுகள் எல்லாவற்றையும் கவர்ந்து அரசர் திருவில் முடி ஒன்றுதவிர மற்றவைகள் எல்லாவற்றையும் உடையராயினார் உலகத்தை ஆளுதற்குத் தமக்கு முடிசூட்டும் பொருட்டு தில்லைவாழந்தணர்களை வேண்ட அவர்கள் நாங்கள் சோழகுலத்தாருக்கே அன்றி மற்றவர்களுக்கு முடிசூட்டோம் என்று மறுத்து தங்களுள் ஒருகுடியை முடியைக்காத்துக்கொள்ளும்படி இருத்தி சேரமண்டலத்துக்குப்போயினார்கள். கூற்றுவநாயனார் ஐயுறவினாலே மனந்தளர்ந்து சபாநாயகரைப்பணிந்து அற்றைநாள் இரவிலே அடியேனுக்குத் திருவடியையே முடியாகத்தந்தருளல்வேண்டும் என்று பிரார்த்தித்துக்கொண்டு நித்திரைசெய்ய சபாநாயகர் அவருக்குச் சொப்பனத்திலேதோன்றி தம்முடைய திருவடிகளைக் கொடுத்தருளினார் கூற்றுவநாயனார் அவைகளையே முடியாகச்சூடி பூமிமுழுதையும் பொதுநீக்கி ஆண்டார். பரமசிவன் வீற்றிருக்கின்ற முக்கியஸ்தலங்கள் எங்குஞ்சென்று வணங்கி திருப்பணிகள்செய்து சிவபதம் அடைந்தார்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
ஏழாவது.

பொய்யடிமையில்லாத சருக்கம்.

நாற்பத்தோராவது,

பொய்யடிமையில்லாத புலவர் புராணம்.


பொய்யறியாக்கபிலரொடுபரணராதிப் புலவோர்பொற்பார்கலைகள்
பொருந்தவோதிச், செய்யுளிடைவளராசுமதுரநல்ல சித்திரவித்தாரமெ
னத் தெரிக்குஞ்செம்மை, மெய்யுடையதொடைகளெல்லாமன்றுளாடன்
மேவியகோனிருதாளில விரவச்சாத்திச், கையுடையஞ்சலியினராயரு
ளான்மேலைக் கருதரியவமருலகங்கைக்கொண்டாரே.

பாண்டிநாட்டிலே சிறந்து விளங்குகின்ற துவாதசாந்தபுரமாகிய மதுராபுரியிலே சொக்கநாத சுவாமியிடத்திலே சதுரமாய்இரண்டுசாண் அளவினதாகி மெய்ப்புலவர்களுக்கெல்லாம் முழம் வளர்ந்து இருத்தற்கு இடங்கொடுக்கின்ற சங்கப்பலகையைப்பெற்று அதனில் இருந்து தமிழ்மொழியைவளர்த்த கடைச்சங்கப்புலவர்கள் கபிலர், பரணர், நற்கீரர், முதலாக நாற்பத்தொன்பதின்வார் அவர்கள் விபூதிருத்திராக்ஷதாரணர்களாம் ஸ்ரீபஞ்சாக்ஷர ஜபமரர்களாகி அகத்தியம், தொல்காப்பியம் என்னும் இலக்கணநூல்களின்படி ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்னும் நாற்கவிகளினாலும் அத்தியந்த மெய்ப்பத்தியோடு பரமசிவனையே பாடி பொய்யடிமையில்லாத புலவர்கள் எனப்பெயர்பெற்று சிவபதம் அடைந்தார்.

உ
சிவமயம்.
நாற்பத்திரண்டாவது

புகழ்ச்சோழநாயனார் புராணம்.

பொழின்மருவுங்கருவூர்வாழ் புகழார்சோழர் போதகம்போலென்
னுயிரும் போக்குமென்றே, யழலவிர்வாள்கொடுத்தபிரானதிகைமான்மே





லடர்ந்தபெரும்படையேவ வவர்கொண்டேய்ந்த, தழல்விழிகொடலை காண்பார் கண்டதோர்புன் சடைத்தலையைமுடித்தலையாற்றூழ்ந்துவாங் கிக், கழல்பரவியது சிரத்தினேந்திவாய்ந்த கனன்மூழ்கி யிறைவனடி கைக்கொண்டாரே.

—∘∞∘—

சோழநாட்டிலே உறையூரிலே புகழ்ச்சோழநாயனார் என்பவர்ஒரு வர் இருந்தார் அவர் மற்றை அரசர்கள் பணிகேட்க உலகம் தம்மு டைய செங்கோலின்முறை நிற்க சைவசமயம் தழைக்க, அரசியற்றி னார் சிவாலயங்கள் எல்லாவற்றிலும் நித்திய நைமித்திகங்களை வழுவி ன்றி நடத்துவிப்பார். சிவனடியார்களுக்கு வேண்டுவனவற்றைக் குறிப் பறிந்துகொடுப்பார் இப்படி யிருக்கும் நாளிலே கொங்குமுதலிய குட தேசங்களின் அரசர்கள் தரும் திறைபை வாங்கும்பொருட்டு தங்கள் குலத்தார்களுக்கு உரிய கருவூர் என்னும் இராஜதானியிலே ! அரசுரி மைச் சுற்றத்தோடு வந்தணைந்தார். அங்குள்ள ஆனிலை என்னும் கோ யில்! இருக்கின்ற பரமசிவனை வணங்கி, மாளிகையிலே புகுந்து அத்தா ணிமண்டபத்திலே சிங்காசனத்தில் வீற்றிருந்து குடதேசத்து அரசர் கள் கொணர்ந்த திறைகளைக் கண்டு அவர்களுக்கு அருள்புரிந்து மந் திரிமாரை நோக்கி நம்முடைய ஆஞ்ஞாசக்கரத்துக்கு அமையாத அர சர்கள் இருக்கின்ற அரணங்கள் உளவாகில்தெரிந்து சொல்லுங்கள் என்றார். இப்படி நிகழும்நாளிலே சிவகாமியாண்டார் கொணர்கின்ற புஷ்பங்களைச் சிதறிய தம்முடைய யானையையும் ஆதோரணர்களையும் கொன்ற எறிபத்த நாயனாரை அணைந்து என்னையுங் கொன்றருளும் என்று தமது வாளைக்கொடுத்து திருத்தொண்டிலே மிகசசிறந்து விள ங்கினார். மந்திரிமார்கள் புகழ்ச்சோழநாயனாரை வணங்கி திறைகொண ராத அரசன் ஒருவன் உளன் என்றுசொல்ல புகழ்ச்சோழர் வியப்பி னாலே புன்முறுவல் செய்து அவன் யாவன் என்று வினவ மந்திரிமார் அவன் அதிகன் என்பவன் அவன் சமீபத்திலே மலையாரணத்துள்ளே இருப்பவன் என்றார்கள். அதுகேட்ட புகழ்ச்சோழர் நீங்கள் படை கொண்டு சென்று அவ்வரணத்தைத் துகளாகப் பற்றறுத்து வாருங் கள் என்று ஆஞ்ஞாபிக்க மந்திரிமார்சேனையோடு சென்று அம்மலையர ணைப் பொடிபடுத்து அதிகனுடைய சேனைகளை வதைத்தார்கள். அதி கன் அஞ்சி ஓடிப்போய்சசுரத்தில் ஒளித்துவிட்டான். புகழ்ச்சோழரு டைய படைவீரர்களிற்பலர் அதிகனுடைய படைவீரர்களின் தலைகளை யும் மற்றவர்கள் நிதிக்குவைகளையும யானை குதிரைகளையும் கொண்டு மந்திமாரோடு கருவூரிலே வந்து சேர்ந்தார்கள். புகழ்ச்சோழ நாயனார் தமக்குமுன்னே படைவீரர்கள் கொண்டுவந்த தலைக்குவைகளுள் ஒருத லையின் நடுவிலே ஒரு புன்சடையைக் கண்டார். கண்டபொழுதே நடு ங்கி மனங்கலங்கி கைதொழுது பெரும் பயத்தினுடனே எதிர்செ ன்று அத்தலையிற் சடையைத் தெரியப்பார்த்து கண்ணீர் சொ ரிய அழுது நான்சைவநெறியைப் பரிபாலித்து அரசியற்றியபடி மிக அழகிது சடைமுடியையுடையவர் பரமசிவன் அருளிச்செய்த மெய்ந் நெறியைக்கண்டவர் அவருடைய சடைத்தலையைத தாங்கிவரக்கண்டும் அதிபாதகனாகிய நான்பூமியைத் தாங்குதற்கு இருந்தேனோ என்று சொல்லி ஒனறுசெய்யத துணிநது மந்திரிமாரை நோக்கி பூமியைக்கா த்து அரசளித்துப் பரமசிவனுக்கு வழித்தொண்டு செய்யும்பொருட்டு

என்னுடைய குமாரனுக்கு முடிசூட்டுங்கள் என்று விதித்து அதனைக் கேட்டு அயரும் மந்திரிகளைத்தேற்றி அக்கினிவளர்ப்பித்து விபூதியை உத்தூளனஞ்செய்து சடைச்சிரத்தை ஒருபொற்கலத்தில் ஏந்தி தம்முடைய திருமுடியிலே தாங்கி அவ்வக்கினியை வலஞ்செய்து உயிர்த்துணையாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை எடுத்து ஓதி அதனுள்ளே புகுந்து பரமசிவனது திருவடிநிழலிலே அமர்ந்து இருந்தார்.

உ

சிவமயம்.


நாற்பத்துமூன்றாவது,

நரசிங்கமுனையரைநாயனார்புராணம்.

நாடுபுகழ்முனைப்பாடிநாடுமேயநரசிங்கமுனையர் புவிநைந்துமன்று ளாடுமவராதிரைநாளடி யார்க்கம்பொ னமுதளிப்பாரொளிவெண்ணீ றணிந்துதூர்த்த, வேடமுடையவர்க்கிரட்டிச் செம்பொனீந்து விடுத் துபகாராலயங்கள்விளங்கச்செய்து, தோடலர்தாருடையபிரா னருளை யாளத்தோன்றினா ரெனையருளினூன்றினரே.

திருமுனைப்பாடி நாட்டிலே நரசிங்முனையரைநாயனார் என்பவரொருவர் இருந்தார். அவர் பரமசிவனது திருவடியை அடைதலே தமக்குப்பெரும்பேறு எனத்துணிந்தவர் அநித்தியமும் துக்கமுமாகிய அரசியற்கையில் வைத்தவிருப்பத்தாலன்று சர்வான்மாக்களும் சற்சமயமாகிய சைவத்தைக் கைக்கொண்டு முத்தியின் பதத்தை அடைதல்வேண்டும் என்னும் பெருங்கருணையினாலே பலசத்துரு முனைகளைக்கடந்து சைவநெறி வாழும்படி திருவருளை முன்னிட்டு நின்று அரசாள்வார். சிவாலயங்கள்தோறும் நித்திய நைமித்திகங்களை ஒழுங்குபெற நடத்துவிப்பார். திருவாதிரைநக்ஷத்திரந்தோறும் விசேஷபூசை செய்வித்து தம்மிடத்தில் வரும் சிவனடியார்களைத் திருவமுது செய்வித்து அவர்களுக்குத் தனித்தனியே நூறுபொன்கொடுப்பார். ஒரு திருவாதிரை நக்ஷத்திரத்திலே அப்படியே அடியார்களுக்குப் பொன்கொடுக்கும் பொழுது தூர்த்தவேடமுள்ள ஒருவர்விபூதி அணிந்துகொண்டு வந்தார். அவருடைய வடிவு இருந்தபடியைக் கண்டுபக்கத்தில் உள்ளவர்கள் இகழ்ந்து ஒதுங்க நரசிங்கமுனையரையார் அதுகண்டு எதிரேசென்று அவரை அஞ்சலிசெய்து அழைத்துக்கொண்டுபோய் அவரைமிக உபசரித்து சீலம் இல்லாதவர்களாயினும் விபூதியை அணிந்தவர்களை உலகத்தார் இகழ்ந்துநரகத்தில் வீழாவண்ணம் அவருக்கு இரட்டிப் பொனகொடுத்து அவரை வணங்கி இன்சொற்சொல்லி விடைகொடுத்து அனுப்பினார். இந்தப்பிரகாரம் அருமையாகிய திருத்தொண்டுகள் பலவற்றைச் செய்து சிவபதப் பிராப்தியானார்.







உ

சிவமயம்.

நாற்பத்திநான்காவது,

அதிபத்தநாயனார்புராணம்.

அலையாருங்கடனாகை நகருள்வாழ மதிபத்தர்பரதவர்களதிபர்வேலை, வலைவாரிவருமீனிற்றலைமீனீசன்வார்கழற்கே யென்றுவிடுமரபார்பன்னாட், டலையானதொருமீனேசாரநாளுந் தந்தொழிலால் விடுத்துமிடி சாரச்செம்பொ, னிலையாருமணிநயந்தமீனென்றெய்த நீத்தருளா லிறைவனடி நேர்ந்துளாரே

சோழமண்டலத்திலே நாகப்பட்டணத்திலே சமுத்திர தீரத்திலே உள்ள நுளைப்பாடியிலே பரதவர்குலத்திலே அதிபததநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார் அவர் பரதவர்களுக்குத் தலைவராகி அவர்கள்வலைப்படுத்துக் குவிக்கும் மீன் குவைகளைப்பெற்று வாழ்வார் சிவபத்தியில் மிகச்சிறந்தவராதலால் அகப்படும் மீன்களிலே ஒருதலைமீனை இது பரமசிவனுக்கு என்று மிகுந்த அன்பினோடு எப்பொழுதும் விட்டுவந்தார். ஒருநாளிலே ஒருமீனைவரினும் அதனைப்பரமசிவனுக்கு என்றேவிடுவார். இப்படி ஒழுகும் நாட்களிலே அடுததடுத்து அநேகநாட்களிலே ஒவ்வொருமீனை அகப்பட அதனைக்கடலிலே விட்டுவந்தார் மீன்விலையினாலே மிகுஞ்செல்வம் மறுத்தமையால் தம்முடைய கிளைகள் உணவின்றி வருந்தவும் தாம் வருந்தாது பட்ட மீனைப் பரமசிவனுக்கு என்றே விட்டு மகிழ்ந்தார். இபபடி நெடுநாள்வர உணவின்மையால் திருமேனி தளரவும் தம்முடைய தொழிலிலே நிலைநின்றமையைப் பரமசிவன அறிந்து அவரது அன்பென்னும் அமுதை உண்பாராயினார். இப்படி நிகழும்நாளிலே வேறு ஒருநாள் பரதவர்கள் அவ்வொருமீனையும் அவ்வாறேவிட்டு விலைமதிப்பில்லாத மகாதிவ்வியப் பிரகாசங்கொண்ட நவரத்தினங்களாலே உறுப்பமைந்த அற்புதமயமாகிய ஒருபொன் மீனைவலைப்படுத்து கரையில் ஏறியபோது அம்மீன் சூரியன் உதித்தாற்போல உலகமெல்லாம் வியக்கும்படி மிகப் பிரகாசிக்கக்கண்டு அதனைஎடுத்து ஒரு மீன் பிடித்தோம் என்றார்கள், அதிபத்தநாயனார் அம்மீனைக்கண்டு இது இரத்தினங்களால் உறுப்பமைந்த பொன்மீனாதலால் என்னை ஆட்கொண்டருளிய பரமசிவனுக்கு ஆகும் என்று கடலிலேவிட்டார் அப்பொழுது பரமசிவன் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருள அதிபத்தநாயனார் ஆனந்தஅருவிசொரிய மனங்கசிந்துருகி நமஸ்கரித்து சிரசின்மேல் அஞ்சலிசெய்தார். சுவாமி தமது உலகத்திலே அடியார்களோடு இருக்கும்படி அவருக்கு அருள்செய்தார்.

உ

சிவமயம்.

நாற்பத்தைந்தாவது,

கலிக்கம்பநாயனார்புராணம்.

கடவுளருட்கண்ணார்கள் பயிலுந்தொல்லைக் கடைந்தைநகர் வணிகர் கலிக்கம்பரன்பர்க், கடிமையுறவமுதளிப்பாரடியானீங்கியருளுதற்கு

வாயன்றுடனணையவேத்தி, யிடையிலவரடியிணையும் விளக்காநிற்பவிகழ்பணை விகரக மலியிரண்டுகையும், படியில்விழவெறிந்தவள் செய்பணியுந் தாமே பரிதுந் புரிந்தரனருளைபற்றினரே.

சோழமண்டலத்திலே பெண்ணாகடத்திலே வைசியர்குலத்திலேகலிக்கம்பநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் அந்தத திருப்பதியில் உள்ள தூங்கானைமாடம என்னும் கோயிலில் வீற்றிருக்கும பரமசிவனுக்குத் திருத்தொண்டு செய்பவர் சிவலிங்கத்தைவழிபடினும் சிவனடியார்களை வழிபடாதொழியில் அவ்வழிபாடு நிஷ்பலமாம் என்று சிவாகமம் செப்புதலால் தினந்தோறும் சிவனடியார்களை அத்தியந்த ஆசையோடு திருவமுதுசெய்வித்து அவர்களுக்கு வேண்டுந் திரவியங்கள் எல்லாவற்றையும் கொடுப்பார் இப்படி ஒழுகும் நாளிலே ஒருநாள் தமது வீட்டிலே அமுதுசெய்யவந்த சிவனடியார்கள் எல்லாரையும் பழையமுறைப்படி அமுது செய்யத் தொடங்குவித்தற்கு அவர்களை முன்பு அழைத்து தமது மனைவியார் கரக நீர்வார்க்க அவர்களுடைய திருவடிகளை விளக்கும்பொழுது முன்பு தமக்குப் பணிவிடைக் காரராய இருந்து பணி விடையை வெறுத்துச்சென்ற ஒருவர் சிவவேடம் தாங்கிவர அவருடைய திருவடிகளையும் விளக்கப்புகுந்தார் மனைவியார் இவர் எங்களிடத்திலே பணிவிடைக்காரராய் இருந்துபோனவர்போலும் எனறு சிந்தித்தலால் கரகநீர்வார்க்கத்தக்க கலிக்கம்பநாயனார் அதுகண்டு இவள் இந்தச்சிவனடியாருடைய முந்தியநிலையைக் குறித்து வெள்கி நீர்வாராதொழிந்தாள்|என்று துணிந்து வாளை எடுத்து அம்மனைவியார் கையிற் கரகத்தை வாங்கி அக்கையைத்தறித்து அக்கரக நீரை எடுத்து தாமே அவருடைய திருவடிகளை விளக்கி அத்தியந்த ஆசையோடு தாமே வேண்டுவன வெல்லாஞ்செய்து அவ்வடியார்களை அமுதுசெய்வித்தார். அந்நாயனார் பின்னும் சிலகாலம் திருதொண்டின் வழிநின்று சிவபதத்தை அடைந்தார்.

உ

சிவமயம்.

நாற்பத்தாறுவது

கலிய நாயனார் புராணம்.

தடமதில்சூழொற்றியூர் நகருள்வாழுஞ் சக்கரப்பாடியர்குலமெய்த்தவமாயுள்ளார், படர்புகழாற் கலியனார் நலியுங்கூற்றைப் பாய்ந்தவர்க்கு விளக்கெரிக்கும் பரிவான்மன்றோ, குடலிலராய்ச் செக்குழல்வார்க்கதுவு நேராதுயா மனைவியைக் கொள்வாவாருளமின்றி, மிடறுதிரமகனிறைய வரிநாதன் வியன்கைகொடு பிடிப்பவருண்மேவினரே.





தொண்டை மண்டலத்திலே திருவொற்றியூரிலே உள்ள சக்கரப்பாடியிலே செக்கார்குலத்திலே கலியநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார் அவர் பெருஞ் செல்வராகி செல்வநிலையாமையும் யாக்கைநிலையாமையும் உணர்ந்து சிவபுண்ணியம் செய்தல் வேண்டும் எனத்தெளிந்து அந்தத் திருப்பதியில் உள்ள சிவாலயத்தின் உள்ளும் புறம்பும் அல்லும்பகலும் எண்ணிறந்த திருவிளக்கு ஏற்றுவாராயினர். பரமசிவன் நெடுங்காலம் இத்தொண்டைச் செய்துவரும் அவ்வடியாருடைய பத்திவலிமையைப் பிறர்க்குப் புலப்படுத்தும்பொருட்டு அவரிடத்து உள்ளசெல்வம் எல்லாம் குன்றும்படி அருள்செய்தார். அவர் தாம் வறுமையெய்தியும் தமதுமரபில்உள்ளோர் தரும் எண்ணெயை வாங்கிக்கூறி விற்றுக் கொணர்ந்து கூலிபெற்று தாம்செய்யும் திருத்தொண்டை வழுவாது செய்தார். சிலநாளாயினபின் அவர்கள்கொடாதொழிய அவர்மனந்தளர்ந்து தைலவினைசெய்யும் இடத்திற்சென்று தொழில்செய்து கூலிவாங்கி திருவிளக்கிட்டார். பின்பு அத்தொழில் செய்வோர்கள் பலராய் பெருகினமையால் அத்தொழிலால் வரும்பேறும் கிடையாதுமுட்ட ஒருநாள் கவலைகொண்டு தம்முடைய மனைவியாரை விற்பதற்கு நகரெங்கும் கூறி வாங்குவார் இன்னமையால் மனந்தளர்ந்து ஆலயத்தை அடைந்து திருவிளக்கு ஏற்றும் சமயத்திலே திருவிளக்குப் பணிமாறில் நான் இறந்துவிடுவேன் என்று துணிவுகொண்டு திரி இட்ட அகங்களைப்பரப்பி எண்ணெய்க்குப் பிரதியாகத் தமது இரத்தத்தை நிரைக்கும்பொருட்டு ஆயுதத்தினலே கழுத்தை அரிந்தார். அப்பொழுது கிருபாசமுத்திரமாகிய பரமசிவன் நேர்வந்து அவருடைய கையைப்பிடித்து அவருக்குமுன்னே இடபாரூடராய்த் தோன்றியருள அவர்தாம் உற்ற ஊறு நீங்கி சிரசின்மேல் அஞ்சலி செய்துகொண்டு நின்றார் சுவாமி அவரைத் தமது திருவடியிலே சேர்த்தருளினர்.

௪௭

சிவமயம்.

நாற்பத்தேழாவது,

சத்தி நாயனார் புராணம்.

விரிதருநீர்விரிநாட்டு வரிஞ்சியூர்வாழ்வேளாளர் சத்தியார்விமலர் பாதந், தரிபவர்தமடியாரை யொருமையார் நாவேவ வாய்மையுங்கெ நழுத்து முரைக்குநரை, நிருளின்மிடறுடைய பிரானடியார் தம்மையிகழ்

வார் நாத்தண்டாயத்திடுக்கிவாங்கி, யரியுமதுதிருத்தொழிலா வுடையா ர்மன்று ளாடியசேவடிநீழ லடைந்துளாரே.

சோழநாட்டிலே வரிஞ்சியூரிலே வேளாளர் குலத்திலே பரமசிவ னுடைய திருவடிகளை மறத்தல் சிறிதும் இல்லாதபெரும்பத்தர் ஒருவர் இருந்தார். அவர் சிவனடியார்களை இகழ்ந்துபேசும் அதிபாதகிகளுடைய நாக்கை கைத்தண்டாயத்தால் இடுக்கித் தமது கையிற் சத்தியினால் அரிதலாகிய அப்பெருமைத் திருத்தொண்டை நெடுங்காலம் அன்பி னோடு செய்துகொண்டு இருந்து சத்திநாயனார் என்னும் பெயரைப்பெ ற்று பரமசிவனுடைய திருவடிநீழலை அடைந்தார்.

உ

சிவமயம்.

நாற்பத்தெட்டாவது

ஐயடிகள் காடவர்கோ நாயனார் புராணம்.

வையகிகழ்பல்லவர் தங்குலத்து வந்தமாமணிமா நிலமுழுதுமகிழ் ந்துகாக்கு, மையடிகள்காடவர் கோனருளால்நூல்க ளறிந்தரசுபுரிந்தி டுதலைமையுமென்றே, பொய்யனையவுடல்வாழ்வு கழியுமாறு பொருந்தி யிடும்புகழ்வெண்பாபலியூர்மேவுஞ், செய்யதிருவடி முதலாப்பதிக்கோ றுஞ் செப்பினா ரென்வினைகடப்பினாரே.

தொண்டை மண்டலத்திலே காஞ்சீபுரத்திலே பல்லவர்குலத்திலே சைவத்திருநெறிவாழும்படி அரசியற்றும் ஐயடிகள் காடவர்கோனாயனா ர் என்பவர் ஒருவர்இருந்தார். அவர் எவ்வுயிர்களும் இம்மைமறுமை இன்பங்களையும் முத்தியையும் அடைதல்வேண்டுமென விரும்பி பிறதே சங்களையும் தமக்கு அதீனப்படுத்தி சைவந்தழைத்தோங்க அரசர்களு ம் பணிசெய்ய அரசியற்றினார். சிலகாலம் சென்றபின் அரசாட்சி துன் பமயம் எனக்கருதி அதனைவெறுத்து அப்பாரத்தை இறக்கித் தம்மு டைய புத்திரன்மேல் ஏற்றி பூமியிலுள்ள சிதம்பரம் முதலாகிய சிவஸ் தலங்கள்தோறும் சென்று சுவாமி தரிசனம்பண்ணி திருப்பணிசெய்து ஒவ்வொரு திருவெண்பாய்ப் பாடினார். இந்தப்பிரகாரம்நெடுங்காலம் தி ருத்தொண்டு செய்துகொண்டிருந்து சிவபதத்தை அடைந்தார்.





உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டாவது,

கறைக்கண்டன் சருக்கம்.

நாற்பத்தோன்பதாவது,

கணம்புல்ல நாயனர் புராணம்.

இலகுவடவெள்ளாற்றுத்தெண்பால வாழுமிருக்குவேளூரதிபரெ ழில்லார்சென்னிக், கலைநிலைவாரடிபரவுங் கணம்புல்லர்தில்லைக்கருதுபுலீ ச்சரத்தாற்குக்காதற்றீப, நிலைதரத்தாமிடமிடியா லொருநாட்புல்லா னீடுவிளங்கிடவதுவுநேராதாகத், தலைமயிரினெரிகொளுவுமளவினுதன் றுவாதவாழ்வருளுந்தன்மையாரே.

வடவெள்ளாற்றுக்குத் தென்கரையில்உள்ள இருக்கு வேளூரிலே சிவபத்தியிற் சிறந்தவரும் பெருஞ்செல்வரும் ஆகிய ஒருவர் இருந்தார். அவர்செல்வம் பெற்றதினுல் அடையும்பயன் இதுவேஎன்று சிவாலயத் தினுள்ளே திருவிளக்கேற்றி ஸ்தோத்திரம் பண்ணுவாராயினர் நெடுங் காலஞ்சென்றபின் வறுமைஎய்தி சிதம்பரத்தை அடைந்து சபாநாயக ரைத் தரிசனஞ் செய்துகொண்டு தம்முடையவீட்டில் உள்ளபொருள் களைவிற்று அங்குள்ள திருப்புலீச்சரம் என்னும் ஆலயத்தில்திருவிளக் கேற்றிவந்தார் இப்படி ஒழுகும் நாளிலே வீட்டியபொருள்களும் ஒழி ந்துவிட கணம்புல்லுக்களை அறிந்துகொண்டுவந்து விற்றுநெய்வாங்கித் திருவிளக்கெரித்தார். அதனுல் அவருக்குக் கணம்புல்லநாயனுர் என் னும் பெயர் உண்டாயிற்று ஒருநாள் தாம்அரிந்து கொண்டுவந்தபுல்லு விலைப்படா தொழியவும் தம்முடைய பணிதவருது அப்புல்லையே மாட் டிவிளக்கெரித்தார். முன்பு விளக்கெரிக்கும் யாமம்அளவும் எரித்தற்கு அப்புல்லும் போதாமையால் அடுத்தவிளக்கிலே தம்முடைய திருமுடி யைமடுத்து எரித்தார் அப்பொழுது பரமசிவன் பெருங்கருணை செய் தருள கணம்புல்லநாயனுர் சிவலோகத்தை அடைந்தார்.

உ

சிவமயம்.

ஐம்பதாவது,

காரிநாயனார் புராணம்.

திருக்கடவூர்வருமுரவோர்காரியராந் திகழ்தொண்டர்வண்டமிழ் நூறிருந்தவோதி, விருப்பொடுதம் பெயராற்பாவிளம்பி மும்மைவேந்தரையு முறைமுறையேமேவியங்க, ணுரைத்தவுரைநயமாக்கியவர்பாலேய்ந்தவொண்பொருளாலயங்களோங்கச்செய்து, தரைக்குளருந்தவர்க்கேவறக முன்போற்றுந் தன்மையாலருள்சேர்ந்த நன்மையாரே.

திருக்கடவூரிலே தமிழ்மொழியிலேமகாபாண்டித்தியம் உள்ளகாரிநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் தம்பெயரால் தமிழ்க்கோவைபாடி தமிழ்நாட்டு மூவேந்தரிடத்திலும்சென்று அவர்கள் மகிழும்படி உரைத்த உரைகளை நயமாக்கி அவர்களிடத்திற்பெற்ற திரவியங்களைக்கொண்டு சிவாலயங்கள் பலவற்றைக் கட்டுவித்தும், சிவனடியார்களுக்கு வேண்டும் திரவியங்களைக்கொடுத்து திருக்கைலாயமலையைமறவாத கருத்தினராகி உலகம்எங்கும் தம்முடைய சிவகீர்த்தியைநிறுத்தி பரமசிவனது திருவருளைப்பெற்று மனம்போல உடம்பும் திருக்கைலாசமலையை அடையப்பெற்றார்.

உ

சிவமயம்.

ஐம்பத்தோறாவது,

நின்றசீர்நெடுமாற நாயனார் புராணம்.

கன்னன்மலிநெல்வேலிக்கவினார்மாறர்கவுரியர் கோணமணருறுகலக்கமெல்லாம், பொன்னெயில்சூழ்சிரபுரக்கோனணயமாற்றிப்புநிதமிகுநீறணிந்துபோற்றிசெய்து, மன்னுபுகழ்மங்கையருக்கரசியாரா மலர்மாதுமணிமார்பமகிழ்ந்துமாற்றார், வெந்நிடுதல் கண்டரசபுரிந்துகாழி வேந்தருள்சேர்ந்தபெருவிறலினாரே.

பாண்டிநாட்டிலே மதுராபுரியிலே கூன்பாண்டியர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சமணர்களுடைய துர்போதனையினாலே பொய்ம்மார்க்கமாகிய ஆருகதமதத்திலே பிரவேசித்தும், சோழராஜாவுடைய புத்திரியாரும் சைவசிகாமணியுமாகிய மங்கையர்க் கரசியாரை மனைவியாராகவும் குலச்சிறைநாயனாரை மந்திரியாராகவும் பெற்றிருந்தமையால் சமயகுரவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருக்கரத்தினாலே தீண்டிவிபூதி சாத்தப்பட்டுஅவர் அருளிய மெய்யுபதேசத்தைப்பெற்று கூன்நிமிர்ந்து நெடுமாறநாயனார் எனப்பெயர் பெற்றார் தம்மோடு பொரவந்த வடபுலத்து அரசர்களோடு திருநெல்வேலிப் போர்க்களத்திலே யுத்தம்செய்து வென்று சைவசமயம் அபிவிர்த்தியாகும்படி நெடுங்காலம் அரசியற்றிக்கொண்டிருந்து சிவபதம் அடைந்தார்.









உ

சிவமயம்.

ஐம்பத்திரண்டாவது,

வாயிலார் நாயனார் புராணம்.

ஞாயிலார்மதிற் றொண்டைநாட்டுமேன்மை நண்ணுமயிலாபுரியின் வேளாண்டொன்மை, வாயிலார்மலைவில்வானடியேபோற்றி மரவாமைத லைநின்றநமேசெய்போற், கோயிலாவுயர் ஞானம்விளக்காநீராக் குலவிய வாநந்தமன்பேயமுதாக்கொண்டு, தாயிலானிருசரணநிகழவேத்துந் தன்மையாரருள்சேர்ந்த நன்மையாரே.

தொண்டைநாட்டிலே மயிலாப்பூரிலே வேளாளர்குலத்திலே வாயிலார்நாயனார் என்பவர் ஒருவர் இருநதார். அவர் பரமசிவனை ஒருபொழுதும் மறவாத மனமாகிய ஆலயத்துள் இருத்தி ஞானமாகிய திருவிளக்கை ஏற்றி ஆனந்தமாகிய திருமஞ்சனம் ஆட்டிய அன்பாகிய அமுதத்தை நைவேதனம் பண்ணுதலாகிய ஞானபூசையை நெடுங்காலம் செய்துகொண்டிருந்து சிவபதத்தை அடைந்தார்.

உ

சிவமயம்.

ஐம்பத்துமூன்றவது,

முனையடுவார் நாயனார் புராணம்.

பொன்னிவளந்தருநாட்டுப் புகழூநீடூர்ப் பொருவிறிருமலிவேளாண்டொன்மைமிக்கர், முனைனியவர் முனையடுவாரிகலார்போரின் முரணழிவார் தமக்காமொழிந்தகூடி, மன்னுநிதிகொண்டுசயங் கொடுத்துவந்தவளர்பொருளா லிறைவனடிவழுவாவன்பர்க், கன்னமவர்நகையின்மிகமிசைய நல்கு மன்பர் துன்பமவையாவுமகன்றுளாரே.

சோழநாட்டிலே திருநீடூரிலே வேளாளர்குலத்திலே சிவனடியார்களிடத்தே மிகுந்த பத்தி உள்ள ஒருபெரியவர் இருந்தார் அவர் சத்துருக்களுடைய போர்முனையிலே தோற்றவர்கள் தம்மிடத்தில்வந்து கூலிபேசினால் அவர்களுக்காகப் போய்ப் போர்செய்து வென்று பொருள்சம்பாதித்து சிவனடியார்களுக்குச் சொன்னபடியே நிரம்பக்கொடுத்து அவர்களைத் திருவமுதுசெய்வித்துக்கொண்டு இருந்தார், அதனால் அவருக்கு முனையடுவார்நாயனார் என்னும் திருநாமம் உண்டாயிற்று அவர் நெடுங்காலம் இவ்வருமையாகிய திருத்தொண்டைச் செய்துகொண்டு இருந்து சிவபதம்பெற்றார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்பதாவது,

கடல்சூழ்ந்த சருக்கம்.


ஐம்பத்துநான்காவது

கழற்சிங்கநாயனார் புராணம்.

காடவர்தங்குலமுவந்தகழலார்சிங்கர் காதன்மிகுதேவியுடன்காவ லாரு, ராடவலபெருமானைப் பணிவாரங்கோ, ரகன்றமலர்தனைமோந்தவ ரிவைமூக்கைச், சேடுடையசெருத்துணையா ரரியக்கேட்டுத் திறலரசர் மலரெடுத்தசெங்கையன்றே, சூடகமுன்கைதடித்து ஞாலங்காத்த தூய் மையாரருள் சேர்ந்தவாய்மையாரே.

காடவர்குலத்திலே பரமசிவனுடைய திருவடிகளையே யன்றி மற்றொன்றையும் அறியாதகழற்சிங்கநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனது திருவருள் வலிமையினால் வடபுலத்தரசர்களைப் போரிலேவென்று அவர்கள் நாடுகளைக்கவர்ந்து எங்கும் சைவசமயம் தழைத்தோங்கும்படி அரசாண்டார். இப்படி ஒழுகும் நாளிலே மாதேவியோடு சிவஸ்தலங்கள் தோறும்சென்று சுவாமி தரிசனம் பண்ணித்திருத்தொண்டு செய்வாராகி திருவாரூரை அடைந்து கோயிலிலேபிரவேசித்து சுவாமியை வணங்கினார். அப்பொழுது அவருடைய மாதேவி கோயிலைவலஞ்செய்து அங்குள்ளசிறப்புகள் எல்லாவற்றையும் தனிமத்தனியேபார்த்துக்கொண்டு வந்து திருமாலைகட்டும் மண்டபத்தின் பக்கத்திலேவிழுந்து கிடந்த ஒருபுதுப்பூவை எடுத்துமோந்தாள். உடனே செருத்துணைநாயனார் இதனைபுஷ்ப மண்டபத்துள் எடுத்துமோந்தாள். என்றுநினைத்து விரைந்து ஓடிவந்து அவளைக் கூந்தலிலேபிடித்து இழுத்து வீழ்த்த அவளுடைய மூக்கைப் பிடித்து கத்தியினாலே அரிந்தார். அவள்சோர்ந்து புலம்பினாள். அப்பொழுது கழற்சிங்கநாயனாரும் சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு அவளுக்குச் சமீபத்தில்வந்து அவளைப் பார்த்து மிகக்கோபித்து சிறிதும் அஞ்சாமல் இந்தக்கொடுஞ்செய்கையைச் செய்தவர் யாவர் என்றுவினாவ செருத்துணை நாயனார் இவள் சுவாமிக்குச் சாத்தற்பாலதாகிய புஷ்பத்தை எடுத்து மோந்தமையால் நானே இப்படிச் செய்தேன் என்றார், அப்பொழுது கழற்சிங்க நாயனார் அவரை நோக்கி புஷ்பத்தை எடுத்ததையன்றோ முன் துணிக்கவேண்டும் என்றுசொல்லி கட்டிய உடைவாளை உருவித் தம்முடைய மாதேவினது புஷ்பமெடுத்த கையைத் துணித்தார். அதுகண்டுதேவர்கள் புஷ்பமாரிபொழிந்தார்கள் இவ்வரிய திருத்தொண்டைச்செய்த கழற்சிங்கநாயனார் நெடுங்காலம் சைவநெறி தழைத்தோங்க அரசியற்றி பரமசிவனுடைய திருவடிநீழலை அடைந்தார்







உ

சிவமயம்.

ஐம்பத்தைந்தாவது

இடங்கழிநாயனார் புராணம்.

கோனாட்டுக் கொடும்பாளூரிருக்கும்வேளிர் குலத்தலைவரிடங்கழி யார் கொங்கிற்செம்பொ, னானேற்றூர்மன்றின்முகடம் பொன்மேய்ந்த வாதித்தன்மரபோற் நெற்கலர்ந்தோரன்பர், போகாப்பணிருளின்கட்கா வலாளர் புரவலர் முன்கொணரவவர்புகலகேட்டு, மானேற்றாரடியாரே கொள்கவென்று வழங்கியரசாண்டருளின்மன்னினாரே.

கோனாட்டிலே கொடும்பாளூரிலே வேளிர் குலத்திலே கனகசபை யின் முகட்டைக் கொங்கிற்செய்பொன்னால் வேய்ந்த ஆதித்தன்குடியி லே இடங்கழிநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சைவநெறி யும் வைதிகநெறியும் தழைக்க சிவாலயங்கள் எங்கும் நித்திய நைமித்தி யங்கள் சிவாகமவிதிப்படி நடக்க அரசியற்றுங்காலத்திலே சிவனடியார் களைத் திருவமுது செய்விக்கும் ஓரடியவர் ஒருநாள் திருவமுது செய்வித் தற்குப் பொருள் எங்கும் அகப்படாமையால் மனந்தளர்ந்து மகேசுர பூசைமேல் வைத்த அத்தியந்த ஆசையினால் மூழ்ங்கப்பட்டமையால் செயற்பாலது இது என்பதுதெரியாமல் அவ்விடங்கழிநாயனாருடைய பண்டாரத்திலே நெற்கூட்டு நிரைகள் நெருங்கிய கோட்டாரத்தில் அத்தராத்திரியிலே புகுந்து முகந்து எடுத்தார். காவலாளர்கள் அதைக் கண்டு அவரைப்பிடித்து இடங்கழிநாயனாருக்குமுன் கொண்டுவந்தார் கள் இடங்கழிநாயனார் அவ்வடியாரைப்பார்த்து நீர் என் நம்முடைய நெற்பண்டாரத்தைக் கவர்ந்தீர் என்றுவினவ அவ்வடியவர் நான் சிவன டியார்களை அமுதுசெய்வித்தற்குப்பொருள் இன்மையால் இங்ஙனம் செய்தேன் என்றார் இடங்கழிநாயனார் அதுகேட்டு மிக இரங்கி எனக்கு இவரன்றோ பண்டாரம் என்றுசொல்லி சிவனடியார்கள் எல்லாரும் நெற்பண்டாரத்தை மாத்திரம் அன்றி மற்றை நிதிப்பண்டாரங்களையும் எடுத்துக்கொள்க என்று எங்கும் பறை அறைவித்தார். பின்னும் நெடுங் காலம் திருநீற்றின் நெறி தழைக்கும்படி தண்ணளியோடு அரசியற்றிக் கொண்டிருந்து சிவபதத்தை அடைந்தார்.

உ

சிவமயம்.

ஐம்பத்தாறாவது,

செருத்துணைநாயனார் புராணம்.

இரைத்தணையார்புனற் பொன்னிமத நன்னாட்டெழிலாருந்தஞ்சை நகருழவரேத்துஞ், செருத்துணையார் திருவாரூர் சேர்ந்துவாழ்வார் செல்வமிகும்பல்லவர்கோனரேவிவீழ்ந்த, மருததுணையார் மலரெடுத்து

மோப்பக்கண்டு வளமலிபூங்கத்தி யாலவண்மூக்கீர்ந்த, கருத்துணையார் வீற்றிருத் தொண்டினையே செய்துகருதலம மருலகங்கைக்கொண் டாரே

சோழமண்டலத்திலே மருகநாட்டிலே தஞ்சாவூரிலே வேளாளர் குலத்திலே சைவசிரோமணியாகிய செருத்துணைநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் திருவாரூரை அடைந்து காலந்தோறும் வன்மீகநாதரை வணங்கி திருத்தொண்டுகள் செய்துகொண்டிருந்தார், இருக்கும்நாளிலே அங்கே சுவாமிதரிசனம் செய்யவந்த கழற்சிங்கநாயனாருடைய மாதேவி பூமாலைகட்டும் மண்டபத்தின் பக்கத்திலே விழுந்துகிடந்த ஒருபூவை எடுத்துமோந்ததைக்கண்டு அம்மண்டபத்திற்பூவை எடுத்துமோந்தாள் என்றுநினைந்து கத்தியினாலே அவளுடைய மூக்கை அரிந்தார். பின்னும் நெடுங்காலம் திருத்தொண்டின் வழிநின்று சிவபதத்தை அடைந்தார்.

உ


சிவமயம்.


ஐம்பத்தேழாவது,

புகழ்த்துணைநாயனார் புராணம்.

புண்ணியர்கள் புகழுழகார் திருப்புத்தூர்வாழ் புகழ்த்துணையாரகத்த டிமைப்புரிதமின்னான், மண்ணிகழுமழைபொழியா வற்காலத்தால் வருந்துடலை நடுங்கிடவுமணிநீரேந்தி, யண்ணன்முடிபொழிகலச முடிமேல்விழவயர்ந்தொரு நாட்புலம்பவரனருளாலீந்த, நண்ணலருமொரு காசுப்படியால் வாழ்ந்துநலமலிசீரமருலகநண்ணினாரே.

செருவிலிபுத்தூரிலே ஆதிசைவர் குலத்திலே புகழ்த்துணைநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவாகமப்படி பரமசிவனை அருச்சனை செய்துவருங்காலத்திலே பஞ்சம் உண்டாயினமையால் பசிமிகப்பெற்றும் அருச்சனையைவிடுவேன் அல்லேன் என்று அல்லும் பகலும் அருச்சிப்பார் ஒருநாள் திருமஞ்சனம் ஆட்டும்பொழுது மிகுந்த பசிநோயினால் கைசோர்ந்து கலசம் திருமுடிமேல்விழ தாம் திருவடியிலே விழுந்து அயர்ந்து திருவருளினாலே நித்திரை அடைந்தார். அப்பொழுது பரமசிவன் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி பஞ்சம் நீங்கும் வரைக்கும் உனக்குத்தினந்தோறும் இங்கே ஒவ்வொரு காசுவைப்போம் அருளிச்செய்தார். புகழ்த்துணைநாயனார் விழித்துஎழுந்து பூடத்தின் கீழே ஒருகாசு இருக்கக்கண்டு அதனைக் கைக்கொண்டு வாழ்ந்தார். அந்நாளைப்போல என்னாளிலும் அப்படியே ஒவ்வொரு காசுபெற்று பஞ்ச நீங்கிய பின்னும் நெடுங்காலம் மெய்யடிமைத் தொழில்செய்து பரமசிவனது திருவடிநீழலை அடைந்தார்.





உ

சிவமயம்.

ஐம்பத்தேட்டாவது,

கோட்புலிநாயனார்புராணம்.

குலவுபுகழ்நாட்டியத் தான்குடிவேளாளர்கோட்புலியார்குவித்துயர்த்தசெந்நெற்கூடு, நிலவணிவார்க்கமைத்தாணை யிறத்தியென்றார் நேர் மலைவார்திருவாணைமறுத்தேநெற், சிலமிடியாலழித்தபடியறிந்துவாளாற் சேர்ந்த பெருங்கிளைஞருடல்சிதறவீசி, யிலதுமொருகுழவியையு மெறிந்து நாதனெண்ணரியகருணைநிழலெய்தினாரே.

சோழநாட்டிலே நாட்டியத்தான் குடியிலே வேளாளர் குலத்திலே சிவபத்தியிற் சிறந்தகோட்புலி நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார் அவர் அரசனிடத்தில் சேனாபதி யுத்தியோகம்செய்து அதனாலேதமக்குக்கிடைக்கும் வேதனத்தைக் கொண்டு சிவாலயங்களுக்குத் திருவமுதின்பொருட்டு நெல்லுவாங்கிக் கட்டுதலாகிய திருப்பணியை நெடுங்காலம் செய்துவந்தார். இப்படி ஒழுகும்நாளிலே அரசனது ஏவலினால்போர்முனையிற்செல்லவேண்டி சுவாமிக்கு திருவமுதின் பொருட்டுத் தாம் திரும்பிவரும் வரைக்கும் வேண்டும் நெல்லைக்கட்டி தம்முடைய சுற்றத்தார்கள் எல்லாருக்கும் தனித்தனியே அதில் எடுத்துச்செலவழியாதிருக்கும்படி ஆணையிட்டு போருக்குப்போயினார். சிலநாளிலே பஞ்சம் வந்தமையால் அந்தச்சுற்றத்தார்கள் நாங்கள் உணவின்றி இறப்பதிலும் சுவாமிக்குத் திருவமுதின்பொருட்டுக் கட்டப்பட்ட இந்நெல்லைக்கொண்டாயினும் பிழைத்து பின் கொடுப்போம் என்று நெல்லைக்கூடுகுலைத்து எடுத்துச் செலவழித்தார்கள். கோட்புலிநாயனார் அரசனுடைய பகைவரைப் போர்முனையிலேவென்று அவனிடத்திலே நிதிக்குவைபெற்று தம்முடைய ஊரை அடைந்துதம்முடைய சுற்றத்தார்கள் அதிபாதகஞ் செய்தமையை உணர்ந்து ஒன்றுசெய்யத்துணிந்து தம்முடைய வீட்டிலே புகுந்து அவர்கள்எல்லாரையும் அழைப்பித்து தம்பேரோர்கடைக்காக்க சிவத்திரவியத்தை எடுத்துச்செலவழித்த அதிபாதகிகளாகிய தந்தை தாய் உடன்பிறந்தார் மனைவி முதலிய சுற்றத்தார் சமஸ்தரையும் பணிவிடைக்காரரையும் வாளினாலேதுணித்தார். அப்பொழுது தம்பேரோர் அங்கே பிழைத்த ஒரு ஆண்பிள்ளையைப் பார்த்து இப்பிள்ளை அவ்வன்னத்தை உண்டதன்று இது இக்குடிக்கு ஒருபிள்ளை இதனைக்கொல்லாதருள்செய்யும் என்றுவேண்ட கோட்புலிநாயனார் இது இந்நெல் உண்டவளுடைய முலைப்பாலை உண்டது என்று அதைஎடுத்து எறிந்துவாளினாலேதுணித்தார். உடனே பரமசிவன் கோட்புலிநாயனாருக்குத் தோன்றி அன்பனே உன்கைவாளினாலே தங்கள் பாவத்தினின்றும் நீங்கிய உன்சுற்றத்தார்கள் சுவர்க்கத்தை அடைய நீ இந்தப்படியே நம்முடன் வருவாய் என்று கருணைசெய்து எழுந்தருளினார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பத்தாவது,

பத்தராய்ப்பணிவார் சருக்கம்.

ஐம்பத்தொன்பதாவது,

பத்தராய்ப்பணிவார் புராணம்.

தொண்டரடித்தொழல் பூசைத்தொழின்மகிழ்தலழகார் துளங்கிய வர்ச்சனைபுரிதறுருசதிநியமங்கள். கொண்டபணிதிருவடிக்கேகொடுத்த லீசன்குணமருவுமருங்கதைதனைக் குலவிக்கேட்டு, மண்டிவிழிதுளும்பன் மயிர்சிலும்பலுன்னன்மருவு திருப்பணிகாட்டி வருபவாங்கி, யுண்டிகொளாதொழிதலெனவிவையோரெட்டு முடையவர்பத்தரென வுரைத்துளாரே

சிவனடியார்களைக் கண்டால் அவர்களுடையசாதியை விசாரியாமல் அவர்களைச் சிவன் எனப்பாவித்து நமஸ்கரித்து குதுகுதுத்து கொண்டாடி மனமகிழ்ந்து அத்தியந்த ஆசையுடன்பசுவிக்குப்பின்கன்று அணைதல்போல அணைந்து அவர்களுடன் பேசுங்காலத்து அவர்களைப்பேசும் பூச்சியவசனமும் நைச்சியவசனமும் தப்புமோஎன்னும் கூச்சத்துடனே பேசி அவர்களுக்கு வேண்டும் சருமபேதங்களுக்குவேண்டும் கருமமாகச் செய்தலும் பரமசிவனைமிகுந்தஅன்பினோடெவ்விடத்தும்யாவர்களும்விதிப்படி அருச்சித்தலைக்கண்டால்மனமகிழ்தலும் பரமசிவனையும் அவருடைய அடியார்களையும்தெவிட்டாத விருப்பத்தோடுசைவாகமவிதிப்படி அருச்சித்தலும் தங்கள் உடம்பினாலே செய்யும் புண்ணியங்கள் எல்லாவற்றையும்பரமசிவனது திருவடிக்கே கொடுத்தலும்சிவசரித்திரங்களையே அன்பினோடுகேட்டலும்பரமசிவனையேவணங்கி மனம்நெக்குநெக்குருகிச்சரீரம் நடுக்குற்றுஉரோமப்புளகிதம் உண்டாகமரதகினிற் புறப்படும்ஜலம்போல ஆனந்தபாஷ்பம்பொழிய நாத்தழும்பப் பரவசமாதலும் நின்றாலும் இருந்தாலும்கிடந்தாலும் நடந்தாலும் உண்டாலும் துயின்றாலும் விழித்தாலும் பரமசிவனை ஒருபோதும் மறவாதிருத்தலும் சிவவேடம் தரித்துத் திருத்தொண்டர் போல்நடித்து அதனால் சீவனம் செய்யாமையும் ஆகிய இவ்வெட்டினையும் உடையவர்களே பத்தராய்ப்பணிவார் என்று சொல்லப்படுவார்கள்.

உ

சிவமயம்.


அறுபதாவது,

பரமனையேபாடுவார்புராணம்.

அருந்தமிழால் வடகலையா லருளாதொன்றுலறிவுநெறிமருவுமருங் கவிகள்யாவுந், திருந்தியவானவர்பணியமன்றுளாடுந்தேவர்பிரான் கழ







வினையேசேரவோதி, விருந்திடுநாவுடைய பயன்மேவினோர் யாமேலானோ மெனமகிழ்ந்து விழிநீர்சோரப், பரிந்தருளாற்பரமனையே பாடவல்ல பான்மையாரெமையாளுமேன்மையாரே.

சமஸ்கிருதம் தமிழ் என்னும் பாஷைகளைக்கற்று அவைகளுக்கு உரிய இலக்கணங்களிலே மகாபாண்டித்தியம் உடையவர்களாகி ஜனனமரணப்பட்டு உழல்கின்ற பசுக்களாகிய பிரமவிட்டுணு முதலிய தேவர்களையும் மனிதர்களையும் மதித்து அவர்களுக்குக் கர்மானுகுணமாகக் கிடைத்த அநித்தியமும் துக்கமுமாகிய வாழ்வைபெய்யெனக்கருதி அவர்களைப்பாடி வாணாளை வீணாகப் போக்காது பதியாகிய பரமசிவனது மகிமையை வேதாகம புராணவழியால் உள்ளபடி அறிந்து அவருடைய திருவடிகளை அடைந்து மனங்கசிந்துருக உரோமஞ்சிலிர்ப்ப ஆனந்த அருவிசொரிய அவரை மெய்யன்போடுபாடி நாம் சுவதந்திரராகிய பரமசிவனுக்கே ஆளாயினோம் பரதந்திரராகிய மற்றுள்ளோர்களில் ஒருவருக்கும் குடியல்லேம் அவர்கள் எல்லாருக்கும் மேலானோம் என்று இறுமாப்பு அடைந்து திரிகின்றவர்களே பரமனையே பாடுவார் என்றுசொல்லப்படுவார்கள்.

உ

சிவமயம்.

அறுபத்தோராவது,

சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார் புராணம்.

பாரணவும்புலனந்தக்கரணமொன்றும்படராமே நடுநாடி பயிலுநாதந், காரணபங்கயன்முதலாமைவர் வாழ்வுங்கழியுநெறிவழிபடவுக்கருதிமேலைப், பூரணமெய்ப்பரஞ்சோதிப் பொலிவுநோக்கிப் புணர்ந்தணைந்த சிவாநுபவபோகமேவுஞ், சீரணமவரன்றேவெம்மை யாளுஞ்சித்தத்தைச் சிவன்பாலே வைத்துளாரே.

உச்சுவாச நிச்சுவாச இரண்டையும் அடக்கி சுழுமுனைமார்க்கத்திலே பிராணவாயுவை நிறுத்தி விஷயங்களின் வழி மனசைப்போகவொட்டாமல் திருப்பி ஒரு குறிப்பிலே நிறுத்தி மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்கினையென்னும் ஆறுதாரங்களின் அந்தர்மாதிருக்காக்கிரமத்தை அறிந்து அவ்வவதாரங்களினும் அதிதேவதைகளைத் தியானித்து அவ்வாறுதாரங்களினும் அசபாசத்தி சிவான்மிகையாய் நிற்கும் முறைமையைப்பார்த்து மூலாதாரந்தொடங்கி விநாயகர்முதலாகிய தேவதைகளைப் பொருந்தி அபிமுகம் பண்ணிக்கொண்டு ஆறுதாரத்துக்கும் மேலாகிய பிரமரந்திரமளவும் அசபையுடன்சென்றணைந்து அந்தப்பிரமரந்திரத்திலே அதோமுகமாய்ச் சகஸ்ரதளமாய் இருக்கின்ற தாமரை முகையைச்சோதி சோதிபதோச்சாரணத்தாலே உதிக்கும் சிவார்க்கனாலே அலரச்செய்து அந்தத் தாமரைப்பூவின் மேல் ராக்கிரத்திலே உள்ள சந்திரமண்டலத்தை ஆகுஞ்சனஞ் செய்தலினாலே மூலாக்கினியை அக்கினிபீசாக்கர உச்சாரணத்தினாலே எழுப்பி நாடி சக்கரத்தைப் பேதித்து அவ்வக்கினியினாலே சந்திரமண்டலத்தை

இளகப்பண்ணி அந்த அமிர்தத்தைச் சர்வநாடிவழியாகநிரப்பி, அவ்விடத்தில் உண்டாகிய சுகோதயத்தில் அந்தமயமான ஞானமிர்த அவத்தை, அடைந்துநின்று, சோமசூரியாக்கினிப்பிரகாசாதிகளாகிய பிரத்தியேகப் பிரகாசங்கள் எல்லாம் சூரியோதயத்திலே நக்ஷத்திராதிப் பிரகாசங்கள் அடங்கினாற்போலத் தன்னிடத்தடங்கச் சர்வதோமுகமாய் ஸ்வயபரப்பிரகாசகமாய் இருக்கின்ற பூரணப்பிரகாசத்தைப் பாவிக்கின்றவர்களே சித்தத்தைச்சிவன்பாலே வைத்தார் என்று சொல்லப்படுவார்கள்.

உ

சிவமயம்.

அறுபத்திரண்டாவது,

திருவாரூர்பிறந்தார்புராணம்.

பொங்கியமாதவமுடையாரவருணநான்கிற்பொருந்திரைகளல்லாதபுகழினுள்ளார்
ரங்கையிலாவருந்தவமுன்புரிந்தாரிங்குச்சார்விலாரிலைநவன்ருள்சார்தலாலே
கங்கைவாழ்சடைமுடியானருளேநீங்காக்கணநாதரெனவாழுங்சருத்தர்கன்னிச்
செங்கண்வரால்வளர்வாவிதிகழுமாரூர்ச்சிறந்துளாரெமையாளப்பிறந்துளாரே.

பூர்வஜன்மத்திலே செய்த புண்ணியத்தினாலே திருவாரூர் என்னும் சிவஸ்தலத்திலே சைவமரபினராய்ப் பிறந்தவர்கள் பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் என்னும் நான்குவருணத்தாராயினும் சங்கரசாதியாராயினும் பரமசிவனுடைய திருவருளை அடைதலால் சிவகணநாதர்களாய் இருப்பார்கள் திருவாரூர்ப்பிறந்தார் எல்லாரும் சிவகணநாதர்கள் என்று சிவனே நமிநந்தியடிகளுயருக்கு அருளிச்செய்தனர். அந்நாயனாரும் அவர்கள் எல்லாரும் சிவகணநாத வடிவினராய்த் தோன்றக்கண்டனர்.

உ


சிவமயம்.

அறுபத்துமூன்றவது‘

முப்பொழுதுந்திருமேனிதீண்டிவார் புராணம்.


செப்பலருந்தவமுடையசெம்மையாளர்சிறுகாலேமலர்வாவிதிகழுமூழ்கி
யொப்பிறிருநீறணிந்துநியதியாற்றியோவாமேயைந்தெழுத்துமுரைத்துமேன்மை
தப்பில்சிவாகமவிதியாலின்பாலன்பார்தன்மையாநன்மையார்தகையாரென்று
முப்பொழுதுந்திருமேனிதீண்டவல்லமுறைமையார்பிறவிதெருந்திறமையாரே.

சிருட்டிகாலத்திலே அநாதிசைவராகிய சதா சிவமூர்த்தியுடைய சத்தியோசாதகம் வாமதேவம் அகோரதற்புருடம், ஈசானம் என்னும் பஞ்சவத்திரத்தினின்றும் தோன்றிய கௌசிகர், காசிபர், பாரத்துவாசர், கௌதமர்அகத்தியர்என்னும்பஞ்சரிஷிகோத்திரத்திலேஜனித்தசிவப்பிராமணர்கள் ஆதிசைவர் என்று சொல்லப்படுவோர்கள் அவர்களுள் சமயதீக்ஷ









விசேஷதீக்ஷைநிர்வாணதீக்ஷை ஆசாரியாபிஷேகங்களைப் பெற்றவர்களே சர்வாதிகாரிகள் என்றும் உத்தமோத்தமசிவாசாரியர்கள் என்றும் சிவாகமங்கள்செப்பும் பார்த்த பிரதிட்டைபரார்த்த பூசைகள்செய்தற்கு அவர்களே உரியவர்கள். மற்றையவர்கள் உரியர்கள் அல்லர் அதனால் அவர்களே சிவாகம வியுற்பன்னர்களாகி, கிருதகிர்த்தியராம் முப்பொழுதினும் சிவலிங்கத்தை அருச்சிப்பார்கள் ஆதலால் அவர்களே முப்பொழுதுந் திருமேனிதீண்டுவார் என்று சொல்லப்படுவார்கள்.

௨

சிவமயம்.

அறுபத்துநான்காவது,

முழுநீறுபூசியமுனிவர்புராணம்.

கற்பமனுகற்பமுபகற்பமென் றிக்கடனிணைந்த திருநீறுங்கனற்கணீறும்
பொற்புடையவரனுசாரணங்கியாறுபொல்லாத பூதியெதிர் புனைதலாகா
வற்புதமாந்திரிபுண்டமதியின்பாதியகிலாங்கந்தீபமிகுமழகார்வட்ட
முற்பொலியவுடலணியுமுறையாறன் றேமுழுநீறுபூசுவல்லமுனிவர்தாமே

உற்பத்தியினாலே கற்பம் அனுகற்பம் உபகற்பம் என மூவகைப்பட்ட விபூதியை ஆயினும் நித்தியாக்கினியில் எடுத்த விபூதியை ஆயினும் சிவன்முன்னும் அக்கினிமுன்னும் குருமுன்னும் ஆசுத்தநிலத்தும் வழிநடக்கும்போது பூசாது உத்தூளனம் திருபுண்டரம் பிறைவடிவம் முக்கோணவட்டம் ஆகச் சிவாகமவிதிப்படி அன்போடு பூசுகின்றவர்கள்முழுநீறுபூசிய முனியவர் என்று சொல்லப்படுவார்கள்.

௨

சிவமயம்.

அறுபத்தைந்தாவது,

அப்பாலுமடிச்சார்ந்தார்புராணம்.

தாராருமூவேந்தர் பயிலுந்தொல்லைத் தமிழ்நாட்டப் புறத்திறைவன் சரணஞ்சார்ந்த, சீராருந்தொண்டர்களும்அண்டரேத்துந் திருத்தொண்டத்தொகையருளாற்செப்புங்காலத் தோராருந்தொடையிலுறுதிப்பாலப்பாலெந்தை பிரானடியடைந்தவியல்பினோரு, மாராத காதலுடையவர்களன்றோ வப்பாலுமடிசார்ந்த வடியார்தாமே,

சேரசோழ பாண்டியர் என்னும் மூவேந்தருக்கும் உரியதமிழ்நாட்டுக்கு அப்புறத்திலே பரமசிவனுடைய திருவடிகளை அடைந்தவர்களும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய திருத்தொண்டத் தொகையிலே சொல்லப்பட்ட திருத்தொண்டர்களுடைய காலத்துக்கு முன்னும் பின்னும் பரமசிவனுடைய திருவடிகளை அடைந்தவர்களும் அப்பாலுமடிச்சார்ந்தார் என்று சொல்லப்படுவார்கள்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பதினோராவது,

மன்னியசீர்ச் சருக்கம்.


அறுபத்தாறாவது,


பூசலார்நாயனார்புராணம்.

பொருவருந்தண்டகநாட்டுநின்றவூர்வாழ்பூசுரர்கோப்பூசலார்புந்தியாலே, யிருநிதியந்தேடியாலயமுமாக்கி யெழுந்தருளப் பண்ணுவதா வெண்ணுங்காலை, யரனைதனைக்காடவர்கோற் கருளமன்ன னந்நகரமணைந் தவ்வாறறிந்துதாழ, விரவுபகற்கோயிலுற விருத்தியங்கண் வேண்டுவ கொண்டிறைஞ்சியருண்மேவினாரே.

தொண்டை மண்டலத்திலே திருநின்றவூரிலே பிராமணர்குலத்திலே பூசலார்நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவனடியார்களுக்குவேண்டுவனவற்றை எப்படியும் தேடிக்கொடுத்து, பரமசிவனுக்கு ஓர் ஆலயம் கட்டுதற்கு விரும்பி எங்கும் வருந்திப் பொருள்தேடி அற்பமும் கிடையாமையால் நைந்து இதற்கு யாதுசெய்வேன்என்று ஆலோசித்து மனோபாவனையினாலே ஆலயம்கட்டத்துணிந்து மனசினாலே அதற்கு வேண்டும் திரவியங்களையும் உபகரணங்களையும் சிற்பரையும் தேடி சுபதினத்திலே அடிநிலைபாரித்து இரவிலும் நித்திரை இன்றி நெடுநாட்கூடக் கோயில்கட்டிமுடித்துபிரதிட்டை செய்தற்கு உரிய சுபதினத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார் அதுநிற்க காடவராஜர் காஞ்சீபுரத்திலே ஒரு சிவாலயம் கட்டுவித்தார். அதிலே பிரதிட்டைசெய்ய நியமித்த சுபதினத்துக்கு முதற்றினத்திலே பரமசிவன் பூசலார் நாயனாருடைய அன்பைவிளக்கும்பொருட்டு அவ்வரசருக்குச் சொப்பனத்திலே தோன்றி நின்றவூரில் இருக்கின்ற பூசலன் என்பவன் நமக்கு ஒருகோயில் கட்டியிருக்கின்றான் அதிலேநாளைக்கு நாம்போவாம் உன்கோயிலில் பிரதிட்டையை நாளை ஒழிந்து பின்கொள்வாய் என்று அருளிச்செய்து மறைந்தருளினார் காடவராஜர் விழித்து எழுந்து அந்தப் பூசலார் நாயனாரை வணங்குதற்கு விரும்பிநின்றவூரை அடைந்து அங்குவந்தார் சிலரைநோக்கி பூசலார் நாயனார் கட்டியகோயில் எவ்விடத்ததுஎன்றுவினாவஅவர்கள் அவர் இங்கேகோயில்கட்டிற்றிற்றிலர்என்றார்கள் உடனே காடவராஜர் அவ்வூர்ப்பிராமணர்களை அழைப்பித்துபூசலார்நாயனார்என்பவர்







யாவர் என்றுவினவ அவர்கள் எல்லாரும் அவர் பிராமணர் இவ்வூரார் என்றுசொல்லி அவரை அழைத்தற்குப் புறப்பட்டவர்கள் அப்பொழுதே காடவராஜர் அவரை அழைக்கஒட்டாமல் தாமே அவரிடத்திற்சென்று அவரை வணங்கி சுவாமி நீர் ஒருசிவாலயம் கட்டியிருக்கிறீர் என்றும் பிரதிட்டை செய்யும்நாள் இன்று என்றும் பரமசிவனால் அறிந்து உம்மைத் தரிசித்து வணங்குதற்கு வந்தேன் அவ்வாலயம் யாது என்று விண்ணப்பம்செய்ய பூசலார்நாயனார் மருண்டுநோக்கி பரமசிவன் என்னை ஒருபொருளாகக் கொண்டு அருளிச்செய்தது நான் திரவியம் இல்லாமையால் மனோபாவனையினாலே கட்டிய கோயிலையே என்று நினைந்து நிகழ்ந்ததைஎடுத்துச்சொன்னார் காடவராஜர் அதைக்கேட்டுவியந்து அவரைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்து அனுமதி பெற்றுக்கொண்டு தமது ஊருக்குத் திரும்பிவிட்டார் பூசலார் நாயனார் தாம்மனசினாலே கட்டியகோயிலிலே சுபமுகூர்த்தத்திலே பரமசிவனைப் பிரதிட்டைசெய்து நெடுங்காலம் பூசை செய்துகொண்டிருந்து சிவபதத்தை அடைந்தார்.

உ

சிவமயம்.

அறுபத்தேழாவது,

மங்கையர்க்கரசியார் புராணம்.

மங்கையர்க்குத்தனியரசிவளவர்குலக்கொழுந்து மன்னவர்சூழ்தென்னவர்க்குமாதேவியார்மண், சங்கைகெடவமண் சமயஞ்சாடவல்ல சைவசிகாமணிஞானத்தமிழிற்கோத்த, பொங்குதிருவருளுடையபோதவல்லிபொருவினெடு மாறனார்புயமேல்வாழுஞ், செங்கலசமுலையாடனருளாலின்பஞ்சேர்ந்தவரைப் புகழ்ந்தடியேன் வாழ்ந்தவாறே.

மதுரையில் இருந்த நெடுமாறநாயனாருக்கு மனைவியார் சோழராசாவுடைய புத்திரியாராகிய மங்கையர்க்கரசியார் அவர் சமயகுரவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளால் திருப்பதிகத்திலே சிறப்பித்துப் பாடப்பட்டவர் அந்தப் பரமாசாரியருடைய திருவருளினாலே நெடுங்காலம் தம்முடைய நாயகருக்குச் சைவ வழித்துணையாகி பாண்டிநாடெங்கும் சைவத்திருநெறியைப் பரிபாலனம் செய்துகொண்டிருந்து அந்நாயகரோடு சிவபதத்தை அடைந்தார்.

உ

சிவமயம்.

அறுபத்தெட்டாவது

நேசநாயனார்புராணம்.

சாலியர்கோக்காம்பீலித் தலைவர்மேன்மை தாவாதபுகழ்நேசர் தஞ்சொலென்றுங், கோலியவைந்தெழுந்தோதிச் சிந்தையுன்னிக்கொண்ட

பொருளன்பர்கொளக் கொடுத்துவாழ்வார், சீலமிகுந்திருத்தொண்டர்க்குடையுங்கீளுந் திருந்தியவெண்கோவணமுஞ்சேரவீந்து, பாலனையவொளிநீற்றான் பாதமேத்தி பரலோக முழுதாண்டபான்மையாரே.

காம்பீலிநகரத்திலே சாலியர்குலத்துக்குத் தலைவராகிய நேச நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார் அவர் தம்முடைய மனத்தின்செய்கையைப் பரமசிவனுடைய திருவடிக்கு ஆக்கிவாக்கின்செய்கையை ஸ்ரீ பஞ்சாக்ஷரத்துக்கு ஆக்கி கையின்செய்கையைச் சிவனடியார்களுக்கு ஆக்குவாராகி வஸ்திரமும் கீளும் கோவணமும்நெய்து தம்மிடத்தில் வரும் சிவனடியார்களுக்கு இடையறாது கொடுத்து நாடோறும் அவர்களை வணங்கித் துதித்துக்கொண்டிருந்து சிவபதத்தை அடைந்தார்.

௨

சிவமயம்.


அறுபத்தோன்தாபவது,

கோச்செங்கட்சோழநாயனார் புராணம்.

வெண்ணாவலிறைக்கொளிநூற் பந்தர்செய்தவியன்சிலம்பியது வழித்தவெள்ளானைக்கை, யுண்ணடிக்கடித்த வுடலொழியச்சோழனுயர்குலத்துச்சுபதேவன் கமலத்தோங்கும், பெண்ணாகியவள்வயிற்றில் வைகிச்செங்கட்பெருமானாய்த் தென்னவராய்ப்பெருங்கோயில்பலவும், கண்ணார்வித்தூயர்தில்லை மறையவர்க்குமுறையுள் கனகமயமாக்கியருள் கைக்கொண்டாரே.

சோழமண்டலத்திலே சந்திரதீர்த்தத்தின் பக்கத்திலே ஒருசோலை இருந்தது அதிலேநின்ற ஒருவெண்ணாவன்மரத்தின்கீழே ஒருசிவலிங்கம்வெளிப்படலும் ஒருவெள்ளானை அதைக்கண்டு நாடோறும் புழைக்கையினால் அந்த ஸ்தலத்துக்கு திருவானைக்கா என்றுபெயராயிற்று அறிவினையுடைய ஒருசிலந்தி அந்தச் சிவலிங்கத்தின்மேல் சருகு உதிராவண்ணம் தன்வாநூலினாலே மேற்கட்டிசெய்தது சிவலிங்கத்தை வணங்க வந்த வெள்ளானை அதைக்கண்டு அதுஅநுசிதம் என்றுநினைந்து அதைச்சிதைக்க சிலந்தி மீளவும் மேற்கட்டிசெய்தது வெள்ளானை மற்றநாள் அதையும் சிதைத்தது அதுகண்டு சிலந்தி எங்கள் சுவாமிமேல் சருகு உதிராவண்ணம் நான் வருந்திச்செய்த மேற்கட்டிய இது அழிக்கலாமா என்றுகோபித்து வெள்ளானையினது புழக்கையினுள்ளே புகுந்துகடிக்க வெள்ளானை கையை நிலத்திலே மோதிக்கொண்டு விழுந்து இறந்தது கையை மோதியபோது அதனுள்ளே புகுந்த சிலந்தியும் இறந்தது சுபதேவன் என்னும் சோழமகாராஜன் தன் மனைவியாகிய கமலவதியுடன் சிதம்பரத்தை அடைந்து சபா நாயகரை உபாசனை செய்துகொண்டு இருக்கும் நாளிலே கமலவதி புத்திரபாக்கியம் இன்மையால் வரம்வேண்ட அந்தச் சிலந்தி திருவருளினாலே அவளுடைய வயற்றிலே மகவாய் வந்து அடைந்தது கமலவதிக்குப் பிரசவகாலம் அடுத்தபொழுது சோதிடர்கள் இப்பிள்ளை ஒருநாழிகை கழித்துப் பிறக்குமாகில் மூப்புவன





ங்களையும் அரசாளும் என்றார்கள் கமலவதி என்பிள்ளை இப்போது பிறவாமல் ஒருநாழிகைகழித்துப் பிறக்கும்படி என்னைத் தலைகீழாகத் தூக்குங்கள் என்றுசொல்ல அங்குள்ளவர்கள் அங்ஙனங் கட்டித் தூக்கிசோதிடர்கள்குறித்த காலமணையக் கட்டவிழ்த்துவிட்டார்கள் கமலவதி இறவாதொழிந்து பெற்றெடுத்தேன் கோச்செங்கண்ணனே என்றுசொல்லி பிள்ளையைப்பெற்று இறந்தாள் சுபதேவன் அப்புதல்வரை வளர்த்து முடிசூட்டி அரசை அவரிடத்தில் ஒப்பித்து தான் தவஞ்செய்து சிவலோகத்தை அடைந்தான் கோச்செங்கட்சோழர் பரமசிவனது திருவருளினாலே பூர்வசன்ம வுணர்ச்சியோடு பிறந்து சைவநெறி தழைக்க அரசியற்றுவாராகி சிவாலயங்கள் பலவற்றைக் கட்டுவிக்கத் தொடங்கினார். திருவானைக்காவிலே தாம் முன்னே அருள்பெற்றதை அறிந்து அங்கே வெண்ணாவலுடன் பரமசிவனுக்குக் கோயில் கட்டுவித்தார் மந்திரிகளை ஏவி சோழநாட்டில் வெவ்வேறிடங்களிலே சிவாலயங்கள் கட்டுவித்து அவ்வாலயங்கள்தோறும் நிமிந்தங்கள் அமைத்தார். பின்பு சிதம்பரஸ்தலத்தை அடைந்து சபாநாயகரைத் தரிசித்து வணங்கி தில்லைவாழந்தணர்களுக்குத் திருமாளிகைகள் கட்டுவித்துப் பின்னும் பலதிருத்தொண்டுகளைச் செய்துகொண்டிருந்து சபாநாயகருடைய திருவடி நிழலை அடைந்தார்.

உ

சிவமயம்.

எழுபதாவது,

திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார் புராணம்.

(*)

பிறங்கெருக்கத்தம்புலியூர் வாழும்பெரியாழ் பேணுதிருநீலகண்டப்
பெரும்பாணனார்சீர், நிறந்தருசெம்பொற் பலகையாலவாயினிமலன்பாற்
பெற்றாரூர்நேர்ந்துசிவன்வாயி, றிறந்தருளும் வடதிசையே சேர்ந்துபோ
ற்றித்திருஞானசம்பந்தர் திருத்தாள்வாழ்த்தி, யறந்திகழுந் திருப்பதி
கம்யாழிலேற்றியாசிறிருப்பெருமணஞ் சேர்ந்தருள்பெற்றாரே.

சோழநாட்டிலே திருவெருக்கத்தம் புலியூரிலே திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனுடையதிருப்புகழை யாழில்இட்டுப் பாடுவாராகி சோழநாட்டில் உள்ள சிவஸ்தலங்களை வணங்கிக் கொண்டு சென்று பாண்டி நாட்டிற் சேர்ந்து மதுரையில் இருக்கின்ற சொக்கநாத சுவாமியி னுடைய கோயில் வாயிலை அடைந்து நின்று பரமசிவன் மேலனவாகிய பாணிகளை யாழில் இட்டு வாசித்தார் சொக்கநாத சுவாமி அதனைத் திருவுள்ளத்துக் கொண்டு அன்றிரவிலே தம்முடைய அடியார்கள் எல்லாருக்கும் சொப்பனத்திலே தோன்றி ஆஞ்ஞாபிக்க அவர்கள் மற்றநாள் திருநீலகண்டப் பெரும்பாணரைச் சுவாமிக்குத் திருமுன்பேகொண்டு வந்தார்கள் திருநீலகண்டப் பெரும்பாணர் அது சுவாமியுடைய ஆஞ்ஞையென்று தெளிந்துதிருமுன்பே இருந்து யாழ்வாசித்தார், அப்பொழுது இந்தப்பாணர் அன்பினோடு பாடுகின்ற யாழ் பூமியிலே உள்ள சீதம் தாக்கினால் வீக்குஅழியும் ஆதலால் இவருக்குப்பொற்பலகை இடுங்கள்

என்று ஆகாயத்தினின்றும் ஓர் அசரீரிவாக்குஎழுந்தது அதைக்கேட்ட அடியார்கள் பொற்பலகையிட திருநீலகண்டப்பெரும்பாணர் அதில்ஏறி யாழ்வாசித்தார். பின்பு பலதலங்களை வணங்கிக்கொண்டு திருவாரூரிற் சேர்ந்து கோயில்வாயிலை அடைந்து யாழ்வாசிக்க பரமசிவன் வடதிசையிலே ஒருவாயில்வகுக்க திருநீலகண்டப்பெரும்பாணர் புகுந்து வன்மீகநாதரை வணங்கினார் நெடுநாள் ஆயினபின் அவ்விடத்தினின்றும் நீங்கி சீர்காழியில் வீற்றிருக்கின்ற சமயகுரவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய திருவடிகளை அடைந்து வழிபட்டு அவரை ஒருபொழுதும் பிரியாது அவர்பாடியருளும் திருப்பதிகங்களை யாழில் இட்டு வாசிக்கும் பெரும்பேற்றைப் பெற்று திருநல்லூர்ப் பெருமணத்திலே அவருடனே சிவபதத்தை அடைந்தார்.

உ

சிவமயம்.

எழுபத்தோராவது,

சடையநாயனார்புராணம்.

சங்கையிலாவரன்மறையோர் நாவலூர்வாழ்தவரதிபர் தம்பிரான் றோழராய, வெங்கள்பிரான்றவ நெறிக்கோலரிக்குவாய்த்தவிசைஞானியார் தநயரெண்ணார்சிங்க, மங்கையர்கடொழும்பரவை மணவாளநம்பிவந்துதிக்க மாதவங்கள்வருந்திச்செய்தார், வெங்கணராவிளங்குமிளம்பிறைசே சென்னிவிடையினாருள் சேர்ந்தசடையனாரே.

திருநாவலூரிலே ஆதிசைவர்குலத்திலே சடையநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் உலகம் எல்லாம் மெஞ்ஞான ஒளியைப்பெற்று உய்யும்படி சமயகுரவராகிய சுந்தரமூர்த்திசுவாமிகளைப் புத்திரராகப் பெற்ற பெரும்பேற்றை உடையவர்.

உ

சிவமயம்.

எழுபத்திரண்டாவது,

இசைஞானியார்புராணம்.

நாவற்றிருப்பதிக்கோர்செல்வச்சைவநாயகமாஞ்சடையனார்நயந்தவின்பப்
பூவைக்குலம்மடந்தைபொற்பார்கொம்புபுரிதமிழ்குநீறணிந்துபோற்றிசெய்தே
யாவிற்றிகழுந்தலைவன்வலியவாண்டவாரூரரவதரிக்கவருந்தவங்கள்புரிந்தார்
யாவர்க்குமெட்டாதவிசைந்தவின்பவிசைஞானியெனஞானமெளிதாமென்றே.

சடையநாயனாருடைய மனைவியார் இசைஞானியார் என்பவர் எம்பிரான்றோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளைப்பெற்றருளிய அவருடையபெரும்புகழைச் சிறியேனுடைய புன்மொழியினாலே புகழமுடியுமோ முடியாது. திருத்தொண்டர் புராணம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.